திருவள்ளுவர்
திருநாள் விழா மலர்

★

திமுக வெளியீடு.



மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயில்



திருவள்ளுவர்

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்

திருவள்ளுவர் திருநாள் விழா மலர்

(1330 - ஆவது வெளியீடு)

தொகுப்பு

கழகப் புலவர் குழு

15—10—1968 அன்று

தமிழகக் கல்வி அமைச்சர்

மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில்

முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களால்

வெளியிடப்பெற்றது.



திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

சென்னை-1. மதுரை-1. திருநெல்வேலி-6.

1968

கழக வெளியீடு : கஅஙo.

திருவள்ளுவர் திருநாள் விழாமலர்

❋

தொகுப்பு

கழகப் புலவர் குழு

❋

15—10—1968 அன்று

தமிழகக் கல்வி அமைச்சர்
மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில்

முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

❋

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1. மதுரை-1. திருநெல்வேலி-6.
1968

Ed: 1 Oct 1968

THIRUVALLUVAR THIRUNAAL VIZHA MALAR

APPAR ACHAKAM, MADRAS-1 (II-2)



பதிப்புரை

திருவள்ளுவ நாயனுர் உலகப் பொதுமறை தந்தருளிய ஒப்பில்லாத ஒருவர். அவர் செய்த தமிழ்மறை தமிழகப் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்தது. தமிழகப் பண்பாடு, எல்லா வுலகத்திற்கும், எல்லா மொழியாளர்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும், எல்லாச் சாதியார்க்கும், எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்படியான பொதுத்தன்மை வாய்ந்தது. வடமொழி வேதமும், அதன் வழித்தாய மனுநூலும், இவற்றின் விளக்க மாகிய கீதையும் குறிப்பிட்ட கொள்கைகளைக் கொண்டு திகழ்வன.

அவை பெரும்பாலும் ஒரு நாட்டினர்க்கும், ஒரு சமயத்தார்க்கும், ஒரு சாதியார்க்கும், ஒரு காலத்திற்கும் பொருந்துவனவாக உள்ளன. அதனுலேயே அவற்றை உலகப் பொதுநூலென்றே, அல்லது இந்திய நாட்டுப் பொதுநூலென்றே யாரும் முன்வந்து உரிமை கொண்டாடி வழக்குப்பேசக் காணவில்லை. திருக்குறளின் உண்மையுணர்ந்த இந்தக் காலத்தில் இந்திய நாட்டினுள்ளும் வெளிநாட்டினுள்ளும் எல்லாரும் ஒருமனப் பட்டுத் தங்கள் தங்கள் கொள்கைகள் முழுவதும் சிறிதும் வேறுபாடின்றி அமைந்திருக்கக் காண்கின்றேம். அதனுல் திருவள்ளுவ நாயனுர் எங்கள் சமயத்துக்குரியவரே என எழுதவும் பேசவும் செய்கின்றனர்.

மேலும் அவரவர் தனிக்கொள்கைக்கு மாறுன சில கொள்கைகள் காணப் பட்டாலும், அவற்றை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இத்துணைச் சிறந்த தமிழ் மறை நமக்குக் கிடைத்திருப்பது நாமும் நம்முடைய முன்னேர்களும் இடைவிடாமல் செய்துவந்த, வருகின்ற நல்ல தவப்பயனேயாகும். வரலாற்றுக் காலத்துக்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழகம் சிறந்த நாகரிகமுடைய நல்ல நாடாகத் திகழ்ந்து வருகின்றது. நாகரிகமென்பது கடவுள் நம்பிக்கையும், கடவுள் வழிபாடும், பிறர்க்கென வாழும் பெருந்தகைமையும், பிறப்பற முயலுதலும், பகை கொள்ளாமையும், நட்புக் கொள்ளுதலும், நல்லொழுக்கம் கடைப்பிடித்தலும், சொல்லுறுதி நீங்காமையும், விளைவித்து உண்டலும், விருந்து பேணலும், கண்ணேட்டங் கொள்ளலும், தெய்வத் தொடர்பால் தேசமக்கள் அனைவர்களும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள்போல் உளங்கலந்த அன்போடு அளவளாவி வாய்த்த பொழுதெல்லாம் உதவ வேண்டுமென்னும் உள்ளமொடு வாழ்தலும், சிற்றுயிர்க்குந் துன்பம் நேராமலிருக்க வேண்டுமென்னும் எண்ணமே பெருந்தவமெனக் கொள்ளுதலும் பிறவுமாம்.

பழந்தமிழர் கண்டு கடைப்பிடித்தொழுகிய சிறந்த கொள்கைகள் முற்றும் திருக்குறளின்கண் தெளிவாகக் காணலாம். அவையாவன : கடவுள் வழிபாடு, கடவுளுக்கு வழங்கும் பொதுப்பெயர்கள், கடவுள் ஒருவனே என்பது, உயிர்கள் அளவில்லாதன, ஒருவரால் படைக்கப்படாதன—படைப்பென்பது உலகத்தில் குடியிருக்க வீடு அமைத்துக் கொடுப்பதுபோல் கடவுளும் உயிர்களுக்கு உள்ளதாகிய மாயையினின்று உடல், உலகம், உண்பொருள் இவற்றை அருளால் படைத்துக் கொடுக்கின்றுர் என்பதாம். உயிர்களுக்கு இயல்பாகவே இருள்மலம் நோய்போன்று பற்றியிருந்தது. அதனைப் போக்கவே உடம்பும், உடம்பைக் கருவியாகக் கொண்டு செய்யும் இருவினைமுயற்சியும் கடவுளால் தரப்பட்டன. இவ்வுண்மை வருமாறு :

> *"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
> *பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."* —திருக்குறள் - ரு.

இருள் – மலம். இருவினை – நல்வினை, தீவினை. இறைவன் - எல்லாவுயிரோடும், உலகத்தோடும் கலந்திருந்து அவற்றிற்கு நன்மையுண்டாகும்படி இயக்குபவன். புகழ் – அவன் செய்தருளும் அருளிப்பாட்டை வாயாரப் புகழ்ந்து பாடி வழிபடுதல். வழிபடுவாரிடத்துப் பிறப்பு நீங்கும். பிறப்பு நீங்கினால் இறைவனடி சேர்வதாகிய சிறப்பு ஓங்கும். இவ்வுண்மை வருமாறு :

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு." —திருக்குறள் - ௩௫௮.

ஆண்டவன் உயர்ந்த மக்களின் வாழ்க்கை உணவுக்கு வேண்டும் வித்தும், விளைநிலமும், நீரும், காற்றும், வெப்பதட்பமுந் தந்துள்ளான். இவற்றைப் பெற்ற சிறந்த அறிவுடைய நாம் விளைவித்து உண்ணவேண்டும். அதுவே தவவுணவு - சைவவுணவு. இவ்வுண்மை வருமாறு :

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்." —திருக்குறள் - உ௫௧.

புலாலுணவை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றார் வள்ளுவர். அது வருமாறு :

"உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு." —திருக்குறள் - உ௫௫.

இக்குறிப்புத் தோன்றவே அந்த அதிகாரத்திற்குப் பெயர் "புலான் மறுத்தல்" எனவே ஓதியுள்ளார். அதுவே அவர் கருத்தென்பது வரும் திருக்குறளான் உணரலாம் :

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்." —திருக்குறள் - உ௬0.

மேலும் திருவள்ளுநாயனார் கொள்கைகளை முற்றாக உற்றுநோக்குவார்க்கு அவை தமிழகத்துத் தொன்னெறியாகிய சைவசமயக் கொள்கைகளே என்பது நன்றாகப் புலனாகும் அஃதாவது "பதி பசு பாசம்" என்னும் முப்பொருளும் அநாதி என்பதும், கடவுள் உலகத்தைச் சங்கற்ப மாத்திரையால் படைத்தார் என்பதும், உயிர்கள் ஒருகாலத்தும் அழியா என்பதும், கடவுள் திருவடியில் கூடி அழியாது வேறன்மையாக இருந்து பேரின்பம் அனுபவிக்கும் என்பதும், இருவினைப் பயனைக் கடவுளே தருவான் என்பதும், கடவுள் உடனாய் இருந்து அறிவிக்கவே உயிர் அறியும் என்பதும், கடவுள் திருவுருக் கொண்டு எழுந்தருள்வன் என்பதும், கடவுளுக்கு நாமெல்லாம் அடிமை என்பதும், கடவுள் ஆதிசத்தியை உடையவன் என்பதும் பிறவுமாம்.

சைவ நூலாசிரியர்கள் திருக்குறளின் கொள்கைகளை முற்றாக எடுத்தாண்டமை போல் புத்தமோ, சமணமோ, கிறித்துவமோ, இஸ்லாமியமோ, வைதிக சமயமோ, எடுத்தாளவில்லை. அவர்கள் கொள்கைகளுக்கு ஒத்தவற்றைக் கையாண்டு, மற்றவற்றை நீக்கி விட்டனர். அதுவுமல்லாமல் பல நூற்றாண்டுகளுக்கு முன்தொட்டே திருமயிலாப்பூரில் திருவள்ளுவநாயனார் திருக்கோவிலும் வழிபாடும் சைவர்களால் சைவ மரபின்படி நடந்து வருவதை யாவரும் காணலாம். வேறு எந்தச் சமயத்தாரும் அவருக்குத் திருக்கோவில் அமைக்கவோ, வழிபாடு செய்யவோ தொடங்கவில்லை. அவர்மீது பாடல்கள் பாடித் தொழவுமில்லை. சைவர்கள் பாடிய பாடல்களே இன்றும் நின்று நிலவுகின்றன.

கழகத்தார் திருவள்ளுவநாயனாரை உலகத்துக்குக் காட்டிய முறைமையும் காட்ட விரும்புவனவும் வருமாறு.

இதற்குமுன் 1935ஆம் ஆண்டு வெளிவந்த "திருவள்ளுவர் நினைவு மலருக்குப் பின்" ஆண்டுகள் முப்பத்துமூன்றுகள் ஆயின. இம் முப்பத்துமூன்று ஆண்டுகளிலும் வெளிவந்துள்ள திருக்குறளைப்பற்றிய பதிப்புவகை, உரைவகை எல்லாமும் இதன்கண் அமைந்துள்ளன. அம்மட்டுமன்றி முன்னுள்ள புலவர்கள் தத்தம் நூல்களில் எடுத்தாண்டமைபோல் இஞ்ஞான்றுள்ள புலவர்களும், எழுத்தாளர்களும், இதழாசிரியர்களும், மேடைப் பேச்சாளர்களும் வேண்டுமிடங்களிலெல்லாம் எழுத்திலும் பேச்சிலும் மேற்கோள் அளவைச் சட்டநூலாகப் பெரிதெடுத்துக் கையாளுகின்றனர். இவ்வனைத்தும் தமிழகத் திற்றுன் நிலவுகின்றன.

இது போன்று எளிதாக உலகமெங்கணும் எல்லாராலும் கையாளப்படும் நாளே திருக்குறள் மாண்பு வெளிவந்து மலர்ந்த பொன்னுளாகும். அதன் பொருட்டு நாமெல்லாம் பெரிது முயன்று செய்யப்பட வேண்டிய தொன்றுண்டு. அஃதாவது உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தில் செவ்வையாக மொழிபெயர்த்துச் சிறந்த விரிவுரைகளுடன் பல நூல்கள் வெளிவரச் செய்வதாகும். அங்ஙனஞ் செய்வோமாயின் ஆங்கிலத்தின் வாயிலாக உலகப் பல்வேறு மொழியாளர் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கைக்கொண்டு பயின்று எழுத்திலும் பேச்சிலுமாக எங்கணும் எளிதாகப் பரப்புவர். அப்பொழுது தான் அஃது உலகப் பொதுமறையாம் உண்மையோடு குன்றின்மேலுள்ள பெருவிளக்குப் போன்று நின்று நிலவும்.

மேலும் திருவள்ளுவநாயனாரின் இரண்டாயிரம் ஆண்டுத் திருவிழா வருந் தைத்திங்களில் நிகழ இருக்கின்றது. அதற்கு நம்மனோரால் செய்யப்படவேண்டிய பல குறிப்புகளைச் செல்வி சிலம்பு ௬௨. பரல் ௯௨ இன் தலைப்பாக வெளியிட்டுள்ளோம். அதன் சுருக்கம் வருமாறு ;

தமிழகத் தலைநகரில் திருமயிலைக் கடற்கரையில் மிகப்பெரிய பளிங்குமண்டபம் அமைத்து இதன் நடுவே விரிவுரை மண்டபம், நூற்று முப்பத்து மூன்று வளைவுகள், அதிகாரப்பெயர் பாட்டுகளுடன் விளங்கச் செய்தல்வேண்டும். நூற்று முப்பத்துமூன்றடி உயரமுள்ள கோபுரம் அமைத்தல்வேண்டும். அதன் உச்சியில் பேரொளிப் பெருவிளக்கு எப்பொழுதும் நிலவவேண்டும். திருவள்ளுவநாயனாரின் திருவுரு அமைத்தல் வேண்டும். அவரவர் தாந்தாமே வழிபாடு செய்தல்வேண்டும். அதற்கு வேண்டும் நறுமணமலர்கள் ஆங்கே கிடைக்கும்படி பெரிய நந்தவனம் இருத்தல்வேண்டும். இவைபோன்ற பலவும் அமைத்தல்வேண்டும்.

இஞ்ஞான்று ஊரவராலும் உலகவராலும் ஆட்சியாளர் அனைவர்களாலும் நன்கு மதித்துப் போற்றப்பட்டு உலகப் பொதுமறையென வாழ்த்தப்படும் திருக்குறள், இந்திய நாட்டுத் தேசிய நூலாக விளங்க வேண்டுமென்று விளம்பப்படுகின்றது. ஆனால் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ சுப்பையா அவர்கள் 1924ஆம் ஆண்டு முதலாகவே இந் நோக்கத்துடன் திருக்குறளைப் பலவகையான முறைமையில் வெளியிட்டு வருகின்றனர். அவற்றின் விரிவெல்லாம் இத்துடன் காணப்படும் "திருவள்ளுவர் திருநாட்கழக வரலாறு" என்ற தலைப்பில் காண்க.

1935ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட திருக்குறள் மாநாடு போன்று இப்பொழுது இம்மாநாடு கூட்டப்பெறுகின்றது. அம் மாநாட்டிலும் சிறந்ததொரு "திருவள்ளுவர் நினைவு மலர்" வெளியிடப்பட்டது. அதுபோல் இம் மாநாட்டிலும் இம்மலர் வெளிவருகின்றது. இதன்கண் "திருக்குறள் மூலம்" முதலாகத் "திருக்குறள் கட்டுரை" முடிவாகப் பதினைந்துக்கு மேற்பட்ட பகுதிகள் அடங்கி உள்ளன. அவை வருமாறு :

பக்கம் க முதல் ௩௯ முடியத் திருக்குறள் மூலமும் செய்யுள் முதற்குறிப்பும் அமைந்துள்ளன. பக்கம் ௪அ முடிய ஒருகுறட் பொருள்வளம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பிற

மொழிகளிலும் பழைய உரையாசிரியர் உள்ளிட்டு முறையே ஐம்பதுக்கு மேலாகவும், நாற்பதுக்கு மேலாகவும் உள்ள பேராசிரியன்மார்களின் சிறந்த ஆய்வுரைகள் காணப்படும் அவ்வுரைகள் தோன்றிய காலவரையறைகளுடன் குறிக்கப்பட்டுள்ளன.

திருக்குறளைப் பல்வேறு காலங்களில் பல்வேறு சிறப்புகளுடன் பதிப்பித்த பெரும் புலமைப் பெருந்தகையார் ஒன்பதின்மர் ஒளியுருவப் படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பின் திருவள்ளுவமாலை என்னும் தலைப்பில் சங்கப்புலவர்களால் பாடப்பட்டதாகக் கருதப் படும் (ருஎ) ஐம்பத்தெழுவருடன் இக்காலத்துப் புலவர்கள் எண்பத்துமூவர் (அங) பாடியன வும் சேர்த்து இருநூறுக்கு மேற்பட்ட பாக்கள் அவரவர்களின் சிறப்புப் பெயர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

புகழ்ப்பூந்துணர் என்னும் தலைப்பில் பற்பல நூல்களில் அவ்வந் நூலாசிரியர் எவ்வெவ்வாறு எடுத்தாண்டுள்ளார்கள் என்னும் இயைபுடன் அவ்வவர் அரும்பெரும் பாக்களையும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. பாக்களாகப் பாடிய புலவர்கள் ஏறத்தாழ அறுபதுக்கு மேலாவர். உரைநடையாலாக்கிய புலவர்கள் ஏறத்தாழ இருநூற்றுக்கு மேலாவர். இவைபோன்று ஆங்கிலமொழியில் ஆக்கிய புலவர்களும் அறுபதின்மர்க்கு மேலாவர்.

குறள்பயில் வெண்பா நூல்கள் என்னும் தலைப்பில் "சிவசிவ வெண்பா" முதலாகத் **"திருமலை** வெண்பா" முடிவாகப் பன்னிரு நூல்களினின்றும் ஒவ்வொரு வெண்பாக்கள் தரப்பட்டுள்ளன. அத்துடன் திருக்குறட் சிறப்புப்பா ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

"குறள் மிளிர்பா" என்னும் தலைப்பில் எழுபதுக்கு மேற்பட்ட நூல்களில் எவ்வெவ்வாறு மிளிர்கின்றன என்பது காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் சங்கமருவிய தனிப்பெரு நூல்களும் சேர்ந்துள்ளன.

"குறள் இசைப்பாக்கள்" திருக்குறள் இயற்றமிழ் இயைபுடன் மட்டும் அன்றி இசைத்தமிழ் வனப்புடன் இயைந்தும் திகழுஞ் சிறப்பினவாகவும் காணப்படுகின்றன. அத்தகைய அரிய இசைப்பாக்கள் எண்மரால் பாடப்பட்டுள்ளன.

"திருக்குறள் நூற்பட்டி" இத்தலைப்பின்கீழ் 1811ஆம் ஆண்டு முதல் 1968 முடிய வுள்ள காலங்களில் நானூற்று முப்பதின்மராகிய பேராசிரியர்களின் பெயர்களுடன் அவரவர்களால் வெளியிடப்பட்டுள்ள நூல்பெயர்களும், மேலும் ஆங்கிலம், செர்மன், இலத்தீன், ஃபிரஞ்சு, உருசியன், சீனம், பிஜியன், சமக்கிருதம், பர்மியம், சிங்களம், இந்தி, உருது, மராத்தி முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையும் அவ்வந் நூலாசிரி யரின் பெயர், சிறப்பு முதலியவற்றுடன் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இயைந்த ஆசிரியர் இருபத்தெழுவர் உருவப் படங்களும் காணப்படும்.

"குறள் கட்டுரைப்பட்டி" என்னுந் தலைப்பில் இருநூற்றெழுபதுக்கு மேற்பட்ட தமிழ்க் கட்டுரைகளும், பத்துக்கு மேற்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளும் காணப்படும்.

மலரின் இரண்டாம் பகுதியில் குறள்பற்றிப் பேராசிரியர்களும் பெரும்புலவர்களும் எழுதிய தமிழ்க்கட்டுரைகள் பத்தொன்பதும், ஆங்கிலக் கட்டுரைகள் ஏழும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாற்றல் "திருவள்ளுவர் திருநாள் விழா மலர்" பெரியதொரு தமிழ்மறைக் கருவூலமாக அமைந்துள்ளமை தானே போதரும். திருவள்ளுவநாயனர்க்கு நாம் செய்யக் கடமைப்பட்டிருக்குந் திருத்தொண்டுகளுள் இத்தொண்டு ஒரு சிற்றளவினதேயாகும். நான்கு கோடித் தமிழ்மக்கள் கைக்கணியாகத் திருக்குறள் திகழ்தல்வேண்டும். கல்லூரிகளி லெல்லாம் எல்லா மாணவர்களாலும் பயிலப்படுதல் வேண்டும். பெருமக்களும் மாணவர் களும் அதன்படி ஒழுகத் தலைப்படுதல் வேண்டும். எல்லா நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும்

திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இன்றியமையாது பாடப்பெறுதல் வேண்டும். முடிவிலும் அவையே பாடப்பெறுதல் வேண்டும்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறள்எண்
ஆயினகாண் இம்மலரும் அஃதுணர்த்தும்—தாயினும்சீர்
நாயனுர் தாள்போற்றும் நம்கழகத் தன்மையினை
நாயனுர் தாள்நூல்வாழ் க.

வையமெலாம் வள்ளுவர்தாள் வாழ்த்தி வழிநிற்பின்
செய்யசிவ வாழ்வு சிறப்பென்னும்—தெய்வஅருட்
செம்பொருளால் சேருமச் செம்பொருள் போற்றியெனும்
ஐம்மறைக்கே கொள்ளுவம்நாம் அன்பு.

நன்றியுரை

தமிழ் மறையான திருக்குறளை யருளிய திருவள்ளுவப் பெருமானின் நினைவாக வெளியாகும் இம்மலர் சிறப்பாக அமைவதற்கு ஊக்கமும் உழைப்பும் நல்கியோர் பலர்.

இம் மலருக்கு வாழ்த்துரை நல்கிய பெரியோர்கட்கும், திருவள்ளுவமாலையில் சேர்ப்பதற்காக வெண்பாக்கள் எழுதியனுப்பிய புலவர் பெருமக்கட்கும் எம் நன்றி உரித்தாகுக.

இம் மலரின்கண் இடம்பெற்றுள்ள குறள்பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதித் தந்த பேராசிரியர்கட்கும் பேரறிஞர்கட்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மலருக்கு முன்மாதிரியாக அமைந்த 1935ஆம் ஆண்டு திருவள்ளுவர் நினைவு மலரை வெளியிட்ட திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர், இம்மலரை உருவாக்க உதவிய விழாக்குழுவினர், ஓவியப் புலவர்களான திரு மா. முத்து, திரு. அரசு, பட அச்சாளர் எம். சி. அப்பாசாமி செட்டி கம்பெனியார், கமெர்சியல் பிரின்டிங் ஒர்க்ஸ், சாந்தி அச்சகத்தார், மலருக்கு விழைந்து விளம்பரங்கள் கொடுத்துதவிய வணிக நிறுவனத்தார் ஆகிய அனைவர்கட்கும் கழகத்தாரின் அன்புகலந்த நன்றி என்றென்றும் உரித்தாகுக.

இம் மலர் வெளியீட்டு விழாவையொட்டி நடத்தப் பெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாக் கட்டுரைப் போட்டி, புத்துரைப் போட்டிகளில் பேரார்வத்துடன் பங்கு கொண்டவர்களுக்கும் அக்கட்டுரை, புத்துரைகளை மதிப்பீடு செய்த அறிவு சான்ற நடுவர்களுக்கும் கழகத்தாரின் நன்றி உரித்தாகுக.

சென்னை-1.
15-10-1968.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

திருவள்ளுவர் திருநாள் விழா

கட்டுரை, புத்துரைப் போட்டி

தெள்ளு தமிழ்க் கவிஞர் வள்ளுவர் திருநாளை யொட்டிச்சென்ற 1964ஆம் ஆண்டு சூன் திங்களில் திருக்குறள் கட்டுரைப்போட்டி நடத்தப்பெற்றது. அதன் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகளை மதிப்பிட்டுதவிய நடுவர்கள்

1. ஆட்சிமொழிக் காவலர் திரு.கீ. இராமலிங்கனார், எம்.ஏ.
2. பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.
3. ,, திரு. மா. இராசமாணிக்கம், எம்.ஏ.
4. திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.ஏ., எம்.லிட்.
5. திரு. வே. தா. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.
6. கழகப்புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை.

முதல்பிரிவுக் கட்டுரைகள்

இப்பகுதியில் ஒவ்வொரு தலைப்பிலும் பரிசு பெறற்குரிய சிறந்த ஒவ்வொரு கட்டுரைக்கும் ரூ. 50 பரிசளிக்கப்பெறும்.

	தலைப்பு	பரிசு பெற்றவர்
1.	திருக்குறளும் சைவமும்	திரு. சொ. சிங்காரவேலன், எம்.ஏ. மாயூரம்.
2.	திருக்குறளும் வைணவமும்	(பரிசு பெறற்குரிய சிறந்த கட்டுரை வரவில்லை).
3.	திருக்குறளும் சமணமும்	(,,)
4.	திருக்குறளும் பௌத்தமும்	திரு. பொ. வே. இராசகுமார், மேலைமாம்பலம், சென்னை.
5.	திருக்குறளும் கிறித்துவமும்	திரு. அமலபாக்கியராசு, இராயபுரம், சென்னை.
6.	திருக்குறளும் இஸ்லாமும்	திரு. ரா. ராகவன், கோடம்பாக்கம், சென்னை.
7.	திருக்குறளும் பகவத்கீதையும்	திருமதி பா. சௌந்திரா, எம்.ஏ., தென்சருக்கை, தஞ்சை.

சிறப்புப் பரிசு ரூ. 50

இப்பகுதியில் பரிசுபெறும் கட்டுரைகளுள் முதற்றரமாக மதிக்கப்பெறும் ஒரு கட்டுரைக்குச் சிறப்புப் பரிசாக வழங்கப்பெறும் ரூ. 50-ஐத் 'திருக்குறளும் சைவமும்' என்ற கட்டுரை எழுதிய திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ., அவர்கள் பெறுகிறார்.

இரண்டாம் பிரிவுக் கட்டுரைகள்

இப்பிரிவுக் கட்டுரைகளுள் மிகச் சிறந்த மூன்று கட்டுரைகள் முறையே முதல் இரண்டாம் மூன்றும் பரிசுகள் பெறுகின்றன.

திருவள்ளுவர் திருநாள் விழா—கட்டுரை, புத்துரைப் போட்டி

பரிசுத் தொகை	பெறுபவர்	கட்டுரைத் தலைப்பு
1ஆம் ரூ. 100	திரு. வீ. ப. கா. சுந்தரம், எம்.ஏ. மதுரை.	குறளில் மட்டும் வழங்கும் சொற்கள்
2ஆம் ,, 75	திரு. கவியோகி சுத்தானந்த பாரதியார்	பிறமொழிப் பழமொழிகளில் குறட் கருத்துக்கள்.
3ஆம் ,, 50	திரு. க. வீரகத்தி, யாழ்ப்பாணம்.	பரிஉரையில் இலக்கணக் குறிப்புக்கள்.

திருக்குறள் புத்துரைப் போட்டியின் முடிவு கீழே கொடுக்கப்பெற்றுள்ளது. இப் போட்டியில் நூற்றொருவர் கலந்து கொண்டனர். 408 வகையான புத்துரைகள் காணப் பெற்றன. எனினும் பெரும்பாலானவை குறளுக்குள்ள பழைய உரைகளுக்குப் புதிய விளக்கங்களாக அமைந்தனவே. புத்துரைகளாகக் காணப்பட்டவை மிகச் சிலவே. இருப் பினும் ஊக்கத்துடன் இத்துணைப் பேர் எழுதி யனுப்பியமையை இக்குழு பாராட்டுகிறது.

கீழ்க்கண்ட ஐவர் எழுதிய ஆறு புத்துரைகள் பரிசு பெறுதற்கு உரியவாகின்றன. ஒவ்வொரு புத்துரைக்கும் ரூ. பத்து பரிசளிக்கப் பெறும்.

பரிசு பெறுவோர்	குறள் முதற்குறிப்பு
திருமதி. அம்புசம், பழைய வண்ணை, சென்னை.	குணமென்னும் குன்றேறி’
திரு. சி. அன்பானந்தம், பினங்கு, மலேயா.	‘தீயவை தீயபயத்தலால்’
வித்துவான் ஆ. பழம்நீ. முத்துப்பட்டினம், காரைக்குடி.	‘அறவாழி அந்தணன்’
கவியோகி சுத்தானந்த பாரதியார், அடையாறு.	‘ஓர்த்துள்ளம்’ ‘தோன்றிற்புக’
திரு. கீ. இராமலிங்கனர், செனாய்நகர், சென்னை.	‘இல்வாழ்வான் என்பான்’

நடுவராயிருந்தோர்

பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரையார்.
கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை.
பண்டித வித்துவான் திரு ஆ. பொன்னுசாமிப் பிள்ளை.

குறிப்பு

1968 அக்டோபர் 14ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருவிழாவிலே தமிழகச் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் தலைமையில் தமிழகப் பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நூற்காட்சியைத் திறந்துவைத்துப் பரிசுக்குரியவர்களைப் பாராட்டிப் பரிசுகளை வழங்கினார்.

திருவள்ளுவர் திருநாட்கழக வரலாறு

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1920 செப்டம்பர்த் திங்களில் திருநெல்வேலியில் பதிவு செய்யப் பெற்றுத் தமிழ்ப் பணிபுரியத் தொடங்கியது. 1921 - பிப்ரவரித் திங்கள் சென்னையில் அதன் கிளைநிலையம் நிறுவப்பெற்றது. திரு. வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் கழக அமைச்சராகவும், அவர் தம்பியார் திரு. வ. சுப்பையா சென்னைக் கிளைநிலைய முகவராவும் கழகப் பணியினைச் செவ்வனே செய்துவருவாராயினர்.

திரு. வ. சுப்பையா தாம் கல்வி பயிலும்போதே தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் தனிப்பெருமையினை உணரலானார். ஒருநாள் அவர் தம் உறவினர் வழக்கறிஞர் திரு. சி. பி. சுப்பையா பிள்ளை அவர்கள் தம் உள்ளங் கைக்குள் ஒரு சிறிய நூலை வைத்துக் கொண்டு "தம்பி! என் கைக்குள் இருப்பது என்ன? சொல்லும்" என்றனர். அதற்கு அவர் "எனக்குக் குறி சொல்லத் தெரியாதே" என்றனர். உடனே அவர்கள் கையை விரித்துத் தாம் வைத்திருந்தது செகப்பிரியர் எழுதிய "ஒதெல்லோ (Othello)" என்னும் நாடக நூலாகுமென்றனர். அஃது அந் நாடக முழுமையும் கொண்டதாகும். அதைக் கண்ணுற்றதும் வியப்படைந்து நம் தெய்வப்பனுவல் திருக்குறள் இதே வடிவில் அச்சிடப் பெறின் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று சொன்னார். "தம்பி! இப்படித் திருக்குறள் வெளிவரத் திருவருள் புரியட்டும்" என்று பிள்ளை அவர்கள் மகிழ்வுடன் கூறினர்.

இறைவன் திருவருளால் திரு. வ. சுப்பையாவுக்குச் சென்னையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக முகவராகப் பணிபுரியும் வாய்ப்பு ஏற்பட்டது. 1924இல் திருக்குறளைச் சிறிய அளவிலே 5000 படிகள் அச்சிட்டு இரண்டணா அட்க்கவிலை வைத்து விற்றனர். அதனை விவிலிய நூலைப்போல் உயர்ந்த கட்டடஞ் செய்து பரிசுப் பதிப்பாகவும் வெளியிட்டனர். ரெவரண்ட் பாப்ளி உட்பட அறிஞர் பலர் அதனைக் கண்டு பாராட்டுரை வழங்கினர்.

1927ஆம் ஆண்டு சொல்லின் செல்வர் டாக்டர் சேதுப்பிள்ளை எழுதிய "திருவள்ளுவர் நூல் நயம்" என்ற நூலையும், 1928இல் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, எம்.ஏ., எம்.எல்., எழுதிய "திருக்குறள் பொழிப்புரை"யையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். பொழிப்புரையை 5000 படிகள் அச்சிட்டு 8 அணா அடக்கவிலை வைத்துப் பரப்பினர். திருக்குறள் மூலத்தைச் சிறிதும் பெரிதுமாகப் பல அளவுகளிலும் பல்லாயிரம் படிகளை அச்சிட்டு மலிவு விலைக்கு விற்று வரலானார்.

1932இல் திருக்குறளைப் பரப்புதற்கு நாட்குறிப்பு வெளியிடுவது நல்ல முறையாகும் என்று கருதித் "திருக்குறள் நாட்குறிப்பு" வெளியிடலானார்.

நாள் ஒன்றுக்குக் கருத்துரையுடன் ஒரு குறளாக 4 ஆண்டுகளில் 1330 குறட்பாக்களையும் கற்கும் வகையில் நாட்குறிப்பு வெளியிடலானார். திருக்குறள் பாக்களிலிருந்து நிறைவான பொருளுள்ள 3 சீர், 4 சீர் தொடர்களைப் பொறுக்கி எடுத்து முச்சீர் மணிகள், நாற்சீர் மணிகள் என்னுந் தலைப்புக்களில் பொழிப்புரையுடன் பதித்து வெளியிட்டனர்.

1935இல் மிகச் சிறிய 2'' $\times 1\frac{1}{2}$'' அளவில் முன்னே கூறிய ஒதெல்லோ நாடகநூலைப் போன்று அச்சிட்டு வெளிப்படுத்தினர். திருக்குறள் பரிமேலழகர் உரையினை ரூ. 1 — 50

அடக்கவிலை வைத்து விற்றதோடு பரிசு வழங்குதற்கேற்ப உயர்ந்த கட்டடம் செய்தும் விற்று வந்தனர். இவ்வகைகளிலெல்லாம் திருக்குறளை அச்சிட்டுப் பரப்பினும் போதிய அளவு தமிழ் மக்கள் அதன் ஒப்புயர்வற்ற பெருமையினையும், பயனையும் உணரவில்லையே என்று வருந்துவர்.

ஊர்கடோறும், பள்ளிகடோறும் திருவள்ளுவர் கழகம் நிறுவப் பெறுதல்வேண்டும் என்றும், மொழிபெயர்க்கப் பெறாத உலகமொழிகளில் திருக்குறள் வெளிவருதல் வேண்டு மென்றும், திருக்குறள் ஒவ்வொரு தமிழன் கையிலும் இருத்தல் வேண்டுமென்றும் திரு. வ. சுப்பையா கருதினர். இக்கருத்துக்களைப் பற்றி 17-1-1935இல் இவர் தம் உற்ற நண்பரும், சென்னை அஞ்சல் ஆட்சித் துறைத் தலைமைச் செயலகத்தில் தலைமை எழுத்த ராகப் பணிபுரிந்துவந்தவருமான தருமபுர ஆதீனப்புலவர் திரு. காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி.ஏ., அவர்களிடம் தெரிவித்தனர். இருவரும் கலந்து பேசியதன் விளைவே ''திருவள்ளுவர் திருநாட்கழகத்தின்'' தோற்றமாகும்.

தமிழ்ப் பேராசிரியர் திரு. கா. நமசிவாய முதலியார் தலைவராகவும், வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் செயலராகவும், காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி.ஏ., டி. செங்கல்வராய பிள்ளை, பி.ஏ., எல்.டி., மா. பாலசுப்பிரமணிய முதலியார், எம்.ஏ., ஆகிய மூவரும் துணைச்செயலராகவும், திரு டி. சிவராம சேதுப்பிள்ளை. எம்.ஏ., பி.எல், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் எஸ். கிருட்டிணசாமி ஐயங்கார், எம்.ஏ., ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., ரெவரண்ட் எச். ஏ. பாப்ளி ஆகிய ஐவரும் துணைத்தலைவர்களாகவும், வ. சுப்பையா பொருளாளராகவும், புலவர் மயிலை சிவமுத்து, பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பி.ஏ., பி.எல்., பரலி சு. நெல்லையப்பர், புலவர் மே. வீ. வேணுகோபால பிள்ளை, புலவர் சிவ. அருணகிரிநாதர், மணி கோடீசுர முதலியார், எம்.ஏ. எல்.டி., டி. செங்கல்வராய பிள்ளை, பி.ஏ., எல்.டி., டி. துரைசாமி முதலியார், பு. பா. கோபால்ரத்னம், டி. செங்கல்வராயன், பி.ஏ., பி.எல்., பி. சி. மாணிக்க வாசக முதலியார், வித்துவான் ஆர். எஸ். சாம்பசிவ சர்மா, இ. டி. இராசேசுவரி அம்மை யார், எம்.ஏ. ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சென்னையில் ''திருவள்ளுவர் திருநாட்கழகம்'' பணியாற்றத் தொடங்கியது.

சென்னைப் பவழக்காரத் தெருவிலுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கட்டிடம் திருநாட் கழகத்துக்குப் பணிமனையாக உதவப் பெற்றது. திருவள்ளுவர் திருநாளை மிகவுஞ் சிறப்பாகச் சென்னையிலே கொண்டாடவும், தமிழ் நாடெங்கணும் அதே நாளில் கொண்டாடச் செய்யவும், ''திருவள்ளுவர் நினைவு மலர்'' ஒன்று வெளியிடவும் திட்டம் வகுத்துத் திருவள்ளுவர் திருநாட்கழகத்துக்கு உறுப்பினர்களும், காப்பாளர்களும், வாழ்நாள் உறுப்பினர்களும் சேர்க்கப்பெற்றனர்.

முதலாண்டுத் திருவள்ளுவர் விழா 1935 மேத் திங்கள் 18, 19ஆம் நாட்களில் சென்னை-1 பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே மறைத்திரு மறைமலை யடிகளார் தலைமையில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவிலே வரலாற்றுப் பேராசிரியர் வி. அரங்காச் சாரியர், திரு. க. ப. சந்தோஷம் (மகிழ்நன்), திரு பா. தாவுத்ஷா (ஆசிரியர், தாருல் இஸ்லாம்), திருவாட்டி மீனாம்பாள் சிவராஜ், புலவர் கா. ர. கோவிந்தராச முதலியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அவ்விழாவை யடுத்துத் ''திருவள்ளுவர் நினைவு மலர்'' அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அதன்கண் திருக்குறள் 1330 பாக்களும், திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயில், அதனுள் அமர்ந்திருக் கும் திருவள்ளுவர் திருமேனி இவற்றின் படங்களும், அற்றைநாள் வரை திருக்குறளைப் பதிப்பித்தல், அதற்கு உரை எழுதுதல், அதனை ஆராய்ந்து கட்டுரை வரைதல், அதனைப் பிறமொழிகளில் பெயர்த்தல் ஆகிய துறைகளில் திருக்குறளுக்குத் தொண்டாற்றியுள்ள அறிஞர் பெருமக்களின் உருவப்படங்கள் முதலியனவும், திருக்குறள் பயின்ற முதுமொழி

வெண்பாப் போன்ற வெண்பா நூல்களிலிருந்து ஒவ்வொரு செய்யுளும், தமிழிலும் பிற மொழிகளிலும் வெளியிடப்பெற்ற திருக்குறள் பதிப்புக்களைப் பற்றிய விளக்கக் குறிப்பும், தமிழ்நாட்டறிஞர்களும், பிறநாட்டறிஞர்களும் கூறிய புகழ்ப்பூந்துணர்களும், இசைப்பாக்களும், முதலாண்டு விழாத் தலைவர் மறைத்திரு மறைமலையடிகளார் தலைமையுரையும், வரவேற்பாளர், பேச்சாளர் சொற்பொழிவுக் குறிப்புக்களும், கண்கவர் வனப்புடன் அச்சிடப் பெற்றுள்ளன.

'இதுகாறும் இத்தகைய மலர் வெளிவந்ததில்லை' என்று யாவரும் போற்றும் வகையில் உயர்ந்த கட்டடஞ் செய்து 9 அணு அடக்கவிலை வைத்து 5000 படிகள் வெளியிடப்பெற்றன.

திருவள்ளுவர் திருநாட்கழகத்தினர் விரும்பியவண்ணம் தமிழகத்தில் பல ஊர்களிலும், பல பள்ளிகளிலும், பிற மாநிலங்கள், பிறநாடுகளிலுள்ள சிற்சில ஊர்களிலும் அதே நாட்களில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பெற்றது. திருவள்ளுவர் கழகங்கள் பல ஆங்காங்கே நிலையாக நிறுவப்பெற்றன. இத்திருவள்ளுவர் திருநாட்கழகம் தொடங்குவதற்குமுன் தென்காசியில் மட்டுமே 1927இல் "திருவள்ளுவர் கழகம்" நிறுவப்பெற்றதாகத் தெரிகிறது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் திருவள்ளுவர் விழாவை மாணவர் கொண்டாடத் தொடங்கினர். 1947இல் கல்வியமைச்சராயிருந்த திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் தமிழகப் பள்ளிகளில் திருக்குறளைக் கட்டாயமாகப் பயில்வதற்குத் திட்டம் வகுத்தனர். அதனால் பள்ளிகளில் மாணவர்கள் திருக்குறள் பயின்று வருகின்றனர். திருவள்ளுவர் திருநாட்கழகத்தால் ஏற்பட்ட நன்மைகள் பலப்பல. முதலாண்டு விழா முடிந்த பின்னர்ப் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் அவர்கள் இறையடி சேரவே திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் திருநாட்கழகத் தலைவராயினர்.


இரண்டாவது ஆண்டு திருவள்ளுவர் விழா 1936 சூன் திங்கள் 4ஆம் நாள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே முதுபெரும்புலவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவிலே கன்னிமாரா நூல்நிலைய நூலகர் திரு. ஆர் ஜனார்த்தனம் நாயுடு அவர்கள் Tiruvalluvar an International Poet என்ற தலைப்பில் ஆராய்ச்சி உரை நிகழ்த்தினார்கள். திருவாட்டி பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், புலவர் திரு அ. வரதநஞ்சைய பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள்.

மூன்றாவது ஆண்டுத் திருவள்ளுவர் விழா 1937 மேத் திங்கள் 22ஆம் நாள் இராமநாதபுர மாவட்டம் பாகனேரியில் கோவை சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவிலே சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, பண்டித அ. நடராச பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அதன் பின்னர்த் திருவள்ளுவர் திருநாட்கழகம் அமைவுற்றது.

திருவள்ளுவர் புகழ் ஓங்குக.



கழகம் நிறுவிய செயலாளர்
திரு. வ. திருவரங்கம் பிள்ளை
(ஆட்சிக் காலம் 1920 - 1944)




மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயில்

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்




மு. காசிவிசுவநாதன் செட்டியார்
தலைவர்



வ. சுப்பையா பிள்ளை
ஆட்சியாளர்


கழகச் செயற் குழுவினர் (1968)



இருப்பவர் : சி. ந. சுப்பிரமணியம், வித்துவான் வே. மாணிக்கவாசகம், மு. காசிவிசுவநாதன் (தலைவர்), வ. சுப்பையா (ஆட்சியாளர்), கா. வ. முத்தையா.

நிற்பவர் : சொ. சுப்பிரமணியம், இ. க. சேதுராமலிங்கம், சு. நடராசன், பி.ஏ., எல்.டி., மு. முத்துராமலிங்கம்.

திருவள்ளுவர் திருநாட்கழகம் (1935)



கா. நமசிவாய முதலியார்

செயற்குழுத் தலைவர்



மறைத்திரு மறைமலையடிகள்

முதலாண்டு விழாத் தலைவர்

திருநாட் கழகத் துணைத்தலைவர்கள்



சிவராமசேதுப் பிள்ளை
எம். ஏ., பி. எல்.




சச்சிதானந்தம் பிள்ளை
பி. ஏ., எல். டி.




டாக்டர்
எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்



எச். ஏ. பாப்லி



திரு. வி. கலியாணசுந்தரம்




திருவள்ளுவர் திருநாட்கழகச் செயற்குழுவினர்

முதல் வரிசை : 1. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார், 2. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, (துணையமைச்சர்.) 3. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, 4 பா. கண்ணப்ப முதலியார் (அமைச்சர்) 5. பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை, 6. மே. வீ. வேணுகோபால் பிள்ளை, 7. சிவ. அருணகிரிநாத முதலியார்.

2–ம் வரிசை : 1. மணி. கோடீச்சுர முதலியார், 2. T. செங்கல்வராயன், 3. T. செங்கல்வராய பிள்ளை (துணையமைச்சர்,) 4. மா. பாலசுப்பிரமணிய முதலியார் (துணையமைச்சர்) 5. T. துரைசாமிப்பிள்ளை, 6. பு. பொ. கோபாலரத்தினம்

3-ஆம் வரிசை . 1. வ. சுப்பையா பிள்ளை, (பொருளாளர்), 2. P. C. மாணிக்கவாசக முதலியார், 3. R. S. சாம்பசிவசர்மா

திருவள்ளுவர் திருநாட் கழகம் (1935)



திருவிழாக் கூட்டம்


முதல் வரிசை : 1. ச. சச்சிதானந்தம் 2. B. தாவூத்ஷா 3. கா. நமச்சிவாய முதலியார் 4. மறைமலையடிகள் 5. இராஜேஸ்வரி அம்மாள் 6 பா. கண்ணப்ப முதலியார் 7. திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

2. வரிசை : 1 T. செங்கல்வராயன், 2 சிவ. அருணகிரிநாத முதலியார் 3. மா. பாலசுப்பிரமணிய முதலியார் 4 சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார் 5. மணி. கோடீச்சுர முதலியார் 6. தெ பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை 7. T. செங்கல்வராய பிள்ளை.

3. வரிசை : 1. காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை 2. R. S. சாம்பசிவ சர்மா 3. வ. சுப்பையா பிள்ளை 4. பு. பொ. கோபாலரத்தினம் 5. மே. வீ. வேணுகோபால் பிள்ளை 6. நின்றை தங்கவேல் முதலியார்.



டாக்டர் உ. வே. சாமிநாதையர்
இரண்டாவதாண்டு விழாத் தலைவர் (1936)



சி. கே. சுப்பிரமணிய முதலியார்
மூன்றாவதாண்டு விழாத்தலைவர் (1937)

உள்ளுறை

பகுதி க

பகுதி உ

Dr. T. M. P. MAHADEVAN,
M. A., PH. D.,
Director, Centre for Advanced
Study in Philosophy,
University of Madras.

Madras-5
4th December, 1965

I am glad to hear that Tiruvalluvar day is to be celebrated in Madras. The message of Tiruvalluvar is for all mankind and hence efforts to spread his message deserve success. I welcome the publication of a Souvenir to mark this occasion.

R. E. ASHER, B.A., Ph.D.
Lecturer in Tamil, School of
Oriental and African Studies
University of London.

Trivandrum
6th May, 1964

''One definition of a great world classic could be 'a work that has universal and perennial appeal'. Tirukkural certainly has this quality in addition to the author's masterly control of the difficult form he chose. It is appropriate that the memory of such a poet should still be periodically celebrated, and I am happy to hear of the proposal to do this on Tiruvalluvar Day''.

C. G DIEHL
Church of Sweden Mission,
Uppasala,
SWEDEN.

Uppasala
11 April, 1967

Tiruvalluvar has earned his fame by his comprehensive presentation of ethics prevailing in South India long ago, but he has won the love and admiration of many friends by having an eye for simple human concerns. Unforgettable and worthy of praise from people all over the world are these lines.

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்."

Prof. H. DANIEL SMITH
315, H. B. Crouse Hall, Syracuse
University,
SYRACUSE, 13210 U.S.A.

Syracuse
6th December, 1965

I send you my felicitations on the occasion of the TIRUVALLUVAR DAY CELEBRATIONS. You may be interested to know that I have introduced my American students of Hinduism to an English translation of the Tirukkural much to their delight and edification. Those of us attempting to perceive however dimly glimmerings of Hinduism are indebted to those who keep the light of the Tirukkural before the world. May you continue to encourage study and scholarship, and be enabled to publish editions of that esteemed work.

திருவள்ளுவ மாலை

[திருவள்ளுவ மாலை பாடிய முற்காலப் புலவர்கள்]

[எண் : பக்க எண்]

[திருவள்ளுவ மாலை வெண்பா பாடிய பிற்கால, இக்காலப் புலவர்கள்]

புகழ்ப் பூந்துணர்

[குறள்பற்றி அருங்கருத்துக்கள் வழங்கிய அறிஞர்கள்]

[எண் : பக்க எண்]

INDEX TO ADVERTISERS

விளம்பரதாரர்களின் அகரவரிசை

ACKNOWLEDGEMENT

Our thanks are due to the following personages who have congratulated the society by their messages on this auspicious occasion of

THE CELEBRATION OF 'THIRUVALLUVAR DAY'

President

Vice - President

Ex - President

Governors

Ministers

Judges

Statesmen

Professors & Scholars

Other Prominent Personages

MESSAGE


from

Dr. ZAKIR HUSAIN

President of India,

through his Secretary

Thiru. NAGENDRA SINGH




Rashtrapati Bhavan
New Delhi-4, October, 9, 1968.

The President is glad to learn that it is proposed to celebrate 'Thiruvalluvar Day' in Madras on 14th and 15th October, 1968 to perpetuate the memory of THIRUVALLUVAR, a great poet and saint. He sends his best wishes for success of the celebration.

NAGENDRA SINGH

வாழ்த்துக்கள்

MESSAGES



V. V. GIRI

VICE-PRESIDENT,
INDIA
NEW DELHI
7th October, 1968.

Thank you for your letter.

I send my best wishes for the success of the Thiruvalluvar Day Celebrations which your Society is holding on 14th and 15th of this month.

Dr. S. RADHAKRISHNAN
**(Through his Personal Secretary
C. R. RAMASUBBAN)**

"GIRIJA"
30 EDWARD ELLIOTS ROAD,
MYLAPORE, MADRAS-4.
October 6, 1968.

I am directed to acknowledge your letter to Dr. S. Radhakrishnan and to send his best wishes for the Thiruvalluvar Day Celebrations.

MORARJI DESAI
**Deputy Prime Minister
India**

NEW DELHI
10th October 1968

Saint Thiruvalluvar is worshipped by millions of people of Tamil Nad because his teachings embodied in the Kural have moved them as no other religious precepts have done. This outstanding work has since been translated in various languages and has now earned a universal recognition. I am therefore glad to learn that "Thiruvalluvar Day" is being celebrated by The South India Saiva Siddhanta Works Publishing Society of Madras on the 14th October and am happy to send my best wishes for every success on this occasion.

P. GOVINDA MENON
MINISTER OF LAW AND SOCIAL WELFARE
INDIA

2, HASTINGS ROAD,
NEW DELHI-11.
October 9, 1968.

Thiruvalluvar was a gem of Indian culture, a genius who elevated humanity to a high level of spiritual awakening. By honouring his memory we are purifying ourselves and educating our youth. The celebrations of 14th and 15th October will help to remind our generation of their precious heritage and their responsibility to pass it on to the next one in state of preservation.

I wish success to the celebrations.

K. L. RAO
Minister for Irrigation & Power,
NEW DELHI.

New Delhi
November 16, 1965

Tiruvalluvar was a great Tamil saint and a poet philosopher of the first century. His poetical classic, Tirukkural, has made him immortal. It is a literary treasure-a masterpiece of the choicest moral epigrams.

I am happy to know that the South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly Ltd., Madras, is celebrating the 'Tiruvalluvar Day'. I wish the celebration every success.

S. L. SILAM
Lieutenant Governor

RAJ NIVAS
PONDICHERRY
October 9, 1968

It gives me great pleasure to know that the Tiruvalluvar Day Celebration Committee is planning to bring out a Souvenir on the 15th October, 1968, and that His Excellency Sardar Ujjal Singh, Governor of Madras and some of the Madras Ministers are being associated with the function on the 14th October, 1968.

Tiruvalluvar is a saint-poet of all times and climes, whose teachings form the very embodiment of Indian, nay, wordly wisdom. His aphorisms are couched in matchless beauty and glory and so is his profile. In my opinion, if there is one saint whose practical wisdom could be universally accepted, it is Saint Tiruvalluvar's. Apart from being the bed-rock of Tamil literature, Tiruvalluvar's works symbolise the very epitome and synthesis of Indian life and culture.

I wish the function every success.

Dr. TRIGUNA SEN
Education Minister
India

New Delhi
11th October, 1968

It gives me great pleasure to send you a message on the occasion of the celebration of Thiruvalluvar Day in the city of Madras. It is appropriate that you have planned to bring out a souvenir to commemorate the occasion.

The function you have organised symbolises the reverence and esteem in which lovers of literature all over the world and among the Tamil-speaking people in particular hold this gifted and inspired saint-poet.

The immortal message that the poet has conveyed in his classic, "Kural", which ranks among the noblest literature in the world had been a source of inspiration and guidance to men and women all over the globe and will so continue to remain Thiruvalluvar saw the universal in the particular and in his work transcended limitations of time and space. His life was a shining example of what he himsel has said about the certainty of the man, who follows the good life here on earth being placed among the Gods in the life hereafter.

I wish the function every success.

T. S. SOUNDARAM RAMACHANDRAN
Deputy Education Minister


NEW DELHI.
November 6, 1965

Tirukkural contains truths which are of eternal value. It is amazing how modern and revolutionary the message of Kural is, considering that it flowered during the period of ancient civilisation.

What appealed to me most in Kural is its revolutionary attitude to human value and its new meaning towards relationship between man and God.

The ethics of Kural is more concerned with life in this world and attaches great importance to peace and harmony. It puts emphasis on human enterprise and industry to improve the standards of life rather than taking the view that poverty and diseases are the fruits of evil doings in previous life. It emphasises also the eternal truth of one God and one family, i e., human race.

இரா. நெடுஞ்செழியன்
கல்வி அமைச்சர்



சென்னை-9
11—10—1968

உலகம் உய்ய உயர்வழி காட்டிய திருவள்ளுவப் பெருந்தகையார் தோன்றிய தாய்த் தமிழ் நாட்டில் நாமும் தோன்றியிருக்கிறோம் என்பதை எண்ணுந்தோறும், எண்ணுந் தோறும் பெரு மகிழ்வு பொங்குகிறது. புரட்சிக் கவி பாரதியார் கூறியதற்கிணங்க, நம் தாய்த் தமிழகம் வள்ளுவரைப் பெற்று எடுத்து உலகினுக்கு ஈந்து தானும் வான் முட்டும் புகழைத் தனக்குத் தேடிக்கொண்டிருக்கிறது.

திருவள்ளுவப் பெருந்தகையார் வகுத்துத் தந்த குறள் நெறி எல்லா நாட்டினருக்கும், எல்லாக் காலத்தினருக்கும், எல்லாச் சமயத்தினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லாக் கட்சியினருக்கும், எல்லாத் தரத்தினருக்கும், எல்லா நிலையினருக்கும், எல்லாப் பருவத்தினருக்கும், எல்லா வழியினருக்கும், எல்லா வகையினருக்கும் பொருந்திவரக் கூடிய உலகப் பொதுநெறியாகும்.

அந்த நெறி தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், மிக உயர்ந்த நிலையையும் உலகத்தார்க்குச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது.

வள்ளுவர் வகுத்த நெறிப்படி ஒவ்வொருவரும் நடக்க முன் வருவார்களேயானால், வாழ்வில் துன்பம் குறைந்து, பயன் மிகுந்து இன்பம் பெருகும் என்பது ஒருதலை.

தமிழகப் பெருங்குடி மக்கள் எல்லோருக்கும் நன்கு பயன்படக்கூடிய வகையில் குறள் நெறிக் கருத்துக்களைச் சீரிய கட்டுரைகளின் மூலமாகத் திரட்டித்தரச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் முன் வந்திருப்பதற்காக அவர்களைப் பாராட்டி, போற்றி, வாழ்த்தி வரவேற்கிறேன்.

திருவள்ளுவர் மலர் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் ஊட்டி அறிவு மணம் கமழும், அழகு மலராகத் திகழும் என்பது திண்ணம்.


வாழ்க திருவள்ளுவர் பெயர்! வளர்க குறள் நெறி!



மு. கருணாநிதி
பொதுப்பணி அமைச்சர்

சென்னை-9
11-10-1968

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" பெருமை கொள்ளத் தக்க வகையில், தலைநகரில் திருவள்ளுவருக்கு விழா எடுப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வள்ளுவரை அறிந்தோர் தொகை உலகெங்கும் அதிக மாகி வருகின்ற இந்த நாளில், தமிழகத்தில் அவர் பெயர் தெரியாதோர் இருக்க முடியாது. ஆனால், வள்ளுவரை இதயத்தில் ஏற்றுக்கொண்டு அவர்வழி நடப்போர் தொகை அதிகமாக நாம் நாளும் உழைத்திட வேண்டும். இதற்கு இந்த விழாப் பெரிதும் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். தமிழ்ப்பெருமக்களின் ஒருமித்த ஆதரவோடு விழா இனிது நடந்தேற எனது நல் வாழ்த்துக்கள்.



செ. மாதவன்
சட்ட அமைச்சர்


சென்னை-9
11-10-1968

"சமுதாய நலம் இன்றித் தனி மனிதனின் நலன் இல்லை, தனி மனிதனின் நலன் இன்றிச் சமுதாய நலம் இல்லை; தனி நலனும் பொது நலனும் இசைந்து இயங்க வேண்டும்". இந்த உண்மையையே இன்றைய இருபதாம் நூற்றாண்டு அரசியல் பொருளாதார அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். சமுதாய நல்வாழ்விற்கு அடிப்படையான இக்கொள்கையே குறள்நெறியின்கண் ஆதாரமாக அமைந்துள்ளது.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

என்ற குறள்நெறி இன்றைய, என்றைய வாழ்க்கைக்கும் ஏற்ற, இன்றியமையாத நெறியாகும்.

குறள் நெறியைப் பரப்பியும், பழந்தமிழ் இலக்கியங்கள் புதிய சிறந்த நூல்கள் இவற்றைச் சீரிய முறையில் வெளியிட்டும் தமிழ்த்தொண்டு ஆற்றிவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் பணி என்றும் ஓங்குக.



ஏ. கோவிந்தசாமி
விவசாய அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
15-3-1968

சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழ்மறை தந்த தவப்புதல்வராம் திருவள்ளுவரின் நினைவு மலரொன்றைச் சீரோடும் சிறப்போடும் வெளியிட என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்.

கோட்டை,
சென்னை-9.
16–3–1968.

அன்புடையீர்,

உலகப் பொது மறை தந்த திருவள்ளுவர் பற்றியும் அவர்தம் திருக்குறள் பற்றியும் ஆய்ந்தறிய வேண்டும் என்ற பேரவா இன்று தமிழகத்தில் கற்றறிந்தோர்களிடையே மட்டுமல்லாமல் மற்றவர்களிடையேயும் பரவலாக ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம். இத்தகு சூழலில் திருநெல்வேலித் தென்னிந்திய நூற்பதிப்புக் கழகத்தார் திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் பற்றியும் நினைவு மலர் ஒன்று வெளியிட்டுத் தமிழகத்தில் இலக்கிய வரிசைகளிலே ஒன்ருகச் சேர்க்க இருப்பது கண்டு அகமகிழ்கிறேன். இறவாப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரின் காவியங்களுக்கு ஆராய்ச்சிப் புத்தகங்கள் பல அளவிடற்கரிய முறையில் வெளிவருதல் போன்று திருக்குறளுக்கான ஆராய்ச்சிப் புத்தகங்களைப் படைக்க வேண்டும். அத்தகு முயற்சிகளில் ஈடுபடும் தமிழ் அறிஞர்களுக்கு இது ஓர் தூண்டுகோலாக அமைய வேண்டுமென விரும்பி வாழ்த்துகிறேன்.



S. J. SADIQ PASHA
Minister for Public Health

FORT ST. GEORGE,
MADRAS
20-6-1968

மீண்டும் ஒரு பொற்காலம் காணும் முயற்சியில் தமிழகம் இப்போது முனைந்துள்ளது. இந்தப் பயணத்தில் வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்வது குறள்நெறியே யாகும். குறள் நெறியைக் கற்பதில் ஆர்வம் காட்டும் தமிழ்ப்பெருமக்கள் அந்த நெறிகளை வாழ்க்கையில் பின்பற்றுவதிலும் ஊக்கம் காட்டவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

படிக்கப்படிக்க, புதுப்புதுக் கருத்துக்களைத் தரும் குறள் குறித்து விரிவான தொகுப்பு நூல் வெளியிடும் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் முயற்சி போற்றற்குரியது. ''திருவள்ளுவர் நினைவு மலர்'' புதிய பதிப்பு முயற்சிகள் செவ்வையான முறையில் நிறைவேறவும், கருத்து மணம் கமழும் மலராக இது திகழவும் என மனமார்ந்த வாழ்த்துக்கள்.



டாக்டர். சத்தியவாணி முத்து
அரிசனநல, செய்தித்துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-9
2-4-1968


திருவள்ளுவரின் நினைவு தமிழர் அனைவரின் உள்ளத்திலும் பசுமையாக நிலைத்து நின்று, சிந்தனை, சொல், செயல் ஒவ்வொன்றுக்கும் வழிகாட்டியாக அமைய வேண்டும். மக்கள் அனைவரும் அவர்தம் அறவுரைகளையும், அறிவுரைகளையும் வாழ்க்கையில் பின்பற்றி ஒழுக ஆரம்பித்தால், தமிழ்ப் பண்பாட்டையும் மரபையும் கட்டிக்காக்கும் பெருந்தொண்டாக அது அமையும். திருவள்ளுவர் கண்ட வாழ்க்கை உண்மைகளையும் அநுபவங்களையும் உலகம் முழுவதும் வியந்து போற்றுகிறது என்பதை எண்ணிப் பாக்கின்ற பொழுது தமிழர் ஒவ்வொருவருக்கும் இந்தக் கடமை இருப்பதாகவே நான் கருதுகின்றேன். இதனை மக்களுக்கு எடுத்து விளக்குவதில், கழகம் வெளியிடும் ''திருவள்ளுவர் நினைவு மலர்'' வெற்றி பெற வேண்டும் என விழைகிறேன். வள்ளுவப் பெருந்தகையின் பெருமை பேசும் பெட்டகமாக மலர் வெளிவர எனது நல் வாழ்த்துக்கள்.



எம். பக்தவத்சலம்
முன்னாள் தமிழக முதலமைச்சர்

சென்னை-4.
8-10-68

தங்கள் கழகம் தமிழ் வளர்ச்சிக்குச் செய்து வரும் பணி மகத்தானது. 1330 ஆவது வெளியீடாகத் திருவள்ளுவர் மலர் இருப்பது தங்கள் பற்றையும் ஆற்றலையுமே எடுத்துக் காட்டுகிறது. தங்களுக்கும் தங்கள் கழகத்துக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சி. சுப்பிரமணியம்
தலைவர்
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி,

சத்தியமூர்த்தி பவன்,
54, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு,
சென்னை - 2.
10 - 10 - 1968

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் 7 ம் தேதிய கடிதம் கிடைத்தது. கழகத்தின் 1330 ஆவது வெளியீடாகத் திருவள்ளுவர் திருநாள் விழா மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி. விழா மலர் சிறப்புற அமைய விரும்புகிறேன்.

மா. அனந்தநாராயணன்.
உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி

சென்னை
12-10-68

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு வ. சுப்பையா அவர்களின் தமிழார்வத்தையும், குன்றுத ஊக்கத்தையும், நான் பல நாளாக நேரில் உணர்ந்து வருகிறேன். அன்னாரின் முயற்சியால் இன்று கழகத்தின் 1330 வது வெளியீடாகத் திருவள்ளுவர் திருநாள்விழா மலர் வெளிப்போந்து, சிறப்புடன் மலர்கின்றது.

இதன்கண் பல அரிய தொடர்புகள் அமைந்துள்ளன. குறள் நூற்பட்டி, நூற்பட்டியின் ஆசிரியர், நூற்பெயர் அகரவரிசை. இவை புதிய, சிறந்த அமைப்புக் களாகும். 'குறள்நானூறு' தொகுத்த என் தந்தையார், காலஞ்சென்ற அ. மாதவையா அவர்களின் பெயரும் இம் மலரில் அடங்கியிருப்பது எனக்குத் தனி மகிழ்ச்சியும் பெருமையும் பயப்பதாம். இம் மலர் வாழ்க.

Dr. P. V. Rajamannar,
D. LITT., L. L. D.,
Chief Justice of Madras (Retired)
MADRAS.



I am glad to learn that your society has decided to celebrate the TIRUVALLUVAR DAY in a grand manner at Madras and that a souvenir will be brought out containing articles on Thiruvalluvar contributed by various eminent scholars. I send my best wishes for the success of the celebrations.

Tirukkural is one of the few books in the world which are immortal in the sense that time does not affect their importance because of their universal qualities. The principles embodied in the famous collections of Tiruvalluvar are fundamental and are as valid to-day as they were centuries ago, as valid in other countries as in our own country. Tirukkural is among India's contributions to the literature and ethical thought of the world.

JUSTICE
SADASIVAM

"ANANDAASHRAMAM"
214, Ormes Road, Kilpauk,
Madras.
12-10-1968

நன்னெறி புகட்டும் நீதி நூல்களுள் தலைசிறந்தது திருக்குறள். தமிழ் வேதம் என்று தமிழ் மக்கள் பாராட்டும் நூல்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்,

என்பது ஔவையார் வாக்கு. திருக்குறள் உலகப் பொது நூலெனச் சிறப்பிடம் பெறுவதில் காலபேதமோ, சமய வேறுபாடோ, தேச வித்தியாசங்களோ தடை செய்யவில்லை. இதற்குக் காரணம், வள்ளுவர் வகுத்த குறள் நெறி யாவராலும் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை நெறியென்பதேயாம்.

உலகத்தை நாம் எந்த மனப்பான்மையோடு பார்க்கிறோமோ அதற்குகந்தாற் போலவே உலகமும் நமக்குக் காட்சி அளிக்கும் என்பது ஒரு கவிஞரின் கருத்து. திருக்குறள் கூட, படிப்பவர்களின் மனப்பான்மைக்கும், கருத்துக்கும் ஏற்றபடி மாறித்தோன்றுவது, அந்த நூலின் பெருமையையும், சிறப்பையும் காட்டுகிறது. ஆராய்ச்சிக்கும் இடம் தருகின்றது. சென்ற ஆண்டு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் திரு. சண்முகசுப்பிரமணியம் இயற்றிய "குறள் கூறும் சட்ட நெறி" என்ற புத்தகத்தை வெளியிட்டார்கள். திரு. சண்முக சுப்பிரமணியம் தாம் சட்ட நூல்களைக் கசடறக் கற்ற அறிவுடன் திருக்குறளை ஆராய்ச்சி செய்ததன் விளைவாய்க் குறளுக்கும் சட்ட இயலுக்கும் எவ்வகை உறவுகள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பலவிடங்களில் திருவள்ளுவர் கழகங்களும், திருக்குறள் பீடங்களும் தோன்றியுள்ளன. திருவள்ளுவர் திருநாள் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. திருக்குறள் உலகமெங்கும் சிறப்பிடம் பெறவும், அதன் கருத்துக்கள் பரவவும் நல்ல காலம் பிறந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் இந்த ஆண்டும் திருவள்ளுவர் திருவிழாவை நல்ல முறையில் நடத்தி அந்த -விழாவின் கருத்துக்கள் எல்லார் மனத்திலும் பதியும் வண்ணம், திருவள்ளுவர் திருநாள் விழா மலரைக் கழகத்தின் 1330ஆவது நூலாக வெளியிடும் பணியை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

MOHANLAL SUKHADIA
Chief Minister
RAJASTHAN.

Jaipur
4th November, 1965

I am happy to learn that you are celebrating the Tiruvalluvar Day to pay respectful homage to the memory of the great poet & philosopher Shri Tiruvalluvar. His teachings have been inspiring and guiding the millions of people since many centuries and his great work Tirukkural is one of our great classics.



Justice
M. M. ISMAIL.

MADRAS,
9th October, 1968.

"கழகம்", "கழக வெளியீடு" என்ற மாத்திரத்திலேயே, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தையும், அதன் பிரசுரங்களையுமே குறிக்கும் அளவுக்கு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இன்று வளர்ந்து, உயர்ந்து, நிமிர்ந்து நிற்கின்றது. ஏறத்தாழ, 50ஆண்டுகளாக, தமிழிலக்கியத் துறையிலே, கழகம் ஆற்றிவரும் பணி அருமையானது, அற்புதமானது. பழம் பெருநூல்களை அச்சு ஏற்றி, தேவையான விடத்து அரும் உரைகளை அளித்து, அழகிய கட்டடத்துக்குள் அவற்றை அடக்கி, தமிழ் மக்களின் கைகளிலே தவழ விடுவதன் மூலம், ஏட்டுச் சுவடிகளிலும், எல்லோருக்கும் கிட்டாத ஓரிரு பிரதிகளாகவும் இருந்து வந்த அரும் பெரும் கருவூலங்களையும், காவியங்களையும் அழிவினின்றும் காப்பதோடு, அவை எல்லோருக்கும் கிட்டுமாறும் கழகம் செய்துவருகிறது. இதுவரையில் கழகம் ஆயிரத்து நானூறு புத்தகங்களை வெளியிட்டிருப்பது என்பது ஒவ்வொரு தமிழனும் பெருமையும் பெருமிதமும் கொள்ளுதற்குரிய செய்தியாகும்.

அத்தகைய கழகம் தமிழ் மொழியின் ஒப்புயர்வற்ற அறநூலாகிய திருக்குறளைப் பல பதிப்புக்களில் வெளியிட்டிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஒவ்வொரு குறளும் வள்ளுவரின் அகன்ற, ஆழ்ந்த அனுபவத்தின் முத்திரையைத் தாங்கி நிற்கிறது. உலகையே தம்முள் அடக்கிக் கொள்ளும் அவர்தம் பரந்த உள்ளத்தைப் பிரதிபலிக்கிறது. காலத்தின் வரம்பைக் கடந்து நிற்கும் அவர்தம் தூர நோக்குக்குச் சான்று பகர்கிறது. உயிர்கள் அனைத்தையுமே தம் உறவுக்கு உரித்தாகிய அவர்தம் உன்னதப் பண்பை உறுதிப்படுத்துகிறது. எனவே வள்ளுவரும் அவர்தம் குறளும், என்றும் நம் நினைவில் நிறைந்து நிற்க வேண்டியவை. ஆகையால், கழகம் கொண்டாடும் திருவள்ளுவர் திருநாளுக்கும் அதையொட்டி வெளிவரும் மலருக்கும் என் நல் வாழ்த்துக்கள்.

KESHUB CHANDRA BASU
Former Speaker, Legislative Assembly,
West Bengal,
CALCUTTA.

I am glad to know that the 'Tiruvalluvar Day' is soon going to be celebrated in Madras in memory and honour of Tiruvalluvar, the poet-saint of South India. The writings of such great men are the true recorded evidence of India's cultural advancement.

I wish the celebration all success and hope that the organisers will be able to create in the minds of the South Indian readers a true desire to go through the writings of this famous poet and be inspired by them.

Dr. HABIBULLAH BAIG,
M. B., B. S., M. L. A.
MAYOR OF MADRAS

Ripon Buildings,
MADRAS-3.
11th October, 1968.

I am happy to note that Thiruvalluvar Day is going to be celebrated on a grand scale by Thiruvalluvar Day Celebration Committee constituted by your Society. The City of Madras has the great pride of being the birthplace of the great Tamil sage and scholar, Thiruvalluvar, who has gifted to us the nectar of Thirukkural, the deep rooted teachings of which still remain unscathed and lead the people to right path and it has been recognised by all as the Common Scripture of the World. It is very appropriate and our duty also to honour our Immortal Citizen, who has become the World Saint. I wish the Celebrations all success.

Dr. R. SUBRAMANIAM,
B. SC., M. D. C. P. (LONDON)
Physician, Govt. General Hospital,
Professor of Medicine, Madras
Medical College, Madras.

Among the many illustrious sons of India, undoubtedly Thiruvalluvar is the most outstanding person, a person who led a simple life and left behind a monumental work which in spite of the advance that have taken place, and in spite of its age, remains most up-to-date. The couplets written by him if got by heart by any student of Tamil will help him on all occasions when he is called upon to give a short speech, be that occasion intended for addressing the youngsters or a social gathering or a marriage festival. Another work of a similar nature is yet to be produced.

Dr. P. V. CHERIAN,
Governor of Maharastra

Raj Bhavan
BOMBAY 35 (WB)
October 9, 1968.

I am glad to hear that the Tiruvalluvar Day Celebration Committee will be releasing a souvenir on October 15 this year. It is a well known fact that Tiruvalluvar was a great saint in our country and his teachings and sayings are respected and valued by thousands and thousands. His name is also well known outside India also. This souvenir, I am sure, will be greatly appreciated by our people and I am glad Shri Ujjal Singh, Governor of Madras will inaugurate the celebrations on the 14th October. I wish the fuction every succes.



SIR RAMASWAMI MUDALIAR

"INDIA STEAMSHIP HOUSE"
21, OLD COURT HOUSE STREET
CALCUTTA-1
9th October, 1968.

I am in receipt of your kind letter of 5th October, informing me that the 'Thiruvalluvar Day' is proposed to be celebrated to perpetuate, the memory of the great Poet and Saint on the 14th and 15th October, and that on the 14th October a translation of the 'Tirukkural' in English verse written by Yogi Suddananda Bharathiar will be released. I feel greatly honoured by your kind invitation to release this book on the 14th October. It is true that early in 1930 I requested and encouraged the late Mr. Dikshitar to translate 'Tirukkural' in English verse.

I would have deemed it a great privilege to release the verse form of these English translations, but greatly to my disappointment, I have to deny myself this honour and privilege, as I have some inescapable engagements on the 14th and 15th at Calcutta and Delhi.

I cannot sufficiently express my satisfaction and pleasure that this translation has been undertaken in verse form by Yogi Bharathiar. I hope it will be translated into French, German, Spanish and other Eastern and Western languages before long. I have conveyed this suggestion to the UNESCO Authorities also.

Dr. T. M. P. MAHADEVAN,
M. A., PH. D.,
Director, Centre for Advanced
Study in Philosophy,
University of Madras.

Madras-5
4th December, 1965

கடவுளை வணங்காராகில் கற்றதனுற் பயனில்லை.

1904 கோ. வடிவேலுசெட்டியார்

கற்றதனல் - (எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்) கல்வியறிவினுல், ஆய - உண்டாகிய, பயன்-பிரயோசனம், என் - யாது, வாலறிவன் - மெய்யறிவு உடையவனது, நற்ருள் - நல்ல வடிகளை, தொழாஅ ரெனின் - வணங்காராயின்?

நூலறிவிற்குப் பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை யொழித்தலென்பது இதனுற் சொல்லப்பட்டது.

(கருத்து) மெய்யறிவுடைய கடவுளடியை வணங்காதவரது கல்வியறிவு பயனுடையதன்ரும் என்பது.

1907 சரவணப் பெருமாளையர்

வாலறிவன் - மெய்யறிவையுடையவனது, நற்ருள் - நல்ல அடிகளை, தொழாஅ ரெனின் - வணங்காராயின், கற்றதனல் - யாவுங் கற்ற அக் கல்வியறிவினுல், ஆய-உண்டாகிய,பயன்-பிரயோசனம், என் - யாது?

(கருத்துரை) மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகில் கற்றதனுற் பயனில்லை என்பதாம்.

1913 மு. ரா. அருணசலக் கவிராயர்

மேற்கூறிய மெய்யறிவினையுடைய கடவுளது நல்ல திருவடிகளை வணங்காராறுல் நூல்களைப் படித்ததனுலே யாதொரு பிரயோசனமுமில்லை என்பதாம். எனவே படித்தற்குப் பிரயோசனம் கடவுளது திருவடிகளை வணங்க வேண்டு மென்பதும் வணங்காராறுல் கற்றிருந்துங் கல்லாதவரே ஆவரென்பதுங் கண்டு கொள்க.

1924 கி. குப்புசாமி முதலியார்

(விளக்கர்) கற்கவேண்டிய நூல்கள் என்றமையால், கற்கவேண்டா நூல்களும் உள்ளனவோ என்று மாணக்கர் ஐயுறலும், ஆசிரியர், "ஆம்; உலகத்தில் கற்கவேண்டிய நூல்கள் அறிவு நூல்களாம்; கற்கவேண்டாதன உலக நூல்களாம். அறிவு நூல்கள் என்பன பிறப்பினையறுத்து முத்தியினை யடைவதற்குக் கடவுளின் திருவடியை யடையவல்ல மார்க்கங்களைப் போதிக்கும் நூல்களாம். உலக நூலாவது இம்மைக்கு வேண்டுவனவாகிய போகம் ஒன்றையே கொடுத்து இடையருப் பிறப்பில் செலுத்துவது ஒன்ருகும். அவை, முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைப் பயப்பிக்கின்ற பதி நூல்களும்; அறிவு, ஆற்றல் இன்பங்களைப் பயப்பிக்கின்ற பசு நூல்களுமேயாம் ஈது அறிவிப்பதற்கு,

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்"

என்றபடியால், அறிவு நூல் கற்று அதன் பயன் அடைதற்கு நீண்ட அறிவினனைத் தொழல் வேண்டும் என்று ஆசிரியர் கூறினுர்.

1925 அ. மாதவையா

உண்மை அறிவினனை கடவுளின் திருவடி தொழாவிடின் அறிவை நாடிப் பல கலைகளைக் கற்றதனல் ஆகிய பயன் என்ன?

If one worships not the All Know of what avoil is learning?

1928 காயாமொழி - குமரகுருபரர்

பரிசுத்த அறிவாளியாய கடவுளின் தூய பாதங்களை வணங்காவிடில் ஒருவன் கற்றதனலாகும் பயன் யாது?

1929 கி. வீரராகவன்

கற்ருேர் நிறைந்த அறிவுடைய கடவுளது தாள்களை வணங்காவிட்டால் அவர்கள் படித்ததனல் உண்டான பயன் ஒன்றும் இல்லை.

1935 வ. உ. சிதம்பரம் பிள்ளை

வால் அறிவன் நல்தாள் தொழாஅர் என்னின் - அறிவினனது நல்ல அடிகளை வணங்கார் என்ருல், கற்றதனல் ஆய பயன் என் - (மாந்தர் பல நூல்களையும்) கற்றதனல் உண்டாய பயன் யாது? (ஒன்றும் இல்லை)

அகலம். அகரம் இசை நிறைக்க வந்த அளபெடை கொல்: அசை "தாள்" சாதி ஒருமைப் பெயர். என்னின் என்பது விகாரத்தால் னகர வொற்றுக் கெட்டு நின்றது எவன் என்னும் வினுக்குறிப்பு வினைமுற்று என் என்று நின்றது.

(கருத்து) கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல்,

1937. வை. மு. சடகோபராமானுசாச்சாரியார்

கற்றதானுலாய பயன் என் - (எல்லா நூல் களையுங் கற்றவர்க்கு) அக் கல்வியறிவான் ஆய பயன் யாது? வால் அறிவன்-மெய்யுணர் வினையுடையவனது. நல்தாள் - நல்ல தாள் களை, தொழாஅர்எனின் - தொழாராயின்.

ஆய - ஆகிய, மெய்யறிவு - உண்மையறிவு; ஐயம் திரிபு இல்லாத அறிவு; தத்துவ ஞானம். தொழுதல் - வணங்குதல்: வினைப்பெயர். வினை வெழுத்தினடியாகப் பிறந்த பெயர். இது அஃறிணையிருபாலுக்கும் பொது;

உலகத்தார் கடவுள் திருவடிகளை வணங்காவிட்டால், (அவர்) எழுத்து நூல் களைப் படித்ததனுல் ஆகிய பிரயோஜனம் என்னமோ? ஒன்றும் இல்லை என்பது கருத்து. ஆல் உருபு தொல்காப்பியத்திற் கூறப்பட வில்லை. எழுத்து என்பது எழுத்துக்களாலாகிய நூலைக் குறிப்பதால் ஆகுபெயர். உலகு, எழுத்து என்பன முதற் குறளிலிருந்து அதி கரித்தன.

1949 டாக்டர் மு. வரதராசனுர்

"தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவ னுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானுல், அவர் கற்ற கல்வியினுல் ஆகிய பயன் என்ன?"

1949 ந. சி. கந்தையா பிள்ளை

எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக் கல்வியறிவானுய பயன் யாது; மெய்யறிவினை யுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்.

1949 புலவர் குழந்தை

வால் அறிவன் நல்தாள் தொழார் எனின்- உண்மையறிவினை உடையவனது நல்ல தாள் களைத் தொழாராயின், கற்றதனுல் ஆயபயன் என் - ஒருவர்க்குக் கற்றதனுல் உண்டாகிய பயன் ஒன்றுமில்லை

கொல் - அசை. குணத்தை உயர்திணை யாண்பாலாகக் கொண்டதற்கேற்ப 'நற்ருள்' என்ருர். வருகின்ற பாட்டுக்களில் வரும் 'மாணடி' முதலியவற்றிற்கும் இஃதொக்கும். வால்-உண்மை. உண்மையறிவைப் பெறுவதே கல்வியின் பயனுகும்.

1950 விருதுநகர் திருவள்ளுவர் சங்கப் பதிப்பு

மெய்யறிவினை உடையவனது நல்ல அடி களை வணங்காராயின், எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வி அறிவினுல் உண்டாகிய பிரயோசனம் யாது?

1950 வித்துவான் திரு. மு. ரா. கந்தசாமி பிள்ளை

தூய அறிவுடைய கடவுளது நல்ல பாதங் களை வணங்காரானுல், கற்ற கல்வியால் உண் டாகிய பயன் யாது? (ஒன்றுமில்லை எ - று.)

(கருத்து) கற்றதன் பயன் கடவுளைத் தொழு தலாம்.

1953 க. வச்சிரவேல் முதலியார்

"கல்வியறிவின் பயனுவது கடவுளடி தொழுதலே. ஒருவன் வள்ளுவர் வழியைக் கடைப்பிடிப்போனுயின், கடவுளை இல்பொரு ளென மயங்கும் மருட்கையோ, அஃது இல் பொருளோ உள்பொருளோ எனத் தடுமாறி நிற்கும் ஐயமோ உடையனுதல் எங்ஙனம் கூடும்!

உயர்திணையன்று; இதனை வினைப்பொரு ளைத் தருங்குறிப்பு வினைமுற்றெனக் கொள்ளு தலுமாம். என் என்று ஆனது தொகுத்தல் விகாரம். இன்மை - இல்லாமை. கொல்-இடைச் சொல். அசை நிலையாவது ஒருபொருளையும் உணர்த்தாமற் பெயர்ச் சொல்லோடாயினும் வினைச்சொல்லோடாயினும் சார்த்திச் சொல்லப் பட்டு நிற்றல் பிறவிப் பிணிக்கு மருந்து. பிறப்புத் துன்பங்களாகிய நோயை ஒழித்தற்கு மருந்துபோல்வது. ஆகம அறிவு-சாஸ்த்திரங் களைக் கற்றதனுலாய அறிவு. இதனுல் - இப் பாட்டால், ஆய - தெரிநிலைப் பெயரெச்சம்; ய்- இடைநிலை; இறந்தகால முணர்த்திற்று. தொழாஅர் - அளபெடை, செய்யுளோசை நிறைக்க வந்தது. இனி, "அறிவனறவோ னறிவுவரம் பிகந்தோன்" எனச் சிலப்பதி காரத்து வருதலால் வாலறிவன் - எல்லாப் பொருளையும் அறியும் தூய அறிவையுடையவ னென்பது அருகக் கடவுளென்பாரும் முளர். இனி, "அடலாழி கொண்ட அறிவன்" என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால் அறிவன்- திருமாலென்றுங் கொள்ளலாம்.

1951 திரு. வி. கலியாணசுந்தரனுர்

"கற்றலின் பயனும், வாலறிவன் இயல் பும்" இப் பாட்டின் உள்ளுறை. மேற்பாட்டிற் போந்த 'மலர் மிசை ஏகினு'னை உணர்தலே கல்வியின் பயன் என்றும், இறைவன் 'மலர் மிசை ஏகி' இருத்தலைத் தெளித்தால் அவன் 'வாலறிவனு'யுள்ள இயல்பு இனிது விளங்கும்.

என்க. வால் - தூய்மை; ஊர்தி வால் வெள்ளேறே - புறம். க. அறிவன் - அறிவுடையவன், இங்கே இறைவன். தொழாஅ ரெனின் - வணங்கிக்கொண்டிராராயின்; அளபெடை இடையருமையைக் குறிப்பது. வால் அறிவன் தூய அறிவன்; இறைவன். அறிவு இறைக்கும் உண்டு; உயிர்க்கும் உண்டு. முன்னையது அறியாமை அற்ற அறிவு; பின்னையது அறியாமை விரவிய அறிவு. அவ்வறிவு, இவ்வறிவின் அறியாமையைப் போக்கித் தன்னைப் போலாக்கத் துணைபுரிவது. கொல்: ஈண்டு அசை என்பர். 'கொல்' பெரிதும் வினுக்குறிப்பைத் தொடர்ந்து வருவது இயல்பு. இது பற்றியே 'என்கொல்' என்பதற்கு என்னை என்றுமட்டும் பொருள் கூருது என்னையோ என்று பொருள் கூறப்பட்டது. ஆகவே, 'கொல்'லும் ஈண்டுப் பொருளுடைய தென்க. அளபெடை, அசைநிலை என்ற பெயரால் கூறப்படுவன வெல்லாம் திருவள்ளுவர் மொழியில் பொருளுடையனவாகவே திகழும். கற்றதனுல் என்பதனுடன் அதன் இனமாகிய 'கேட்டதனுல்' என்பதையுஞ் சேர்த்துக்கொள்க. தெளிவுக்கு இரண்டும் வேண்டற்பாலன. கற்றதனுல் பயன் என்னை? வாலறிவன் உண்மையை உணர்ந்து, அதனுல் தெளிவுபெற்று, மற்றவர்க்குச் சேவை செய்வது இதற்குத் துணைபுரிவது தொழுகை. தொழுகையைக் கற்றதனுலாகிய பயனை விளைவித்தலால் 'வாலறிவன் நற்ருள் தொழாஅ ரெனின், கற்றதனுலாய பயன்' என்கொல் என்ருர்.

1939 டாக்டர் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி

எழுத்து, உலகு, கடவுள் இவற்றிற்குள்ள இயைபு யாது எனின்,

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின்.

அறத்தை உள்ளவாறு உணர்ந்து, அதன் வழிநின்று பயன்கொள்ள விழைவார் கடவுள் உண்மைக் கொள்கையும், கடவுள் வழிபாடும் உடையராதல் வேண்டும்,

1953 ச. கந்தசாமி முதலியார்

கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல். கடவுளைத் தொழுவதன் பயன் மனக்கவலை ஒழிதல்.

1954 ஜி. வரதராசன்

தூய அறிவு வடிவினுகிய இறைவனது நல்ல திருவடிகளை வணங்காமல் போனுல் (மனிதனுகப் பிறந்து) கல்வியறிவு பெற்றதனுல் யாதொரு பயனும் இல்லை.

உலகத்துக்கு முதல்வனுகிய இறைவன் தூய அறிவு வடிவமாக இருக்கின்ருன் என்பது கூறப்பட்டது. அறிவில் தூய்மையாவது, அறியாமை நீங்கி எல்லாவற்றையும் அறியும் நிலை பெறுதல். மக்கள் முழுதும் உணரும் நிலையை அடைவதுதான் இறைவனை அறியும் நிலையாகும். கல்வியறிவு இறைவனை உணரும் படி செய்யவேண்டும் என்பது கருத்து.

1954 விருதுநகர் ச. வெள்ளைச்சாமி நாடார்

மெய்யறிவு வடிவாய் விளங்கும் கடவுளின் நல்ல திருவடிகளைத் தொழாமலிருப்பாராளுல் அவர் கற்றுணர்ந்த அறிவினுல் ஏற்படும் பயன் யாதும் இல்லை.

1954 எம். இ. வீரபாகு பிள்ளை

ஒருவர் கடவுளுடைய திருவடிகளை வணங்காவிடின் அவர்க்கு நூல்களைப் படித்ததனுல் உண்டாகும் பயன் ஒன்றுமில்லை.

1954 நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

வால் அறிவன் - தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய, நல்தாள் தொழாஅர் எனின் - நன்மை பயக்கத் தகுந்த பாதங்களை வணங்கமாட்டார் என்ருல், கற்றதனுல் ஆய பயன் என் கொல் - அவர்கள் கல்வி கற்றதனுல் அடைந்த பலன் என்னவோ தெரியவில்லை.

(பொ - ரை) நன்ருகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு வணக்கம் செலுத்த மறுக்கின்றவர்களும் இருக்கிருர்களே! அவர்கள் படித்த படிப்பு என்ன படிப்பு.

(வி - ம்) கல்வி கற்பது அறிவுக்காக. நாம் எவ்வளவு கல்வி கற்ருலும் அதிலிருந்து அறிந்துகொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறியவேண்டிய அறிவு இருந்துகொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது, அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது.

ஆகவே நாம் அறிந்துகொள்ள முடியாத அறிவு இருந்துகொண்டே இருப்பதுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் 'வாலறிவன்' என்றும், பகவன் என்றும் சொல்கிறோம். அந்த 'பகவான்' என்ற பூரண அறிவிற்கு மிகமிகக் குறைந்ததுதான் நம் முடை அறிவு என்பதை ஒப்புக்கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ! ஒப்புக்கொண்டால் அதற்கு வணங்க வேண்டும் என்பது கருத்து.

1955 வித்துவான் மா. வேதாசலம்

பன்னூல் கற்றதன் பயன்ரு னென்னே
தூய வறிவன் துணைத்தாள்
வாய்மை யோடு வணங்கா ரெனினே.

1955 பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை

மெய்யறிவுடையவனாகிய கடவுளது நிலைத்த இன்பமளிக்கும் திருவடிகளை வணங்கமாட்டா ரென்றால் தக்க நூல்களைப் படித்ததனால் ஆகிய பயன் யாதும் இல்லை.

1956 நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

வால் அறிவன் - தூய அறிவினையுடைய அக்கடவுளது, நல்தாள்-திருவடிகளை, தொழாஅர் எனின் - வணங்காதவர்களாயின், (அவர்கள்) கற்றதனால் - கற்ற கல்வியால், ஆய - உண்டாகிய, பயன் - பலன், என் - யாது? (ஒன்றுமில்லை.)

(இ - நு.) கல்வியறிவின் பயன் கடவுளைத் தொழுதல் என்பதாம். வால்-சுத்தம், தூய்மை.

''தொழாஅர்'' எனற் பாலது செய்யுளிசை நிறைக்கத் தொழாஅர் என நீண்டது. கொல்-அசைநிலை. எவன் என்னும் வினாவினைக் குறிப்புப் பெயர், என் என்று மரூஉவாகி நின்று, இல்லையென்னும் பொருள் குறித்தது. நற்றாள் - திருவடி, நன்மை - பிறவிப் பிணிக்கு மருந்தாதல். தூயதாவது இயற்கைப் பொருளேயாதல், தூய அறிவாவது இயற்கை யறிவு; எனவே, இறைவன் இயற்கை யறிவினனுதல் பெறப்பட்டது.

1956 லிப்கோ தெள்ளிய உரை

மெய்யறிவு உடையவர்களின் அடிகளைத் தொழவில்லையென்றால், நூல்களைக் கற்றவர்க்கு, அக் கல்வியினால் ஆன பயன் யாது?

1956 டாக்டர் வ. சுப. மாணிக்கம்

இறப்பும் நிகழ்வுமாகிய கல்வி நிலைக்களத்தினின்று மெய்யான எதிரது உய்த்துணர வல்லுநரே அறிவர் ஆவர். நீடிய வருங்காலத்தை முன் எண்ணுதலளவில் அறிவின் இலக்கணம் நின்றுவிடவில்லை. அங்ஙன் எண்ணுவது பிறழா திருத்தலும் வேண்டும். செம்மை தழுவிய மயக்கமில் எதிருணர்வே மெய்யறிவு எனப்படுவது. இறைவனை வாலறிவன் என அறிமுகப் படுத்தியதனால் (இறப்பும் நிகழ்வும் அறியும்) மருளறிவினராகிய நாம் அவனை வணங்குதோறும் - இடையறுது எண்ணுதொறும்— தூய அறிவு ஊறப் பெறுவோம் என்பது வள்ளுவர் நெஞ்சமாயிற்று. வாழ்வின் குறிக்கோள் மாசில் மெய்யுணர்வு பெறுக என்னும் திண்ணிய எண்ணக் கொழுந்தினையே ''வாலறிவன் நற்றாள் தொழல்'' என உருவகஞ் செய்தார்.

1956 ஈக்காடு சபாபதி முதலியார்

உண்மை அறிவினையுடைய திவ்விய திருவடிகளை வணங்காமல் இருப்பாரானால், அவர் தாம் கற்ற அக் கல்வியறிவினால் உண்டாகிய பயன் யாது? (யாதொரு பிரயோசனமும் இல்லை.)

1958 பால்வண்ணனார்

''உண்மை உணர்வுடையவனின் தூய திருவடிகளைத் தொழாமல், எவ்வளவு நூல்களைக் கற்றாலும் அதனால் என்ன பயன் விளையும்?''

1958 வெ. கண்ணையன்

விளங்கின, மாசற்ற, ஒளிமிகுந்த, வெண்மையான, பெருமை பெற்ற, சகல லோகங்களிலும் காணப்படும் அறிவிற்கும் மேலான மெய்யறிவை யுடையானது நல்ல தாள்களை, திருவடியை, மலரடியை, மாணடியை, நற்கழலை வணங்கார் என்றால், ஆயின் மேற்கூறியபடி எழுத்துக்களால் ஆக்கப்பட்ட சகல கலைகளையும் கற்றறிந்ததனால் ஆகிய, உள்ள பிரயோசனம், பலன் வேறு என்ன? வேறு யாது? கொல்லோ!

1959 எஸ். இராமகிருஷ்ணன்

இதில் இறைவனை ''வால் அறிவன்'' (தூய அறிவுக்கு இருப்பிடமானவன்) என்று

குறிப்பிடுகிறூர். தூய அறிவுக்கு உறைவிடமாக விளங்கும் இறைவனைத் தொழாவிட்டால், படித்த படிப்பால் பயனில்லை என்பது இதன் கருத்து. படித்தவர்களுக்குத் தேவையான தன்னடக்கப் பண்பை இந்தக் குறள் போதிக்கிறது. அறிவின் இறுதியைக் கண்டு விட்டதாகக் கூறும் அகந்தை மெய்ஞ்ஞானிகளுக்குப் புறம்பானது. அறிவுக்கு உறுதியில்லை எனக் கூறி, மானிடன் அறிவைத் துச்சப்படுத்தும் போக்கு, சோர்வுக்குத் தூண்டுகோல்; சோம்பலுக்கு மூடுதிரை. இந்த இரண்டு போக்குகளையும் இங்கு வள்ளுவர் கண்டிப்பதாகக் கொள்ளலாம். ''கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவு'' என்பதை உணர்ந்து அடக்கத்தைப்பேணி,''சாந்துணையும்(இறக்கும் வரை) கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

1959 சாமி. சிதம்பரனுர்

பரிசுத்தமான அறிவையுடைய கடவுளின் நல்ல பாதங்களை வணங்கார் ஆயின் கல்வி கற்றதனுல் உண்டான பலன் என்ன?

1959 டாக்டர். சி. இலக்குவனுர்

தூய்மையான அறிவினன் எனப்படும் கடவுளின் நல்ல அடிகளை வணங்காராயின் எல்லா நூல்களையும் கற்றதனுல் உண்டாய பயன் என்ன? ஒன்றுமில்லை.

1960 பேராசிரியர். மயிலை. சிவமுத்து

தூய்மையான அறிவினையுடைய கடவுளின் சிறந்த திருவடிகளை நாம் வணங்க வேண்டும். அவ்விதம் வணங்காவிட்டால் நாம் கற்ற கல்வியால் பயன் இல்லை.

1962 மு. கோவிந்தசாமி

வாலறிவன் என்றமையால் இறைவனை அறிவுருவமாகக் கொண்டு அறிவினை அவனிடம் வேண்டி வழிபடுதலன்றி ஆற்றல் செல்வம் முதலியவற்றை அளிப்பவனுகக் கொண்டு வழிபடல் 'அறிவு சிறந்த' மனித இயல்பிற்கு ஆகாதென்பதாம். உலகக் கல்வியறிவு சிறந்தோரும் (நாத்திகர் முதலோர்) வீண் (சமய) வாதங்களிற் காலத்தைப் போக்காமல் வாலறிவனை வழிபட்டால் உயர்மனிதத் தன்மைக்குரிய அறிவு விளங்கப் பெறுவர். சமய வாதத்தினும் வழிபாடு சிறந்தது.

தூத்துக்குடி ந. சிவகுருநாதன்

"இஃது இந் நூலைப் பயில்வதனுல் அடையும் பயன் கடவுளைத் தொழுது அவன் திருவருளைப் பெறுவது என்பதைக் குறிப்பானுணர்த்துவதுபோல் இருக்கின்றது. ஈண்டுக் கற்றல் என்பது "இலங்கு நூல்" என் ஆசிரியர் நானூற்றுப் பத்தாம் குறட்பாவால் கூறும் நூல்களை ஓதியுணர்தலேயாகும். உலக நூல் "கல கல கூ உந்துணை யல்லாற் கொண்டு தடுமாற்றம் போந்துணை" செய்ய மாட்டா. இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களின் உண்மையையும் இலக்கணங்களையும் உள்ளவாறே இனிதுணர்த்தும் ஞான நூல்களென்பதே ஆசிரியர் கருத்தாகும். அத்தகைய நூல்கள் மெய்கண்ட நூல்களேயாம்.

குருசரணுலயர்

உண்மையறிவினையுடைய இறைவனது பாத பதுமங்களை வணங்காதவர்களது கல்வியறிவினுல் பயனில்லை.

பி. பி. இரத்தினம் பிள்ளை

எல்லா நூல்களையும் கற்றவர்கள் உண்மையான அறிவினையுடையவனது நல்ல பாதங்களை வணங்காவிட்டால் அவர்கள் அடைந்த கல்வியறிவினுல் உண்டாகிய பிரயோசனம் ஒன்றும் இல்லை.

ENGLISH

1794. N. E. Kindersley

Though one should be intimately acquainted with the whole circle of sciences, and master of the respective principles on which the most abstruse of them are founded; yet, if this knowledge be unaccompanied by the humble worship of the omniscient God, it shall prove altogether vain and profitable.

1812. F. W. Ellis

What is the fruit that human knowledge gives,

If at the feet of him, who is pure knowledge

Due reverence be not paid?

1840. Rev. W. H. Drew

What profit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge?

1873. E. J. Robinson

"The learnings vein that does not fall
At his good feet who knoweth all.

1886. Rev Dr. G. U. Pope

No fruit have men of all their studied lore
Save they the 'Purely Wise Ones' feet adore.

Note :—The end of learning is the worship of the only wise. [This also satisfies the condition that an author should state in the beginning of a book the *benefit* to be gained by its study]

1915. Mrs. T. Tirunavukkarasu

What good indeed comes of all learning, if one has not learnt to worship at the sacred Feet of him, who is embodiment of all wisdom?

1916. V. V. S. Iyer

"Of what avil is all thy learning, if thou worship not the holy feet of Him of the perfect intelligence?"

1925. A Madhavaiah

If one worships not the All-knower, of what avail is learning?

1931. H. A. Popley

What use is lore, if the learned will not bow
Before the feet of Him that bides in lotus-hearts?

Note :—The Phrase 'the feet of God' or His sacred feet 'is commonly used in Hindu devotional poetry to signify the grace of God.'

1933. A. Aranganatha Mudaliar

"Of what avail is one's vast learning, if one adores not the holy feet of Him who is he pure light of wisdom.

1942. Prof. M. S. Purnalingam Pillai

What avails learning (or any other act)
unless men adore the holy feet of Him
of perfect wisdom (which afford salvation).

1949. Prof. V. R. Ramachandra Dikshitar

Of what avail is learning, if the
learned do not adore the good feet of
Him who is Immaculate Wisdom ?

1950. M. R. Rajagopala Aiyangar

"Of what use is learning if one
adoreth not the feet of Him
who has true wisdom ?"

1953. Prof. A. Chakravarti

'Of what avail is their learning if they
do not adore the benevolent feet of the
Lord, the All—Knower par excellence ?

Commentary

This couplet emphasises the importance of the spiritual basis of education. Learning by itself will be of no use if it does not lead the person towards the realisation of summum bonum in life. Hence it is indicated that all learning must lead to the realisation of the Self which is the goal of life. The one and only means of such a realisation to walk the path of life revealed by the Omniscient Being. The Omniscient Lord through His knowledge *par excellence*, technically called Kevola Gnana, has within His knowledge the whole of reality. Hence he is able to perceive what is good for mankind and reveal it for the benefit of the world. Hence, learning should lead to this spiritual attempt which is associated with the Lord who revealed the path. Hence, those that do not adore the good feet of the Lord will have no benefit from their learning. In fact all the Agamas, which constitute the scripture for the Jains, were revealed by the Thirthankara to his immediate disciples who transcribed them in the form of books for the benefit of the world.

1955. I. D. Tangaswami

"What is the use of all learning if it does not lead to the feet of God who is Wisdom in all purity, for worship which is a cure for the illness of repeated births and which results from the knowledge of sacred writings?"

1962. K. M. Balasubramaniam, B.A., B.L.

Pray, what could be the use of all
the learning they have got,
The good feet of the sacred wise one
if they worshipped not?

GERMAN

1854. Dr. Th. Karl Graul

Was ist der Nutzen, den man vom Lernen nimmt, wenn man nicht anbetet den freundlichen Fuss Dess dem mit lautern Wissen.

LATIN

1865. Dr. C. Graul

Discendo fructus quis, nisi verearis bonos pedes (numinis) pura scientia praediti?

1886. Rev. C. J. Beschi

Plurima didicisse quid, amice, predenit rist veriari lonus ejus, pedes, ain puram scientions Hapet i. e. Sc. a. b, amni evrores. defaecateum. Lotin.

FRENCH

1942. Gnanoo Diagou

A quoi sert le savoir, si l'on n'adore pas les pieds de Celui qui a la vraie Connaissance parfaite.

RUSSIAN

1964. Ilsov

Какой же прок в приобретении знаний, если их обладатель не припадает к стопам того, кто являет собой олицетворение чистого знания?

SANSKRIT

1922. நீதி குசுமமாலா Niti Kusumamala

Satya gnana svarupasya
Satpade na namanti ye
Tesam akila sostrartha
Vijnane nasti kim phalam
சத்திய க்ஞான ஸ்வரூபஸ்ய
ஸத்பதே ந நமந்தி யே
தேஷாமகில சாஸ்த்ரார்த்த
விக்ஞானே நாஸ்திகிம் பலம்.

1964. S. N. Srirama Desikan

ईशस्य ज्ञानरूपस्य विना पादनिषेवणम् ।
सन्त्वधीतानि शास्त्राणि न तैरस्ति प्रयोजनम् ॥

SINHALESE

1961. Miss Misigamy

ඒගත්කාමී දැනි මුත් – ඇති පල කිම ද? දැනුමෙන්
දිය හා පා පිදුම් – බැතින් නො වදිත් නම් කෙනෙක්,යම්.

HINDI

1924 Kshmanandarahat

यदि तुम सर्वज्ञ परमेश्वर के श्रीचरणों की पूजा नहीं करते हो, तो तुम्हारी यह सारी विद्वत्ता किस काम की?

1952. B. D. Jain

) यदि तुम उस सर्वज्ञ परमेश्वर के चरणों की आराधना नहीं करते हो, तो तुम्हारा यह सारा ज्ञान किस काम का?

1958. Prof. S. Shankar Raju Naidu

विशुद्ध-ज्ञान रूप सर्वेश्वर के श्री चरणों की सेवा के बिना सारा विद्यार्जन व्यर्थ ही है।

1964. M. G. Venkatakrishna Rao

विद्योपार्जन भी भला, क्या आयेगा काम ।
ज्ञानागार-सुचरण का, यदि नहिं लेंगे नाम ॥

MALAYALAM

1957. V. Gopalakurup

എല്ലാമറിയുന്നോൻ തൻപാദം കുപ്പാത്തി-
ലെന്തേ, പഠിപ്പിന്റെ നേട്ടം?

1957. P. Ramakrishna Pillai

പഠിച്ചു-മെന്താം പരചിന്മയ-ശുദ്ധ-
പാദം പണിയാത്തിൽ.

KANNADA

1960. L. Gundappa

ಹಲವ ಕಲ್ತುದರಿಂದ ಬರುವ ಫಲವು ಅದೇನೊ
ಪರಿಶುದ್ಧ ಜ್ಞಾನಸ್ವರೂಪನ ನಲ್ಲಡಿಗೆ ವಣಿಯುರೆನಲು

TELUGU

1892. Sokkam Narasimhalu Naidu

చదివినంచునన్నైనట్టిసత్తైదియొకో
విశదవిజ్ఞానసదంఘ్రులు వేఁడ రేని.

1948. Sri Ramulu Reddy

చదువుచే ఫలమేమి సర్వజ్ఞు పూత
పదములకును భక్తిఁ బ్రణమిల్లకున్న

URDU

Hasrat Suharwardy (1965)

وہ علم ہی کیا جو (عقل کل) خدا کے قدموں کو چھو کر حاصل نہ ہوا ہو۔

MALAY

'அகர முதல' என்ற குறளுக்கு

Semua huruf bermula dengan A. Alam mempunyai Yang Maha Asa sabagai permulaan-nya.

BURMESE

1964 U Myo Thant

၂။ စင်ကြယ်သော ဉာဏ်တော်ကို ပိုင်ဆိုင်တော်မူသည့် ဘုရားရှင်၏ ခြေတော်ရင်း
မှ တွင် ဦးမချိုက်သော သူအား တပည့် ခံခြင်းသည် အဘယ်သို့သော အကျိုးကို
ရနိုင်ပါမည်နည်း။

FIJI

1964. Samuel L. Berwick

A cava na yaga ni vuku kevaka e sega ni cuva ko Vuku e na ruku ni yava ni kalou Vuku.

IN PRAISE OF TIRUVALLUVAR

Cavuniyanar

The short distichs which the learned poet Valluvar has composed in order that we may know the ancient right way, are sweet to the mind to meditate on; sweet to the ear to hear; and sweet to the mouth to repeat; and they moreover form a sovereign medicine to promote good and prevent evil actions.

Irayanar

The *Kural* which has proceeded from the mouth of Valluvar, the king of poets, will never lose its beauty by the lapse of time: it will be always in its bloom, shedding honey like the flower of the tree in Indra's paradise.


Madurai-Tamil-Naganar

What is the use of works of great length, when the short work of Valluvar alone is enough to edify the world? It contains all things, and there is nothing which it does not contain.


உரையாசிரியர்கள்




மு. ரா. அருணாசலக் கவிராயர்



அரசஞ்சண்முகனார்



கா. சுப்பிரமணிய பிள்ளை



கே. வீரராகவன்




சொ. தண்டபாணி பிள்ளை




வ. உ. சிதம்பரம் பிள்ளை




சே. கிருஷ்ணமாச்சாரியார்




திரு. வி. கலியாணசுந்தரனார்



பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி




சு. அ. இராமசாமிப் புலவர்




டாக்டர் மு. வரதராசன்



மு. ரா. கந்தசாமிக் கவிராயர்



எம். வெங்கடராமையா



மயிலை சிவமுத்து




பாலூர் து. கண்ணப்ப முதலியார்



ஜி. வரதராசன்




சேலம், எஸ். சகதேவமுதலியார்




வெ. இராமலிங்கம் பிள்ளை




வி. முனிசாமி




புலவர் குழந்தை



பால்வண்ணனார்




சாமி. சிதம்பரனார்




சி. இலக்குவனார்




மு. கோவிந்தசாமி



வெ. கண்ணையன்



கா. அப்பாத்துரை



தி. பொ. பழனியப்பபிள்

திருவள்ளுவ மாலை



[முற்காலப் புலவர்கள்]

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல். ௧

நாமகள்

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு. ௨

இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். ௩

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா [நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த— [நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி. ௪

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. ௫

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து. ௬

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானா வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று. ௭

மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியையவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

சீத்தலைச்சாத்தனார்

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

மருத்துவன்றாமோதரனார்

சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

நாகன்றேவனார்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பா லொருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமுழ்கு வார்.

அரிசில்கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

பொன்முடியார்

காணின்ற தொங்கலாய்! காசிபனார் தந்ததுமுன்
கூறின் றளந்த குறளென்ப—நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தானின் றளந்த குறள்.

கோதமனார்

ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று. ௧௫

நத்தத்தனார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். ௧௬

முடையலூர்ச் சிறுகருந்தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினு மில். ௧௭

ஆசிரியர் நல்லந்துவனார்

சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில். ௧௮

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர். ௧௯

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றொன் றூழ்—கூடுபொருள்
எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. ௨௦

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. ௨௧

தொடித்தலை விழுத்தண்டினார்

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள். ௨௨

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில், ௨௩

மாங்குடிமருதனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. ௨௪

எரிச்சலூர் மலாடனார்

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—ஆய
அறத்துப்பா னால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து. ௨௫

போக்கியார்

அரசிய லையைந்து அமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை ௨௬

மோசிகீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. ௨௭

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமே லயன், ௨௮

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. ௨௯

பாரதம்பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். ௩௦

உருத்திரசன்மகண்ணர்

மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறும் அறிவு. ௩௧

பெருஞ்சித்திரனார்

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொரு ளெல்லாம்—உரைத்ததனாற்
றுதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன. ௩௨

நரிவெரூஉத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள அரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள். ௩௩

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர். ௩௪

மதுரை யறுவைவாணிகன் இளவேட்டனார்

இன்பமுந் துன்பமு மென்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி யுணர உரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து. ௩௫

கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக்—கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. ௩௬

மதுரைப் பெருமருதனார்

அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதவழுக் கற்ற துலகு. ௩௭

கோவூர்கிழார்

அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி. ௩௮

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு. ௩௯

இழிகட்பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்குஞ்
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னின்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா. ௪௦

செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார். ௪௧

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்—ஆதலால்
உள்ளுந ருள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு. ௪௨

வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து. ௪௩

களத்தூர்கிழார்

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதல்நான்குஞ் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள். ௪௪

நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவ ரின்குறள்வெண் பா. ௪௫

அக்காரக்கனி நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயத்தின் பயன். ௪௬

நப்பாலத்தனார்

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு. ௪௭

குலபதி நாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு. ௪௮

தேனீக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. ௪௯

கொடிஞாழன் மாணிபூதனார்

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு. ௫௦

கவுணியனார்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. ௫௧

மதுரைப் பாலாசிரியனார்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி. ௫௨

ஆலங்குடி வங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து. ௫௩

இடைக்காடர்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். ௫௪

ஔவையார்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். ௫௫

"குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
யுறுவிலைக்கு விற்றதனோ டொக்குந்—தெறுகணையைச்
செற்றவேன் மாற திருவள் ளுவனார்வாய்
சொற்றகுமப் பால்வாழ்த்துச் சொல்." ௫௬

நின்று சுடரெரித்து நெஞ்சத் திருளகற்றி
இன்றுபோல் என்றும் இலங்கிடுக-துன்றுபுகழ்த்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்னும்
மெய்வைத்த வேத விளக்கு. ௫௭

[பிற்காலப் புலவர்கள்]

பெருந்தொகை

முப்பாலும் உண்டோம் முலைப்பால் இனிநுகரோம்
அப்பாலுக் கப்பாலும் ஆயினோம்—எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோம் ஓதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து. ௧

எப்பாலும் ஏத்துவாம் இன்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று—முப்பதா
ஓரடி முக்கா லுரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே. ௨

அவனே புலவன் அவனே அறிஞன்
அவனே தமிழை அறிந்தோன்—சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவன் உளன். ௩

வாழிமழை ஆனினங்கள் வாழிமறை ஆகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள்—வாழியரோ
தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர். ௪

சட்டைநாதத் தம்பிரான்

சாதிக்கோர் நீதியாய்ச் சாற்றும் வடமறையின்
பேதத்தா லிவ்வுலகம் பேதுற—தோதிப்
புவனமெலா மெய்ந்நெறியில் போதவிடுந் தேவர்
கவனக் குறட்பொருளைக் கொண்டு. ௫

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன்?—வித்தகன்
தெய்வப் புலவன் திருவள் ளுவன்சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது. ௬

நாலா ரணப்பசுவை நாடிக் கறந்தளித்த
பாலாகு மென்றுபா ராட்டுமே—நூலாய்ந்து
வள்ளுவன் தந்த மறுவில் திருக்குறளை
உள்ளுவந் தோது முலகு. ௭

மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்
சிக்கலறக் காட்டி நலம் செய்நூலாம்—மிக்கபுகழ்ச்
செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே
சிந்தனை செய்வாய் தினம். ௮

[இக்காலப் புலவர்கள்]

டாக்டர் மு. வரதராசனார்

அன்றொருநூல் நீயளித்தாய் ஆன்ற பொதுமறையாய்
இன்றொருவர் பேரொளியாய் இங்குயர்ந்தார்—நன்றே
இலக்கணமாம் முப்பால் இலக்கியமாம் காந்தி
கலக்கமெலாம் தீர்ந்திட்டோம் கற்று. ௧

வாழ்ந்தனை நல்வாழ்க்கை வாய்த்தனை நற்றெளிவும்
ஆழ்ந்துணர்ந்தாய் நாற்பொருளும் முப்பாலாய்ச்—சூழ்ந்தே
உலகின் பொதுமறையை ஒண்டமிழில் நல்கி
நிலவினை எம்நெஞ்சில் நின்று. ௨

தமிழென்றால் நீயே தவமேயுன் வாழ்க்கை
அமிழ்தென்றால் முப்பாலே ஆகும்—எமக்கினிய
நன்னெறியும் உன்னெறியே நாடி உலகுவக்கும்
நன்னூலும் உன்னூலே நன்கு. ௩

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்

கடல்கடந்தும் விண்கடந்தும் கான்கடந்துங் காண்பாய்
அடல்வேந்தே யாயினும் அய்நா எனினுங்
கடன்பட்டார் வள்ளுவர்க்குக் கண்கூடே யென்றால்
உடன்றெழுத லாமோ உரை. ௪

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

அன்பே அருளாதல் அன்றோ அறமென்றார்
அன்பறிவாய் நாட்டின் குடிமக்கள் ஆன்றோராய்
இன்புறுத லேபொருளாம் என்றார்நம் வள்ளுவனார்
இன்பவன்பே காமமென்றார் இங்கு. ௫

பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை

அறப்பசுக் கொண்டே அரும்பொருட் கன்றுல்
இறப்பநல் லின்பமாம் இன்பால்—சிறப்புற
வள்ளுவனுர் முப்பால் வழங்கினுர் வையத்துக்
கொள்ளார் கொடுமை கொடிது. ௬

பேராசிரியர்
லெ. ப. கரு இராமநாதன் செட்டியார்

உலகறியச் செய்த ஒருநூல் தமிழர்
தலைநிமிரச் செய்த தனிநூல்—அலர்கதிர்போல்
எல்லோரும் போற்றும் திருக்குறளுக் கீடாக
இல்லை ஒருநூல் இவண். ௭

டாக்டர் மொ. அ. துரைஅரங்கனுர்

ஒருகுறளே சாலும் உணர்ந்தவழி நிற்பின்
திருவள் ளுவர்தமிழில் தீட்ட—உருவெடுத்த
ஆயிரத்து முந் நூற்று முப்ப தருங்குறளுள்
போயிருக்க வீட்டிற் பொலிந்து. ௮

பேராசிரியர் அ. சீனிவாசராகவன்

இறைவனடி காட்டும் இணையிலறம் தீட்டும்
குறைவில் பொருளின்பம் கூட்டும்—மறையுருவாய்
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளும் வள்ளுவனுர்
தெள்ளமுதத் தெய்வத் தமிழ். ௯

பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்

எம்மதநூ லென்றே யெவரும் வினவினுடன்
எம்மதநூ லென்றே யெவருந்தான்—செம்மனமாய்ச்
சொல்லும் படியமைந்த சொற்பொருட் சீர்நிரம்ப
ஒல்லுங் குறளென் றுரை. ௧௦

தொல்காப் பியம்போலத் தொன்மொழியாளு செந்தமிழின்
ஒல்காப் பெருமை யுலகிற்குச்—சொல்வதற்கே
உள்ள விலக்கியத்துள்ளோங்கு மொருதலையாம்
வள்ளுவர்நூ லென்ப வடித்து. ௧௧

முன்னேர் பொருளும் மொழியும் முழுமணிசேர்
பொன்னேபோற் போற்றுகெனப் பொற்குறளை—அந்நாள்
இளங்கோ வடிகளுடன் எல்லாருங் கொண்டார்
வளம்பெற நீடு வாழி. ௧௨

நடுநிலை யில்லாத நால்வே ருறுப்பு
வடுமிகக் கூறும் வடநூற்—கெடுதிகண்டு
வள்ளுவன் நன்கு வகுத்த நடுவறத்தைக்
கொள்ளுக வெங்குங் குறித்து. ௧௩

இன்மையு ளின்பமும் இல்லறத்தால் விடுறவும்
செம்மையா யெப்பாற்கும் செப்பிய—அம்மைதான்
தேவன் தமிழத் திருவள் ளுவன்குறளே
மேவ நிலமிசையே மிக்கு. ௧௪

திருவாமாத்தூர் தி. செ. முருகதாச ஐயா

அடுத்தது காட்டி யவிர்பளிங்கு போலென்(று)
எடுத்தகுறள் போற்கற்போ ரெல்லாம்—தொடுத்த
பொருட்கிலக்காய் நின்றவிரும் பொய்யா மொழிசொல்
தெருட்சிறப்போன் வள்ளுவனுந் தேர். ௧௫

யோகி சுத்தானந்த பாரதியார்

காலத்திற் கேற்ற கருத்தமைந்த வள்ளுவர்நூல்
ஞாலத்தி லேயமைதி நாட்டிடுமே—நாலொத்து*
முப்பாலின் அன்பு முரசதிரும் செல்வத்தால்
எப்பாலும் எய்வோம் இசை. ௧௬

எம்மதமும் எவ்வினமும் எந்நாடும் எந்நாளும்
சம்மதமென் றேற்குந் தமிழ்வேதம்—செம்மையுறும்
வள்ளுவனுர் வாழ்வாங்கு வாழ்ந்துலகிற் கீந்தவரம்
தெள்ளுகுறட் பாவமுதத் தேன். ௧௭

தாளாண்மை வேளாண்மை தாங்கிப் பகுத்துண்ணும்
ஆளாண்மை மேவும் அரசியலைத்—தோளாண்மை
துள்ளுமுயர் வீரந் துடிக்க நமக்கீந்த
வள்ளுவரின் வாய்மொழியெம் வாழ்வு. ௧௮

தவத்திரு ஞானப்பிரகாசதேசிகர்

இறவாத இன்பத்தை எய்திடவே வேண்டின்
பிறவாமை வேண்டுவது பேண—மறவாது
வேண்டாமை வேண்டவரும் விடென்றுர் நம்மையெலாம்
ஆண்டார்மெய் வள்ளுவனு ராங்கு. ௧௯

பேராசிரியர் கா. ம. வேங்கடராமையா

'கற்க கசடறக் கற்பவை' என்றமையாற்
கற்க கசடற நற்குறளைக்—கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்றுர் நீளுலகோர்
நிற்க குறட்செந் நெறி. ௨௦

பேராசிரியர் மயிலை சிவமுத்து

வாழ்வாங்கு வாழ்ந்திடவே வள்ளுவனுர் வாய்மொழிந்த
ஆழ்ந்துயர்ந்த தீங்குறளை ஆயாரென்-ஊழ்வினையோ!
சூழ்நிலையோ! என்னென்பேன சொற்றிடவே சொல்லறியேன்
பாழ்மனமே சொல்வாய் பரிந்து. ௨௧

வள்ளுவம்போல் வண்டமிழ் நூல் காண்பரிதே இவ்வுலகம்
உள்ளளவும் நின்றே உயர்வுபெறும்—எள்ளளவும்
ஐயமிலை மக்கள் இடர்நீக்கும் அற்புதநூல்
செய்வார் எவருளரே செப்பு. ௨௨

பேணிப் பொருள்போலே பெட்டியிலே வைப்பதுவும்
வீணேயாம் வள்ளுவத்தை வேருெருவர்—ஆணி
அறைந்தாற்போல் கற்றிங் கமர்ந்திருக்க மற்ருேர்
குறைகூற லாற்பயனென் கூறு. ௨௩

என்றென்றும் எல்லோரும் இன்புற்று வாழ்ந்திருக்க
ஒன்றேனும் உண்டோ உரைமின்கள்—பொன்றுத
தெய்வத் திருக்குறள் அல்லால் உலகோருக்
குய்வை உணர்ந்துரைக்க வேறு. ௨௪

சொல்லழகும் ஆழ்கருத்தும் சூழ்ந்த திருக்குறளைப்
பல்லோரும் அன்பாய்ப் படித்திடவும்—வல்லோர்கள்
வாழ்ந்திடவும் தந்திட்டார் வள்ளுவனுர் பேரறிஞர்
வாழ்ந்தோம் வழியறிந்தோம் வாழ்த்து. ௨௫

பொன்மொழியால் நன்கமைத்த புத்தமுகாம் வள்ளுவத்தை
அன்னியம்போல் எண்ணிடுவோர் ஆட்சியிலே—பன்னரிய
விஞ்ஞானம் கைவரினும் வீணேயாம் அந்நாட்டை
அஞ்ஞானம் வீழ்த்தும் அறி. ௨௬

* அறம் பொருள் இன்பம் வீடு.

உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி பிள்ளை

எத்தனை நூல் கற்றாலும் எப்பொருளை ஆய்ந்தாலும்
அத்தனைக்கும் ஆன்ற அறிவொளியாம்—மெய்த்தபுகழ்
வீறுடைய வள்ளுவனார் மேன்மை அறிமுதலாக்
கூறுசெய்து தந்த குறள். ௨௭

கழகப்புலவர்
திருவள்ளுவரகம் ப. இராமநாத பிள்ளை

சமையங் கடந்தவர்மெய்ச் சார்பிற் கலந்தார்
சமையுநம் வள்ளுவர்க்கிச் சால்பு—நமையெல்லாம்
ஒற்றுமையாய் வாழவழி ஓதினார் அம்முறைமை
பெற்றபள்ளிச் சீர்வகுப்பாய்ப் பேசு. ௨௮

பாயிர நான் கில்லறமும் பானும் பகர்மூன்றே
தூய துறவறமும் சொல்லுமொன்—றேய
துறவுயிராம் மெய்யுணர்தல் தொல்சிவனும் பாசம்
அறலே அவாவறுத்த லாம். ௨௯

தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை

"இருள்சேர்" எனுங்குறளில் யான்கண்டேன் எங்கள்
முருகன் புகழ்ப்பெருமை முற்றும்—பொருளென்னும்
சொற்கு மகனென் பொருளுளதால் வள்ளுவநூல்
கற்க கிடைக்குமெலாங் காண். ௩௦

பேராசிரியர் க. பெருமாள்

எல்லா உயிர்க்குலமும் இன்புற்று முன்னேற
நல்ல ஒளியருளும் ஞாயிறே நீயறிந்த
எல்லாப் புலவருள்ளும் எம்முடைய வள்ளுவர்போல்
நல்லார் உளரோ நவில். ௩௧

உலகப் புலவரெலாம் உச்சிமேல் கொள்ளும்
அலகில் நலஞ்செய் அருங்குறளை ஈந்த
திலகமாம் வள்ளுவர்தம் தீந்தமிழுக் கெல்லா
உலகமு மீடாமோ உரை. ௩௨

பேராசிரியர் மு. அருணசலம் பிள்ளை

மக்களெலாம் நன்மக்க ளாய்வாழ வானுலகும்
தக்கவா றெய்தத் தகைவின்றி—மிக்கின்பம்
கொள்ள விதிவிலக்குக் கூறுந் திருக்குறள்செய்
வள்ளுவனார்க் குண்டோகைம் மாறு. ௩௩

அப்பாலாய் நிற்ப தருளார் சிவனெறியாம்
முப்பால் மொழியுணர்த்தும் மூதறிவாம்—தப்பாத்
தமிழர்தம் தொன்னெறியே தான்வள் ளுவர்க்காம்
அமிழ்தாம் அனைவர்க்கும் அஃது. ௩௪

கவிராச பண்டிதர் ஜெகவீரபாண்டியனார்

உள்ளம் தெளிய உயிர்உயர ஓர்ந்துணர்வார்
உள்ளமெலாம் இன்ப ஒளிவீச—வள்ளுவனார்
தந்த திருக்குறளைத் தாமுணர்வார் மானுடராய்
வந்தபயன் கொண்டார் வரைந்து. ௩௫

புலவர் அரசு

ஒருமையுற வள்ளுவன்றன் ஈரடியுட் கொண்டே
அருமைசால் முப்பாலும் ஆர்ந்தால்—பெருமைசேர்
நாற்பயனு மைந்துறவே நல்லாறு பெற்றெழுவேம்
தோற்பயன்வி ணைக்கேஞ் சுமந்து. ௩௬

பேராசிரியை அ. காமாட்சி குமாரசாமி

ஒன்றே குலமும் ஒருவனே தேவனுமென்
றன்றே உரைத்த அருங்கருத்தை—இன்றுலகில்
நன்றே நிலவிட நாற்றிசையும் வள்ளுவர்நூல்
சென்றே நிறுவுமெனச் செப்பு. ௩௭

பத்தெனும் பாவழகில் தித்திக்கும் தீங்குறளில்
முத்தாய் முகிழ்கருத்து மொய்த்தலால்—எத்திசையும்
பன்னுளும் போற்றுமுயர் பாவலனைப் பெற்றிடவே
என்னோற்றாள் எந்தமிழ்த் தாய். ௩௮

திரு. ஈ. எஸ். வரதராஜ ஐயர்

மன்பதைகள் இம்மை மறுமைப் பயனெய்தத்
துன்பம் தொலையச் சுகம்பெருக—அன்புபரந்
தெங்கும் சிவம்நிறைய யாத்தார்செந் நாப்போதார்
துங்கக் குறட்பா துணிந்து. ௩௯

திரு. சு அ. இராமசாமிப் புலவர்

மாதானு பங்கிசெய்த மாண்பார் திருக்குறள்போல்
ஏதேனு நூலிங் கிருக்கிறதோ—நீதானும்
இந்தத் திருக்குறளை இன்பினொடு போற்றுயேல்
மந்தித் திருக்குருளை மன். ௪௦

பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார்

*முப்பாலின் முன்னின் றுணர்த்தி யறிவிற்கு
மப்பாலா யன்ப ரகமுருக—எப்பாலு
நின்ற சிவமுந் திருக்குறளு நீர்மையினு
லொன்றென்றே நன்கு யுணர். ௪௧

வித்துவான் பெ. கோவிந்தன்

இறைவரென் பாரும் இயம்பி னரல்லர்
உறைவார் தமிழரோ டொவ்வார்—முறைமையால்
தண்டமிழ்ப் பாக்குறளைச் சாற்றினார் வள்ளுவனார்
பண்டைத் தமிழுலகம் பார்த்து. ௪௨

கலைமகளாசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன்

காலத் திரையிற் கலங்கா துயர்ந்துநின்று
ஞாலத்தின் மக்கள் நலம்பெறுநற்—சீலத்தைத்
தெள்ளத் தெளியத் தெரிக்கும் திருக்குறள்போல்
உள்ளதுகொல் வேறொன் றுரை. ௪௩

திரு. சொ. சிங்காரவேலன்

பாரா ரறிந்தார்; பன்மொழியா ரும்புகழ்ந்தார்
வாரா வழக்கினரும் வந்திணைந்தார்—பேரா
இயற்கை யுடனெங்கும் இன்குறளின் னீழல்
செயற்கைநெறி பேணச் சிறந்து. ௪௪

---

* முப்பாலின் முன்னின்று - சிவபெருமான் பதி - பசு - பாசம் என்னும் முப்பொருளில் முன்னின்று; குறள் அறம் பொருள் காமம் என்னும் முப்பாற் பொருளால் முதன்மையாய் நின்று.

புலவர் குழந்தை

என்று மூதிரா ஈவர்மோக் கினுமருகா
அன்றளவே யென்று மதுகமழும்—ஒன்றெருகால்
உள்ளுவா ருள்ள முவக்கும் உலகுபுகழ்
வள்ளுவர் *நல்வாய் மலர். ௪௫

பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை

இன்றீந் தமிழால் இறைவனையே வற்பணிகொள்
வன்றொண்டர் தாம்வாய் மலர்ந்தருளும்-தென்றமிழின்
மாமறையில் நற்குறளை வைத்துரைப்ப ரேல்குறள்போல்
பூமியில்வே றுண்டோ புகல். ௪௬

கழகப்புலவர் பண்டித ஆ. பொன்னுசாமிப் பிள்ளை

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்றெனவே—பொன்றா
அறந்தா னுரைத்த அருளாள ரன்றிச்
சிறந்தார் புவிக்குளரோ தேர். ௪௭

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்என்றே—பொய்ம்மை
உரைக்கும் உறுதி உரைத்தாரை யொப்பார்
தரைக்கண் உளரோநீ சாற்று. ௪௮

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழைஎனவே—ஆக்கம்
உறுநெறியை அன்போ டுரைத்தார்போற் செல்வத்
துறையறிவார் வேறுளரோ சொல். ௪௯

பெருஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அருஅ விடும்பைத்தென் நெஞ்சென்—றருஅத
காதற் பெருக்கினியல் கண்டுரைத்த மேலோன்சீர்
ஓதற் கெளிதோ உணர். ௫௦

அறனும் பொருளும் அகப்பொருளா மின்பத்
திறனும் பிறவும் தெளிந்தேம்—நிறைமொழியாய்
வள்ளுவனார் செய்தருளும் மாண்புறுசீர் முப்பாலை
உள்ளமுறப் பல்காலும் ஓர்ந்து. ௫௧

பன்னூல் பயின்றும் பயனென்ன வள்ளுவர்செய்
நன்னூல்போன் றெந்நலனும் நல்குமோ—பன்னூறு
கோடி உடுக்களொன்றாய்க் கூடிடினும் காய்கதிர்போல்
நீடுமொளி செய்திடுமோ நேர். ௫௨

வானுக் குலகம் வழங்குவதென் வள்ளுவனெம்
மானுக்கு மேயதுவாம் வையத்தீர்—போன
திசையெல்லாம் முப்பாலைச் செப்பிடுவிர் இன்பம்
இசைவிப்பீர் எவ்விடத்து மே. ௫௩

பாலகவி வே. இராமநாதன் செட்டியார்

சித்தாந்த சைவத் திறம்பேணிச் செந்தமிழிற்
சுத்தாத் துவிதவுண்மை சொல்லவெண்ணிச்—சத்தா
மூலமியலை யோதியத னுட்செறித்துத் தந்தா
னிலகுதிரு வள்ளுவனென் றேத்து. ௫௪

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்

உலகறி தோற்றத்தால் உள்ளே பயிலப்
பலமனம் நீக்கலால் பார்க்கும்—கலையால்
செருக்கறுக்கும் செம்பொருள் சேர்தலால் நல்ல
திருக்குறளைக் கோயிலெனத் தேர். ௫௫

வித்துவான் மீ. ப. சோமசுந்தரம் (சோமு)

சொல்லில் அறமுரைத்துச் சொற்பொருளை வாழ்ந்துணர்த்திக்
கல்லின் சிலைபோற் கவிசெய்து—தொல்லுலகில்
என்றும் நிலைநிற்கும் இன்குறளை நல்கினாரல்
மன்னுபுகழ் வள்ளுவதே வன். ௫௬

அருட்கவி சேதுராமன்

மாதா நு பங்கியெனும் வள்ளுவர்சொல் வாய்மொழியாம்
†தாதான் மியமார் தமிழ்மறையை—ஓதாதார்
இம்பர் இருந்தும் இறந்தவர்தம் மோடொப்பர்
உம்பரா வாரோது வார். ௫௭

திருவள் ளுவர்செய் திருக்குறளை ஓதின்
கரு‡வள்ள லாற்றைக் கடந்து—பெருவள்ள
லாகலாம் செந்தமிழில்; ஆரணங்கள் தேறலாம்
போகலாம் முத்திப் பொழிற்கு. ௫௮

சேலங்கிழான் சுகவனம் சிவப்பிரகாசனார்

சிந்தைக் கினிய எனுஞ்சீர்க் கவுணியனார்
முந்து'வெள்ளி' என்மதுரைப் பாலாசான்—தந்த
மதிப்புரைக்கு மேலுமொரு வாயேன்முப் பாலைத்
துதித்தொழுகல் வாழ்வார் தொழில். ௫௯

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

நல்லறிவுப் பாலூட்டி நாளும் உயிர்பேணிப்
புல்லரிக்கப் புத்தி புகட்டியே—செல்வகையிற்
சேய்போல நம்மைத் தெருட்டி வளர்த்திடலால்
தாய்போல்வார் வள்ளுவனார் தாம். ௬௦

அருவா யறிவுருவாய் ஆன்மாக்க ளுய்யப்
பெருகுதிரு ஞானம் பெறச்செய்—திருவுடையார்
வள்ளுவனார் நம்மையெலாம் வாழச்செய் தெய்வமே
உள்ளுமின் உண்மை யிது. ௬௧

செந்தமிழ்ப் பூங்காச் சிறந்தளித்த செம்மலராம்
நந்தந் திருக்குறளின் நல்லதேன்—முந்தக்
குடித்து மிகமதர்த்துக் கொம்மாளங் கொட்டிப்
படித்தவராய்ச் சீர்பெறுவேம் பார். ௬௨

புலவர் திரு. அ. நடேச முதலியார்

அன்றுமுதல் இன்றுவரை யாக்கியபன் னூல்களுளே
என்றும் பெறலாகா இன்குறளை—நன்றாக
வந்தளித்த வள்ளுவன் வாழ்ந்தோமென் றுள்ளுதொறும்
சிந்தை மகிழும் சிறந்து. ௬௩

---

* நல்வாய் மலர் - நன்மை வாய்க்கப்பெற்ற மலர்; மூதிரா - கருத்துக்கள் பழமைப்பட்டுப் போகா
அறம்கமழும் - ஒழுக்கம் இயலும்.

† தாதான்மியம் - ஒருமைப்பாடு. ‡ அள்ளல் - சேறு.

மொழிக்கு முதல்வன் மொழிபேசும் மக்கள்
வழிக்குநல் வாழ்வளித்த வள்ளல்—பழுத்தமுது
தேனெழுகுந் தீந்தமிழால் தேர்ந்தளித்த வள்ளுவத்தை
யானெழுகக் கற்றல் கடன். ௬௪

சித்திரக்கவி பி. வி. அப்துல் கபூர் சாஹிப்

மெய்யொளியாற் பொய்யிருளை வெல்லும் பரிதியெனச்
செய்ய தமிழிற் சிறுபாவால் வள்ளுவனார்
செய்தளித்தார் நாமவற்குச் செய்கடமை யக்குறளை
ஐயமற ஓதி அதுபோல வே நடந்து
வையகத்தில் வாழ்வதுவே மன். ௬௫

திரு. க. வச்சிரவேல் முதலியார்

உலகியலை மெய்ந்நெறியோ டோர்ந்துலகோர் இன்பம்
இலகுநெறி ஈண்டெளிதின் எய்த—நிலவுதமிழ்
உள்ளி உரைத்த ஒருமுதல்நூல் வேறுண்டோ
வள்ளுவர்நூல் அன்றி மதி. ௬௬

அன்பறனே சார்பா அவாவறுத் தொன்றுணர்ந்
தின்பநெறி இம்மையே எய்தியிடத்—துன்பகலத்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் வகுத்த
மெய்வைத்த நன்மறையே மேல். ௬௭

வித்துவான் அ க. நவநீதகிருட்டிணன்

அந்தணர்க்கு வேதம் அரசர்க்கு நீதிநூல்
சந்தமுறு வாணிகர்க்குச் சார்பொருணூல்-செந்தண்மை
வேளாளர்க் கோரறமாய் மேவுந் திருக்குறளைத்
தாளாளர் வள்ளுவர்தந் தார். ௬௮

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

எல்லா உலகினரும் ஏற்கும் பொதுச்சட்டம்;
வெல்லும்சொல் நீதி விளக்கதுவே;—நல்லறிவுத்
தெள்ளமுதம்; செந்தமிழர் நாகரிகச் சின்னமது;
வள்ளுவரின் முப்பால் மருந்து. ௬௯

கவிஞர் திரு. தமிழழகன்

ஓலக் கடல்வாய் ஒழிந்தனபோய் மற்றிங்குக்
காலக் கடற்கோர் கலங்கரையாப்—பாலொக்க
மூவிளக்கும் ஏற்றும் முனிவர்தம் பாக்குறள்போல்
நாவிளக்கம் ஏது நவில்! ௭௦

பெற்றிருக்கும் நூல்கள் பெருமளவே னுங்குறள்போல்
கற்றிருக்க வேறெங்கே காட்டுவீர்—மற்றிருளைப்
போக்கஒரு ஞாயிறன்றிப் போற்றுவரோ வான்பலவாக்
கோக்கவரு மீன்கள் குலம்! ௭௧

ஆழ மிருக்கும் அமுதப் பொருளிருக்கும்
சூழ வுலகும் சுழன்றிருக்கும்—ஊழலையில்
ஆழிய னுக்குறுகும்; ஆயமதி யாற்பெருகும்
வாழிகுறள் வேலையென வாழ்த்து. ௭௨

பரணிபாடிய அரங்கசாமி, இராசிபுரம்

தொன்மைத் திருநிலத்துத் தூய்மைத் தமிழறிவின்
நன்மைக் கலையறிவாம் நாகரிகம்—வன்மையொடு
எங்கெங்கும் தான்பரவி எல்லோரும் வாழ்வடையப்
பொங்குபுகழ் வள்ளுவர்பா போற்று. ௭௩

காலத்தால் தோன்றுகிற கற்பனையால் மக்களுளம்
ஞாலத்தே மாறுபடா நல்லியல்பைச்—சீலத்தால்
முக்காலும் கண்டுயர மூதறிவின் வள்ளுவனார்
தக்ககுறள் செய்தளித்தார் தாம். ௭௪

வித்துவான் கோவை இளஞ்சேரன்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறனும்;
மனித்தர்க் கெளிதிதன் மேலோ—எனைத்தொன்றும்
ஆற்றூர்க்கு மாற்றுநெறி தோன்றியருள் வள்ளுவனார்
நூற்றூர்சீர் வாழ்வியல் நூல். ௭௫

வித்துவான் தணிகை உலகநாதன்

ஈரடிப் பாதை இயைந்தே ஒழுங்காகச்
சீராம் புகைவண்டி செல்லுதல்போல்—நேராகும்
வள்ளுவர்சொல் ஈரடியை வாழ்க்கை நெறியாகக்
கொள்ளும் வகையே குறி. ௭௬

திங்களும் ஒன்றே! செழுங்கதிரோ னும்ஒன்றே
எங்கும் இயைவானும் ஒன்றேயாம்—இங்குத்
திறமான நன்னெறியைச் செப்பும் குறளாம்
அறநூலும் ஒன்றே அறி. ௭௭

கவிஞர் கா. வேழவேந்தன்

முந்நீர் பிரித்துவைத்த மூவிரண்டு கண்டத்தை
இந்நாள் இணைத்ததோர் ஏர்ப்பாலம்!—செந்நீர்
அணுக்களைப்போல் அக்குறளோ அச்சேறிச் சென்றே
குணப்படுத்தும் கோளத்தைச் சேர்ந்து. ௭௮

திரு. த. கோவேந்தன்

தாய்போல் இனிதாகித் தந்தைபோல் சீரளித்துத்
தூய்நல் மனைபோல் சுகமருளிச்—சேய்போல்
அறம்பொருள் இன்ப அறவாழி யாகும்
உறவாம் திருக்குறள் நூல். ௭௯

திரு அ. கிருஷ்ணசாமி நாயுடு

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடுமென்—றுறுதியுள
பண்புடைய வள்ளுவர்ப் பட்டுண் டுலகம்என
நண்புடன் வாழ்த்துவர் நன்கு. ௮௦

திரு. இராம கணபதி

வேம்பு கசந்தாலும் வேட்கையுடன் உண்டார்க்குத்
தேம்பும் கொடுநோய் தெரிவதிலை—ஓம்பிக்
குறள்கற்றால் உள்ளக் கொடுநோயே சாகும்
அறம்கூறும் வாய்மொழியைக் கல். ௮௧

வெண்ணிலவில் மாசு விளங்கிடுதல் உண்டெனினும்
தண்ணொளியில் மாய்ந்து தழைத்திடுமே—எண்ணமதில்
மூள்கின்ற பொய்மைகள் முன்னிற்றல் உண்டெனினும்
தூளாகும் மாமறையின் முன். ௮௨

பள்ளத்தை நோக்கியே பாய்ந்தோடும் வெள்ளம்போல்
உள்ளமினி தேகுறள்பால் ஓடுமே—அள்ளத்தான்
குன்றுமல் பொங்கும் குறள்மொழியைக் கற்றிடுவோம்
என்றுமுற இன்பம் இனி. ௮௩

புகழ்ப் பூந்துணர்

"சமயக்கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவர்" —கல்லாடம்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்" —நல்வழி.

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்"
—இலக்கணக்கொத்து.

தனிப்பாடல்

"முன்னம்பல ருரைகாணினு
முதற்பாவலர் நூலோ
இன்னம்பல ருரைகாணுமி
யல்பிற்றது மெய்யே
சொன்னம்பல மென்னிற்சில
சொல்வல்லிது மாண்பார்
பொன்னம்பல நாமன்முதற்
புலவீர்நனி கேண்மின்.

வற்புறுத்த ஓர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதுந் துணிவுபோல்—
தற்பதத்தால்
ஓதும் பிரமமொரு தானெனப்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினேன்.
—சிவப்பிரகாச சுவாமிகள்.

"பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்து"
—அருணகிரிநாதர்.
(திருப்புகழ்)

"நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார்
நீத்தவர் பெருமைநூன் முகப்பாற்
சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச்
சிறுமைதூற் றினரது தெரியார்க்

கறந்தவா தியற்றி னவனினுங் கோடி
யதிகமா மெனமன மருது
துறந்துளோ ரனையும்பட் டணத்தெம தடிக
டொகுத்தகட் டுரைகிகழ்த் திடுமே."
—பேரூர் சாந்தலிங்க சுவாமிகள்.
(வைராக்கிய தீபம்)

'இல்லற மென்னும் பொன்னுக் கியலுரையாணி'

"நால்வர்சொல் சைவர் வேதம்
நளிர்குரு கூரன் சொல்லைப்
போல்வலார் சிலர்தாஞ் சொல்லும்
பொருவில்பா கவதர் வேதம்
வால்வளை யுலவும் வீதி
மயிலைவள் ளுவன்சொல் யார்க்கும்
மேல்வழி யுணர்த்திக் கீழ்மை
விலக்குநல் வேத மாமே"
—புலவர் புராணம்.

இந்திரப் பதவிக் கேற்று
மிவுளியா கமும்பொல் லாதென்
றுந்திய கருணை வாய்ந்தோர்க்
குறுதியுண் டாகத் தேற்றுஞ்
சந்திர வதனத் தாதி
தருமகா ரெழுவர் தம்மிற்
பிந்திவள் ளுவப்பேர் தாங்கும்
பெரியவன் பேசு நூலே.
—தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாசர்.

"வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி"
—மனோன்மணீயம்.

ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி
—பழமொழி

மொழிசுருங்கல் பொருள்விளங்கல் மொழியவினி
 தாதனல மொழிபுணர்த்தல்
வழியமைமையோ சையிற்பொலித லாழ்ந்திருத்தன்
 முறைகிறுவன் மலைவு தீர்தல்
பொழிவிழுமி யதுபயத்தல் காட்டாத
 லிப்பத்தும் பொலிய வாய்ந்த
கழிபொருளுங் கருதணியு நோக்குமிடந்
 தொறுங்கிடந்து களிப்புச் செய்ய.

மையேறு மெழின்மதுரை மாநகரத்
 தருட்புலமை மாட்சி யார்முன்
கையேறு திருமூலா கமச்சோதி
 மறைமுளைத்த கனிவாய் விண்டு
பையேறு மணிபொருமோர் துதிகவிசொற்
 றிடப்பலரும் பரவிப்போற்ற
வையேறு திருக்குறளென் றொருநூல்செய்
 துலகுவப்ப வளித்தா னுக.

—மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை

நான்மறை முழங்குநன் னுவுடைக் கடவுள்
பெருகுபே ரருளாற் றிருவள் ளுவராய்
மகிதலத் துதித்து மன் னுறு மக்க
ளறமுத னன்குந் திறமுற வுணரவு
நன்மை யெங்கணு நனிசிறந் தோங்கவும்
புன்மை யண்டப் புறம்போ யொழியவுஞ்
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவ
னுள்ளம் பெருங்களி கொள்ளை கொள்ளவுந்
தவலரும் புகழ்சால் சங்கத் தமர்ந்த
நுவலரும் புலவர்சொ னுண்பொரு ளூலெலாந்
திருப்பெறு கல்வி நிரப்புறு வோர்சொல்
பருப்பொரு ளூலாய் விருப்பற் றொழியவுஞ்
சிற்றள வினதாய்ப் பெரும்பொரு ளடக்கி
யுற்றவிந் நூலினி துணர்வோர் யாரு
நணுகுசொற்சுவையொடுநகுபொருட் சுவைகவர்ந்
தணுவின்மா மேரு வடக்கத் துணியவு
நற்றமிழ்ச் செல்வம் பெற்றநன் னுட்டின்முன்
மற்றைய பன்மொழி யுற்றபொன் னுடெலா
மன்பொரு ளுடையர்முன் வறியவர் போல
வென்செய் வாமென் றேக்கற்று நிற்கவு
மெழுத்து முதலாய விலக்கண மெல்லாம்
பழுத்தினி துறங்கும் பள்ளி யாகவு
மின்றி யமையா வின்னலம் பலவுந்
துன்றின கிடந்து துதிபெறத் திகழவுந்
திருவுளத் துன்னித் திருவாய் மலர்ந்து
பொருவறப் புகன்ற புகலருந் தெய்வத்
திருக்குற ளென்னுஞ் செந்தமிழ் வேதம்
பலருரை செய்ய நிலவிய(து).

—சி. தியாகராசச் செட்டியார்.

முருக்கிதழ் நிறத்துச் சீரின்
 முதலடிக் குமரி யோடு
மிருக்கினி லிருக்கு மெம்மா
 னீந்ததோர் வேதத் துற்ற
பெருக்கமே யொருங்கு பூத்துப்
 பிறங்குநன் னீதி நூலிற்
றிருக்குற டந்த வெந்தை
 செனித்தது தொண்டை நாடு.

—சித்தாந்தசரபம் அட்டாவதானம்
பூவை. கலியாணசுந்தர முதலியார்.
(திருவான்மியூர் புராணம்)

“..............மேனிலத் தவரு
மவாவுற வென்றுந் தவாநல மமைத்துப்
பன்மலை யுள்ளுயர் பொன்மலை யென்ன
பன்னூ லுள்ளுயர் நன்னூ லாகப்
புரிவுற வருளிய விரிவுறு பொருள்சேர்
தெய்வத் திருக்குறள் மெய்மலி நூல்.”

—ச. தெய்வநாயகம் பிள்ளை.

திருக்குற ளுருவில் விசுவரூ பத்தைத்
 தெரிதரக் காட்டிய திருமால்
பொருக்கென உள்ளம் வியப்பது கொள்ளப்
 புலவர்கட் கெய்ப்பினில் வைப்பாய்த்
திருக்குறட் பாவொவ் வொன்றிலும் விசுவப்
 பொருளெலாந் திகழ்தரக் காட்டிப்
பெருக்குறச் சொன்ன வள்ளுவ தேவர்
 பெருமைதான் பேசுதற் பாற்றே!

—தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை
எம். ஏ.,
சென்னை.

தேன்முகப் பதும நான்முகப் புத்தேள்
வன்பட ரகன்று மன்பதை யனைத்தும்
விதிவிலக் குணர்ந்து கதிபெறற் குவந்து
சீரிய தெய்வ வாரிய மொழியா
னல்கிய வளமை மல்கிய சிறப்பிற்
பாயிர நான்மறை மாயிரு ஞாலத்
தடுபகை காக்கப் படுபொரு ளாதலி
னுலையா மரபி னிலைபெற வம்மறைப்
பருப்பொரு ளொருவி விழுப்பொரு ளொருங்கு
மமிழ்தினு மினிய தமிழினிற் றருவான்
பவர்சடைப் பனவர் நுவலருஞ் சீர்சா
லிகலறு தவத்திறற் பகவமா முனிவரன்
செய்தவப் பயனுன் மைதப வந்து
மாண்டநல் லருட்கொடை பூண்டகா ரணத்தாற்
றெய்வப் புலமைத் திருவள் ளுவனெனு
நிகரில்பேர் மேற்கொண் டகலிட முய்யத்
துன்பக லறம்பொரு ளின்பம்வீ டென்னு
நாற்பொருள் பயக்கு மேற்புடைத் தாகத்

தப்பா தருளிய முப்பான் மருவிய
திருக்குற ளென்னுந் தெய்வ மாமறை.
—சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்

"இப்போது வழங்குகின்ற திருக்குறட் பரிமே லழகருரையில் இயல்களும் குறளின் முறையும் ஆசிரியர் திருவள்ளுவனூர் கருத்துக்கு மாருயின வென்பது என் முதலாவது கொள்கை."
—சோழவந்தான், அரசஞ் சண்முகனூர்.

உலகுதித்த நாண்முதலா இன்றுவரை
இவ்வுலகில் உரமா வாழ்ந்த
இலகுபெரும் புலமையினர் தம்முள்ளே
எவரம்மா இனிய எங்கள்
நிலவுதிருக் குறளைப்போல் ஒருநூலைச்
செய்திட்டார் நிறையப் பின்னும்
குலவவரும் எவராற்றுன் உரைக்கவரும்
இதனருமை கூற வற்றே.
—வித்துவான் அமிர்தம்-சுந்தரனூர்.

நிலைமண்டில ஆசிரியப்பா

உலகினில் திகழும் உயர்நூற் கெல்லாம்
இலங்குறு தலைமை எய்திய நூலெது?
எக்கா ரணத்தால்? என்றெனை வினவின்,
மிக்கா ரனைவரும் மெச்சிடுந் திருக்குறள்:
ஆய்தொறும் ஆய்தொறும் அறிவுமேம் படுதலால்,
உள்ளுநர் உள்ளும் பொருளெலாம் உடைமையால்,
ஓத வழுக்கற் றுலகு சிறத்தலால்,
உள்ளிருள் நீக்க விளக்கென உதவலால்,
செந்தளிர்க் கற்பகத் திருமலர் போல்வதால்,
புன்னுனித் திவலை பொருப்பின் பருவுருத்
தன்னிடங் காட்டுந் தன்மையே மானச்
'சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியின் செறித்தினிது விளக்க'லால்,
எப்பா லவரும் ஒப்பப் போற்றலால்,
பொதுமறை என்னும் போக்கறு பெயரால்,
வையத் துணையா வயங்குறு பான்மையால்,
பற்பல மொழிகளில் பழகுறு பண்பால்,
எனவிடை பகர்ந்தியான் இன்புற் றிடுவேன்!
அத்தகைக் குறளும் அதற்கமை தமிழும்
வள்ளுவர் புகழும் வாழிவா ழியவே!
—வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,
புரசைப்பாக்கம், சென்னை.

வேதநெறி தானென்பர் வேத வாணர்
விறன்மிகுத்த திருச்சைவ ராக மத்தின்
போதநெறி தானென்பர் அருகர் புத்தர்
பூம்பிடக நூலென்பர் பொழுது மோயா
தோதுநெறி தானென்பர் விவில்ய நூலார்
உயரொழுக்க விதியென்பர் உலக வாணர்
யாதுநெறி தானெனினு மஃதே யாக
இசைத்தனரால் வள்ளுவரும் முப்பா லூலே.
—காழி. சிவ கண்ணுசாமி பி. ஏ.,
தருமையாதீன வித்துவான்.

நுண்மாண் குறட்புலம் இல்லான் தமிழ்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

இருள்சேர் இருவினையும் சேரா மறையோன்
பொருள்சேர் குறள்தேர்ந்தார் மாட்டு.

பல்லவை கற்றும் பயனிலரே நற்குறள்நூல்
நன்கு செலச்சொல்லா தார்.

அன்பும் அறனும் குறள்நூலால் ஆய்வார்க்குப்
பண்பும் பயனும் உறும்.

நிறைமொழி வள்ளுவர் நீர்மை குறளாம்
மறைமொழி காட்டி விடும்.

காக்க பொருளாக் குறள்நூலை ஆக்கம்
அதனின்ஊங் கில்லை உயிர்க்கு.
—மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.,

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
யொருகுலத்துக் கொருநீதி.

எல்லையறு பொருளெல்லா
மிதன்பாலே யுளதாயின்,
மல்லல்மிகு தமிழ்ச்செல்வம்
மாண்புடைத்தா மெனல் வியப்போ!

கற்றவரும் மற்றவரும்
கருத்துடனே கற்றிடுவர்
பெற்றபொருள் வளங்காணிற்
பிழைப்பாரோ பெரியவரே.

எச்சமயத் தோர்தமக்கும்
எப்பொருளு முளவானல்
இச்சையுடன் கற்றிடுதல்
இவ்வுலகில் இயல்பன்றே!

முதுமறையை மறையவர்க்கா
மொழிந்திட்டா ராமாயின்
பொதுமறையாம் இதைமக்கள்
போற்றிடலும் வியப்பன்றே!

துறைபலவும் ஆய்ந்தறிந்தே
தூயதமி ழாற்செய்த
முறையமைப்பை யென்னெனயான்
மொழிந்திடுவேன் மொழியறியேன்.

வெள்ளைமொழி தம்மொழியாம்
வியனுலகில் எனவெளுப்பர்[1]

1. ஆங்கிலேயர்.

கொள்ளைகொண்டே தம்மொழியிற்
குலவிவரைந் தனரன்றே?

ஒப்பில்லாப் புகழ்க்குரிய
உயர்ந்ததமிழ் மொழிதனக்கே
எப்பொருளும் அளிப்பதுநின்
ஏற்றம்சால் வாக்கன்றோ!

ஒழுக்கமுயிர் எனவுணர்ந்த
ஒண்டமிழ்சேர் நிலமக்கள்
வழுக்கலிலா நெறிபற்ற
விளங்குவது வள்ளுவரே.

விரிபொருள்கள் பலகாண
விந்தையுறக் குறுகியதால்
பரிமேலன் உரைதனக்கும்
பார்புகலும் இசையுண்டே.

அணுத்துளையில் எழுகடலா
அறைந்திட்டான் இடைக்காடன்
நுணித்தறிதற் குறுபொருளை
நுண்மையதாக் கொண்டமையே.

நிலமளந்த மாலடியில்
நீள்புகழ்சேர் குறளடியே
புலமளந்தே யுளமளந்து
பொலிவுற்று விளங்குவதாம்.

—வித்துவான். இரா. சிவ. சாம்பசிவ சர்மா.

செய்யொத்த பயிர்போலச் செந்தமிழுஞ்
செழும்பொருளுஞ் சேர்ந்தசெல்வம்;
மையொத்த மனவருளை மாற்றியொளிர்
மணிவிளக்கு; மாந்த ரெல்லாம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமர
வாழ்வெய்த வழிநடத்துங்
கையொத்த நற்றுணைவர்; வள்ளுவனார்
திருக்குறளெங் கண்க ளன்றே!

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க!

தூய்மையே மணிமார்பு; தொன்மறையின்
பிழிசாறாய்த் துலங்கு கின்ற
வாய்மையே மணிநாக்கு; மங்கலஞ்செய்
மனைவாழ்வே கண்கள்; வீர

நேயமுறு பொதுநலமே திருமேனி;
நிறையின்ப முறுவல் பூத்துத்
தாயமுதம் விளங்குகின்றாள்—அறத்தேவி
திருக்குறளாய்—தாள்பெற் றுய்வாம்!

நால்வரிசை யமுதிருக்க, நம்மாழ்வார்
மொழியிருக்க, சேக்கி ழாரின்
பால்வடிசெந் தமிழிருக்கக் கம்பச்சித்
திரமுருக்கப் பகலே போன்று
ஞாலத்தி லறம்விளக்கும் நாயனார்
குறளிருக்க நமது நற்றாய்
காலத்தை வென்றோங்குங் கற்பகமாய்
கனிபெருகக் கண்டி டோமோ!

சாதிமதச் சச்சரவேன்? மேல்—கிழக்குச்
சழக்குகளேன்? சகத்தீர் வம்மின்!
மேதினியுண் டானபொழு துண்டான
பொதுநெறியை விளங்கக் காணீர்!
தீதிரிய நலம்பரவத் தேவர்திரு
வாய்மொழியை யியல்பாய்ப் போற்றி
யோதியுணர்ந் தெல்லாரும் ஒற்றுமையாய்
வாழ்ந்திடுவோம்! உண்மை வெல்க!

—யோகி சுத்தானந்த பாரதியார்.
சென்னை.

வள்ளுவனார் வாய்மொழிபோன்
மன்பதை யாவும்பேணுந்
தெள்ளுமறை யொன் றுளதோ தேர்

உலகிற் கொருபுலவர் வள்ளுவரே யோர்நூல்
இலகு திறக்குறளே யாம்.

இருமை யறத்தி னியல்பனைத்துந் தேற்றிப்
பொலிவது பொய்யா மொழி.

மும்மை யுலகிற்கு முப்பாலை யொப்பதொரு
செம்மைமறை யின்றாந் தெளி.

நாற்பொருண் முப் பாற்படுத்து
நானிலத்தோர்க் கீந்தருள்செந்
நாப்புலவர் சீர்வாழி நன்கு.

தெய்வப் புலவர்தரு தெய்வத் திருமறைநூல்
உய்வைத்தந் தூழி வாழி.

—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்,

பெயரிலாப் பெரியோன் பெருநூ லாக்கினன்.
அயர்விலா ததனை யனைவரு மாய்குவர்,
பெயல்[1] பல்லோர்க்கும் பொழிவது போலும்,
புயல்[2]வள வாரி[3]ப் பூரணம் போலும்,
கேட்பதைக் கொடுக்குங் கற்பகம்[4] போலும்,
வேட்பதை விளைக்கும்வே ளாண்மை போலும்,

1. மழை. 2. மழை. 3. வருவாய். 4. தேவதரு.

கைம்மாறு கருதாக் கனிகரம்[1] போலும்,
செம்மாண் புற்ற செங்கதிர் போலும்,
ஆல்பலா வத்திதாம் அலருறுக் கனியைப்
பால்படா[2] தளிக்கும் பண்புறு பனுவலைக்
கயவரு முயவருங்[3] கவிஞரு மறிஞரும்
நயம்படக் கற்று நாடொறு நீடுவர்.[4]
குயமுற[5] நாடுங் கோனுறு வாழ்வும்
பயமிலாப் பாலனு நலமிக வெய்தும்
அயம்பற்றி[6] போன்று ஆகம வுண்மையைச்
சயமுற[7] வுணர்த்திச் சயனடிச்[8] சேர்க்கும்.
கயம்[9] பொருள் செறிந்த குறளடி யதனால்
மயன்[10]றன் மாளிகை மேலுற மேய்ந்தனன்.
நியம நிட்டை நியாசம்[11] வேண்டிலம்
வயம்[12]படு வாழ்வினர் வாழுயிர் புரத்தலின்,
சுயமரி யாதைச் செய்ந்நன்றி யோம்பலின்.
தயாள சிந்தையன் தன்னல மொழித்தலின்,
துயம்[13]படுப் போர்க்குத் தூ[14]நயஞ் செய்தலின்
புய[15]வலி யுளார்க்குப் பொற்சொ லாற்றலின்,
ஞயம்படு வுரையால் ஞாலங் கொள்ளலின்,
இயம்பொணு விடும்பையை இசையுறப் பொறுத்தலின்,
இயல்பினில்[16] வாழுநர் இயவரை[17] இணக்கலின்,
இயவுள்[18] வள்ளுவ ரியம்பிய மொழிபோல்
இயங்குமா வுலக மெங்கணு மிலங்கலின்
மயங்குத லின்றி மறை[19] யெனல் முறையே.

—எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை,
பி. ஏ., எல். டி.,

நிலைமண்டில ஆசிரியப்பா

யாரே யியம்புந ரியாரே யியம்புநர்
நாரேய் காசிப னல்கிய வண்குறள்
முன்னீ ரடியான் மூவுல களந்தமை
அறைதரு வியப்பின தன்றென வெவரும்
அளந்த வுலகையு மவ்வீ ரடியையும்
தம்பா லொடுக்குந் தகைகெழு மான்றவர்
அறிவெலா மளந்தன வாசறு புலத்து
வள்ளுவ ரளித்த வண்குற ளீரடி
எனனி னிதன்சீ ரியாரே யியம்புநர்
மற்றிது,
மதிமுத லாகிய வான்கெழு முடுக்கள்
தமக்கொளி யளித்துத் தனித்தவிர் பரிதியின்
அறைபிற நூல்கட் கரும்பொரு ளளித்துத்
தன்னிக ரின்றித் தனித்தவிர் கிற்பது
தொடுதொறுஞ் சுரக்குந் தோய்மணற் கேணியின்
ஆய்தொறு நன்னீ ரரும்பொருள் சுரப்பது
ஐயிரு குணனு மமைந்து பொலிவது
எழுத்துச் சொற்பொருட் கிலக்கிய மாவது
இலக்கணத் தன்மையு மியைந்துகண் போல்வது
தான்சிறி தாகியுந் தன்னிற் பெரும்பொருள்
தம்மை யென்றுஞ் சலிப்பறத் தாங்கலின்
நெடுநீ ராடைகொ ணிலத்திற் பெரியது
அளத்தற் கரிய வாழ முடைமையின்
கனை திரை மேவுவண் கடலிற் பெரியது
உயர்வுற வுயர்ந்த வொண்ணிலை யதனால்
வான்றொடு குடுமி மலையிற் பெரியது
அழியா வுடனல மளிக்குமிவ் வமுதைப்
படியுளோர் பெற்றபின் பாற்கட லமுதைப்
பெற்றென நெடுநாள் பிறங்குறு யாக்கையேம்
ஆயினே மாதலி னவனியோர் தம்மின்
சிறப்புளே மியாமெனத் திகழ்வா னுலகோர்
உற்ற செருக்கற வொழிந்தனர் மன்னே
தழைகலை மடந்தை தன்னு விடுத்துப்
பல்லெழி னலங்கள் பயிலுமிவ் வாய்மொழி
கற்றோ ரகமே சார்தலைக் கண்டு
நாணந் தன்னு ளுழு சிரத்தினன்
ஆயினன் மன்னே யவிர்மலர் மேலோன்
ஒருபாற் கடலே யுடையகார் வண்ணன்
கருதுமிம் முப்பாற் கடலினைக் கண்டு
சங்கை யுற்றெழில் சார்தரு தண்ணுரும்
பணமணி யரவப் பாயலிற் படுத்து
உறங்கா னாகி யுன்னுவன் மன்னே
பொய்யா மிடைப்பெண் பொருந்திடப் பாகன்
முன்னுமிப் பொய்யா மொழியினைக் கற்றோர்
தாம்பெற் றிலகுறு நிறைமதி தம்மையும்
தனக்குள தாகிய குறைமதி தன்னையும்
கருதித் தன்னகங் கல்லா யினன்மன்
இன்ன வியல்பினி லியைபொது மறைச்சீர்
என்னு லெங்ஙன மியம்புத லியலும்
ஆதலி னிவ்வெழி லருநூ லுலகம்
உய்ய வருளிய வொப்பில் புலத்தோர்
செய்ய பவளவாய்ச் செம்மலர் வாழி
துய்ய சேவடித் துணைமலர் வாழி

---

1. அன்பு. 2. பால் கெடாமல், மக்கட்குப் பாகுபாடின்றி, முப்பால் முறை கெடாமல்.
3. துன்பமுற்றோரும். 4. ஓங்குவர். 5. அழகுற. 6. காந்தம்.
7. வெற்றிபெற. 8. சிவன் பாதம். 9. ஆழமான. 10. தேவ தச்சன்.
11. சந்நியாசம். 12. வசம். 13. இரண்டு, பிளவு. 14. சுத்தமான.
15. தோள். 16. தகைமையொடு, குணத்தொடு. 17. சண்டாளரை.
18. புகழாளன், திரு. 19. தமிழ்மறை.

ஆழிய கடனே ரருளுளம் வாழி
வாழிய வென்று வழுத்துவ னினிதே.

—கா. ரா. கோவிந்தராஜ முதலியார்,

"உலகினுக்கிவ் வொருநூலே போதுமென
வள்ளுவர்முன் னுரைத்த நூலென்
றிலகுதிருக்குறள்."

—மு. ரா. அருணாசலக்கவிராயர்.

மேலான வாழ்வு நிகழ்த்த விருப்புடையார்
நூலான நூலெல்லா நோக்கார்தம்—போலாத
வள்ளுவர் நூல் நோக்கியதன் மாண்கருத்தைத் தம்
கொள்ளுவர்பின் கொள்ளார் குறை. [மனத்துட்

யாவு மகத்தடக்கி எவ்வெவர்க்கும் வாய்ந்தகுறள்
நாவு முரைக்க நயந்தகுறள்—பாவும்
பெயரும் பிறங்கும் பெருநூல் விசும்பில்
உயருந் தனிப்பே ரொளி.

—இசைவாணர். தி. இலக்ஷ்மண பிள்ளை,

சீரா ராளி தத்தற்குச்
செல்வப் புதல்வ ராய்மயிலை
திகழு மாசி மகந்தோன் றித்
திவளு மொற்றி யேலற்குப்
பாரார் சித்திப் பயன்காட்டிப்
பண்பு செறிந்த வாசுகியைப்
பரிவின் வேட்டின் னிலைதெரித்துப்
பவுத்த ரறத்தின் மேலாகப்
பேரார் நடைநூல் வழிபமைத்துப்
பெட்பத் தமிழின் முப்பாலும்
பேசுந் திருவள் ளுவமாலை
பிறங்கு பொருளை நனிவிளக்கக்
காரார் மயிலைத் திருக்கோயில்
கவின விடையி லனுடநாட்
கலந்து சிவமா யன்புளுற்றுங்
கனியே யெம்மைக் காத்தருளே.

விருப்பண்ணப் பல்லவரு மேலை யரசின்
விருப்பண்ண தேவரு மேவி—யுருப்பண்
ணுரையே மறையா யுயர்வள் ளுவராந்
துரையே யெமக்குத் துணை.

—சீர்காழி, வித்வசிகாமணி
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உள்ளுதோ றுலகில் எந்நாட் டவரும்
உவந்துதம் நூலென மதித்து
உள்ளுறை காண்ட லரிதிதற் கென்று
உரைக்குமோர் திருக்குற ளாகுந்
தெள்ளுறு ஞான நூலெனு மமுதந்
தெவிட்டிட ஈந்தருள் சீலன்
வள்ளுவ னென்னும் வள்ளல்தம் அடியை
வணங்கியுள் வைத்துவாழ்த் துவமே.

—சீர்காழி, வித்துவான். ம. சண்முக தேசிகர்,

உலக மெலாந் தொழுதேத்து மொருமொழியொன்
றுண்டென்னி லுயிரோ டொன்றி
உலவாத வொருமுதலும் இரண்டருளு
முத்தொழிலு மோது நான்கு
நிலவுதிரு நெறிப்பயனு நேர்வித்து
வாழ்நாளின் நிறைவே யாகி
நீடுபல வுயிர்க்கின்ப நிறைத்துப்பல்
லூழிநிற்கும் நினைக்கி லச்சீர்
அலகில்தமிழ் மொழிக்கன்றி மற்றறைதல்
வாரமெனல் அமைவே யாகும்
அம்மொழியுந் திருக்குறளா மருமணியா
லகத்திருளு மகற்று மந்த
நலமறையை நமக்கருளு நாவலர்கோன்
திருவடியை நாளும் போற்ற
நாற்பொருளுந் தாம்வருமால் நற்றமிழா
விடையூறு நணுகா வன்றே.

அன்றுதிரு வள்ளுவராய் அருளுருக்கொள்
பெம்மான்றன் அழகே வருக
ஆண்டவனை எழுகுறளால் அடிமூன்றில்
தாள்நான்கில் அறைந்தோய் வருக
இன்றெமக்கு நாவளித்த எழின்மறைக்கண்
இரண்டொன்றில் இறையோ டின்பம்
ஈட்டுமுயிர் பழமலமும் இசைவித்திங்
கிருளகற்றும் எந்தாய் வருக
உன்றனடி யுறைப்பாலே ஒருமூன்றும்
இயலேழும் உணர்ந்தி யாங்கள்
ஊர்ஊ ராய் ஓதவொரு நூற்றுமுப்
பான்மூன்றுய் உற்றோய் வருக
என்றென்று மெமதுளத்திங் கெழின்மணியோ
டெழுந்தருளி ஈட்ட லீதல்
இன்சொல்லே வாய்மைபொறை எழிற்கல்வி
இசைவிக்க வருக வருகவே.

அந்தமும் ஆதியு மவ்வொடு னவ்வென் றருளியவர்
நந்தம் பெருநா வலர்தேவர் நாயகர் நற்றமிழின்
வந்த திருக்குறள் வையகத் தார்க்கு வழங்கமிழ்தாம்
எந்த மொழியுல கெங்கணு மில்லை யிதற்கிணையே.

—திருவள்ளுவரகம், ப. இராமநாத பிள்ளை.

பன்னருந் திருக்குறள் பாங்குடன் அளித்த
தமிழ்ப்பெருந் தெய்வத் திருவள் ளுவர்புகழ்

ஈரே ழுலகும் எங்கணும் பெருகுக
வள்ளுவர் திருக்குறள் வான்புக ழெய்துக!
—வை. குஞ்சிதபாதம், சென்னை.

ஆசிரிய விருத்தம்

மன்னரியசெந் தமிழ்நீதி நூலின் மேம்
படைவுரை செய்மகிழ்மீ
பன்னருமெந் நாட்டினரு மெச்சமயத்
தவருநனி பரிவினேர்ந்து
சொன்னயமும் பொருணயமு மிகத்தொனிக்க
வெடுத்தோதுந் தொன்மைசான்ற
உன்னும் வேதாகமத்தின் கருத்தையெலா
நன்குணர வூட்டிவைக்கும்.

திருக்குறள்வெண் பாவதனின் முறைபிறழா
வாய்மைசெறி சீர்சான்மிக்க
பெருக்கமுற நடுநிலைமை பிசகாத
வகைபுரியும் பெருமிதங்கொள்
சுருக்கமதாய் விளங்கச்செய் பேர்பெரிய
வாசிரியத் துரியாதீத
செருக்குடனே பிரமாணங் காட்டவல்ல
வுயரியநற் செல்வ னெங்கோன்.

தருமநெறி பிடித்தொழுகு மில்லறமா
தியவியல்கள் சார்பிற்றோய்ந்த
இருமையினும் பெருமைதரு நன்னூலிந்
நூலென்றே யியம்புமந்த
அருமையறம் பொருளின்ப முப்பாலாய்
வகுத்தருளி யருள்புரிந்த
ஒருமைதவ முயர்பொய்யா மொழிக்குநிகர்
சொலற்கெதுவு முதவாவன்றே.
—பண்டித ரத்தினம்
புழலை திருநாவுக்கரசு முதலியார்.

எண்சீரடி யாசிரியவிருத்தம்

பாலையிலே சென்றவர் பருகிடுநற் குளமே
பருகிடுமக் குளத்திலுறை பண்புறுநன் மலரே
சோலையிலே வீசுகின்ற தென்றலெனுங் காற்றே
தூவுறுமக் காற்றினனி மேவுறுநன் மணமே
காலையிலே தோன்றுகின்ற கதிரொளியே யந்தக்
கதிரொளியிற் காணலுறு கரிசறுநற் பொருள்நூற்
சாலையிலே கவினுறுநற் சாத்திரக்கற் பகமே
சார்வுறுமக் கற்பகத்தின் தனிப்பலமாங் குறளே.

குறவஞ்சி

அமிழ்தூறும் மொழிகள்மிக
வமைந்திலகும் பொழிலே
அறம்பொருளின் பப்பால்க
ளார்ந்திலகும் எழிலே
கமழ்ந்திலகு பொன்மலர்போற்
கவினுரும் பெருமை
கற்பவர்கள் புதியபல
காண்பரதன் அருமை
இமிழ்தாரும் இயல்பொளிரும்
சீர்த்திமிகக் கண்டார்
இவ்வுலகர் தம்மொழியில்
இசைவுறவே கொண்டார்
தமிழ்நாட்டின் தவப்பயன்முன்
திருக்குறள்நூ லாகும்
தழைத்தோங்க இவ்வுலகீர்
உழைப்பீர் நன்காகும்.
சாதிகுலம் பிறப்பென்னும்
சழக்கினையே ஒழித்தார்
சமரசசன் மார்க்கமதை
யுய்யும்வகை தெளித்தார்
சூதுகொலை கட்காமம்
பொய்களையே வெறுத்தார்
சோம்பல்மிடி யஞ்ஞானத்
தொடக்குகளை யறுத்தார்
நீதிபொது யாவருக்கும்
என்பதனைச் சொற்றார்
நிலவுலகி லிவர்குறளைப்
போற்றுவரே கற்றார்
நிதகல நலம்பெருகச்
சிந்தனைசெய் குவமே
தேவர்திரு வள்ளுவரை
யாவருமுள் ளுவமே.

அறுசீரடியாசிரிய விருத்தம்

பூவிற் சிறக்கும் தாமரையே
புனலிற் சிறக்கும் சுரநதியே
தேவிற் சிறக்கும் கதிரவனே
திருவிற் சிறக்கும் அறிவொளியே
நாவிற் சிறக்கும் தமிழ்மொழியே
நாட்டிற் சிறக்கும் தமிழ்நாடே
பாவிற் சிறக்கும் வள்ளுவர்வெண்
பாவே யென்றும் வாழியரோ.
—மேலைச்சிவபுரி ஆ. பழ. சொக்கலிங்கன்.

நிலை மண்டில ஆசிரிப்பா

அறம்பொரு ளின்பம்வீ டாகு மென்னும்
அவற்றுள் மோக்க மகம்வாக் கெட்டா
நுவல வொண்ணு நுட்பத் தாமெனத்
துறவற மாகுங் காரண வகையால்
இசைப்ப தல்ல திலக்கண வகையால்
இசைக்கப் படுதல் இல்லை யாதலி

ஞரண மூன்றே யவத்தை மூன்றே
பூரண சத்தியும் புரமு மூன்றே
மலமு மூன்றே மாயையு மூன்றே
சலமி லினிய தமிழு மூன்றே
யாகலின் வள்ளுவ ராக்கிய குறளை
முப்பா லாக்கி முடித்தன ரதனை
யெப்பா லாரு மெம்மதத் தினருந்
தத்தம் பொருளைச் சாற்றி உரைத்திட
முத்திக் காதியாய் மொழிந்தன ரம்மா
இத்திற மளித்த விறைபெரு நாவலர்
புண்டரீ கனும்மொழி பூர்வ வேதமு
மொண்டமி ழிற்றெறி யுத்தர வேதமு
மொன்றே யாதலி னவனிவ னுமென
நீணிலத் துரைப்பது நிலைபே றதனுன்
வாழி வாழி மாதானு பங்கி
வாழி திருக்குறள் வாழியன் னேன்சபை
அச்சபைத் தலைவ னமைச்சனும் வாழி
யன்னோர் நடாத்து மிலேகமும் வாழியே.

–செந்தமிழ் ரத்திஞகரம்
வல்லை சண்முகசுந்தர முதலியார்.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர் களாய்
வாழ்கின்றோம், ஒருசொற் கேளீர்.
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கஞ் செழிக்கச் செய்வீர்.

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழ்ச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்ததென்
றுறுதிகொண் டிருந்தேன்.

இருதலைக் கொள்ளியினிடையே
—கவி பாரதியார்.

வள்ளுவர் தந்த திருமறையைத் தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே-என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே. (இலக்கிய பஞ்சகம்)

பூவில் அயனும் இந்தப்
பூமீது வள்ளுவர் தம்
பாவின் நயமுரைப்
பாலகனய் வந்தானே. (தாலாட்டு)

வழுக்கள் போக்க வந்தோன்-நல்ல
வாழ்வை ஆக்க வந்தோன்
ஒழுக்கம் காட்ட வந்தோன்- தமிழுக்கு
உயிரை ஊட்ட வந்தோன்.
—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

வானுக்குச் செங்கதிர் ஒன்று—புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்று—நல்ல
மானத்தைக் காத்து வாழஎண்ணு மிந்த
வையத்துக் கொன்று திருக்குறள்.
—பாரதிதாசன் (தேனருவி)

ஒன்றே முக்கால் அடியாலே
உலகம் தன்னைக் கவர்ந்ததுவாம்
அன்றும் இன்றும் என்றென்றும்
அருமை பெருமை உடையதுவாம்
உள்ளம் தூய்மை உற்றிடவும்
உயரிய நன்மை பெற்றிடவும்
தெள்ளத் தெளிய உதவுவது
திருக்குறள் திருக்குறள் திருக்குறளே.
—திரு. அழ. வள்ளியப்பா. (மலரும் உள்ளம்)

உலகுக் கெல்லாம் ஒருநூல் இதுவென
பலமொழி பயின்றுள பலநாட் டறிஞரும்
ஏற்றுப் புகழ்ந்து எல்லா மொழியிலும்
மாற்றிப் படித்து மகிழ்த்திட நிற்பதாய்
தமிழ்மொழிக் கழியாத் தனிச்சிறப் பீந்து
அமிழ்தின் நலமுற அறம்பொருள் இன்பம்
முப்பால் அறங்களை முறையுடன் வகுத்து
எப்பா லவர்க்கும் எளிதே உரித்தென
தருக்கவுந் தகுந்த தமிழ்மறை யாகிய
திருக்குறள் என்னும் தெய்விகப் பனுவல்.'
—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

தெள்ளிய சங்கக் கபிலர்நல் லோரான்
செய்யுள் வளஞ்செய்வித் தாய்தென்னி லத்தே
வள்ளுவ ராலுல கூட்டினை முப்பால்
வண்கம்ப ராலிரு ளோட்டினை யப்பால்
ஒள்ளிய நெஞ்சிற் பெரும்புல வோரால்
ஓரரு ளின்சுவை யுண்ணவும் வைத்தாய்
எள்ளலில் தெய்வத நூலேணி யால்வா
னேறவும் நேர்வழி கண்டனை யெம்மோய்!
—மகாவித்துவான் ரா. இராகவையங்கார்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

(தரவுகள்)

தென்றமிழ்த்தாய் செய்தவத்தாற்
சிறப்புள்ள தென்னாட்டில்,
மன்மரபில் வந்துதித்த
மாபுலவோய்! வாய்மைமுதல்,
பிறனில்லை விழையாமைப்
பேரறங்க ளிற்சிறந்தோய்!
அறனில்லை யரசியலி
னறிவற்று லெனவுணர்ந்து,
பொதுமக்கள் பலர்க்குதவி
புரிந்திடவே, அரசியலிற்
பொதுமக்கள் போற்றமைச்சர்
புகழ்வாழ்வி லமர்ந்தோயே!"

பல்லூழி முதற்கணிலே
பலர்பரவத் தமிழ்நாட்டில்,
எல்லோனின் கதிர்த்திரள்போ
லிருந்தமிழ் மொழித்தாய்க்கும்
பொல்லாத காலமெனப்
புரண்டுவந்த கடற்பெருக்கால்,
எல்லோரும் போற்றுமறை
யிடருற்றுப் போய்மறைய,
கல்லார்போற் றமிழ்மக்கள்
கருத்திலராய் வாழ்நாளில்,
வல்லோய்! நீ திருக்குறளைத்
தமிழ்மறையாய் வகுத்தனையே!

(தாழிசைகள்)

கூர்த்தமதி மிகக்கொண்டு
குவலயத்தோர்க் குதவியங்கே
சீர்த்தமதி வள்ளுவரென்
றிருப்பெயராஞ் சிறப்புற்றாய்

வள்ளுவரென் பெயர்ப்பொருளை
மறந்தனரோ! தமிழ்மக்கள்
வெள்ளைமொழிப் பொருள்கொள்ள
விதித்தவிதி கொடுவிதியே!

தமிழ்மறைநூற் றனிப்பயனுந்
தகைமைகொடு முப்பாலாய்த்
தமிழ்மறையாந் திருக்குறளைத்
தனிச்சிறப்பா யெமக்களித்தாய்!

பொருளறியா வாரியரிற்
பொல்லோர்கள் வடமொழியிற்
பொருளாகு நாற்பொருளே
போற்றினிரென் றேகுரைப்பர்,

மக்கடம வாழ்க்கைக்கு
வாய்த்திடுந லின்பமதே
மிக்கதென வீட்டுக்கே
யின்பப்பால் விளம்பினையே!

பேரின்ப வடிநிலையா
மகப்பொருளின் பெருமையினை
ஓர்ந்தறியார் காமமென
வொதுக்கியதென் பேதமையே!

பன்னாட்டு மக்களது
பரந்தபல கொள்கைகளும்
நந்நாட்டுக் குரியவென்ற
நாவன்மை மிகப்பெரிதே!

பொதுவுடைமைக் கருத்ததனை
யொப்புரவாய்ப் பொதிந்துவைத்த
இதுபுதுமை யெனவியக்க
வெந்நாளு நின்றனையே!

(தனிச்சொல்)

"என வுன்னி"

(சுரிதகம்)

நிற்பெரு நிலையை நேடின ரேங்கிப்
பற்பலர் நினது பழமையைத் துருவிக்
கழகம் பலகாண் காலையில், சான்றோர்
பழகுறு திருக்குறட் பல்கடற் பெருக்கிற்
றமிழர் பலருந் தாவியே குதித்தே
அமிழ்தெனும் பல்பொரு ளகத்தே கொண்டு,
சீர்திருத் தம்மெனுந் திருக்கரை சேர்ந்து
வீறுகொண் டிடயான் வேண்டினன்
மாறுகொ ளயலவர் மாப்பெரு நடுவணே.

—திருச்சி புலவர் அ. நடராச பிள்ளை

என்னடிகள் வெண்குறள் நேர் அடியிரண்டும்
என்றலையில் இருத்து மீறை.

—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

இருநிலத்திற் பெரும்புலவ ராகத் தோன்றி
இறவாத புதுநூல்கள் இயற்று வோரும்
அரசியலிற் பிழையாமல் அவனி தன்னை
ஆண்டுவரும் புரவலரும் அன்போ டென்றும்
இரவலர்தம் குறிப்புணர்ந்து வழங்கு வோரும்
ஏத்தவொரு பொதுமறையை உலகுக் கீந்த
பரவுபுகழ் வள்ளுவனார் நெறியில் நின்று
பாரதனுக் குழைத்திடுவோம் வாரீர் வாரீர்.

—புலவர் ஆ. பொன்னுசாமிப் பிள்ளை

"சிலர் கோவை மும்பால்களை, வாதபுரீச ராகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக் கோவை யாருஞ் சங்கத்தவரைப் பங்கப்படுத்தி அழித்து விட்ட தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாய னரது பொய்யாமொழித் திருக்குறளுமென்று மயங்கித் தடுமாறுப** இவ்விரண்டும் நம் தமிழ் வேதமென்றுவது சிந்தித்தாரில்லை."

—சி. வை. தாமோதரம் பிள்ளை
தமிழ்நூற் பதிப்பாளர்.

"தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தம்தேசுய ரில்லாள் வாசுகி என்னும் மாசற்றொளிரு மணி விளக்கொத்தவள், பொற்பு விளங்கிக் கற்பு வழுவாதில்லறம் நடத்தி இன்புற்று வாழ்ந்து, மாண்டபின்பு மயானத்திற் கொடுபோய்த் தகன சமுஸ்காரந் தான் செயப்படுகையில் நெடுநாள் நகமுஞ் சதையும் போலவும், உட லும் உயிரும் போலவும் மனமொத்துப் பிரிவற் றிருந்த அருமை மனைவியைப் பிரியவேண்டி வந்தமைபற்றி அவர் துக்க சாகரத்தில் ஆழ்ந்து கண்ணீர் விட்டார். யோசிக்கு மிடத் தில் தாமரையிலை நீரும் புளியம் பழமும்போல மனைவாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாத மகாத்மா வாகிய அவரும் அந்த மாதர்க்கரசியின் நற்குண நற்செய்கைகளாலல்லவோ அப்படிப் பரிதபிக்கும்படி வந்தது ?"

—வீராசாமிச் செட்டியார்,
("விநோதரச மஞ்சரி")

"திருக்குறள் பொருளின்பம் அகப்படக் கொண்டு அறங் கூறி வீட்டியல்பு நன்று நாட் டிய தத்துவ ஞான நூலாம் உத்தரவேதமென் பது தெற்றென உணர்ந்துகொள்க."

—சபாபதி நாவலர்.

"வள்ளுவர் நூலிலே யாவர்க்கு மங்கீகார மாகிய பொருட் சிறப்பும் இலக்கிய இலக்கண வனப்பு மமைந்து கிடத்தலினல் வள்ளுவர் காலத்திலேயே அது பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது. மலைவுவரு மிடங்கடோறும் 'இது வள்ளுவன் மொழி'யென்றால் அவ்வள வில் மலைவு நீங்கிவிடும். கண்ணுதல் கவியிலுங் குற்றங் கற்பித்த நக்கீரரே தமது இறையனுரகப் பொருளுரையிலே குறளைப் பிரமாணமாக எடுத்தாண்டு போயினரென்றால் மற்றோர் கொள்வது புதுமையாகாது......இலங்கையை வெற்றி கொண்டு இற்றைக்கு இரண்டாயிரத் தறுபது வருஷங்களுக்கு முன்னர் அரசு புரிந்த சோழமண்டலத்தானுகிய ஏலேலசிங்கனுடைய பௌத்திர பௌத்திரனுக்குப் பௌத்திரனுகிய ஏலேல சிங்கன் என்னும் பிரபுவுக்குத் திருவள் ளுவர் நண்பினரென்றும் அப்பிரபுவினது கலமொன்று கடலோடி மீண்டுவந்து, பாரிற் பொறுத்து மிதவாது கிடந்தபோது திருவள் ளுவர், "ஏலேலையோ!" வென்று கூறித் தொட்டபோது மிதந்ததென்றும். பாரமிழுப் போர் இன்றும் "ஏலேலையோ!" வென்று சொல்லி யிழுப்பது அன்று தொட்ட வழக்கென் றும் கன்னபரம்பரை...சிங்கன் என்னும் பட்டப் பெயர் சோழமண்டலத்திலுள்ள இவனுக்கு வந்தது தன் மரபினர் இலங்கையரசு பெற்ற காலத்தப்பெயரோடு விளங்கினமையாற் போலும்........ திருவள்ளுவர்க்கு முன்னும், முனிவரும் புலவரும் அறம் பொருளின்பமென் னும் முப்பாற்பொருளு மொருவா றெடுத்துக் கூறினரேனும், அவரெல்லாம் திருவள்ளு வரைப் போலக் கேட்டார் நெஞ்சினுட் பாய்ந்து பதிகொள்ளுமாறு சொல்லுஞ் சொல் வன்மை யும் சாதுரியமு முடையரல்லர். "எழுத்து முத லாய விலக்கணமெல்லாம்—பழுத்தினி துறங் கும் பள்ளி" என்று புகழப்பட்ட திருக்குறட் சிறப்பு எழுத்திலடங்குவதன்று."

—ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை,
("அபிதான கோசம்")

"திருவள்ளுவர் ஓதாதுணர்ந்தவர்; திரு மயிலையிலிருந்தவர்; நெசவுத் தொழில் மேற் கொண்டவர்.. இவர் ஒருநாள் நெசவு நெய்து கொண்டிருக்கையில் வாசுகியாரைப் பார்க்கும் படி அவர் தாய் வீட்டினர் இடித்த அவலினைக் கொண்டுவர, அதிற் சிறிது இவருக்குக் கொடுப்ப, அதனை வாயிலிட்டுக்கொண்டு நெய்கையில் அறுந்த இழையை முறுக்கி முன் னிலுந் திடமாயிருக்கக் கண்டுபிடித்துப் பச்சை வடமாக நெய்தலை மாற்றியவர்."

—ஈக்காடு. இரத்தினவேலு முதலியார்.
("சிறப்புப் பெயரகராதி")

"திருவள்ளுவரைச் சைநர், தம் மதத்தவரில் ஏளாசாரியார் என்பவர் என்பர். இவரைத் திருவள்ளுவ மாலையிற் புகழ்ந்திருத்தலன்றிப் பொய்யாமொழிப் புலவர் முதலியவர் பிற் காலத்தும் புகழ்ந்து இருக்கின்றனர்.

—ஆ. சிங்காரவேலு முதலியார்.

"நாயனர் தம் வாய்மொழியானன்றி உல கிற்கு மேலான அறத்தைத் தாமே ஒழுகியும்

காட்டினர். துறவறத்தை நன்கு மதித்தும் சில ஞானக் கள்ளர்களைப்போல் அத்துறையை நாடாது இல்லறத்தினின்றுமே பிறவிக்கடலை நீந்தலாகு மென்பதனைக் காட்டி எந்நிலையின ராயினும் தத்தம் நிலைக்குரிய தொழிலைச்செய்து உயிர் வாழ்வதே மேலான ஒழுக்கமென உழைப்பின் பெருமையையும் புகட்டி, யாவர் மாட்டும் அன்பு பூண்டொழுகுவதே மேலான அறமெனவும் நாட்டி, மனத்துறக்கமடைந்து தெய்வ பக்தியிற் சிறந்து அவருடைய அதீத பக்குவ நிலையை விளக்கி நின்றார். ஓர் ஆங்கி லேய சரித்திரக்காரர், "உலகிற் பெரியோ ரெனக் கொண்டாடுபவரெல்லாம் சில குற்றங் குறைபாடுள்ளவர்களாகக்காணப்படுகின்றார்" என்றனர். காளிதாசப் புலவரும், "வெண் ணிலாவிற் களங்கமிருப்பது குற்றமாயி னன்றே அம்மேன்மக்கள் குற்றமும் குற்ற மாகும்?" என்றனர். இவ்வுரைகள் உலகிய லுக்கு எவ்விதமாக ஒப்பினும், இக்குற்றம் குற்றமேயென நாயனர் தம்மொப்பற்ற புனித வாழ்வினால் நிலை நிறுத்தினர். எவ்விதத் தீங் கினையும் நினைத்தலும் செய்தலுமின்றி எவ் விதப் பற்றுக்களையும் களைந்து எவ்வுயிரிடத் தும் அன்பு பூண்டொழுகுவது அருமையினும் அருமையன்றோ? அவ்வித அருமையும் பெரு மையும் அல்லவோ நம் நாயனருடையன?"

—ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, பி.ஏ,,பி.எல்.
("திருக்குறள்—வீட்டின்பால்")

"கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப் பட்டன 'எட்டுத்தொகை' என்ற நூற்றெகையு ளடங்கிய எட்டு நூல்களும் 'பத்துப்பாட்டும்' 'பதினெண் கீழ்க்கணக்கு'மாம். இனி இவற் றுள் அடங்கியதாய்ச் சங்கத்தாராற் செய்யப் படாது, திருவள்ளுவனராற் செய்யப்பட்டுச் சங்கத்தாரான் அங்கீகரிக்கப் பெற்ற திருக் குறள் என்ற அரிய நூலும் இவ்வாதி காலத்த தாம். (கி. பி. 100க்கு முற்பட்டது) இதனை மேற்கொள்ளாத நூலும் புகழாத மாந்தரு மில்லை,"

—வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ.

"நமது நாட்டில் ஒன்றேடொன்று மாறு படும் சமயங்கள் பலவுளவேனும், அச்சமயத் தினர் யாவரும் திருக்குறளை உச்சிமேற் கொண்டனர்,"

"நாயனர் சகலமதங்களின் சாராம்சங்களை யும் மிகவும் சுருக்கமாயும், அழகாயும் சொல்லு கின்றவர். எவற்றிற்காகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் கொண்டாடுகின்றனரோ அவை நாயனர் சென்ற வழியெல்லாம் சிதறு கின்றன."

—K. S. சீனிவாசப் பிள்ளை.
("தமிழ் வரலாறு")

"குறளுக்கு வெகுகாலத்துக்குப் பிற்பட்டன சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பதும், இவ்விரண்டும் இயற்றப்பட்டதன் பின்பே நற் றிணை, குறுந்தொகை முதலிய தொகை நூல் கள் தொகுக்கப்பட்டனவென்பதும் தெளிவா கின்றன."

"இப்போதுள்ள தமிழ் இலக்கியங்களுள் திருக்குறள் முற்பட்டதென்பது சாலும்; ஆயி னும், அதற்கு முற்பட்ட தமிழ்நூல் வேறென்று மில்லையோ என்னில், கூறுதும்; தொல்காப்பிய மென்னுந் தமிழிலுள்ள பேரிலக்கணம் திருக் குறளுக்கு முற்பட்டது. ஆராயுமிடத்துத் தொல் காப்பியர் கூறிய விதியின்படியே திருவள்ளுவர் தமது குறளை இயற்றி உள்ளாரென்பது விளங் கும். அதுவுமன்றித் தொல்காப்பியருடைய சொற்களையும் பொருளையும் திருவள்ளுவர் தமது குறளில் எடுத்தாண்டிருப்பதும் புலப் படும்."

—தி. த. கனகசுந்தரம் பிள்ளை பி.ஏ.

"நாயனர் தமக்கு முன்னுள்ள நூல்களிற் சிறந்திருந்த பொருள்களை எடுத்துக்கொண் டாராயினும் அவருடைய மதி நுட்பத்தினலே அவை ஒவ்வொன்றினிடத்தும் ஒட்டிக்கொண் டிருந்த மாசைத் துடைத்துப் பேரொளி வீசும் படி செய்தார். சமயவாதிகள் கூறியவற்றையும் அவ்வாறே சமயக்கறையை நீக்கி யாவருக்கும் பொதுவாகச் செய்து மென்மையும் நயமும் பொருந்தச் சுவையை யூட்டிச் செய்துள்ளார். குலப்பெருமை கூறுவோர் கூற்றுக்களையும் அங்ஙனமே எடுத்தாண்டு ஒழுக்கப் பெருமை யினையே மிகுத்துக் காட்டிக் குலச்செருக்கைக் கவிழ்த்தார். எப்பொருளும் அவர் கைப்பட்ட மட்டிலே பொன்னகைத் திகழ்ந்து விட்டது. அவருடைய மொழி, பொய்யாமொழியே; அஃது என்றும் பொய்த்தல் இல்லை. அன்றும் உண்மை இன்றும் உண்மை; இங்கும் உண்மை மற்றெங்கும் உண்மை. நாயனர் அருளிச்செய்த திருக்குறள் இரத்தின தீபம் போல்வது. அதன் ஒளி என்றும் நின்று

நிலவுவது. ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு மாணிக்கம் என்னலாம். அவை ஒவ்வொன்றும் விலை மதிக்கலாகாதவை.

"உணவுப் பொருள்களுக்குச் சுவை யூட்டுவதுபோலவும் நுகர் பொருள்கட்கு மணமூட்டுவதுபோலவும் புலவர் திருக்குறளைக் கொண்டு தம் நூல்களுக்குச் சுவையும் மணமும் ஊட்டுவர். வெற்றெனத் தொடுக்கும் தம் பாடல்களுக்குத் திருக்குறளால் அணி பூட்டுவர்.

"இம்மட்டோ, திருக்குறள் தோன்றியதும் மக்கள் எல்லோரும் அதனைத் தமிழ் மறை என்றும் பொது மறை என்றும் போற்றினர். அந்தணர் மூடிவைத்த ஆதிமறை எமக்கு வேண்டா என்றனர். வேதம் ஆற்றலிற் குறையுமென மறையாக வைக்கப்பட்டது. திருக்குறளோ, சொல்லச் சொல்ல ஆற்றலில் ஏற்றம் பெற்றது. "திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும். தமிழை அறியலாம்; உலகத்தை அறியலாம்; வாழ்க்கை உண்மையை அறியலாம்; மறுமையை அடையலாம்; வீடு பேறும் எளிதிலே தானே வரும். இதற்கு உயர் பிறப்பு வேண்டா; தீக்ஷை வேண்டா; சம்ஸ்காரம் வேண்டா; இடையிலே ஒரு குரு வேண்டா. ஆ! ஆ! இதன் பெருமையே பெருமை! இதனைப் பாடிய புலவரே புலவர்! இவரே தெய்வப் புலவர்! இவரே பெரு நாவவர்! இவரே முதற்பாவலர்! அந்தணர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்தார். எம் பெருந்தகையோ யாவர்க்கும் நீதி ஒன்றே என நாட்டினார்,'' என்று புலவர் புகழ்ந்தனர். மக்கள் களி துள்ளி ஆரவாரித்தனர். அன்றும் யாவரும் போற்றினர்; இன்றும் யாவரும் போற்றுகின்றனர்; என்றும் யாவரும் போற்றுவர். ஆனால், வேதத்தின் நிலை என்னே! அன்று அதனைப் போற்றினார் பலர்! இன்று அதைப் போற்றுவார் சிலர். நாளை அதனைப் போற்றுவார் இலர்.''

—மணி. திருநாவுக்கரசு முதலியார்.

''தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த 'திருக்குறள்' நூலின் இறுதிப் பகுதியாகிய 'இன்பத்துப்பால்' செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாய் உரிய அகப்பொருள் நாடக வழக்குப் பற்றிச் செய்யப்பட்ட தொன்றாகலின், அது, தொல்காப்பியப்பொருளிலக்கணம், நக்கீரனார் அருளிச்செய்த 'இறையனாரகப் பொருளுரை', மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையார்' முதலான நூல்களைப் பயின்றார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதிற் பொருள் விளங்குவதன்று. பரிமேலழகியார் அதற்கெழுதி யிருக்கும் உரையுஞ் சுருக்கமாகவே யிருத்தலால் அவ்வுரை கொண்டும் அதன் பொருளை எல்லாரும் விளங்கல் ஏலாது.''

—சுவாமி வேதாசலம்,
(மறைமலையடிகள்)

எம்மொழியினுஞ் செம்மொழியாய தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அற முதலியவற்றை யறிவுறுத்துவதிற் சிறந்து நிற்கின்றன என்பது முகமனாகாது. தென்றமிழ் மொழியிலுள்ள நூல்களுள் முனைப்பட்டு நிற்பது திருக்குறளே. இதனை மறுப்பார் யாரும் இல்லை. இத் திருக்குறள் திருக் கயிலாயத்திற்குச் சென்ற நூலில் (ஞானவுலா) மேற்கோளாகக் காணப்படுவது. எச் சமயத்தினரும் மறுக்கொணா உண்மைகளையுடையது.

எக்காலத்திற்கும் ஒத்துவரும் இயல்பினது. எண்ணில் வகைக் கவிஞரும் தம் நூல் ஏற்ற முற எடுத்த் சொல்லையும் பொருளையும் உடையது. பல்லுரைகாரரும் பரிந்தெடுத்த பாங்கினது. ஞான நூலார் பலர்க்கும் நல்கிய பொருளது. எவ்வறத்தினரும் தள்ளாருங் கொள்ளுந் தருமத்தது. ஏனை நூல்களை வாசிக்குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பலமொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது. வேற்று மொழி வல்லார் காணாத விளக்கத்தது. வேற்று மதத்தவரும் கண்டறியாத நுண் பொருளது. செந் தமிழின் மேலாந்தரத்தது. சொல்லினுலப்புறுச் சீர்த்தியது.

—திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்.

மொழிக்கேற்ற செய்தி; செய்திக்கேற்ற மொழி. தமிழுக்கேற்றது திருக்குறள். திருக்குறளுக்கேற்றது தமிழ். மாறா இளமை, மாறா மணம், மாறா அழகு, இம் மூன்றும், இவ் விரண்டினுள்ளும் இயைந்து கிடக்கின்றன தமிழால் குறள் சிறந்து விளங்குகின்றது. குறளால் தமிழ் சிறந்து விளங்குகின்றது. என்று கூறுதல் மிகையன்று.

—வெ. சு. சுப்பிரமணியாச்சாரி.

பழந்தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர். அவர்தம் வாழ்வுத் துறைகள், பலதிற அக நூல்களாகவும் புற நூல்களாகவும் பின் வந்தவரால் எழுதப்பட்டன.

அகமும் புறமும் அறிவுறுத்துவன மூன்று. அவை: அறம், பொருள், இன்பம் என்பன.

வாழ்வுக்கு அகமும் வேண்டும்; புறமும் வேண்டும். அகத்தின் உயிர் இல்லறம். புறத்தின் உயிர் பொருள். இல்லறத்துக்குப் பொருள் இன்றியமையாதது. பொருளை நேரிய முறையில் பெறுதற்குக் கல்வி, தொழில், அரசு முதலியன தேவை.

வாழ்வுக்குரிய அகத்தையும் புறத்தையும் விரித்துக் கூறும் நூல்கள் பல. அவைகளுள் சிறந்தது திருவள்ளுவர் அருளிய திருக்குறள்.

திருக்குறள், வாழ்வுக்கு ஆக்கந்தரும் மெய்ம்மைப் பொருளைக் கூறுவது. மற்றப் பொய்ம்மைச் சிறுமைகளைக் கூறுவதன்று. இத்தகைய ஒரு நூல் ஓர் இனத்தார்க்கு மட்டும் உரியதாகாது. அது, மன்பதைக்குரிய பொதுமையது.

இப்பொழுது உலகம் பலவகையில் பிரிந்து பிணங்கி இடருற்று வருவது கண்கூடு. இதற்குக் காரணங்கள் பல சொல்லப்படுகின்றன. அவைகளுள் ஒன்று, பிரிவு பிணக்குகளைப் போதிக்கும் நூல்கள் பரவுவதாகும், தற்கால இடரைப் போக்கி, இன்ப நுகர்தற்குப் பொது நூல்களைப் பயிலுவது நலம்,

திருக்குறள் தமிழ்மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொதுமறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது பழந்தமிழர் கொள்கை. இக்கொள்கை திருக்குறளாகப் பரிணமித்தது.

மன்பதைக்கென ஒரு பொது மறையை அருளிய திருவள்ளுவரைத் 'தமிழ் மணி' என்று மட்டும் வழுத்தாது, உலகுக்கு ஒளி வழங்கத் தமிழ் நாடளித்த 'வான் மணி' என்று வழுத்துவோமாக. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றார் பாரதியாரும்.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

"பல்வேறு வகைத் தொடர்பு பெற்றுளொருவனுக்கு ஒவ்வொரு தொடர்புடையார் மாட்டும் அவன் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் என்று கற்பிக்கும் நூலே யாவற்றினும் மேம்பட்ட நூலாகும்; அதுவே உயிர்களை உய்விக்கும் பான்மையுடையது. ஆயின், அப் பெற்றித்தாய நூல்தான் யாதெனில், அதுவே திருத்தகுசீர் தெய்வத் திருவள்ளுவர் அருளிய ஒப்புயர்வற்ற மாணிக்கத் திருக்குறளாகும்; என்னையோ வெனின், கருவி நூல்களும் கலைஞானங்களும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணையவாயினும், அவையனைத்தையும் தராசின் ஒரு தட்டிலிட்டு உயிர்க்குறுதி பயப்பதாய திருக்குறட் செந்தமிழ் நூலை மற்றோர் தட்டிலிட்டால் திருக்குறள் தட்டு பொருட்சிறப்பினால் தாழ்ந்து நிற்குமெனில் மிகையாகாது.

அறம், பொருள், இன்பம்-இம் முப்பொருளையும் ஓரிடத்தே இயையச் சேர்த்து விரிக்கற்பாலதை விரித்தும், சுருக்கற்பாலதைச் சுருக்கியும் அரும் பெறல் மணிகளை யொருசிறுபேழையினகத்துப் பொற்புற வைத்தாங்குக் கவின் பெற மிளிரு மிவ்வருமைத் திருக்குறள்போன்ற ஒரு நூல் எம்மொழியிலும் காண்பதரிது. எப்பாலவர்க்கும் எவ்வெக்காலத்தும் உயிர்க்குறுதி பயப்பனவாய பொருள்களை இன்புற விளக்கி அவரை யுய்விப்பதே இத்தொன்னூலின் மாட்சி.

—ஸ்ரீ சுவாமி விபுலானந்தர்.
யாழ்ப்பாணம்.

திருக்குறள் என்னும் நூல் கடவுள் ஒருவரே உண்டென்றும், எண்ணிறந்த உயிர்கள் உண்டென்றும், ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூன்று மலங்களும் உண்டென்றும், துறக்கம் நிரயம் உண்டென்றும் கூறுதலானும், தேவர்கள், அலகை, மறுபிறப்புக்கள் உண்டெனக் கூறுதலானும், முத்தியடைதற்குரிய சாதனங்களைக் கூறுதலானும், மனமொழி மெய்களாற் செய்யப்படும் வழிபாட்டைக் கூறுதலானும், பெத்த நீக்கமும் முத்திப் பயனும் கூறுதலானும், முத்தியிலும் முப்பொருளும் முதல்வன் உபகாரமும் உண்டென்று கூறுதலானும், அடிசேர் முத்தியாகிய சித்தாந்த முத்தியைக் கூறுதலானும் திருவள்ளுவ நாயனர் சித்தாந்த சைவர் என்பது தேற்றம்.

—ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள்.

திருவள்ளுவரின் மகிமை தமிழ்நாட்டிலல்லாமல் மற்றத்தேசங்களுக்கும் நன்ருய்த் தெரியும். அப்படிப்பட்ட மகானின் தினத்தை அவரது நாட்டில் இதுவரையில் கொண்டாடாமலிருந்தது நாட்டிற்கே ஒரு பெரிய குறை. இனிமேலாவது தமிழ்நாட்டில் வருஷந்தோறும் இந்நாள் கொண்டாடப்படும் என்று நம்புகிறேன்.

—டாக்டர் ப. சுப்பராயன்.

திருக்குறள், நூல் அமைப்பாலும் உரைச் சிறப்பாலும் மிகவும் உயர்வுடன் விளங்குகின்றது. காவியம். சரித்திரம், நீதிநூல் எனும் நூற்பகுதிகளில் நீதிநூலியற்றல் அருமையாகும். பழைய நூல்கள் சிறப்பியல்புடன் பொலிகின்றன. தற்கால ஸ்தல புராணக் குப்பைகள் ஒருவகை அமைப்புமின்றித் தமிழ் நலனுமின்றி, ஒழுக்க நெறிக்கு மாறுபாடு செய்யும் வகையில் வழுப்பட மாறுபட்ட முறையில் தெளிவின்றி எழுதப்பட்டிருக்கின்றன. காமந்தகன், கௌடல்யர் ஆகியவரின் சம்ஸ்கிருத அர்த்த சாஸ்திரங்களினும் குறள் மிகச் சிறப்புடையதாக விளங்குகின்றது. அவை பொருள்களை மிகைபடக் கூறுகின்றன. ஆனல், குறள் வரையறை செய்து எழுதப்பட்டிருக்கின்றது. நூலின் ஒழுங்கு பெரிதும் பாராட்டற்பாலது. ஆசிரியர், ஒவ்வோர் இயல்பையும் அழகாக வகுத்துரைக்கின்ருர். இலக்கணங்களை இனிது எடுத்துக் காட்டுகின்ருர். பயனை விளக்குகின்ருர். எதிர் மறையாகத் தீங்கினை எடுத்துரைக்கின்ருர். உவமவணி, தன்மை நவிற்சியணி இரண்டினையுந் திறம்படப் பல இடங்களில் விளக்குகின்ருர். அகப் பொருட் சுவையில் திருக்குறள் மிகவும் மேம்பட்டு விளங்குகின்றது.

இனித் திருக்குறளில் ஒரு சிறப்பான பொருளை ஆராய்வோம்: அது குறளில் ஆரியர் ஆசாரம், வேத வழக்கு ஆகியவை உண்டா இல்லையா என்பதே. தமிழில் வடசொற்கள் தொல்காப்பியர் காலத்திலேயே கலந்துவிட்டன. அப்பொழுதே வடசொற் கலப்பிற்கு இலக்கணமுஞ் செய்யப்பட்டிருக்கிறது. பழைய நூலான கலித்தொகையில் "சடை" என்ற வடசொல் வழங்கப்பட்டிருக்கிறது. ஆரியர் ஒழுக்கங்களையும் வேத வழக்கினையும் சில நூல்கள் நீண்ட நாளாக ஏற்றே வந்திருக்கின்றன. பிற்காலத்து நூலாகிய திருக்குறளில் வள்ளுவனர் தமிழர்க்கு ஒத்த ஆரியக் கொள்கைகளை எடுத்து ஆண்டிருக்கின்ருர். திருக்குறள் ஆரிய வழக்கொடு உடன்பட்ட நூலே. தனித்தமிழர் கொள்கைகளைக் குறிப்பது மட்டுமன்றி, ஆரிய வழக்குகளையும் எடுத்தாளப் பின் வாங்கவில்லை. எடுத்துக் காட்டாகப் பல குறள்களைக் குறிப்பிடலாம். "அவி சொரிந்தாயிரம் வேட்டல்" எனுங் குறளில் அவ்வாரிய வழக்கின் பெருமையினை நினைவு கூர்கின்ருர். "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்" எனுங் குறளில் ஆரியர் பெருமை கூறப்பட்டிருக்கின்றது. "மறப்பினும் ஓத்துக் கொளலாகும்" எனுங் குறளில் பார்ப்பனர் நிலை குறிக்கப்படுகிறது. "தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்" எனுங் குறளில் ஆரியரது இறுதிக் கடன் குறிக்கப்படுகிறது. வாழ்நாளின் பின் மறுபிறப்பு உண்டென்பதையும், இறந்தார்க்குச் செய்கடன் குறித்தும் இக்குறள் எடுத்துரைக்கின்றது.

—பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

பெருங்காப்பியங்களால் அறியப்படும் நீதிகளைச் சுருக்கமாகக் கூறும் அழகினைப் பெற்றிருத்தலால் இதன் செய்யுட்கள் காப்பியப் பண்பாகிய பாவிக அணிக்கு மாறனலங்கார உரையாசிரியரால் உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளன. எல்லா நாட்டினருக்கும் எல்லா மதத்தினருக்கும்எல்லாக்கொள்கையினருக்கும் இன்றியமையாத வாழ்க்கை ஒழுக்கங்களை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமை வாய்ந்தது இந்நூல்.

தமிழ்நூல்களிற் சிறந்தன இவை யென்று கூறுகையில் இலக்கணக்கொத்துடையார் திருக்குறளை நடுநாயகமாக வைத்திருக்கிருர்.

இந்நூலிலுள்ள பாக்களைத் தங்கள் தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டு ஒழுகி வந்த பெரியோர்கள் பலர்; எனக்குத் தெரிந்தவர்களுள் கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாக இருந்த ராய்பகதூர் தண்டலம் கோபலராவ் அவர்களும், என்னுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களும், கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்ந ஸ்ரீ சி. தியாகராஜ செட்டியாரவர்களும், ராய்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியாரவர்களும் முறையே,

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

" இறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

" எண்பொருள வாகச் செலச்சொல்லித்
நுண்பொருள் காண்ப தறிவு" [தான்பிறர்வாய்

" பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ற தவர்"

என்னும் குறட்பாக்களைத் தங்கள் தங்கள் வாழ்க்கைக்குக் கடைப்பிடியாகக் கொண்டு ஒழுகிவந்தார்கள்.

—மகாமகோபாத்யாய தாட்சிணாத்யகலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்,

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக் குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல்களுள் ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங்காலம் பிற பலநூலும் வழக்கிழந் தொழியவும், என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

எனவே சங்கப் புலவர் பலராலும் எடுத் தாளப்படும் குறள் அவர் தமக்குக் காலத்தான் முந்தியதாதல் ஒருதலை. அன்றியும் கடைச்சங் கப் புலவரான சாத்தனார் 'பொய்யில் புலவன் பொருளுரை'யெனவும், ஆலத்தூர் கிழார் 'அறம் பாடிற்றே' எனவும் குறளையும் அதனா சிரியரையும் போற்றிப் பேணக் காணும் நாம் இப்பழம்புலவராற் குறள் மெய்ம்மறையென வும், அதனாசிரியர் பொய்யா அறக்கடவுளென வும் பாராட்டப்படுதற்கு வள்ளுவரின் மெய்ப் பெருமை அப்புலவருக்கு வெகு நீண்ட காலத் துக்கு முன்னே நிலைபெறலடைந்திருக்க வேண்டுமென்பதை எளிதிற்றெளியலாகும். நமக்குக் கிடைக்கும் சங்க நூல்களெல்லாம் கடைச்சங்கப் புலவராலேயே இயற்றப்பட்டன எனக் கொள்ளற்கும் இல்லை, சில புறப்பாட் டுக்களும் கவிகளும் இடைச்சங்கப் புலவரா லேனும் எனைத்தானும் கடைச்சங்கத்துக்கு முற் பட்ட புலவராலேனும் ஆக்கப் பட்டிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின் றனர்.

அவர் நூல்களிலும் குறள் எடுத்தாளப்படுத லால் வள்ளுவர் கடைச்சங்க கடைக்காலத்தவரு மில்லை; முதலிடைக் காலத்தவருமில்லை; அச் சங்கத்துக்கு நெடும் பல்லாண்டுகட்கு முன் பிருந்தவராவரென்பது இனிது போதரும்.

திருக்குறள் அற நூலாகவே, அறத்தின் ஒரு பகுதியான நீதிகளை மட்டுங்கூறும். வடமொழி நூல்களின் வழிநூலாக வள்ளுவர் குறளை இயற்றினர் என்பது பொருந்தாக் கூற்றாம்.

இன்னும் ஆரிய தரும சாத்திர முறை வேறு, தமிழற நூன்மரபு வேறாகும். இரு முறைகளை யும் ஒத்துணர்ந்த வள்ளுவர் திருக்குறள், தமிழ் மரபு வழுவாது பொருளின்பகுதிகளான அகப்புறத் துறையறங்களை மக்கள் வாழ்க்கை முறைக்காமாறு ஆராய்ந்து அறுதியிட்டு எடுத்து விளக்கும் தமிழ்நூல்.

தமிழ் மரபும் ஆரியர் சம்பிரதாயமும் அறிந்த பரிமேலழகர் தம் குறளுரையில் ஆங்காங்கே இவ்விருபெரு வழக்குகளின் இயைபும் முரணும் எடுத்துக்காட்டிச் செல்லுமழகு பாராட் டத் தக்கது. தமிழிற் பெருமையுடைய அனைத் தும் ஆரிய நூல்களினின்று திரட்டப்பட்டிருப் பதாகக் காட்டிமகிழ்வார் சிலர்க்கன்றி, நடுநிலை யாளருக்கு வள்ளுவர் குறள் தமிழில் தனி முத லற நூலே யாகுமென்பது வெள்ளிடை மலை யாம்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்,
எம். ஏ., பி. எல்.

"திருவள்ளுவர் காலம்—கடைச் சங்கத்தார் காலம்; அஃது, இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடத்துக்கு முன் என்பர்.

"இத் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிக் கல்லாடத்திலும் மணிமேகலையிலுங் கூறியிருத்தலாலும், இறையனாரகப்பொருளி னது உரையில் திருக்குறட் பாக்கள் எடுத்து ஆளப்பட்டிருத்தலாலும், இந்நூல் கல்லாடம், மணிமேகலை, அதனோடு சம காலத்ததாகிய சிலப்பதிகாரம், இறையனாரகப்பொருளுரை என்னுமிவற்றிற்கு முந்தியதென நன்கு அறியப்படுகின்றது.

"இந்நூல் செய்கின்ற காலத்திற்கு இலக் கண நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமாத லாலும், 'முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி' என்ற தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தின்படி தொல்காப்பியம் அகத்தியத் தின் வழி நூலாதலாலும், பிறர் கூறிய நூல் கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையாலும், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்ற ளவும் உளதாதலாலும், தொல்காப்பியத்திற்

கூறிய இலக்கணமே இதற்கு இலக்கணமென்று உணர்க.''

—V. சடகோப ராமாநுஜாசாரியார்,
—சே. கிருஷ்ணமாசாரியார்.

''ஒரு சமயத்தையும் சாராது பொது நூலாய் மூன்று புருடார்த்தங்களையும் யாரும் பகுத்து ணர்ந்து நற்கதி பெற உலகிலெங்கும் எப் பாஷையிலும் கிடையாத இரத்தினச் செப்புப் போன்ற சிறந்த நூல் இதுவே. சகல வேத உபநிடதங்களின் சாரம் இதுவே, எச்சமயத் தோரும் சிரமேற் கொண்டு களித்துப் போற்று நூல் இதுவே. இதற்கிணையான முதல் நூல் எங்கும் எப்பாஷையிலும் இல்லை.

''உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டி யன் மதுரையில் அரசாண்ட காலத்தில் இற் றைக்கு 1850 வருடங்களுக்கு முன் திருவள்ளு வர் இவ்வுத்தர வேதமாஞ் சிறந்த நூலை யரங் கேற்றுவித்தனர். இவர் தாமாகவே அனைத் தையும் உணர்ந்தவர்; யாரிடத்தும் கல்வி பயின்றவராகத் தெரியவில்லை. இவர் காலத்தி லேயே இவர் நூல் எல்லாராலும் போற்றப் பட்டது. கடைச்சங்கமிருந்தபோது கடைசியாக அரசு செய்தவன்றான் உக்கிரப் பெருவழுதி. சிலப்பதிகார நூற் காலம் 18 நூற்றாண்டு களுக்கு முன்னையதாம். மணிமேகலை அதற்குப் பின் உண்டாயது. திருக்குறள் இவ்விரண்டு நூல்களுக்கும் முற்பட்டதென்பது இலங்கையி லாண்ட கயவாகுவின் சரிதத்தால் மகாவம்ச மென்னும் நூலில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் காலம் இன்றைக்கு 1850 வருடங் களுக்கு முற்பட்டதென்பது நிச்சயம். ஏலேல சிங்கரென்னும் பிரபு ஒருவர் மயிலையில் கப்பல் வியாபாரம் செய்துவந்தார். இவர் திருவள்ளு வரின் நண்பர். இவ்வேலேல சிங்கர் 2000 வருடங்களுக்கு முன் சோழ மண்டலத்தி லரசாண்ட ஏலேல சிங்கன் என்னும் அரசன் மரபினர். அவ்வரசன் இலங்கையை வென்றி கொண்டு அரசாண்டவன்.''

''இல்லறம் துறவறம் என்னும் இரண்டு மார்க்கத்தையும் நன்குணர்ந்து அவைகளை மாந்தர்க்குபகரித்தவர் திருவள்ளுவரே. இல்ல றத்திற்கு அன்பே முக்கியமென்பதையும், துற வறத்திற்கு அவாவின்மையே முக்கியமென் பதையும் இவர் சித்தாந்தம் செய்துள்ளார். இஃது இவரது தெய்வப் புலமையை இனிது விளக்குகின்றது.

குறளில் நிரூபிக்கப்பட்டுள்ள நீதி விஷயங் கள் கேட்பவர் நெஞ்சினுள் பசுமரத்தாணி போல் பதிந்து பயன் தருவனவாகின்றன. திருவள்ளுவரின் போதனைத் திறமும் நியாய நிரூபணவல்லமையும் இவ்வுலகில் எங்கும் கிடைப்பனவல்ல. கலைமகள் காந்தனான பிர மனே என்று சொல்லத்தக்கவர் திருவள்ளுவ ரெனில் அவர் கலாவல்லமைக்கிணை எங்கேனு மிருக்குமா? இராதென்பது நிச்சயமே.

திருவள்ளுவரைச் சிலர் அருக சமயத்தவ ரென்பர். வேறு சிலர் சைவரென்பர். பின்னுஞ் சிலர் வைணவரென்றும் சொல்லத் துணிவர். இப்பல துணிவிற்கும் ஆதாரங் காட்டுவாரு முளர். எச்சமயத்தையும் நாடாது பொதுநூல் செய்த இவரை ஒரு சமயத்திலும் சம்பந்தப் படுத்தாது வேதாந்த சித்தாந்த நெறிகளையும் கடந்த சமரச ஞானியென்று கொள்வதே சிறப் புடைத்தாம். சமயப் பற்றில்லார்க்கே சமயா தீதப் பொருள் கிட்டும் என்பதற்குத் திரு வள்ளுவரே சான்றாவர்.

கன்ம வியாபகத்தையும் மறுபிறப்பையும் ஊழையும் திருவள்ளுவர் எடுத்துக் கூறுவ தால் மேற்கு நாட்டார் சமயச் சார்பும் உண் டெனக் கூறவகையில்லை.

இத்தகைய சிறப்புடைய குறளை எச்சமயத்தா ரேனும் தம் சமய நெறியையொட்டி எழுதப் பட்டதென்பாரேல், அவர் குறளை ஆதியோ டந்தம் பகுத்துணராது கூறினரேயாவர். வேத உபநிடதப் பொருள்களைப் பாஷியங்களைக் கொண்டு நன்குணர்ந்தாலும் உணரலாம்; குறளின் உட்கருத்தறிதல் கடினமாம் அதன் வழியிலிறங்கி மனப்பூர்வமாய் உழைப்பார்க்கே இவ்வுண்மை புலப்படும்.''

—திவான்பஹதூர், வி. கிருஷ்ணமாச்சாரியார்.

''ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமான சொற்களிற் சுருக்கமாகக் கூறும் இந்நூல், இக்காலத்துத் தமிழ் மக்க ளால் பாராட்டப்படும் அளவு பயிலப்படாதது பரிதாபமே.''

—அ. மாதவையா.

''மணிமேகலை எழுதப்பட்ட காலத்திலேயே திருக்குறள் உலகில் பலராலும் ஒப்பப்படத் தக்கதோர் உறுதி நூலாய் விளங்கியது; அதனைப் பாடிய திருவள்ளுவனார் தெய்வப் புலவராகப் பாராட்டப்பட்டனர். இந்நூல்

எழுதப்பட்டுக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் யாண்டுகள் கழிந்தன. இதற்கிடையே உண்டாகி யழிந்த ராஜ்யங்களும் ஜாதிகளும் பல; தோன்றி மறைந்த நூல்களும் பல; எனினும் இக்குறள் அன்றே போல் இன்றும் சிறப்புடன் விளங்குகின்ற நூலாயிருக்கிறது ...... திருக்குறளில் தலைமுதல் அடிவரையும் பதந்தோறும் குறள்தோறும் அத்தியாயந்தோறும் காணப்படும் அழகுகளை விரிப்பதெனின் இது இடமாகாது."

—ஞா. சா. துரைசாமி பிள்ளை.
("தமிழ் இலக்கியம் : சங்ககாலம்")

"திருவள்ளுவர் தெய்வப்புலமை வாய்ந்தவரென்பது திண்ணம். அவர் பெரும்புலமையும் நுண்ணறிவும், அரிய பொருள்களைச் சிறிய செய்யுளில் அமைத்துக்கூறும் ஆற்றலும் படைத்தவர். அவர் கூறியருளிய அறநூலொன்றே உலகத்தார் அறிந்துய்ய வேண்டிய அறங்களை யெல்லாம் தெள்ளிதின் விளக்கிக் கூறுவது; அரிய பொருள்களை ஆடியிற் காட்டும் பொருள்போல் அமைத்துக் காட்டுவது; ஒப்புயர்வற்ற உவமைகளைப் பொருள்களுக்கு ஏற்றவாறு பொருந்தக்கொண்டு விளங்குவது."

"திருக்குறள் என்னுந் தெய்வத் தமிழ் மறைநூல் அறம், பொருள், காமம் என்னும் முப்பகுதியினை உணர்த்துவதோடு வீட்டைப்பற்றியும் இலைமறைகாய்போல் விளக்குவதாகும். இத்தனை தமிழ்மக்களே யன்றி மற்றையோரும் நன்கு உணர்தற் பொருட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இது ஒவ்வொரு வகுப்பினர்க்கு ஒவ்வொரு விதமாகக் கூறும் அறநூல்களைப்போல் அமையாது எவர்க்கும் ஒரு படித்தாய் அவ்வறங்களைத் திண்ணிதின் விளக்கவல்லது. ஆதலின் தமிழ் மக்கள் இந்நூலைப் பலவகையானும் போற்றக் கடவர்"

—பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்.

இவை தோன்றியகாலத்தே தோன்றிப் பொருளில் இவை யாவற்றிற்குஞ் சிறந்ததும், தமிழ் எனு மாது உச்சியிற்றரிக்குஞ் சூடாமணி யெனச் சொல்லக் கூடியதும், தமிழின்பெருமையை எங்கும் பரவச் செய்ததும், சாதி பேதம் மத பேதமின்றி யாரு மெக்காலத்துங் கைக்கொள்ளக் கூடியதும், தமிழர்க்குப் பெருஞ் செல்வமாயதும் திருவள்ளுவரியற்றிய திருக்குறளே. தமிழ் வேதமென்னும் பெயருமிதற்குத் தகுந்ததே. இவ்வித நூல் வேறொரு பாஷையிலும் இல்லையாயின் இதனுற் றமிழுடையும் பெருமை இவ்வளவிற்றென எடுத்துரைக்கற் பாற்றோ! இற்றைக்காயிர வருடங்கட்குமுன் குறள் போன்ற ஒரு நூல் இயற்றிய தமிழர் மிகவுஞ் சீர்திருந்தியிருந்தனர் என்பதில் ஐயமில்லை. சைவர் இவரைச் சைவரென்பர். வைணவர் வைணவரென்பர். போப் (Dr. Pope) துரை கிறிஸ்தவர் என்பர் போலும். சமணர் இவரைச் சமணரென்றே கூறுவர். இக்காலத்திலேயே திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலிய நிகண்டுகளும், பவணந்தி முனிவரியற்றிய நன்னூலும் எழுதப்பட்டன எனக் கூறுவர். இத்துடன் தமிழணங்கின் வாலிபதிசையும் பூர்த்தியாயிற்றெனக் கூறல் வேண்டும். இவற்றிற்கும், இவற்றிற்குப் பின் வரும் மற்றைய நூல்களுக்குமுள்ள பேதத்தை நோக்குங்காலத்து, இவ்விரு காலத்துக்குமிடையில் இருநூறு முந்நூறு வருடங்கள் சென்றிருக்க வேண்டுமெனத் தோற்றுகின்றது. ஆயின் இடையேசென்ற, இக்காலத்து நூல்கள் எழுதப் படவில்லையோ, இல்லையேல் அது யாதுகாரணம் பற்றியோ, இவை யார்க்கும் புலப்படா.

—தி. சரவணமுத்துப்பிள்ளை, பி. ஏ.

இத்திருக்குறட்பொருள்களையுஞ் சொற்களையுந் தத்தம் நூலுரைகளிற் கொள்ளாத சான்றோர் யாவர்! சமய வாதியர் யாவர்! சிந்தாமணிகாரர், சிலப்பதிகாரகாரர் முதலிய உரையாசிரியருங் கொள்ளுவர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியருங் கொள்ளுவர். கம்பநாடர் ஏரெழுபதிலே "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்—தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்—எழுதுண்ட மறையன்றோ" என்பர். திருக்கை வழக்கத்தில் "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே—கொடுக்க விசைந்த குளிர்க்கை" என்பர்.

—சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர்,
(தமிழ்ப்புலவர் சரித்திரம்.)

திருவள்ளுவர் இறந்துமுயிருடனிருக்கின்றனர். எவ்வெவரானும் திருக்குறள் மேற்கோளாகப் பாராட்டப்படுகின்றது. சாதி வேற்றுமையானுண்டாகும் பொருமைக்குணம் இந்நூலின்கண் எவரும் பாராட்டுவதில்லை. உலகில் வழங்கும் பல பாஷைகளில் இந்நூலை

மொழிபெயர்த்திருக்கின்றனரெனின், இதன் பெருமை எடுத்துக் கூறுமலே விளங்கும். மேலான விஷயங்களை மிகவுஞ் செறித்து இரண்டு அடிக்குளமைத்துப் பாடியது ஆசிரியர் திறமையை மிகுத்துக் காட்டுகின்றது. திருக்குறளின்கண் வடமொழிப்பதங்கள் அதிகமாய் உபயோகிக்கப்படவில்லை. நூல் முழுமையும் ஐம்பது அல்லது அறுபது வடமொழிப் பதங்களே உள. மற்றவை தனித் தமிழ்ப் பதங்களே. இதுவே நூலின் பழமையை விளக்குகின்றது. வடமொழிப் பதங்களை உபயோகிப்பதால் தமிழ்ப் பதங்களையே கொண்டு ஒரு நூலியற்றல் முடியாதென்றும், அவ்வாறு செய்யினும் நடையின் இனிமைகெடும் என்றும் கூறும் புல்லறிவாளரது மருட்கை தீர்க்கும் மருந்துபோலும் இந்நூல். தற்காலத்தில் வழங்கும் பயனுள்ளவைகளையே ஏற்றுக் கோடல் என்னுங் கொள்கை இவர் நூலின்கட் காணப்படுகின்றது வாய்மையாதிய நற்குணச் சால்புகளை, நன்மை தீமைப் பண்புகளைக் கருவியாகக் கொண்டு அளக்கின்றனர். இதனை யாவரும் உற்று நோக்குவாராக. இக்காலத்திற் சொற்களில் மட்டும் ஒழுக்கத்தைக் கவனிக்குஞ் சிலர் வள்ளுவர் காமத்துப் பாலைப் பற்றிக் கூறியது மடமையென இகழ்வராயினர். இப் பாகத்தைச் சிறுவர்கள் படிக்க வேண்டுவதவசியமன்று. இப்பகுதிக்கண் ஆசிரியர் கூறுவனவெல்லாம் மிகவுஞ் சிறந்த கருத்துகளமைந்தனவா யிருக்கின்றன. ஐரோப்பிய பாஷைகளில் இப்பகுதியை மொழிபெயர்த்த மேற்றிசை வாணருட் பெயர் போன ஒருவர்,

> "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
> நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

என்ற குறளைப் பெரிதும் வியந்து சொல்கின்றனர். இந்நூல் யாவராலும் சாதி வேற்றுமையின்றிப் பாராட்டப்படுமென்பதிற் சந்தேகமேயில்லை.

—சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ.

உலகப் பொதுமக்களின் 'இம்மை வாழ்க்கையை மிக உயர் நிலையில் நிறுவி, மறுமைப் பயன்களைப் பெற்றுச் சிறப்புற வழிகாட்டிப் பல்வேறு வகைப் பிளவுப் பிணங்கிற்கு இடந்தரும், சாதி சமய முரண்களை அகற்றி மெய்ந்நெறியிற் செலுத்தி எந்நிலையினும் இன்பம் பெறும் வழிகள் கூறி, அறிஞர்கள் யாவரும் புகழ்ந்து போற்றித் துதிக்கும் இணையற்ற பெருஞ் சிறப்புற்று, தமிழ்மொழிக்கும் தமிழருக்கும், ஏற்றந் தருதற்கென்றே தோன்றிய ஒரு பெருநூல் திருவள்ளுவர் திருக்குறளேயாம். இறைவனருளிய தெனப்படும் வடமொழி மறையினும் சிறந்தது இத் தென்மொழித் திருமறை எனினும் ஒக்கும்.

—புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2000 வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலை சிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

வாழ்க்கையில் என்றும் அழியாமல் நிலை பெற்ற உண்மைகள் நிறைந்த நூல் திருக்குறள். மக்களில் மிகப் பெரும்பான்மையோர் கடைப்பிடிக்கவேண்டிய இல்லற வாழ்க்கையின் பெருமையை வலியுறுத்தும் நூல்களில் திருக்குறளைவிடச் சிறந்த நூல் எந்த மொழியிலும் இல்லையென்று துணிவுடன் சொல்லலாம்.

—சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

"திருக்குறளானது தமிழ்நாடெங்கும் மிகச் சிறப்பமைந்த நூலென்று புலவர்களும் தமிழ் நாட்டார் யாவரும் மதிக்கின்றூர்கள். எனினும், இக்காலத்தில் அநேகர் அதை வாயினல் புகழ்ந்துரைக்கின்றது மாத்திரமன்றி அந் நூலின் கருத்துக்களையும் நோக்கங்களையும் உய்த்துணர வேண்டும் என்று விரும்பிப்படிக்கின்றிலர் என்பது மிக விசனப்படத் தக்கது. அந்நூலின் நல்லுரைகள் திருவள்ளுவர் காலத்தின் சந்தர்ப்பங்களுக்குச் சம்பந்தமுள்ளன என்பது மாத்திரமல்ல, நிகழ் காலத்திலும் அதி சமயோசிதமா யிருக்கின்றனவென்பதற்கு ஐயமின்றே!"

—ரெவரெண்ட் எச். ஏ. பாப்ளி, எம். ஏ.

"திருக்குறள் நூலானது ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்குமுன் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரால் செய்யப்பெற்று மதுரையிலிருந்த மூன்றாவது தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றவொரு செந்தமிழ் நூல்.

"பெருமை, பெருமித மின்மை" என்று திருவள்ளுவர் கூறியாங்கு, பெருஞ் சிறப்புவாய்ந்த

திருக்குறள் நூலானது முதலடி நான்கு சீர்களாலும், ஈற்றடி மூன்று சீர்களாலும் அமைந்த சிறிய குறள் வெண்பாவில் ஆக்கப் பெற்றுள்ளது. அச் சீர்களை ஆக்குஞ் சொற்களும் கல்வித்திறன் கைவரப் பெறாத சிறுவர் சிறுமிகளும் எளிதில் ஓதும் வண்ணம் பெரும்பான்மையும் ஓரசை முதல் மூன்றசைகளுடைய எழுத்துக்களால் அமைந்துள்ளன. அதிற் காணப்படும் சில வடமொழிச் சொற்களும் முற்றிலும் வடமொழி உருவம் நீங்கித் தமிழ் மொழி உருவம் வாய்ந்தவை. அவ்வெழுத்துக்கள் குறிக்கும் ஒலிகளும் மெல்லிய ஒலிகள், உரப்பு ஒலிகளும் இளைப்பு ஒலிகளும், களைப்பு ஒலிகளும் அதிற் காணப்படுதல் அரிது. சொற்கூட்டங்களிலும் பொருள் விளங்குந் தன்மைக்குக் குறைவின்றி இடம் நோக்கிச் சொற்களும், சொற்றொடர்களும் பல குறட்பாக்களில் தொக்கி நிற்பனவா யுள்ளன. எந்தக் குறட்பாவிலும் யாதாமொரு சிறிய சொல்லுங்கூட 'நின்று பயனின்மை' என்னும் குற்றத்திற்கு உட்படாததாயுள்ளது. பல குறட்பாக்களில் ஒரு சிறு சொல் ஆணிச் சொல்லாயமைந்திருத்தலினால் அதனை நீக்கிவிட்டால் அவற்றின் பொருள் முற்றிலும் மாறிவிடும் தன்மையா யுள்ளது இவ்வாறு நூலினுடல் அமைந்திருத்தலினால் அஃது ஓதுதற்கு ஆற்றொழுக்கு நீர்போலத் தனை தட்டுதலின்றி ஒழுகிச் செல்லும் இனிமையை உடையதாய் விளங்கும் சீர் எளிமை, அசை எளிமை, சொல் எளிமை, ஒலி எளிமை, சொற்செட்டு, சொற்கூட்டச்செட்டு, ஒலிச்செட்டு, சொற்கிடக்கை முறை முதலிய உடற்றன்மைச் சிறப்புகளில் இந்நூலைப் போன்று விளங்கும் நூல் உலகிலுள்ள எந்த மொழி நூல்களிலுமில்லை. மேலே நாம் காட்டியபடி இந்நூலில் வழங்கும் சொற்கள் மிக எளியனவாயினும் ஒரு சிறிய ஆடியானது பல வளம் பொருந்திய ஒரு பெரிய மலையின் பொருள்கள் பலவற்றையும் தன்னுள்ளடக்கிக் காண்பார்க்குத் தெரித்துக் காட்டுதல் போல, எளிய கல்வியுடையார் முதல் அரிய கல்வியுடைய நுண்மாண் நுழைபுலவரும் தங்கள் தங்கள் அறிவளவிற்குத் தக்கவாறு அறிந்து உளங்கொண்டு நற்பயனடையும் பல சீரிய கருத்துக்களைத் தன்னுள் அடக்கி வெளிப்படுத்துந் தகைமையது.

உலகவாழ்வின் பயனாக மக்களால் அடையப் பெறும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களும் நூலிற் கூறப்பட்டுள்ளன. ஓர் ஆடவன் தன் இல்வாழ்க்கைத் துணைக்குப் பொருத்தமாயுள்ள ஒரு பெண்ணை அடைதற்கு ஏற்ற முறைமையைக் காமத்துப் பாலிலும், அவ்வில்வாழ்க்கையை அறநெறியில் நடத்தும் முறைமையை அறத்துப் பால் இல்லறவியலிலும், அவனுக்கு ஆரா இயற்கை அவாவோடு கூடிய அவ்வில் வாழ்க்கைச் சிற்றின்பத்திலுவர்ப்பு உண்டான பருவத்தில் பேரா இயற்கைப் பேரின்பம் அடைதற்குப் பொருந்திய துறவற வாழ்க்கையை அறத்துப்பால் துறவற வியலிலும் அவர் கூறியுள்ளார். இதனால் மக்கள் உலக வாழ்க்கைக்கு வேண்டப் படுவனவாயுள்ள அடிப்படை அறிவுண்மைகளெல்லாம் நூலிற் கூறப்பட்டுள்ளன என்பது நன்கு புலனாகும். ஆதலின் இந்நிலைச் சிற்றின்ப நூல், அறநூல், ஒழுக்க நூல், அறிவியல் நூல் (Philosophy), அரசியலறிவு நூல், உலக அறிவு நூல், மெய்யறிவு நூல், பேரின்ப நூல் ஆகிய நூல்களெல்லா மொன்று சேர்ந்து விளங்கும் ஒரு தொகுதி நூல் என்று நாம் கூறலாம். உலக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவா யுள்ள அறிவுண்மைகளெல்லாம், ஒன்று சேர்த்துக் கூறப்பட்ட திருக்குறள் போன்ற ஒரு தனி நூல் எம்மொழியிலுமில்லை.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரைக் கேள்வியாலேனும் அறியாத தமிழர் இலர் என்று நம்புகின்றேன். இவர் தமிழ் நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் அழியாப் பெரும்புகழ் கொண்டு வந்தவர். இவர் இயற்றிய நூல் ''குறள்'' என்னும் மூன்றெழுத்தால் அழைக்கப்படுவதாயினும் பற்பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு உலகப் பிரசித்தி அடைந்திருக்கிறது. இந்நூலின் மேன்மையின் காரணமாக இந்நூல் பொய்யா மொழி என்றும் தெய்வ நூலென்றும், பொது மறை என்றும், பல சிறப்புப் பெயர்களால் வழங்கப் படுகின்றது. மனித எண்ணங்களிலே மேன்மைபெற்ற மாசற்ற எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டது இப்பெருநூல்.

—திவான் பகதூர்

கே. தெய்வசிகாமணி முதலியார்.

'' இவ்வறநூலுள் முதற்பா அகரத்திற்றொடங்கி இறுதிப்பா னகரத்தின் முடிந்ததை

இது செந்தமிழ் நூல் என்பதற்கோர் அறிகுறி போல்வதாமென்க. வாழ்க்கை நெறி இனைத்தென முற்ற முடிய விளக்கும் நூல் இஃதென்பதும் அறிவுறுத்த இந்நூலின் முதற்பா,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.'

'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.'

என்வும் நிற்றல் காண்க. என்னை? அவ்விரு குறள்களையும் இணக்கி நோக்குழி, உயிர்களுக்கு முதல்வன் இறைவன் என்பதும், உயிர்கள் அவ்விறைவனடியைச் சாராது சிறிது பிணங்கி ஐம்புல இன்பங்களைத் துய்த்தலே வாழ்க்கை என்பதும், அதுவே சிற்றின்பமாம் என்பதும், பின்னர் அவ்வுயிர்கள் அவ்வைம்புல இன்ப நுகர்ச்சியைத் துறந்து இறைவன் திருவடியிற்கூடி ஒன்று கலப்பதே வீடு பேறும் என்பதும், அதுவே பேரின்பமாம் என்பதும் உணரக் கிடத்தலினென்க.''

—நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும், ஒன்றோடொன்று ஒட்டாதெழுந்து, காற்றிற் பறந்து முட்டிக்கொள்ளும் நான்கு புடிக்கட்டுகளாகக் கொண்டு தாவி ஏறி வானக் கோட்டைக்குள் புகமுயன்றனர் ஒரு சிலர். வித்தகச் சித்தர்கணத்தைச் சேர்ந்த தமிழரோ வீட்டைக் கண்ணிற் காணாத வேறு நிலையாக்கவோ, மற்றைய மூன்றைக் காற்றிற் பறக்க விடவோ விரும்பவில்லை. ''இன்பமும், பொருளும் அறனும் என்றுங்கு அன்பு,'' என்று அன்பாம் ஒன்றே உலகில் அறம், பொருள், இன்பமாய் ஒளிர்வதை விளக்கினர் தொல்காப்பியச் சித்தர். அவ்வன்புதான் வீட்டுநிலைப்பொருள் என்பதை, ''அன்பே சிவம்,'' என விளக்கினர் திருமூலச் சித்தர். இக்கொள்கையை விளக்குவதற்கே திருவள்ளுவச் சித்தர் திருக்குறள் எழுதியருளினர். இந்த வீட்டு நிலையிலேயே அந்த வீட்டுநிலையை அடைய வழி கூறுவாரே சித்தர்கள். வீடென்பது அன்பு வடிவாம் கடவுட் பேரொளி; அதனை ஆன்ம வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, மன நிலை என முப்பாலாய் வழங்கிவரும் உலக நிலையில் நின்று நோக்கும் போதுஅப்பேரொளி இம்முப்பட்டைப் பளிங்கினுள்ளே ஊடுருவி வந்து அறம், பொருள், இன்பம் என்ற பெயரோடு கண்ணையும் கருத்தையும் கவரும் மூன்று அழகிய நிறங்களாக விளங்குகிறது. ''மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்'', ''தூஉய்மை என்பது அவாவின்மை'', ''ஆராவியற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கைதரும்,'' ''அறனிழுக்காதல்லவை நீக்கி மறனிழுக்கா மானமுடைய தரசு.'' ''அறத்தான் வருவதே இன்பம்.'' என்று கூறுவது காண்க. காற்றிற் பறந்த மூன்றையும் அறமெனுங்கயிற்றால் இவ்வாறு ஒன்றாகக் கட்டிச் சிறப்பெனப் பெயர் பெறு வீடாம் அன்பினைப் பிழிந்து உலகிற்கு ஊட்டுகின்றார் வள்ளுவனார்.

''சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு''.

—ஈ த.இராஜேஸ்வரி அம்மையார்,

திருவள்ளுவர் கடைச்சங்கத்தார் காலத்திருந்தவரென்றும், அச்சங்கத்தார்முன் தம் நூலை அரங்கேற்றினரென்றும், அரங்கேற்றிய காலத்துச் சங்கப்பலகை மற்ற நூல்களைத் தள்ளி இவர் நூல் ஒன்றையுமே அங்கீகரித்ததென்றும் கூறுவர். சிலர் கடைச் சங்கத்திற்கும் சில நூற்றாண்டுகள் இவர் முற்பட்டவரென்று கொள்வர். மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார், பரசுராமன் காலத்து நிகழ்ச்சி யொன்றற்கு அக்காலத்தவர் கூற்றில் வைத்துத் 'தெய்வந் தொழாஅள்......எழுவாள்' என்னுங் குறளைக் காட்டலால், அச் சாத்தனார்க்குச் சில நூற்றாண்டுகளாவது இவர் முற்பட்டவராயிருத்தல் வேண்டு மென்பது பொருத்தமென்றும், சாணக்கியராகிய கௌடில்யரும்,அவரது சீடராகிய காமந்தகரும் எழுதிய அருத்த நூற்கருத்துக்கள் திருக்குறளுட் பலவிடங்களிலும் பயிலுதலால் அவர்கள் வாழ்ந்த கி. மு. நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னும் கடைச்சங்கத்திற்கு முன்னும் இவர் விளங்கியவராகலாம்.

—மு. இராகவையங்கார்.

சிலப்பதிகாரக்காலம் கி. பி. ௧௭௬. சிலப்பதிகாரத்துக்கு ஏறக்குறைய ௨௰௦ ஆண்டுகட்கு முன்னே திருக்குறள் இயற்றப் பட்டிருத்தல் கூடும்.

திருக்குறள் நூலுள் ''ஆவோடல்லது யகர முதலாது'' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு மாறாகிய சொல்லொன்றுங் காணப்படாமையாலும், நாற்குல முதலிய கொள்கைகள் திருக்குறளிற் காணப்படாமையாலும், முதுகுடுமியைப் பற்றிய புறநானூற்றுப் பாடலுள் 'யூப' முதலிய வடசொற்கள் காணப்படு

கின்றமையாலும், அச்செய்யுள் எழுந்த காலத்துக்கு முன்பேயே திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடுமாதலாலும், முதுகுடுமிகாலம் மிகப் பழைமை யுடையதாதலாலும், தொல்காப்பியத்திற்குப் பின் ஏற்பட்ட இலக்கியங்களுள் திருக்குறளே முதலாய நூல் என்று கருத இடமுண்டு. முதுகுடுமியின் காலம் நான்காம் நூற்றுண்டேயாயின், திருவள்ளுவர் காலம் அதற்கு முற்பட்டதாதல் வேண்டும். ஆகவே கி. மு. பன்னிரண்டாம் நூற்றுண்டிற்கும், கி. மு. ஐந்தாம் நூற்றுண்டின் முடிவிற்கும் இடையில், திருவள்ளுவர் நூல் தோன்றியிருத்தல் கூடும். அது கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கட்கு முற்பட்டதென்பது தெளிவு.

சிலப்பதிகாரக் காலத்துக்கு நெடுநாட்குப் பின்னிருந்த நக்கீரர் காலம் வரை ஆசிரியர் இருந்து உருத்திர சன்மரோடு சங்கப் பலகையில் வீற்றிருந்தாரென்று கொள்ளுதல் வரலாற்று முறைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறையனுரகப்பொருள் தோன்றிய காலத்தே உருத்திரசன்மரோடு ஆசிரியர் திருவள்ளுவர் ஒருங்கிருந்தாரென்று கொள்ளுமிடத்து, அக்காலத்தே நக்கீரர் முதலாயினேர் இருந்தாரென்று கொள்ள இடமில்லை. ஆனுல் அக்கொள்கைப்படி திருவள்ளுவர் காலம் கி. மு. நாலாவது நூற்றுண்டு என்று கருத இடமுண்டு. ஏனெனில் இறையரனுகப் பொருள் தோன்றிய காலம் பன்னிரண்டாண்டு நிலைபெற்றிருந்த ஒரு பஞ்சத்தின் முடிவு காலமென்று அந்நூலுரையால் விளங்குகின்றது; அத்தகைய பஞ்சம் கி. மு. நான்காவது நூற்றுண்டில் நிகழ்ந்ததாக வரலாற்றுசிரியர்கள் கருதுகின்றுர்களாதலினென்க.

பண்டைத் தமிழ்மறைகள் மறைந்தபின் அவை கூறிய அறம்பொரு ளின்பம் வீடென்னும் நான்கினையுந் தெள்ளிதிற் றெரிக்கும் பொதுமறை திருவள்ளுவர் நூலேயா மென்றுணர்க. இந்நூலுட் கடவுட் கொள்கைபற்றிய சொற்கள் யாவுஞ் செந்தமிழிலே யமைந்து நூலின் பொதுத் தன்மையை விளக்குவனவாயிருக்கின்றன. பிரமம், ஆன்மா, தத்துவம், ஞானம், வருணம், ஆசிரமம், வேதம், சாத்திரம், யாகம், விட்டுணு முதலிய சொற்கள் இதன்கட் காணப்படவில்லை. இல்லறம் துறவறமென்று மக்கள் வாழ்வு பிரிக்கப்பட்டதேயொழிய வடநூலிற் கூறும் நால்வகை நிலைபற்றி அப்பகுப்பு அமையவில்லை. நால்வனக்க் குலமும் இந்நூலுள் விதந்தோதப் படவில்லை. பண்டைத் தமிழரது கடவுட் கொள்கையை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்நூலே தக்க கருவியாம்.

ஆரியக் கருத்துக்கள் சிலவே இந்நூலுட் காணப்படினும், அவை பெரிதுந் தழுவிக் கொள்ளப் படவில்லை. அவற்றுள் வேள்வி ஒன்று.

> "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணுமை நன்று"

என்றது காண்க.

'மானம்' என்னும் அதிகாரத்தில்,

> "இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
> குன்ற வருப விடல்"

என்னுந் திருக்குறளுக்கு உரை கூறுமிடத்து ஆசிரியர் பரிமேலழகர்,

'இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க' என்னும் வடநூன் முறையை மறுத்து உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க என்பதாம்" என்றது காண்க. இவ்வாறே

> "ஈன்றுள் பசிகாண்பா னுயினும் செய்யற்க
> சானறேர் பழிக்கும் வினை"

என்ற விடத்தும் ஆரிய அறநூற் பொதுவிதி வினைத்தூய்மை யுடையானுக்கு எய்தாமையைப் பரிமேலழகர் விதந்தோதினமை காண்க. அறநூற் பொதுவிதி யாவது யாதெனில், "இறப்ப மூப்பினராய இருமுது குரவருங், கற்புடை மனைவியுங், குழந்தையும் பசியான் வருந்து மெல்லைக்கண் தீயன பலவுஞ் செய்தாயினும் புறந் தருக" வென்பதாம். (ஆசிரியர் பரிமேலழகருரை.)

சாணக்கியரும் சுக்கிரநீதி நூலுடையாரும் தத்தம் பொருள் நூல்களிற் கள்ளினைச் சிறிதள வுண்ண இடங்கொடுத்திருக்க, ஆசிரியர் திருவள்ளுவனர் பொருட்பாலுட் கள்ளுண்ணுமையை நன்கு வற்புறுத்திப் போந்தனர். சுக்கிர நீதியுள் முதல் அத்தியாயம் ௬0௬-௬௬௬ ஆம் சுலோகங்களில் சிறிதளவு உண்ணப் படுங் கள் மதி நுட்பத்தையுந் தருவதாகும் என்றது காண்க, ஆசிரியர் திருவள்ளுவர்,

"துஞ்சினர் செத்தாரின் வேல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

என்றது உற்று நோக்கத்தக்கது.

—கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ , எம். எல்.
தாகூர்சட்ட விரிவுரையாளர்.
("தமிழ் இலக்கிய வரலாறு")

மானுடம் பெற்றார் அடைதற்கான உறுதிப் பொருள்களை நுணுகி ஆய்ந்து, திட்பமாகவும் விளக்கமாகவும் அனுபவ மொழிகளால் எழுதிய நூலாகிய திருக்குறளை ஒப்பதும் மிக்கதும் எம்மொழியினுமில்லை. காலத்தாலும், இடத்தாலும் மாறுபடாத உண்மைகளைக் கூறுவது. அறுவகைச் சமயத்தோரும் அவ்வவர் பொருளாகப் போற்றும் மாண்புடையது; சிந்தைக் கினியது; செவிக்கினியது; நந்தாப் புகழுடையது; தீந்தமிழ்ச் சுவை ததும்புவது; நவில்தொறும் நன்னயம் பயக்கும் நீர்மையது.

—செந்தமிழ்ப் புரவலர்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,
பி. ஏ., பி. எல்.

திருக்குறள் என்னும் இந்நூல் எஞ்ஞான்றும் உண்மை நலம் உடையதாகவும், அழியாப் பெற்றித்தாகவும் மிளிரக்கூடிய நூல்களில் தலைசிறந்தது. தமிழ் மொழிக்குத் தனித்தெய்வமாக இலங்குவதும் திருக்குறளே. இந்நூல் யார்மாட்டும் எஞ்ஞான்றும் யாண்டும் இருத்தல் அவசியமாகும். ஏனெனில், இதன்கண் அடங்கியுள்ள பாக்களை நவில்தொறும் நவில்தொறும் நயங்கள் நவநவமாகப் புலனாகும்; நுணுகி ஆய ஆய அவற்றின் ஆழமும், பொருட்புதையலும் வெளியாகும். இந்நூல் துன்புறுங்காலத்து மனவமைதி தந்து, நல்வழி உய்க்கும்; இன்புறுங் காலத்துச் செருக்கடக்கி அற நெறியில் நிறுத்தும். இதன் அருமையும், ஆழமும், சாரமும் அறிய வல்லார்க்கு இதுவே தக்க நண்பனாகவும், நல்லாசிரியனாகவும், முழுமுதற் செழும்பொருளாகிய இறைவனாகவும் மிளிர்ந்து, அவர் வாழ்க்கையில் செம்மையும் இன்பமும் மலரச் செய்யும்.

—வித்துவான் மணி. திருஞானசம்பந்த
முதலியார்.

தமிழகத்தின் ஒரு தனி மணிச் சுடரென ஒளி வீசித் திகழ்வது திருவள்ளுவ நாயனாருடைய திருப்பெயராகும். தமிழர்தம் அறிவினாற்றலையும் கல்விப் பெருக்கினையும் நாகரிக மேம்பாட்டினையும் எந்நாட்டினரும், எம்மொழியினரும், எச்சமயத்தாரும் எஞ்ஞான்றும் இனிதுணர்ந்து போற்றற்குரிய நன்னிலைக் களனாயிலங்குவது அவர் தாமியற்றியளித்த தெய்வத் திருமறையாம்.

சொல் வளனும் பொருட் சிறப்பும் நுண்ணோக்கும் அணி நலனும் ஓசை யொழுக்கும் ஆழ் கருத்தும் ஒருங்கு நிறைந்து, பொலிந்து விளங்கும் இத்தெய்வத் தமிழ் நூல் ஆசிரியர் தம் ஒப்புயர்வற்ற செப்பருஞ்சீர்த்தியை எடுத்து விளக்கும் சிறப்புப் பாக்களே நம்முள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தன்மையவாயிலங்குகின்றன.

அறத்திறன் அனைத்தினையும் தேனினுமினிய தீங்கிளவிகளாற் கற்பனை முறையின் வியன்திறம் பொலிவுறச் செய்த பெரியார் நம்புலவர் பெருமானே ஆவர். உலகிற் பலரானும் பல்லாற்றானும் உள்ளத்தான் உள்ளப்படும் நற்பொருள் அனைத்தினையும் ஒருங்கே நம் பெருநாவலரது திருவாக்கிற் காணலாம். இவ்வரும் பெருநிலை எந்நூற்கும் அமையாதது. அறிவுடையார் தம் அனுபவத்தின்கட் படும் நலந்தீங்குகளை அமைக்குமாறறியாது ஐயுற்றுழி நம் புலவர் திருவாக்கு அவ்வையமகற்றும் அருமருந்தாகி அதனை அறவே ஒழித்து அளப்பரிய இன்பத்தை ஆக்கி நின்றருளிர்வது. ஒவ்வொரு பொருளும் அளவைவாயிலான் நிலை நாட்டப்பட்டுள்ளது. தீயன அனைத்தினையும் எதிர் மறுத்தும் நல்லன அனைத்தினையும் உடன்பட்டும் தலைக்குறியீடு தந்துரைத்த நுட்ப திட்பம் நன்கு சிந்தித்தற்பாலன

மக்கள் மனவுணர்ச்சியைத் தட்டி எழுப்பி அவர்தமக்குப் புலவன் குறித்த பொருண்மைக்குத் தக்க மேம்படு குணத்தினை மேன்மேல் வளர்வித்து, அப்பொருளாற்றலிற் றலைப்படுமாறு செய்தலே பாக்களின் பொதுவியல்பாம். அந்நிலையில் நம் பொய்யா மொழியர் பொருளுரை முற்றும் ஒப்பற்றிலங்குகின்றன. நம் பெருநாவலரது பாக்களுள் ஒவ்வொன்றும், தன்னை ஓதுவார் ஒவ்வொருவர் உள்ளத்தும் என்றும் நின்று நிலவுந் தகைமைத்து அவர் தம் அறிவினையும் உணர்வினையும் கொள்ளை கொள்ளும் பான்மையது. ஆசிரியர் குறித்த பொருள் கற்போர் நெஞ்சம் காமுறச் சென்று குறிக்கொள்ளும் மாலையது. அறப்பொருள் கிளக்கும் இதனை இத்துணை அழகு ததும்ப யாத்தமைப்பது, எத்தகையோர்க்கும் என்றும்

வாய்ப்பப் பெருதது. கல்வி நலம் சிறிது பெற்ருர்க்கும் சிறிது விளங்கியும், அந்நலம் பெரிதும் வாய்ப்பப் பெற்ருர்க்கும் பெரிதும் துலங்கியும், மற்றதனெடு இயற்கை நுண்ணறிவும் பயிற்சித் திறனும் ஆராய்ச்சி வன்மையுமுடையார்க்குத் தெள்ளத் தெளிந்திலங்குந் தன்மைத்தாய் 'ஆய்தொறும் ஊறும் அறிவு' என்னும் வாக்கிற்கிணங்க, அவர்தம் அறிவினை வளர்க்குங் கருவியாய் நிலேத்துத் திகழ்கின்றது.

எத்துணைக் கல்வியறிவுடையோரெனினும், சொல்வன்மை யின்ருயின் அவரான் உலகிற்குப் பயன் யாதுமின்ரு மென்பது வெள்ளிடைமலேயாம். நம் பெருநாவலர் சொல் வன்மையிற் றமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் துலங்குகின்ருர். எடுத்துக்கொண்ட பொருட்கேற்பச் சொற்களேப் பெய்துரைக்கும் திறன் பெரிதும் வியத்தற்பாலது. எவ்வெவ்விடங்களில் எவ்வெச்சொற்களேப் புணர்த்துரைப்பின், தாம் குறித்த பொருள் தெள்ளிதின் கற்போர் உள்ளத்துப் பசுமரத்தாணி அறைந்தாலொப்பப் பதியுமோ, அவ்வவ்வாற்ருன், யாப்பிலக்கணத்தின் துலங்க எடுத்துரைக்கும் ஆற்றல், பெரிதும் பாராட்டற்குரியது.

சுருங்கச் சொல்லலில் எவ்வளவும் சுருக்குவர். விளங்கவைத்தலில் எவ்வளவும் விளக்குவர். இஃதிவர்தமக்கே வாய்ந்த தனியழகாகும். மயக்கம் என்னும் மாசு நம் புலவர் பெருமானது, வாக்காகிய இளவள ஞாயிற்றின்முன் பனிக்கூட்டம் எனப் பறந்தொழியும் பான்மைத்து. ஓசையழகும், ஒளிமிகு சொற்களும், மாசில் பொருளும் மாண்புறச் செறிந்து விளங்கும் இவர்தம் பாக்களின் சொல் வளத்தினேயும் பொருள் வளத்தினேயும் என்னென்றெடுத்தியம்ப வல்லேம்!

ஓவியம் தீட்டுதலில் துறை போய ஒரு பெரும் புலவன், காண்போர் எண்ணும் மனமும் கவரப்படுமாறும், தான் கருதிய பொருள் அவர் தமக்கு இனிது விளங்கி வனப்பாற் பொலிந்து காட்டுமாறும், யாண்டு யாண்டு எவ்வெவ்வண்ணங்களே எவ்வெவ்வாற்ருன் தீட்டுதல் வேண்டுமென்பது, இனிதுணர்ந்து ஆண்டாண்டு அவ்வவ்வண்ணங்களான் தனது துகிலிகை கொண்டு தொட்டு விடுத்தும், துலங்க நீவியும், புறவணி புனேந்தும் பொறித்து முடித்தல்போல் நம் புலவர் திலகர் ஆண்டாண்டு வேண்டப்படும் அவ்வச்சொற்களேத் தம் மதி நுட்பத்தால் திறம்படப் பெய்தமைத்து அரும்பொருள் புலப்படுக்கின்ருரெனின், அவர் தமக்குச் செந்தமிழ்ச் சொற்கள் எவ்வாறு அடித்தொண்டு புரிந்தன என்பதை நினேந்து நினேந்து மகிழ்மின்கள்.

பொருட்டன்மைகளில் படிந்த அறிவும் முடிந்த அனுபவமும் உடையார்க்குச் சொற்கள் தாமாக வரும் என்னும் நியதியின் வைத்து நோக்கின், நம் பெருநாவலர் எத்துணே அறிவும் அனுபவமும் தாம் கூறும் உலகப் பொருள்களினும் ஏனேப் பிறவற்றினும் உடையராய்த் திகழ்ந்தனர் என்பது நன்கு தெளியப்படும். சொல்லாற்றல் ஒன்றே பயன்றருதலின்று, பொருளறிவு மட்டில் சிறந்தொளிர்வதன்று. இரண்டும் ஒருங்குதிரண்டு காணின் பொன்மலர் நாற்றம் பெற்றென உலகிற்கு விழுப்பயன் பெரிதும் உளதாமென்னும் உண்மை, இத்திருக்குறள் மாட்சியின் வைத்துணர்ந்து கொள்க.

நம்மாசிரியர் இணேத்துரைக்கும் எடுத்துக்காட்டுகள், மிகப் பொருத்தமுடையனவாய், இனிது விளங்கற்பாலனவாய், யாவரானும் தெளியப்படுவனவாய் இலங்குகின்றன. ஆங்காங்குத் திங்களேயும், நிலத்தையும், கண்ணேயும், கடலேயும், உயிரையும், மலேயையும், மரத்தையும், களிற்றையும், புலியையும், பூவையும், காகத்தையும், நாகத்தையும் இன்னோரன்ன பிறவற்றையும் எடுத்துக் காட்டுவர். இஃதோர் அற்புத ஆற்றலாற் போந்த அரும் பெருநுட்ப வினேத்திறனுமெனக் கல்விச் செல்வர் அனேவரும் நன்குணர்வர். என்னே? உவமம் என்பது தெளியப்பட்ட பொருளேயாகலான் என்பது. உவமை என்பது தெளியப்பட்ட பொருளேயாதலே உணர்த்து முகத்தான், முன்னர்ப் பிறிதோர் ஏதுகொண்டு நாட்டிய பொருளே, பின்னரொரு பொருளுக்கு உவமை காட்டி முற்கூறிய பொருளே வலியுறுப்பர். இது முற்கூறியவற்றிற்கும் பின்னதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களேப் பெறவைத்தற்கும், மற்றவை ஒப்பப்போற்றப்படும் தன்மை தெரித்தற்கும் அமைத்துப் போந்த ஆன்ற அறிவுடைமையாமென்பது. இங்ஙனம் சொல் வளனும் பொருளமைதியும் ஒருங்கு நிறைந்து பொலிந்து விளங்கும் இத்தெய்வத்தமிழ் நூலின் திரண்ட கருத்தினேத் தேடிக் காணின், 'நீர்வழிப் படூஉம் புணேபோ லாருயிர், மறைவழிப் படூஉம்' என்பது தெளிந்து, மக்கள்

அனைவரையும் அறச்செயலின் நிறுத்தி, அவர் அன்பு நிலையைப் பெருக்கி, அறிவு நிலை எய்துவித்தலே அவர் தம்மை அருளொளி பெறூஉம் திருநெறியிற் சேர்த்தலாம் எனத் துணிந்த நம் பெருநாவலர், அம்முறையே முறையாய் இத்தலை சிறந்த தமிழ்நூலை இயற்றியருளினர்கள் என்பது புலனும்.

மக்கள் அனைவர்க்கும் செம்மை நலம் அளித் தற்குரிய செழும்பொருள் எனத் திகழ்வது, ஒழுக்கம் என்னும் விழுப்பமிக்க அறம் ஒன்றே என்பது 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் திருவாக்கானும், அவ்வொழுக்க மென்னும் விழுப்பொருளின் உயிர்க்குயிராக உள்ளது அன்பென்னும் பண்பே என்பது 'அன்பின் வழியது உயிர்நிலை' என்னும் திரு வாக்கானும், இவற்றிற்கடிப்படையாய் இவற்றை அழகுறப் பெருக்கி ஒளியுறச் செய் வது அறிவே என்பது 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்னுந் திருவாக்கானும் தெளித் துரைக்கப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம் தமிழ்ப்பெருமக்களின் வழக்கியல் வண்ணம் அறம், பொருள், இன்பம் என்னும் மும்முதற் பொருட்கண் வைத்து, உலகியற் பொருள் அனைத்தினையும் முற்றவெடுத்து முடித் துரைக்குமுகத்தால் இவற்றிற்கெல்லாம் வினை முதற்காரணனாக, இவைதம்முள் ஒன் றெனப்படாது, இவைதம்மின் உள்ளும் புறம் புமாய், யாண்டும் ஒழிவற நிறைந்து விளங்கும் முழுமுதற் செழும்பொருளான இறைவனது திருவடித் தாமரைகளின் திருவருட்டேன் பெருக்கிலே தேக்கித் திளைத்தலே இப்பிறவி யாற் போந்த பெரும்பயனுமென்பது, நூலின் தொடக்கமுதல் யாண்டும் ஊடுருவி நிற்ப உணர்த்தப்படுகின்றது. இவ்வியைபோடு 'எல் லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்ற வண்ணம் பல்லாற்றானும் உலகியல் கூறிப் பொருளது கிளக்கும் அரும்பெருநிலை அறவும் உயர்ந்ததாகவும், அளத்தற்கரியதாகவும், அருள் ஒளியினமைந்த அவர் தமது நுண் ணுணர்வான் ஆய்ந்து தெளிந்ததாகவும் ஒளிர் கின்றது.

இத்தகைய அரிய பெரிய நூல், இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்னரே நம் தமிழ் நாட் டில் தோன்றியதாயின், நந்தமிழ் மக்கள் அறிவு மேம்பாடு எத்துணைச் சிறந்ததாமென்பதை நினைந்து மகிழ்மின்கள்.

நாகரிகமும் கல்வி அறிவும் சிறந்தோங்கித் திகழ்வதாகக் காணப்படுகின்ற எந்நாட்டினும், இதற்கிணையாக ஒரு நூல் இதுகாறும் எம் மொழியினும் தோன்றிய தின்று. ஆகவே, உலகமுழுவதூஉம் தனக்கு ஒப்புயர்வின்றி விளங்கும் முழுமுதல் தனி நூல் நம் செந்தமிழ் மொழிக்கண் திருவள்ளுவனார் அருளிச் செய்த தெய்வத் திருக்குறள் நூலேயாம் என்பது செப்பமுடையார் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றும்.

—பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்.

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில் தொறும் நயம் பெருகும் நூலாய் விளங்கு கின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப் படுகின்ற கடுந் தமிழ்ப் பதங்களும், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழு மையும் திருந்திய செப்பமும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல்களும், அதிகாரங் களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம் போல் விளங்குகின்றன. ஏடுகளில் பலகால் அடங்கியிருந்த காரணத்தாலும் பிற காரணங் களாலும் சில அதிகாரங்களும் தலையீடுகளும் முறை பிறழ்ந்திருப்பனவாகத் தோன்று கின்றன. ஆயினும் பெரும்பாலும் நூலின் போக்கை நோக்குமிடத்துச் செம்மையாய் வகுத்தமைத்த செப்பமுற்ற நூலாகவே திருக் குறள் விளங்குகின்றது கற்றோர் யாவரும் அறியா அறிவு அமையப் பெற்றவராய், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையராய், விழுமிய உண்மைகளை வினையின் நீங்கிய அறி வாற் கண்டு, உலகம் மகிழ்ந்துய்ய இனிது எடுத்துரைத்து, நாயனார் அழியாத இன்பப் பேறெய்தினர்.

—ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

தமிழ்நாடும் தமிழ்மொழியும் முயன்ற அருந் தவப்பயன் காரணமாக ஏறக்குறைய இரண் டாயிரம் வருடங்களுக்கு முன்னர் நமது நாட் டில் திருவவதாரஞ் செய்தருளினர் வள்ளுவ ரென்னும் புண்ணிய மூர்த்தி. தமிழணங்கு தலை யெடுத்து அவளது புதல்வர்களாகிய நமக்கு இன்முகம் காட்டிநிற்பது இத்திருவவதாரத் தின் பயன் கொண்டேயாகும். தமிழ்நாடு

புண்ணிய பூமியாகக்கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது இவ்வவதாரத்தின் பெருமை பற்றியேயாகும். தமிழ் மக்களாகிய நாம் கௌரவமுடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களென்று எண்ணிடப் பெற்றுவருவதற்கும் இவ்வவதாரமே காரணமாகும். நம் தமிழ் மக்கள் மீதும் நம் தமிழ்மொழி மீதும் பிறர் அழுக்காறு கொள்ளும்படி அத்துணைப் பெருமை அளித்தது இப் பேருரிமையென்றே கருதுகிறேன்.

—எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

தமிழ் மக்கள் பெற்ற செல்வத்துட் பெருஞ்செல்வம் திருக்குறள். இத்திருக்குறளைத் தமிழுலகமே யன்றிப் பிறவுலகும் பரவிக் கொண்டது யாதுபற்றி எனின், இதில் எல்லோரும், எக்காலத்தும் அறிந்து கைப்பற்ற வேண்டிய அரிய உண்மைகள், ஒளிமிளிர்கற்களைப் பைம்பொனிற் பதித்ததுபோல், தேர்ந்தெடுத்த நற்சொற்களில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கின்ற தன்மையேயாம். திரும்பத் திரும்ப ஒருவனைத் தன்னிடம் இழுக்கும் நூல் எதுவோ அது உயர் நூலாகுமென்று மேனாட்டு ஆசிரியர் விளம்புகின்றனர். இக்கருத்தை ''நவில்தொறு நூல் நயம்போலும்'' என்ற சொற்றொடரில் திருவள்ளுவர் அழகாயமைத்தது காண்க. திருக்குறளின் நயனும் பயனும் பயிலப்பயில மேன்மேலும் பொலிவு பெற்று விளங்கும். இப்பெற்றியுடைய நூல்களே உலகம் போற்றுதற்குரியன; பிறநூல்கள் சின்னாளிருந்து மறைவன.

—க. ப. சந்தோஷம், பி. ஏ., எல். டி.,

இத்திருக்குறளை ஒவ்வொரு மதத்தரும் தத்தம் மதநூலென்று பாராட்டி வருதலினால், இது யாவரும் உய்யுநெறிகண் டெளிதினுய்யுமாறு இயற்றப்பட்ட நூலாம்.

இத்திருக்குறள் தமிழில் வெளியாய நூல்களுள் அறம் பொருளின்பங்களை எப்பா லவரும் இயைந் தேற்குமாறு-முறைப்படக் கூறுவது பற்றித் தலைமை பெற்றுத் தமிழறிந்தாரி யாவராலும் வேதம் போன்று போற்றப்பட்டு வருதல் குன்றின்மேலிட்ட விளக்காம்.

—சென்னை, ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார்.

"யான் வறியன்" என்னும் இளிவரவு கூறி இரவாமையும், அதனைத் தன்மாட்டுக் கூறி இரந்தார்க்குக்கரவாது ஈதலும் உடைய உயர் குடியிற் பிறந்தார் யார்?'' என்னும் வினவிற்கு விடை கூறுவார் போன்று "உழவு" என்னும் அதிகாரத்தில்,

"இரவார் இரப்பார்க் கொன் றீவார் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்"

என ஆசிரியர் உழவுக்குரிய வேளாளரைக் கூறிப் புகழ்ந்தமை போற்றுதற்குரிய தொன்றாகும். இந்தியாவின் உயிர்நாடியா யுள்ளது விவசாயம் எனவும், அதனைச் செய்வோரே உலகத்தார்க்கு ஆணி எனவும், பொய்யா மொழியார் மெய்யாகக் கருதியிருந்தார்.

பெருஞ்சொல் விளக்கனார்
—அ. மு. சரவண முதலியார்.

இவர் (திருவள்ளுவர்) பாண்டி நாட்டில் மதுரையில் உதித்து. பாண்டியருடைய சங்கத்தின் புலவராய்த் திகழ்ந்து, பாண்டியருடைய உள் மந்திரத் தலைவராய் "வள்ளுவர்" என்ற பட்டத்துடன் விளங்கி, பாண்டிய அரசனுடைய வேண்டுகோட் கிணங்கி (திருக்குறளாகிய) இவ்வரிய நூலை இயற்றினார் என்று கொள்ளக் கிடக்கின்றது.

—துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

திருக்குறளில் எடுத்தாளப் பெறும் உவமைகள் அவ்வப்பொருட்கு மிகப் பொருத்தமுடையதாகவே இருக்கின்றன. அதைவிடப் பொருத்தமான உவமைகள் எவராலும் கூற முடியாது.

இன்பதுன்ப நுகர்ச்சி எல்லா உயிர்கட்கும் பொதுவாவதால் ஒரு சிற்றுயிர்க்கும் ஊறு செய்தல் கூடாது என்பது திருக்குறளின் உள்ளக் கிடக்கையாகும். இறைவன் எங்ஙனம் "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்'' விளங்குகின்றானோ அவ்வாறு திருக்குறளும் எந்நாட்டார்க்கும், எம்மதத்தார்க்கும், எம்மொழியாளர்க்கும் அவ்வவர்க்குரியதாய் விளங்குகின்றது. ஒரு காலத்தில் இயற்றப்பெற்ற நூல் மற்றொரு காலத்துக்கும் பொருத்தம் உடையதாயிருத்தல் மிக அருமை. திருக்குறளோ ''என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய்'' விளங்குகின்றது.

— தூத்துக்குடி, ந. சிவகுருநாத பிள்ளை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் செய்யப்பெற்ற திருக்குறளின் திட்ப நுட்பம் பொருந்திய கருத்துக்களைத் தொன்று தொட்டுப் பல தமிழ்ப் பெரும்புலவரும் தத்தம் பாடலுக்

கிடையே வேண்டுமிடங்களில் எடுத்தாளுவது பலருமறிந்ததே.

—மதுரை, திருநாராயணையங்கார்.

தனித்தமிழ் அணங்கின் மணிமுடியின் நடு நாயக மணியாகவும், முதனூலாகவும், முக் காலத்தும் ஒப்புயர்வற்ற உண்மை நூலாகவும் மிளிரும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாய னாரின் திருக்குறள்.

—பண்டிதை அசலாம்பிகை அம்மாள்.

திருவள்ளுவனாரால் இற்றைக்குச் சிறிதுமுன் பின்னாக இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தண்டமிழானியற்றி நன்காயும் வன்புலமை மிக் கோர் குழீஇய கழகத்தில் அரங்கேற்றப் பெற் றது திருக்குறள் என்னும் நூல். இந்நூற் பொருள் எவ்வகையோர்க்கும் உடன்பாடு தரு வதொன்றென்பது, இருபதின் மேற்பட்ட மொழிகளில் அவ்வம்மொழிக்குரியோர்களா லேயே பெயர்த்தெழுதிப் போற்றி வருவ தொன்றே நன்கு விளக்கும் அன்றியும், மக்க ளாகப் பிறந்தார் அனைவரும் எவ்வேற்றுமையு மின்றிக் கற்றுப் பயனெய்துதற்குரிய நூல் திருக்குறளையன்றி வேறொன்று உலகில் தோன் றியதில்லை, திரு. போப்புத் துரையவர்களின் கருத்துப்படி சமய நூல்களாகிய திருவாசகமும் விவிலியமும் நீக்கிடின் திருக்குறள் ஒன்றே உலகமனைத்திற்கும் அறிவு தரப்போதுமானது.

—ஆ. மாணிக்கம், சேலம்.

எல்லாப் பொருளும் தன்னுட் கொண்டு முப் பாலால் நாற்பால் கூறும் வள்ளுவர் பயந்த செந்தமிழ்க் குறளெனும் தெய்வத் தமிழ்மறை இந்நிலவுலகில் வாழும் எல்லா மக்கட்கும் உற்ற துணையாய் நின்று இருமையினும் நலம் பயக்கும் தன்மையது; சாதி சமய வேறுபா டின்றி ஓதுதற்குரியது. இந்நூல் 24 மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமையே இதன் பெருமைக்குச் சான்றாகும். மனித சமூகம் செந்நெறி நின்றொழுக இவ்வொரு நூல் போதும்.

—கொ. அ. அப்பாய் செட்டி, சேலம்.

பண்டைக் காலத்தில் திரிபுரமெரித்த விரி சடைக் கடவுள் இறையனார் என்னும் பெய ரோடு எழுந்தருளிய மதுரையம்பதியில் அருந் தமிழ்ச் சங்கத்து அரங்கேற்றிய வள்ளுவர் வாழ்த்தின் பெரும்பயனறிந்த புலவோர் அனை வரும் தாம் தாம் படைத்த நூல்கள் மிளிர, அத னைத் தழுவிப் பாடி நலம் பல எய்தினரென்பது உலகம் அறிந்ததேயாம். எப்பாலாரும் ஒப் பெனக் கொள்ள முடிந்தது இம்முப்பால் ஒன்றேயாம். இதனைப் பயின்ற பான்மையோ ரது வாழ்நாளே வாணாளாம்; ஏனையோரது வாணாள் வீணாம். ஆதலால் இந்நூல் ஒவ் வொருவருக்குப் பயன்படும் வகை சிந்திக்கத் தக்கதாம்.

—தமிழாசிரியர், கொ. இராமலிங்கத் தம்பிரான்.

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப்பெருமக்கள் இரண் டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வரு கின்ற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது. "அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத் திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்" என்று.

—ப. ஜீவானந்தம்.

தமிழ் நாட்டின் தனிச் சிறப்பு, உலகம் தமிழரை மதிப்பதற்கு முக்கியமான காரணம் ஒப்புயர்வற்ற இந்த இலக்கியச் செல்வம், அருட்களஞ்சியமாகிய "திருக்குறளே"யாகும். மன்பதை பொது மறையென்று ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு நூலிருந்தால் அது நந்தமிழ்த் திருமறைதான் என்பதைச் சொல் லவும் வேண்டுமா? எங்கள் பேரரசை இழப் பினும் ஷேக்ஸ்பியரை இழக்கமாட்டோம் என்று ஆங்கிலேயர் பெருமையடித்துக் கொள்ளுகின்றனர். (ஆனால் ஜான்புல் ஷேக்ஸ் பியரை அவ்வளவு நேசிக்கிறார் என்பது சந்தேகம்) அப்படியே தமிழராகிய நாமும் நமது பழம்பெரும் நாகரீகத்தின் அரிய அடையாளங்களாக விளங்கும் கோவில்களை யும் கட்டிடங்களையும் நமது உயிர் வாழ்க்கைக் கின்றியமையாத ஆறுகளையும் ஏரிகளையும் இழந்தாலும் எங்கள் வள்ளுவரை விடமாட்டோ மென்று கௌரவமாகச் சொல்லிக் கொள்ள லாம்.

திருக்குறளை நன்றாய்க் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியதில்லை என்பது என் துணிவு. மகா மேதாவி மெக்காலே பிரபுவின் புத்தகக் களஞ்சியம் முழுவதையும்விட இவ் வற்புத நூலொன்று மட்டும் சாலச் சிறந்த

தென்றும் மனித இனத்திற் கதிக நன்மை பயக்கக் கூடியதென்றும் எண்ணுகிறேன்.

பைபிளையும் வேறு இரண்டொரு வைதீக நூற்களையும் தவிர்த்துப் பிறமொழிகளிலுள்ள இலக்கியத் திரவியங்கள் அனைத்தையும்விட இது நனி மேன்மையுடைத்தெனக் கூறுவேன்.

—எஸ். எம் மிக்கேல்.

திருக்குறள் தலைசிறந்த நூல்; திருவள்ளுவர் ஒப்பற்ற புலவர்; இது தமிழர் கருத்து மட்டும் அன்று; திருக்குறளைப் படித்த அனைவரும் இவ்வாறு கூறுகின்றனர். ஒப்புக் கொள்கின்றனர்; பாராட்டுகின்றனர். இதற்குக் காரணம் ஒன்றேதான். திருக்குறளிலே கூறப்பட்டிருக்கும் அறங்களிலே சிலவற்றைத் தவிர மற்றவைகள் எல்லாம் அனைவர்க்கும் பொதுவானவை. திருக்குறள் இன்ன சமயத்தினர்க்கு உரியது; இன்ன இனத்தினர்க்கு உரியது என்று கூறமுடியாது.

—சாமி சிதம்பரனார்.

சங்க காலம்முதல் சமீப காலம்வரையில் இயற்றப்பெற்ற இலக்கியங்களுள் திருக்குறளின் சொற்களையும் கருத்துக்களையும் எடுத்தாளாத நூலே பெரும்பாலும் இல்லையென்று சொல்லலாம்.

பண்டைத் தமிழ்மறை மறையப் புதுமறை புனைந்து, அது பொதுமறையா யுலவவும் பொய்யா மொழியாம் உத்தரவேதம் எனப் புகழ் பெறவும், பரந்த பாக்களாலாகிய விரிந்த ஆரியவேதம் போலன்றி யாவரும் எல்லாப் பொருள்களையும் எளிதிலறியவும் குறுகிய பா (குறட்பா) 1330க்குள் அடக்கினார் வள்ளுவரென்க. இவர், ஐந்தெழுத்தோதி, ஐம்பொறி, புலனடக்கி, ஐந்தவத்தை கடந்த மாசித்தனே இவ்வரிய தெய்வநூலை முடிக்கவல்லானென்றுலகறிய வந்தவர். எங்ஙனம் இம்முடிபு இவர்நூல் வழி விளங்குமெனின், குறட்பா 1330க்கு அடிகள் 2660 ஆகும். அவ்வெண்கள் கூட்டுத் தொகையில் 5 எண்ணைக் குறிக்கும். இவ்வைந்து பற்பல அரியபொருள்களை விளக்கும் என்பதனாலறிக.

—பண்டிதர் வைத்தியரத்தின
சி எஸ். முருகேசமுதலியார்,

யாதானும் ஒரு சமயத்தைச் சார்ந்து நின்று அச்சமயக் கடவுளை வழிபட்டாலன்றி, மக்கட் பிறவியைப் பெற்றதனாலாய பயனை அடைதல் கூடாது. ஆதலின், ஒரு சமயத்தையுஞ் சார்ந்தவரல்லரென்பார் கூற்றுப்பொருந்தாது. ஒருவனை நாயகனைக் கொண்ட நாயகி, ஏனைய புருடர்களை இகழாது ஏற்றுப் போற்றுதலே முறையாகும். ஆனால் பல சமயநூல்கள் பிற சமயங்களைத் தாழ்த்தியும் தம் சமயத்தை உயர்த்தியும் கூறுகின்றன. அவ்வாறாயின் உண்மையான உயர்ந்த சமயம் யாதென ஆராயப் புகுவார்க்கு இதுவாகும் அது வல்லதெனும் பிணக்கதின்றி நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காணநின்றது யாதொரு சமயம் அது சமயமெனப் பெரியார் கூறியுள்ளார். திருவள்ளுவர். அத்துணைப் பெருமை வாய்ந்த சமயத்தினராதலின், எல்லாச் சமயத்தினரும் தத்தம் சமயத்தினரென்று பாராட்டிப் போற்றும் வண்ணம் கடவுள் வாழ்த்துக் கூறினர்.

இனி, திருவள்ளுவர் எச்சமயத்தினரென்பதைப்பற்றி ஆராய்வோம். ஒரு சமயத்தின் கொள்கை முற்றும் இருக்க வேண்டுமென்பதில்லை. சில இருப்பினும் அமையும்; ஆனால் அந்தச் சமயத்தின் கொள்கைகளுள் சில மறுக்கப் படினும், குறளில் கூறப்பட்ட கொள்கைகளுள் யாதானுமொன்று ஒரு சமயத்தில் இல்லையெனின் அந்தச் சமயத்தினராகக் கொள்ளுதல் பொருந்தாது.

—தேவகோட்டை, பொ. முத்தைய பிள்ளை.

திருவள்ளுவர் எனும் இப்புலவர் பெருமான் வரைந்துள்ள 1330 குறட்பாக்களும் அத்தனை ஆயிரம் பொன்பெறுமென்றே கூறி முடிக்கலாம். எனக்குத் தெரிந்தவரை திருக்குறளை நிகர்த்த அரிய பெரிய நீதிநூல் வேறெந்தத் தேசத்திலும் வேறெந்தப் பாஷையிலும் இதுகாறும் தோன்றவில்லை யென்பது சரதமே யாகும்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொலச் சொல்லை, வெல்லுஞ்சொ லின்மை யறிந்து" என்று வரைந்துள்ள திருவள்ளுவர் தமது முப்பால் முழுவதையும் இக்குறளினுக்கோர் இலக்கியமாகவே அமைத்துப் பாடியிருக்கிறார்.

—அல்ஹாஜ் பா.தாவூத்ஷா சாஹிப், பி. ஏ.,
ஆசிரியர், "தாருல் இஸ்லாம்"

பலப்பல நாட்டுப் பலப்பல கொள்கைப் பலரும் விரும்பி மேற்கொளும் பொதுமறை திருக்குறளே. மொழிகள் பலவுள்ளும் தமிழிற்கு ஏற்றம் தந்தது திருக்குறளே. திருக்குறளால் அன்றோ தமிழை நாடு அறிந்தது? பழந்தமிழ் மக்களின் திருந்திய கொள்கையாம், அறம்,

பொருள், இன்பப் பாலது குறளே. காலத்தாலும் இற்றைக்கு இரண்டு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர்த் தோன்றி மூத்தது குறளே. மக்களின் இயற்கையறிவைச் செம்மை செய்வதில் குறளே சிறந்தது. எழுசீர் கொண்ட ஈரடிப் பாவால் உலகத்துள்ள உயர்பொருள் எல்லாம் தெளிவுறக் கூறுவது திருக்குறளே. பயனில இன்றிப் பொருளுள ஆகிப், பின்முன் மலைவின்றிச், சுருங்க விளங்கக் கூறிய அழகிதாய்த் திகழ்வது குறளே. இந்தத் திருக்குறளைத் திருவள்ளுவர் தமிழிலேயே செய்த சிறப்புத் தோன்ற அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடித்துள்ளார் என்பதை எண்ணுக.

—சென்னை, வித்துவான் சோ. அருணசலதேசிகர்

A. D. 100-அல்லது 150-க்குப் பிந்தியதல்லவென்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுரைக்கும் கடைச்சங்க நூல்களின் ஒரு பகுதியாகும் பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கியவைகளில் திருக்குறள் ஒரு சிறந்த நூலாகும். இது யாவராலும் பொது நூலெனப் பாராட்டப் பெற்று வருகிறது. சங்கநூல்களில் எதற்குமில்லாத பெரும் புகழ் இந்நூலுக்குண்டு. இதைப் போன்று பெருமை பெற்ற நூல்கள் உலகிற் சிலவே. இந்நூலின் பெருமை உலகெங்கும் பரவியிருக்கிற தென்பதற்கு உலகின் பல பாகங்களிலுமுள்ள பல சிறந்த மொழிகளிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதே போதிய சான்ருகும். இதிற் காணப்பெறும் சமயவுண்மைகள் தெரியவே இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் தமிழ் மக்களின் சமயக் கொள்கைகள் எவ்வாறிருந்தனவென்று தெரியலாகும்.

—அ. முத்தைய பிள்ளை, பி. ஏ., பி. எல்.

நந்தந் திருவள்ளுவரும் தந்நூலிற் பல பொருளாதார நுட்பங்களை நிர்ணயித்திருப்பதில் பெரும்பாலும் அக்காலத்திய பொருளாதார நிலையைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார். மிகத் துரிதமாகப் பொருளாதார நிலை மாறும் நாடுகளில் பல நாட்கட்குமுன்சொன்ன உண்மைகள் பல, மற்ற நிலைகள் மாறலால் பொய்த்து விடும். இப்பொய்யாமொழிப்புலவர் கூற்றுக்களோ நம் நாட்டில் இன்றும் மெய்யாய் இருக்கின்றன.

—பேராசிரியர் அ. முத்தைய பிள்ளை, எம். ஏ.

தமிழுலகில் ஒவ்வொருவரும் வேதத்துக்குச் சமானமான இந்நூலைத் தினமும் பாராயணம் செய்து நன்னெறியிற் செல்லவும், தந்தம் கடமைகளைச் சரிவரச் செய்யவும், வேண்டிய நீதிகளை இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

—ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள்,
பி. ஏ. எல். டி.

உலகின்கணுள்ள மொழிகள் யாவற்றினும் தஞ் செந்தமிழ்மொழி முந்திய பெருமையுடையதெனற்கு அம்மொழிக்கண் என்று நின்று நிலவுந் தெய்வத் திருக்குறணூலே போதிய சான்ருகும். உலகியல், நீதி, அரசியல், நால்வகைப் பொருளாதிய வனைத்து மொரு சிறிது மெஞ்சுதலின்றி விளக்கி, எல்லாச் சமயத்தார்களும் ஒப்பும்படியாகத் தன்னிகரில்லாத் தனித் தலைமை நிலைமையுற்றுத் தலமெங்கும் வெற்றிக் கொடி பரப்பித் திகழ்வது, திருக்குறளொன்றேயென்பது முற்றுந் தேற்றமேயாம்.

—சேலம் கவிராஜ பண்டிதர் ரா. திம்மப்பஐயர்.

மன்பதைக் குய்வழிகாட்டி உயர்கதி செலுத்தும் தமிழ்நூல்களில் தலைசிறந்து நிலவுவது திருவள்ளுவநாயஞ ரருளிய திருக்குறள் என்பதை யாவரே மறுக்கவல்லார்? அதன் உருவின் சிறுமையும் பொருளின் பெருமையும் "கண்ணளவாய் நின்றதோ காணுங்கதிரொளிதான், விண்ணளவாயிற்ரே விளம்பு" என்னும் உண்மையை என்றும் வற்புறுத்தி நிற்கும்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி" என்பர். எனினும்நாலு மிரண்டும் எவ்வாற்ருனும் சமமெனப்படா, 'இரண்டு' நாலினும் சிறந்து விளங்குதலின், அன்றியும்'நால்'என்பதனுற் குறிக்கப்படுவதும் அதனினும்பெரியவாயும் விரிந்தவாயும் தோன்றும்பிற்காலத்துப் பிற நீதிநூல்களும் ஆல் போற் பெருகிவளரினும் அவையாவும் அவ் ஆல் மிக நுண்ணரிதாய வித்தின்கண் அடங்குவதொப்பஇவ் "இரண்டின்" கண் அடங்கும் என்பதில் ஐயமில்லை.

—பெங்களூர் டி. எம். முகையதீன் கவிராயர்.

இந்நிலவுலகின்கண் பெறுதற்கரிய மானிட யாக்கை எடுத்த யாவராலும் இம்மையில் ஈட்டற்பாலது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுமேயாம். இம் மூன்றினுலும் முடிவில் அடையத் தகுந்தது பேரின்பமே. அது என்றும் அழியாதது; அறிந்தாங்கறியும் இயல்பினது; இன்பவடிவினது. நிலைத்த இன்பத்தை

நாடும் மக்கள் யாவரும் பேராவியற்கைப் பெரு வாழ்வைப் பெறுதலே இவ்வியாக்கை பெற்ற தற்குப் பயனாகும்.

—ஸ்ரீவைகுண்டம், சு. முருகப்ப பிள்ளை.

குறள் நூலின் நற்றமிழ் நடையும், சிற்றுரு வில் சிறந்த பொருள் அறிவிக்கும் செய்யுள் களும், நாயனாரவர்களுக் கென்றே ஏற்பட்ட அழகுகளாம். "ஒரு மாத்திரை லகுவானால் அதனைப் புத்திரோற்சவத்திற்குச் சமமாக இலக் கணப் புலவர்கள் கொண்டாடுகின்றனர்கள்" என்ற நியாயம் இலக்கணச் சூத்திரங்களுக்கு அமையினும் அமையாது போயினும், திருக் குறளுக்கு அது வெகு நன்றாக அமையும். படா டோபத்திற்குப் பதங்களைப் பிரயோகித்தும், நிரோட்டயமக வந்தாதி பாடியும் உள்ள பிற் காலப் புலவருடைய தமிழ்ப் புலமைக்கும், நமது நாயனாருடைய புலமைக்கும் வெகுதூரம். சிறு பதங்களாகவும், அதிலும் அரும்பதங்களை உபயோகிக்காமலும், தமிழின் சுவை பெருகி வழியும்படியாகவும், கேட்கக் கேட்க இன்பம் பொங்கும்படியாகவும், எல்லா மதத்தினரும், எந்நாட்டினரும் 'நன்று நன்று' என்று நவி லும் படிக்கும் நூல் எழுதிய திருவள்ளுவரைத் "தேவர்" என்று உச்சி மேற்கொண்டு உல கினர் போற்றுவதே அவர் தன்மைக்குத் தகுதி யாம்.

—கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

பிறமொழிக் கொள்கைகள் சிறிதே தமிழ் நாட்டை யல்லற்படுத்த முற்பட்ட காலத்தில், பிறப்பாலுயர்வு தாழ்வு உண்டென்ற கொடிய கொள்கை தமிழ்நாட்டை யெட்டிப் பார்த்த காலத்தில், பிறமொழிச் சொற்கள் தமிழின் வளர்ச்சிக் கிடையூறாய்ப், பெரும் அளவில் தமி ழில் கலக்கப் பெற்றகாலத்தில், அறிவுச் செல் வத்தினும் பொருட்செல்வமே தலைசிறந்த தெனக் கொள்ளப்பட்ட காலத்தில் அவைகளை மறுத்து உலகம் உய்யும் வழியில் அறிவுரை கட்டுரைக்க விரும்பிய திருவள்ளுவர், அறம் பொருளின்பம் வீடு பயக்கும், தம் பொய்யா மொழியைப் பிறமொழிச் சொற்கள் கலப்பற்ற தனித் தமிழ் நூலாய் அளித்துள்ளமை யுணர்ந்து மகிழக் கடமையுடையோம்.

—இ. சாமிக்கண்ணு,
தமிழாசிரியர், மாம்பலம்,

அநேக தலை முறைகளால் அனுபவிக்கக்கூடி யதும், எக்காலத்தும் காப்பாற்றக் கூடியது மான ஒரு சேம நிதியைப் போன்று மாசணு காத தமிழ்ப் புதையலாகவுள்ளது இத்திருக் குறளாகும்.

—தி. ச. பரமசிவம் பிள்ளை, திருநெல்வேலி.

மக்கட்கு ஓர் அறநூல் வயங்க அருளுற்ற திருவள்ளுவர், உயிர்ப் பெருங்கடலில் செய் தொழில் வேற்றுமையால் பல்வேறுக் காணு றும் எல்லா வுயிர்க்குமுள்ள தொடர்பையும் உயிரனைத்தும் தோன்றும் ஆற்றலையும், அத னலாம் நிகழ்ச்சி உணர்ச்சிகளையும், வினையா லாம் பிறப்பையும் முறையே தெள்ளிதின ராய்ந்து, அவற்றின் முடிபின் முறைகொண்டு இந்நூலியற்றுவாரானர்.

—அ. மா. முத்தைய நாட்டார்.

உலகமெங்கணும் சிறப்புற்று நிற்பது, திரு வள்ளுவரியற்றிய தமிழ் மறை என்பது யாவர் தாமறியார்? இது நிகர்க்குஞ் செவ்விய நூலினை, வேறு எம்மொழியாயினும் பெற்ற பெருமையுடைத்தாயிற்றே? பொய்யில் பொரு ளைத் தன்னகங் கொண்டு பொலிவதனு லன்றே, மேல் நாட்டிலுள்ளவர்களும், கீழ் நாட்டிலுள்ளவர்களும், தத்தம் மொழிகளின் இதனை மொழி பெயர்த்துக் கற்று இன்புறலா யினர்? இத்திருக்குறள் மொழி பெயர்க்கப்பட் டது போன்று, வேறு எம்மொழியிலுள்ள எந் நூலாவது பத்தெட்டு மொழிகளுக்கு மேல் இதுகாறும் மொழி பெயர்த்துக் கற்கப்படும் தகுதியுடையதாக விருக்கின்றதா? இந்நூலின் அருமையை அறிந்தன்றே டாக்டர் போப்பு முதலிய ஆங்கிலப் புலவர்கள், இதற்கிணை யாகும் மெய்ந் நூலொன்றை, எம்மொழி யினும் காண்பதரிது எனக் கூறிப் போற்றலா யினர்? மேலும், இத்தமிழ் மறையினைத் தங்கள் வேதம்போலவே வைத்துப் போற்றுவாரு மாயினர். இந்நூல், தன்னைக் கற்பவர் மனத் தையும், கேட்பவர் செவியையும், பகர்வோர் வாயையும் இன்புறுத்துவதன்றித் தொடர்ந்து துன்புறுத்துகின்ற இரு வினைகளும் இரிய ஈர்க் கும் அரிய மருந்துமாகுமென்று புலவர் பறை சாற்றுகின்றனர். இவ்வரிய தமிழ் மறையைத் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களில் எத்துணைப் பேர் படித்து இன்பமெய்துகின்றனர்? அங் ஙனம் கற்று இன்புறாமை நம் நாட்டின் தவக் குறையன்றே?

—தஞ்சை வி. நாடிமுத்துப் பிள்ளை,

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்று பண்டைய தமிழ்ப் பேரறிஞரால் கூறப்பட்டு வழங்கி வருகிற பழமொழிப் பொருளை ஆராயின், அம் மரங்களின் விழ்தும், குச்சும், தனித்தனி மக்களின் முப்பத்திரண்டு பற்களுக்கே உறுதி பயப்பன என்னும் ஓரளவைக் குறிக்கின்றன. நாலும் இரண்டும் அவ்வாருகாமல் இந்நில வுலகில் வழங்கி வருகின்ற தமிழ்மொழிப் பொருட்சொற் பொழிவுக ளெவற்றிற்கும் உறுதி பயப்பனவென்னும் ஓரளவின்மையைக் குறிக்கின்றன. அத்தகையரால், நாலு, இரண்டு என்பன நாலடியும், குறளுமேயாம். இவ்விரண்டினுள் நாலடி என்பது அறிஞர் பலராற் செய்யப்பட்ட ஒரு திரட்டு நூல். குறள் என்பது அறிஞர் ஒருவரால் செய்யப்பட்ட ஒரு நூல். நாலடிக்கு அதற்குரிய தன்மைகளை நோக்கிப் பின் மொழியால் அதன் சிறப்பையும் குறளுக்கு அதற்குரிய தன்மைகளை நோக்கி முன் மொழியால் அதன் சிறப்பையும் விளக்கினர் பண்டைத் தமிழர்.

அது: "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையு மாட் கொண்டருளி"

என்னுஞ் செய்யுளால் விளங்கப் பெறுவது.

அம்முன்மொழி, "திரு" என்பதாம். அத் "திரு" என்னுஞ் சொல்லின் பொருள் கண்டோரால் விரும்பப்படுந் தன்மை என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அது கேட்டோராலும், தெளிந்தோராலும் விரும்பப்படுந் தன்மையையும் உள்ளடக்கியிருக்கிறதென்று கற்றோர்கள் உணராதிரார்.

அவ்விரும்பப்படுந் தன்மை எக்குலத்தராயினும், எம்மதத்தினராயினும், எந்நிலத்தராயினும், அவ்வவர்களுக்கு வேண்டியவைக ளெல்லாம் அந்நூலின் அதிகாரம் 133ல் கிடைக்க விருப்பதேயாம்.

அவை அறன்வேண்டியவற்கு அதன் விதியும், கல்வி வேண்டியவற்கு அதன் விதியும், அரசொழுக்கம் வேண்டியவற்கு அதன் விதியும், களவொழுக்கம் வேண்டியவற்கு அதன் விதியும் காணக்கிடத்தல் முதலியன.

இவ்வாறு இவர்க்குமேல் கூரியரிலர் எனக் கூறப்படுவார் எவர்க்கும் மேற்பட்ட கூர்மையுடையார் என்னும் பொருள் தோன்ற விருக்கின்ற திருவள்ளுவர் என்னும் திருப்பெயர் உள்ள, கண்டோரால் விரும்பப்படும் தன்மையினரான இவர், தமிழ் நாட்டினர் வழக்க ஒழுக்கங்களை யெல்லாம் தங்காலத்திற்கு முன்னிருந்த தமிழ் நூல்களின் வழியாய் ஆராய்ந்து அவற்றையெல்லாம் பப்பத்தாகக் 'கோவைப் படுத்தி அந்நாட்டில் வழங்கும் இயற்கையொலி வடிவும், உயிருடம் பொற்றுமை போன்ற வரி வடிவம் அமைந்திருக்கின்ற தமிழ் மொழியினுலேயே செய்து வைத்த நூலே திருக்குறள்.

இவை யனைத்தும் நூலின் புறச்சிறப்பாகும். இனி, நூலின் அகச்சிறப்பிற் சில:

திருவள்ளுவர் தம் நூலிற் செய்து வைத்துள்ள 133 அதிகாரங்களின் பயனையும் அடைய விரும்புவோர்கள் நோயற்றிருந்தாலே அடைய முடியுமென்றறிந்து மருந்து என்கிற ஓர் அதிகாரத்தையும் சேர்த்து அதில் உடல் நீடித்தற்கு வேண்டிய பல அரிய விதிகளைச் சுருக்கிச் சொன்னர்.

நூலளவில் மட்டும் மரஞ், செடி, கொடிகளைப் படித்துவிட்டு ஆட்சியில் உணராப் பலரைப் போலல்லாமல் "மோப்பக் குழையும் அனிச்சம்" எனவும்; "அனிச்சப் பூக்கால் களையாள்" எனவும், "மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்" எனவும் பல இடங்களில் கூறுவதால், அவற்றின் தன்மைகளையும் கண்டறிந்தே அவர் புகன்றனர் என்னலாம்.

வீடு பெற்ற அன்பர்களிற் பலர் நல்வினை தீவினைகள் செய்திருக்கின்றனர் என்பது பெரிய புராண முதலிய நூல்களிற் காண்கிருேம். இதை 'இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர்புகழ்புரிந்தார் மாட்டு', என்னுங் குறளால் "இருள்சேரா இருவினை சேரும்" என்னும் பொருளால் விளக்கினர்.

இத்தகைய ஆட்சிகள் திருக்குறளில் பல இடங்களில் பரக்கக் காணலாம்.

ஆசிரியர் பரிமேலழகியார், "அகர முதல எழுத்தெல்லாம்" என்ற குறளுக்கு, அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், என ஒலி வடிவைச் சொல்ல வந்தவர், தமிழ் எழுத்திற்கேயன்றி வடவெழுத்துக்கும் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லாம் என்ருர்' என்கிருர்.

'எழுத்து என்பது எழுதப்படுதலினுகலின்' எழு + தல் எனவும்; எழுது + அல் எனவும்

பிரிக்கப்படும் மொழியாய் ஒலி வடிவும்; வரி வடிவும் அச்சொல்லில் அமைந்து கிடப்ப தாலும், 'எழுத்தெனப்படுப' அகர முதல் னகர விறுவாய் முப்பஃ தென்ப' என்பதால், எல் லாம் என்பது முப்பது என்னும் இத்தொகை யையே யுணர்த்துவதாலும் அவர் அவ்வாறு தம்மரபைக் கைக்கொள்ளக் கொண்ட எண் ணம் நிறைவேறுவதாகக் காணப்படவில்லே. பிற இடங்களிலும் அவர் கருத்து நிறைவேரு வழியும் இவ்வாறு உரை செய்தல் அவரது இயல்பென்றும், இவ்வரும் பெருங்கருத்துக் கள் அடங்கிய திருக்குறளை நாம் பன்முறை பயின்று இவ்வரிய கருத்துக்களை உணர வேண்டுமென்றும் பெரியோர்கள் கூறுகின் றுர்கள்.

—தமிழ் மருத்துவ சிரோமணி
மாங்காடு. வடிவேலு முதலியார்.

தமிழ்மக்களின் நாகரிகத்தின்சாரமாய் இருப் பவை திருக்குறளும் நாலடியாருமாகும். இவை கள் உலகத்திலுள்ள அறிவு வளரப் பெற்ற மக்களெல்லோராலும் கொண்டாடப்படுகின் றன. ஆனல், தங்களை அறிவுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகின்ற இக்காலத்துத் தமி ழர்களில் இவைகளைக் கற்றவர்கள் எத்தனை பெயருளர் என எண்ணின் வருந்த வேண்டுவ தாக இருக்கிறது.

—சென்னை எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார்

உலகியல் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றதும், மக்கள் அறிவினை விளங்கச் செய் வதும், தமிழ் மொழியில் தனிப்புலமை தர வல்லதும், எந்நாட்டினராலும், எச்சமயத் தவராலும், எக்காலத்தவராலும் "எங்கள்தனி மறை" என்றே போற்றும் பெருமை வாய்ந் ததும், அதன் உள்ளுறை பொருளை உணர்ந் தோர் தம்மை உயர்த்தக் கூடியதுமான நூல் திருக்குறள் ஒன்றேயாம்.

இதனை இயற்றியவர் திருவள்ளுவ தேவர் என்பார். பொதுவாக இவ்வுலகிலுள்ளோர் அனைவரும், சிறப்பாகத் திராவிடர் எல்லோ ரும் உயர்தனிச் சிறப்பாக ஒவ்வொரு தமி ழனும் இவ்வுலகுள்ளவரை இவர்தம் திருவடி போற்றித் திருப்பெயர் வாழ்த்தி, இவர்க்குவழி வழி ஆட்செய்யக் கடமை பூண்டுள்ளார்கள் எனில் வேறு கூறுதற்குண்டோ!

—மூடிச்சூர், இராமச்சந்திர முதலியார்.

"பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே."

—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்.

தண்டமிழ் மொழியில் தலைசிறந்து விளங்கும் தனிப்பெரு நூல் திருக்குறளாகும், இது உலகில் நிலவும் பிறமொழிகளில் தோன்றி யிலகும் தலையாய நூல்கள் சிலவற்ருேடொப்ப வைத்துப் பிறநாட்டு நல்லறிஞராற் போற்றப் பட்டுவரும் பெருமையுடையது. இந்நூல் தோன்றிய நாள் தொட்டு இந்நாள் வரையில் பல்லாயிர மக்கள் மனத்தைப் பண்படுத்து தலாம் செயற்கரு முதவியைச் செய்து வந்துள் ளது; இனியும் செய்யும் இயல்பும் எழிலும் உடையது. நிறப்பிணக்கு, சாதிப்பிணக்கு, சமயப்பிணக்கு முதலிய பிணக்குகளால் அன் பும் ஒற்றுமையும் இழந்து துன்புறும் மன்பதை கட்கு எப்பொருளுள்ளும் மெய்ப்பொருளை இனிது புலப்படுத்தி, அதன் வாயிலாக அன் பையும் இன்பையும் பெருக்கும் அருட்பெருங் குரவனென யாண்டும் இலகுவது. இல்வாழ் வோரும் பிறரும் கொள்ளத் தக்க குறிக் கோளைக் காட்டுவதுடன் அதனை யடைதற் குரிய ஒழுகலாற்றையும், சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் இனிமையும் எளிமையுஞ் செறிந்த செந்தமிழ்ப்பாவால் ஐயந்திரிபற விளக்கும் ஆற்றலுடையது. இது சமூகத் துறையிலும் அரசியற்றுறையிலும் ஒற்றுமை யும் ஒத்துழைப்பும் அவாவி நிற்கும் எதிர்கால இந்தியாவிற்கு இன்றியமையாத ஒழுக்க நூலும், சமயங் கடந்த சமரச நூலுமாயுள் ளது. பொதுவாய் உலக மக்களனைவரும், சிறப்பாய்த் தமிழ் பேசுவோரியாவரும் திருக் குறளை வாழையடி வாழையாயோதி யுணர்ந்து அவ்வுணர்வின் வழி ஒழுக முயன்று வருவா ராயின் உலகிற்கே ஒரு பெரு நன்மை உண் டாகும் என்பது திண்ணம்.

—எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.,
சென்னை.

அதில் இல்லாதது உலகத்தில் எங்கும் இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உண்மை திருக்குறளுக்கு நிறைந்த பொருத் தம் உள்ளது.

தமிழ் மக்களாகிய நாம் எல்லோரும் "சிந் தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த விருவினைக்கு மாமருந்தா"கிய திருக்குறளை

இடைவிடாமல் படித்து அதன்படி நடப்பதையே முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.

—திவான்பகதூர்
கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்,
சென்னை.

கண்பெற்றிருந்தும் காணாத மக்களைக் குறித்தும், காது பெற்றிருந்தும் கேளாத மக்களைக் குறித்தும் ஏசுநாதர் விவிலிய நூலுட் கூறிப் போயுள்ளவை பலருமறிந்தவையே. அக்குறிப்புக்களைப் போன்ற பலவற்றை வள்ளுவர்செய் திருக்குறளிற் பரக்கக் காணலாம். அன்பாகிய அகத்துறுப்பு இல்லாதவர் ஐம்பொறி, பொன், மணி இவற்றைப் பெற்றிருத்தலான் ஆம்பயன் இல்லை என்பது வள்ளுவர் கருத்து உறுப்புக்களான் மக்களை ஒத்துப் பண்பினுல் அவரை ஒவ்வாதவரும், ஊனும் உடையும் பிறவு முடைய ராயினும் பழிபாவத்திற்கு நாணாதவரும் மக்களல்லர் என்பது அவர் கொள்கை.

இனைய நூல் உலகெங்கும் பரவுக; நம்மில்லமெல்லாஞ் செறிக. அந்நூல் மணம் எங்கும் கமழ்க! கமழ்கவே!!

—டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார்

தமிழ்நாடு செய்த தவப்பயனாய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஒழுக்க முறை வகுத்த சான்றோர் வரிசையிற் சிறந்த ஒருவராக வைத்தெண்ணப் படுகின்றாரென்பது யாவரும் அறிந்ததொன்றாம். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப் போந்த ஒழுக்கமுறை இன்னார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுவதற் குரியதாயிருக்கிறது. மனத்துக்கண் மாசிலராகிக் குணமென்னுங் குன்றேறி நின்ற திருவள்ளுவர் அனைவரும் ஏற்றுக் கையாளுதற்குரிய ஒழுக்க முறை வகுத்தது வியப்பன்று, சிறந்த ஒழுக்க முறை வகுத்த இக்காரணத்தால் இவரைத் தமிழ்நாட்டு சாக்ரட்டீஸ் என்று கொள்வாருமுண்டு.

—சரவண ஆறுமுக முதலியார்,
பி. ஏ. (ஹானர்ஸ்), எல் டி.

வள்ளுவர்க்குமுன் பல பெரும் புலவர் அறம்—பொருள்-இன்பம் என்ற முப்பெரும்பொருள்களைப்பற்றி நூல்கள் பல யாத்திருந்த போதிலும், அவை வள்ளுவர் வகுத்த பெருவாய்க்காலாய குறளுக்குமுன் பரிதிமுன் நின்ற மின்மினியாயின. இன்று குறள் ஒன்றே அறிஞர் உள்ளத்தில் நின்று நிலவுகின்றது. "வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்ற பாரதியாரின் பண்புபட்ட சொற்கள் வள்ளுவர் பெருமையை விரித்துரைப்பதாகும்.

—வித்துவான். மா. இராசமாணிக்கம்,
சென்னை.

அவனே புலவன் அவனே கவிஞன்
அவனே தமிழை அறிவோன்—சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ் தேவன் உளன்.

இது திருக்குறளைக் கற்போர் அடையும் பலனை உணர்த்தும் ஒரு பண்டைச் செய்யுள். இதன் திரண்ட பொருளாவது யார் ஒருவர் திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்த திருக்குறளெனும் திப்பியநூலை ஓதி உணர்ந்தனரோ அவரே புலவர் என்றும், கவிஞர் என்றும், தமிழை அறிந்தவர் என்றும், சிவபெருமான் ஆணையாகக் கருதப்படுவர் என்பதாம். இச்செய்யுள், திருவள்ளுவ மாலையில் காணப்படாததாகும்.

உண்மையில் ஒருவன் அறிவுபெற அவாவுநின், குறள் ஒன்றே அவ்வறிவைக் கொடுக்க வல்லது. உலகநீதிகள் அனைத்தும் ஒருங்கே கொண்டு விளக்குவது குறள் ஒன்றேயாகும், ஆதலின், குறளை அறிந்தவன்தான் புலவன் (அறிஞன்) என்பது ஐயந்திரிபற விளங்குகிறது; அன்றோ?

இரண்டாவது தொடர் "அவனே கவிஞன்" என்பது. அஃதாவது திருக்குறளைத் தெளிவாகக் கற்றவனே கவிபாடுதற்குரியன் என்பதாம்.

குறளைக் கற்றுத் தேறினவனே சில சொல்லால் பல பொருளை விளக்கத்தக்க செய்யுள் செய்ய வல்லவனாவான் என்ற உண்மை உணர்ந்தே "அவனே கவிஞன்" என்றார்.

"அவனே தமிழை அறிவோன்" என்ற தொடர், தமிழில் உள்ளனவற்றை உணர வழி காட்டியாய் உள்ளது திருக்குறள் ஒன்றே என்பதை விளக்கும்.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல்
[காப்பியமே

தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

இப்பாடலிலும் திருக்குறளை முதலில் கிளந்தோதியது உன்னற்பாலது. தண்டமிழின் மேலாந் தரமாவனஎன இவற்றை எடுத்துக் காட்டித் திருக்குறளே அவை யாவற்றினும்தலை சிறந்ததாகும் என்று முன்னர் எடுத்துமொழிவ ராயின், தமிழை யறியத் துணையாய் இருப்பது குறள் என்பதை, யான் எடுத்துக்கொண்ட செய்யுளைப் பாடியவர் தேற்றேகாரம் கொடுத்துப் பேசாமல் இருப்பரோ?

வித்துவான் பாலூர். து. கண்ணப்ப முதலியார்.

செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய சிறந்த சொற்செறிவும், இருவினையும் நீக்கும் அருமருந்தனைய உயர்ந்த பொருட் பொலிவும் பொருந்தி விளங்கும் நமது தமிழ் வேதத்தின் அமிழ்தமயமான நீதி யொழுக்கங்களையும் பொருள் நுணுக்கங்களையும் அறிந் தனுபவித்து ஆனந்த மடைவதே மக்கட் பிறப்பின் மாண் பயனாகும். அருமையான இத்தரும நூலை யருளிய நாயனாரே நமக்கு நல்ல தாயராவர். தாய்மார் தனவமுதூட்டி உடற்குறுதி செய்வர். நாயனார் குறளமுதூட்டி உயிர்க் குறுதி செய்கின்றார்.

—மதுரை ஜெகவீர பாண்டியனார்.

இலங்கையை யாண்ட ஏளாறன் (ஏலேல சிங்கன்) காலத்தவர் இவர் எனச் சிலர் கூறுவர். அப்படியாயின அவர் காலம் கி. மு. 20.i ஆகும்.

சந்திரகுப்தனுக்கு மந்திரியாயிருந்த சாணக்கியர் (கௌடிலியர்) அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், மோட்ச சாஸ்திரம் முதலிய பல நூல்களை வடமொழியில் செய்துள்ளார் என்றும் அவர் தமிழ் நாட்டினர் என்றும் அறிகின்றோம். சாணக்கியர் தமிழ் நாட்டில் அறியப்பட்டதும் வடநாட்டில் அறியப்படாததுமாகிய பொருள்களைப் பற்றிய நூல்களை இயற்றினமையால் அந்நூல்கள் வடநாட்டில் மிகவும் புகழ்பெற்று விளங்க ஏதுவாயின. சாணக்கியர் செய்துள்ள நூல்களுக்கு ஆதாரம் தமிழிலேயே இருந்திருத்தல் வேண்டுமென்பது வெளிப்படை. தமிழகத்தில் நூல்வழக்கிலோ செவிவழக்கிலோ உள்ள பொருள்களை ஆதாரமாகக் கொண்டு நூல் இயற்றிய சாணக்கியர் திருவள்ளுவர் என்னும் இருவர் நூல்களிலும் ஓரோரிடங்களில் ஒருமைப் பாடு காணப்படுதல் சகசமே. ஆகவே வள்ளுவர் சாணக்கியர் நூலிலிருந்து சிலவற்றை எடுத்து மொழி பெயர்த்துக்கொண்டார் எனக் கூறுதல் இயைபுடையதாகாது.

விளையாட்டுச் சிறுரால் மணலிற் கீறப்பட்ட கோடுகளிலும், நத்தை ஓட்டிலுள்ள கீறுகளிலும் ஓரோவிடத்து அக்கர வடிவம் காணப் படுவது போல மனு நூலிலுள்ள ஏதோ ஒரு வாக்கியம் திருக்குறளிலுள்ள யாதானு மொரு பொருளோடு ஒற்றுமைப்படுமாயின் முன்னதின் மொழி பெயர்ப்பே பின்னது என்று வாதாடுதல் அபிமானம் பற்றியதாகும்.

—யாழ்ப்பாணம் ந. சி. கந்தையா பிள்ளை,
"தமிழகம்"

என் அறிவுக்கெட்டிய வளவில் திருக்குறளை, சமரச சன்மார்க்கத்தை மக்களிடையே போதிக்க வந்த நூலாகவே நான் கருதுகிறேன். நம் நாட்டில் பிறப்புப்பற்றி உயர்வு தாழ்வு கற்பிக்கும் பேதைமையை (வருண சிரம தருமக் கொள்கையை) அகற்றவே, திருக்குறள் வந்ததென்பதற்கு, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது போன்ற குறளடிகளே தக்க சான்றாகும்.

'கௌடல்ய அர்த்த சாத்திரம்' முதலிய வடமொழிப் பொருள் நூல்களைப் பல பேரறிஞர்; கள் விவரித்துப் புகழ்ந்து கூறக் கேட்டிருக்கிறேன். ஆனல், அந்நூல்களுங்கூடத் திருக் குறளில் கூறிய "பொருளதிகார" த்துக்கு ஒப்பாகா என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அப் 'பொருளதிகார'த்தில் முதலாவதாக 'அரசியலை'த் திருவள்ளுவனார் வகுத்து அறுதியிட்டுக் கூறியிருப்பது போல, இனி, "French Republic" என்னும் அரசியல் நூலை எழுதிய பிளாடோ துரைமகனார் அல்ல; மற்றெந்த அரசியல் நிபுணனுமே கூறமுடியாது என்பதை நடு நிலையாளர் யாரும் மறுக்க மாட்டார்கள்.

—நாரண துரைக்கண்ணன்,
சென்னை.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்" அருளிச் செய்த திருக்குறள் தமிழுக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்கும் ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒப்பற்ற உயர்ந்த நூலாகும். இதிற் கூறப்படாத உயர்ந்த உண்மைகளும், கருத்துக்களும், நீதிகளும், ஒழுக்கங்

களும் இல்லையென்றே நிச்சயமாகச் சொல்ல லாம்.

—மயிலை. சீனி. வேங்கடசாமி.
சென்னை.

தமிழ் நாட்டில் உலாவி வரும் கர்ண பரம் பரைக் கதைகளை ஒட்டி எழுதிய பல ஆசிரியர் கள், திருவள்ளுவர் தம் வாழ்க்கைத் தொழிலா கக்கொண்டது நெசவுத் தொழில் என்று எழுதி யிருக்கின்றார்கள். அக்கொள்கைக்கு ஏற்றன வாகப் பல கற்பனைக்கதைகளும் இயற்றப்பெற் றிருக்கின்றன. அதற்கு,

"செய்யும் தொழில்எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை."

என்னும் பாடலை எடுத்துக் காட்டுவது வழக் கம். இதனை ஒரு குறள் வெண்பா எனக்கொள் ளின் யாப்புப் பிழைகள் முன்னின்று உறுத் தும். ஆகவே, இவ்வடிகளை யாரோ கல்வி அறியாதார் கர்ண பரம்பரையை ஒட்டிக் கட்டி விட்டார்கள் போலும்.

நம் தமிழ் நாட்டில்தான் கர்ண பரம்பரை களுக்கு அதிகமான மதிப்புக் கொடுப்பதுண்டு. ஏனைய மொழிகளில் புலவர் வரலாறுகளைக் குறிக்கும்போது, கர்ண பரம்பரைகளுக்கு மதிப்புக் கொடுப்பது இல்லை. நம் தமிழ் நாட் டிலும் புலவர் வரலாறுகளை ஆராய்ச்சி செய் வோர் கர்ண பரம்பரைகளுக்கு அதிக மதிப் பைக் கொடாமலிருப்பதே நல்லது.

மேல்நாட்டு மொழிகளில் புலவர் வரலாறு களை ஆராய்ந்து எழுதும்போது, சரித்திரக் குறிப்புகள் கிடைக்காமல் போன போதிலும், புலவர்கள் எழுதிய எண்ணங்களைக் கொண்டு அப்புலவர்களுடைய சரித்திரங்களை விவரிப்ப துண்டு. ஏனெனில், எண்ணங்களன்றோ மனி தனுடைய உண்மையான நிலையைத் தெரியப் படுத்துகின்றன? ஆகவே, திருவள்ளுவரைப் பற்றிய உண்மையான சரித்திரம் அறிய வேண்டுமாகில், அவர் இயற்றிய நூலில் அடங் கிய கருத்துக்களே போதிய ஆதாரங்களாகும். ஆராய்ச்சியாளர்கள் இதனைப் பின்பற்றி ஆராய்வார்களாக.

ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட தொழிலைத் தன் வாழ்க்கைக்குரிய தொழிலாகக் கொள் ளுவானாகில், அவன் பேசும் பேச்சிலும், எழு தும் எழுத்திலும், அத்தொழிலைப் பற்றிய சில கருத்துக்களையேனும் குறிப்பிட்டே தீர்வான்; கருத்துக்கள் இல்லாமல் போனபோதிலும், அத்தொழிலில் அவன்கையாண்ட உபகரணங் களைப் பற்றியாவது கூறிவிடுவான். இவ்வகை யில் திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் என்ன காண்கின்றோம்?

திருவள்ளுவனார் நெசவைப் பற்றியாவது, நெசவுத் தொழிலில் பயன்படும் தறி, தறியின் பாகங்கள், நூல், துணி, அவைகளைப் பக்குவப் படுத்தும் முறைகள், துணி விற்பனை முதலான பல பொருள்களைப் பற்றியாவது, தம் நூலில் எங்கேயாவது குறிப்பிட்டுள்ளாரா? ஆனால், அவரது தொழில் நெசவுத் தொழிலாயின் அவைகளுக்கு ஒரு வகையான முதன்மை கொடுத்திருப்பார் அல்லவா?

ஆனால், திருக்குறளில் 133 அதிகாரங்களில் உழவுக்கு ஒரு தனி அதிகாரங் கொடுக்கப்பட் டுள்ளது. பத்துக் குறள்களில் உழவினுடைய சிறப்புக் கூறப்பட்டுள்ளது. அவ்வதிகாரத்தில் கண்ட எண்ணங்களை விவரித்தால் ஒரு தனி நூலே ஆகிவிடும். உழவிற்குப் பொருத்த மான மழை, குடிப் பெருமை முதலான பொருள் கள் நன்கு பாராட்டப்பட்டிருக்கின்றன. உழ வுத் தொழிலைத் தம் தொழிலாகக் கொண்டவர் ஒருவரால் அன்றி, வேறெவராலும் அத்துணைச் சிறப்பாக உழவைப்பற்றிக் கூறியிருக்கமுடி யாது. ஆகவே, திருவள்ளுவர் உழவைத் தம் தொழிலாகக் கொண்டிருக்க வேண்டும்; அல்லது, உழவினர்களோடு நெருங்கிப் பழகி இருக்கவேண்டும். இதுவன்றி, நெசவுத் தொழிலை அவர் மாட்டு ஏற்றுவது அறிவுக்கு ஏற்றதன்று என்று நாம் ஏன் கூறக்கூடாது?

—கோவைகிழார்
C. M. இராமச்சந்திரன் செட்டியார்

திருவள்ளுவ நாயனார் செய்தருளிய திருக் குறள் என்னும் ஒப்புயர்வின்றி விளங்குகின்ற ஓர் உயர்தமிழ் நூலைப் போற்றுபவர் எவர் தாம் உயர்வுடையார்? இடையிடையே ஆங் காங்குச் சிற்சில குறள்களைப் படித்துணர்ந்த என்னைப் போன்றவர்க்கும் திருக்குறள் உறு துணையாய் ஊக்கங் கொடுத்து ஆக்கம் விளைக்குமாயின், குறள் முழுதும் கசடறக் கற் றறிந்து கற்றவழி நிற்கும் பெருந்தகையாளர் களின் நிலை உணர்தற்கும் உரைத்தற்கும் அரி தாகும்.

பண்டைத் தமிழ்ப் பெருமகனாராகிய திரு வள்ளுவர் தமிழுலகிற்கு வழங்கியுள்ள இப் பெருஞ்செல்வம் உலகுக்கே பயனளித்துத்

தமிழ் நாட்டின் புகழைப் பெருக்கியுள்ளதென்று பாரதியார் மொழிந்தது மிகையன்று.

இவ்வரிய பெரிய நூலைப் போற்றி வருதற்காகத் தமிழ் நாட்டில் இப்போது கிளர்ந்தெழுந்துள்ள இயக்கம் தமிழர்களைத் தட்டியெழுப்பித் தமிழ்மக்களின் சிறப்பையும் தமிழின் உயர்தனிச்சிறப்பையும் உலகுள்ளளவும் நிலைபெறச் செய்வதாகும். உலகம் போற்றும் திருவள்ளுவர் கொள்கைகள் மக்களுக்கு அகப்புறத் தூய்மையையும் உடல் வன்மையையும் நல்லின்ப வாழ்க்கையையும் செங்கோன்மையையும் நாட்டின் முன்னேற்றத்தையும் மேன்மேலும் வளர்த்து வருதற்கு ஏற்ற கருவியென்று துணிந்து திருவள்ளுவர் திருநாட் கழகத்தை நிறுவிய தந்நலங் கருதாத் தமிழ்த் தொண்டர்களின் முயற்சி இறைவன் திருவருளால் நிறைவுறுவதாக.

—T. செங்கல்வராயப் பிள்ளை பி. ஏ., எல். டி.

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.

—டாக்டர். மு. வரதராசனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.

திருவள்ளுவரது திருக்குறள் தான் பிறந்த நாள் முதலாகத் தன்னை எல்லோரும் ஏத்தெடுக்க, இவ்வுலக முழுதும் இனிதே உலாவி வருகிறது. குன்றின்மேல் விளக்கெனப் பொலியும் குறளினிடத்தே குற்றங் கண்டார் ஒருவரும் இல்லை. ஒருவரோடொருவர் முரண்பட்டார் அனைவரும் தத்தம் கொள்கைக்குத் திருக்குறளினையே எடுத்துக்காட்டாக எடுத்தாள்வர்.

குறளானது இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியதொரு நூல்.

—பேராசிரியர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.
எம்.ஏ.பி.எல்.,

செயலுக்கு வரும் அறங்கரைவது திருக்குறள்; மக்கள் வாழ வழி வகுப்பது திருக்குறள்; பலநிலை யறம் தழுவியது திருக்குறள்; எந்நிலைய மாந்தரையும் முன்னேற்றுவது திருக்குறள்; உலகு ஓட்டும் நெறிகாட்டுவது திருக்குறள்; ஒருவன் வாழ்க்கை அவனைப் பொறுத்தது என்ற உண்மை அறைவது திருக்குறள்.

—டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம் ஏ., பி.எச்டி.
காரைக்குடி.

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக்களனாய் இனிது விளங்கும். ஆனால், திருக்குறள் என்றால் இன்னது என்று அறியாதவர்கள் பலர்; அறிந்தோர் சிலருள். "திருக்குறள் ஒரு நீதி நூல். இக்காலத்திற்கு ஏலாது" என்று நினைப்போரும், "தமிழ்ப்புலவர்கள் கற்பதற்குரியது" என்று கருதுவோரும், "வாழ்க்கைக்கும் அதற்கும் தொடர்பு இராது" என்று மதிப்போரும் உளர். திருக்குறள் எப்பொருளை யார்க்கு அறிவிக்கின்றது என்பதை அதன் பெயரைக் கொண்டு அறியமுடியாது.

—பேராசிரியர் டாக்டர். சி. இலக்குவனர்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.

திருக்குறள் ஒழுக்கம் கூறவந்த நூல்; வரலாற்று நூலன்று; வையக வாழ்வின் அடிப்படையான கருத்துக்களைக் கூறவந்த நூல்; கற்பனை நூலன்று; அக் கருத்துக்களும் கால இடங்களைக் கடந்தவை. எனவே, காலத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப, உலகியல் வழக்கு—புலனெறி வழக்கு கண்டு, மதிநுட்பங் கொண்டு பயன் காணல் வேண்டும். மேலும் கருத்துக்களைச் செறிவுறச் சொல்ல வந்த கவிதை நூல்.

—டாக்டர் பா. நடராஜன், சென்னை.

மணல்கேணி தொட்டனைத் தூறும், திருக்குறளும் அத்தகையதோர் அறிவுக் கேணியே. இக்கேணி தோண்டத் தோண்ட ஊறும். அவ்வூற்றுநீர் பருகப் பருகத் தெவிட்டா இன்பந் தரும்.

—டாக்டர் எம். ஆரோக்கியசாமி எம்.ஏ, பி.எச்.டி.
சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை.

வான்புகழ் வள்ளுவர் அளித்த தெள்ளமுதமாகிய திருக்குறள் உலகப் பொது மறையாக விளங்குவதோடு வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும், கற்குந்தொறும் கற்குந்தொறும் புதுப்பொருள் தரும் நற்றமிழ் இலக்கியமாகவும் திகழ்கிறது. அன்றியும்

இந்நூல் அரசியற் கருத்து நிலையமாகவும், பண்பாட்டுக் களஞ்சியமாகவும் உடல்நலக் கருவூலமாகவும் இருந்து வருகிறது. இவ் வரிய நூலில் சமவுடைமைக் கருத்துக்களைக் காணலாம்; நலவழி அரசாங்கத்தைப் பார்க்க லாம்; சமுதாயச் சீர்திருத்தங்களைப் பார்க்க லாம்; எத்தனை புதுக் கருத்துக்கள் இன்று பூவுலகில் பூத்திருக்கின்றனவோ, அத்தனை கருத்துக்களும் திருக்குறளில் ஓரளவு ஆங் காங்குப் புதைந்து கிடத்தலைக் காணுமல் இருத்தல் முடியாது.

—பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர், எம். ஏ.

தமிழ் வாழ்வுக்கு மானம் உயிரினும் சிறந் தது. அந்த மானத்தைத் தமிழர் மொழியிலும் நினைவிலும் நின்று நிலவும் அரும்பணியைப் புரிந்தவர் ஆசிரியர் திருவள்ளுவனார். இடைக் காலத்தில் வடமொழியில்மயங்கி, பிற்காலத்தில் ஆங்கிலத்தின் அடி வீழ்ந்து அறிவு அறை போகிய தமிழ் மக்கட்கு நெடுநாட்கள் வரை திருவள்ளுவரின் சீரிய அறிவுப்பணி தெரியாது இருந்தது. இன்றைய தமிழ் நன்மக்களுக்குத் திருவள்ளுவரது திருக்குறள், பெறலரும் அறிவு ஒழுக்கக் கருவூலமாகத் தெரியத் தொடங்கி விட்டது. எங்கும் யாவரும் திருக்குறளைப் பற்றிப் பேசுகின்றனர்; எவருடைய பேச்சிலும் திருக்குறள் கருத்து ஒளிர்கின்றது.

சித்தாந்த கலாநிதி
—ஔவை சு. துரைசாமிப் பிள்ளை

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் அழியா மரபினதாக நின்று விளக்கும் ஒப்புயர்வற்ற நூல் திருக்குற ளாகும். இதிலுள்ள ஒவ்வொரு குறட்பாவும் ஒவ்வொரு சூத்திரமாக அமைந்து பேருண் மைகளை நெறிப்படுத்தி யுரைப்பதால் 'ஆரியம் வேதமுடைத்து தமிழ் திருவள்ளுவனார் ஓது குறட்பாவுடைத்து' என்று போற்றினர் ஆன் றோர். இந்நூலின்கண் பொதிந்துள்ள அரிய கருத்துக்களைத் தெரிய விளக்கியுள்ள உரை யாசிரியர்கள் பேரருளாளரான பரிமேலழகரும் ஏனைய ஒன்பதின்மருமாவர். இந்திய மொழி கள் பலவற்றிலுமேயன்றி, அயல்நாட்டு மொழி களிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பெருமை இத்திருக்குறள் ஒன்றிற்கேயுண்டு.

—வித்துவான் எஸ். வி. வரதராஜ ஐயங்கார், எம்.ஏ., எம்.ஓ.எல்.

மனிதன் மனிதனுய்ப் பிறந்தும் பறவை யைப் போல் ஆகாயத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறுன் பார்க்கிறேம், இன்றுவான ஊர்தியில். மனிதன் மனிதனுய்ப் பிறந்தும் மீனைப்போலத் தண்ணீரில் நீந்தக் கற்றுக் கொண்டிருக்கிறுன் பார்க்கிறேம், இன்று நீர் மூழ்கிக் கப்பல் முதலியவைகளிலே, நீலக் கடல்களிலே, நெடிய ஆறுகளிலே. மனிதன் மனிதனுய் பிறந்தும் பாம்பைப்போல ஊர்ந்து செல்லக் கற்றுக் கொண்டிருக்கிறுன் பார்க்கிறேம். இன்று கள்ள மனங்கொண்ட மக்களிடத்திலே. மனிதன் மனிதனுய்ப் பிறந் தும் மனிதனைப்போல் நடப்பது எப்படி என் பதைக் கற்றுக்கொள்ளவில்லை. அதைக் கற்றுக் கொடுக்கிற நூல் திருக்குறள்.

முத்தமிழ்க்காவலர், திரு கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி

உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களுள் ஒன்று நம்முடைய திருக்குறள். காலம், இடம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து எங்கெங்கும் உள்ள எல்லா மனிதருக்கும் எக் காலத்திலும் பயன்தரக் கூடிய அறிவுரை நிரம் பிய அறநூல் திருக்குறள். மனித வர்க்கத்தின் இயற்கையமைப்பில் எந்தக் காலத்திலும் மாறு தல் இல்லாதனவாகிய தத்துவங்களையே அடிப் படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்ப தால், திருக்குறள் என்றென்றும அழிவில்லா திருக்கும். அது மட்டுமன்றி எப்போதும் இளமையும் புதுமையும் உள்ளதாகவே இருக் கும். மனித சமூகத்துக்கு இன்றியமையாத எல்லா நல்லறிவையும் இப்படித் தொகுத்து வகுத்துத் தந்துள்ள ஒரு நூல் வேறு எந்த மொழியிலும் இல்லையென்று உலகத்தின் பேரறிஞர்கள் எல்லாரும் ஒருமுகமாகப் போற்றுகின்றுர்கள். திருக்குறள் என்பது திருவள்ளுவர் தமிழ்மக்களுக்கு வைத்துச் சென்ற அழியாத செல்வம்.

—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

திருக்குறள் எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் உரிய பொதுவான உண்மை களையே பெரும்பாலும் தொகுத்துச் சொல் கிறது. தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் கொள்ளத்தகுவன இவை, தள்ளத் தகுவன இவை என்று வரை யறுக்கிறது. நீதி நூல்களின் இயல்பு இது. ஆனல் அவ்வந்நாட்டின் நீதி நூல்கள் தாம் எழுந்த இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பன

வற்றை விரிவாகச் சொல்லும். திருக்குறளோ அவ்வாறு சொல்லாமல் மனித வாழ்வின் அடிப்படையான நலத்தைக் கருதி, என்றும் எங்கும் நலம் பயப்பவற்றை எடுத்துக்காட்டி இவற்றைச் செய்க என்றும், என்றும் எங்கும் தீங்கு பயப்பவற்றை எடுத்துரைத்து இவற்றைச் செய்யற்க என்றும் கூறுகிறது. இதனுல்தான் இது எக்காலத்துக்கும் பொது நூலாகவும் எந்த நாட்டுக்கும் பொதுவானதாகவும் மிளிர்கிறது.

—திரு கி. வா. ஜகன்னுதன் எம் ஏ.,

திருக்குறள், உலக நீதிநூல்கள் அனைத்திினும் சிறப்புடையது, மக்களின் தினசரி வாழ்க்கைக்கு வழிகாட்டியாகச் சென்ற பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதில் கூறப்பட்டிருக்கும் அறிவுரைகள், இது எழுதப்பட்ட அன்றுபோல் இன்றும் பேருண்மைகளாக இருப்பவை. எனவே இது பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. பலர் இதற்கு உரை யெழுதியிருக்கிருர்கள்.

—திரு தி. சு. அவினுசிலிங்கம் செட்டியார்
கோவை.

திருவள்ளுவரைத் தமிழ்நாட்டுச் சாக்ரடீஸ் என்று மிகப் பொருத்தமாகச் சொன்னுர் ஒரு புலவர். திருவள்ளுவர் அருளியது திருக்குறள் ஒன்றே. யானை ஒரு கன்றுதானே ஈனும்! "திருக்குறள் 133 மலர்களைக் கொண்ட ஒரு பெரிய பூங்கொத்து. தமிழ்ப் பூங்காவில் இஃதொன்றே மிகப் பெரிய பூந்துணர். இதன் மணம் தமிழ்ப் பூஞ்சோலையில் மலர்ந்துள்ள மற்றெல்லா மலர்களிலும் ஊடுருவி நிலைபெற்றுள்ளது; அம்மலர்களின் மணத்தினூடே தன் மணமும் தனியே அறியும் வண்ணம் மிளிர்கின்றது." திருக்குறள் நூல் தமிழ் மொழிக்குப் பெருமை அளிப்பது. திருக்குறள் இருப்பதாலே தமிழர்க்கும் மிகப் பெருமை.

—திரு டி. எம். குமரகுருபரன் பிள்ளை
பி. ஏ., பி. எல்.
ஸ்ரீ வைகுண்டம்

மக்கள் தொகுதியின் ஒரு பகுதியினராகிய தமிழரது, கடவுள் கொள்கை, ஒழுக்கம், நாகரிகம், நிலம்புரத்தல் முதலியவற்றை வள்ளுவனரது குறள் தெள்ளத் தெளியக் காட்டுகின்றது என்பது உண்மை. இதனெடு, பல்வேறுபட்ட உலகமக்கள் அனைவருமே தத்தமக்கே உரியவென முழு உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, தம் தம் வாழ்க்கைக்குப் பெருந்துணை யெனப் போற்றற் பால அரும்பெரும் பொருள்கள் பல அதனுள்ளே நிரல்பெற நிறைந்து நிலவுகின்றன என்பதும் உண்மையாவதுதான் இந்நூலின் வியக்கத்தக்க பெருமையாகும்.

இதனுலே, ஞாலத்தில், முதன் முதலிலே மக்கள் தோன்றிய இடம் தமிழகந்தான், இங்கிருந்தே வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்குமாகப் பலவேறு இடங்களுக்குத் தமிழ்மக்கள் பிரிந்து பிரிந்து சென்று, பலவேறு நிறம் பெயர், ஒழுக்கம், நாகரிகம் பிறபூண்டு வாழலாயினர், என்று நிலநூல், மொழிநூல், உயிர்நூல், பிறநூல் கொண்டு ஆராய்ந்து முடிவு கட்டும், அறிஞரது கருத்தினைத் திருக்குறள் நூல் அரண்செய்து மிளிர்கின்றது என்பது விளக்கம்.

வள்ளுவனரது வரலாறு இப்போது அறியக் கிடைக்கின்ற அளவிலே, அப்பேரறிஞர், அன்ருடம் பிழைப்புக்கு அன்ருடம் துணி நெய்து, ஒரு சிற்றூரின் மூலையிலே வாழ்ந்து வந்த மிக எளிய ஓர் இல்லறத்தினராக அறிகிரேம். அவருக்குக் குழந்தைகள் பிறந்ததாகவும் தெரியவில்லை. இத்தகையார், அவரது அவ் வேழ்மை வாழ்க்கைக்கு முற்றும் புறம்பென்று சொல்லக்கூடிய, ஞாலம் ஆளல், ஞானம், துறவு, மக்கட்பேறு, மகளிர் பண்பு முதலிய, உலகத்தின் பலதிற மக்களும் உணர்ந்து உரைத்து உளுற்றவல்ல, எல்லாப் பொருள்களின் நுணுக்கங்களையும் எழுதியிருப்பது வியப்பை விளைவிக்கின்றது.

முற்று அறிஞராகிய முழுமுதற் கடவுளின் திருவருள் பொலிவே அவரது தூய உள்ளத்தினைக் கோயிலாகக் கொண்டு, இந்நுண் பெருங் கருத்துக்களை வெளியிட்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் என்ன ஐயம் உண்டு? இது பற்றியே திருக்குறளைப் பொய்யா மொழியென்றும், முன்னவன் சொன்ன முதல்நூல் என்றும் உலகம் போற்றுகின்றது.

—திரு. கீ. இராமலிங்க முதலியார், பி. ஏ.

உலகம் போற்றும் ஒப்பிலா நூலாம் திருக்குறளென்னுந் தீந்தமிழ் மறையைப் போற்றுவதல்லது புகழ முயல்வது சூரியனைக் காட்டச் சுடர் விளக்கேந்துந் தன்மையேயாகும். அன்றியும், உள்ளுந்தோறும் உள்ளம் உருக்கும் வள்ளுவர் நூலின் வளத்தினை நந்தம் செந்

தமிழ் நாட்டினர் தெரிந்திடக் கூறல், 'நல்ல தோர் ஊசி!' என்று கொல்லர்தம் வீதி சென்று விற்றிட முயலும் வீண் செயல் நிகர்க்கும். எண்ணுதற் கரிதேயன்றி இயம்புதற் கெளிதே யாகி, வியன்மலி ஞாலம் வேண்டும் விழுப் பொருள் பலவும் பெற்று விளங்குமித் தெய்வ நூலைக் கற்பகத் தருவே என்கோ! காம நற்றேனே என்கோ! விண்ணவர் போற்று கின்ற வெண்கடல் அமுதமென்கோ! ஏதுக்கள் புலவும் காட்டி அகப்புறச் சமயம் யாவும் ஆர்வ மோடு அணுகிப் போற்றப் பொது மறை புகன்ற நந்தம் புண்ணியப் புலவரேற்றின் புது மலர் அடிகள் தம்மை வாயுற வாழ்த்தி நாளும் வணங்கிடல் வேண்டும் நெஞ்சே!

—மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்,

தமிழ் என்ற சொல் காதில் விழும்போதே அதன் இலக்கிய முதல்வர்களான தொல் காப்பியரும், திருவள்ளுவரும் நம் நினைவில் எழுந்து இனிய காட்சி தருகின்றனர். அவருள் தொல்காப்பியரது தொல்காப்பியம் தமிழ் கூறும் நல்லுலகத்தோடு நிற்கிறது; திரு வள்ளுவரது திருக்குறள் மனவுணர்வு படைத்து மாநிலத்தில் வாழப் பிறந்த மக்க ளுக்கு முற்றும் வரையறையின்றிப் பரந்து நிற்கிறது. அதனால் திருக்குறள் உலகப் பொது நூல் என்று சிறப்பிக்கப் பெறுகிறது.

உயர்ந்த மனத்தை நடுநாயகமாகக் கொண்டு அமைந்த நூல்தான் வள்ளுவர் இயற்றித் தந்த "திருக்குறள்." வள்ளுவன் என்ற ஒருவனைத் தந்ததால், வையகமே உயர்வு பெற்றது. வானுலகினும் தமிழரின் பெருமை வளம் பெற்றது.

—கருமுத்து. தி. மாணிக்கவாசகம்.
மதுரை.

'திருக்குறள்' ஒரு தனித்தமிழ் நூல். திருக்குறள் அயற் கொள்கை எதிர்ப்பு நூலே யன்றி எந்த ஓர் அயற்கொள்கையையும் உடன்பட்டுக் கூறும் நூலன்று. தமிழர் வாழ்வே திருக்குறள். திருக்குறளே தமிழர் வாழ்வு என்னும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினையுடைய நூல் திருக்குறள்; உள் ளதை உள்ளபடியே உயரிய முறையில் எடுத் துரைக்கும் உண்மை நூல். தமிழர் வாழ்வின் படப்பிடிப்பு! பழந்தமிழர் நாகரிக நல்வாழ்வை அப்படியே நமக்குக் காட்டும் களங்கமற்ற காலக் கண்ணாடி! தொன்மையும் எதிர்மையும் ஒருங்காய்க் காட்டும் தொலை நோக்காடி! தமிழ் மக்களின் வாழ்க்கைச் சட்டம்! தமிழ் மக்களுக்கு வள்ளுவர் வகுத்தமைத்து வைத்த பாது காப்புப் படை! ஏன்? தமிழர்க்கு மட்டுமின்றி, குறள் உலகப் பொது நூல்! மக்கட்பண்பாட் டுச் சரக்கறை! எக்காலத்துக்கும் உரிய நூல்! இறவா நூல்! காலங்கடந்த நூல்!

—புலவர் குழந்தை
பவானி.

தமிழகத்தில் தலைசிறந்த தமிழ்ச் சான்றோ ராக விளங்கியவர் திருவள்ளுவனார். இவர் பாடியருளிய திருமறையாகிய திருக்குறள் தமிழ்மொழியில் ஒப்பற்ற முதன்மையான அறநூல் ஆகும்

"கையில் குறளிருக்கக் காணாப் பொருள்உண்டோ
வையத்து நூல்கள் மிகை"

என்று எந் நாட்டவராலும் போற்றி ஏற்றுக் கொள்ளப்பெறும் அறநூலாக அமைந்திருக் கும் திருக்குறளை உலகப் பொது நூலாகக் கருதி மக்களெல்லாரும் கொண்டாடி வருகின் றனர்.

—இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்

தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்தவர் வள்ளுவர் என்பதில் இரண்டு கருத்து இல்லை. பண்டைத் தமிழ் இலக்கிய ஆசிரியருள்ளே இலக்கிய உலகில் எல்லா நாட்டாராலும் அறியப்படுபவர் திருவள்ளுவர்.

என்றும் உள தென்தமிழ்—தழற்சுடர் நுதற் கடவுள் தந்த தமிழ்—கன்னித் தமிழ்— ஒண்தீந்தமிழ் சிறப்புடையது என்று உலகம் மதிப்பதற்கு முதற் காரணமாக நிற்பது திருக் குறள் நூல்.

திருக்குறள் செய்த வள்ளுவரைப் பெற்ற தால் தமிழ்மொழி உயர்ந்தது என்று சொன் னால் அதனை அறிஞர் மறுக்குமாறில்லை.

—காரைக்குடி, ராய சொக்கலிங்கம்.

உலகின் பல பாகங்களில் அவ்வப்பொழுது அறநூல்கள் தோன்றியதுண்டு. திருக்குறளும் அப்படி ஒரு நூல்தானே? இதற்கென்று தனி மதிப்பு ஏன்? ஏனைய அறநூல்கள் சட்டங் களை மக்கள் எவ்வளவு தூரம் பின்பற்ற முடியும் என்பதுபற்றி அதிகம் கவலைப்பட்ட தாகத் தெரியவில்லை. ஆனால் திருக்குறள் மக்க ளின் பின்பற்றும் சக்தியை அடிப்படையில் கொண்டே எழுதப்பெற்றுள்ளது. பெரும்பா

லும் அதில் கூறப்பெற்றுள்ள அறச்சட்டங்கள் பலரால் பல காலத்தில் கடைப் பிடிக்கப் பெற்றவைகளே. சாதாரண மக்களும் கடைப் பிடிக்கக் கூடிய பல சட்டங்களையும் அந்நூல் பேசுகின்றது. ஒரு சிலரால் மட்டுமே கடைப் பிடிக்கக் கூடிய சில கடினமான சட்டங்களும் அதில் இடம்பெற்றுள்ளன.

—திரு அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ.,

திருவள்ளுவர் பெருமான் அருளிய திருக் குறள் ஒரு தெளிந்த நீரோடை. அஃது ஈரடி ஆழமுடையதுபோல் தோன்றுகிறது. ஆனால் அந் நீரோடையில் மூழ்குவார்க்கு ஆழத்தின் எல்லையறிய முடியாத அருமையுடையதாகும். அதன்கண் ஆழ்ந்து மூழ்கிக் கூர்ந்து நோக்கி னால் மணியும் பவளமும் அனைய கருத்துக் குவியல் கண்கக்கிறந்து நிறைந்து கிடப்பதைக் காணலாம். அத்தகைய கருத்து மணிகள் உளத்தைக் கவரும் உயர்வுடையனவாகவும், பிற ஆசிரியர்கள் விரித்துப் பேசும் கருத் தொளிகளையெல்லாம் தம்முள் அடக்கியொளி ரும் செம்மையுடையனவாகவும் சிறந்து விளங்குகின்றன.

—நெல்லை அ. க. நவநீதகிருட்டிணன்.

திருக்குறள் ஓர் எல்லையற்ற பரவை. அதில் மதிப்பில்லா மாணிக்கங்கள் ஆழ்ந்து கிடக் கின்றன. ஆற்றலுடையோர் அவைகளைத் தேடி எடுத்துத் தாங்கள் இயற்றும் நூற்களில் கலங் கரை விளக்கமாக அமைக்கின்றனர்கள்.

—ஜனாப். எம். எஸ். அப்துல் மஜீத் பி.ஏ.

2000 வருடங்களுக்கு முன்னர் தமிழகத் தில் இருந்தவைகளையும், இனி இருக்க வேண் டியவைகளையும் வள்ளுவர் குறளில் கூறியுள் ளார். குறள் நெறி தமிழகத்தில் பரவிடும் நேரத்தில், பிறர் தந்த கலைக்கும் கலாசாரத் திற்கும் இடம் கொடுத்ததின் காரணமாகத் தமிழர் மாண்புகள் நாசமாகிவிட்டன. இன்று தமிழர், குறள்நெறியைப் போற்றிடும் காலம் வந்துள்ளது.

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்றுகூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமய மற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வரவேண் டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

—அறிஞர் சி என். அண்ணாதுரை, எம்.ஏ.

இந் நாட்டு மக்களனைவர்க்கும்-சிறப்பாக இந்த நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர் கள் அனைவர்க்கும் வள்ளுவர் குறள் ஒரு பெரிய செல்வமாகும்.

நமது பெருமைக்கும் நெறிக்கும் (மதத் திற்கும்) நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக் கும் எடுத்துக்காட்டாக அதில் பல சங்கதிகளை நாம் காணலாம். அக் குறளின் பேரால் நம் பெருமையைத் திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்ய முடிகிறது.

நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களி லிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடி யும். ஆயினும் அவை பெரும்பாலும் பண்டிதர் களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படு மாகையால், திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப் படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

—ஈ. வெ. ராமசாமிப் பெரியார்.

உலக சமாதானத்திற்கு வழிகாட்டும் பண்டை இலக்கியம் என்று ஒன்று உண்டா னால் அது திருக்குறளைத் தவிர வேறு இருக்க முடியாது. மறத்திற்கும் அறத்தைத் துணை யாக்கியிருக்கிறார் வள்ளுவர். பிறரிடம் குற்றங் காண்பதைவிட்டு ஒவ்வொருவரும் தத்தம் குற் றத்தைத் திருத்திக் கொள்வதன் மூலம் உலக சமாதானத்தை நாட, மனித சமுதாயத்தின் நல் வாழ்வைத் தேட முடியுமென்கிறார் திரு வள்ளுவர்.

—சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம்.

தமிழ்மக்கள் போற்றிக் கொண்டாட வேண்டிய மூன்று கவிகள் வள்ளுவரும், கம் பரும், நம் காலத்துப்பாரதியாரும் ஆவார்கள். வள்ளுவர், கம்பர் என்னும் இரு மகா கவிகளே தமிழர் சமூகம் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஜீவசக்தியுடன் பண்பாட்டில் சிறந்து விளங்கி வருவதற்குக் காரணமானவர்கள். நம் காலத் தில் தமிழர் சமூகத்துக்குப் புத்துயிர் அளித் தவர் பாரதியார். இந்த மூன்று மகா கவிஞர் களையும் போற்றுவதற்கு என்றைக்குத் தமிழர் கள் மறந்து விடுகிறார்களோ, அன்றைக்கே தமிழர் சமூகத்தின் வீழ்ச்சிப் படலம் ஆரம்ப மாகிவிடும் என்பது நிச்சயம்.

—'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

திருவள்ளுவர் நமக்குத் தந்திருக்கிற குறள்-சொல்லியிருக்கின்ற அறிவுரைகள்-தமிழர்கள் ஏகமனதாகப் பாராட்டக் கூடியனவா, அல்லவா? அவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்கிற முப்பெரும் பால்களை முறைப்பட வகுத்து, அந்த அதிகாரங்களிலே, அருமையான, எழில் சொட்டுகின்ற, அறிவு மணம் கமழுகின்ற, அறிவொளி பரப்புகின்ற குறள்களை நமக்குத் தந்திருக்கின்றார் என்றால், அந்தக் குறள்களிலே அணி இருக்கிறது, தமிழர்கள் புரியவேண்டிய பணிபற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. இந்த நாட்டுக்குத் தேவையான கருத்துக்கள் இருக்கின்றன; மனிதனுக்குத் தேவையான எண்ணங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

—கலைஞர் மு. கருணாநிதி,

சந்தான ஞான குரவராகிய உமாபதிசிவம் நெஞ்சுவிடு தூது என்னுந் திவ்விய நூலிலே,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று நிலத்தமிழின்
றெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்"

எனத் திருக்குறளைப் பிரமாணமாக வெடுத்தோதி யருளியமை திருக்குறள் தமிழ் வேதமென்பதற்குச் சான்றாகும். ஆதலால் அதன் பெருமை எம்மனோர் சொல்லுந் தரத்ததன்று.

—யாழ்ப்பாணம். சு. சிவபாதசுந்தரம் பிள்ளை,
பி. ஏ.

திருக்குறள் அறம்—பொருள்—இன்பம் என்னும் மூன்று பகுதிகளை உடையதாயினும் வீடுபற்றியும் ஆங்காங்குப் பேசுதலால், நாற்பேறுகளையும் பற்றிப் பேசும் நன்னூல் ஆகும்.

பிள்ளை வளர்ப்பு—கல்வி கற்றல்—பல திறப்பட்ட மக்கள்—பிள்ளை யாருடன் பழக வேண்டும்—எப்படிப் பழகவேண்டும்-எதனைப் பேசவேண்டும்—என்ன செய்யவேண்டும்—அரசியல் உலகம்—இல்வாழ்க்கை என்னும் (பிள்ளைக்குத் தேவையான) அனைத்தும் திருக்குறளில் உள்ளன. ஆதலால் அதனை நீதிநூல் என்பதைவிட வாழ்க்கை நூல் (வாழ்க்கையை வளப்படுத்தும் நூல்) என்று கூறலே பொருத்தமாகும்.

திருக்குறள் இன்பத்துப்பாலிற் காணப்பெறும் நுட்பமான அநுபவச் செய்திகள் வேறு அகப்பொருட் பாடல்களில் காண்பது அருமை.

சுருங்கக்கூறின், பண்டைத் தமிழனது பண்பட்ட அறிவை உலகுக்கு உணர்த்தும் ஒப்பற்ற நூல் திருக்குறள் என்னலாம்.

—டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., எல்.டி., பி.எச்.டி.
சென்னைப் பல்கலைக் கழகம்.

திருக்குறள் உலக மக்கள் அனைவரும் மேற்கொண்டு ஒழுகுதற்குரிய பெருநெறிகளை வகுக்கும் தனிப்பெரும் நூலாகும். அது நீதிகளை இலக்கியச் சுவைகளோடும், பொருள் நயத்தோடும் அறிவுறுத்துவதால், அவற்றைப் பயிலுந்தோறும் நமக்குப் பேரின்பம் ஊற்றெடுக்கின்றது.

மக்கள் உயர்நிலை எய்த முதற்கண் இல்லறமும், பின்பு துறவறமும் அப்பெரு நூலில் வலியுறுத்தப்படுகின்றன. இல்லறத்திற்கு அடிப்படையாய் அமைவது கணவன் மனைவியருடைய உண்மையான அன்பாகும். அவ்வன்பின் திறம் காமத்துப்பாலில் சுவைபட விளக்கப்பட்டுள்ளது. அப் பகுதியில் 'தென்னுண் தேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்' பெருக்கெடுத்தோடுவதைக் காணலாம். உலகியல் நெறிமுறைகள் பொருட்பாலில் உணர்த்தப்பட்டுள்ளன.

மக்கள் தத்தம் நிலைக்கேற்ப நடைமுறையில் மேற்கொண்டொழுக வல்ல நெறிகளையே திருவள்ளுவர் கூறியுள்ளார். எவராலும் இயலாத ஒன்றை அவர் அறிவுறுத்தவில்லை இல்லறத்தை மேற்கொண்டொழுகும் மக்கள் பொய்யுரைத்தல் கூடாதென எத்துணை உறுதி கொள்ளினும், தம் பற்றின் காரணமாக அவர்கள் சில போது தம் உறுதியினின்று நெகிழக்கூடும். எனவே திருவள்ளுவர் வாய்மையை இல்லறத்திற்குரிய ஒழுக்கமாகக் கூறுமல் துறவறம் மேற்கொள்ளும் சான்றோர்க்குரிய ஒழுக்கமாக நவின்றுள்ளார். துறவறம் மேற்கொண்டவர்கள் பற்றற்றவர்கள். ஆகலின் அவர்களால் பொய்யாமையை எஞ்ஞான்றும் மேற்கொள்ளமுடியும். இங்ஙனமே இல்லறத்தார் கொல்லாமையை மேற்கொள்ளுவது மிகக் கடினம். எனவே அதை அவர்களுடைய ஒழுக்கமாகக் கருதாமல் பற்றற்ற சான்றோர்களின் உயர்நெறியாக உரைத்துள்ளார்.

திருவள்ளுவர் ஒவ்வொரு நெறியையும் இன்றியமையாததாகவும் ஒப்பற்றதாகவும் கூறியுள்ளார். வறுமையால் உயிர் நீங்கும் நிலையில் இருக்கும் ஒருவன் தன்மானம் அழியாமல் ஒருவரை அடைந்து இரக்க இயலுமானல் இரந்து உதவி பெறலாம் என்பதை 'இரவு' என்ற அதிகாரத்தில் அவர் கூறுகிறார். "இரத்தலும் ஈதலே போலும் கரத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு" என்று அவர் இரத்தலுக்கு ஊக்கமூட்டுவதைக் காண்க. இரவச்சம் என்ற அதிகாரத்தில் மானம் அழியாவகையில் இரப்பதற்கு அஞ்சுதல் வேண்டும் என்கிறார். "கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும் இரவாமை கோடி யுறும்" என்பது குறள்.

இங்ஙனம் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுவன போன்ற கருத்துக்கள் பல திருக்குறளிலே காணலாம். அங்ஙனம் உரைக்கும் திருவள்ளுவரின் உட்கிடக்கையை நாம் உணர்தல் வேண்டும். மக்கள் உயர்நிலையை எய்துவதற்கு நம் உடலை ஓம்புதல் வேண்டும். அங்ஙனம் ஓம்பவேண்டிய உடல் வறுமையால் வேறு வழியின்றி அழிதற்குரிய நிலையை எய்துமாயின், அந்நிலையில் அதைப் பாதுகாக்க மனமுவந்து ஈவாரிடத்து இரக்கலாம் என்பது திருவள்ளுவர் கருத்து. அங்ஙனம் கூறியவுடனே வறுமையுற்றோர் அனைவரும் வேறு முயற்சியின்றி இரத்தலை மேற்கொள்வார்களோ என்றஞ்சி இரவாமையின் பெருமிதத்தை அவர் உணர்த்துகின்றார்.

இங்ஙனம் பல்லாற்றானும் மக்களை உய்விக்கும் உயிர்நெறிகளே திருக்குறளில் மிளிர்கின்றன. இது ஓர் உலகப் பெருநூல். காழ்ப்பும் பிணக்கும், பூசலும் போரும் மலிந்து பேரிடர் எய்தும் தற்கால உலகிலுள்ள நாடுகள் திருக்குறள் உணர்த்தும் பெருநெறிகளை மேற்கொண்டொழுகுமாயின், விரைவில் அவை அனைத்தும் ஒன்றுபட்டு ஒருலகமாகத் திகழும் என்பதில் ஐயமுண்டோ?

—டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, எம்.ஏ., பி.எச்.டி.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றார் பாரதியார்.

தமிழ்நாடு வள்ளுவரைத் தந்தது. வள்ளுவரோ நால் வேத சாரத்தை நிரப்பி, சொற்சுவையும், பொருள் சுவையும் புகுத்தி, விரிந்த கருத்துக்களை ஒன்றேமுக்காலடியாகச் சுருக்கித் திருக்குறள் என்னும் தமிழ்ப் பாட்டுக்களை முப்பாலாகப் பிரித்துத் தமிழ் நாட்டுக்குத் தந்தார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று மாணிக்கவாசகர் கூறியது போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தென்னாட்டில் தோன்றிய திருக்குறள் இன்று 18 மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்று எந்நாட்டவராலும், எம்மதத்தினராலும் பாராட்டப்பட்டு வருகிறது. திருக்குறள் புகாத இடமில்லை. அதனைப் போற்றாத நாடில்லை. குறளை உதாரணம் காட்டாத நூல்களில்லை.

திருக்குறளிலுள்ள பாட்டுக்களோ பார்ப்பதற்குச் சிறிது. படிப்பதற் கெளிது. மனப்பாடம் செய்வதற்கு இனிது. ஆனால், அதன் பொருளாழம் காண்பதோ மிகவரிது. திருக்குறளைப் படித்துப்பார்த்து, அதன் பொருளினாழத்தைக் கண்டு வியந்த புலவரொருவர்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று பாராட்டியுள்ளார்.

மற்றொரு புலவர் "மாலும் தன் குறளடியால் மூவுலகையளந்தான். வள்ளுவன் தன் குறளடியால் மக்களுள்ளத்தை யளந்தான்" என்று கூறியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடென்று மக்கள் அடையவேண்டிய நான்கு பயன்களை முப்பாலிலடக்கி "முப்பாலில் நாற்பால் வகுத்த பாவலர்" என்று புகழப்பெற்றார் வள்ளுவர். அத்தகைய பெரியா ரியற்றிய திருக்குறளைத் தொகுத்துப் பொருள் கூறுவது மிகவும் புனிதமான தொண்டென்பதில் ஐயமில்லை. அப் பாக்களைச் சிறியதொரு நாட்குறிப்புப் புத்தகத்தில் தகுந்த முறையிலடக்கிச் சுருக்கமாகப் பொருளும் எழுதியுள்ள சைவ சித்தாந்தக் கழகத்தார்க்கு என் நன்றியும் ஆசியும் உரித்தாகுக.

—திருப்புகழ்மணி, டி. எம் கிருஷ்ணசாமி ஐயர்.

வள்ளுவப் பெருந்தகையை எந்த முறையில் போற்றினாலும், எத்தனை முறை போற்றினாலும் மிகையாகாது. உலக மேதைகளில் ஒருவராகப் போற்றத்தக்க பெற்றியுடையவர் திருவள்ளுவர். அவருடைய நூல் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பதே அதற்

குச் சான்று. அண்மையில் சில ஆண்டுக ளாக திரு நரசிம்ம சாஸ்திரி, திரு இராம தேசிகன் போன்றவர்களால் வடமொழியி லும் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. முத னூலின் திட்பமும் நுட்பமும் எந்த மொழி பெயர்ப்பிலும் காண இயலாதாயினும், இன் னும் எந்தெந்த மொழிகளில் பெயர்க்கப்படா திருக்கின்றதோ அவ்வம் மொழிகளில் உள்ள தக்காரைக் கொண்டு, தமிழ் நல்லறிஞரின் துணையும் கொண்டு இந்நூல் மொழி பெயர்க்கப்படுதல் வேண்டும். உலகிலுள்ள பெரும் நூலகங்கள் அனைத்திலும் இந்நூல் அவ்வந்நாட்டு மக்களால் படித்துப் பயன் பெறும் வகையில் வழங்கப்பெறுதல் வேண்டும். உலக மக்களைச் சான்றோராக்கும் அறநூல் என்ற அளவிலே அமையாமல், கவிநயம், சொற்செறிவு, குறிப்பு, பொருள் வளம் ஆகிய இலக்கிய நயங்கள் பல நன்கு அமையப்பெற்ற இந் நூலைப்பற்றிய முற்றிய திறனாய்வு நூல். பல பல புலவர்களால் செவ்விதின் ஆயப்பட்ட முறையில் ஆக்கப்படுதல் வேண்டும். ஒப்பு நோக்கு முறையில் பிற நீதிநூல்களோடு பொருத்திக் காண்டல் சுவை தரும். வள்ளு வரின் வாக்கு பிற புலவர்களால் ஆளப்பட் டுள்ள முறைமையும் வள்ளுவர் நெறிக்கேற்ப வாழ்ந்த உலகப் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் தொகுக்கப்பெறுதல் வேண்டும். இவைபோன்ற பல பகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு 'திருவள்ளுவர் நூற் களஞ்சியத்தை' ஆங்கிலத்திலும் பிற முக்கிய உலக மொழிகளிலும் உருவாக்க முடியுமானால் அதுவே தலையான தமிழ்ப் பணியாகும்.

வளர்க வள்ளுவர் தொண்டு!

—பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.
பிரசிடென்ஸி காலேஜ், சென்னை.

முதன் முதலில் நான் திருவள்ளுவர் பேரைக் கேட்டது சுமார் 1952 ஆம் ஆண் டிலே ஆகும். அப்போது 21 வயதான மாணவ ராகிய நான் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ளத் தொடங்கிப் போப்பையர் இயற்றி யுள்ள பாடப்புத்தகத்தில் ஆரம்பப்பாடங் களைப் படித்துக் கொண்டு வந்தேன். ஆனால் திருக்குறள் படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்க இன்னும் இரண்டோர் ஆண்டு ஆகிவிட்டது. மாஸ்கோ நூல் நிலையம் ஒன்றில் திருக் குறளைக் கையில் எடுத்துக் கொண்டபோது ஒருவித அவநம்பிக்கை உண்டாயிற்று "புத்த கம் ரொம்பப் பழையதாம், இதில் ஒன்றும் புரியாதாம் புரிந்தாலும் சுவையான, அக்கறை யுள்ள படிப்பு எதிர்பார்ப்பதற்கு இல்லை" என்று நினைத்துக் கொண்டு அங்குமிங்கும் பார்த்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். படிக்கப் படிக்க என்னுடைய அபிப்பிராயம் எப்படி மாறிக் கொண்டிருந்தது என்பதைச் சொல்ல வேண்டுமா?

...அன்றுமுதல் பத்தாண்டுக்கு மேல் ஆகிவிட்டது. நூற்றுக் கணக்கான தமிழ் நூற்கள் படிக்கப்பட்டன. திருக்குறளும் பன் முறை படித்தாயிற்று.

இப்போது நான் வேலை செய்யும் அறை யில் ஆயிரக்கணக்கான நூற்கள் இருக் கின்றன. பல மொழிகளில் எழுதினவை. என் வேலைக்கு மிகத் தேவையானவை. ஆனால் திருக்குறளுக்கும் மற்ற நூற்களுக்கும் வித்தி யாசம் கண்ணாரக் காணலாம். இடையிடையே பார்க்க வேண்டிய அகராதிகள், இலக்கணங் கள், மற்ற நூற்களெல்லாம் அலமாரிகளில் நிற்கிறபோது ஒரே ஒரு சின்ன புத்தகம் மட்டும்தான் - திருக்குறள்-என் மேசையின் பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறது. அவ் வப்போது அதை எடுத்துக் கொண்டு நாலு வரிகளைப் படித்துவிட்டு அவ்விடத்திலேயே முன்போல வைக்கிறேன்.

ஒரு நாள் பழக்கப்படி திருக்குறள் படித்த போது "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்" எனக் குறள் ஒன்று தென்பட்டது. இதைப் பார்த்ததும் தமிழர்கள் திருக்குறளைப் படித்து ரசிப்பது போல ருஷ் யக்காரர்களும் படித்து ரசிக்குமாறு ஏற்பாடு செய்யலாமா என்று நினைத்துக்கொண்டேன். வாசகர்கள் மொழிபெயர்ப்பை ரசிக்க வேண்டு மானால் அது பொருளை மட்டுமல்ல குறள் திரு வடிவத்தையும் தக்கமுறையில் பிரதிபலிக்க வேண்டும் என்று சில குறள்களை ருஷ்ய வெண்பாக்களாக்கிப் பார்த்தேன். நான் எழுதி யுள்ள "தமிழ் இலக்கணம்" அடுத்த ஆண்டில் வெளிவரப்போகிறதே, அதில் அவைகளைக் காணலாம். ஆனால் திருக்குறள் முழுவதும் செய்யுள் வடிவத்தில் மொழிபெயர்க்கும் ஆசை இன்னும் நிறைவேறவில்லை. ஒருநாள் நிறை வேறும் என்று நம்புகிறேன்.

—எம். அந்திரோனவ், எம். ஏ., பி. எச். டி.,
பல்கலைக்கழகம் மாஸ்கோ.

ஐரோப்பாவில் யான் வாழ்ந்த ஐந்துக்கு மேற்பட்ட ஆண்டுகளில், ஸ்பெயினிலிருந்து ஸ்வீடன் வரை யான் சென்ற இடமெல்லாம், நுழைந்த நூல்நிலையத்தில் எல்லாம், 'குறள்' உள்ளதா என்பதை முதற்கண் கவனிக்கும் பழக்கம் தானுகவே அமைந்தது. இதன் பயனுக, அமெரிக்கா வந்தபோது என்னேடு உடன் வந்தவை பல குறள் பதிப்புக்களின், பல குறள் ஏடுகளின், நிழற்படங்கள்; அவை பற்றிய குறிப்புகள், இவைகளை ஆய்ந்து, ஒழுங்குபட எழுதிக் கட்டுரையாக வெளியிடப் போதிய காலத்தை எதிர் நோக்கி ஏங்கிக் கொண் டிருக்கிறேன். இப்பொழுது இக்குறிப்புக்களின் அடிப்படையில் எழுந்த சில எண்ணங்களை மட்டும் குறள் அறிஞர் முன்னிலையில் கொணர விரும்புகிறேன்.

அருள் திரு. ஜோசப் பெஸ்கி என்ற வீரமா முனிவர் மொழிபெயர்த்ததாகக் கூறப்படும் இலத்தீன் குறள் மறையும் நிலையை எட்டி விட்டது இதன் முக்கியமான கையெழுத்து ஏடுகள் இலண்டனிலும் பாரிசிலும் உள. இலண்டன் ஏட்டைக் கொண்டுதான் போப் பையர் இலத்தீன் குறளைப் பதிப்பித்தார். அந்த ஏட்டில் அவர் கைப்பட எழுதிய எழுத்துக்கள் இருக்கின்றன. இம்மொழி பெயர்ப்பை வீரமா முனிவர் செய்தாரா அல்லது வேறு ஒரு கிறிஸ் துவர் செய்தாரா என்ற ஐயப்பாடு முடிந்த ஒரு முடிபைக் காணுமலே இன்னும் நிலைத்து வருகிறது, இதைக்குறித்து ஆராய்ச்சி தேவை. இதைச் செய்தவர் யாரே ஆயினும் இது முக் கியமான மொழிபெயர்ப்பு. கிறிஸ்துவக் கொள் கையின் பின்னணியோடு இது மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. இதனுல் சமய ஆராய்ச்சி யாளருக்கும் இது ஓர் அரிய கருவூலம் ஆகும் என்றுல் மிகையாகாது.

கிரவுல் பெரியார் (Karl Graul) ஆக்கிய ஆங்கில, செர்மன் மொழிபெயர்ப்புகள் தலை சிறந்தவை. போப்பையர் தம்முடைய ஆங் கிலக்குறள் மொழிபெயர்ப்புக்கு இவைகளைப் பெரிதும் பயன்படுத்தினுர். மேற்கு செர் மனியில் தமிழ் வளர்க்கும் பணி பிறக்கப் போகும் இந்தத் தறுவாயில் கிரவுல் செய்த செர்மன் குறள் மீண்டும் பதிப்பிக்கப்பட்டால் நலம் மிக விழையும்.

தன் எழிலையெல்லாம் மறைத்து வைத்துக் கொண்டு ஒளிந்து கிடக்கும் அரியதொரு மொழிபெயர்ப்பு அரியேல் செய்த பிரஞ்சு மொழிபெயர்ப்பு. இதில், இன்பத்துப்பாலில் மொழிபெயர்ப்பு ஏறக்குறைய முழுமையாக அமைந்துள்ளது. பிற இருபால்களில் பல அதிகாரங்கள் பிரஞ்சில் திருப்பப் பட்டுள்ளன. புதுச்சேரி வழியாகப் பிரஞ்சு நாட்டை நோக் கித் திறந்து வைக்கப்பட வேண்டிய சன்னல் களில் இது ஒன்று.

குறள் ஆராய்ச்சி நம்மிடையே குன்றுமல் ஓங்கி வளர்ந்து வருகிறது. எனினும், இவ் ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்குத் துணைசெய் யும் கருவிகள் போதிய அளவில் இல்லாத குறை இருந்துகொண்டே வருகிறது Tools for Research அல்லது instruments detravail என வழங்கும் இவ் ஆராய்ச்சித் துணைகள், அஃதாவது அகராதிகள், சொல் ஒப்புமை காட்டும் அகரவரிசைகள் (Concordances), சொல் எண்ணிக்கைகள், இவைபற்றிய கணக்கு கள், பலகோணங்களிலிருந்தும் சொற்களை வரி சைப்படுத்திய அகராதிகள் (Analytical Concordances) சொல்லாக்க அகராதிகள் (Morphological Concordances) சொற்றெடர் பற்றிய குறிப்புகள், சொற் பிறப்பு அகராதிகள் (Etymological Dictionaries) குறள் கூறும் பெருங் கருத்துக்களை வரிசைப்படுத்தி விரித் தெழுதிய அகராதிகள், இவை முதலாயவை குறளுக்குச் சிறப்பான முறையில் வாய்க்க வில்லை. இவை ஆராய்ச்சியை ஊக்குவிக்கத் தேவையானவை. மனம் போன போக்கில் ஆராய்ந்து, தம் தவருன கொள்கையைப் பரப்பிவிட்டுச் செல்வோரைத் தடுக்கவும் இக் கருவிகள் பயன்படும். இவை மொழியியல் ஆராய்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண் டவை, என்பதால் மட்டும் இவற்றை இங்கே நான் குறிப்பிடவில்லை. மொழி ஆராய்ச்சிக்கு மட்டுமன்றி, இலக்கியத் திறனுய்வுக்கும், இலக் கிய வரலாற்றுக்கும் இவையின்றியமையாதவை என்பதை யாவரும் அறிவர்

குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு உழைக்க விரும்பு வோருக்குத் தூண்டுகோலாகவும், உழைத்து வருவோருக்கு ஊக்கமளிக்கும் நிகழ்ச்சியாகவும் இவ்விழா வெற்றி பெறுக!

—தவத்திரு மைக்கேல் பிரான்சிஸ் மாணிக்கம்
ஏல் பல்கலைக்கழகம், யு எஸ். ஏ.

திருக்குறள் உலகப் பொது நூல். இது தோன்றிய காலம் எது? இதனகத்துப் பல்

வேறு சமயங்களின் கருத்துக்கள் செறிந்துள் ளன. எனவே, சமய உணர்ச்சி தோன்றிய காலத்தது என்னலாம். என்றாலும் இன்ன சமயத்தது என்று சொல்லிவிடமுடியாது. தமிழ் நாட்டின் பழைய சமயம் எது? எல்லோரும் தம்தம் சமயமே என்பர். இன்றுள்ள இந்தியச் சமயங்களில் ஆரியக் கலப்புள்ளது. அவ் வாரியக் கலப்பு ஏற்படுவதற்குமுன் இருந்த கருத்துக்களே பழைய சமயக் கருத்துக்கள். இப் பழைய சமயம் என்பது திராவிடமொழி என்பது போலாகும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன திராவிடமொழிகள். இவை யாவும் ஒரு காலத்தில் பிரிவில்லாமல் ஒரே மொழி யாய் இருந்தன. அம்மொழி இன்னதென்று அறியமுடியாததால் அதற்குப் பொதுப் பெய ராகத் திராவிடமொழி என்றார்கள். அம்மொழி, ஆரியச் சொற்கலப்பால் தமிழ் முதலியவாகப் பிரிந்தது. தமிழில் ஆரியச் சொற்கலப்பு எண்ணிவிடும் அளவில் நூற்றுக்கு மூன்று கூட இல்லாததால் தமிழே திராவிடமொழி, மற்றையன அதன் கிளைமொழிகள் என்னலாம். இதுபோலவே சைவம், வைணவம், சைனம், பௌத்தம் முதலிய சமயங்கள் பழைய சமயத் தின் கிளைகளாகும். ஆரியக்கலப்பு எச்சமயத் தில் குறைவாக இருக்கிறதோ அதைப் பழைய சமயம் என்னலாம். அப்பழஞ் சமயத்தின் காலத்தை நிறுவினால் அதுவே திருக்குறள் காலம் என்னலாம்.

—பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்.

திருவள்ளுவர் ஓர் உலகப் பாவலர். அவர் எழுப்பிய வினாக்கள் உலகை நோக்கிய வினாக்கள். அவர் இறுத்த விடைகள் உலகை உள்ளிட்ட விடைகள். அவர்தம் சிந்தனைகள் ஞாலங் கருதிய சிந்தனைகள். அவருடைய அறவுரைகள் அகிலம் அளாவிய அறவுரைகள் அவர்கொண்ட பரிவு வையகப் பரிவு. அவர் தம் பார்வை வையகப் பார்வை. பரிதிமாற் கலைஞர் தம் தனிப்பாசுரத் தொகையில் தெளிந்து மொழிந்தபடி திருவள்ளுவர் 'மனிதர் யாவர்க்கும் இனிய பாவலராய்' இலங்கு கின்றார்.

திருக்குறள் தனக்குவமையில்லாதான் இயல்பை எடுத்துரைக்கின்றது. மக்கள் கடமையை வகுத்துரைக்கின்றது. குடும்பம் சமூகம் நாடு அரசு இவற்றின் செழிப்பிற்கு வழி கூறுகின்றது. குறள்நெறி வெறுங் குறள் நெறியாதல் விரும்பத்தகாதது. அது நாட்டத் தில் கொள்ளுகின்ற செயல் நெறியாதல் வேண்டப் பெறுவது.

நல்லறக் காவலர் வள்ளுவனார் உலகி னர்க்கு உறுதியுரைக்கும் திறம் காண்க. அவர் கூறுவார்: அரியவற்றை எண்ணிச் சொல் லுதல் மனத்திட்பம் இல்லாதவர்க்கும் மிக எளியது. சொல்லியவற்றை நிறைவேற்றுதல் எவர்க்கும் அரியது. எனவே இதனால் தோல்வி மனப்பான்மை கொள்ளுவதா? எண்ணிய வர்கள் அவற்றிற்கு வழியாகிய வினைத்திட்பம் கொண்டிருத்தல் வேண்டும். அப்பொழுது அவர்கள் எண்ணியவற்றை எண்ணியவாறே எய்துவார்கள். அதுமட்டுமா? தொடக்கத் தில் மெய்முயற்சியால் தமக்குத் துன்பமே மிக வரலாம் ஆயினும் அதனால் தளர்தல் ஆகாது. இன்பம் பயக்கும் செயலைத் துணிந்து செய் வோம்; நலம் பெறுவோம்.

—பேராசிரியர், ரம்போலா மாஸ்கரேனஸ்.
திருச்சி.

திருவள்ளுவரின் வாழ்க்கையைப் பற்றி நாம் அறிந்தவை மிகச் சில. அவரது நூலே அவரை நமக்குக் காட்டுகிறது. ஒருவனது சிறுமையையே அவனுடைய நடையுடை பாவ னைகள் விளக்கும்: அவன் இயற்றிய நூலே, அவன் வெளியிட்டுப் பதிவு செய்த கருத்துக் களே, அவனது பெருமையை விளக்கும். முன்னவை சிறிய சாளரங்களை ஒத்தவை பின்னது அகலத் திறந்த பெருவாயிலைப் போன்றது.

திருவள்ளுவரின் நூல் அவரது தெளிந்த காட்சியையும், நிறைந்த அனுபவத்தையும் ஆழ்ந்த கருத்தறி திறனையும், இனிய சொல் வன்மையையும், அனைத்தையும் நடுநிலையி லிருந்தவாறு கண்டு அவற்றில் அடங்கிய உண்மைகளை வெளியிடும் தூய்மையையும் விளக்கும். அவர் பலவற்றையும் நன்கு தெரிந் தவர். தெரிந்ததை நடுநிலை கோணாமல் கூறு பவர், நிறைந்த பண்பும் அறிவும் அன்பும் உடையவர், நிரம்பிய மனிதர் சிறுமை இல்லா தவர், மாட்சிமை மிக்கவர். பிறந்து நானூறு ஆண்டு ஆகிய ஷேக்ஸ்பியரும் இத்தகைய பண்புகள் எல்லாம் உடையவர் என்று கூறப் படுகிறது இவ் இருவர்களுக்கு மட்டும் அல்ல, உலக மகாகவிகள் என்று போற்றத்தகும் அனைவருக்கும்—இளங்கோ, கம்பன், காளி

தாசன், ஹோமர், முதலியோருக்கும்—இப் புகழ் பொருந்தும்.

திருவள்ளுவர் நிறைவுடையவர், நமது நாட்டுக்கும் மொழிக்கும் அழியாப் புகழ் தந்தவர். அமரத்துவம் வாய்ந்தவர். உலக மகா கவிகளில் தலைசிறந்த ஒருவர்.

—திரு. பெ நா. அப்புஸ்வாமி.

தேசீயக் கவிஞன் பாரதி. பல இலக்கிய மேதைகளைப் பாராட்டித் தமது கவிதைகளில் புகழ்மாலை சூட்டியுள்ளான், பலரைப் பாராட்டியிருந்தாலும் திருவள்ளுவரைப் பாரதி பாராட்டிய முறை தனிச்சிறப்புடையது. பாரதி திருவள்ளுவருக்குச் சூட்டிய புகழ்மாலை ''வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்பது. பாரதி தமிழ் நாட்டையே பாராட்டுகிறான் காரணம் திருவள்ளுவரை ஈன்று அவர்வழி உலகு திருக்குறளைப் பெறக் காரணமாக இருந்ததுதான். உலக அரங்கில் ஒரு கவிஞரால் நாடு உலகப் புகழ் பெறுதல் என்பது அருமையினும் அருமை. திருவள்ளுவர் உலகு புகழ் கவிஞர். அவர் அருளிய திருக்குறள் உலகப் பொது மறை. அதனாலன்றோ பாரதியார் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து'' என்று மனங் குளிரப் பாடுகின்றார். திருவள்ளுவரைப் பெற்றமையால் தமிழ்நாடு பெற்ற புகழ் வான்புகழ். வான்புகழ் என்றால் இலக்கண மரபுப்படி மிகச் சிறந்த புகழ் என்று பொருள் கூறுவர். எனினும், நிலமனைத்தும் வானால் சூழப்பெற்றுள்ளது. வான்புகழ் என்றால், வானகம் பரவியுள்ள நிலவுலகமனைத்திலும் நின்று நிலவும் புகழ் என்றும் கொள்ளலாம். மேலும், வானுலகம் போற்றும் புகழ் என்றும் பொருள் கொள்ளலாம். இத்தகு சிறந்த புகழ் திருக்குறளுக்கு எப்படி வந்தது?

இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறள் தோன்றியது. திருக்குறள் தோன்றிய ஆண்டிலும் அதற்கு முன்பும் உலக மொழிகளில் திருக்குறள் போன்ற சிறந்த நூல் ஒன்றும் தோன்றவில்லை. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சாதி, இன, மொழி, சமய வேறுபாடுகளைக் கடந்த ஒரு பொது நூல், காணும் ஆற்றல் தமிழகத்திற்கே இருந்தது. உலகில் மக்களாகப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியிலும் இத்தகையதொரு நூல் திருக்குறள் தோன்றுவதற்கு முன்பு தோன்றியதில்லை. ஏன்? அதற்குப் பின்பும்கூட இது வரையிலும் திருக்குறளுக்கு இணையான ஒரு நூல் தோன்றவில்லை.

நூல்தோன்றிய காலத்தின் தொன்மை மட்டும் நூலின் சிறப்புக்கு முற்றிலும் காரணமாக மாட்டா. நூல் நுதலும் கருத்துக்களும், சிறப்புடையனவாக இருத்தல் வேண்டும் இரட்டுற மொழிதலும், மயக்க நிலையின்பாற்பட்டனவும் கூட இல்லாமையும் வேண்டும் திருக்குறளில் இரட்டுற மொழிதலும், பயனில்சொற் கூறுதலும், ஒழுக்கக் கேடுகள் எனக் குறிப்பிடப் பெறுகின்றது. திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறிகளை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் மிகவும் எளிதேயாகும். திருக்குறள் வாழ்க்கை முறையை, திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறி முறைகளை ஏற்றுக்கொள்ளுதல் சாத்தியமான ஒன்றேயாகும். திருக்குறள் கூறும் ஒழுக்க நெறிகள் கால எல்லைகளுக்குக் கட்டுப்பட்டன வல்ல. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காட்டிய நெறிமுறைகளேயாயினும் இன்றும் கடைப்பிடிக்கக்கூடியனவாக உள்ளன. மேலும் திருக்குறள் ஒழுக்க நெறிகள், சாதி, இனம், பால், சமயம், மொழி, பருவம் ஆகியனவற்றால் மாறுபடக்கூடியனவல்ல. ஒரே மாதிரி ஒழுக்க நெறியே எடுத்துக் கூறப்பெற்றுள்ளது. திருக்குறள் ஒழுக்கநெறி உலகப் பொதுநெறி. மனித குலத்தின் வாழ்க்கை நெறி.

திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறிகள் கற்பனையில் தோன்றியனவல்ல. நடைமுறைப் படுத்த முடியாத அளவு அருமையுடையனவு மல்ல. மிகமிக எளிய ஒழுக்க நெறிகளேயாம். உலகியலுக்கும், உடலியலுக்கும், உயிரியலுக்கும் மாறுபட்ட எந்த ஒன்றையும் திருவள்ளுவர் ஒழுக்கநெறியாக வலியுறுத்தவில்லை. திருக்குறள் ஒழுக்க நெறிகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால், மனிதர்களின் தரம் வீழ்ந்திருக்கிறது என்பது கருத்தேயொழிய அது வலியுறுத்தும் நெறி கடுமையானதல்ல. மேலும், திருக்குறள் ஒழுக்க நெறிகளை எடுத்துக் காட்டும்பொழுதும் இயைந்தவாறு காட்டுவதனல், சிறந்து விளங்குகிறது. நடைமுறைப் படுத்த முடியாத ஒழுக்க நெறிகள் எந்த ஒன்றினையும் திருவள்ளுவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தவும் இல்லை. அதனாலும் திருக்குறளின் புகழ் சிறந்து விளங்குகிறது. மேலும், ஒழுக்க நெறிகளைக் காட்டும்பொழுதும் இயைந்தவாறு, ஒன்றுக்

கொன்று தொடர்பாக முறைப்படுத்திக் கூறியிருப்பது அறிந்தின்புறத்தக்கது. அதுமட்டுமல்ல, உலகியலில் நோய்பற்றிக் கூறுவோர் பலருண்டு. நோயாளிகூடக் கூறிவிடுவான். ஆனால், நோயின் காரணத்தைக் கண்டறிந்து சொல்லுபவர் இல்லை. அப்படியே ஒரு சிலர் கண்டறிந்து சொன்னாலும் நோய் நீக்கத்திற்குரிய மருந்தினைத் தெளிவாக, அறிவியல் அடிப்படையில் காட்டுவதில்லை. திருவள்ளுவர் நோய் கண்டு காட்டினார். நோயின் காரணத்தையும் கண்டு காட்டினார். நோய் நீக்கத்திற்குரிய வழிமுறைகளையும் கண்டு காட்டினார். ஐயந்திரிபறக் காட்டியுள்ளார். மனிதன் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகிறான். இதற்குக் காரணம் அவனுடைய மனமே. மனத்தில் தூய்மை இருந்தால் அதுவே அறம் - பேரறம். பருவுலகில் பல்வேறு அறங்களைச் செய்வதைவிட மனத்தூய்மையைப் போற்றி வளர்த்தல் சிறந்த அறம் என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமின்றி மனத்தூய்மையின்றிச் செய்யப்பெறும் வேறு பல அறங்களை வெறும் ஆரவாரத்தன்மையன என்றும் மறைமுகமாகக் கண்டிக்கின்றார். இந்த மனத்தூய்மையை அறிவாலும், அன்பினாலும் பெறமுடியும் என்று திருக்குறள் வழிகாட்டுகின்றது.

திருக்குறள் ஓர் அறிவு நூல். நம்பிக்கையின் அடிப்படையில் திருவள்ளுவர் எந்த ஒன்றையும் வற்புறுத்தவில்லை. கடவுள் வழிபாட்டதிகாரத்திலும்கூட உலக இயக்கத்தின் பாற்பட்ட அறிவுணர்வின் அடிப்படையிலேயே திருக்குறள் கடவுள் வாழ்த்து தோன்றியுள்ளது. திருக்குறள் காட்டும் அறிவு வெறும் நூலறிவு அன்று. ஆனாலும், கற்றல் கேட்டலின் மூலம் பெறும் அறிவைத் திருக்குறள் மறுக்கவில்லை. திருக்குறள் அறிவு என்று இறுதியாக எடுத்துக்கொள்வது வாழ்க்கையின் அனுபவத்தையொட்டிய உணர்வுகளேயாகும். தீமையினின்றும் விலக்கி நன்மையின்பால் செலுத்துகின்ற அறிவையே அறிவு என்று திருக்குறள் போற்றுகின்றது. தீமைகளுக்குப் பிறப்பிடமாகிய அன்பின்மையைத் திருக்குறள் கண்டிக்கிறது. ஏன்? அறிவின் பயனே அன்பு காட்டுதல். அன்பினால் வளர்தலும் வளர்த்தலுமே அறிவினது ஆக்கம் என்று திருக்குறள் பேசுகின்றது.

'சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.'

'அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை.'

என்ற குறட்பாக்கள் நினைந்தின்புறத்தக்கன. தமிழகச் சமயநெறி இவ்விரு சிந்தனைகளின் அடிப்படையிலேயே தோன்றி வளர்ந்தது. "நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற திருக்குறள் அடியுடன் "நன்றுடையானைத் தீயதிலானை" என்ற திருஞானசம்பந்தர் அருள்வாக்கு ஒப்புநோக்கி உணரத்தக்கது "அறிவினால் ஆகுவதுண்டோ" என்ற திருக்குறளும், "அன்பே சிவம்" என்ற திருமூலர் வாக்கும் ஒப்புநோக்கி இன்புறத்தக்கன. இன்றைய தமிழர் சமய வாழ்வில் இந்த அன்பும், நன்றும் மீதூர்ந்து வளரவில்லை என்பது வருத்தத்திற்குரியது. திருக்குறள் ஓர் அறிவு நூல். முழுதமை அறநூல். உலகப் பொதுமறை. நேற்றும் இன்றும் என்றும் வாழ்க்கைக்குப் பயன்படும் பொதுமறை! அதன் புகழ் வான்புகழ்.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

திருவள்ளுவநாயனார் பயனென் றெடுத்துத் தேற்றப் பொருள்வகைக் கியற்றமிழாய் விரித்துரைப்பப் பதிகமாவது, வேதநூன் முதலெவ்வகை நூலுங் கல்லாதுணரவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ் ஞானத் திருக்கடலாகியவொரு மெய்க்கடவுடன் திருவடி மலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, யிருளிராவிடத்து விளங்கிய வொருமீன் போலவும், பாலைச்சுரத்தரிதலர்ந்த பதுமம்போலவு மெய்யாஞ்சுருதி விளக்காதிருளே மொய்த்த நாட்டின் கண்ணுங் கடவுளேற்றிய ஞானத் திருவிளக்கெறிப்பத் தெளிந்துணர்ந்தெங்கு மொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்......

—வீரமாமுனிவர்.

திருவள்ளுவரைப் போற்றாத மக்களில்லை, மதத்தினரில்லை, மொழியினரில்லை என்றே திட்டமாகக் கூறலாம். கடவுள் என்ற ஒருவர் எவ்வாறு எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடுமின்றி உரியவராகின்றாரோ, அவ்வாறே திருவள்ளுவரும் எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடுமின்றி உரியராகும் பெற்றியுடையார். திருவள்ளுவரைப்போலச் சிறந்த புலவரிலரோ என்று கேட்டால், உளர்; பலருளர். ஆயினும், அவர்களெல்லோரிலும் திருவள்ளுவரே உலகப் பொதுநோக்கங் கொண்டுழைக்கும் ஓரியக்கத்திற்கு உகந்த புலவர் பெருமானவர். —கா. நமச்சிவாய முதலியார்.

"Some of the Sayings (of Cural) are probably as old as the earliest writings of the Old Testament."

"The Cural of Tiruvalluvar is a poetical work on morals of great merit."

"The author commences his book with an acknowledgment of God, in a style, which in the production of a heathen, we cannot but greatly admire and throughout the whole he evinces a singular degree of freedom from many of the strong prejudices of the Hindus."

—*The Rev. Elijah Hoole D. D.*
(in "Personal Narrative")

"Called the first of works from which whether for thought or language there is no appeal, the Cural has a strong claim upon our attention as a part of the literature of the country and as a work of intrinsic excellence. The author passing over what is peculiar to particular classes of society and introducing such ideas only as are common to all, has avoided the uninteresting details of observances found in Manu and the other shastras and thus in general maintains a dignified style."

—*Rev. W. H. Drew.*

"Men like Tiru-valluvar and Siva-Vakyar used their tongues and pens in favour of Deism and against the ceremonial Polytheism of the Brahmans......To those who know the Iliad, the Ænid, the Divine Comedy, Paradise Lost and the Nibelungen Leid as the epics of the great nations, it seems incredible that thirty millions of people should cling to a series of moral essays as their typical and honoured book. There is no doubt of the fact that the *Cural* is as essentially the literary treasure, the poetic mouth-piece, the highest type of verbal and moral excellence among the Tamil people as ever Homer was among the Greeks. We can only explain it by the principle that the whole aspect of the Dravidian mind is turned towards moral duty. May we not imagine that it was this moral tendency of the masses, which prepared the way for and maintained the existence of Buddhism? The Brahmans frequently explain the tone of Tiruvalluvar, Siva-vakyar, Cabilar, Ouvay, and the other early Dravidian poets by asserting that they were Jains. There is no proof of this; but it can hardly be doubted that both Buddhism and Jainism reflected the same popular tendency that we see in the early poets. The Brahmans extirpated Buddhism in India by fire, sword and relentless persecution. They could not touch the *fons et origo* from which the rival religion derived its life. By careful avoidance of theological discussion, Tiru-valluvar saved his work from the flood that destroyed every avowed obstacle in its grievous course. The Brahmans could find no ground for persecution. No priest can openly condemn the poet who called upon wives to love their husbands, upon men to be truthful, benevolent and peaceful, who enjoined mildness and wisdom on those who governed and justice and obedience and willing aid on those who were ruled. ....Its (*Cural's*) sentences are counted as binding as the Ten Commandments on the Jews. Its very language has become the test of literary excellence. It is no exaggeration to say that it is as important in Tamil literature, as influential on the Tamil mind, as *Dante's* great work on the language and thought of Italy."

—*Charles E. Gover*
(in "Folk Songs of Southern India)"

"Mr. Gover may be right in saying that Valluvar uses no word against a priest. He certainly does not directly oppose the sacredotal orders, but in such a work silence is significant. Brahmans are not necessarily priests, they are rather the patrons and employers of priests. A title of Brahmans is *Anthanar* and the poet insinuates that they do not deserve to be so called. The epithet beautiful or cool-minded belongs to the self-controlled and unworldly. "The virtuous are truly called *Anthanar*, because in their conduct towards all creatures they are clothed in kindness." The whole work amounts to a protest against religious pretence, imposition and oppression. There is a vein of satire in it against the Gods of the Brahmans."

—*Rev. E. J. Robinson*
(In "Tales & Poems of South India")

"Tiruvalluvar. supposed to have been a Pariar (was) yet the acknowledged and deified prince of Tamil authors.

"The compositions that are universally admitted to be the finest in the (Tamil) language, viz., the Kural and the Chintamani, are perfectly independent of Sanskrit and original in design as well as in execution."

—Rt. Rev. Robert Caldwell, D.D., L.L.D.

The Kural of Tiruvalluvar, a work consisting of 1330 distichs, or poetical aphorisms, on almost every subject connected with morals and political economy, and which is regarded by all Tamilians (and perhaps justly) as the finest composition of which the Tamil can boast appears to be not only the best but the oldest Tamil work of any extant which is now in existence.

—Caldwell *(Comp. grammar p 85)*

"The Kural is the master-piece of Tamil literature—one of the highest and purest expressions of human thought.

"That which, above all, is wonderful in the Kural is the fact that its author addresses himself, without regard to castes, peoples, or beliefs, to the whole community of the mankind; the fact that he formulates sovereign morality and absolute reason; that he proclaims in their very essence, in their eternal abstractedness, virtue and truth; that he presents, as it were, in one group the highest laws of domestic and social life; that he is equally perfect in thought, in language and in poetry, in the austere metaphysical contemplation of the great mysteries of their Divine Nature, as in the easy and graceful analysis of the tenderest emotions of the heart."

—M.Ariel.

"No translation can convey an idea of its charming effect. It is truly apple of gold in a net-work of silver."

—Dr. Graul.

"The weaver of Mylapore was undoubtedly one of the great *geniuses of the world* Complete in itself, the sole work of its author (The Kural) has come down the stream of ages absolutely uninjured, hardly a single various reading of any importance being found."

"In value it (Kural) outweighs the whole of the remaining Tamil literature and is one of the select number of great works which have entered into the very soul of a whole people and which can never die."

"Sir A. Grant says, 'Humility, charity, and forgiveness of injuries, are not described by Aristotle'. Now these three are everywhere forcibly inculcated by this Tamil Moralist."

கற்பு நெறியைப் போற்றாமல் பொருளாசை கொண்டு ஆடவரை நாடி வாழும் மகளிர் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் உண்டு. பழங்காலத்தில் அத்தகைய மகளிரின் வயிற்றில் பிறந்த மகளிரும் அதே வகையான வாழ்க்கையை நடத்துதல் இயல்பாக இருந்தது. ஆகவே, அவர்கள் ஒரு குலம் ஆயினர். அவ் வாழ்க்கையே குலத்தொழில் எனவும் கருதப்படலாயிற்று. தொல்காப்பியனார்காலத்திலும் சங்க நூற் காலத்திலும் அவர்கள் பரத்தையர் என்று குறிக்கப்பட்டனர். இற்பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி எனும் சொற்கள் உரையாசிரியர்களால் ஆளப்பட்டன. கணிகையர், பொதுமகளிர், விலைமகளிர் என்னும் சொற்களும் பிற்காலத்தே அவர்களைக் குறிக்க வழங்கலாயின.

சங்கநூற் காலத்தை அடுத்து எழுந்த நூலாகிய திருக்குறளில் 'வரைவின் மகளிர்' என்ற சொல் அவர்களைக் குறிப்பதாய், ஓர் அதிகாரத்தின் தலைப்பாய் உள்ளது. ஒருவனுக்கு உரிமையாதலின்றி ஒழுக்க வரையறையின்றி வாழ்தல் பற்றி அப்பெயர் அவர்களுக்கு இடப்பட்டது. அச் சொல் திருக்குறளுக்கு முந்திய நூல்களிலும் ஆளப்படவில்லை; பிந்திய நூல்களிலும் போற்றப்படவில்லை. திருவள்ளுவர் இந்தப் புதுச் சொல்லைப் படைத்து அதிகாரத்தின் தலைப்பும் ஆக்கியது வியப்பாக உள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறளில் ஒரே ஒரு குறளில் மட்டும், அதன் முற்பகுதி அமைந்துள்ளது. 'வரைவிலா' என்ற அடை கொடுத்து அம் மகளிரைக் குறிப்பிடுகின்றார். மற்ற ஒன்பது குறட்பாக்களிலும் வேறுவேறு தொடர்களே உள்ளன.

"அன்பின் விழையார் பொருள்விழையும்
ஆய்தொடியார்"

"பயன் தூக்கிப் பண்புரைக்கும் பண்பில்
மகளிர்"

"பொருட் பெண்டிர்"

"பொருட் பொருளார்"

"பொதுநலத்தார்"

"தகைசெருக்கிப் புன்னலம் பாரிப்பார்"

"பிறநெஞ்சில் பேணிப் புணர்பவர்"

"மாய மகளிர்"

"இருமனப் பெண்டிர்."

திருவள்ளுவர் அமைத்துள்ள இந்த ஒன்பது தொடர்களும் அம் மகளிரின் இயல்புகளை எடுத்துரைப்பனவாக உள்ளன. அன்பு இல்லாதவர்கள், பொருளே நோக்கமாகக் கொண்டு உறவு கொள்வோர், கிடைக்கும் பயனுக்கு ஏற்ற அளவு அன்பு காட்டுவோர், நல்ல பண்பு இல்லாதவர்கள், பலருக்கும்

பொதுவாகத் தம் அழகை விற்பவர், அழகால் செருக்குக் கொண்டவர்கள், போற்றத்தகாத சிறுமையவாகிய அழகையும் இன்பத்தையும் தருவோர், நெஞ்சில் வேறொன்றை விரும்பி உறவு கொள்வோர், மாயத் தன்மை—வஞ்சம்—உடையவர்கள், ஒரு நெறியில் நிற்காமல் இரு வகையாகப் பொருளுக்காகவும் இன்பத்துக்காகவும் வேறுபடும் மனம் உடையவர்கள் என்று அவர்களின் இயல்புகளை உரைத்துள்ளார்.

ஏதோ ஒரு காரணம் பற்றி அவர் தம் காலத்தில் பயின்று வழங்கிய ஒரு சொல்லை—பரத்தை என்ற சொல்லை—இந்த அதிகாரத்தில் வழங்காமல் விட்டார். வேண்டுமென்றே வேறொரு சொல்லைப் படைத்து, அதையும் ஒரே குறளில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

கற்பொழுக்கத்தில் அமைந்த ஆறு பிரிவுகளுள் ஒன்று பரத்தையிற் பிரிவு. ஐந்திணை ஒழுக்கத்துள் மருதத்தின் உரிப்பொருளாய் அமைந்தது பரத்தையிற் பிரிவின் காரணமாக நிகழும் ஊடல். இவ்வாறு தொல்காப்பியத்திலும் சங்கப் பாட்டுக்களிலும் அமைந்து இலக்கிய மரபாகப் போற்றப்பட்டு வந்த பரத்தையிற் பிரிவைத் திருவள்ளுவரின் காமத்துப்பால் குறிப்பால் புலப்படுத்துகிறதே அன்றி, வெளிப்படையாக விளக்கவில்லை. ஆனால், ஊடல் பற்றி விரிவாக—கற்பனை நயம் நிரம்ப—மூன்று அதிகாரங்கள் அமைந்துள்ளன. புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என்னும் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவரின் புலமைச் சிறப்பை விளக்குவனவாக உள்ளன. ஊடல் பற்றி இவ்வாறு சிறப்புற விளக்கும் இந்த முப்பது குறட்பாக்களிலும், பரத்தையைக் காணமுடியவில்லை—'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில் கண்ட மகளிரைக் காணமுடியவில்லை; அந்த அதிகாரத்தில் அம் மகளிரைக் குறிக்க வழங்கிய சொற்களும் இந்தக் குறட்பாக்களில் இல்லை. இந்த முப்பது குறட்பாக்களில் பரத்தை என்ற சொல் இல்லையாயினும், அதன் தொடர்பான வேறொரு சொல் உளது. அது 'பரத்த' என்பதாகும்.

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின்
பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு." (*1311*)

இந்தப் 'பரத்த' என்ற சொல், வரைவின் மகளிரை—பரத்தையரைக்—குறிப்பது அன்று; மகளிரைக் குறிப்பது அன்று. ஓர் ஆண் மகனை—தலைவனைக்—குறிக்கும் விளியாகும்.

இலக்கண இலக்கியங்களில் பயின்று வழங்கிய பரத்தை என்ற சொல்லைத் திருவள்ளுவர் ஆளாமைக்கும், எதிர்பாராவகையில் 'பரத்த' என்று ஆண்மகனைக் குறிக்க வழங்கினமைக்கும் காரணம் என்ன? திருவள்ளுவர் இலக்கிய மரபைப் புறக்கணித்தார் என்றோ, மறந்தார் என்றோ கூறல் இயலாது.

திருக்குறளில் 'உழவு' என்ற அதிகாரத்தில் உழவின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. உழவு மருதநிலத்திற்குச் சிறப்பாக உரியதாகும். அங்கு வயலும் வயல் சார்ந்த இடமும் ஆசிரியரின் நினைவுக்கு வருதல் இயல்பே ஆகும். ஆயின், உழவு என்னும் தொழில் பற்றிக் கூறும் இடமாதலின், அகப்பொருள் பற்றிய தொடர்களுக்கு அங்கு இடமே இல்லை. அவ்வாறு இடமில்லாதிருந்தும், மருதநிலத்தின் கருப்பொருள் ஆசிரியரின் நினைவுக்கு வருகிறது. அந்த இலக்கிய மரபு நினைவுக்கு வரவே, 'கிழவன்' 'புலந்து', 'ஊடி' என்ற மூன்று சொற்கள் ஒரு குறட்பாவில் அமைகின்றன.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்."

ஊடல் என்னும் கருப்பொருள் இங்கு உவமையில் அமைந்துள்ளமை காணலாம். உழவு—மருதம்—அகப்பொருள்—மருதக் கருப்பொருள்—அகப்பொருட் சொற்கள் என்று இவ்வாறு எண்ணக் கோவையால் எழுந்த உவமை இது. இவ்வளவு செம்மையாக இலக்கிய மரபை உழவு என்னும் அதிகாரத்தில் போற்றிக் கையாண்ட ஆசிரியர், அகப்பொருள் விளக்கமாகவே அமைந்த காமத்துப் பாலில் அந்த இலக்கிய மரபைப் புறக்கணித்தார் என்றோ, மறந்தார் என்றோ கூறுதல் சிறிதும் பொருந்தாது.

அவ்வாறாயின், உண்மையான காரணம் என்ன?

உலகத்துச் சான்றோர் அனைவரும், தாம் தாம் வாழ்ந்த காலச் சூழ்நிலையைவிடப் பல மடங்கு பண்பாலும் அறிவின் தெளிவாலும் உயர்ந்து நின்றவர்கள். தம் சுற்றுப்புறத்தின் நிலைமையை மற்றவர்களைவிடத் தெளிவாக உணர வல்லவர்கள். ஆதலால், மற்றவர்கள் குறைகள் என்று உணராத நிலையிலே அவற்

றைக் குறைகள் என்று உணர்ந்து பிறர்க்கு உணர்த்தவும் தலைப்பட்டவர்கள். அவ்வாறு உணர்த்திய காரணத்தாலேயே சிறையும் நஞ்சும் ஏற்கும் நெருக்கடிக்கு உள்ளானவர் கள்; தெளிவும் முற்போக்கும் இல்லாத சுற்றுப் புறத்தால் வெறுப்பும் ஒறுப்பும் பெற்றவர்கள். திருவள்ளுவர் அத்தகைய உலகச் சான்றோர் களில் ஒருவர். ஆயின், நூலளவில் தம் கருத்துக்களைப் பொறித்துவைத்து அமைதி யாக வாழ்ந்தமையால், சுற்றுப்புறத்தின் வெறுப்பும் ஒறுப்பும் அவரை எட்டவில்லை போலும்.

தொல்காப்பியமும் சங்கப் பாட்டுக்களும் காட்டிய பரத்தையர் பற்றிய இலக்கிய மரபு அவர்தம் உள்ளத்திற்கு இயைந்ததாக இல்லை. பரத்தையரால் தலைவன் பிரிவான் என்பதும், அதனாலேயே ஊடல் நிகழும் என்பதும் அவர் ஏற்றுக்கொள்ள விரும்பாத மரபுகள் ஆயின. ஆதலின், சங்க நூல்கள் போற்றிப் பாடிய கள்ளைச் சிறிதும் போற்றாமல் அடியோடு பழித்துக் கூறியதுபோலவே, திருவள்ளுவர் அந்தப் பரத்தைமை யொழுக்கத்தைப் பொருட்பாலில் 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில் கடிந்துகூறத் தலைப்பட்டார். அக் காரணத்தா லேயே, பழைய மரபுகளை நினைவூட்டும் 'பரத்தை' முதலான சொற்களையும் விலக்கினார். ஆயினும், காதலரின் வாழ்வில் ஊடலுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு என்பதை உணர்ந்தவ ராதலின், அந்த ஊடலை விளக்குவேன் என்று துணிந்தார்; ஆயின் பரத்தையிற் பிரிவு இல்லாமலே, பரத்தையர் இல்லாமலே, புது வகையில் பாடுவேன் என்று முன்வந்தார்; முயற்சியில் வெற்றியும் பெற்றார். கோட்டுப் பூச் சூடுவதால் ஊடல், தும்மலால் ஊடல், உள்ளினேன் என்ற சொல்லால் ஊடல், நினைத்திருந்து நோக்குதலால் ஊடல் எனப் புதுவகைக் காரணங்களால் ஊடல் விளைதலைப் பாடித் தமிழிலக்கியத்திற்குக் கலைச் சுவை மிக்க செல்வத்தை நல்கினார்.

'பரத்தை' என்ற சொல்லையும் ஆளக் கூசினார் அவர்; அம் மகளிரைப் பழித்து அவர்களை நாடிச் சென்று உறவு கொண்டு வாழும் தலைவனைப் புகழ அவர்க்கு மனம் இல்லை; மாறாக, வேண்டுமென்றே பழி வாங்குவார்போல், அம் மகளிரை மறைத்து, தலைவனையே பரத்தன் என்று பழித்துவிட்டார் ஒரு குறளில்.

இந்தப் புரட்சி நெஞ்சத்தை 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்திலும் காணலாம் போலும்! அந்த அதிகாரத்தில் பின்வரும் தொடர்களில் அம் மகளிரைக் குறிக்கும்போது, திருவள்ளுவரின் நெஞ்சில் வெறுப்புக் காணோம் :—

"பொருள் விழையும் ஆய்தொடியார்"
"பொருட் பெண்டிர்"
"பொருட் பொருளார்"
"மாணிழையார்."

பின்வரும் தொடர்களில் அம் மகளிரைப் பழிக்கும் குறிப்பு உள்ளது :—

"அன்பின் விழையார்"
"பண்பில் மகளிர்"
"பொதுநலத்தார்"
"தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார்"
"பிறநெஞ்சில் பேணிப் புணர்பவர்"
"மாய மகளிர்"
"வரைவிலா மாணிழையார்"
"இருமனப் பெண்டிர்."

அத்தகைய மகளிரை நாடி ஒழுக்கம் கெடும் ஆடவர் பற்றிய தொடர்களைக் காணின் திரு வள்ளுவர் அந்த ஆடவர்களைப் பழித்திடும் குறிப்பு எத்தகையது என உணர்வோம் :—

"நிறைநெஞ்சம் இல்லவர்"
"ஆயும் அறிவினர் அல்லார்"
"புரையிலாப் பூரியர்கள்"
"திருநீக்கப் பட்டார்."

ஆடவர்களைப் பழிக்கும் இந்தத் தொடர் களில் திருவள்ளுவரின் வெறுப்பில் கடுமை புலனாகின்றது. பரத்தையரை மட்டும் பழித்து, அவர்களை நாடும் ஆடவரை வாளாவிடுதல் கூடாது என்று அவர்தம் புரட்சி நெஞ்சம் கருதியது. அதனால், பரத்தை என்ற சொல்லை யும் சொல்லாது மறைத்து, பரத்தன் என்ற ஆண்பாற் சொல்லின் விளியை அவர் அமைத் துள்ளார் எனலாம்.

திருவள்ளுவரும் இந்நாளைய கல்விக்கொள்கையும்

[பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்]

பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 8-1-1901இல் பிறந்தார். தமிழொடு சட்டமும் பயின்று பட்டங்கள் பல பெற்ற இவர் தமிழுக்காக அயராது தொண்டுபுரிந்து வருபவர். தற்பொழுது தண்டமிழ் பரப்புவதையே தன் தனிக்கொள்கையாகப்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையின் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மொழியியல் துறையில் இவர் தமிழுக்குச் செய்துவரும் தொண்டு பெரும் புகழுக்குரியது.



வள்ளுவரைப் பற்றி எண்ணுவதே பெரும் பேறு என்ற எண்ணத்தையுடைய பேராசிரியர் 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' 'வள்ளுவரும் மகளிரும்' என்ற இரு நல்ல நூல்களை வெளியிட்டுள்ளார். அவ்வப்பொழுது பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை யெழுதி இதழ்களில் வெளியிட்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கட்டளைச் சொற்பொழிவில் 'வள்ளுவரின் தத்துவம்' என்ற பொருள் பற்றி உரையாற்றியுள்ளார்.

குறளின் புதுமை

திருவள்ளுவர் காலத்தைக் கடந்த ஞானி. அவருடைய திருக்குறள் மிகப் பழையது; என்றாலும் இன்றைய புது உலகில் புத்தம் புதியதாக எழுதிய ஒன்றுபோலத் தோன்றுகிறது. இதற்குச் சான்றாகக் கல்வியைப்பற்றி அவர் கூறியிருப்பதை எடுத்துக் கொள்ளலாம்.

* * * *

'விலங்கொடு மக்கள்'

கல்வி என்பது பொருட்பாலில் வருகிற இரண்டாம் அதிகாரத்தின் தலைப்பு. பொருட்பால் அரசியலைப் பற்றிக் கூறுகிறது. அதன் முதலதிகாரம் இதனைத் தெளிவாக்குகிறது. அந்த அதிகாரம் இறைமாட்சியைப் பற்றியது. அரசன் அரசியலுக்கேற்ற நூல்களைக் கற்றிருக்கவேண்டும். அத்தகைய நூல்கள் எவை எவை? இந்தக் கேள்வியைப் பற்றிப் பிற அரசியல் நூல்கள் நெடுக ஆராய்கின்றன. "நீதிநூல் கற்பதா? அறநூல் கற்பதா? தண்டனையைப் பற்றிக் கற்பதா? பொருள் வருவாயைப் பற்றிக் கற்பதா?" என்று ஆராய்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாக முடிவு கூறியிருக்கப் பார்க்கிறோம். ஆனால் வள்ளுவர் அப்படிப்பட்ட ஆராய்ச்சியில் நுழையவில்லை. அரசனும் மனிதன். அந்த அடிப்படையில் அரசனும் மனிதனேயாதலின் பிற மனிதர்போல அவனும் கற்கவேண்டும் என முடிவுகட்டுகிறார். கற்றவன்தான் மனிதன்; கல்லாத பிறப்பு விலங்கின் பிறப்பே. இதுதான் வள்ளுவரின் முடிவு.

புகையைப் பார்க்கிறோம். அந்த அறிகுறியால் நெருப்பு உண்டென்று அறிகிறோம். சிலபோது இப்படிப் புகையும் நெருப்பும்போல எப்பொழுதும் தொடர்ந்து நிகழாதவையும் அறிகுறியாகலாம். ஒரு நாயின் முன்னே உணவை வைத்தால் அதன் வாயில் நீர் ஊறும். ஆனால் உணவு வருவதற்கு முன்னே எப்பொழுதும் மணியடிப்பதைக் கேட்டுப் பழகிய அந்த நாய் மணியடித்ததும் நாவில் நீரூறி நிற்கிறது. அதாவது மணியடிப்பதை உணவு வருவதன் அறிகுறியாகக் கொள்கிறது. இந்த அளவுக்கு விலங்குகளுக்கும் அறிவுண்டு. இதனை மனத்திற்கொண்டு அவற்றைப் பழக்கலாம். ஆனால், மனிதனே ஒரு தொடர்பு இல்லாதவற்றையும் அறிகுறிகளாகக் கொள்கிறான். இதனை அடையாளமென ஒரு குறித்த பொருளில் வழங்குவோமாக. ஒரு யானையின் விலை 'எக்ஸ்' என்று வைத்துக் கொள்வோம் என்று நாம் கணக்குப் போடவில்லையா?

சக்ஸுக்கும் யானைக்கும் என்ன தொடர்பு உண்டு? இப்படியே நாம் பயன்படுத்துகிற ஒவ்வொரு சொல்லும் அடையாளங்களே யன்றி அறிகுறிகளல்ல. ஒரு பொருளைத் தமிழன் 'நீர்' என்கிறான்; ஆங்கிலேயன் 'வாட்டர்' என்கிறான்; இந்தி பேசுபவன் 'பானி' என்கிறான். பிரெஞ்சுக்காரன் 'லோ' என்கிறான். இவை அந்தந்த மொழியில் அவரவர்கள் ஆக்கிக்கொண்ட அடையாளங்கள். நீரென்ற பொருளுக்கும் அச்சொற்களுக்கும் ஒருவகைத் தொடர்புமில்லை. ஆனால், நாளடைவில் அந்தந்தப் பேச்சில் அவையவை அறிகுறிகள்போ லமைந்துவிட்டன.

இந்த ஆக்க நிலையை ஊன்றிப் பார்க்க வேண்டும். இங்கே ஒலியே பொருளைக் குறிக்கிறது. இப்படி ஒவ்வொரு பொருளையும் குறிக்க வெவ்வேறு தனித்தனி ஒலிகளை அமைப்பதென்றால் கோடிக்கணக்கான ஒலிகள் வேண்டும். எனவே இன்னொரு செயற்கை நிலை இங்கே விளைகிறது. ஒரு சில ஒலிகளை வைத்துக்கொண்டு அவற்றைப் பலவகையாகக் கூட்டியமைத்துப் பொருள் தரும் பல சொற்களை அமைக்கமுடியும். ஒரு பொருளுக்கு ஒருசொல் என்று படைத்து அமைப்பது ஓர் ஆக்கப்பாடு. இதைத்தான் சொல்லதிகாரம் விளக்குகிறது. தனித்தனியாகப் பொருளில்லாத ஒலிகளில் சிலவற்றை மட்டும் எடுத்து அவற்றைப் பல வகையாகக் கூட்டி மொழியிலுள்ள சொற்களை யெல்லாம் அமைப்பது மற்றோர் ஆக்கப்பாடு. இதனை எழுத்ததிகாரம் விளக்குகிறது. எனவே நம்முடைய பேச்சில் எழுத்துநிலை, சொல்நிலை என இரண்டுண்டு. இப்படிப்பட்ட அடையாளங்களைப் படைத்துக் கொள்வது விலங்குகளுக்கு முடியாது. ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த சூழ்நிலையில் வழங்கும் மொழியினைக் கற்றுக்கொள்கிறான். எழுத்தாகவும் சொல்லாகவும் அமைந்த இதனை அறிவதே மனிதன் பெருமை. இல்லையானால் அவன் ஒரு விலங்கே! அரசனும் இப்படித்தானே கற்கவேண்டும்?

*　　*　　*　　*

'கண்ணுடையர்'

ஆனால், கல்வி என்பது நம்மிடையே பேச்சு மொழியோடு நில்லாமல் நூல்களையும் கற்பதாக அமைகிறது. மீனாய், பறவையாய், விலங்காய், மனிதனாய் வந்த பரிணாமம் (Evolution) ஒன்றுண்டு. உடலமைப்பினை ஒட்டிய பரிணாமம் இது. ஆனால், மனிதனை பின் எந்த வகையில் பரிணாமம் நிகழ்கிறது? மனிதன் கூட்டமாகக் கூடி வாழ்பவன். தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயம் உலகிடையே வாழ்ந்து வருகிறது; பெரிய பெரிய உண்மைகளைக் கண்டு வருகிறது. அவ்வாறு கண்ட உண்மைகளுக்கு ஏற்பச் செயற்படுகிறது. இவ்வாறு உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நிலையில் எதிர்ப்பையெல்லாம் கண்டு ஈடு கொடுத்து மாறி வெற்றி பெறுகிறது. இவ்வாறு ஒரு தலைமுறை கண்ட வெற்றி அடுத்து வரும் தலைமுறையிலும் படிகிறது. பிற விலங்கு, பறவை முதலியவையிடத்திலோ உடல் வகையாகவே இந்த வெற்றியின் போக்குப் படிந்து விடும்; ஆனால் அப்படிப்பட்ட உடல் மாற்றம் மனிதனது நரம்பு அமைப்பிலோ, உறுப்பமைப்பிலோ நிகழக் காணோம். தேனீக்கள் தாம்கண்ட தேன் பல 'கிலோ மீட்டர்' தூரத்தில் இருப்பதைத் தெரிந்து வந்ததும் பிற தேனீக்களுக்கு வளைந்தும், கோணியும், கூத்தாடிக் காட்டிவிடுகின்றன. இந்தக் கூத்தை எந்தத் தேனீயும் கற்றுக் கொள்வதில்லை. அது இயல்பூக்கம் என அதனுடலில் இயற்கையாக அமைந்துள்ளது. ஆனால், நமக்கோ அப்படியில்லை. நியூட்டன் கண்ட இயக்கச் சட்டத்தையோ, திருக்குறளையோ, 'சைக்கிள்' ஓட்டுவதையோ நம்முன் தலைமுறை அறிந்திருந்தாலும் நாம் அவற்றை இயல்பூக்கமாக நம் உடலின் இயற்கையமைப்பில் பெறுவதில்லை.

இங்கேதான் மற்றொரு பரிணாமவகை எழுகிறது எனலாம். சமுதாயத்தில் வாழும்போது அந்தச் சமுதாயம் அதுவரையில் அறிந்தவற்றை நாமும் அறிகிறோம். மேலும் நாம் புதியனவாகப் பலவற்றை அறிகிறோம். இவ்வாறு எல்லையில்லாத ஒரு வளர்ச்சி மனித சமுதாயத்தில்தான் எழுகிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் பாரதியைப் படித்திருக்கமுடியுமா? ஐன்ஸ்டைன் கொள்கையை அறிந்திருக்கமுடியுமா? ஆகாய விமானத்தில் பறந்திருக்கமுடியுமா? தகப்பனாரின் தோளில் ஏறிய குழந்தை தகப்பனாருடைய கண்ணில் படாதனவற்றையெல்லாம் பார்க்க முடிகிறது. இப்படித்தான் ஒவ்வொரு தலைமுறையின் தலையிலும் பின்வரும் தலைமுறை ஏறிநின்று உயர்கிறது.

ஆனால் எங்கேயெங்கேயோ வாழ்ந்த சமுதாயம் கண்டவற்றையெல்லாம் நாம் எப்படி அறியக்கூடும்? இங்கேதான் மற்றொரு வளர்ச்சி எழுந்தது. பேச்சுமொழியாக இருந்த தனை எழுத்தாக எழுதிவைக்கும் புதுமை உல கில் ஒருநாள் தோன்றியது. அந்த எழுத்துக் கள் நிலைத்திருக்கின்ற வரையில் அவற்றைக் கற்கின்றவன் அவற்றின் வழியே பழங்கால உண்மைகளையெல்லாம் அறிந்துகொள்கிறான். எண்ணாயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்த எகிப்தின் வரலாற்றை யறிகிறோம். இவ்வாறே பழைய வரலாறுகளையும் நூல்களையும் கற்றுக் கொள்கிறோம். காலத்தைக் கடந்து வருகிற மனிதனது அறிவு இவ்வாறு காலத்தையும் கடந்து வருகிற ஆற்றலைப் பெறுகிறது. வானொலி பிறப்பதற்கு முன்னரே அமெரிக்காவிலோ பிற நாடுகளிலோ வாழ்கின்றவர்கள் பிறருக்குத் தாம் கண்டதைக் கூறி வந்தார்கள். எப்படி முடிந்தது? கடிதம் எழுதுவதாலேயே முடிந் தது. இங்கே எழுத்து வழியாக அறிவு இடத் தையும் கடந்து வரக் காண்கிறோம். எழுத்துச் செய்த புரட்சி இவ்வளவு பெரியது. எனவே எழுத்தைக் கற்ற மனிதனுக்கு ஓர் ஏற்றம் உண்டாகிறது. வரிவடிவாக ஏதோ கீறிவைத்த வற்றிடையே அறிவுண்மையைக் கற்றவர் கண் காண்கிறது. அப்படிக் காணாதபோது அவனை மனிதனாகவே சமுதாயம் கருதுவதில்லை. நீட்டோலை வாசிக்கமுடியாமல் நின்றவனை விலங்கென்று கூடச்சொல்லாமல் மரமென்றே நம்முடைய நூல்கள் பழிக்கின்றன. அவன் நடமாடும் பிணம். ஆதலின் பிணம்போலச் சுட்டெரிக்கப்படக் கூடிய ஒரு மரக்கட்டை என்றே அந்த நூல்கள் கருதுகின்றன. கற்ற வர்கள்தாம் கண்ணுடையவர்கள்; மற்றவர்கள் கண்ணெல்லாம் நோய் முதலியவற்றினால் துன்பஞ் செய்யும் புண்களேயாம். தேய மிடையிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றை யும் காணும் ஞானக் கண்ணுடைமையின் கற்றா ரைக் கண்ணுடையர் என்பர் என்று பரிமே லழகர் விளக்குகிறார்.

* * * *

'எண் என்ப'

நாம் எழுதும் எழுத்து இரண்டு வகை யாக உள்ளது. அ, ஆ என்று எழுதும் எழுத் துக்கள், 1, 2 என எண்ணை எழுதும் எழுத் துக்கள். முன்னதை எழுத்து என்கிறோம். பின் னதை எண் என்கிறோம். இந்த இரண்டுந்தாம் கண்ணென்கிறார் வள்ளுவர். எண்ணென்பது கணக்கு என்றார்கள் பழைய உரையாசிரியர் கள். இந்தக் காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி எல்லாம் அதனைக் கணக்காக எழுதிக் காட்டு வதில் அமைந்துள்ளது. இதனால் கணக் கென்பதே விஞ்ஞான உலக அரசி என்று கூறிவருகின்றார்கள். மற்றொரு வளர்ச்சியும் உண்டு. இன்று தருக்க ஆராய்ச்சியினையெல் லாம், தத்துவ ஆராய்ச்சியையெல்லாம் கணக் காகவே எழுதிக் காட்டிவிடலாம்; அப்படி எழுதிக் காட்டினால்தான் உண்மை விளங்கும் என்று முடிவு கட்டுகின்றவர்களும் உண்டு. இந்தக் கண்கொண்டு நோக்கும்போது இந்தக் குறளுக்குப் புதிய பொருளொன்று தோன்று கிறது. இலக்கியம் முதலிய கலைகளை எழுத் தென்றும், விஞ்ஞானம் தருக்க ஆராய்ச்சி முதலியவற்றை எண்ணென்றும் கூறிவிடலாம். இன்று வளர்ந்துள்ளபடி இவ்விரண்டினையும் மக்களுக்கு இருக்கவேண்டிய இரண்டு கண் கள் எனலாம். ஒன்று தருக்கவகை அல்லது விஞ்ஞான வகை. அது எண்ணத்தின் ஆராய்ச்சி. மற்றொன்று அதே உண்மைகளை எல்லோரும் கண்டு உணரும் வகையில் கற்பனையால் சித்திரித்து எல்லோரும் மனக் கண்ணால் உணர்ச்சியோடு கண்டு மகிழ வைக்கும் எழுத்து. எண்ணென்பதற்குக் காளிங்கர் 'இருமையின்பமும் தமது உள்ளத் தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது' என்று பொருள் கொள்கின்றார். எண்ணென் பது கணிதம் என்பார் பரிமேலழகர்; சோதிடம் என்பார் பரிதியார். எல்லாவற்றையும் ஒன்று திரட்டிப் பார்த்தால் நாம் இங்கே கூறும் பொருள் உருவாகி வரக் காண்போம்.

பயனும் காரணமும்

கல்வியின் பயன் இவ்வளவு மட்டுமே அல்ல. நாலடியாரில் ஒரு பாட்டுண்டு. மோட்சத்திற்குப் போவது ஏனென்று அது பாடுகிறது. கற்றவர்கள் கூட்டந்தான் மிகமிக இனியது. அதைவிட மோட்சம் சிறந்தது என்றால் வேண்டுமானால் பார்த்துக்கொள்ள லாம் என்கிறது. பொய்யான புலவர்கள் பொறாமை கொள்ளலாம்; மெய்யான புலவர் கள் அப்படியில்லை. அவர்கள் ஒன்றுகூடினால் உவகை பொங்கும். அவர்கள் பேசுவதெல் லாம் இனிக்கும்; வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாழமுடையதாக இருக்கும். ஆனால் இவர்கள் கற்றதுபோல நடக்கிறவர்கள்.

கல்வியின் பெருமை அதுதானே? ஆதலால் அவர்களே ஒழுக்கத்தின் அவதாரம். இப்படிப் பட்டவர்கள் பிரியும்போது 'அவர்களை எப் பொழுது பார்ப்போம்' என்று நாம் எண்ணி எண்ணிக் கசியுமாறு பிரிவார்கள். அவர் களுடைய ஒழுக்க நிலையினையும், பொருளாழம் நிறைந்த சொற்களையும் எப்பொழுதும் பிறர் எல்லாம் தத்தமக்கு வழிகாட்டும் உறுதிநிலை களாகக் கொண்டு பிரிவார்கள்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்."

'உவப்பத் தலைக்கூடி' என்ற குறளுக்கு மணக்குடவரும் பரிதியாரும் ஒரு பொருள் கூறுகின்றார்கள். பொதுவாக மக்கள், கூடினால் மகிழ்ச்சியடைகிறார்கள்; பின் பிரிந்தால் ஒரு வரை ஒருவர் என்றும் நினைக்கின்றார்கள்; ஆனால், எல்லா மக்களும் இப்படிச் செய்யாத தனாலே நல்லோரும் நல்லோரும் கூடிப் பிரியும் போதே இப்படி நடைபெறுகிறது என்கிறார் பரிதியார். இந்த மூன்று உரையாசிரியர்களும் இப்படிக் கூடிப் பிரிவதை உவமையாகக் கொள் கிறார்கள். இப்படித்தான் கற்றவர்கள் தொழி லும் இருக்குமென உவமைக்கேற்பப் பொருளை விளக்குகின்றார்கள். இங்கேயும் ஒரு வேற்றுமை உண்டு. தன்னலம் மறவாத நிலையில் பிறர் நலத்தைக் கற்றவர் கருதுவர் என்பது மணக் குடவர் கொள்கை. தமக்கும் பிறர்க்கும் ஆம் நலத்தைக் கருதுவர் எனத் தெளிவாக்குவார் பரிப்பெருமாள். இன்பம் நுகரினும் வினை செய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியானும் என்பர். 'தாமின் புறுவது' என்ற குறளில் இந்தக் கருத்தே வருகிறது. அதனால் போலும், இவர் களைப் போலவே 'உவப்பத் தலைக்கூடி' என் பதை உவமையாகக் கண்ட பரிதியார் அதனைக் கல்வியின் பயனுக்கு உவமையாக்காமல் கல்விக்குக் காரணமான முயற்சிக்கு உவமை யாக்கிக் கூறுகிறார்.

* * * *

'யாதானும் நாடாமால்'

இங்கே வரும் கல்வி எண்ணும் எழுத்து மாக முடிகிறது என்றோம். கணக்கு வாய்பாடு தமிழுக்கு என ஒன்றும் ஆங்கிலத்திற்கு என வேறும் உண்டா? எண்ணோ தனித்தனி மொழி யையுங் கடந்த நிலை. அறிஞன் மொழியின் உண்மையை ஆராய்ந்தபோது பிறமொழி களைக் கற்பதும் எளிதாகிறது. அத்தகைய கல்வியாளன் உண்மையொழுக்கம் உடையவ னாதலின் வள்ளுவர் கூறியபடி கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவனாகின்றான். 'என் னாடு, உன் நாடு,' 'என் ஊர், உன் ஊர்' இரண்டாட்டத்தினின்றும் தப்பிப் பிழைக்கின் றான். யான், எனது என்ற செருக்கை அறுக்க உதவும் அருளறத்தை எட்டிப் பார்க்கிறான். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' 'யாதானும் நாடாமால் யாதானும் ஊராமால்' என்ற உள்ளம் அவனிடத்தே மலர்கிறது; ஆனால், இந்த நிலை எண்ணும் எழுத்தும் கைவரப் பெற்றவர்க்கே ஆகும். அப்போதுதான் உல கமே ஒரு குடும்பமாகும் இந்த வாய்ப்பானது கல்வியால் எழுகிறது. இவ்வாறு சென்ற இடத்தெல்லாம் சிறப்பு நிகழுமானால் ஏனொரு வன் கற்கவில்லை என்று மனம் வருந்துகிறார் வள்ளுவர்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

* * * *

'கற்க கசடற'

இங்கே மற்றொரு கருத்தும் வெளியா கிறது. கல்வி என்பது வெறும் அறிவு மட்டு மல்ல. அந்த அறிவிற்கேற்ப ஒழுகுதலே கல்வியாகும். நெருப்புச் சுடுமென்றறிந்தால் அதில் கையிடுவதில்லை. எனவே வாழ்வுக் காகவே கல்வி என்ற அழகிய கருத்தும் வெளி யாகிறது. வாழ்வுக்காகக் கற்கும் இத்தகைய கல்வி ஐயந்திரிபறக் கற்பதாக இருக்கவேண் டும். நெருப்புச் சுடுமா சுடாதா என்று ஐயப் படுகிற கல்வியும் கல்வியா? நெருப்புச் சுடாது என்று கற்பிக்கிற கல்வியும் கல்வியா? நூற் றுக்கு நாற்பது வாங்கினால் போதுமென்ற கல்வி இங்கே கல்வியாகாது. எனவே கசடறக் கற்கவேண்டும்.

எவற்றைக் கற்கவேண்டும் என்று பிறர் ஆராய்ந்ததைப் பார்த்தோம். ஆனால், ஒருவன் வாழ்விற்கு எவையெவை வேண்டுமோ அவற்றையெல்லாம் கற்றுத்தானே தீரவேண் டும்? அவை காலத்திற்கும் காலத்திற்கும் மாறும்; இடத்திற்கும் இடத்திற்கும் மாறும். ஆதலினால் அடிப்படையை மட்டும் வற்புறுத் திக் 'கற்பவை கற்க' என்று வள்ளுவர் கூறி முடிக்கிறார். இவ்வாறு கற்பது பரீட்சையில் தேறுவதற்காகவே மட்டும் அல்ல—மேடை

மேல் பேசமட்டும் அல்ல—வாழ்வதற்கே என்ற உண்மையை நன்கு விளக்குகிறார் வள்ளுவர். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்கிறார். இங்கே நெருப்பில் கையிடாது உயிர் பிழைத்துப் போனால் மட்டும் போதாது. தான் கற்ற கல்விக்கு ஏற்ப ஒழுகி வாழ்தல் வேண்டும். இத் தகுதிப்பாட்டை வள்ளுவர் வற்புறுத்துகிறார். மனிதன் தன் கல்விக்கேற்ப அந்தந்தக் கடமைகளை வெற்றியுடன் செய்து தமிழர் கூறும் வாகையைச் சூடவேண்டும். உலகத்தோடு ஈடு கொடுக்கும்போது கற்ற கல்விக்கேற்ப வெற்றி பெற்றுயர்ந்து வாழ்வது கற்றவன் கடமை. இந்த வாழ்வால் பிறரும் வாழ்கின்றனர். அப்படி வாழ்ந்தவர்களே வள்ளுவரும் கம்பரும்; நியூட்டனும் ஐன்ஸ்டைனும்: காந்தியும் புத்தரும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

* * * *

'சாந்துணையும் கற்றல்'

மாறிவரும் உலகிற்கேற்ப மாறிநின்று ஈடுகொடுத்து வெற்றிபெறுவதே இத்தகைய கல்வியானால் இக் கல்வி பள்ளிக்கூடத்தோடு முடியும் என்பதற்கில்லை. சாகும்வரையில் இந்தக் கல்வி தொடர்ந்து நிகழவேண்டும். அணுவைப் பிரிக்க முடியாதென்று இந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் கற்றோம். ஆனால், திடீரென்று ஒருநாள் அதனைப் பிரிக்க முடியுமென்று அறிஞர்கள் கண்டார்கள். அதனாலெழுந்த புரட்சியையும் நாம் அறிவோம். இன்னும் மெத்தனையோ மாறுதல்கள் அறிவுலகிலும், செயலுலகிலும், உணர்ச்சியுலகிலும் நிகழ்ந்து கொண்டே வருகின்றன. பள்ளியில் படித்தது போதுமென நின்றுவிடமுடியுமா? டிராம் வண்டியில் ஏறிச்செல்லும் பழக்கமுடையவன் அந்த வண்டியே சென்னையிலில்லாதபோது வேறு வண்டியில் ஏறமாட்டேனெனச் சொல்ல முடியுமா? இவையெல்லாம் கல்வியா என ஒருசிலர் கேட்கலாம். கல்வியென்பது வாழ அறிந்து வாழ்வதே என்ற பொருளை உணர்ந்தால் சாந்துணையும் கற்றல் வேண்டும் என்று வள்ளுவர் கூறும் உண்மை விளங்கும்.

* * * *

'ஒருமைக்கண்'

இந்தக் கல்வியின் உண்மைத் தன்மையை அறிதல் வேண்டும். கல்வி வாழச் செய்கின்ற தென்றால் வாழமுடியாத நிலையில் இருந்த நம்மைப் புதிய சூழலில் வெற்றியுடன் வாழ வைக்கும் நிலைமைக்கு மாற்றிவிடுகிறது என்பது பொருள். மறதி மறதி என்று தலையிலடித்துக் கொள்கிறோம். கல்வி ஏட்டுச் சுரைக்காயாய் இருக்கும் வரையில்—அது சோற்றுச் சுரைக்காயாய் இனியாத வரையில் —நமக்கு வெளிப்புறத்திலேயே இருக்கும். நமக்குப் பயன்பட்டு இனியாத வரையில் வெறும் சுமையாகவே கிடக்கும். இந்த வெறுப்பு நிலையில் அதனை மறப்பதே இன்பமும் இயல்பும் ஆம். நம் வாழ்வோடு ஒன்றாகி இயைந்துபோகும் கல்வியை நாம் மறப்பதில்லை. அது நம்மோடு நாமாக ஆகிவிடுகின்றது; வாழ்வாக மணக்கின்றது; வெற்றியாக இனிக்கின்றது; நம்முடைய மனத்தையே அது மாற்றி அமைக்கின்றது. மனிதனது ஆளுமை அவ்வளவுக்கு அவ்வளவு மாறி நிற்கின்றது. இந்த மாற்றம் பின் மறைவதில்லை. பிறவியை நம்பிய அந்தக் காலத்தவர்க்கு இந்த உண்மையை அழகாக வற்புறுத்துகின்றார் வள்ளுவர். இவ்வாறு நம் மனத்தின் வழியே நம் நுண் உடலையே கல்வி மாற்றுவதால் ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் காவலாகியும் இன்பமாகியும் இனிக்கும் என்கிறார் வள்ளுவர்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

* * * *

'தாமின்புறுவது'

யாதானும் நாடாமால் யாதானும் ஊராமால் என்கிறார் வள்ளுவர். முன்னரே அருளறத்தை நினைப்பூட்டினோம். கற்றோரது உவகையையும் கண்டோம். இவர்கள் ஏன் கல்வியில் தம்மை மறந்து இன்பமடைகிறார்கள்? கல்வி ஒரு கள்ளா? கஞ்சாவா? அப்படியானால் தன்னலமே அங்கு மிஞ்சும். ஆனால், கல்வியால் தாம் அடையும் மகிழ்ச்சியே உலகினர்க்கும் மகிழ்ச்சியாகிறது. உலகமும் மகிழ்ந்து வரவேற்கிறது. உலகத்தின் மகிழ்ச்சியைக் கண்டே தன்னலம் மறந்த கல்வியாளர்கள் பிறர் நலம் வேண்டியே கல்வியிலீடுபட்டுக் களிக்கின்றார்கள். தம் நலமே உலக நலமாவது கண்டு வியப்படைந்து மகிழ்கின்றார்கள். விஞ்ஞானி புதிய புதிய உண்மைகளைக் காண்கின்றான். சிற்பி புதியபுதிய அமைப்புக்களைக் கண்டு வெளியிடுகிறான்,

ஆனால் இவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு மகிழ்கிறவர்கள் உலகத்தவர்களே. எடிசன் கண்ட விஞ்ஞானப் பொருள்கள் அவனுக்கு மட்டுமா மகிழ்ச்சியை ஊட்டின? உலகம் முழுதும்—இனிவரும் உலகம் முழுவதும் இவற்றை அனுபவித்து மகிழ்வெய்தலாம். கம்பன் கம்ப இராமாயணத்தைப் பாடினன்; அது அவனுடைய தற்கிழமையாக இருக்கும் வரையில் அது அவனுக்கு மட்டுமே இன்பமளித்திருக்கும். அது பிறிதின் கிழமையாக வெளிப்பட்டு உலகினரிடையே வாழ வந்தபோது உலகம் முழுவதும் அதனைக் கேட்டு இன்புற்றது. கம்பனைப்பற்றி ஒரு கதை சொல்வது உண்டு. தன்னுடைய கம்ப இராமாயணத்தைப் பிறர் பிரசங்கம் செய்யும் போது மக்கள் மகிழ்ச்சியடைவதை மறைந்து நின்று கண்டு இன்பமடைவானும்.

> "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்."

* * * *

'கேடில் விழுச்செல்வம்'

எனவே கல்விதான் 'கேடில் விழுச் செல்வம்' என்கிறார் வள்ளுவர். தனக்கும் பிறர்க்கும் இன்பந் தருவது—வெற்றி தருவது—உலகத்தை ஒரு குடும்பம் ஆக்குவது—இதுவே கல்வி. இதனுடைய சிறப்பென்ன? பிற செல்வங்களுக்கில்லாத உயர்வென்ன? 'அழியாதிருத்தலே' என்கிறார் வள்ளுவர். இதனை நம்மிடத்திலிருந்து பறிப்பாரில்லை. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க இது குறைவதில்லை. ஆதலால் கஞ்சத்தனம் ஏன்? இஃது உயர்ந்தவரிடத்திலன்றிப் பிறசெல்வம்போல் தாழ்ந்தவரிடத்தில் இருப்பதில்லை. இதுவே இதனுடைய விழுப்பம் என்கிறார் பரிமேலழகர். எனவே மற்ற செல்வங்கள் எல்லாம் செல்வம் அல்ல என்று எதிர்மறையாகவும் கூறி வற்புறுத்துகிறார் வள்ளுவர். அவர் எழுபிறப்பும் கல்வி உடன் வருமென்று கூறினரல்லவா! நம்மாட்டு என்றும் இருப்பது கல்வி. அவ்வாறு நம்மாட்டு இருப்பன அல்ல பிற. மாடு என்பதற்கு இந்தப் பொருளும் தொனிக்கிறது.

> "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை."

* * * *

'தொட்டனைத்தூறும்'

இக் கல்வியை எவ்வாறு கற்பது? எவ்வளவு கற்பது? வாழ்வுக்கானது கல்வி என அறியும்போது எல்லாம் தெளிவாகிவிடுகிறது. எவ்வளவு நீராழம் வேண்டுமோ அவ்வளவுக்குக் கிணற்றைத் தோண்டுகிறோம். கல்வி என்பது கல்நிலத்தில் தோண்டுவதன்று. ஆனால் நீரூறிக்கிடக்கும் படுகையில் தோண்டியவுடன் நீர் சுரக்கும் நிலைபோன்றது. பாலாறு முதலிய இடங்களில் நீர் மணலுக்குள்ளே ஓடி ஒளிக்கிறது. தாய்முலையை வருடப் பால் சுரப்பதுபோலத் தோண்டியதும் நீரூறுகிறது பாலாறு என்கிறார் சேக்கிழார். எவ்வளவு ஆழந் தோண்டுகிறோமோ அவ்வளவு நீர் கிடைக்கும். இது யாருமறிந்த உண்மை. அதுபோலத்தான் அறிவும். எவ்வளவுக்கெவ்வளவு கற்கிறானே அவ்வளவுக்கவ்வளவு அறிவு பெருகுகிறது. காளிங்கர் கிணற்றில் தோண்டுவதனைக் கல்லுதல் என்று கூறுகிறார் கல்லுதல் முயற்சிக்கும் கல்வியென்ற முயற்சிக்கும் ஒற்றுமை காண்கின்றார். 'கல்' என்ற பகுதிக்கு இவ்வாறு இரண்டு பொருள் உண்டு; அவற்றினிடையே ஓர் ஒற்றுமையும் கண்டு மகிழ்கின்றார் அவர். இவ்வாறு கல்லும் போதெல்லாம் நீர் தோன்றி வருதலின் அந்த முயற்சி வெற்றி கண்டு மகிழும் முயற்சியாகிறது. அதுபோலக் கற்கும்போது 'மனப் பூரணமாகப் பிரியத்துடன்' கற்கவேண்டுமென்கிறார் பரிதியார். பின்னே அதனை 'மறவாது அதிகரிக்க' என்றும் கூறுகிறார்.

> "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு."

'உடையார்முன்'

கல்வி கற்கும் முறையை வற்புறுத்துவதாக ஒரு குறள் அமைந்துள்ளது. கற்பவனிடம் செருக்கு இருப்பதற்கில்லை. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு; உலகம் மாறிக்கொண்டே போகும்போது அவன் அறிதோறும் அறியாமையே காண்கிறான். எனவே ஏக்கழுத்தம் அல்லது ஏக்கு என்ற செருக்கு உண்மையாகக் கற்றவனிடம் இருப்பதற்கில்லை. முன்னரே அறிந்திருந்தாலும் அறிதோறும் அறியாமை காணும் நிலையில் ஒன்றும் கல்லாதவன் போலவே மிகத் தாழ்ந்து நின்று பேராசையோடு கற்கவே கற்கின்றவர்கள் முயல்கின்றார்கள். இவ்வாறு கற்றவர்களே உண்மையான கல்வியுடையோர். அறிதோறும் அறியாமை காணாமல் செருக்குடன் கற்றவர்களோ கல்வியை உடைமையாகக் கொள்வதில்லை. உடைமையாகக்

கொண்டாலும் அது அவர்களுக்கு உதவுவதில்லை. அவர்களைக் கல்வியுடையாரென்று சொல்வதற்கில்லை. இப்படிக் கற்றவர்களே கல்வியுடைமையை இழக்கும்போது, கல்லாதவர்களைப்பற்றி என்ன சொல்வது? 'கடையரே கல்லா தவர்' என்கிறார் வள்ளுவர். இவ்வாறு உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கல்லாதவர் என்பதற்குப் பொருள் கூறுவர் காலஞ்சென்ற சோமசுந்தர பாரதியார்.

ஆனால், பழைய உரையாசிரியர்களெல்லாம் கல்வி கற்போனுக்குக் கல்வியிலிருக்கும் பேராசையையும் இன்றியமையாத நிலையையும், செருக்கற்ற நிலையையும் வற்புறுத்தவேண்டி வேறு வகையாகப் பொருள் கூறுவர். வறியவனொருவன் செல்வமுடையவன் முன்னே தாழ்ந்து நின்று, ஆசையுடன் பொருளின் இன்றியமையாமையை அறிந்து, தன் குறையை நீக்கிக்கொள்ள முயல்வானும். அதுபோலக் கல்வி கற்பவனும் கற்றவரிடத்தே தாழ்ந்து நின்று கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து, அதன் மேலேயே காதல் கொண்டு கற்பான் என்று கூறுகின்றார்கள். 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று' என்பது சங்கப்பாட்டு.

'கற்றார் கடையர்' என்பதற்குக் 'கற்றாரிடத்தவர்' என்று பொருள் கொள்கின்றார்கள் மணக்குடவரும் பரிப்பெருமாளும். 'கற்றார் கடை' என்பதில் கற்றார் என்பது கடை என்ற ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு கொண்டது என்று பொருள். கல்லாதவரும் கற்கத்தான் முயல்கின்றார்கள். ஆனால், அந்த முயற்சி தவறான வழியிற் செல்வதால் அவர்கள் கற்றவராகாமல் கல்லாதவராகவே இருக்கின்றார்கள். இவர்களும் தாழ்ந்து நிற்கின்றவர்களே என்கிறார் பரிப்பெருமாள். ஆனால் கல்விதான் வரவில்லை. எனவே வெறும் முயற்சியால் மட்டும் பயனில்லை. தக்கதொரு முயற்சி வேண்டும். இத்தகைய முயற்சி இல்லாதபோது கல்லாதவர் கல்லாதவராகவே நிற்பர். இது பரிப்பெருமாள் கருத்து. எனவே ஒரு சிலரே கற்றுயர முடியுமாதலால் அவர்களே எல்லாரினும் தலையாவர் என்கிறார். மணக்குடவர் இந்தத் தோல்விக்கு ஒரு காரணம் காட்டுகிறார். பொருளுடையார்முன்பு பொருளில்லாதவன் பொருளைக் காதலித்து நிற்கின்றான். ஆனால், கல்லாதவர்களாக ஒழிகின்றவர்கள் கற்க வரும்போது கற்றார் முன்நின்றும் கல்வியைக் காதலித்து நிற்பதில்லை. அவர்களுள்ளம் கல்வியிலீடுபடவில்லை. இன்றைய கல்வி நிலையில் பல மாணவர்கள் கல்வியில் ஓர் ஈடுபாடுமின்றிக் கல்லூரிகளில் படிக்க வந்து கல்லாதவர்களாகத் திரும்புவதை நினைப்பூட்டுகின்றது இந்த உரை. அப்படியானால் கல்வியிலீடுபாடு வேண்டுமென்பது விளங்குகிறது.

ஆனால், பரிப்பெருமாள் உரையிலேயோ கல்வி ஒரு சிலருக்குத்தான் என்பதுபோலத் தோன்றுகிறது. மக்கட் பிறப்பென்றாலே கல்விப் பிறப்புத்தான் என்று கூறுகிற வள்ளுவர் இதனை யுடன்படமாட்டார். அவர் 'எல்லோருக்கும் கல்வி' என்கிற இந்நாளைய கொள்கையை யுடையவராவர்.

வழிவகை இருந்தும் கல்லாதவர்களையே வள்ளுவர் கடையரென்று கூறுகின்றார். அதனால் கற்றாரை உயர்ந்தவரென்கின்றார் பரிமேலழகர். கற்றவர்களை உயர்ந்தவர்களென்று கூறாமல் 'கடையர்' என்பதற்கு வேறு பொருள் கூறுகின்றார் காளிங்கர். சாதி அடிப்படையில் பொருள் கூறுவது இந்த நாட்டில் இயல்பாகிவிட்டது. அது காளிங்கர் குற்றமன்று. கடையர் என்பது புலைமக்கள் (அவர்கள்) உயர்ந்தோர் முன் ஒன்றினைச் சொல்லக் கூசுமாப் போலக் கல்லாதாராகிய கடுவினையாளரும் கற்றார்முன் தாமே சொல்லக் கூசுவராம்.

எவ்வாறு கொள்ளினும் இக்குறள் இக்காலத்தார் வற்புறுத்தும் ஒரு சிறந்த உண்மையை விளக்குகிறது. அக்கறை, இன்றியமையாமை, ஈடுபாடு, என்ற இதுவொன்று இல்லாவிடின் கல்வி மலராது! இந்த ஈடுபாட்டை உண்டு பண்ணுவதுதான் ஆசிரியன் கடமை. இந்த ஏக்கறும் நிலையை மாணவனிடத்தில் உண்டு பண்ணினால்தான் கல்வி வளரும்.

> *"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
> *கடையரே கல்லா தவர்."*

முடிவு

இவ்வாறு வள்ளுவர் அரசியலிலும் கல்வியை மக்களுக்கு உரிய பொதுநிலையில் உணர்த்துவதால் குடியரசுலகிற்கும் அது ஏற்றதாகிறது. சாகும் வரை கல்வி, உலகம் ஒரு குடும்பமாம் கல்வி, உலகின்புறத் தானின்

புறுங் கல்வி, ஏக்கற்றும் கற்கும் கல்வி, தொட்டனைத்தூறும் கல்வி, என்றும் பிரியாக் கல்வி எல்லோர்க்கும் கல்வி, வாழ்வதற்கே கல்வி என்று இருபதாவது நூற்றாண்டு கூறும் கல்வியின் உண்மையினை வற்புறுத்தி அதனை அரசியலோடு விளங்கும் சமுதாயத்தின் உயர்நிலையாக வள்ளுவர் விளக்கியுள்ளார். மக்களுக்கும் கல்விக்கும் உள்ள தொடர்பு, கல்வியின் உண்மைநிலை, கல்வியின் பயன், கல்வி கற்கு முறை—இவை எல்லாவற்றையும் இந்த இருபதாம் நூற்றாண்டினர் கூறுவதுபோலக் கூறியிருப்பதே இங்குள்ள சிறப்பு.

நாலும் இரண்டும்

நாலடியாரிற் செய்யுள் வாயகன்ற பொன்வள்ளத்தில் நிரப்பிய பனிநீர் போல்வதாம்; மற்று, திருக்குறட்பாவோ மாணிக்கச் செப்பினுட் பொதிந்திட்ட நானம் போல்வதாம். மாணிக்கச் செப்பு விலையேறப் பெறுதலுடன் செய்தமைத்தற்கும் அருமையுடைத்தாம்; பொற்கிண்ணம் விலை குறையப் பெறுவதுடன் செய்தமைப்பதற்கும் எளிதின் நெகிழ்தலுடைத்தாம். நாலடியார் செய்யுளியற்கைக் குணஞ் சிறிதாதலுடன் புலவனுற் பாடுதற்கும் எண்மையுடைத்தாம். திருக்குறுவெண்பாட்டோ குணம் பெரிதாதலுடன் அமைத்தற்கும் அருமையுடைத்தாம். இனி, அப் பொன்வள்ளத்தில் நிறைத்த பனிநீர் நெகிழ்ந்த வுருவின் விரைந்தழியும் மணமுடைமைபோல், நாலடியாரிற் செய்யுட் பொருளுங் கேட்கும் பருப்பொருளறிவினர்க்குச் சில கணங்கண் மாத்திரையே மகிழ்ச்சி பயந்து பின் அவருள்ளத்தே நிலைபேறின்றி ஒழியும்; மாணிக்கச் செப்பினுட் செறித்து வைத்த நானங் கட்டுருவினல் நிலைபெறக் கமழும் நறுமணமுடைமைபோலத் திருக்குறட் பொருளுங் கேட்கும் நுண்ணுணர்வினர்க்கு நினைத்தொறும் உரைத்தொறும் மகிழ்ச்சி பயந்து அவருள்ளத்தே ஆழ்ந்து நிலைபெறுவதாமென்க. இதனல், நாலடியார் முதலான நூல் யாப்புகள் பொதுவறிவினர்க்கு அறிவுறுத்தும் பொருட்டுப் புனைந்துரை வகையாற் சொற்பொருள் நெகிழ்ந்து ஒழுகும் முறைபற்றிச் செய்யப்பட்டனவாமென்பதூஉம், திருக்குறள் யாப்பு நுண்ணுணர்வினர் பொருட்டுச் சொற்சுருக்கமும் பொருட் செறிவும் பொதுள இறுகிய நுண் நிலையால் அமைக்கப்படும் நெறிதழுவி வந்ததாமென்பதூஉம் நன்கறியப்படும் என்க.

—மறைத்திரு மறைமலையடிகள்.

(*திருக்குறள் ஆராய்ச்சி*, பக். 10-11)

திருவினுக்கும் ஒரு கயிறு

[பேராசிரியர், கோ. சுப்பிரமணியபிள்ளை, எம்.ஏ., பி.எல்.]

இவர் பிறந்தது 1906ஆம் ஆண்டில். ஊர்: நெல்லைமா நகரைச் சார்ந்த சிந்துபூந்துறை. எம்.ஏ., பி.எல் பட்டம் பெற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்க் கலைத்துறை, ஆராய்ச்சித் துறைகளின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தமிழையும் சைவத்தையும் தம் இரு கண்ணெனப் போற்றி வருபவர். எழுத்திலும் பேச்சிலும் வல்ல இவருக்குக் கோவையாரிலும் கம்பராமாயணத்திலும் பேரீடுபாடு உண்டு.



இவர் திருக்குறளைச் சுவைத்துச் சுவைத்துப் பொருள் கண்டு இன்ப வளத்தைப் பெருக்கித் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற உயர் நோக்கொடு அவ்வப்பொழுது அரிய பல கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். அவற்றின் தொகுப்பே 'வள்ளுவர் விருந்து' என்ற நூல். இந்நூலில் பேராசிரியர் இருபத்தேழு கட்டுரைகளைத் தொகுத்தளித்திருக்கின்றார். தாம் கூற வந்த கருத்தை நகைச்சுவைபட வெளிப்படுத்தும் திறனை இவர் கட்டுரைகளில் காணலாம்.

செல்வர்கள் தங்கள் பொருளைச் சிதையாமல் நிலைபெறுத்துவதற்குரிய வழிவகைகளைத் திருவள்ளுவர்போல் வேறு எவரும் கூறியதில்லை. மணி, பொன், நெல், நிலம், மனை முதலாயின செல்வம் ஆகும். ஒருவன் ஊழாலும் உழைப்பாலும் செல்வந்தன் ஆகலாம். செல்வம் உடையவனுக்குச் செல்வம் இல்லாதவனைவிட மிகுதியான பொறுப்பு உளது. தன்னைக் காத்துக்கொள்வதோடு தனது செல்வத்தையும் காக்கும் கடமை செல்வந்தனுக்கு ஏற்பட்டிருக்கிறது. செல்வம் இல்லாதவனுக்குக் கவலையே இல்லை. செல்வர்கள் பாடோ பெரும்பாடாய் இருக்கிறது. இந்த உலகை உற்று நோக்குவோமானால், அது உடையார்கள்—இல்லார்கள் என இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. இந்த இருபிரிவினரும் ஒருவரோடு ஒருவர் இகலிக்கொண்டிருக்கின்றனர். அதில் இலர் பலராகவும், உளர் சிலராகவும் காணப்படுகின்றனர். இந்த நிலை இக்காலத்தில்தான் ஏற்பட்டது என்பதில்லை. திருவள்ளுவர் காலத்திலும் இப்படியே இருந்திருக்கிறது. இந்நிலையில் செல்வர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றித் திருவள்ளுவர் கூறுவன யாவை என்பதை இங்கே நோக்குவோம்.

மனிதன் நிலையில்லாதவன். அவன் கைக்குக் கிட்டிய செல்வமும் நிலையில்லாதது. செல்வம் 'செல்வம்' (போய்விடுவோம்) என்று செப்பிக்கொண்டேயிருக்கும். நிலையில்லாத தமது செல்வத்தை நிலையாகச் செய்வது எப்படி என்பதுதான் செல்வர்களின் கவலை. அது ஓடிவிடாதபடி, தமக்கும் தம்முடைய மக்களுக்கும் இடையறாது பயன்படும்படி செய்வதுதான் செல்வர்களின் ஒரே எண்ணம். இதனைத் திருவள்ளுவரும் ஒப்புக்கொள்கிறார். செல்வம் நில்லாத இயல்பினையுடையதுதான். அதனைப் பெற்றால் அது நிலைபெறுதற்கு எவற்றைச் செய்யவேண்டுமோ அவற்றை உடனே செய்க என்கிறார்:

> "அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
> அற்குப வாங்கே செயல்."

முதலாவது, பொருளைப் பொருட்படுத்திப் பாதுகாக்கவேண்டும். பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமை. பொருளினை ஆளுதல் அதனைக் காக்கமாட்டாதார்க்கில்லை. "பொருளாட்சி போற்றாதார்க் கில்லை" என்கிறார் வள்ளுவர். தனி மனிதனாயினும் சரி, ஓர் அரசனாயினும் சரி, அரசாங்கமாயினும் சரி, பொருளைக் காத்தல் வேண்டும்:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

என்று வற்புறுத்துகிருர் வள்ளுவர். இது அரசுக்கு மட்டுமல்ல. ஏனைச் செல்வர்களுக்கும் பொருந்தும்.

அடுத்து, செல்வம் சிதையாதிருக்க வேண்டுமானுல், அதனையுடையவன் செப்பம் உடையவனுய் இருக்கவேண்டும். செப்பம் என்பது நடுவு நிலைமை. நடுவு நிலைமையுடையவனது செல்வம் தன்னளவினும் கேடின்றியே நின்று, தன் வழியுள்ளார்க்கும் கேடு வாராமல் காவலாதலையுடைத்து. யாவர்மாட்டும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவு நிலைமை. நடுவு நிலையுடையார் செல்வம் எக்காலமும் அழியாது.

"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து."

என்பது திருக்குறள். ஆக்கம் என்பது செல்வம்.

மற்றும், செல்வர்கள் வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும். ஒருவனுக்கு வருவாய்கள் குறைந்திருந்தாலும் குற்றமில்லை. அவன் செலவினங்கள் பெருகிவிடக்கூடாது. வரவு சுருங்கிச் செலவு பெருகினுல் உள்ள பொருளும் ஓடிவிடும். எந்தவிதத்திலும் ஒருவன் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யக் கூடாது:

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை."

ஆகவே, ஒருவன் தன் செல்வ நிலைக்கு ஏற்றவாறுதான் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒருவன் தன் நிலையறிந்து வாழாது மிதமிஞ்சிய எடுப்புக்களை எடுத்தானுயின் அவன் செல்வம் இருப்பது போலிருந்து இல்லாமற் போய்விடும். யாரும் அளவறிந்து வாழவேண்டும்:

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்ருக் கெடும்."

இவ்வருமைத் திருக்குறளில், இல்லாகிக் கெடும் என்னுது, இல்லாகித் தோன்ருக்கெடும் என்ருர். தோன்ரு என்பதில் பலபொருள் தோன்ரு நிற்கும். உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத் தோற்றமும் இன்றிக் கெட்டுவிடும் என்றும், கெடுவது வெளிக்குத் தெரியாமலே செல்வும் இல்லையாகிவிடும் என்றும், செல்வம் தனக்குத் தெரியாமலே கெட்டுவிடும் என்றும், பின்பும் ஆக்கம் இன்றிப்போகும் என்றும், சடுதியிலே கெட்டுவிடும் என்றும் மற்று அங்ஙனம் கெடுமிடத்தும் தோற்றம் இல்லவாய்க் கெட்டுவிடும் என்றும், பின்பு தன்வாழ்விலே காற்காசும் கண்ணுற் காணமுடியாதபடி கெட்டுவிடும் என்றும், பின்பு எஞ்ஞான்றும் ஆக்கம் தோன்ருதபடி கெட்டுவிடும் என்றும், பின்பும் செல்வம் தோன்றத் தோன்றக் கெட்டுக் கொண்டேயிருக்கும் என்றும், பின்பு ஒரு நாளும் திரும்பி வராதபடி மீட்க முடியாதபடி, கண்ணிற் காணமுடியாதபடி கெட்டுவிடும் என்றும், பின்பு வெளியிலேதான் தலையெடுக்க முடியாதபடி கெட்டுவிடும் என்றும், இன்னும் இதுபோன்று பலபொருளும் பொருந்தத் "தோன்ருக் கெடும்" என்று அமைத்த நயம் நினைத்து நினைத்து இன்புறத் தக்கதாகும்.

ஈகைக்குணம் மிகச் சிறந்ததுதான். அதற்காக ஒருவன் கணக்கில்லாமல் வாரிவாரி வழங்கிக்கொண்டிருந்தால் வறியவன் ஆகிவிடுவானே. அதற்கும் ஓர் அளவு உண்டு என்கிருர் திருவள்ளுவர். பொருளை அளவறிந்து கொடுக்கும் வழியாலே கொடுக்க வேண்டும். தன்னேடு நட்பு இல்லாத ஒருவனை நட்பு உண்டாக்கிக்கொண்டு ஒழுகுவதுபோல், பொருளைப் பேணிக்கொண்டு ஒழுகும் நெறி இது.

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

ஈதல் மட்டுமல்ல, ஒப்புரவேயாயினும் அளவின் மிகுதல் கூடாது. தனக்குள்ள அளவை நினையாது ஒருவன் ஒப்புரவு செய்வானுகில் அவனது செல்வம் விரைவில் கெடும் என்கிருர் வள்ளுவர்:

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்."

ஒருவனுக்குச் செல்வம் எப்படியோ பல வழியானும் வந்து கூடிவிடலாம். ஆனுல் அதனைக் காத்தற்கு அறிவு இன்றியமையாதது. அறிவு இல்லாது போனுல், வேறு எது இருந்தாலும் ஒருவன் செல்வந்தனுய் வாழமுடியாது. அவன் இல்லாதவனே ஆவான். இதனைத் திருவள்ளுவர் திட்டவட்டமாய்க் கூறுகிருர்:

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."

செல்வர்களுக்கு மறவிகூடாது. மறவி உள்ள இடத்தில் செல்வம் நில்லாது. நினைப் போடும் விழிப்போடும் இருக்கும்பொழுதே நழுவிவிடும் செல்வம், எதையும் மறந்து போகிறவனை மதித்து நிற்குமா? எவ்வாறு கோட்டைக்குள்ளே தக்க பாதுகாவலோடு இருந்தாலும் மனத்தின்கண் அச்சம் உடை யார்க்கு அவ்வரணாற் பயனில்லையோ அது போலச் செல்வம் எல்லாம் உடையராயினும் மனத்தின்கண் மறவியை உடையார்க்கு அவற் ருல் பயனில்லை என்கிருர் திருவள்ளுவர் :

"அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு."

நன்மைக் கேதுவாய செல்வத்தை 'நன்கு' என்ருர். அச்சம் உடையாருடைய அரண் அழியுமாறுபோல மறவி உடையாருடைய செல்வங்களும் அழியும் என்பது புலனுகும்.

செல்வர்களுக்கு அறிவும் நினைவும் இருப்பதுபோல் ஊக்கமும் இருக்கவேண்டும். ஊக்கம் என்பது மனம் மெலிதலின்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல். ஊக்கம் இல்லாதவனிடத்திலே செல்வம் இருப்பதும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான். ஊக்க முடையவர்களுக்கே செல்வத்தைக் காக்கும் ஆற்றல் உண்டு. காக்கும் ஆற்றல் இலராயின் செல்வத்தை இழப்பர். ஆகவே ஒன்றை உடையர் என்று சொல்லப்படுவது ஊக்க முடைமை. அதனை இல்லாதவர்கள் மற்றைப் பொருள்களையெல்லாம் உடையவர் ஆக மாட்டார்கள் :

"உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று."

செல்வர்கள் தம்மிடத்தில் உண்மையாய் உழைத்துவரும் வேலைக்காரர்கள் மீது நம்பிக்கை கொள்ளாது அவர்களைப் பகைத்துக் கொண்டால், வேலைகள் சரியாக நடைபெரு மல் ஊழல்கள் மலிந்துவிடும். அவர்கள் செல்வம் சிதறத் தொடங்கும். திருமகள் அவர்களைவிட்டு நீங்குவாள்.

"வினைக்கண் வினையுடையான் கேண்மை வேருக
நினைப்பானை நீங்கும் திரு."

ஆதலால் செல்வர்கள் தம்கீழ் உள்ள வர்கள் ஏதாவது குற்றம் செய்தால், அவர் களைத் தண்டிக்குமிடத்து, முதலில் அவர்கள் அஞ்சுமாறு கடிது செய்வார்போல் காட்டிப் பின் மெல்லென அதட்டி அடக்கிவிடுதல் வேண்டும். அவ்விதம் செய்தால் தம்முடைய நெடிய செல்வம் இடையருது நிற்கும் என் கிருர் திருவள்ளுவர் :

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்."

செல்வர்கள் யார்மாட்டும் இன்சொல் லுடையராய், இரக்கம் கொண்ட மனத்தராய் ஒழுகவேண்டும். கடுகடுவென்று எரிந்து பேசுதல் கூடாது. இளகிய மனமுடையராதல் வேண்டும். கொடிய சொல்லனுமாய்க் கண் ணேட்டமும் இல்லானுகில், தொன்றுதொட்டு வரும் அவனுடைய செல்வம் நிலையறக் கெடும் என்கிருர் திருவள்ளுவர் :

"கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின்
நெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்."

செல்வர்களிடத்தில் செல்வக்களிப்பாகிய மதம் என்னும் செருக்கும் சினமும் காமமு மாகிய குற்றங்கள் இருத்தல் கூடாது. இவை யெல்லாம் பிறரோடு பகையை வளர்க்கும். இவை அவர்களைத் தவருன வழிகளிலே கொண்டுவிட்டு, வீண்செலவுகளையும் இழப் பையும் உண்டு பண்ணும். இம்மூன்று குற்றங் களும் இல்லாதவர் செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின் மதிப்புடைத்து என்கிருர் திருவள்ளுவர்:

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து."

முக்கியமான காரியங்களைத் தன் இனத்தவ ரோடு கூடி ஆராயவேண்டியது செல்வனின் கடமை. அவ்விதம் செய்யாது காரியம் கெட்ட இடத்து அவர்களைச் சீறிச் சினந்து கொண் டால் அவர்கள் அஞ்சி நீங்கிவிடுவார்கள். அவன் செல்வமும் குறைந்துவிடும்.

"இனத்தாற்றி யெண்ணுத வேந்தன்
சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு."

(இங்கு வேந்தனைக் கூறினுரேனும் அது செல்வர்க்கும் ஏற்கும்.)

செல்வர்கள் தங்கள் செல்வத்தைக் குறை வுருமல் வைத்துக்கொள்ள வேண்டுமானுல், பிறர் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது. வெஃகாதான் செல்வம் அஃகாது. செல்வம் சுருங்கும் தன்மையுடையது. அது சுருங்

காமல் இருக்கவேண்டுமானுல் பிறன் கைப் பொருளை விரும்பலாகாது என்கிருர் திரு வள்ளுவர் :

"அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்."

பிறன் கைப்பொருளை விரும்பாதவன் செல்வம் சுருங்காமல் இருப்பது மட்டுமல்ல, மேன்மேலும் வளர்ச்சியடையும். அறத்தை யறிந்து பிறர் பொருளை விரும்பாத அறி வுடையாரைத் திருமகள் தானே தகுதியறிந்து அப்போதே சேரும் என்கிருர் திருவள்ளுவர் :

"அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு."

செல்வர்களுக்குப் பொருமை கூடாது. பிறர்பொருளை விரும்புதல் மட்டும் அல்ல, அதனைக் கண்டவழிப் பொருமை யடைதலும் கூடாது. பொருமையுடையானைத் திருமகள் தானும் பொருது தன் தமக்கைக்குக் காட்டி நீங்கும் என்கிருர் வள்ளுவர் :

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்."

செருக்கில்லாதிருப்பதோடு செல்வர்கள் பணிவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். இல்லார்கள் எப்பொழுதும் உடையார்களைப்பற்றியே வாழவேண்டியிருப்ப தாலும், தம்மிடத்தில் இல்லை என்ற குறை எப்பொழுதும் அவர்களை அழுத்துவதாலும், அவர்கள் உடையார்களிடத்தில் ஒருவித வேறு பாட்டுணர்ச்சியுடன் ஒழுகுவது இயற்கை. எனவே, இல்லார்கள் எல்லாரும் செல்வரிடம் நல்லர்களாய் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எனினும் செல்வர்கள் தங்களுடைய அடக்கத்தாலும் பணிவாலும் யாவரையும் தம் வய்ப்படுத்தி நல்லவர்களாக்கிக் கொள்ளலாம். அதனுல் அவர்கள் செல்வம் சிதையாது தழைக்கும். ஆதலால் எல்லார்க்கும் நன்மை யைச் செய்யும் பணிதல் செல்வர்களுக்கு இரட்டிப்பு நன்மை அளிப்பதாய் உள்ளது. பணக்காரர்களுக்குப் பணிவு ஏற்படுவது எளி தன்று. அது ஏற்பட்டுவிட்டால் அது வேருெரு செல்வமாம் சிறப்பினை யுடைத்து என்கிருர் திருவள்ளுவர். பொருட்செல்வத்தைப் பாது காத்து நிற்பதால் பணிதலும் ஒரு செல்வ மாகிப் பொருட்செல்வம், பணிதற் செல்வம் என இரட்டைச் செல்வமாய்த் திகழும் :

"எல்லார்க்கும் நன்ரும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து."

உலோபிக்கு இரட்டைச் செலவு என்பார் கள். பொருளால் தனக்குச் செய்துகொள்ளப் படுமவற்றைச் செய்துகொள்ளாது, பணத் தாசை பிடித்துச் செலவை இறுக்கிப் பிடித்தா ருகில் ஒருவனுடைய செல்வம், உய்யும் பகுதி யின்றி வறிதே கெடும். பொருளைக்கொண்டு செல்வர்கள் அறம் பொருள் இன்பங்களைச் செய்து கொள்ளவேண்டும். பொருளைச் செலவிடத் தகுமிடத்துச் செலவிடாது அதன் மீது கடும்பற்றுள்ளம் கொண்டால், வேறு பலவிதங்களில் அவனுக்கு வீண்செலவுகள் ஏற்பட்டுச் செல்வம் குறைந்துவிடும். தானும் தன் செல்வத்தை நுகராது போவான் :

"செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தின்றிக் கெடும்."

ஆனுல் செலவு செய்யவேண்டும் என்ப தற்காகக் கண்மூடித்தனமாய்க் கண்டதற்கெல் லாம் செலவு செய்தல் கூடாது. தக்கது இன்னது தகாதது இன்னது என்று அறிந்து தக்கனவற்றிற்கே பொருளைச் செலவிட வேண்டும். காமக்கிழத்தியர்க்கும் கள்ளுக்கும் சூதுக்கும் பொருளைச் செலவிட்டு ஓட்டாண்டி யானவர்கள் பலர் உண்டு. பொதுமகளும் கள்ளும் சூதும் ஆகிய இந்த மூன்றிடத்திலும் மூதேவி இருப்பாள். கணிகையையும் கள்ளை யும் சூதையும் விரும்பினவனைத் திருமகள் விரும்பமாட்டாள். அவனிடமிருந்து தன் உறவை உடனே முறித்துக்கொள்ளுவாள். அவன் செல்வம் நில்லாது போகிவிடும் :

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு."

செல்வர்கள் தங்கள் செல்வத்தைக் காப் பதில் கண்ணும் கருத்துமாய் விழிப்புடன் இருக்கவேண்டும். எது எதை எப்பொழுது செய்யவேண்டுமோ அதை அப்பொழுதே தவருமற் செய்துவிடவேண்டும். இல்லையேல் தண்டம் அவிழ்க்கவேண்டி வரும். உரிய காலத்தில் உரியனவற்றை ஒருவாது செய்தல் வேண்டும். காலம் அறிந்து கடன் ஆற்றுதல் நீங்கும் செல்வத்தை நீங்கவிடாமல் கயிற்ருல் பிணிப்பது போலாகும் என்கிருர் திருவள் ளுவர் :

"பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு."

ஒவ்வொரு காரியத்தையும் காலம் தப்பாமல் செய்யவேண்டும். நிலையில்லாத செல்வத்தை நிலைபெறுத்துவதற்கு இதைவிடச் சிறந்த வழி வேறு இல்லையாதலால், திருவினைப் போகவிடாமல் பிடித்துக் கட்டும் கயிறு என்கிறார் திருவள்ளுவர். அப்போதைக்கப்போது ஆவனவற்றை எப்போதும் செய்து வந்தால் தப்பாது செல்வம் தங்கி நிற்கும். காலங்கடத்தி வந்தால், அணை கடந்த வெள்ளம்போல், செல்வமும் கழிந்துவிடும். அதைக் காப்பாற்ற முடியாது போய்விடும். அல்லது ஒட்டிக்கு இரட்டி வீண்செலவு நேரும். அதனால் முதலும் குறையும், குறைந்துகொண்டே வரும். செல்வம் கூடிவராது. ஒரு திருமணம் நடக்கும்பொழுது வேளையும் பொழுதும் வந்துவிட்டன என்று தாலி கட்டுவதுபோல், வேளையும் பொழுதும் அறிந்து செய்யும் வினைவாய்த்து வருதலான், அதனின் ஆகும் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காது. அது ஓடும் திருமகளை ஓடவிடாது பிடித்துக் கட்டும் மங்கலநாண் போன்றது என்பார், கயிறு என்றே உருவகித்தார். அதனால் காலத்தின் அருமையைச் செல்வர்கள் உணரவேண்டும்.

அவ்வாறு கட்டிப்போட்டாலும் திருமகள் விரும்பித் தங்கவேண்டுமே என்று கேட்கலாம். ஆம், திருமகள் விரும்பி வீற்றிருக்கவும் செய்வாள். "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்." செல்வர்கள் மனைகளில் விருந்தும் விழாவும் விடாது நிகழவேண்டும். எவன் ஒருவன் விருந்தினரை வரவேற்று அன்போடு முகம் மலர்ந்து உபசரிக்கிறானோ அவன் மனையில் திருமகள் மனம் மகிழ்ந்து நிலையாகவே குடிகொண்டு விடுவாள் என்று திருவள்ளுவர் மொழிகின்றார்:

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்."

தன் செல்வம் நல்லவிதத்தில் பயன்படுகிறது என்று திருமகள் மனம் மகிழ்வாளாம். விருந்தயர்தல் என்றால் கண்டவர்களையெல்லாம் வீட்டினுள் அடைத்து உண்டயரச் செய்வது அன்று. ஞானவொழுக்கங்களால் உயர்ந்த பெரியோர்களையும் அறவோர்களையும் விருந்தெதிர் கோடலையே "நல் விருந்து" என்றார். விருந்தறாது நடக்கச் செல்வம் செழித்தோங்குக.


ஆணுலகிற்குக் கற்பு

இல்லறத்தை வலியுறுத்திச் சென்ற திருவள்ளுவனாரும் பெண்ணுலகிற்கு மட்டும் கற்பை வலியுறுத்தியுள்ளாரென்றும், ஆணுலகிற்கு அதை வலியுறுத்தாதொழிந்தாரென்றும் சிலர் கூற யான் கேட்டிருக்கிறேன். 'வாழ்க்கைத் துணை' என்னும் அதிகாரத்துக்கு முன்னர், 'இல்வாழ்க்கை' என்றோர் அதிகாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வதிகாரத்தைக் கூர்ந்து நோக்கின், 'ஆண்மகனும் நிறைகாத்து வாழ்தல் வேண்டும்' என்னும் அறக்கொள்கை நனி விளங்கும். அவ்வக்கால நிலைமைக்கேற்றவாறு, உரை கண்டு போகும் உரை ஆசிரியர் கூற்றை முதற் பொருளாகக் கோடலாகாது. ஸ்மிருதி ஆராய்ந்து, அவைகளில் மூழ்கிக்கிடப்பவர்கள், திருக்குறளுக்கு உரை காணப்புகுந்தால், அவர்களது ஸ்மிருதி மனத்துக்கு, ஸ்மிருதிப் பொருளே புலனாகும். அம் மனங்கொண்டு வரையப்பெற்ற உரைகளை முற்றுங்கோடல் தவறு.

—திரு. வி. கலியாணசுந்தரனார்.
(பெண்ணின் பெருமை, பக். 61)

இந்திய வழிகாட்டி

[டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.]



பண்டிதமணி கண்டெடுத்த மணிப்புதல்வரான இவர் 1917 ஆம் ஆண்டில் பிறந்தார்: படித்துப் பட்டம் பெற்றது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில். இவருக்கு 'டாக்டர்' பட்டம் வாங்கித் தந்தது 'சங்க இலக்கியத்தில் காதல் நலம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை. காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய இவர் இப்பொழுது அக் கல்லூரிக்கே முதல்வராக விளங்குகின்றார். தமிழ் மொழியைப் பரப்பவேண்டுமென்ற நோக்கொடு இந்தியத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கித் தலைமை தாங்கி நடத்தி வருகின்றார்.

இவருணர்ந்த வள்ளுவ நூற் கருத்துக்களை 'வள்ளுவம்' என்ற நூலில் வடித்தளித்துள்ளார். திருவள்ளுவரை முன் வைத்துப் பேசினாற்போல் எழுதப்பட்ட பன்னிரண்டு கற்பனைச் சொற்பொழிவுகளை உடையது இந்நூல். இந்நூலின் நடை கற்பவரை நிறுத்திக் கற்கச் செய்யும் ஒட்பமும் திட்பமும் நிறைந்த நடை.

திருக்குறள் தனிமனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, ஞாலவாழ்வு அனைத்தும் முழுதுறத் தழுவிய வாழ்வியல் நூல். அது கற்பனைப் பனுவலன்று. வறட்டுக்கொள்கை பேசும் நூலன்று. எந்நிலைய வாழ்வுக்கும் வழிகாட்டும் முதனூல். வினையின் நீங்கி விளங்கிய அறிவன் கண்ட தலைநூல். அந் நூலை நடைமுறைக் கண்ணோடு பார்க்க வேண்டும். நாள் நிகழ்ச்சிகளோடு ஆராய வேண்டும். காலப்போக்கோடு ஒத்திட்டுக் காணவேண்டும். திருக்குறள் ஓர் உயிர் நூல் என்பது மெய்ப்படவேண்டுமாயின், வள்ளுவர் குறள்களைக் காலநடப்புக்களோடு பொருத்தி எழுதவும் சொல்லவும் விளக்கவும் வேண்டும். இது செய்தற்கு நாம் அஞ்சுகின்றோம். செய்யப்புகின், கருத்து வேறுபாடு தோன்றிப் பூசல் பொங்கி எங்கே திருக்குறளின் பெருமை மங்கிவிடுமோ என்று அஞ்சுகின்றோம். பொது மறை என்ற தனிப்பெருமை போய்விடுமோ என்று மயங்குகின்றோம். இவ்வச்சம் தவறானது, பயனற்றது. ஆதலின் இக் கட்டுரைக்கண் இக்கால நடப்புக்களின்மேல் திருக்குறளைச் செலுத்திக் காண்பாம்.

அறம், பொருள், காமம் என்று திருக்குறள் மூன்று பாலுடையது. எனினும் பொருட்பாலே எழுபது அதிகாரம் கொண்ட பெரும்பால். அது பலபொருள்களுக்குப் பொதுவான பால் என்று பெயர் பெறினும், மெய்யாக நுவலின், பொருட்பால் ஓர் அரசியற்பால். இறைமாட்சி என்பது அதன் முதலதிகாரம். ஆதலின் பின்னதிகாரங்கள் எல்லாம் ஓராற்றான் அரசியற் சார்புடையன என்பது பெறப்படும். நாட்டின் ஆட்சிக்கும் மக்களின் வாழ்வுக்கும் உயிர்மெய் யனைய உறவு உண்டாதலின் பொருட்பாலிற்றான், வள்ளுவரின் பல்வேறு கொள்கைகளையும் சிக்கல் தீர்க்கும் வழிகளையும் காண்கின்றோம். பொருட்பால் வள்ளுவரின் அறிவுப்பால்.

வள்ளுவ அரசு மக்களுரிமை சான்றது, அடிமையை வெறுப்பது; நல்லரசு வேண்டுவது, அல்லரசு கடிவது; நல்லரசனைப் போற்றுவது, அல்லரசன் ஒழிகவெனத் தூற்றுவது; வல்லரசு வேண்டுவது, மெல்லரசை இகழ்வது. வள்ளுவ அரசு முடியரசு, குடியரசு, படையரசு என்ற வகைக்கு உட்பட்டதன்று. வகை எதுவாயினும் ஆகுக. செங்கோலரசே திருக்குறள் வேண்டும் நாட்டரசு.

அரசன் அணியும் முடிகளை ஆடைகளை அணிகளை, அவன் தேவியர்களை, அத்தேவியர்களின் அழகுக் கோலங்களை, அரசனது வழிவழி மக்களை இன்ன பிறவற்றைத் திருக்குறள் கூறவில்லை. அரசன் என்ற சொல்லுக்காக அடிபணிந்து எந்நாளும் போற்றவேண்டும்

எனவும் கூறவில்லை. முறைசெய்து காப்பாற்றும் மன்னனாயின், மக்கட்கு இறையாவான். வெருவந்த செய்வானாயின் வெங்கோலன் ஆவான். அல்லவை செய்வானாயின் கொலைஞன் ஆவான், தன் செயலால் தானே கெடுவான். கூழும் குடியும் ஒருங்கிழப்பான். அவன் குடிமக்கள் அழுத கண்ணீர் படையாகி அவனை அழிக்கும். அவனது ஆட்சி பேயாட்சியாகும். இவ்வாறு கொடுங்கோல் அரசனாயின் அவனைக் குப்புறத்தள்ளக் குறள் பின்வாங்குவதில்லை. மேலும் அரசனே நாட்டின் தனிப் பெருந் தலைவன் என்பது வள்ளுவர் கருத்தன்று. அவன் குடிமக்களுள் சிறந்த பெரியவர்கள் உளர். அன்னவர்களைத் தழுவித்தான் அரசன் நாட்டினை இயக்கவேண்டும்.

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்"

என மன்னனுக்கு அறிவுரையும் அச்சுரையும் கூறுவர் வள்ளுவச் செம்மல். செவிகைப்பச் சொற்பொறுக்கும் வேந்தனே பண்புடையவன் எனவும், வென்றி தருவது வேலன்று செங்கோலே எனவும், ஆள்வார்க்கு இடிக்கும் நண்பர்கள் வேண்டும் எனவும் அரசனுக்கு மேல் நின்று அறிவுறுத்துவர்.

திருக்குறள் எக்காலத்து எழுந்தது, எழுந்த காலத்து எவ்வகை அரசு இருந்தது என்பது வினாவன்று; திருக்குறளை எவ்வகைச் சிந்தனைச் செல்வன் எவ்வண்ணம் எழுதினான் என்பதுவே வினா. உடம்பின் இயற்கைகளை எண்ணி நல்லிலக்கணம் வடித்தாற்போல, அரசியலின் ஒழுகலாறுகளைக் கண்டு உணர்ந்து காலங் கடந்த நெறிகளைத் தெளிவிப்பது திருக்குறள். அரசு என ஓரமைப்பு மக்களினத்துக்கு வேண்டியவரை அரசு வள்ளுவங்கள் வாடாதவை, தள்ளமுடியாதவை.

நம் இந்திய வரசு உரிமை பெற்ற மணி முதல் சொல்லொணா இடர்ப்பாடுகளை எதிரேற்று முன்னேறியுள்ளது. 'இளையதாயினும் பகையரசு கடியும் செருமாண் தென்னர் குல முதலாதலின்' என்று இளங்கோ பாராட்டியது போல, இளைய இந்திய நல்லரசு பெறலருந் தலைவர்களின் ஆற்றலாலும், கிளர்ச்சி விரும்பா மக்களின் சீரான ஒழுக்கத்தாலும் சாயாது இயங்கி வருகின்றது. ஐந்நூற்றுக்கு மேற்பட்ட குறுநிலங்கள் ஓரிந்தியாவாகக் கிளர்ச்சியின்றி இணைந்தது உலக வரலாற்றில் ஒரு புதுமை. இப் புதுமையைப் பழமைபோல் செய்தவர் சர்தார் படேல். ஒரு காசுமீரம் நம்மைப் படுத்திவரும் பாட்டினைப் பார்த்தால், படேலின் அருந்திறலாண்மை புலப்படும்.

இங்ஙனம் வளர்ந்து இனியும் வளர வேண்டிய இந்திய வரசுக்கு வள்ளுவர் பொருத்தமான வழிகாட்டி. திருக்குறள் இந்தியத் தமிழ்நூல். இந்திய அரசியலமைப்பின் அறிவு ஆள்வார்க்கும் சார்பாளர்க்கும் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு திருக்குறட் பொருட்பாலறிவும் இன்றியமையாதது. இன்னும் மெய்ப்பட மொழியின், திருக்குறட் கல்விதான் யார்க்கும் முதற்கண் வேண்டப்படுவது. ஏன்? அரசியலமைப்பு அவ்வப்போது கட்சிப் பெரும்பான்மையால் திருத்தத்துக்கு இடனாகிச் செல்வது. வள்ளுவ அரசியல் திருத்தங்கடந்த செம்மைப்பாடு உடையது.

இந்தியவரசு தனிமனிதப் பண்புகள் நிரம்பியதாகக் காண்கின்றேன். விருந்தோம்பல், இனியவை கூறல், பொறையுடைமை, அருளுடைமை, செய்ந்நன்றியறிதல், இன்னா செய்யாமை, அவாவறுத்தல் இன்ன பிற தனிமகப்பண்புகள் நம் அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மிகுதி. இறைமாட்சி, ஒற்றாடல், வினைசெயல் வகை, படைமாட்சி, பகைமாட்சி, பகைத்திறந் தெரிதல் என்றின்ன அரசியங்கள் தலைவர்களின் அயலகச் சிந்தனைகளில் ஊடுருவவில்லை என்பது என் கருத்து. நம் அரசு திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஓர் இலக்கியமாக ஒளிர்கின்றதேயன்றி, பொருட்பாலுக்கு இலக்கியமாக உயரவில்லை. ஏன்? தனியியமும் அரசியமும் ஒன்று; பெரிதும் வேறில்லை என்பது நம் தலைவர்களின் துணிபு. இம் மனப்பான்மையினால், உண்ணாட்டு அயல் நாட்டுக் கோட்பாடுகளை வகுத்துள்ளனர். அதனால் எதிர்பாரா இன்னா விளைவுகள் புகுந்துவிட்டன. இன்னும் புகும்.

கொள்கைகளின் களங்களை முரணின்றி நமக்குப் புரியவைப்பது திருக்குறள். ஒருவன் கொள்கை என்ன? உள்ளூர்க் கொள்கை என்ன? உலகக் கொள்கை என்ன? இவற்றை அறியும் நோக்கில் வகுத்துத் திருக்குறளைப் பயிலவேண்டும். குற்றஞ் செய்தவர்களைப் பொறுத்தவர்க்குப் பொன்றும் துணையும் புகழ் என்பது தனியறம்; குற்றங் கடிதல் வடுவன்று.

வேந்தன் தொழில் என்பது அரசறம். ஒன்றுக நல்லது கொல்லாமை என்பது தனியறம்; கொடியவர்களைக் கொன்று தண்டிக்க என்பது அரசறம். தவமறைந்து அல்லவை செய்யற்க என்பது தனியறம்; தவவடிவங்கொண்டு ஒற்றுடுக என்பது அரசறம். எல்லார்க்கும் பணிதல் நல்லது என்பது தனியறம். பகை வரைக் காணின் பணிவதுபோல் முதுகு காட்டுக என்பது அரசறம். ஒருவன் ஒருவனை அழித்தால் கொலை என்கின்ருேம்; அழித்த வனைக் கொலையாளன் என்கின்ருேம். ஆனல் போர்க்களத்துக் கொலையை வீரம் எனவும், அக்கொலை செய்தானை வீரன் எனவும் போற்றி வாகைமாலை சூட்டுகின்ருேம். இக் கொலை வீரப் பயிற்சியும் கருவியோடு அளிக்கின்ருேம். அறங்கள் இருவேருக இருக்கலாமா? பெரு முரண் இல்லையா? இதற்கு விடை இக் கட்டுரைக்கண் விரிப்பின் பெருகிவிடும். மன மாசின்மையே அறத்தின் அடிப்படை. பிற நலமே அறத்தின் உரைகல். தவக்கோலம் கொள்ளும் ஒற்றனும், போர் செய்யும் வீரனும் தம்முயிரை மதியாது நாட்டு நலம் பேணு பவர்கள் அன்ருே? அவர்கள் செயலில் தன்னல மாசுக்கு இடனுண்டா? ஆதலின் அரசறங்கள் பொதுநலம் தரும் நல்லறங்களே என்பது தெளிவு.

ஓர் அரசுக்குப் படையும் படைப்பெருக் கமும் இன்றியமையாதவை என்பதனை நம் தலைவர்கள் ஆழமாகச் சிந்திக்கவில்லை. மாருக, படைவளத்தை இழித்தும் கழித்தும் பேசினர். பொருளே வளம் என்று அதற்கே திட்டம் பல இட்டனர். மக்களைப் படையுணர்ச்சிப் படுத் தாது பொருளுணர்ச்சிப் படுத்தினர். சுற்றி யுள்ள உலகம் நம் படைவறுமையைப் புரிந்து கொண்டது. படைமனம், பகைமனம் இல்லா நாடு என்பதனையும் புரிந்துகொண்டது. இஃது இந்தியாவின் தனிப்பெருமை என்று நம்மிற் பலர் தற்பெருமை ஆடலாம். இப்பெருமை சீனத் தாக்குதல் காலத்து என்னுயிற்று? யார் தரினும் படை தருக என்று இரந்து ஏளனத் துக்கு ஆளானேம். சீன வஞ்சித்தது, செய்ந் நன்றி கொன்றது என்று தனியறம் பழித் தோமே யன்றி, அரசறம் எது என்று நாட வில்லை. செய்ந்நன்றியுணர்வு அரசறம் அன்று, அரசாள்பவர்கள் அடிக்கடி மாறுவார்கள். அரசின் கொள்கைகள் அயற் சூழ்நிலைகளால் அடிக்கடி நிலை மாறுவன. அப்போது தன் நாட்டிற்கு நல்லது எது என்று எண்ணியே வினைசெயல் வகைகளை ஆளுநர் மேற் கொள்வர். நாட்டு நலம் கருதிச் சூழ்ச்சிகளைக் கையாளும் அரசியல் அறிஞர்களைப் பழிப்பது பொருந்தாது. கையாளாதவர்களே பழிப் புக்கு உரியர்.

> "வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
> மெலியார்மேல் மேக பகை"

என்பது பகைமாட்சிக் குறள். படைமெலிய வர்களைப் பகைத்து நாட்டு நலம் பேணுக என்று வள்ளுவரே ஆணையிடுகின்ருர். அங் ஙனம் செய்யாத அரசுக்குப் புகழ் இராது எனவும் அச்சுறுத்துகின்ருர். நம் அரசியற் றலைவர்கள் இன்றுவரை முற்றும் மறந்து வரும் ஓர் அரசியம் உண்டெனின், அது பகை மாட்சியைப் பயன்படுத்தாமையாகும். திருக் குறள் எண்பத்தேழாவது அதிகாரத்தை இனி யாவது நாம் கண்ணும் கருத்துமாகப் பின் பற்ற வேண்டும்.

நம் தாய்நாடு ஞாலத்தில் ஒரு பெரிய நாடு. மாநிலமீது அதுபோல் பிறிதில்லை என்ற புகழ்ச்சிக்கு உரிய நாடு. எனினும் பயன் என்ன? நம்மைக் கண்டு பக்கத்து நாடுகள் துணுக்குறவில்லை. சீனப் படை யெடுப்புக்குப்பின், சுற்றுச் சிறு நாடுகளுக் கெல்லாம் குளிர்விட்டுவிட்டது அணிய நாடு களின் பகை கூடாது, ஐ. நா. வில் சார்புத் துணைவேண்டும் என்று அஞ்சி யஞ்சி விட்டுக் கொடுத்த போக்கால் கண்டது என்ன? பன்னூருண்டு மண்ணுெடு பாடுபட்ட இந்தியர் களை, இந்தியர்கள் என்பதற்காக இலங்கை விரட்டுகின்றது; கப்பல் கப்பலாகப் பர்மா ஏற்றுமதி செய்கின்றது. பாகித்தான் அகதிகள் ஒருபுறம் குவிய, இலங்கை யகதிகளும் பர்மா அகதிகளும் தாயகம் ஓடிவந்து தவிக்கின்றனர். இங்ஙனம் வரவிட்டால், இந்தியன் என்பதற்கு அகதி என்று பொருள் என மேனுட்டு அகர நூல்கள் எழுதவும் கூடும். உலகம் ஒன்று, உலக மக்கள் ஓரினம் என்று பறையறையும் நம் கொள்கைக்குப் பழிப்பு வருமோ? அரசியல் அரங்கில் ஐந்தொழுக்கம் கண்ட நம் இலக் கணத்துக்கு இலக்கியமாக நாமாவது நடந்து காட்டவேண்டாமா? என்று நாம் எண்ணும் புழுக்கத்தை அணிய நாடுகள் கண்டவாறு பயன்படுத்துகின்றன. எகித்து, காங்கோ, கொரியா, வியட்நாம், கியூபா நிகழ்ச்சிகளில் நாம் காட்டிய எதிர்ப்புத் துடிப்பை இலங்கைத்

தமிழர் பூசலில் காட்டியிருந்தால், திபேத்தில் காட்டியிருந்தால், அணிய நாடாளுநர் உள்ளத்து அச்சம் குடிகொண்டிருக்கும். சிறிது ஆராய்ந்து இறங்குவார்கள். இலங்கைத் தமிழர் அவலநிலைகளை ஐ. நா. வில் கொண்டுபோய் விளம்பியிருந்தால், பர்மாவிற்கு இன்று இவ்வளவு துணிவு பிறந்திராது. என்னுமோ என்று பர்மாவாழ் தமிழர்களை நாமே இறக்குமதி செய்து கொள்ளவேண்டிய பரபரப்பும் பதைபதைப்பும் ஏற்பட்டிராது.

நம்மரசு சேணுடுகளிடை மதிப்புப் பெறல் கருதி, அணிய நாடுகளுக்கு இளக்காரம் கொடுத்துவிட்டது. எல்லா அயல் நாடுகளுக்கும் பரவலாக ஒரே ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பது ஓர் அரசியல் தவறாகும். அவரவர் பண்பறிந்து எதனையும் செய்யவேண்டும், இன்றேல் நன்மையும் தீமையாகும் என்பர் வள்ளுவர். உறவின் நிலை நோக்கி நாட்டுக்கு நாடு நம் அயலகக் கொள்கை வேருக இருத்தல் வேண்டும். இக்கருத்தை நம் தலைவர்கள் நீளச் சிந்திப்பார்களாக. சுற்று நாடுகளின் இளக்காரம் அப்போதுதான் அகன்றொழியும். மேலும் ஒரு நாடு தன் அயலகக் கொள்கைகளை முற்றும் தானே வகுத்துக்கொண்டுவிட இயலாது. படைப் பெருக்கம் கூடாது என்று நாம் உறுதியாக எண்ணினோம். அமைதிப் பேச்சால் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதே நெறி என்று நன்னர் எடுத்துரைத்தோம். ஆயினும் என்னே? சீனத்தாக்கம் நம் கொள்கைக்கெல்லாம் ஓரதிர்ச்சியாயிற்று. அதன்பின் ஆட்படை கருவிப்படை ஊர்திப்படையெல்லாம் பெருக்கத் தொடங்கிவிட்டோம். பள்ளித் தலமனைத்தும் படைப் பயிற்சித் தலமாக்கி விட்டோம். 'மாரத வீரர் மலிந்த நன்னடு' என்று வீரப் பாடல்களையும் வீரத் தாயர்களின் திறங்களையும் கற்பிக்கப் புகுந்துவிட்டோம். இதனெடு நிற்றலாகாது. மேலும் சுற்று நாடுகளின் முற்போக்குக்களை முன்னரே ஊகித்துக் கொண்டு ஓரடி முன் வைத்துவிடவேண்டும்.

சீன எப்படியும் ஒருநாள் அணுக்குண்டு ஆக்கிவிடும். அதன் வெடிப்பைக் கேட்கும் வரை நாம் வாளாவிருத்தல் ஆகாது, ஆகாது. படையொழிப்புப் பறைசாற்றும் நாம் அணுக்குண்டு செய்யலாமா? செய்வோமென்று சொல்லின், உலகம் நகையாடாதா? என்று நினைப்பது தனியறம், நாட்டறமன்று. சீனத் தாக்குதலுக்குமுன் இந்தியா போய்க்கொண்டிருந்த போக்கிலேயே பின்னும் போதல் ஒரு போக்கு எனப் புகழப்படுமாயினும், அப்போக்கு பிற்போக்கேயாம். மாறிய சூழ்நிலைகளைக் கணித்து, வேண்டுமேல், மாறத் தயங்கல் கூடாது. அதுவே நாடு காக்கும் பெருநெறி. யார் தூற்றினும் தூற்றுக என்று ஐதராபாத்தை இணைத்தோம். படைவிடுத்துக் காசுமீரத்தை மீட்டோம். படைதொடுத்துக் கோவாவைக் கொண்டோம். அதனல் ஓரளவேனும் வாழ்கின்றோம். இத்துணிவு பாரதத் தலைவர்களுக்கு இன்னும் பலவாகுக. அணுக்குண்டு செய்யும் ஆற்றலுடைய ஆசிய நாடுகள் மிகச் சிலவே. அதற்குரிய மூலகங்கள் எம்மிடமிருந்தும், அணுக்குண்டு வடிக்கமாட்டோம் என்கின்ற கொள்கைத் தடிப்பு இனி வேண்டாம். வழிவழி நட்பல்லது வேறறியாச் சீனம் வஞ்சித்தபின், அணுக்குண்டு ஆக்கிக் காட்டும் கொள்கைத் துடிப்பே வேண்டற்பாலது. இந்தியக் குண்டின் வெடிப்பை எதிரிகள் கேட்கும் நாளே இனிய நாள். இவ்வல்லமையை நாம் வேண்டுவது பிற நாட்டைப் பிடித்து வஞ்சி சூடுதற்கன்று. நொச்சி என்னும் தற்காப்புக்கே. ஒரு நாடு இந்தியாவை இளக்கமாக எண்ணுதபடி, அவ்வெண்ணத்தை முளையிலே கிள்ளுதற்கே.

> "வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
> பகைவர்கட் பட்ட செருக்கு."

காலத்திற்கேற்ற வகைவகையான தற்காப்புக் கருவியெல்லாம் முன்னரே நம்மிடத்து இருந்தால், பகைவர் நம்வழி வாராது வேறு வழி பார்ப்பார்கள் அல்லவா? இந்திய மன்னர்கள் ஐரோப்பியர்களுக்கு அடிமைப் பட்டதற்கு ஒரு காரணம் காலத்திற்கேற்ற படைக்கருவி—எதிரிகள் வைத்திருந்த கருவி வகைகள் இல்லாமையேயாம். எது கடன் வாங்கினுலும், தற்காப்புக் கருவிகள் கடன் வாங்கவேண்டாதபடி, தானே ஆக்கிக் குவிக்கும் தன்னுற்றல் நம் நாட்டிற்கு வேண்டும். அப்போதுதான் அணிய நாடுகள் நம்மை அச்சத்தோடும் ஆர்வத்தோடும் மதிக்கும்.

நம் வள்ளுவரை நாமே நம் நாட்டின் அரசியல் வழிகாட்டியாக இதுகாறும் கொள்ளத் தவறிவிட்டோம். கொள்ளுமாறு எடுத்துச் சொல்லவும் இந்தியத் தமிழர்கள் தவறிவிட்டனர். இத்தவறு இனியும் நீளக்

கூடாது. தனியறம் அரசறம் என்பவற்றை உணர்த்த வல்ல ஓர் இந்திய நூல் திருக் குறள். ஒன்ருக நல்லது கொல்லாமை என்று உலகறம் மொழிந்த வள்ளுவரே படைமாட்சி யும் படைச்செருக்கும் மொழிகின்ருர் நாட்டின் செல்வத்துள் படையே தலைச்செல்வம் என்று வலியுறுத்துகின்ருர். அரசின் முதலுடைமை படையே என்று கண்டார் வள்ளுவர். தாம் கண்டவாறே கற்பவர்க்கு உணர்த்தவும் துடித்தார். பொருட்பால் எழுபது அதிகாரம், எழுநூறு குறள்கள் கொண்டது இறைமாட்சி என்பது முதலாவது அதிகாரம். அவ்வதிகா ரத்தின் முதற் குறளாவது:

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு."

இக் குறளில் முதலடிக்கண் முதலாவது இருக்கும் முதலசைச்சொல் படை என்பது. படை என்னும் ஆற்றலுடைய சொல்லை முதலா வதாக வைத்துப் பொருட்பாலையே தொடங்கி யுள்ளார் வள்ளுவர். படையின் இன்றியமை யாமையை இதனைவிட வேறு வகையால் உணர்த்த முடியுமா?

வள்ளுவரை உலகிற்கு வழங்கிய தமி ழிந்தியா தன் வள்ளுவ மகனின் அருமையை அறியவில்லை. இனியேனும் வள்ளுவ நம்பி இந்திய வழிகாட்டி ஆகுக. வழிகாட்டியெனத் தலைவர்கள் வணங்கியொழுகுக அரசறம், பகைமாட்சி, படைமாட்சி, படைச்செருக்கு, பகைத்திறந்தெரிதல் என்ற வள்ளுவ அரசியங் களை நம் தலைவர்கள் மேற்கொள்ளுக.

உதவி வரைத்தன்று

ஒரு செல்வவான். தாராள மனசுடையவர். அறுபதாவது ஆண்டு விழாவை நடத்தினர். பெரிய விருந்தளித்தார். வைதீகர்களுக்கும் அளித்தார். அவர்களுக்கு தக்ஷிணையாக ஆளுக்குப் பத்து பத்து ரூபாய் கொடுத்தார். வைதீகர்கள் விருந்து சாப்பிட்டு விட்டுத் தக்ஷிணை ரூபாய் பத்தையும் கையில் வைத்துக்கொண்டு ஒருவர் பின் ஒருவராய்த் தெரு வழியே நடந்து போகிருர்கள்.

அப்படி போகிற முதல் ஆசாமியை வழியில் நின்றவர் கொஞ்சம் நிறுத்தி, 'அறுபதாவது ஆண்டு விழாவாக்கும்! சாப்பாடு பிரமாதமாய் இருக்கும். தக்ஷிணையும் கொடுத்திருப்பார்கள். எவ்வளவு கொடுத்தார்?' என்று கேட்டார்.

வைதீகர் சொன்னர்: 'என்னத்தைக் கொடுத்துவிட்டார்! அப்படியாக ஒன்றும் இல்லை இந்தப் பிச்சைக்காரக் காசு பத்து ரூபாய் கொடுத்தார். நூறு ரூபாய் கொடுக்கக் கூடாதோ? கொடுத்தால் ஆண்டியாகவா போய்விடுவார்?' என்ருர். இரண்டாவது வைதீகர் வந்தார். அவரைக் கேட்டார் வழிப்போக்கர். அவர் பத்து ரூபாய் கொடுத்தார் என்று ரூபாயைக் காட்டினர். மூன்ருவது பேர்வழியிடம் அக் கேள்வியைப் போட்டார். அவர் சொன்னர்: "நூறு ரூபாய் கொடுத்தார் ஐயா. பத்து ரூபாய் நூறு ரூபாய் என்றே மதிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார். கடைசியாக நாலாவது வைதீகர் உத்ஸாகத் தோடு நடந்து வந்தார். வழியில் நின்றவர் அவரையும் கேட்டார்.

அவர் 'லக்ஷ ரூபாய் கொடுத்தார் ஐயா. பத்துப் பத்து ரூபாயாக எத்தனையோ பேருக்குக் கொடுத்தார். எனக்கும் கொடுத்தார். தாராள மனசு என்ருல் இதுதான்' என்றுசொல்லி உள்ளம் பூரித்தவாருகச் சென்ருர்.

உதவி பெற்றவர் குணம் உயர உயர அந்தப் பத்து ரூபாயின் மதிப்பு ஏறுகிறது. பத்துக் காசில் இருந்து பத்து ரூபாயாகி நூறு ரூபாயாக மாறி லக்ஷ ரூபாயும் ஆயிற்று. ஆகவே 'உதவி வரைத்தன்று உதவி'. பத்து ரூபாய், பத்து ரூபாய்க் கணக்கு அல்லதானே.

—டி. கே. சிதம்பரநாத முலியார்.
(*திருவள்ளுவர் வெள்ளிவிழா மலர்*, பக். 8-9)

வள்ளுவர் வகுத்த 'திரு'

[பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.,]

தமிழிலும் சைவத்திலும் தனிப்பற்று உடைய இவர் 1914 இல் தோன்றினார். அயராத உழைப்பும் தளராத தொண்டு மனப்பான்மையும் பெற்றவர். தமிழால் முன்னுக்கு வந்த இவர் தமிழின் முன்னேற்றத்திற்காகத் தொண்டு புரிந்து வருகின்றார், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் சிறந்த கட்டுரையாளர். இதழ்கள் உலகோடு நெருங்கிய தொடர்புடையவர். திறன்மிக்க



நூலாசிரியர். தமிழர் வாழ்வு, சமயம், கலை, தமிழ்மொழி ஆகிய வற்றைப்பற்றி முப்பதுக்கும் மேற்பட்ட அரிய நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் செஞ்சொல் வல்லார். இலங்கை மலேயா முதலிய கடல் கடந்த நாடுகளிலும் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம் பேச்சாற்றலால் கவர்ந்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்கி அறக் கட்டளையின் சார்பில் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்.

செல்வத்தை விரும்பாதவர் யாருமிலர். 'முற்றத் துறந்த முனிவர்' என்று தம்மைக் கூறிக் கொள்பவரும்கூட இந்த இருபதாம் நூற்றாண்டில் 'செல்வச் சிறப்'புடையராகவே வாழவிரும்புகின்றனர். இந்த நாளில் செல்வமே அனைத்திற்கும் அடிப்படையாக அமைகின்றது. செல்வம் என்பது பலபொருள்களில் பழங்காலத்தில்—வள்ளுவர் திருக்குறளில்—வழங்கிவந்தாலும், இன்று அது பொருட் செல்வத்தையே குறிக்கின்றது. 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்று வள்ளுவர் கூறினும் இன்றைய மக்கள் அப்பொருளை அன்றி உலகில் வேறொன்றுமே இல்லை என்னும் அளவிற்குத் தம் வாழ்வை அமைத்துக்கொள்ளுகின்றனர். 'கடவுளா? பண்பா? அறமா? பொருளா?' என்ற வினாவிற்குப் 'பொருளே!' என்று ஏகாரமிட்டுக் கூறும் அளவிற்கு மனித சமுதாயம் முன்னேறி விட்டது. எனவே அப்பொருளை எவ்வாற்றானும் பெறுதற்கு அவாவுடையதாகி, எதையும் செய்யத் தொடங்கிவிட்டது அச் சமுதாயம்.

வள்ளுவர் திருமகளைச் செல்வத் தலைவியாகக் கூறுகின்றார். 'திருமகள்' செல்வமாகவே குறிக்கப்பெறும் இடங்கள் பல. மிகப் பழங்கால இலக்கியத்தில் இத்தொடர் அவ்வாறு குறிக்கப் பெறுவிடினும் பிற்காலத்தில் இது பெருவழக்காக அமைந்துவிட்டது. வள்ளுவர் 'திரு' என்ற சொல்லை நான்கு பொருள்களில் நன்கு பயன்படுத்துகின்றார். 'திரு' என்ற சொல்லை, செல்வம், நன்மை, அழகு, திருமகள் என்று கொள்ளும் நால்வகைப் பொருள்களில் வள்ளுவர் எடுத்தாளுகின்றார்.

"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்'' (குறள் 168)

என்ற குறளில் திரு என்ற சொல்லைச் 'செல்வம்' என்ற பொருளிலேயே பெய்துள்ளார். இன்னும் வேறு நான்கு குறட்பாக்களிலும்[1] இதே பொருளில் வள்ளுவர் இச் சொல்லை வகுத்துக் காட்டுகின்றார். இவற்றுளெல்லாம் திருவள்ளுவர் செல்வம் சேரும் இயற்கை நிலையையும் பயனையும் அது தங்கும் முறையையும் நீங்கும் நிலையையும் விளக்கிக் காட்டுகின்றார். உலகத்தியற்கையே 'செல்வம் உடையவராதல், அஃதின்மையராதல்' என்ற பாகுபாட்டில் அமைவது என்பதை விளக்கி; எத்துணைச் சமதர்மச் சமுதாயம் அமைக்கும் சூழ்நிலை பெறினும், அதிலும் 'இருவேறு' நிலை இருக்கத்தான் முடியும் என்ற உண்மையை விளக்கிக் காட்டுகின்றனர். இந்த உண்மையை இருபதாம் நூற்றாண்டின் இடையில் உலகி

1. 215, 374, 408, 568.

லுள்ள பல்வேறு வாழ்வமைப்புக்களிலும் நன்கு விளங்கக் காண்கின்றோம்.

பொருட்செல்வம் நல்லவரிடம் சேர்ந்தால் உண்டாகும் பயனையும் அல்லவரிடம் சேர்ந்தால் ஆகும் அல்லலையும் மற்றொரு குறளால் வள்ளுவர் விளக்கத் தவறவில்லை. நல்லவரிடம் சேரின் அது 'ஊருணி நீர் நிறைந்தற்று' என்றும் வேறிடத்தில் விளக்கமும் தருகின்றார். எனினும் இத்தகைய செல்வம்—பொருட் செல்வம்—உலகுக்கு வேண்டிய செல்வம், அழுக்காறு காரணமாகவும் இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சீற்றம் காரணமாகவும் உடையவரைவிட்டு விரைவில் நீங்கும் என்பதையும் வள்ளுவர் தெளிவாகக் காட்டிவிடுகிறார். எனவே செல்வத்தின் இயல்பினையும் அதுசேரும் நிலையினையும் வள்ளுவர் என்றும் வாழநினைக்கும் சமுதாயத்துக்கு விளக்கியுள்ளார். இந்த நல்ல விளக்கத்தை அறியாத காரணத்தினாலேயே உலகம் எங்கோ பொருட் செல்வத்தின் பின்னேயே உருண்டோடிக் கொண்டிருக்கிறது.

இச் செல்வத்துக்கு—பொருள் செல்வத்துக்கு உரியவள் 'திருமகள்' என்பதையும் வள்ளுவர் 'திரு' என்ற சொல்லாலேயே மூன்று இடங்களில் குறிக்கின்றார்.[1] இம் மூன்றிலும் அவர் அச் செல்வி தங்குமிடத்தையும் விட்டு விலகும் இடத்தையும் விளக்கிக் காட்டத் தவறவில்லை அவர்.

"அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு" (குறள் *179*)

என்று 'அறத்தை அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையவரைத் திருமகள்தானே தகுதி அறிந்து அப்போதே சேரும்' (பரி) நிலையினை தெளிவாக்கிவிடுகிறார். காளிங்கர் இத் 'திரு'விற்கும் 'செல்வம்' என்றே பொருள் கொள்ளுகின்றார். எப்படியாயினும் அறவாழ்வு வாழாதவருக்குத் திருமகள் நோக்கு இல்லை என்பது தெளிவு தானே!

வேறு இரு குறட்பாக்களில் 'திரு' தங்கப் பெறுதவரை வள்ளுவர் காட்டுகின்றார். 'இருமனப் பெண்டிரையும் கள்ளையும் கவற்றினையும்' தனக்குத் துணையாகக் கொள்பவனையும் நட்பிடை வேறுபாடு நினைப்பவனையும் திரு (தங்காது) நீங்குவாள் எனக் காட்டுகின்றார். எனவே செல்வம் நல்லவரிடம் தங்கும் என்பதும் அல்லவரை விட்டு அகலும் என்பதும் வள்ளுவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை.

இந்த நூற்றாண்டில் சிலர் இந்த நம்பிக்கையில் நம்பிக்கை வைக்க மறுக்கின்றனர். அதற்கென அவர்கள் காட்டும் காரணங்களும் உள. உலகில் கொடுமையே வாழ்வின் குறிக்கோளாக உள்ளவர்—அழுக்காறுடையவர்—அறனறியார்—செல்வம் பெற்றுச் சிறக்க வாழ்வதையும் அல்லாத நல்லவர் அல்லலுற்றுச் சாய்வதையும் காட்டித் தம் நம்பிக்கை தளர்வதை விளக்குவர். நன்கு அறிந்தவருக்கும் கூட, அக் காட்சி தடுமாற்றத்தை விளைக்கின்றது என்பது உண்மையே எனினும் நின்று நிலைத்து நெடிது நினைப்பின் வள்ளுவர் தம் நம்பிக்கையே வலியுறுத்தப் பெறும்.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்" (குறள் *1072*)

என்ற குறளில் வள்ளுவர் கயவரைத் 'திருவுடையர்' எனவே குறிக்கின்றார். ஆம்! அதற்கென அவர் காரணமும் காட்டுகின்றார். "தமக்கு உறுதியாவன அறிவாரின் அவை அறியாத கீழ்மக்கள் நன்மை உடையவர்—அவர்போல் அவை காரணமாகத் தம் நெஞ்சத்தின்கண் கவலை இலராகலான்" என்று இக் குறளுக்குப் பரிமேலழகர் உரை கூறி, திரு என்பதற்கு நன்மை எனப் பொருள் காண்கின்றார். அந்த நன்மைக்கு அக் கயவர் நெஞ்ச நிலையே காரணமாக அமைகின்றது என்பதையும் அவர் உணர்த்துகின்றார். இந்த அவல நெஞ்சின் அல்லலைப் பின்வந்த பெரியவர்கள் பலவாறு பாடியுள்ளனர். அத்தகைய கயவர் வாழ்வு—பொருட்செல்வம் சிறந்ததாக உலகில் காணப்பெறினும் அவர்தமது உறுதி அறியாதவராக, மறுமை நலமும் இம்மைச் செல்வங்கள் பிறவும் இல்லாதவராக, வறிதே கழிவதையும் நம் கண்முன்பே காண்கின்றோமல்லமோ!

திருவள்ளுவர் 'திரு' என்ற சொல்லை 'அழகு' என்ற பொருளிலும் எடுத்தாண்டுள்ளனர்.

"கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற" (*1011*)

என்றும்,

"கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்" (*1123*)

1. 179, 519, 920.

என்றும் அழகு என்ற பொருளில் இரு இடங்களில் எடுத்தாளுகின்றார். இரண்டிடங்களிலும் நல்ல பெண்களே அத்தொடர்களால் குறிக்கப் பெறுகின்றனர். 'திரு' அழகாகின்றது. இவ்வாறு வள்ளுவர் பொருட் செல்வத்தை—நன்மையை — அழகினை — இலக்குமியை — 'திரு' என்ற சொல்லால் சில குறட்பாக்களில் விளக்கிக் காட்டுகின்றார். இவை அனைத்திலும் வள்ளுவர் அத் திருவாகிய அழகும் நன்மையும் சேர்ந்த நல்ல அறத்தாறு ஓம்பும் செல்வ நிலையையே நமக்கும் நினைவூட்டுகின்றார் அவர். இந்த உண்மையை உணர்ந்து, இதில் நம்பிக்கை கொள்வோமாயின் இருபதாம் நூற்றுண்டின் புறவாழ்வைக் கண்டு நாம் புழுங்கத் தேவையிருக்காது. அழுக்காறுடையார் செல்வத்தில் புரள்பவராகத் தோற்றமளிப்பினும் அவர் நெஞ்சத் தவலமிலராகி அழிவது திண்ணம். அத்தகையோரைச் 'செய்யவள் தவ்வைக்குக் காட்டிவிடும்' என்பதும் உறுதி. இந்த உண்மையை—நல்லவர் வாழ்ந்து அல்லவர் அவலமுறும் நிலையை—வள்ளுவர் பலவிடங்களில் தொட்டும் சுட்டியும் இட்டும் எடுத்தும் காட்டியுள்ளார். 'திரு'வின் பெயரால் இதைச் சற்று விளக்கமாகவே தெளிய வைத்துள்ளார். 'வள்ளுவர் வகுத்த திரு'வின் செயல் இது—செம்மை இது—நன்மை இது அழகு இது. இதை உணர்வார் உயர்வார்! அல்லார்......அல்லாரே!

தேவர் குறள்

தமிழ் நூல்களிற் சிறந்தன வென்று சில நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துச் சிலர் சில செய்யுட்களின் வாயிலாகத் தெரிவிக்கின்றனர்.

ஏழில் ஒன்று

''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.''

ஆறில் ஒன்று

''வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.''

நான்கில் ஒன்று

''திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு.''

மூன்றில் ஒன்று

பிற நூல்களால் விளங்காத விஷயங்கள் ''தொல்காப்பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்'' என்று இலக்கணக் கொத்துடையார் பாராட்டுகின்றார்.

இரண்டில் ஒன்று


''நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி'' என்னும் பழமொழியில் நாலடியாரும் குறளும் குறிக்கப்படுகின்றன.

—உ. வே. சாமிநாதையர்.
(திருவள்ளுவரும் திருக்குறளும், பக். 12-14)

வள்ளுவர் காட்டும் சமயக்கருத்துகள்

[சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

இவர் பிறந்த ஊர் ஔவை யார் குப்பம். பிறந்த ஆண்டு 1903. முறையாகத் தமிழ் பயின்ற இவர் தமிழ்மொழி, வரலாறு இரண்டிலும் பேரறிவு படைத்தவர். தற்பொழுது மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மொழிப் புலமையோடு சைவ சமயப் புலமையும் வல்லார். எழுத்தாற்றலோடு நாநலமும் மிக்கார். இவருக்கு 'உரை வேந்தர்' என்ற பட்டம் சூட்டப்பெற்றுள்ளது. இவர் பல அரிய உரைநடை நூல்களும்



தமிழக வரலாற்று நூல்களும் எழுதியுள்ளார். சைவத் திருமுறைகளினும் சித்தாந்த சாத்திரங்களிலும் நல்ல பயிற்சியுடைய இவர் அதன் கருத்துக்களைக் கேட்பார் பிணிக்கும் தகையவாய் எடுத்துக் கூறும் வலிமை பெற்றவராதலால் 'சித்தாந்த கலாநிதி' என்ற பட்டமும் பெற்றவர், திருக்குறளையே துணையாகக்கொண்டு திருவள்ளுவரின் வரலாறு காணும் உண்மை நெறியைப் பின்பற்றி இவர் 'தெய்வப் புலவர் திருவள்ளுவர்' என்ற நூல் இயற்றியுள்ளார்.

திருவள்ளுவர் அருளியுள்ள திருக்குறளைக் கற்றுணர்ந்த பழம்பெருஞ் சான்றோர்களுள் கல்லாடனார் ஒருவர். அவர் சிவபெருமான் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்து ஒவ்வொன்றையும் ஒவ்வோர் அகவற்பாவில் வைத்துக் கல்லாடம் என்ற பெயரால் ஒரு நூல் செய்தவர். அவற்றுள் அவர் சிவனையும் அவனுடைய அருட் செயல்களையும் குறிக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நோக்கின், அவர் புலம் பழுத்த சிவநெறிச் செல்வர் என்பது தெற்றென விளங்கும். அப்பெற்றியரான கல்லாடர், ஓரிடத்தில் திருவள்ளுவரைக் குறிக்கும்போது, "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்" என்று உரைக்கின்றார். திருவள்ளுவ மாலையில் காணப்படும் சான்றோர்களில் கல்லாடர் என ஒருவர் காணப்படுகின்றார். அவர் கருத்தும் இக்கல்லாடனார் கருத்தோடு ஒத்து, "சமய நூல்கள் ஒன்றோடொன்று வேறுபட்டும் மறுத்தும் இயலுவன; திருக்குறளை எல்லாச் சமயத்தவரும் ஏற்று ஒன்றி இயைவர்" என்ற கருத்துப்பட,

"ஒன்றே பொருள்எனின் வேறுஎன்ப; வேறு எனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்று இயம்புகின்றார். இவ்வண்ணம் திருக்குறள் வகையில் ஒத்த கருத்துக் கொண்ட கல்லாடர் இருவரும் ஒருவரா, வேறு வேறா என்பதைக் காண்பது இங்கே பொருளன்று; திருவள்ளுவருடைய திருக்குறள் சமயம் கடந்த தனிப் பொதுநூல் என்பதை இவ்விருவர் உரைகளும் வற்புறுத்துகின்றன என்பது.

இன்று நமது நாட்டில் நிலவும் சமயங்கள் இந்திய மண்ணில் தோன்றி நிலவுவனவும் வேற்று நாடுகளில் பிறந்து இங்கே புகுந்து நிலவுவனவும் என இருதிறத்தனவாகும். அவற்றுள், இசுலாம், கிறித்துவம் என்ற இரண்டும் பிற்கூறிய திறத்தன; ஏனைச் சைவம், வைணவம், வைதிகம், பவுத்தம், சயினம் முதலியன முற்கூறிய திறத்தன. இவற்றைப் பொதுப்பட நோக்குவோமாயின், உலகிற்கும், உலகிடை வாழும் உயிர்கட்கும் வேறாய் ஒரு பரம்பொருள் உண்டு என்பது எல்லாவற்றிற்கும் ஒப்ப முடிந்த உண்மையாகத் தோன்றும். உயிர்கட்கு மறுபிறப்பும் வினையும் உண்டென்பதை இசுலாம், கிறித்துவம் என்ற இரண்டும் உடன்படுவதில்லை. இந்திய சமயங்கள் அனைத்தும் இவ்விரண்டையும் இன்றியமையாச் சமயவுண்மையாகக் கொண்டுள்ளன. இருக்கு முதலிய வேதநூல்களில் வினையுணர்வு நன்கு வெளிப்படாது நிற்பினும், அந்நூல்களை மேற்கொண்டு எழுந்து விரிந்த பிற்றை நூல்களில் அவைகள் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

வேத்நூல் ஆராய்ச்சியாளர் சிலர், வினையுணர்வு வேதகால மக்கட்கு இல்லை; அவர்கள் இந்த நாட்டுட் புகுந்தபின் இங்கே வாழ்ந்த மக்களிடையே இருந்த இக்கொள்கையைத் தாமும் மேற்கொண்டனர் என்று உரைக்கின்றனர்கள்.

தமிழகத்தின் முந்து நூல்கள் எல்லாவற்றிலும் வினையுணர்வும் மறுபிறப்புக் கொள்கையும் நிலைபெற்றுள்ளன. அவை எக்காலத்தில் யாவரால் காணப்பட்டன என்பது வரலாறு காணாத ஒன்று. திருவள்ளுவர் இவ்விரு கொள்கைகளையும் உடன்பட்டு ஏற்ற இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

வினையென்பது மனத்தால் நினைப்பதும் வாயாற் பேசுவதும் உடம்பால் செயல் புரிவதும் ஆகிய யாவற்றையும் குறிக்கும். சமய நூல்கள் மனம், மொழி, மெய் என்ற மூன்றின் அசைவும், அசைவின்மையும் வினை என்று கூறும். எனவே மக்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையும் வினையாம் என்று அறியலாம். வினைகளில் நன்மை விளைவிப்பவை நல்வினை என்றும், தீமை விளைவிப்பவை தீவினை என்றும் கூறப்படும். இவ்விரண்டாலும் முறையே உண்டாகும் இன்பமும் துன்பமும் வினைப்பயன் எனப்படும்.

ஒருவினை தொடங்கும் போதே செயப்படு பொருளும் பயனும் உடன் தோன்றி, முடியுங்கால் அவ்விரண்டும் உருவாகும். செயப்படு பொருளோடு பயனும் உடன் தோன்றுமாயினும், அப்பயனது நுகர்ச்சி காலம் தாழ்த்தும் தாழாமலும் நிகழும். வினையால் உருப்பட்டு நுகரப்படாது நிற்கும் பயன் ஊழ்வினை என்றும் ஊழ் என்றும் வழங்கும். திருவள்ளுவனார், நன்மை பயக்கும் நல்வினையையும், தீமை விளைவிக்கும் தீவினையையும், முறையே ஆகூழ் என்றும் போகூழ் என்றும் வினைப்பயனாய் நுகர நிற்கும் வினைக்கூற்றை ஊழ்வினை என்றும் தனித்தனி நிறுத்தி விளக்குகின்றார். நலம் பயக்கும் நல்வினை யாவும் அறவினை என்றும், அறம் என்றும், அதுவே செய்தற்குரியது என்ற கருத்துத் தோன்றச் "செயற்பாலது ஓரும் அறனே" என்பதனால் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

தீவினையால் விளைவது தீமை; அதன் பயன் துன்பம். வினைப்பயன் அவ்வினையைச் செய்தார்க்கே உரியது; அதனை அவர் ஒருகாலும் நுகராமல் கழிக்க முடியாது. "எனைப் பகையுற்றாரும் உய்வர் வினைப்பகை, வீயாது பின் சென்று அடும்" என்றும், நுகர்ந்து கழியுமளவும் அஃது அவர் நிழல்போல் நிற்கும் என்பார், "தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை, வீயாது அடியுறைந் தற்று" என்றும் உரைக்கின்றார்.

வினையால் உண்டாகும் செயப்படு பொருள் பொறிபுலன்கட்குப் புலப்படுவது போல, அவ்வினைப் பயனான இன்பமும் துன்பமும் வினையைச் செய்பவனுக்குப் புலனாவதில்லை. அதனால், அவன் தானே சென்று வினைப்பயனை எடுத்துக் கொள்ள முடியாது; வினைப்பயனோ, உயிர்போல அறிவுடையதன்று; அதனால் அதுதானே வினை செய்தவனை அடையமாட்டாது. ஆதலால், வினை முதல் வினைப்பயனை நுகர்தற்குப் பிறிதொன்று இடைநின்று அதனைக் கூட்டல் வேண்டும். பிறிதொன்று என்ற அதுதான், உயிர்க்கும் உயிரில் பொருட்கும் வேறாய் இரண்டையும் கூட்டி வாழ்விக்கும் பரம்பொருள்; அது பற்றியே அதனைத் தொல்காப்பியர் "பால் வரை தெய்வம்" என்று குறிக்கின்றார்.

வினையைப் பற்றிக் கூறுமிடத்து, வினை "வீயாது பின்சென்று அடும்" என்றும், "மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்றும், "அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" என்றும் கூறுவனவற்றைக் காணும் போது, வினை தானே நன்மையும் தீமையும் செய்யும் போலும் என்ற எண்ணம் தோன்றும். அவ்வாறே சில சமயத்தவரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையை நோக்கின் உணர்வில்லாத ஒன்றாகிய வினை, ஒருவன் செய்யத் தோன்றலும், செய்தானொடு கூட்டக் கூடலும் உடையது என்பது தெளிய விளங்கும். வினை விடாது தொடரும் என்றும் வினைவந்து சேரும் என்றும் கூறுவது, எழுத எழுதும் பேனாவை எழுதுகிறது என்றும், செலுத்தச் செல்லும் வண்டியைச் செல்லுகிறது என்றும் வழக்கில் உரைப்பது போலவாம். "இருள் சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்றவிடத்து இருவினையும் சேரா என்பதற்கு இருவினைப் பயனும் சேர்க்கப்படா என்பது பொருள்.

வினைகள், மனம் மொழி மெய்களால் பிறப்பன என்று முன்பே கண்டோம். மன முதலிய மூன்றும் சேர்ந்தது உடம்பு. ஆகவே உடம்பு

உள்ளளவும் வினை பிறந்து கொண்டேயிருக்கும்; வினை பெருகப் பெருகப் பயனும் பெருகி இருந்து கொண்டே இருக்கும்.

வினைப்பயனையும் வினை வழியாகவே நுகர்கின்றோம்; வினை செய்தற்கும் உடம்பே கருவி; ஆயினும், வினையை இடையறாது செய்வதால் உடம்பும் மூத்து முதிர்ந்து ஓய்ந்து மாய்ந்து போகிறது. அப்போது நுகரவேண்டிய பயன் நுகரப்படாது எஞ்சி விடுகிறது. அதுதானும் நுகர்ந்தே கழிக்க வேண்டியிருப்பதால், அது தீர்தற் பொருட்டு வினை செய்தற்கேற்ற புத்துடம்பு வேண்டப்படுகிறது. அதனால் மறு பிறப்புக் கொள்கை எய்துவதாயிற்று. ஆகவே, வினை காரணமாகப் பிறப்பதும் பிறப்பு வாயிலாக வினை செய்வதும் மாறிமாறி நிகழ்கின்றனவாம். இதனை நன்கு எண்ணுமிடத்து, பிறப்பில்லையாமாறு செய்வதுதான் வினையினின்று விடுதலை பெறும் வழி என்று அறியலாம். அது பற்றியே திருவள்ளுவர் "மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல், உற்றார்க்கு உடம்பும் மிகை" என்று உரைக்கின்றார்.

இப் பிறப்புக்கள் எழுவகைப்படும் என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்; "எழுபிறப்பும் தீயவை தீண்டா" என்றும், "எழுமையும் ஏமாப்புடைத்து" என்றும், "எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்" என்றும் வரும் திருக்குறள்கள் இதற்குச் சான்றாகும்.

இங்கே காட்டிய எழுபிறப்பும் பிறந்து வினை செய்து பயன் நுகர்வதால் உயிர்எய்தும் பயன் யாது? வினை செய்தற்கண் உடம்பும் உள்ளமும் ஒன்றிநின்று அவ்வினையை முடிக்குங்கால், உயிர்க்கு உவட்டாத இன்பம் உண்டாகிறது. தன் காதலியின் இனிமைப்பண்பை எடுத்து உரைக்கும் தலைமகன் "உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்" என்று கூறுவதை நற்றிணையில் காணலாம். இதனால், உள்ளிய வினை முடிவில் இன்பம் பயக்குமென்பது தெரிகிறதன்றோ? இவ்வாறே திருவள்ளுவர், வினை இன்பம் பயக்கும் என்பாராய், "துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினை" என்று கூறுகின்றார். பரிமேலழகர் இதற்குத் "துன்பம் உறவரினும், இன்பம் பயக்கும் வினை துணிவாற்றிச் செய்க" எனப் பொருள் கூறுகின்றார். அவ்வாறின்றி, "துன்பம் உறவரினும் துணிவாற்றிச் செய்க, வினை இன்பம் பயக்கும்" என இயைத்துரைப்பது நேரிது.

வினை இன்பமேயன்றி அறிவு விளக்கமும் நல்குவது. பொருள் கருவி காலம் வினை இடம் ஆகிய ஐந்து கூறுகளையும் நன்கு ஆய்ந்து செய்யுமிடத்து, புதிய புதிய உணர்வுகளும் செயல்முறைகளும் தோன்றிச் செய்வோனது அறிவுக்கு விளக்கமும் ஆக்கமும் பயக்கும். "வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்" என்பது திருக்குறள். உலகியலில் ஒருவன் பல்லாண்டு வாழ்ந்து பெற்ற அறிவு, நல்ல கல்வி கற்றிருக்கும் இளையோன் ஒருவனது அறிவினும் விளக்கம் மிக்கிருப்பது நாம் பெரிதும் காண நிற்கிறது. இதனால் உலகவாழ்வே ஒருவனது அறிவு விளக்கம் எய்தத் துணையாவது என்றும் உயிர் மக்களுடம்பொடு கூடிப் பிறந்து வினை செய்து பயன் நுகர்வது அறிவு விளக்கம் பெறுதற்கே என்றும் தெளியலாம்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவனும் தொடக்கத்தில் அறியாமை யிருள் சூழ்ந்து இருக்கிறான். அதனால் அவனுடைய கண் முதலிய புறக் கருவிகளும் அகக் கருவியாகிய மனமும், உலக வாழ்வில், காண்பன கண்டு, செய்வன செய்து, நினைவன நினைந்து, அறிவு விளக்கம் செய்கின்றன. இவை யாவும் வினையாகும். இருள் நீக்கம் காரணமாக வினை நிகழ்வதால், திருவள்ளுவர், "இருள் சேர் இருவினை" என வினைகளைக் குறிக்கின்றார். வினை வழியாக அறிவு இருள் நீக்கம் பெறுகிறது எனினும், விளக்கேந்திச் செல்பவனுக்கு முன்னும் பின்னும் இருளே தோன்றுவது போல அறியாமை தோன்றுகிறது. "அறிதோறு அறியாமை கண்டற்று" என்று குறள் கூறுகிறது.

பிறந்தும் வினைசெய்தும் வாழ்ந்து இயலும் உயிர்க்கும், வாழ்தற்கு இடமளிக்கும் உடம்பு உலகுகட்கும் வேறாகவும் ஒன்றாகவும் உடனாகவும் நிற்கும் பரம்பொருளை உணர்வது அறிவின் கடமை என்று வற்புறுத்துகிறது திருக்குறள். அப் பரம்பொருளைத் திருவள்ளுவர் செம்பொருள் என்றும், அஃது உயிர் உலகு என்ற இரண்டினும் சிறப்புடையது என்றும், காட்டுதற்குச் "சிறப்பு என்னும் செம்பொருள்" என்றும் உரைக்கின்றார். அதனை உணர்ந்த வழி, இதுகாறும் அறிவை மறைத்திருந்த இருள் நீங்கும் எனவும், என்றும் குன்றாத இன்பம் எய்தும் எனவும் செம்பொருள் உணர்வின் பயன் கூறப்படும். இருள் நீங்கியவழிப் பிறப்பு வேண்டாமையால் "பிறப்பென்னும் பேதைமை நீங்கும்" என்கிறார்.

உடம்பொடு கூடி உலகில் இருந்தே செம்பொருளை உணரவேண்டும். இருக்கும் போதோ வினைசெய்தே தீரவேண்டும். வினையால் மேன்மேலும் பிறப்பு எய்துமன்றே என ஓர் ஐயம், இங்கே எழுகிறது. உடம்பையும் உலகையும் சார்பாகக் கொண்டு வாழும் உயிர் செம்பொருளை உணர்ந்த வழி அதுவே உண்மைச் சார்பு என உணரும்; அவ்வுணர்வால் அதனைச் சார்ந்து தோன்றும் வினைச்சார்புக்கு இடமில்லா தொழியும்; செம்பொருள் உணர்வால் உயிர் அதனைச் சாருங்கால், வினைச்சார்பு உயிரைப் பற்றுதற்கு ஆகாமையின் பற்றுக்கோடின்றிக் கெடும். இக்கருத்தைச் "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்'' என்கிருர் வள்ளுவர்.

வினைதோன்றுதற்கு உடம்பு உலகுகளின் மேல் உண்டாகும் பற்றே காரணம்; அப்பற்றை விடுவதுதான் செம்பொருளைச்சார்தற்கு வழி. பல்வேறு பற்றுக்களிடையே வாழும் உயிர், ஒன்றைப் பற்றுவதும் ஒன்றை விடுவதுமாக இருக்கும். விடும்போதும், ஒன்றைப் பற்றியல்லது உள்ள பற்றைவிடுவது உயிர்க்கு இயல்பன்று; அதனை நன்குகண்ட வள்ளுவர், "பற்றுக பற்றற்ருன் பற்றினை'' என்றும் "அப்பற்றைப் பற்றுக (ஏனைய) பற்றுவிடற்கு" என்றும் ஓர் அரிய நெறியும் கூறுகின்ருர்.

இனி, அச்செம்பொருளின் இயல்பைக் கடவுள் வாழ்த்து என்ற பகுதியில் விளங்க உரைக்கின்ருர். செம்பொருளை ஆதிபகவன் என்றும், அவன் உலகமெல்லாவற்றிற்கும் முதற்பொருள் என்றும் குறிப்பதற்கு " ஆதிபகவன் முதற்றே உலகு'' என்றும் எடுத்துரைக்கின்ருர். செம்பொருள் உயர்திணையா அஃறிணையா என ஆராய்ந்து இன்னதிணை என வரையறுத்துக் கூறலாகாதது. எனினும், உலகுயிர்களில் உயர்ந்துநிற்பது மக்களுயிராதலால், மக்களில் ஆண் பெண் என இருகூறு உண்டெனினும், உலகில் இதுகாறும் தோன்றிய சான்ருேர் அனைவரும் ஆண்மக்கட்கே முதலிடம் தந்து பேசுவது மரபு. அதுபற்றியே செம்பொருளை ஆண்பால் ஒருமையில் வைத்து உரைப்பது இயற்கையாயிற்று. அதனுல் செம்பொருளாகிய முதற்பொருளை ஆதிபகவன் என ஆண்பாலில் வைத்து உரைக்கின்ருர். அவன் அறிவே உருவானவன் என்றற்கு "வாலறிவன்'' என்றும், அவனது அறிவுருவம் மனத்தின்கண் நிகழும் சிந்தனையொளியில் தோன்றுவது என்றற்கு "மலர்மிசை ஏகினன்'' என்றும், அவன் எப்பொருளிடத்தும் பற்றில்லாதவன் என்று காட்டற்கு "வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்றும், அவன் எங்கும் எப்பொருளிலும் தங்கி முறைசெய்பவன் என்றற்கு "இறைவன்'' என்றும், ஐம்பொறிகள் வாயிலாக எழும் அவாக்கள் இல்லாதவன்; ஒப்புவமை கூறற்கு இல்லாதவன்; அளப்பரிய கடல்போன்ற அறங்கள் அனைத்தையும் தன்வடிவாக உடையவன் என்றற்கு 'அறவாழி அந்தணன்' என்றும் கூறுகிருர்.


இங்ஙனம் உலகைப் படைத்தளித்து உடம்பொடு கூட்டி உயிர்கள் வினை செய்து வாழுமாற்ருல் அறிவு விளக்கம் பெற்றுச் செம்பொருட் சார்பு பற்றிப் பிறவாப் பேறும், அழியா இன்பமும் பெறுமாறு உதவிபுரியும் அவனது நன்றியை "மறப்பது நன்றன்று"; "செய்ந்நன்றி கொன்ருர்க்கு உய்தியில்லை;'' மேலும், மக்கள் ஒருவர்க்கொருவர் செய்யும் நன்றிக்கே வானமும் வையகமுமாகிய உலக முழுதுமே ஆற்ருதாகலின், செம்பொருள் முதல்வன் செய்த நன்றிக்கு நாம் தலையால் வணங்கி வழிபடுவது தவிர வேறில்லை. அது தானும் செய்யாவிடில், நாம் பெற்ற உடல் பயனற்றதாம் என்பார் எண்குணத்தான் தாளை வணங்காத் தலை முதலியன குணமில என்று தெருட்டுகின்ருர்.

இவ்வகையே நோக்கின், உலகிலுள்ள மக்கள் அனைவருமே பிறவாப்பெருநிலைக்கு உரியர் என்பதுதோன்றும். திருவள்ளுவர், மக்கள் அனைவருமே பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குரியர்; ஆனுல், அவருள் இறைவன் அடி சேராதார் பிறவிப் பெருங்கடலை நீந்தார், அடி சேரும் செவ்வி எய்துங்காறும் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உழலுவர் என்று அறிவிக்கின்ருர். இறைவன் என ஆண்பாலால் கூறினமையால், அவன் சார்பை அடியென்றும் தாள் என்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்ருர். இத்துணையும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் வினையுணர்வும் மறுபிறப்பும் செம்பொருள் உண்டென்னும் கொள்கையும், வினைநீக்கத்தால் பிறவாப்பேறு பெறுவதே செயற்பாலது என்பதும், அதற்கு அச்செம்பொருள் செய்துள்ள நன்றியை நினைந்து வழிபடுவதும் பிறவும் வள்ளுவர் காட்டுஞ் சமயக் கருத்தாவது காணலாம்.

திருவள்ளுவனாரின் சிறப்பியலுட் சில

[பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார்]

பெருமழைப் புலவர் 1909இல் தோன்றினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றவர். சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை கற்றுத் துறை போய இவருக்கு நூல்களுக்கு விரிவுரை எழுதும் ஆற்றல் இயற்கையாய் அமைந்துள்ளது. உச்சி மேல் புலவர் கொள்ளும் பழைய உரைகளுக்கு ஈடாகச் சங்க நூல்களுக்கும் கல்லாடம், நீலகேசி போன்ற காப்பிய நூல்களுக்கும் தணிகைப் புராணம் போன்ற புராணங்களுக்கும் மிக விளக்கமான முறையில் உரை யெழுதியுள்ளார். பழைய நூல்களுக்கு உரை யெழுதுவதோடு அமையாது பழம் பெரும் நூல்களுக்கு ஆராய்ச்சி முன்னுரை யெழுதுவதிலும் கட்டுரை நூல்கள் இயற்றுவதிலும் நாடக நூல்கள் யாப்பதிலும் தம் திறமையைப் புலப்படுத்தியுள்ளார். புறப்பொருள் வெண்பா மாலைக்கு இவர் எழுதியுள்ள உரை அவ் விலக்கண நூலுக்கே பெருமை மிகுவிக்கும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது.



"சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலிற், றேன்றேர் குறவர் தேயம் நன்றே" என்பான் பிற்காலத்துப் பாண்டியன் ஒருவன். தமக்கென வாழா நோன்றாட் பிறர்க்கென முயலும் சான்றோர் காலந்தோறுந் தோன்றித் தங்கடமையைச்செய்து போதருதலாற்றான்இவ் வுலகம் என்றென்றும் நிலைத்துளது என்பான் மிகப் பழங்காலத்துப் பாண்டியன் ஒருவன். நம் தெய்வப்புலவர் திருவள்ளுவனார் தாமும்,

> "சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந் தான்
> தாங்காது மன்னோ பொறை"

என்று அவரில்லாதவழி இம் மாயிரு ஞாலத்திற்குண்டாகும் கேடிஃது என்று கூறி இரங்குவர்.

இனி, மன்னுயிர்க்கு நலஞ் செய்தலே தமது தலையாய கடமை எனக் கொண்டு முயல்கின்ற சான்றோர் தாமும் தமது செல்வத்தால் நலம் செய்கின்ற புரவலரும் தமது அறிவினாலே மன்னுயிர்க்கு என்றும் அழியாது நின்று நிலவும் மெய்ந் நூல்களைப் படைத்தளிக்குமாற்றால் நிலைத்த நலம் செய்கின்ற புலவர்களும் என இருவகைப்படுவர். இவ்விருவகையினருள் முந்நூறூர்த்தே பாரியது பறம்பு முந்நூறூரும் இரவலர் கொண்டனர் என்று நமது உளமுருகக் கபிலர் பாடிய பாரிவள்ளல் போன்ற புரவலரும்,

> "ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
> வேதப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோர்
> உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

என மாங்குடி மருதனாராற் பாராட்டப்படுகின்ற நந் திருவள்ளுவனார் போன்ற புலவர்களும் பண்டைக் காலம் தொட்டு இன்றுகாறும் நமது செந்தமிழ் வானத்தே தோன்றித் தம் புகழொளி காட்டி நின்று நிலவும் நாள்களும் கோள்களும் போல்வார் எண்ணிறந்தோராவார். புலவர் பெருமக்களை நாள்களும் கோள்களும் போல்வார் என்றேமன்றே, அவருள் நம்தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் ஞாயிறேயனையர். ஏனையோர் ஏனைய நாள்களும் கோள்களுமே போல்குவர் என்போம். திருவள்ளுவனார் அத்துணைத் தனிச் சிறப்புடையவர் என்றுணர்க. இப் புலவர் பெருமான் நந்தமிழ்க்குடிப் பிறந்தாரேனும் இந்த மாயிரு ஞாலத்திற்கே பொதுப் புலமையாளராகவும் திகழ்கின்றார். எல்லா நாட்டினரும் எல்லாச் சமயச்சான்றோரும், எக் காலத்தோருமே அச்சான்றோரைத் தம்மவராகவே மதித்து அவர்தம் ஒப்பற்ற அறிவுச்

செல்வத்தால் நலம் பெற்றுய்கின்றனர். இச் சிறப்பும் அவர்க்கேயுரிய தனிச் சிறப்பேயாம். இவர்தம் நூற்சிறப்பை ஆராய்ந்துணர்ந்த சங்கப் புலவர் ஒருவர் மெய்ந்நெறி வாழ்க்கையை விரும்புவோர்க்கு வேண்டிய,

''எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை''

என்று அறுதியிட்டுக் கூறினர். இவர் பாராட்டுரைகேட்டு நம்முள்ளம் நன்கு கூறினர் இப் புலவர் பெருமான் என்று கோடுகோடேறுகின்றது. ''மக்கள் வாழ்க்கைக்கியன்ற அறநூல் ஒன்றனை முழுமையாகப் படைத்துத் தந்த புலவர் திருவள்ளுவனுர் ஒருவரே இப்பேருலகத்துளர்; வேறெருவரேனும் இலர்'' என்று சான்றோர் கூற யாமும் கேட்டிருக்கின்றோம். இஃதுமொரு சிறப்பியல்பேயாமன்றோ?

ஆசிரியர் திருவள்ளுவனுர், காலந்தோறும் உலகவழக்கு மாறுமியல்புடையன; ஆதலால், நீ உன் காலத்துச் சான்றோர் ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுக, பழமையையே விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளற்க என நம்மனோர்க் கறிவுறுத்துவாராய்,

''எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு''

என்று கூறுவர். இவர் திருக்குறள்கூட இவரறிவுரையை மேற்கொண்டு காலம் மாறுந்தோறும் புதிய புதிய கருத்துக்களை அவ்வக் காலத்துச் சான்றோர்க்கு வழங்குகின்றனவே என்னே வியப்பு! இதுதான் தெய்வப் புலமையின் திறம்போலும். இக்காரணத்தாலேதான் இவர் நூல் காலத்தை வென்று நின்று நிலவுகின்றது. இதுவும்இவர்தம் சிறப்பியல்பேயாம்.

நுண்மா ணுழைபுலனுடைய புலவர்கள் தமக்குப் பின்னர்ப் பல நூற்றுண்டினும் வரப் போகின்ற கால மாற்றத்தையும் உணர்ந்து அக்காலத்தார்க்கும் இயையுமாறு அறிவுரை கூற வல்லுநர் ஆவர் என்பதற்குத் திருவள்ளுவரே சிறந்த சான்றாகத் திகழ்பவர். அவர் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராக விருந்தும், அவர்தம் அறிவுரைகளோ இக்காலத்திற்கும் பொழுதிற்கேற்ற புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றன. இனி வரப்போகும் எத்துணைப் பல்லாயிரம் ஆண்டுகட்கும் அவை புதியனவாகவே நிற்கும் சிறப்புடையன என்பதும் தேற்றம். இவ்வியல்பினை எண்ணும்போது 'மணிவாசகர்' இறைவனை ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனே'' எனப்பாராட்டுதல் நம் திருவள்ளுவனுர்க்கும் பொருந்தும் என்று தோன்றுகின்றது.

இனி, இவ்வாறு காலந்தோறும் திருவள்ளுவனுர் கருத்துக்கள் புதுமை பெறுவதனுல் அந்நூலிற்கு ஒரு காலத்தில் எழுதப்பட்ட உரை நிலைபெறுதல் அரிதாகின்றது; காலந்தோறும் அந்நூல் புதிய புதிய வுரையை அவாவுகின்றது. இதுவும் அவர்க்கேயுரிய சிறப்பியல்பேயாம்.

பண்டைக் காலத்தே திருக்குறட்குப் பதின்மர் உரை வகுத்தனர் எனவும் அவருள் காலத்தால் பிந்திய பரிமேலழகர் உரையே சிறந்த உரையாம் எனவும் கூறுவர்; இவர் உரையும் இப்பொழுது நோக்குவார்க்குத் திருக்குறளின் மாண்பிற்கு ஒவ்வா வுரையாகவே காணப்படுகின்றது. திருவள்ளுவர் திருவுள்ளம் விசும்பெனப் பரந்த உள்ளம். அவர்க்கு யாதும் ஊர்; யாவரும் கேளிர்; இக்காரணத்தால் அவர் இப்பேருலகில் எக்காலத்தார்க்கும் எச் சமயத்தார்க்கும் எல்லா நாட்டினர்க்கும் எம்மொழியாளர்க்கும் பொதுவாய் நிற்கின்ற சிறப்பியல்புடையதாகத் தமது திருக்குறளைச் செய்தருளினராக; உரையாசிரியர் பரிமேலழகரோ, வடவாரியர் மொழியையும் சமயத்தையும் பெரிது மதித்து அவற்றில் அழுந்திய குறுகிய உள்ளம் வாய்ந்தவர். இக்காரணத்தால் அவர் எப்பொழுதும் வடநூலோரையே மனத்திற்கொண்டு திருக்குறட் கருத்துக்களை அவ்வடநூலோர் கருத்தோடிணக்கிக் காட்டப் பெரிதும் முயன்றுள்ளனர். உண்மையாகவே வடநூலோர் கொள்கை தவறென்று கருதித் திருவள்ளுவர் அவற்றைப் புறக்கணிக்குமிடங்களிலும் கூடப் பரிமேலழகர் நூலாசிரியர் கருத்தினை யுணரமாட்டாராய்த் திருவள்ளுவர் கருத்தையும் அவ்வடவர் கருத்திற்கிணங்கவே திருத்தி விளக்கம் கூறியுள்ளனர். இத்தகைய பிழைகள் பற்பல பரிமேலழகர் தமது திருக்குறள் உரையிற் புரிந்துள்ளனர். அவற்றை ஈண்டு எடுத்துக்காட்டல் மிகையாம். ஆயினும் திருவள்ளுவரின் சிறப்பியல்பைக் காட்டற் பொருட்டு ஒன்றனை மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டுவாம். இக்கட்டுரையை ஓதுபவர் அத் தவற்றை நன்கு புரிந்து கோடற் பொருட்டு முன்னுரை சிறிது கூறல் வேண்டும். அஃதாவது :—

உலகில் ஒவ்வொரு காலத்தே யாதானும் ஒவ்வொரு கொள்கை சிறப்புற்று நிற்றலியல்பு; இந்தக் காலத்திலே உலகெங்கும் அரசியலே முதலிடம் பெற்று நிற்றல் இதற்கு ஒரு சான்ருகும். இவ்வாறே பண்டு ஒரு காலத்தில் அஃதாவது முதற் சங்க காலத்தே மக்கட் பண்பு மட்டுமே முதலிடம் பெற்று நின்றது; அது பழமையுற்ற பின்னெரு காலத்தே சமயத்துறை மட்டுமே உலகில் முதலிடம் பெற்றுத் திகழ்ந்ததுண்டு. யாதானுமொரு காலத்தில் யாதானுமொரு கொள்கை முதலிடம் பெறும் பொழுது அக்கொள்கை அரசன் முதல் ஆண்டியீருகவுள்ள அனைவருடைய உள்ளத்தையும் கவரும் ஆற்றல் பெற்றிருக்கும். இஃதோருலகியற்கை; இத்தகைய ஆற்றல் வாய்ந்த தத்தங் காலத்துக் கொள்கையை மேற்கொண்டே அவ்வக் காலத்துச் சான்ருேரும் தத்தங் கடமையைச் செய்வர் ; செய்தலும் வேண்டும். அவர் மட்டுமோ! ஆற்றல் பெற்றுள்ள அக்கொள்கையை அவ்வக் காலத்தில் வாழ்கின்ற கயவரும் தமக்குப் போர்வையாகக் கொண்டு தங் கயமையை மறைத்துச் சான்ருேர் போலத் தம்மைக் காட்டி அதன் வாயிலாகவே தங்கள் அவாவிற்குரிய செல்வம் செல்வாக்கு முதலியவற்றைப் பெருக்கிக் கொள்ளலும் இயல்பேயாம். சான்ருேரும் சாலாதாரும் எக்காலத்தும் இருப்பராதலின் இவ்வியல்பு எல்லாக் காலங்கட்கும் ஒரு பொதுவியல்பென்றுணர்க. இதற்குச் சான்று வேண்டுமேல் இக்காலத்தே சிறப்பிடம் பெற்றுள்ள அரசியல் பற்றிப் பொதுநலத்தொண்டு செய்தோர் (செய்பவர்) உள்ளத்தால் பொய்யா தொழுகுமாற்ருல் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறைகின்ற அண்ணல் காந்தியடிகளார் போல்வார் மிகச் சிலராகவும், அந்தக் காந்தீயச் சான்ருண்மைப் போர்வையுட் புகுந்து கொண்டு அறவோர் போன்று அரசியற் பதவியைக் கைப்பற்றிக்கொண்டு கைக்கூலி பெறுதல் முதலிய கயமை பல செய்து தந்நலம் பாரிக்கின்ற கயவர்கள் கணக்கிறந்தோராகக் காண்கின்ருேமல்லமோ? இவ்விரு சாராரும் மேற்கூறிய சான்ருேர் சாலாதார் ஆகிய இருசாரார்க்கும் ஏற்ற சான்ருகக் கொள்க. இங்ஙனமே பண்டு முதன்மை பெற்று நின்ற சமயத் துறையிற் புகுந்து கொண்டு இந்த நாட்டிற் பூசலும் போரும் விளைத்த கயவரும் எண்ணிறந்தோ ரிருந்தனர். இவர்கள் தம் நலமே கருதிப் போர்வை மாத்திரமாகவே சமயங்களை மேற்கொண்டு தாந்தாமே மேற்பட்டு விளங்கும் பொருட்டும், ஏனைய சமயவாதிகளைச் சொற்போரில் வெல்லுதற் பொருட்டும் படைத்துக்கொண்ட தத்துவ நூல்களும் எண்ணிறந்தனவாம். அவற்றுள் இறந்தன போக இற்றை நாள் எஞ்சி நிற்பனவும் சிலவுள.

சமயக்கணக்கர் எனப் பெயர் பூண்ட இக்கயவர்கள் படைத்துள்ள தத்துவங்கள் தாமும் சமயந்தோறும் மாறுபட்டிருப்பதை எஞ்சிய அந்நூற்களுள் யாம் இன்றும் காணலாம். இத்தத்துவக் குப்பைகளே சமயத்தின் குறிக்கோளாகின்றன. மெய்ப்பொருளைத் தமக்குள்ளேயே மூடிமறைத்து விட்டுத் தம் மாற்ருரைக் கடாஅம்படாஅம் என உருட்டி வெல்லுதற்குரிய வறிய சொல்லாரவாரமாக மட்டுமே நிற்கின்றன. இவற்றைக் கண்டு பயனில பாரித்துரைப்பாரை மகன் எனவும் ஒருப்படாத வள்ளுவர் மனம் புழுங்கி இருப்பர் என்பது தேற்றம். இந்தச் சமயவாதிகளுடைய தத்துவ விருளிற் பட்டு நெறிதடுமாறும் மக்கட்கு நன்னெறி காட்டவேண்டும் என்பதைத் தமது கடமையாகக் கருதியே திருவள்ளுவனர் அவ்விருள கற்றும் அறிவொளிப் பிழம்பாகத் தமது திருக்குறளை இத்துணைத் திறம்படச் செய்வாராயினர். ஆகவே மனமயக்கும் அத் தத்துவக் குப்பைகள் தம் தெய்வ நூலில் இடம் பெறலாகாது என்று கருதியவராய் அவை புகுதா வண்ணம் விழிப்புடன் பாதுகாத்து மிருக்கின்றனர். திருக்குறளை விடச் சிறந்த சமயநூல் பிறிதொன்றுளதாக எண்ணவும் வேண்டாம். அவ்வாறு எண்ணுவோருளராயின் அவர் அறியாமையால் வறிய சொல்லாரவாரத்தில் மருள்பவரேயாவர்; ஐயமில்லை.

பரிமேலழகர் உரையிற் செய்த பிழையை உணரவேண்டின் யாமிங்குக் கூறியவற்றையும் உணர்தல் வேண்டு மென்றே இத்துணையும் கூறினும்; இனித் திருக்குறட்குச் செல்வோம்.

> "சுவையொளி யூருேசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு"

என வள்ளுவனர் கூறுமித் தத்துவங்கள் அவர் மெய்யுணர்தற்கு இன்றியமையாதன விவையெனக் கருதிக் கூறும் தத்துவங்களாகும். இவை சமயவாதிகளும் கூறுகின்ற தத்துவங்களேயாம். ஈண்டுத் தத்துவ நூலோர் கூறு மாறு கூருமல் அவர் கூறுவனவற்றுள் முன்

னும் விடுத்துப் பின்னும் விடுத்து இடையிலே அமைந்த இவ் வைந்தையுமே கூறுகின்ற வள்ளுவனார் கருத்துத்தான் என்னை? ''இவற்றின் வகை தெரிந்து விட்டால் நீ உலகம் என்ப தின்னதென்று தெரிந்து கொள்வாய்! சமய வாதிகள் தத்துவங்கள் என்று கூறுவன அனைத்தும் பயனிலாப் பதருரைகளே. மெய்யுணர்வார்க்கு அப்பொய் மூட்டைகள் மிகையே காண்!'' என்றறிவுறுத்துவதே மன்ற மாசற்ற சில சொல்லியே அரும் பொருளையும் எண் பொருளாக்கும் நம் வள்ளுவனார் கருத்தாகும். நூலாசிரியருடைய இக்கருத்துணர மாட்டாத பரிமேலழகர் இக்குறட்குச் சொற்பொருள் கூறிப்பின்னரும் அதற்கு விளக்கம் கூறுவாராய் ''அவற்றின் கூறுபாடாவன எனத் தொடங்கித் தத்துவவுணர்வு'' எனக் கூறுமத் துணையும் நூலாசிரியர் கருத்துணராமல் அதற்கு மாறுபட விரித்துரைத்த வீணுரையேயாம்.

இதன்கண், எவற்றை வள்ளுவனார் பயனிலாக் குப்பைகள் என்று கருதினரோ அவற்றையே அதற்கு விளக்கமாகக் கொணர்ந்து குவித்தனர். இங்ஙனமே திருக்குறள் உரையில் இவர் செய்திருக்கின்ற தவறுகள் சாலப் பலவாம். பரிமேலழகர் செய்த இச்செயல் அன்னையால் தூய்தாக்கிய இல்லத்துள் அவளுடைய குழந்தை அவள் ஒதுக்கிய குப்பைகளையே கொணர்ந்து பரப்பியதை ஒக்கும்.

இனி, சொல்லுங்கால், 'திறனறிந்து சொல்லுக' என்பதும் 'வெல்லும் சொல் இன்மை யறிந்து சொல்லுக' என்பதும், 'மன்ற மாசற்ற சிலவற்றைத் தேர்ந்து சொல்லுக' என்பதும், இப்புலவர் பெருமான் நம்மனோர்க்கு அறிவுறுத்துகின்ற அறிவுரைகளாகும். இவற்றுக்கெல்லாம் திருக்குறளே எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றதன்றோ? இத்தகைய சொல்வன்மையும் இவர்க்கேயுரிய சிறப்பியல் பேயாகும்.

இன்னும் ஒன்று மட்டும் கூறி இக்கட்டுரையை முடிப்பாம். திருக்குறளின் முற்பகுதியில் நிற்கும் கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களும் 'பாயிரவியல்' எனப்படுகின்றது. அங்ஙனமாயின் அது பொதுப் பாயிரமோ? சிறப்புப் பாயிரமோ? தொல்காப்பியத்தில் பனம்பாரனர் செய்த சிறப்புப் பாயிரம் என்று ஒரு நூற்பாவுளதேயாயினும் தொல்காப்பியத்தில் பாயிரத்தைப் பற்றி யாதோரிலக்கணமும் காணுமாறில்லை. ஆகவே தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கியங்களில் பாயிரம் என நூலின் புறவுறுப் பொன்றை அவர் கண்டாரில்லை என்பது தேற்றம். ஆசிரியர் திருவள்ளுவனார் தம் நூலுக்குத் தாமே கூறிய பாயிரத்தைக் கூர்ந்து நோக்குவார்க்கு நூலாசிரியர் ஒருவர் தாம் இயற்றுகின்ற நூலின் அகத்துறுப்பாகக் கூற வொண்ணுதனவாகவும், ஆயினும் அந் நூலிற்கு இன்றியமையாதனவாகவும் உள்ள பொருள்களை அந்நூலாசிரியர் நூன்முகப்பில் கூறிவைக்கலாம்என்பது அவ்வள்ளுவனார்கருத்தென்றுணர்தல் கூடும். பிற்காலத்தே பாயிரங்கட்குப் பரக்க விலக்கணம் கூறிய பவணந்தி முதலியோர் தாம் கண்ட இலக்கியமாகிய இக் குறட்பாயிரத்தியல்பு பற்றி யாதொன்றும் கூருமை வியப்பேயாம். எனவே பாயிரவியலில் அமைந்த நான்கு அதிகாரங்களும் அந்நூல் பயில்வோர் முன்னமே அறிந்து கொள்ளத் தகுந்த சிறப்புடையன என்பது பெற்ரும். பாயிரம் என்பதன் பொருள் முன்னுரை என்ப தேயாம். இப்பாயிரத்தினும் ஆசிரியருடைய சிறப்பியல்பை நன்குணரலாம்.

திருக்குறள் பாயிரத்தின் சிறப்பினைக் காணுமுன்னர், திருவள்ளுவனார் சங்ககாலத்துச் சான்றோராயினும் அவர் காலத்துக்கு முன்பிருந்த சான்றோர் நூன்மரபினை இவர் மாற்றியமைத்திருத்தலையும், அங்ஙனம் மாற்றுதற்குரிய காரணத்தையும் யாம் அறிந்து கொள்ளல் வேண்டும். இன்றேல் அப் பாயிரத்தியல்பும் ஆசிரியர் கருத்தும் புலப்படமாட்டா. இனி ஆசிரியர் தம் நூலிற் செய்துள்ள மாற்றத்தைக் காண்பாம். அஃதாவது - அவர்க்கு முந்திய அகம் புறம் என்னும் பொருணெறி மரபை வள்ளுவர் அறவே கைவிட்டு விட்டனர். மேலும் பண்டைச் சான்றோர் இன்ப நுதலிய அகப்பொருட்கே நூல்களில் முதலிடம் கொடுத்திருத்தலையும், பொருளையும் அறத்தையும் புறமென்று கூறி இவற்றுள்ளும் அறத்தை நூலின் கடைக்கோடியில் அமைத்திருத்தலையும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆராய்வோர் உணரலாம். ஆசிரியர் திருவள்ளுவனார் இம்முறையைக் குடைக்கால்போல் தலைகீழாக மாற்றித் தமது திருக்குறளில் அமைத்துள்ளனர். அஃதாவது அறத்திற்கு முதலிடம் கொடுத்து, இன்ப நுதலிய காமத்தைத் தமது நூலில் கடைக் கோடியில் தள்ளிவைத்தனர். அது மட்டுமோ! இன்பத்தை அகப்பொருளென்று

தல், இன்பப்பாலென்றுதல் புகழ்படக் குறியீடு செய்யாமல் அதனிழிவு தோன்றக் 'காமத்துப்பால்' என்று குறியீடு செய்தமையும் திறனறிந்து சொல்லிய குறியீடேயாம் என்பதையும் கருத்தூன்றிக் காணல் வேண்டும். நூலிற்கு முப்பால் என்று குறியீடு செய்யாமல் அகத்துப்பால் புறத்துப்பால் என இருபகுதியாக நூலையாத்து இருபால் என்றே கூறலாமே, காமத்துப்பாலை முன்வைத்து அறத்துப்பாலைப் பின்னமைத்து முந்தையோர் முறையைப் பேணியிருக்கலாமே, திருவள்ளுவனார் இன்பத்துப்பால் என்று கூறத் தெரியாதவ ரல்லரே! காமத்துப்பாலைக் கடைக் கோடியில் வைத்தாலும் இன்பத்துப்பால் என்றே குறியீடு செய்யலாமே? அறம் பொருள் இன்பம் என்பது தானே வழக்கு! அறம் பொருள் காமம் என்பது வழக்குமன்றே இவ்வாறு இவற்றைத் திருக்குறளில் இவர் மாற்றியமைத்ததற்குக் காரணம் யாது?

தமது பழமையால் 'அகம் புறம்' என்னும் நூன் மரபுகள் திருவள்ளுவர் காலத்தே மாந்தர் நெஞ்சைக் கவரும் ஆற்றலழிந்து போயின. மக்கள் நூன்மரபிலே புதுமைகாண அவாவி நின்றனர். திருவள்ளுவர்க்கு முன்னும் பின்னுமாய்த் தமிழ் நாட்டிற் புதியனவாகப் புகுந்த சமயத் துறைகளே அக்காலத்து மக்கள் மனத்தைப் பற்றி இழுக்கும் ஆற்றலுடையனவாயிருந்தன. அல்லாமலும் மக்கள் வாழ்க்கையில் அறம் கூர்மழுங்கியும் நின்றது அக்காலத்திலே அறநெறியே புதுப்பிக்க வேண்டும் நிலையிலிருந்தது. இந்த அறத்தைப் புதுப்பித்துமக்களுள்ளத்தே ஊன்றிவிடுவதே தமது தலையாய கடமையாகக்கொண்டு ஆசிரியர் திருவள்ளுவனார் மேற்கூறிய மாற்றங்களைத் தமது நூலிற் செய்தனர். தமது குறிக்கோளாகிய அறத்தை நூலின் முற்பகுதியில் அமைத்ததோடன்றி அதன் மறுமலர்ச்சிக்கு அப்புலவர் பெருமான் கட்டியங் கூறி நிற்கும் பகுதியே திருக்குறளில் பாயிரமாகத் திகழ்கின்றது என்றுணர்தல் வேண்டும்.

இனி, இதன்கண் கடவுள் வாழ்த்து என்னும் முதலதிகாரத்தில் அவர் ஏற்புடைக் கடவுளாகிய மூவரையும் வாழ்த்தத் தொடங்குகின்றனர் என்று பரிமேலழகர் கூறுமுரை பேதைமையுடையது. வள்ளுவனார் இவ்வதிகாரத்தில் தாம் தமது மெய்யுணர்வாலுணர்ந்த கடவுளின் இயல்பு இத்தன்மைத்தென்றும் மக்கட் பிறப்பின் பயன் கடவுளை வழிபடுதலே என்றும், கடவுளை வாழ்த்துவதனாலெய்தும் பயன் இன்னதென்றும் நம்மனோர்க் கறிவுறுத்துகின்றனர். இதன்கண் இவர் இறைவனைப் பற்றிக் கூறும் இயல்பு எக்காலத்தினர்க்கும் எந்த நாட்டினர்க்கும் பொருந்தும் சிறப்புடையன. இவ்வாசிரியரின் சிறப்பியல்பும் இவ்வதிகாரத்தில் மிகவும் தோன்றுகின்றது. இனி வான் சிறப்பு என்னும் அதிகாரம் இறைவனுக்கும் மாந்தர்க்கும் பொதுவாம். என்னை? இறைவன்றானும் மழையின் வாயிலாகவே உலகத்து மன்னுயிரை ஓம்பி அறவாழி அந்தணனுதல் காண்மின் எனவும் மக்கள் தாமும் அறவோராய வழியே இம்மாரியின் வளம் மிகுவதாம் எனவும் குறிப்பாக அறத்தின் சிறப்பே இருவகையானும் ஓதுகின்றார் என்றுணர்க. மக்கள் அறத்தால் மாரி வளம்சிறக்கும் எனத் திருவள்ளுவனார் கருதுவதனை "வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்" என இல்லறத்தின் பயன் கூறும் அதிகாரத்திலும், முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல் என்றும், ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூன் மறப்பர் என்றும் ஓதுதலான் உணர்க. இனி நீத்தார் பெருமை என்பது அறநெறி ஒழுகுகின்ற மாந்தர்க்கெய்தும் பெருமை கூறி அறமாண்புணர்த்திய வாரும். புல்லறிவாளரும் பொருட் பேயாகவும் காமப்பேயாகவும் அலைகின்ற இவ்வுலகத்தே ஏனைய பொருளையும் காமத்தையும் வலியுறுத்தவும் வேண்டுமோ? மற்று அறமோ எந்தக் காலத்தும் சான்றோரால் வலியுறுத்தும் நிலையிலேதான் இருப்பதியல்பாகலின் அறன் ஒன்றனையே அவர் வலியுறுத்துகின்றார். அதன்கண்,

> "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற"

என நிகழ்கின்ற இவ்வருமைத் திருக்குறட்கு ஒப்பான சிறப்புடைய சான்றோர்உரை பிறிதொன்றனை யாம் இதுகாறும் கண்டிலேம் கேட்டுமிலேம். இவ்வொரு குறளே அவர்தம் சிறப்பியல்புக்குப் போதிய சான்றாகுமே.

திருக்குறளிற் பொது நோக்கம்

[தமிழ்ப்பெரும் புலவர், பேராசிரியர், சரவண ஆறுமுகமுதலியார்
எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி.]

திருச்சி மாவட்டத்தில் 1907 இல் தோன்றிய பேராசிரியர் கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகட்கு மேலாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் துறையில் துறை போகியவர். தமிழ்ப் பேராசிரியராகத் தமிழ்ப் பணியைத் துவங்கி அரசியற் கல்லூரிகளில் முதல்வராயிருந்து ஓய்வுபெற்றுத் தற்பொழுது பழனி, பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி வருகின்றார். கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையுமுடையவர்.



கேட்டார்ப் பிணிக்கும் வகையில் எப்பொருளையும் எடுத்துரைக்கும் திறனுடைய இவர், திருக்குறளின் சிறப்பு, வள்ளுவர் வகுக்கும் வாழ்க்கை முறை, அதன் பொது நோக்கம் ஆகியவற்றை வள்ளுவரின் குறளை யொட்டியே எழுதி வெளிப்படுத்தினால் பொதுமக்களுக்கும் மாணவருக்கும் பிறர்க்கும் ஓரளவு பயன் விளையும் என்று கருதி யெழுதியுள்ள 'திருக்குறளும் பொது நோக்கமும்' என்ற நூல் இவர்தம் புலமைக்கும் நடைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

சமரசமும், கடவுள் திருமுன் அனைவரும் சமமே என்னும் பொது நோக்கமும் நம் நாட்டில் பேசப்பட்டு, நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் சிற்றூர்களிலும், காட்டுத் தீயேபோல் பரவி, மக்களிடையே உணர்ச்சியையும் பரபரப்பையும் உண்டு பண்ணிவரும் இக்காலத்தில் "பொதுமறை" யாகிய திருக்குறளில், இந்நோக்கம் அமைந்திருக்கும் விதத்தை நூல் முழுவதும் பொதுவாக நோக்கிக் கண்டறிவது சாலவும் பொருத்தமுடையதேயாம்.

இருவகை ரசங்கள் ஏற்ற அளவிற் கலந்து ஒத்து இயங்குங்கால் ஒருவிதப் புதுச் சுவை தோன்றிச் சுவைப்போர்க்கு மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும். அதேபோன்று ஒரு நாட்டில் பல மக்கட் டொகுதிகளும் சாதிப் பிரிவுகளும் இருப்பினும், அவற்றிடையே ஒத்த உணர்ச்சியும், பொது நோக்கமும், அன்பும் நிலவி ஒற்றுமை மிகுமாயின், அந்நாடு முன்னேற்ற மடைந்து சிறப்புறும். பிறப்பினாலேயே உயர்வு தாழ்வு ஏற்படுகிறது என்றும், சாதியால் உயர்ந்தோர்தான் உயர்ந்தோர் என்றும் நினைக்கின்ற போலிக் கொள்கைகளும் போலி உயர்வும் பொது நோக்காளிக்கில்லை. ஆதலினால் சமரசம் மிகுந்த நாட்டில் சாதியாலுயர்ந்தோர், தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப் பட்டோர் என்ற வேற்றுமைகள் இல்லை.

"பொது நோக்கத்தை" மக்களுக்குப் புகட்ட வந்த உலகத்துச் சான்றோர்கள் பலரும், அவ்வுணர்ச்சி மக்களுக்குச் சொல்லளவில் மட்டுமன்றி, வாழ்க்கையில் செய்து காட்டலிலும் உண்டாகும்படியான பல வழிகளைத் தங்கள் வாழ்க்கை மூலம் காட்டிச் சென்றுள்ளார்கள். ரஸ்கின், டால்ஸ்டாய், தாயுமான முனிவர், இராமலிங்க அடிகள் போன்ற பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்போர் இதனுண்மையைக் கண்டறிவர். உலகம் போற்றும் கவியரசராம் ரவீந்திரரும், காந்தியடிகளும் இவ்வழியிலே மக்களைப் பயிலுவித்து, தம் அன்புச் சமயத்தால் உலக முழுவதையும் ஒன்று படுத்தி வருகின்றனர். பிறப்பு வேற்றுமைகளை அறவே ஒழித்து, எவ்வுயிரையும் தம்முயிர் போல் பாவித்து, உயர் பதவி, பொருளீட்டம் முதலிய அழிதன் மாலையவாம் போலிப் பொருள்களில் மனம் வையாது, பிறருக்குழைக்கும் பெருமை ஒன்றனையே ஒவ்வொருவரும், தங்கள் உலக வாழ்க்கையின் முடிந்த குறிக்

கோளாகக் கொள்ள வேண்டுமென்பதே இப் பெரியார்கள் நமக்குக் காட்டும் வழியாகும். சுருங்கக் கூறின் பிறர் குற்றமே பார்த்தல், புறங்கூறல் முதலியன இன்றி, மனத்துக்கண் மாசிலராகித் தம்மினும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தம்மாற் கூடியவரையில் முன்னேற்ற முயல்வதே பொது நோக்கத்தின் அடிப்படையான கொள்கையாம்.

இத் துறையில் இறங்குபவர்களுக்கு நேரும் இடையூறுகள் பலவிருக்கலாம். அவற்றை யெல்லாம் பொருட் படுத்தாது தங்கள் கொள்கையைக் கொண்டு செலுத்த வேண்டும். மேலும், வெளிக்குப் பொது நோக்காளி போல் நடித்து, பொது நோக்கத்தின் பெருமையைப் பிறர்க்குப் புலப்படும்படி மேடைகளிற் பேசித்திரிந்து, தமது வாழ்க்கையில் அதற்கேற்ற ஒன்றும் செய்யாது வாழும் போலித் தொண்டர்க்கு, ஈங்கு இடமில்லை, தாம் செய்யும் தொண்டிற்குப் பதிலாகப் பயன் யாதொன்றையும் எதிர்பார்ப்பாரும் இதற்கு அருகரல்லர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கருதிய ஆளுடைய அரசரது தூய உள்ளமே வேண்டற்பாலது. எனவே இந்நிலைக்கு வேண்டுவன பிறர்க்கென வாழும் பெற்றியும், தனக்கென வாழாத் தகைமையும் அவற்றை நடத்திக் காட்டுவதற்குரிய மனத்திட்பமும், இடுக்கண் அழியாமையுமாம். இவற்றை யெல்லாம் ஊடுருவிச் செல்லும் அன்புடைமையும் வேண்டற்பாலதே. "அன்பின் வழியது உயிர்நிலை" யாதலின் எல்லாவுயிர்களிடத்தும் அன்பில்லையாயின், அவற்றிற்காகத் தாம் செய்யும் நற்செயலுமில்லையாம்.

இன்னும், பொது நோக்கமும் ஒழுக்க முடைமையும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பைப் பெற்றிருக்கின்றன. ஒன்றையொன்று எப்பொழுதும் தழுவியே நிற்கும். சிறந்த பொது நோக்காளிகள் எல்லோரும் உயர்ந்த குணமேன்மையும் ஒழுக்கமும் உடையவர்களாக இருந்திருப்பதை நாம் அறிவோம். ஒழுக்கமுடைமையே உயிரினும் பெரிதாக ஒவ்வொருவராலும் போற்றத்தகுவது. தக்கார் தகவிலர் என்பது ஒருவரது பிறப்பிலைன்றி, ஒழுக்கத்திலேயே அறியப்படுமாதலின், நாம் வாழ்க்கையில் செய்யும் செயல்களனைத்தும் நம் ஒழுக்க முடைமையின் மூலமாகவே ஆராயப் பட்டுத் தகுதி உடையன, அல்லது தகுதி அற்றன என்று மதிக்கப்படும். ஒழுக்க மேம்பாட்டையும் குணநலத்தையும் தவிர்த்து மக்களுக்கு உயர்ந்த அணிகலன்கள் வேறில்லை. இல்லறத்தில் நின்று அன்பு ஒப்புரவுகளைச் செய்யும் பொதுநோக்காளிக்கும், மனத்துக் கண் மாசிலராகி, அகப்பற்று புறப்பற்றுகளைக் கைவிட்டு மெய்யுணர்வு விழைந்து எவ்வுயிரையும் கருணைக் கண்கொண்டு பார்க்கும் முதிர்ந்த அருள் நெறியில் நிற்கும் ஞானியாகிய பொதுநோக்காளிக்கும், பிறருக்கும் ஒழுக்கம் இன்றியமையாததாகும்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்
செய்தொழில் வேற்றுமை யான்" [பொவ்வா

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்
கீழல்லார் கீழல் லவர்" [தும்

"ஏதிலார் குற்றம்போல் தன்குற்றங் காண்
தீதுண்டோ வாழு முயிர்க்கு" [கிற்பின்

"பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னு முலகு."

என்பன போன்ற குறட்கள் இப் பொது நோக்கக் கொள்கைக்கு அடிப்படையானவை என்று கருதலாம்.

பொது நோக்கத்தின் தன்மையையும் நடைமுறையையும் பயனையும் தம் வாழ்க்கையில் உணர்ந்து நடத்திக் காட்டிய "நுண்மாண் நுழைபுலம்" உடைய சமரச ஞானியாகிய திருவள்ளுவரும் தம் பெருநூலில் தலைசிறந்த பொது முறையை விதந்தோதுகின்றனர். மேற் கூறிய பொதுவிதிகளின் இன்றியமையாமையை வற்புறுத்தி, ஒழுக்கத்தின் விழுப்பத்தை எடுத்துக் காட்டி, இல்லற துறவற இயல்களில் அன்பு அருள் நெறிகளை அமைத்துள்ளார். இவ்வியல்களை முறையே படிப்போர் அன்பு அருள்கள் இல்லற துறவறங்களில் பரிணமித்து வளர்ந்து கொண்டு போய்ப் பயன் செய்வதை அறியாமற் போகார். முடிவில் சமுதாய சமய வாழ்க்கைகளிலும் பொதுநோக்கம் அமைந்துள்ள பான்மையையும் தாமே யறிவர்

தமிழ்நாடு செய்த தவப்பயனுய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஓழுக்க முறை வகுத்த சான்ரோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்து எண்ணப்படுகிருர் என்பது நாமறிந்த தொன்ரும். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப் போந்த ஒழுக்க முறை இன்னுர் இனியார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுதற் குரியதாய்ப் பொதுநோக்கப் பார்வையொடு அருளிச் செய்யப்பட்டுள்ளது. ஒழுக்கமுடையோர் விழுப்பமடைவர் என்பதனைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டிக் 'கூடாவொழுக்க'த்திற் கண்டிக்கப்பட்ட போலித் துறவொழுக்கம் உலகத்தாரை ஏமாற்றுவதற்கே உரியது என்பதனையும் உலகத்துக்குப் போதித்து, ''மனத்துக்கண் மாசில''ராகிக் "குணமென்னும் குன்று ஏறி நின்ற" திருவள்ளுவர், அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுதற்குரிய ஒழுக்கமுறை வகுத்தது ஒரு வியப்பன்று. தம் வாழ்க்கை அனுபவத்தையே, ''யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்,'' என்று சுரந்தெழும் அருள் மிகுதியினுல், திருவள்ளுவர் அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்க முறையாகத் திருக்குறள் மூலமாக நமக்கு அருளிச்செய்தார் என்பதிற்படும் இழுக்கொன்றுமில்லை. சிறந்த ஒழுக்கமுறை வகுத்த இக் காரணத்தால் இவரைத் தமிழ் நாட்டுச் சாக்ரடிஸ் என்று கொள்வாருமுண்டு.

தெய்வப் புலவர் அருளிய பொதுமறை உலகத்தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றிலும் தலைசிறந்து விளங்குகிறது. உயரிய கொள்கைகளையும், இவர்தாம் கையாளுவதென்ற வரையறையின்றி, உலகத்து மக்கள் எல்லோருமே ஒருங்கே ஏற்றுக் கொண்டு ஒழுகும் முறையையும் கொண்டுள்ள ஒரு நூல், எம்மொழியில் எழுதப்படினும் அது அனைவராலும் போற்றிப் படிக்கப் பட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படுகிறது. சாதி, மத, கால, தேசப் பிரிவுகளைப் பொருட்படுத்தாது, சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக் கூறிச் செல்வதே இதற்குரிய காரணமாகும். இக்காரணம் பற்றியே திருக்குறள் உலகோர் அனைவராலும் போற்றப்படுகிறது என்று கூறுவது மிகையாகாது. பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் அமைந்த நம்மாசிரியர்—கைம்மாறு கருதாது, தனக்கெனவும் வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த திருவள்ளுவர் - தம் வாழ்க்கை அனுபவங்களையும், நினைத்த எண்ணங்களையும், கருத்துக்களையும் பேசிய ஞான உரையாடல்களையும், அறிவுரைகளையுமே, பிறரும் அறிந்து கொள்வான் வேண்டித் திருக்குறளில் பெய்து வைத்துள்ளாராதலின் இந்நூல் முழுவதும் சமரச மணம் வீசிக் கொண்டிருக்கிறது. நூல் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையிலும் இம் மணமே உள்ளது. இல்லறம் நடத்தும் முறையும், தூய துறவறமாகிய சமய நெறியும் சமுதாய ஒழுக்க முறையும், இல்லறத்துக்கு முன்பு தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகிய களவு முறையும்,அரசனும் அவனுடைய அமைச்சர்களும் பிற அங்கங்களும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் முறைகளும், இன்னோரன்ன பிறவும், சுருங்கக்கூறின் மக்கள் வாழ்க்கையின் ஒப்பற்ற முழு இலட்சியமும் ஆசிரியரால் பொது நோக்கங் கொண்டே புகலப் படுகின்றன. தமது காலநிலையை ஒட்டியே, தாம் கூறவந்த செய்தியைத் திருவள்ளுவர் தமிழ் நாட்டார் மட்டுமன்றி உலகோரனைவரும் ஒப்புக் கொள்ளுமாறு சமரசம் ததும்பி ஊற்றுப்பெருக்கெடுத்தோடி, அனைவரும் அள்ளிப் பருகிஉய்யப் பொதுமறை எழுதியுள்ளார். அவர் வகுத்த ஒழுக்க முறை தமிழ் நாட்டோடு மட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக் கொள்ளாமல் உலகு முழுவ்தும் ஒரு தனிச் செங்கோல் ஓச்சி வருவதும் நம் மொழிக்குள்ள ஒரு பெருஞ் சிறப்பாகும். தமிழ் உலகில் தோன்றிய எத்தனையோ நூல்கள் அழிந்து, உருத்தெரியாமல் மாறுபட்டுப்போக, தன்னகத்தே கொண்டுள்ள பொது நோக்கப் பெருமையால், திருக்குறள் மட்டும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்பிறையே போன்று நாள்தோறும், பெருமை குறையாது, மேன்மேலும் வளர்ந்து கொண்டே வந்து உலகத்தினர் அனைவர்க்கும் பயனைச் செய்து வருகிறது. லத்தீன் போன்ற பண்டைக்கால ஐரோப்பிய உயர் தனிச் செம்மொழிகளிலும், ஜர்மன், பிரெஞ்சு போன்ற தற்கால ஐரோப்பிய மொழிகளிற் சிறந்தவற்றிலும், சிறப்பாக ஆங்கில மொழியிலும், தென்னுட்டு மொழிகளிலும், ஹிந்தியிலும் இந்நூல் பெயர்த்தெழுதப் படுமாயின் இதன் பெருமையை யாரே கணித்தறிய வல்லார்? வடமொழியிலும் இதன் மொழி பெயர்ப்பிருப்பதாகக் கூறுகிருர்கள்.

"எல்லாப் பொருளும் இதன் பாலுள; இதன்
இல்லாத எப்பொருளு மில்லையால்'' [பால்

என்னும் திருவள்ளுவமாலையடிகள் இதன் பெருமையைத் தொகுத்துக் கூறுவன.

இனி, இத்தமிழ் மறையின் பொதுத்தன்மையைப் பற்றிப் பிற புலவர்கள் கூறுவதென்ன என்று சில புறச்சான்றுகள் காட்டுவோம். பண்டு தொட்டு இன்றுகாறும் இதன் சமரசத்தைப் தமிழ்ப் புலவர்களும் பிறரும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். மேல்நாட்டு அறிஞர் ஆராய்ச்சியாளர் பலரிலும் M. Ariel என்பார் இன்னதைப்பற்றிக் கூறுவது போற்றிப் படித்தற்குரியது : அது "The Kural is the masterpiece of Tamil Literature, one of the highest and purest expressions of human thought. That which above all is wonderful in Kural is the fact that its author addressess himself without regard to castes, peoples or beliefs, to the whole community of mankind, the fact that he formulates sovereign morality and absolute reason, that he proclaims in their very essence, in their eternal abstractedness, virtue and Truth, that he presents as it were in one group, the highest laws of domestic & social life" என்பதாம்.

எனவே, இச்சீரிய நூல் எச்சாதியினர்க்கும் எந் நாட்டினர்க்கும், எச் சமயத்தாருக்கும் எக்காலத்தாருக்கும் பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாக இருக்கிறது. சில நூல்கள் தாம் எழுந்த காலத்து வாழும் மக்களின் கருத்தைக் கவரும் பொருள் பற்றிக் கூறிச் செல்கின்றன. பிற்காலத்துத் தோன்றுவோரின் கருத்துக்களும் இலட்சியங்களும் மாறி விடுகின்றன. ஆனால் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிவிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும். பிறவிப் பேறுகளாகிய அறம் பொருளின்பங்களையும், அவற்றின் மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து திருவள்ளுவர் செய்த நூல் "எக்காலத்திலும் மாறாப் பயன் தரும் மாண்புடை நூலாக விளங்குகிறது." இதைக் "காலங்கடந்த நூல்" என்றே கூறிவிடலாம்.

இதைப் போன்றே திருக்குறள் சாதிப் பொது நூலாகவும் விளங்குகிறது. நான்கு வருணங்களாகிய சாதிப் பிரிவைப் பரிமேலழகர் தம் உரையிற் புகுத்திப் பல விடங்களில் வலிந்து பொருள் கொள்ளினும், நான்கு வருணங்களைப் பற்றியும், அவை தமிழ் நாட்டில் ஏற்றுக் கொள்ளத் தக்கவை என்றும் தம் நூலில் ஆசிரியர் யாண்டும் கூறினாரில்லை. "சமன் செய்து சீர்தூக்கும் கோல்" போலவே நீதிகளை வகுத்து அனைவரையும் சமரசக் கண் கொண்டு பார்க்கின்றார். இந்நூலுக்கு எல்லோரும் உரியர். இத்தன்மையைக் கீழ்க் காணும் திருவள்ளுவமாலை வெண்பாக்கள் இனிது விளக்குகின்றன :—

1. "செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்
மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—
செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரியா ரல்லாதா ரில்"
—வெள்ளிவீதியார்,

2. "ஆற்றல் அழியுமென் றந்தணர்க ளுன்
மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—
ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார்
முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று"
—கோதமனார்.

காலஞ் சென்ற தமிழறிஞர் திருவனந்தைச் சுந்தரம் பிள்ளையவர்களும்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்
குணர்ந்தோர்க
ளுள்ளுவரோ-மநுவாதி யொருகுலத்துக்
கொருநீதி"

என்று இந்நூலின் சமரசப் பான்மையை இனிது விளக்கினார். உரையாசிரியராம் பரிமேலழகரும், "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லோர்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு" என்கிறார்.

இனி இதன் சமயப் பொதுத் தன்மைக்கு ஒன்றிரண்டு புறச்சான்றுகள் தருதும். அக்காலத்து, தமிழ் நாட்டுப் பல சமயங்களும் திருவள்ளுவரைத் தம் சமயத்தவர் என உரிமை கொண்டாடின. திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும் இடங் கொடுத்தது. அனைவருக்கும் இது உரியது என்பதைக் காட்டுகின்றதன்றோ!

கல்லாடமுடையார்,

"சமயக் கணக்கர் தம் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்"

என்றும், திருவள்ளுவமாலையில்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்றும் இதன் சமரசத்தை எடுத்துக் காட்டு கின்றனர்.

புலவர் புராணமும்,

"நால்வர்சொல் சைவர் வேதம்
நளிர்குரு கூரன் சொல்லைப்
போல்வலார்சிலர்தாம் சொல்லும்
பொருளிற் பாகவதர் வேதம்
வால்வளை யுலவும் வீதி
மயிலைவள் ளுவன்சொல் யார்க்கும்
கீழ்மையை யகற்றி மேன்மை
யருளுநல் வேத மாமே"

என்று முழங்குகிறது.

கிறிஸ்தவரும் வரவர இதன் பெருமையை அறிய ஆரம்பித்தனர். தமிழ்க் கடலின் எல்லை கண்டவரும், திருக்குறளை ஆங்கில யாப்பில் மொழி பெயர்த்தவருமாகிய டாக்டர் ஜி. யு. போப் பாதிரியார் "எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதி சப்தமாகும் இத் திருக்குறள்" என்பர்.

இதில் எவ்வளவு உண்மை உளது என்ற ஆராய்ச்சிக்குட் புகாமல், இதனின்றும் அறிவது தானென்ன, என்று பார்ப்பின், திருக்குறளின் பொது நோக்கம் நமக்குப் புலப்படும். "இவ்வாறு பலவகைச் சமயத்தினரும் திருக்குறளைத் தம் நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையால், அவ்விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளை யெல்லாம் தன்னகத்தே அடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக் கொண்டு, அவையனைத்திற்கும் தலைமையாய் நிற்கும் தகுதி வாய்ந்த ஒரு தனி நூல் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது."

திருவள்ளுவர் காலத்துக்கு முன்னும், அக் காலத்தும் சமரசம் தமிழ்நாட்டில் மலிந்து, மக்களை உயர்நிலையில் வைத்திருந்தது. திருவள்ளுவருக்குப் பிறகும் நாளது வரையில் நம் நாட்டில் பல சமயங்களுக்கிடையே சமய குரவர்களும் பிறரும் தத்தம் சமய நெறியில் நின்று கொண்டே, சமரசத்தைப் புகட்டியுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் திருவள்ளுவர் வழிகாட்டியாய் இருந்தார் என்று கூறுவதாற் படும் இழுக்கென்னை? திருவள்ளுவர் கருத்துக்களையும் தொடர் மொழிகளையும், "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் சொல்லும் பொன்னே போற் போற்றுவம்," என்பதற் கிணங்க, பொன்னே போற் போற்றித் தம் நூல்களில் தழுவிக் கொள்ளாத புலவர்களும் உண்டோ நம் நாட்டில்? சைவ வைணவ சமய குரவர்களும், சித்தாந்த ஆசிரியர்களும் பிறரும் குறள்கள் பலவற்றைத் தம் நூல்களில் அமைத்திருப்பதற்குக் கணக்கற்ற உதாரணங்கள் நாம் காட்டலாம். அவருடைய விழுமிய சமரசக் கொள்கைகள் பின் வந்தோரால் தழுவிக் கொள்ளப்பட்டு, மக்களுக்குப் போதிக்கப் பட்டன என்றும், பின் வந்தோர் கூறும் கொள்கைகளை எல்லாம் வருமுன் காணும் வல்லமையான் திருவள்ளுவர் கண்டு வைத்தார் என்றும் நாம் ஐயமறக் கொள்ளலாம். இதற்கு உதாரணமாக ஆழ்வார்கள், சைவ சமயாசாரியர்களுடைய பாடல்களையும் தற்காலப் பிரதிநிதிகளாய தாயுமான இராமலிங்க அடிகளின் பாடல்களையும் நாம் காட்டலாம்.

1. "அமரவோ ரங்க மாறும்
வேதமோர் நான்கு மோதித்
தமர்களிற் றலைவ ராய
சாதியந் தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்ப ராகில்
நொடிப்பதோ ரளவி லாங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே."

2. "பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மாக்கள்
இழிகுலத் தவர்க ளேனு
மெம்மடி யார்க ளாகிற்
றொழுமினீர் கொடுமின் கொள்மி
னென்று நின்னோடு மொக்க
வழிபட வருளி னுய்போன்
மதிள்திரு வரங்கத் தானே"

3. "குலந்தாங்கு சாதிகள் நாலினுங்
கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாளர்
சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல்
மணிவண்ணற் காளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடி
யாரெம் மடிகளே"

4. "ஒளிமணி வண்ண னென்கோ
ஒருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ
நான்முகக் கடவு ளென்கோ"

என்பன போன்ற ஆழ்வார்கள் பாடல்களை நோக்குவோம்.

1. "சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண்டு என்செய்
வீர்"

என்று குலம் பேசுவோரை நோக்கிக் கேட்கும் ஆளுடைய அடிகள்,

2. "வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் எழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே"

என்றும்,

3. "விரிவிலா அறிவினர்கள்
வேறொரு சமயஞ் செய்தே
ரரிவினல் சொன்ன ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்"

4. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தாற் கன்பராயின்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்றும், இன்னும் கணக்கற்ற இடங்களிலும் தம் சமய சமரச ஞானத்தைப் பலருக்கும் புகட்டுவர் இன்னும் நெருங்கிய காலத்துக்கு வருவோமாயின் நம் உள்ளத்தை உருக்குகின்ற தாயுமான முனிவரையும், சமரச சன்மார்க்கமென்ற ஞானநெறி நிறுவிய இராமலிங்க அடிகளையும் நாம் நினைக்காமலிருக்க முடியாது. இவ்விருவரும் தமிழுலகுக்குச் செய்திருக்கும் ஒப்பற்ற சமரசத் தொண்டினை எம்போலியர் அளவிடலாகுமோ?

1. "பெருகியபேர் அருளுடையார்
அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையென் கணவர்திருப்
பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதியென்பே
னயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன்
ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவனென்பேன்
சத்திசிவ மென்பேன்
பரமனென்பேன் பிரமமென்பேன்
பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன்
துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பனிவை
சித்துவிளை யாட்டே"

2. "எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப
கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின்
செயலெனவே தெரிந்தேன்"

3. "எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியு
மிடமெனநான் தெரிந்தேன்"

4. "மண்ணுல கதிலே உயிர்கள் தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டுங்
கணமுநான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வைத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்"

என்று பலபடியாய் எல்லாவுயிர்களுக்கு மிரங்கி நின்று கதறும் சமரச ஞானிகள் எத்துணை பேர் நம் நாட்டில் உளர் இன்று?

வேதாந்தநெறி பெரிது, சித்தாந்த நெறியே மேல் என்றெல்லாம் பேதங்கொண்டு வாதமிடும் சமயவாதிகள் கண்விழித்துப் பார்க்குமாறு,

1. "வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்
தடுத்தாண்ட"

2. "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்
களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே"

3. "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

4. காக முறவு கலந்து ண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ,
இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே"

என்று உலகில் உள்ள எல்லோரையும் நோக்கி அறை கூவும் சமரச ஞானிகள் யாண்டுச்சென்றொளித்தனர்? இப்பெற்றியோர் ஓரோர் காலத்துத் தோன்றி அக்காலத்து மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்திச் சென்றனர். இவர்களுக் கெல்லாம் எடுத்துக் காட்டு நம் திருவள்ளுவரேயன்றோ ?

சுருங்கக் கூறுமிடத்து எவ்வெச் சமயங்கள் சமரச சன்மார்க்கத்தைப் போதிக்கின்றனவோ அவற்றை யெல்லாம் போற்ற வேண்டும். அவையே மெய்ச் சமயங்கள். எந்நூல் சமரச ஞானத்தை யூட்டுகிறதோ அதுவே தலை சிறந்த நூலாகக் கருதப்படும். இதுபற்றியே சிவாசாரியர் அருள்நந்தியும்,

1. "ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உள பலவு
மிவற்றுள்
யாது சமயம் பொருணூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நிற்பதியா தொருசமயம் அதுசமயம்
பொருணூல்"

என்று கூறுகின்றனர்.

பொது நோக்க மெனும் செல்வம் நிறைந்துள்ள களஞ்சியமாகிய அத்திருக்குறள் என்னும் தெய்வப் பனுவலைப் படிப்போரும், படிக்கக் கேட்போரும், மனமாற்றம் அடைந்து, தமக்கெனவே வாழும் தன்மையினின்றும் நீங்கி, பிறர்க்கென வாழும் பெற்றியுற்று, உயர்ந்த பொது நோக்காளியாவரேல் நம் நாடு எவ்வளவு மேன்மையுறும்? ஆனால் இதைப் படிப்போர் எத்துணைப்பேர் உளர் ? திருக்குறள் என்றால் என்ன ? திருவள்ளுவர் யார் ? என்று உணராத தமிழ் மக்கள் பல்லாயிரவர் நம் நாட்டில் இன்றும் உளர் என்பது யாருமறிந்த தொன்றும். நமது மொழியில் சிறந்தபெறலரும் மணிகள் போன்ற நூல்களிருப்பதையும் அறியாராய், தாழ்ந்த, பிழைமலிந்த பொய்க் கதைகளையும் சிற்றின்ப நூல்களையும், புனைந்தெழுதப்பட்ட பலப்பல புன்னூல்களையும் பாடல்களையும் படித்துப் படித்துப் போலி மகிழ்வெய்திப் பொதுமக்கள் காலத்தை வீணுக்குகின்றனரே! இங்ஙனம் அறியாமை இருளில் தடுமாறியும், அழுக்குச் சேற்றில் புதைந்தும் கிடந்துழலும் நம்நாட்டு மக்களிடைக் கல்வியைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்குரிய நூல்களிற் சிறப்பாகத் திருக்குறளின் போதனையை எடுத்துக் கூறச் சில பல அன்பர்கள் முன்வருவரேல், அவர்கள் செயல் பெருந் தொண்டாகுமன்றோ ? நம்மனோர் தினந்தோறும் ஒரு குறளாவது கற்றுணர்ந்து அதன்படி ஒழுகினால் அது வாழ்க்கையில் மிகவும் பயன்படுமல்லவா ?

திருக்குறளின் சமய நெறியைப் படிப்போர் அதன் பரந்த நோக்கத்தையும் விரிந்த பார்வையையும் காணாது போகார். இல்வாழ்க்கையிலும், சமுதாய வாழ்விலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் படிப்படியாய்ப் போய்ச் சமய நெறியில் இறுதியில் சமரச நோக்கினராய் ஒழுகி, "யாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்று பிறரையும் நல்வழிப் படுத்த வேண்டும் என்ற ஓர் எண்ணம் இதைப் படிப்போருக்குண்டாகும் என்பது திண்ணம். தமிழ் உலகில் தோன்றிய எத்தனையோ நூல்கள் அழிந்தும், உருத்தெரியாமல் மாறுபட்டும் போக, தன்னகத்தே கொண்டுள்ள சமரசக் கொள்கைகளின் பெருமையால் திருக்குறள் மட்டும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாய் வளர்பிறையே போன்று, நாள்தோறும் பெருமை குறையாது மேன்மேலும் வளர்ந்து கொண்டே வந்து, உலகத்தினர் அனைவர்க்கும் பயனைச் செய்து வருகின்றது.

குறள் காட்டும் கடவுள்

குறள் காட்டும் அன்பு-அறக்கடவுள் ஆகும். பகைவர் நாடு நகரங்களைத் தீயாலும், அக்கினியாஸ்திரங்களாலும், அழிக்கும் கடவுள் அல்ல; குறளாசிரியர் காட்டும் கடவுளின் கையில் போர்த்தளவாடங்கள் இரா. பகைமை, கோபம், விருப்பு - வெறுப்பு அற்றவரே குறள் காட்டும் கடவுள். அக் கடவுளுக்குப் பகைவரும் இல்லை ; நண்பரும் இல்லை. அன்பே அக்கடவுளின் ஆயுதம்.

—ஆ. சக்கரவர்த்தி நயினர்.
(திருக்குறளும் சமதர்மமும் ப. 20 21)

திருக்குறட் சிறப்புச் சொற்களும் சொல்லாட்சியும்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்]

நெல்லை மாவட்டத்தில் 1902 இல் பிறந்தவர். வட ஆர்க்காடு மாவட்டத்தில் படிப்பைத் தொடங்கி இறுதியில் தமிழைத் தாமே பயின்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வில் தேறிய இவருக்குத் தனித் தமிழ் மீது மாறாத பற்றுண்டு. எழுதுவதோடு நில்லாது தூய தமிழில் பேசுவதிலும் வல்லவர். ஆங்கிலமுட்பட வேறு எந்த மொழிச் சொற்களையும் தம் எழுத்திலும் பேச்சிலும் கலக்காதவர். பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்



சொல் இல்லாவிடின் புதிய புதிய சொற்களை உருவாக்கும் திறன் பெற்றவர். இலக்கண இலக்கியப் புலமையோடு மேனாட்டு முறைப்படி மொழியாராய்ச்சி செய்யும் மொழிப் புலமையும் உடையவர். சொற்களுக்கு வேர் இதுதானெனக் கண்டு பிடித்து அதைக் கொண்டு புதிய சொற்கள் பலவற்றை உருவாக்குபவர். இவரியற்றிய நூல்கள் சில: திராவிடத்தாய், முதற்றாய் மொழி; உயர்தரக் கட்டுரை இலக்கணம், தமிழ்நாட்டு விளையாட்டுக்கள்.

ஒவ்வொரு பெருநூலிலும் ஓரிரு அல்லது ஒருசில சொற்களையும் சொல்லாட்சியையும் சிறப்பாகக் காண்கின்றோம். திருக்குறளிலுள்ள சிறப்புச் சொற்களையும் சொல்லாட்சியையும் எடுத்துக்கூற எழுந்ததிக்கட்டுரை. நிகண்டு என்னும் வடசொற்பெயராற் குறிக்கப்படும் உரிச் சொற்றொகுதிகளும், உரையாசிரியன்மார் உரைகளும், பிற நூல்களிலுள்ள சொற்களையெல்லாம் தொகுத்தும் எடுத்தும் கூறும் இயல்புடையனவாதலின், திருக்குறட் சிறப்புச் சொல் வராதனவென்று விலக்கப்பட்டவை, அவ்விருவகை யொழிந்த ஏனைய நூல்களும் பனுவல்களுமே.

1. சிறப்புத் தனிச்சொற்கள்

கஃசு=காற்பலம்.

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்." (1037)

கூழ்=செல்வம், பொருள், பொன்.

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு." (381)

"கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு." (554)

உணவைக் குறிக்கும் கூழ் என்னுஞ் சொல் குழை என்னும் முதனிலைத் திரிபாதலாலும், உணவு என்னுஞ் சொற்குச் செல்வம் என்னும் பொருளின்மையாலும்,

"பல்வகை யுணவும் பயிரும் பொன்னும்
கொள்ப மாதே கூழென் கிளவி"

என்று திவாகரங் கூறுவதாலும், செல்வத்தைக் குறிக்கும் சொல் உணவுப் பெயரின் வேறு என்று கொள்ளவும் இடமுண்டு. இனி குழைவான (Ductile) தாது (உலோகம்) பொன் என்றுமாம்; அல்லது இன்றியமையாத அடிப்படைச் செல்வம் உணவே எனினும் ஒக்கும்.

கொட்குதல்=வெளிப்படுதல்.

"கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை
யிடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்." (663)

தவ்வெனல்=தாழ்தல், சுருங்குதல்.

"கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை யிழந்து." (1144)

ஓசை வகையைக் குறிக்கும் தவ் என்னும் குறிப்புச் சொல்வேறு. ஆதலால், " 'தவ்வென்னும்' என்பது குறிப்பு மொழி;

"நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப"

என்புழியும் அது." என்று பரிமேலழகர் கூறுவது பொருந்தாது. தவ்வல் என்னும் பெயர் இருதிணையிலும் இளமை குறித்தலாலும், தவ்வுதல் என்னும் வினைக்குக் குறைதல், குவிதல், தவறுதல், கெடுதல் என்னும் பொருள்களிருத்தலாலும், நெல்லை வட்டத்தில் ஒரு பாடத்தில் தாழ்வாயிருக்கும் மாணவனை அப் பாடத்தில் தவ்வலென்று கூறும் வழக்குண்மையாலும், தவ் என்பதை இங்கு ஒரு வினைப் பண்புக் குறிப்பென்று கொள்வதே பொருத்தமாம்.

தோல்=பழமையான புகழ், பெருமை. தொல்-தோல், தொன்மை - பழைமை.

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை." (1043)

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்"

"தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" என்னும் தொல்காப்பிய நூற்பா (1494) ஒரு வகை வனப்பின் (காவியத்தின்) இலக்கணத்தைக் கூறுவதால், அதனொடு திருக்குறட் சொல்லைத் தொடர்பு படுத்துதல் தவறும்.

முகடி=மூதேவி (சேட்டை).

"மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்." (617)

அதி=மிகு, மிக.

"மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை." (636)

"அதியென்பது வடசொல்லுள் மிகுதிப் பொருளதோரிடைச்சொல் ; அது திரிந்து நுட்பமென்பதனோடு தொக்கது" என்றார் பரிமேலழகர். மிகுதிப் பொருள்தரும் வட மொழி முன்னொட்டு (உபசர்க்கம் - Prefix) ati, adhi என்று இரு வடிவிலிருப்பதனாலும், மிகுதலைக் குறிக்கும் அதிகரித்தல் என்னும் வினைச் சொல் வடமொழியிலின்மையாலும், அதிகம் என்பதற்கினமான அதனம் (அதி+அனம்) என்னும் தொழிற்பெயர் தமிழிலேயே யிருத்தலானும், அதிகன் என்னும் தமிழச் சிற்றரசர் குடிப்பெயர் மிக்கோன் அல்லது பெரியோன் என்று பொருள் கொண்டிருக்கலாமாதலானும், அதி என்பதைப் பெரும்பாலும் ஒத்த அதை என்னும் தமிழ் வினைச்சொல் வீங்குதல்(பருத்தல்) மிகுதல் என்னும் பொருள் தருதலானும், அதி என்னும் சொல் ஒருகால் ஒரு வழக்கற்ற பழந்தமிழ் வினையாயிருக்குமோ என்னும் ஐயம் நிகழ்கின்றது.

இனி, "அதிநுட்பம்" என்று பாடங்கொண்டு, "மேற்கூறிய நூற் கல்வியோடுகூட நுண்ணிதாகிய மதியினையும் உடையார்க்கு, அதனினும் நுண்ணியவாய் மாற்றரா லெண்ணப்பட்டு எதிர்நிற்கும் வினைகள் யாவுள?" என்னும் மணக்குடவர் உரை, சொல்வகையிலும் பொருள் வகையிலும் பரிமேலழகருரையினுஞ் சாலச் சிறந்ததாம். இப்பொருளில் அதி என்னும் முன்னொட்டிற்கே இடமில்லை. பரிமேலழகர் ஒரு தென்சொல்லை வடசொல்லாக்குவான் வேண்டி, "இனி, அதிநுட்பமென்று பாடமோதி, அதனினுட்பம் யாவென்றுரைப்பாருமுளர். அவர் சூழ்ச்சிக்கினமாய் முன் சுட்டப்படுவதொன்றில்லாமையும், சுட்டுப்பெயர் ஐந்தாமுருபேற்றவழி அவ்வாறு நில்லாமையு மறிந்திலர்." என்று மணக்குடவருரையை மறுத்திருப்பது, அவரையுந் தாக்குதல் காண்க.

2. சிறப்புத் தொடர்ச் சொற்கள்

அசையியல்=நுடங்கிய இயல்பினையுடையாள். இது அன்மொழித் தொகையாயினும் அரிய அமைப்புடையது.

"அசையியற் குண்டாண் டோர் ஏஎர்யா னேக்கப்
பசையினள் பைய நகும்." (1098)

அறன்கடை=கரிசு (பாவம்)

"அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்." (142)

உயிர்நிலை=உடம்பு.

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு." (255)

"கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு." (290)

ஊருணி=ஊரார் குடிக்கவோ குளிக்கவோ உதவும் குளம். இது பாண்டி நாட்டு வழக்கு. முதற் காலத்தில் இது குடிநீர் நிலையையே குறித்திருத்தல் வேண்டும்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு." (215)

குறியெதிர்ப்பை=கைம்மாறு கருதல்.

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து." (221)

தொல்வரவு=தொன்று தொட்டுவரும் குடிப் பண்பு

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை." (1043)

மலர்மிசையேகினன்=கடவுள் (அடியார் நெஞ்சத் தாமரையின்கண் அமர்ந்தவன்)

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்." (3)

வாலறிவன்=கடவுள் (தூய அறிவினை யுடையவன்).

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்." (2)

வாழ்க்கைத்துணை=மனைவி.

இது இல்லறவியலில் 2-ஆம் அதிகாரத் தலைப்பு. வாழ்க்கைப்படுதல் (மனைவியாதல்) என்னும் பாண்டி நாட்டு வழக்கு இங்குக் கவனிக்கத் தக்கது.

3. சிறப்புச் சொல்வடிவம்

அறி=அறிவு.

இஃது முதனிலைத்தொழிற்பெயர்.

"அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்." (638)

ஒப்பாரி=ஒப்பு, உவமை.

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்." (1071)

ஒருவந்தம் = ஒருதலை. தலை=அந்தம். இழவிற்கழும் ஒப்பாரியையும் ஒப்பென்பர்.

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்." (563)

"ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்." (593)

கெடு=கேடு (வறுமை).

இதுவும் முதனிலைத் தொழிற்பெயர்.

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு." (117)

பீழி = பீடி. பீழித்தல் = துன்புறுத்தல். பிள்—பீள்—பீழ்—பீழி

பிடுங்கல் என்னும் வழக்கை நோக்குக-

"அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது." (843)

"நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது." (1217)

முயற்று=முயற்சி.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." (616)

வரன் =பரம் (மேலுலகம்).

புரம்—பரம்—வரம்—வரன். புரம்=மேலிடம்.

கோபுரம்=அரசனிருக்கும் உயர்ந்த இடம்.

" புரை யுயர் பாகும் " (தொல்காப்பியம், 785).

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து." (24)

4. சிறப்புப் பொருளாட்சி

இடம்=செல்வம். இடம்—இடன்.

"இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு." (1064)

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்." (218)

என்பு=உடம்பு. இது சினையாகுபெயர்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு." (72)

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு." (73)

குடங்கர்=குடில்.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று." (890)

குதித்தல்=தாண்டுதல், கடத்தல், மேற்கொள்ளுதல், வெல்லுதல்.

"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு." (269)

சிமிழ்த்தல்=வலையுள் அகப்படுத்துதல்.

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று." (274)

மாடு=செல்வம். இது ஒரு பழைய பொற்காசைக் குறித்த மாடை என்னும் சொல்லின் திரிபாகக் கருதப்படுகின்றது. மாழை=பொன்

பொற்கட்டி. மாழை—மாடை—மாஷ (வட சொல்).

பண்டைக் காலத்தில் உலகமெங்கும் கால் நடையே செல்வமாகக் கருதப்பட்டதினுல், மாடு என்னும் விலங்குப்பெயரே செல்வம் என்னும் பொருளைத் தழுவிற்றென்று கொள் வதே மிகப் பொருத்தமாம். ஒப்பு நோக்க:

இலத்தீன் (L): Pecu (=cattle)—pecunia (=money)—

ஆங்கிலம் (E): pecuniary=consisting of money.

L. caput (=head),—capitalis—E. capital —cattle—chattel=movalle possessions.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை." (400)

மையாத்தல்=மயங்குதல்.

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று." (1112)

நாகரிகம்=பண்பாடு.

இச்சொல்லை இப்பொருளிலேயே திருவள் ளுவர் ஆண்டிருக்கின்றனர். கண்ணோட்டம் ஒரு பண்பாட்டியல் யென்பதை யறிக. நாகரி கம் என்னுஞ் சொற்குக் கண்ணோட்டம் என் பது நேர்ப்பொருளன்று.

செல்விருந்து

'செல்விருந்து' என்றதற்கு 'தன்னை நாடிச் சென்ற விருந்து' எனப் பரிமேலழகர் உரை பொருள் தருகின்றது. இதனினும் மேலான பொருள் ஒன்றை இங்குக் கூறுகின்றேன். நமது நாட்டில் இருந்த சில ஞானிகள் ஆகார விஷயத்தில் அஜகரம் என்ற விருத்தியை மேற்கொண்டார்கள். அஜகர விருத்தி என்ருல் மலைப்பாம்பு போன்று உண்பது என்று பொருள். மலைப்பாம்பு உணவை நாடி எங்குஞ் செல்வதில்லை. அது இருக்கும் இடத்திற்கு யதேச்சையாக ஒரு பிராணி வருமாஞல் அதனைப் பிடித்து அருந்தும்.

அதுபோல அந்த ஞானிகள் எங்கும் உணவை நாடிச் செல்லமாட்டார்கள்.

"இருக்கு மிடந்தேடி என்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனேஎன் தேகம்
இளைத்தாலும் போகேன் இனி"

என்று பட்டினத்துச் சுவாமிகள் கூறுவதிலிருந்து அவர் அஜகர விருத்தியை மேற்கொண்டவர் என்பது தெளிவாகின்றது.


எனவே, செல்விருந்து என்ருல் வீடு தேடி வராது தம் விருப்பம்போல் செல்லுகின்ற சிவஞானிகளைத் தேடி உணவு தந்து ஓம்புதல் வேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும்.

—திருமுருக கிருபானந்தவாரியார்.
(காந்தியடிகளும் வள்ளுவரும், ப. 59-60)

வருக திருக்குறள் ஆட்சி நலம்

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

தண்டமிழ்த்தாய் தந்த தவ யோகமெய்ஞ்ஞான பண்டித சுத்தானந்த பாரதியார் தோன்றியது 1897ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் நாள். தம் ஏழாம் அகவையிலேயே ஆண்டவனுக்கு அரும்பணி புரியும் அடியார் வாழ்க்கையை மேற்கொண்டார். ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, தெலுங்கு போன்ற பிறமொழிகளோடு தமிழ் மொழியிலும் புலமை மிக்கவர். தேவகோட்டையிலும் சேரன்மாதேவியில் திரு. வ. வே. சு. ஐயருடனும் வாழ்ந்து, பின் தம் குருவாகிய



அரவிந்தரை நாடினார். அங்கு இருபத்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பேசாநோன்பு மேற்கொண்டிருந்தார். இளமையில் எழுதத்தொடங்கிய 'பாரதசக்தி மகா காவியம்' என்னும் பெருநூலை அங்கு முடித்தார். இவர் சைவம், இசுலாம், பௌத்தம் போன்ற பல மதங்களின் உண்மைகளையும் நன்குணர்ந்தவர். ஆசிய ஐரோப்பிய நாடுகள் முழுவதும் சுற்றியுள்ளார். 'திருக்குறள் விருந்து' என்ற நூலையும் இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களையும் ஆக்கியுள்ளார்.

க. உலகச் சுவடி

உலகச் சுவடிகள் பல; அவற்றுள் கீதை, பைபிள், திருக்குறள்—இம் மூன்றும் தனிச் சிறப்புடையன. கீதை போர்க்களத்தில் எழுந்து வாழ்க்கைப் போரை வெல்ல வழிகாட்டுகிறது; பைபிள் மலையினின்று எழுந்து மாசற்ற பொறுமைகொண்டு வாழ வழி காட்டுகிறது. திருக்குறள் அன்பும் அறமுங்கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது. சமய நூல்கள், சமுதாய நூல்கள், அரசியல் நூல்கள், அறநூல்கள் கூறும் கருத்துக்களையெல்லாம் ஒருங்கே தன்னுட் கொண்டுள்ளது திருக்குறள். திருக்குறள் ஆட்சியும், திருவாசக உள்ளமும் கொண்ட தமிழர் பண்பாடு உலகெலாம் உணர்ந்து போற்றற்குரியதாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை
அறத்தால் வருவதே இன்பம்
அன்பும் அறமும் வாழ்வின்
பண்பும் பயனு மாகும்

என்று வாழ்வுக்கு வழி வகுக்கிறார், வள்ளுவர். வான்போல் அறிவும், தேன்போல் மொழியும், கான்போல் அழகும், கனிபோல் மனமும், கதிர்போல் ஒண்மையும், கடல்போல் ஆழமும், மழைபோற் பயனும், அருவிபோல் வாழ்வும் வீரத்திறனும், விழுமிய பண்பும் முப்பாலூற்றில் முழுகிக் காண்போம். இல்லறம், துறவறம், உள்ளறம் உலகறம்-அனைத்திற்கும் வழிகாட்டும் முச்சுடர் விளக்கு பொய்யாமொழியே.

"செய்யொத்த பயிர்போலச் செந்தமிழும்
செழும்பொருளும் சேர்ந்த செல்வம்
மையொத்த மனவிருளை மாற்றியொளிர்
மணிவிளக்கு; மாந்த ரெல்லாம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமர
வாழ்வெய்த வழிநடத்தும்
கையொத்த நற்றுணைவன்; வள்ளுவனார்
திருக்குறளெங் கண்க ளன்றோ?"

நூல்கள் பலவகையாகும்; பெரும்பாலானவை ஒரு தரம் பார்த்து அப்புறம் ஒதுக்கத்தக்கவை. மிகச் சில நூல்கள் ஒவ்வொரு நாளும் ஓதியுணரத்தக்கவை; நவில்தொறும் நயந்தரும் நன்னூல்களின் முன்னிற்பது நமது திருக்குறள். அதனுள் மிளிரும் கருத்துக்களை எடுத்தாளாத தமிழ்ப் புலவர் இல்லை என்னலாம். சங்க காலக் காப்பியங்களுள் திருக்குறள் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அகம்-புறம் ஆகிய இரு துறைக் கருத்துக்களும் அழகாகக் கோத்தருளிய வள்ளுவர் மொழியை மந்திரச் சொற்கள் எனலாம். செய்யுளிற் சிறந்த சிலப்பதிகார

மும், கம்பராமாயணமும் திருக்குறளின் விளக்கமென்றே கூறுவோம். எக்காலத்திற்கும் பொதுவான திருக்குறள் இக்காலத்திற்கு என்ன வழிகாட்டுகிறது என்பதை இங்கே ஆராய்வோம்.

உ- வீடு, நாடு, உலகு

திருக்குறள் இவ்வுலகில் மக்கட்பண்புடன் வாழ வழிகாட்டுகிறது. வீடு, நாடு—இரண்டும் பொதுநல வாழ்வின், உள்ளமும் உடலும் போலாகும். வீட்டின் விரிவே நாடு. வீட்டாட்சி, நாட்டாட்சி இரண்டும் ஒத்து நிற்பதே ஒண்மையாகும்.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்."

வீடும் நாடும் செழிக்க வாழ்ந்து உலகிற்கு நலஞ் செய்யும் ஒப்புரவை வள்ளுவர் வேண்டுகிறார்.

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு."

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. அறிவிற் சிறந்த உலகப் புலவர் இது நலம், இஃது உண்டு என்று கொண்ட முடிபை எதிர்ப்பவர் பேய்மகர் என்று சூடு கொடுக்கிறார் வள்ளுவர்.

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான்
அலகையா வைக்கப் படும்." [வையத்து

உலகத்தோடு ஒட்ட ஒழுகிக் குலநலம் பேணிக் குடிசெய்து, நாடு நலம் பெறப் புகழோங்கி வாழவே வள்ளுவர் வழிகாட்டுகிறார். அத்தகைய வாழ்வுக்குக் கண் போன்றவை இரண்டு பண்பாடுகளாகும். அவை அருள் பொருள்; வேளாண்மை தாளாண்மை; வினைத்திட்பம் மனத்திட்பம் எனவரும். இப்பண்பாடுகளுடன் அன்பறம் போற்றிய தமிழகம் வீறு பெற்று விளங்கியது.

ங. இன்றுலகம்

இன்று நாட்டின் நிலைமை வருந்திக் கண்ணீர் விடத்தக்கதாயிருக்கிறது. நாடெங்கும் வறுமை, வறட்சி, வயிற்றுப் புரட்சி! வேண்டும் பொருள்களின் விலையேற்றம்! தாங்க முடியாத வரிச்சுமை! கடன் சுமை! தரங் குறைந்த கல்வி; உரனில்லா உடம்பு, நடைப் பிணப் பகட்டு, பட்டம்பதவி வேட்டை, தேர்தல் அமளி; பஞ்சப் பட்டாளம்; மஞ்சட் படையெடுப்பு; பச்சைப் பகையச்சம்; விண்ணேறும் விஞ்ஞானத்தால் மண்ணேறும் போரிருள். அணுகுண்டின் அபாயம், வீட்டு நெருக்கடி, வேலை நெருக்கடி, ஓட்டு நெருக்கடி, ஊட்டு நெருக்கடி—எல்லாம் மக்களை வாட்டுகின்றன. வள்ளுவர் அடுக்கடுக்காச் சுட்டிக் காட்டுகிறார்:—

"உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

பசி, பிணி, பகை இம்மூன்றும் இந்நாட்டின் படர்களாகி, அழியாட்டயர்கின்றன. உட்பகை புறப்பகை இரண்டும் வளர்ந்து நமது ஐந்தாண்டுத் திட்டங்களை அல்லற்படுத்துகின்றன.

"இன்மை யெனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்."

பசியும் வறுமையும் பாருக்கு நெருப்பு—இந்த வறிய நிலையிலே வரிப்பளுவேறினால் என்னவாகும்?—வீட்டுக் கூரையைப் பிய்த்துக் குளிர் காய்வதா?

"கூரை பிடுங்கிக் குளிர்காய் வதுபோலும்
பாரைப் பிடுங்கும் பரிசு!"

வள்ளுவர் கடுவரியைக் கண்டிக்கிறார் வேல்—வாள் காட்டி அச்சுறுத்திக் குடிகளை "கொடு வரி" என்னும் அரசன் வழிப் பறித் திருடன் போல்வான்.

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றான் இரவு."

குடிகளை மதியாது வெருவந்த செய்யும் அரசாங்கத்தை வள்ளுவர் கடுமையாகத் தாக்கித் தகர்க்கிறார்:

"கடுஞ் சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்
நீடின்றி ஆங்கே கெடும்." [செல்வம்

கடுமையான கொடுங்கோலே உலகத்திற்குப் பெருஞ்சுமை என்கிறார் தெய்வப் புலவர். இனி அரசாட்சி எப்படி அமைதல் வேண்டும் என்பதைக் காண்போம்.

ச. அக்காலம்

வள்ளுவர் காலத்தில் முடியரசே இருந்தது. ஆனால் தக்க அரசன், தக்க அமைச்சரைக் கொண்டு, தகுமுறை ஆண்டான். எங்கும் வளமை; எங்கும் உடல் நலம், மனநலம், செல்வச் செழிப்பு, ஈகை இன்பம். எங்கும் நீர்

வளம், நிலவளம், தொழில்வளம், பொன்வளம், பொருள்வளம் பொலிந்தன. தக்க அறிவாளர் நாட்டில் மல்கினர்.

"தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

கதிரவன் கடல் முகந்து கார் பொழிகிறுன். அதுபோலவே அரசன் ஆறிலொரு கடமை வாங்கிக் குடிநலம் பேணினுன். சேக்கிழார் பெருமான் இதை விளக்குகிறுர்.

"மானிலங்கா வலன்என்பான்
மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு
தன்ஞற்றன் பரிசனத்தால்
ஊனமிகு படைத்திறத்தால்
கள்வரால், உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்
தறங்காப்பான் அல்லனே."

அரசன் குடி தழுவிக் கோலோச்சினுன்; அமைச்சர் இடித்துரைத்து அரசை நேர்மையாக்கினர். அவலங் கெட்ட குடியரசைவிட அறிவுள்ள அமைச்சரும் அன்புள்ள அரசனும் கொண்டு, மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காத்த அரசாட்சியே சிறந்ததாகும். அரசன் உள்ளத்தில் ஆருயிர் நலமே துடித்தது.

"குடியிற் குடியாய்க் குடியொத்துக் கோன்செய்
நடுநிலை ஆட்சி நலம்."

"தாயொக்கும் அன்பில் தவமொக்கும்
நலம் பயப்பில்
சேயொக்கும் முன்னின் றுருகதி
உய்க்கு நீரால்
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும்
நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும்
எவர்க்கும் அன்னுன்."

அத்தகைய மன்னன் உலகை எப்படி ஓம்பினுன்?

ரு. திருக்குறளாட்சி

"வையகம் யாவையும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்ருன்."

இத்தகைய ஆட்சியில் நாடு எப்படியிருந்தது? இன்று மக்கள் அச்சமும் கவலையுமாக வாழும் நிலை மாறத் திருவள்ளுவரை அரசியலிற் புகுத்த வேண்டும்; மக்கள் அழ அழக் கொடுமை செய்யும் ஆட்சி ஆகாய வாணம் போலச் சென்று எரிந்து கரிந்து வீழும். மக்கள் கண்ணீரே செல்வத்தைத் தேய்க்கும்.

"அல்லற்பட் டாற்ருத முதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்பதை அறிந்து நடக்க வேண்டும் அரசு. எப்படி நடக்க வேண்டும்?

(1) முதலில் நாட்டிற்குச் சரியான பாதுகாப்பு வேண்டும். சொத்தை அகிம்சை பேசிப் பயனில்லை. வள்ளுவரை ஒரு தீயன் கண்டபடி வைதான்; புலவர் பொறுத்தார். அக்கொடியன் வாசுகியைத் தொட்டிழுக்கப்போனுன்; வள்ளுவர் வைத்தார் வலிய அறை. "ஏனையா, 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல இகழ்வாரைப் பொறுக்க வேண்டும்' என்று எழுதினீரே. நீரே பொறுமை யிழந்து என்னை அடித்ததேன்?" என்று வினவினுன் கொடியன், வள்ளுவர்.

"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்."

என்று இன்னுமோர் அறை விட்டார். பொறுமை என்ருல் கழுதைப் பொறுமை அன்று. வீறுபெற்ற வீரன் பொறுமை வேண்டும். நம் வீட்டில் கொடிய பகைவன் புகுந்து மாதர் கற்பை அழிக்கும்போது, வீட்டை அவனுக்கு விட்டு வெளியே போவதா? அல்லது அவன் போகுமட்டும் பட்டினியிருப்பதா? அக்கொடியவனை உடனே அடித்துத் துரத்த வேண்டும். வள்ளுவர் சாத்வீகப் பூச்சியன்று; அவர் பாண்டியனுக்கு மந்திரியாய் இருந்தவர். பல போர்களைப் பார்த்தவர்.

"கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர்."

பயிருக்குக் களை பிடுங்குவதுபோல் நாட்டைக் கெடுக்கும் தீயரை ஒழிக்க வேண்டும். வீரம் வேண்டும்; வீரப் படை வேண்டும்; போரை எதிர்த்து வெல்ல வேண்டும்.

"நஞ்சப் பகைவர் நடுநடுங்கப் போர்புரியும்
அஞ்சாப் படைவலிமை யாக்கு."

கூற்றையும் கூடி எதிர்க்கும் ஆற்றலுள்ள படைவலிமை வேண்டும்.

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை."

அத்தகைப் படை வலிமையே நாட்டின் ஆற்றலாகும்.

> “படை,குடி கூழ்,அமைச்சு, நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு.”

நல்ல படை வலிமை, நல்ல அமைச்சு, உணர்ச்சியுள்ள மக்கள், உரிமை தரும் அரசு, சுற்றரசருடன் நட்புரிமை, நல்ல அரண், பாது காப்பு ஆகியவை அரசின் உறுப்புக்களாகும். இவ் வுறுப்புக்களில் படையை முதன்மை யாகக் கூறுகிறார் தெய்வப் புலவர். காலத்திற் கும் உலகப் போக்கிற்கும் தக்க படையூற்றம் நமக்கு வேண்டும். பகைவர் நம்மை மதித்து நடக்கும் பலம்பெற வேண்டும். கண்ணுங் கருத்துமாக உலகைக் காவல் புரியவேண்டும்

சூ கேள்போல் பகைவர்

நான் ஜெனீவாவில் இருந்த போதே **படைக் ஓரைப்புக் கூட்டம்** நடந்தது அதற்கு சூவான்லே வந்திருந்தார். நேருவுடன் பஞ்ச சீல உடன்படிக்கை செய்து வந்ததைச் சொன் னார். அதைத் தொடர்ந்து சீனத் தூதுவர் இங்கே வந்து “சீனி—இந்தி பாய் பாய்” ‘சீனரும் இந்தியரும் உடன் பிறந்தார்’ என்று பாடித்திரிந்து நாட்டைப் படம் பிடித்தனர். கேள்போல் வந்த பகைவர் வாள்போல மாறி னர். ஆனால் வள்ளுவரின் எச்சரிக்கையை மறந்து மாற்றானுடன் உறவாடினோம்.

> “தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்;
> அழுதகண் ணீரும் அனைத்து. [ஒன்னார்

சீனப் பொதுவுடைமையாரின் வஞ்சமறியா மல், அவர்களுக்காக உலக மன்றில் பரிந்து பேசினோம். மருத்துவ உதவி புரிந்தோம். சீனம் திபேத்தைப் படையெடுத்துச் செய்த கொடுமைகளை டலாய்லாமா ஒரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அதிற் காணும் குறிப்பு களாவன: “திபேத்து மலரேபா என்ற பௌத்தப் பெரியார் வழிநடக்கும் அமைதி நிலம். அதை வன்கொடிய மஞ்சட் புலிகள் பற்றிப் படுகொலை செய்தன ஆயிரம் ஆயிரம் பேர்களைக் கொன்று குவித்தன; ஆண் பெண்களை அலிகளாக்கின; இளமாதரைக் கற்பழித்துக் கிழித்தெறிந்தன; சொத்துச் சுகங் களைப் பறித்து மக்களைத் துரத்தியடித்தன. பௌத்தாலயங்களை இடித்தன; கோயிற் பொருள்களைக் கொள்ளை கொண்டன. துறவிகளை நலித்தன. நாட்டை நரகமாக்கின.”

இந்தக் கொடுமை இந்தியாவுக்கும் பரவும் என்று நாங்கள் முறையிட்டோம்.

‘வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்’ வைத்தூறு போலக் கெடும்.

> “இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து.”

நமது தலையருகே வந்த பேய்ப் பாம்பை (Dragon)ச் சும்மா விட்டோம். அது தலையைக் கொத்திவிட்டது. உடனே நாமும் விழித் தெழுந்தோம். இந்திய மக்கள் பொன்னைப் பொழிந்தனர்; பொருளைப் பொழிந்தனர்; குருதி யீந்தனர்; படை திரண்டனர்; உலக மெல்லாம் நமது பக்கம் பேசியது; கொழும்பு மாநாடு கூடியது. அதன் முடிபையும் சீனம் மறுத்தது; உலகம் அதன் மண் வெறிச் செருக்கை வெறுத்தது பாம்பின் முன் எலிக் கூட்டம்போல் சீனம் திகைத்தது

> “ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
> நாகம் உயிர்ப்பக் கெடும்.”

> “உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
> வெறுக்கையு ளெல்லாந் தலை.”

என்ற குறள் அடிகளைக் காட்டத் திரள் திரளாகக் கூடினோம். கூட்டம் கூட்டமாகப் புகுந்து அஸ்ஸாம் வரையில் கொலைக்களஞ் செய்த சீன வெறியர் திடீரென்று போர் நிறுத் தம் செய்து திரும்பிச் சென்றனர். ஏன்? அறம் நமது பக்கம்! உலகின் அன்பு நமது பக்கம்! தமிழர் பண்பாட்டைக் கம்பன் கூறுகிறான்.

> “ஒட்டிய பகைவர்வந் துறுத்த போரிடைப்
> பட்டவர் அல்லரேல் பரம ஞானம்போய்த்
> தொட்டவர் அல்லரேல் செல்வம் ஈண்டென
> விட்டவர் அல்லரேல் யாவர் வீடுளார்.”

நாட்டுக்காக அறப்போரில் நம்மையே காவு கொடுக்கத் துணிந்தோம். அந்தத் தூய வீரத் துணிவே நம்மைக் காத்தது. சீனரின் மறவெறி அவர்களுக்கு மாஸ்கோவைக் கடும் பகை யாக்கியது.

எ. நானே அரசன்

வீரபத்தினி கண்ணகி பாண்டியன் முன் நிற்கிறாள். கணவன் கோவலனை அநியாயக் கொலை புரிந்தான் அரசன். அவனைக் கண்ட துமே மனச்சாட்சி அவனைக் கொன்றது.

"மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்
வையைக் கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன்
சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்."

கற்பரசியின் உண்மை வெளிப்பட்டதுமே பாண்டியன் "யானோ அரசன்! யானே கள்வன். மன்பதை காக்கும் தென்புலக் காவல் என்முதற் பிழைத்தது; கெடுக என் ஆயுள்" என்று அரியணையினின்று மண்ணில் உருண்டு உயிர் நீத்தான்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்ற பொய்யாமொழி மெய்யானது.

அபிசீனியாவை மறப்படை கொண்டு ஒறுத்த முசலோனியின் செருக்கு தூக்கு மேடையில் தலைகீழாகத் தொங்கி யழிந்தது. புறப்பகையை வலுவாக எதிர்த்து ஓட்டவேண்டும். அத்துடன் உட்பகை கிளராது காக்க வேண்டும். ஏனெனில்,

"அரம்பொருத பொன்போலத் தேயும்
உரம்பொருது
உட்பகை உற்ற குடி."

உட்பகை அரம்போல நம்மை ராவித் தேய்த்துச் சிதைக்கும். உட்பகை வருவது சாதி—சமய, கட்சிப் பூசல்களால்.

அ. சமயோகம்

இவை இல்லாது எல்லாரும் சமயோகத்தில் வாழ வேண்டும். சமயோகம் என்பது, எல்லாரும் ஆன்ம ஒருமையுணர்வுடன், அவரவர் ஆற்றலுக்கேற்ற தொழில் செய்து அமைதியாக வாழுவதாகும். அத்தகைய வாழ்வில் சாதிப் பூசல் இல்லை; தொழில் வேறுபாடே உண்டு.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

இப்போது பிறப்பைக்கொண்டு மாந்தரை அளக்கும் போலிச் சாதி—யிறுமாப்பினால் நாடு அழிகிறது. வள்ளுவர் உலகிற்கெல்லாம் ஒருமைத் திருவாசகம் அருளுகிறார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற."

"இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

இந்த முறைப்படி நாட்டலுவல்களை, ஆற்ற வல்லாருக்குத்தந்து ஆட்சி புரிந்தால் அலுவல் திறம்பட நடக்கும், சிக்கல் இராது. தற்கால அரசியலை நாட்டுடைமை (Nationalism), மக்களுரிமை (Socialism), பொதுவுடைமை (Communism) என்று பிரிக்கலாம். நாட்டுடைமையாளர் "எல்லாம் எமது நாட்டிற்கே" என்ற மனப்பான்மையர்; மக்களுரிமையாளர் தனியுடைமையைத் தகர்த்து நாடு, நிலம், செல்வம் எல்லாம் மக்களுக்கே உரிமையாக்குவர். பொதுவுடைமைக்காரர் மறவலி கொண்டு செல்வரைத் தாக்கி, நிலம், சொத்து, சுகங்களை உழவருக்கும் தொழிலாளருக்கும் பொதுவாக்குவர்.

நமது திருவள்ளுவர் உலகெல்லாம் ஒருமைகொண்டு வாழப் புதிய பொது வழி காண்கிறார். அதுவே "பாத்தூண்"

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது."

பாத்தூண் என்பது பகுத்துண்ணல். விருந்தோம்பல், ஈகை, அறம், ஒப்புரவு எல்லாம் இதில் அடங்கும். இது அமைதியான அன்பு வழியாகும். அடிதடி — அரசியலைவிட வள்ளுவரின் பகுத்துணவே உலகெலாம் போற்றத் தக்க பொதுநலப் பான்மையாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை."

நமது நாட்டில் ஒரு திருமணம் நடந்தால் காருகர், தச்சர், கொல்லர், குயவர், உழவர், நூற்போர், துணி மணியர், இசைவல்லார், சமையற்காரர்—முதலிய எத்தனையோ பேருக்கு வேலை தருகிறோம். செல்வம் பலருக்குப் பங்கு வைத்துப் பயனாகிறது. ஏராளமான பேருக்கு உணவு தருகிறோம். தென்புலத்தார் விருந்து உற்றார், உறவினர், துறவிகள் அனைவருக்கும் இல்லறத்தார் ஈந்தே துய்ப்பர். வள்ளுவர் ஈத்துவக்கும் இன்பத்தை வற்புறுத்துகிறார்.

"ஈத்துவக்கும் இன்பம்
அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."

ஈதல் இசைபட வாழ்தல். ஈகைக்கு இரண்டு குறிப்புகளைத் தருகிறார் புலவர். ஒன்று ஊருணி. இரண்டாவது, கனிமரம்.

ஊருணி நீர் நிறைந்தால் ஊரெல்லாம் அதில் நீர் மொண்டு செல்லும். ஊர் + உணி = ஊருணி; பெயரே எவ்வளவு அழகாயிருக்கிறது! பழமரத்தை வள்ளுவர் பயன் மரம், மக்களுக்கும் பறவைகளுக்கும் புசிக்கப் பயன்படும் மரம் என்கிறார்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்."

நயனுள்ள அறவோன் ஈட்டிய செல்வம் பலருக்குப் பயனாகும். பழுத்த கனிமரத்தின் கனிகளைப் புட்கள் உண்டு மகிழ்ந்து பாடுகின்றன. மாந்தர் உண்டு கொட்டைகளை நட்டு மரத்தை வளர்க்கின்றனர்.

ஈட்டல், போற்றல், வகுத்தல் என்று செல்வத்திற்கு மூன்று பண்பாடுகளைக் குறிக்கிறார் திருவள்ளுவர்.

பாடுபட்டுச் செல்வம் சேர்க்கவேண்டும்; சேர்த்த செல்வத்தைப் பலருக்கும் பயன்பட வழங்க வேண்டும்.

"தாளாற்றித் தந்த
பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

தாளாண்மையும் வேளாண்மையும் திருக்குறளின் மூச்சாகும். இந்த முறையில் அரசியல் அமைந்தால் அதில் அன்பும் அறமும், அமைதியும், செல்வத்திருவும், ஈகையும், புகழும் நிலவும். இந்த அரசியல் முறையை நான் மேனாட்டில் சென்றிருந்த காலத்துப் பலபட விரித்து எடுத்து விளக்கினேன். வள்ளுவர் உள்ளத்தை எல்லாரும் போற்றினர்.

நூல் ஒழுங்கு

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூன் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம். தாம் கூற மேற் கொண்ட பொருளை நன்றாக ஆராய்ந்து, இவ்வாறு தெளிவுப்படுத்த வேண்டுமென்று உள்ளத் தமைத்துப், பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும் மேற் கொண்ட பொருளின் இலக்கணம், அதன் சிறப்பு, அதனலாம் பயன், அஃதில் வழி வருந் தீங்கு என்று இன்னோரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக் கொண்டு கூறுதல் இவர் இயல்பு. எப்பொருட்கும் வரையறையும் தெளிவும் இன்றியமையாதன. வரையறுத்துத் தெளிவுபடுத்தப் படாத பொருள்கள் மக்கள் உளங்கோடற்கு ஏற்றனவாகா என்பது பெரியார் துணிபு.

—பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்.
(உரைநடைக் கோவை. தொ. 2. பக். 77)

குறள் நெறி

பிறர் படும் துயரத்தைப் போக்க முடியாத ஒருவன், அவ்வுயிரின் துயரத்தைத் தானும் ஏற்று அனுபவித்தால் ஒழிய, ஒருவன் தன்னை மெய்யறிவுடையவன் என்று கூறிக்கொள்ள முடியாது என்பதே குறள் காட்டும் வாழ்க்கை நெறி. இதை மறந்துவிட்டு எவற்றை எல்லாமோ நாம் இன்று 'அறிவு' என்று சொல்லிக்கொண்டு திரிகிறோம். "மற்றோர் உயிரின் நோயைத் தன் நோய் போலப் போற்றி அனுபவிக்காவிட்டால், அறிவு பெற்றதனால் பயன் என்ன? என்னும் பொருளில்,

அறிவினல் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை?"

என்று கூறுகிறது குறள்.

—திரு அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ.,
(குறள் கண்ட வாழ்வு, 77)

திருவள்ளுவரின் அரசியற் கோட்பாடு

[பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரை]

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் பிறந்தது 1907 இல். பயின்றது நாகர் கோயில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரி, திருவனந்தை மகா ராசர் கல்லூரிகளில். பெற்றது ஆங்கில எம்.ஏ. பட்டம். பின்னர் அடைந்தவை தமிழ் எம். ஏ. பட்டமும் இந்தி விசாரத் பட்டமும். பன்மொழிப்புலவராய இவர் பல துறைகளிலும் நூல்களெழுதி யுள்ளார். பல பிறமொழி நூல்களையும் தமிழில் கொண்டுவந்த பெருமை இவரைச் சாரும். இவருடைய மொழிப் புலமை



பல அரிய சொற்களைத் தமிழ் மொழிக்குப் படைத்தளித்துள்ளது. சொற்பொருள் அகர வரிசை தொகுப்பதில் திற மிக்கார். மறைமலையடிகளார் காட்டிய தனித்தமிழ்ப் பாதையில் தனிநடை போட்டு உலவி வருகின்ருர். திருக்குறள் மனுஸ்மிருதியினுடைய கருத்துக்களின் அடிப்படையை உள்ளடக்கி எழுதப்பட்டது என்பதை மறுத்து அவர்தம் கருத்துத் தனி ஆர்வம் மிக்கது என்பதனை 'வள்ளுவர் நிழல்' என்னும் நூலில் நாட்டியுள்ளார்.

திருக்குறள் இன்று உலகில் அடைந்துள்ள புகழ் பெரிது. ஆனுல் அதற்குரிய புகழின் ஒரு காற்கூற்றினை, பதின்கூற்றினைக் கூட அது இன்னும் அடைந்து விட்டதாகக் கூறமுடியாது. ஏனெனில் திருக்குறளின் புகழ் அதன் தகுதியைமட்டும் பொறுத்ததன்று. அதை வாசிப்பவர் தகுதியையும், அதனைப் பயன்படுத்தும் நாடு, இனம், உலகம் ஆகிய பரப்புக்கள் அடைந்துள்ள நாகரிக வளர்ச்சிப் படி, அறிவு வளர்ச்சிப்படி ஆகியவற்றையுமே அது பெரிதும் பொறுத்தது ஆகும்.

தமிழின் தலைசிறந்த இலக்கிய ஏடு, உலகின் ஒப்புயர்வற்ற தனிமுதல் ஒழுக்க நூல் என்ற புகழைத் திருக்குறள் பெற்றுள்ளது. அது தலைசிறந்த பொருளியல் நூல், தலைசிறந்த தத்துவ நூல், தலைசிறந்த அரசியல் நூல் என்பதைத் தமிழகமும் சரி, உலகமும் சரி, இனிமேல்தான் முழு அளவில் காண வேண்டும். அறிவு பல்வேறு தனித்துறைகளாகப் பல்கிப்பெருகியுள்ள இக்காலத்தில் அவ்வத்துறைத் தனிவல்லுநர் திருக்குறளாராய்ச்சியில் ஈடுபட்டால்தான், நாம் இத் தெய்வப் பெருநூலின் பல்திசை, பல்துறைப் பெருமைகளைக் காண இயலும்.

திருக்குறளை ஓர் அரசியல் நூலாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருக்குறளில் பொருட்பாலின் முதல் இயலின் பெயர் 'அரசியல்' என்பதே. இவ்வியலில் 25 அதிகாரங்கள், 250 குறட்பாக்கள் உள்ளன. ஆனுல் திருவள்ளுவரின் அரசியற் கோட்பாடுகள் முழுவதும் இதற்குள் அடங்கி விட்டன என்று கூறுவது தவறு. ஏனெனில் பரிமேலழகர் சுட்டிக்காட்டுகிறபடியே, 'அரசனை'த் திருவள்ளுவர் அரசியலின் அங்கங்களாக வடபுலவாணர்கொண்ட ஏழு கூறுகளில் ஒரு கூருகக் கொள்ளவில்லை. 'படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்' என்று அவர் ஆறு அங்கங்களைகொண்டு அரசனை அவற்றை முழுதும் இயக்கி ஆட்கொண்டு நடாத்தும் பொறுப்புடைய தலைவனுகக் கொள்கிருர். இதற்கேற்ப, திருக்குறளிலும் தமிழ் மொழியிலும் அரசு, அரசன் ஒரு பொருட் சொற்களானுலும், 'அரசு' என்ற சொல் 'அரசியல்' என்ற இன்றைய சொல் வழக்கிலேயே வழங்கப்படுகிறது.

உண்மையில் ஆட்சி, ஆட்சிக்குழு(Government), ஆட்சி நடைமுறை (administration), ஆட்சியமைப்பு (constitution) ஆட்சியின நாடு (State) ஆகிய இத்தனை தற்காலப் பொருள்களையும் தமிழில் 'அரசு' என்ற ஒரே சொல் முழுதும் உட்படுத்திக் கொள்வதாகும்.

ஆகவே அரசியற் பகுதிக்குரிய 250 குறட்பாக்களும் திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்

களைத் தொகுத்துரைப்பவை மட்டுமே: அங்கவியலுக்குரிய 320 குறட்பாக்களும் (32 அதிகாரங்களும்) அவற்றையே விரித்துரைப்பன என்னலாம். இதுமட்டுமன்று. திருக்குறளின் பொருட்பாலுக்குரிய மூன்றுவது இயல் பரிமேலழகரால் 'ஒழிபியல்' என்றும், அவருக்கு முந்திய மணக்குடவர் முதலிய உரையாசிரியர்களால் 'குடியியல்' என்றும் கொள்ளப்பட்டுள்ளன. இம்மூன்றும் இயலின் 130 குறட்பாக்களும் (13 அதிகாரங்களும்) கூட உண்மையில் திருவள்ளுவரின் அரசியல் கோட்பாட்டைக் கூறுபவையே. தெளிவாக உரைப்பதானல், திருவள்ளுவருக்கே உரிய அடிப்படை அரசியற் கோட்பாடுகளின் பெரும் பகுதியை நாம் இவ்வியலிலேயே காண வேண்டும்.

இதுமட்டும்கூட அன்று.

இந்த மூன்றும் இயலே திருக்குறளின் பொருட்பாலை அறத்துப்பாலுடனும், இன்பப் பாலுடனும்; முழு நூலின் பாயிரமாக மட்டுமன்றி, முழுப்பாலாகிய வீட்டுப் பாலாக கருதத்தக்க முதல் நான்கதிகாரங்களுடனும், திருவள்ளுவர் கடவுட்கருத்துடனும் இணைத்து, திருக்குறள் முழுவதையுமே ஓர் ஒப்புயர்வற்ற அரசியல் நூலாக்கும் பகுதி ஆகும்.

உலகின் அரசியல் ஏடுகளனைத்தையும் ஆராய்ந்து அரசியற்சிந்தனையில் துறைபோய ஆராய்ச்சியாளர் கண்களில் திருக்குறள் ஏடு முழுவதுமே ஒரு பாரிய அரசியல் ஏடாகவும்; அவர் அறமும் இன்பமும் உண்மையில் அந்த அரசியல் ஏட்டின் முன்னுரை பின்னுரைகளாகவும்; பொருட்பாலே அதன் மைய நூற்பொருட்பகுதியாகவும்; அதனுள்ளும் இம்மூன்றும் இயலே திருவள்ளுவர் கருத்துக்களின் உயிர்க் கூறுகவும் தோற்றமளிப்பது உறுதி.

வடபுலவாணர்கொண்ட அங்கங்களில் திருவள்ளுவர் அரசனைச் சேர்க்கவில்லை. இதனைத் தெளிவாகக் கண்டே பரிமேலழகர் 'அரசியல், தொகை; அங்கவியல், அதன்விரி' என்பதைச் சுட்டிக் காட்டினர். ஆனல் திருவள்ளுவர் வடபுலவாணரின் அங்கங்களில் இடம் பெருத குடி என்ற ஒன்றைச் சேர்த்துள்ளார். பொருட்பால் முதற்குறட் பாவினுரையில் 'குடி என்பது நாடு' என்று பரிமேலழகரும்; 'குடி என்பதனுள் நாடு அடங்கிற்று' என்று மணக்குடவரும் கூறி, வடபுலவாணர் கூறிய உறுப்பான 'நாடு' என்பதனுள் இதனை ஒன்றுபடுத்தமுனைகின்றனர். ஆனல் 'நாடு' அங்கவியலிலேயே 74 ஆம் அதிகாரமாகக் கூறப்பட்டுள்ளது. 'குடி' என்பது நாட்டைக் குறிப்பதாகவோ, நாட்டை உள்ளடக்கியதாகவோ இவ்வுரையாசிரியர்கள் கருதியது சரி என்று தோற்றவில்லை,

மூன்றுவது இயலைக் 'குடியியல்' என்று குறியாது பரிமேலழகர் 'ஒழிபியல்' என்று குறிப்பானேன் ?

பொருட்பால் முதற் குறட்பாவில் அங்கங்கள் பெயரில் வரும் 'குடி'யையும், 'குடிமை' என்ற அதிகாரத் தலைப்பில் வரும் 'குடி'யையும் அவர் ஒரு பொருளில் கொள்ளவில்லை. முதலதை 'நாடு' என்று கொண்டதனல், அது 'நாடு' என்ற அங்கவியல் அதிகாரத்தில் கூறப்பட்டதாக அவர் கருதினர் போலும்! பின்னதை அவர் உயர்குடியின் தன்மை என்று பொருள் கொண்டார். மற்ற உரையாசிரியர்களோ, 'குடிமை' உயர்குடித்தன்மை' என்று கொண்டாலும், 'குடி'யும் 'குடிமை'யும் ஒரே 'உயர்குடி' சுட்டுவதாகவே கொண்டனர்.

மூன்றும் இயலுக்கு 'ஒழிபியல்' என்ற பெயரைவிடக் குடியியல் என்ற பெயரே பொருந்துவது என்று இன்று பல அறிஞரும் கருதுகின்றனர். அதே சமயம் பரிமேலழகர் அப்பெயரை விடுத்தற்கும், பிற பழைய உரையாசிரியர்கள் அப்பெயரைக் கொண்டதற்கும் உரிய மூல காரணக்கூறு ஒன்று உண்டு.

திருவள்ளுவர் வழக்கில் பொருட்பால் முதல் குறட்பாவில் வரும் 'குடி' என்பதும், 'குடிமை' அதிகாரத் தலைப்பின் கூறுன 'குடி' என்பதும் ஒரே பொருள் குறிப்பவையே: ஆட்சியில் பங்குகொள்ளும் தகுதியுடைய நற்குடி என்பது முன்னதன் பொருள். அத்தகைய 'குடிகளின் தன்மை' என்பது பின்னதன் பொருள். ஆனல் குடியியல் என்ற இயல் தலைப்பிலுள்ள 'குடி' குடியமைப்பு முறை அஃதாவது குடியாட்சியியல் என்னும் பொருள் தருவது ஆகும்.

குடி என்ற சொல்லின் இப்பொருட் சிக்கலே பரிமேலழகர் குடியியல் என்ற பெயர் விலக்குதற்குக் காரணம் ஆயிற்று என்னலாம். ஆனல் பெயர் விலக்கிய அவரும் சரி, பெயர் ஏற்ற பிற பழைய உரையாசிரியரும் சரி—

பொருட்பாலில் இவ்வியலுக்குரிய தனி முக்கியத்துவத்தைக் கண்டிலர், கண்டு காட்டினரிலர்.

இதில் வியப்பில்லை. ஏனெனில் இது 20-ஆம் நூற்றூண்டோ அல்லது இனிவரும் நூற்றூண்டுகளோ காணவேண்டிய உண்மையாகும்.

வடபுலவாணர் அரசியல் நூற் கருத்துக்களை உரையாசிரியர் அறிவர். ஆனல் நாகரிக உலக முழுவதன் அரசியல் நூல்களின் முழு வளர்ச்சியையுங் கண்டு எல்லாவற்றையும் துருவி நோக்குவார்க்கல்லது இக் கருத்து விளங்குதலரிது.

ஆட்சியின் அங்கங்களில் ஒன்ருகத் திருவள்ளுவர் கூறிய 'குடி'க்கும் 'குடி'யியல் குறித்த குடிக்கும் வேறுபாடு உண்டு. முன்னது ஆட்சியில் பங்குகொள்ளத்தக்க அல்லது பங்குகொள்ளும் குடிகள் அல்லது குடும்பங்கள் அஃதாவது நற்குடிகள் ஆகும். பின்னதோ 'குடிமக்கள் அனைவரையும்' குறிக்கும். முன்னது மற்ற அங்கங்களைப்போல ஆட்சியில் பங்குகொள்ளும் குடிகள். பின்னதோ ஆளும் குடிகள், ஆளப்படும் குடிமக்கள் ஆகிய இரு சாராரும் அடங்கிய மக்கள் சமுதாயம் முழுமையும் ஆகும்.

இக்கால மொழியில் கூறுவதானல் முன்னது ஆட்சி வகுப்பு (classes). பின்னது ஆட்சிக்குரிய பொதுமக்கள் (masses).

அங்கவியலுக்குப் புறம்பாக, அரசியல் போலத் தனியியலாகக் குடியியல் கூறப்பட்டது இதனலேயேயாகும்.

பொருட்பாலின் இயற்பாகுபாட்டில் உரையாசிரியருக்கு உரையாசிரியர், காலத்துக்குக் காலம், மாறுபாடுகள் உண்டு. ஆனல் குடிமை முதல் கயமைவரையுள்ள பதின்மூன்று அதிகாரங்களும் எல்லா உரையாசிரியர்களாலும், எல்லாக் காலத்தாராலும் ஒரு தனி இயலாகவே கருதப்பட்டுள்ளது என்பது ஈண்டு வலியுறுத்திக் குறிப்பிடத்தக்க செய்தி ஆகும்.

'அரசியல்' என்ற இயற் பாகுபாட்டுக்கும் இது பொருந்தும்.

ஆகவே 'அரசியல்' (ஓர் இயல்) அங்கவியல் (ஓர் இயல் அல்லது பல இயல்கள்), குடியியல் ஓர் இயல்) என்ற அமைப்பு வள்ளுவருக்கே உரிய தனி அமைப்பு என்பதில் ஐயமில்லை.

இவ்வமைப்பு முறையை நோக்கினல் திருவள்ளுவரின் அரசியற் கோட்பாட்டின் உயிர்ச் சட்டம் நன்கு விளங்கும்.

ஆளுபவன், ஆட்சிக் கருவி, ஆளப்படுபவர் என்ற அடிப்படையிலேயே அரசியல், அங்கவியல், குடியியல் என்ற பாகுபாடு அமைந்துள்ளது.

ஆட்சிக் கருவி ஒரு கருவி மட்டுமே. அது அரசியலின் இன்றியமையாக் கூறு, ஆனலும் முக்கிய கூறல்ல. ஆளும் அரசன் கருவியல்ல, கருத்தா. இதனலேயே அரசியல் தனியியலாகக் கூறப்பட்டது. ஆனல் ஆட்சியின் இலக்கு, ஆட்சி நலத்துக்குரியவன் அரசனல்லன், அங்கங்கள் அல்ல; குடிகளே. ஆகவே அங்கவியலுக்கும் அரசியலுக்கும் அடிப்படையான நலனுக்குரிய பகுதி குடியியலே.

திருவள்ளுவர் அரசியற் கோட்பாடு வடபுலவாணர் அரசியற் கோட்பாட்டைப்போன்ற முடியரசுக் கோட்பாடன்று, குடியாட்சிக் கோட்பாடே என்பதை இது காட்டுகிறது

குடியரசு முறை தமிழகமறியாததன்று. முற்கால வடபுலவழக்கிலும் பல குடியரசுகள் (ஜனபதங்கள்) இருந்தன என்பதை அறிகிரேம். ஆயினும் திருவள்ளுவர் ஆட்சிமுறை குடியாட்சிப் பண்புடையதேயன்றிக் 'குடியரசு' என்று கூறத்தக்கதன்று, ஏனெனில் அரசியலுக்குப் பொறுப்பு வகிக்கும் ஓர் அரசன் அரசின் அங்கமாகவல்ல, அதன் முழுமுதலாகவே குறிக்கப்படுகிருன்.

ஆனல் அரசன் வரம்பில்லா உரிமை உடையவனகக் குறிக்கப்படவில்லை. வடபுலவாணர் சொல்வதுபோல, அவன் நலம் கடைசி நலனகவோ, அவன் விருப்பம் கடைசி விருப்பமாகவோ, அவன் ஆற்றல் முடிந்த ஆற்றலாகவோ கூறப்படவில்லை. ஆகவே அது இன்றைய முடியரசாட்சி (unlimited or absolute) monarchy) அல்லது வல்லாட்சி (Dictatorship) ஆகியவற்றுடன் ஒரு சிறிதும் ஒவ்வாது.

மேனட்டு முற்போக்கு அரசியல்வாதிகளைப்போலவே அரசனை வீழ்த்தும் ஆற்றலும் உரிமையும் மக்கட்கு உண்டு என்று திருவள்ளுவர் கொள்கிருர். பல குறட்பாக்கள் இதனை வலியுறுத்துகின்றன. 'இரந்தும் உயிர் வாழ வேண்டில் பரந்து—கெடுக உலகியற்றியான்' என்ற குறட்பாவுக்குயார் எப்பொருள் கொண்

டாலும், அதன் மையக் கருத்து இப்பொருளே வலியுறுத்துதல் காணலாம்.

வள்ளுவர் ஆட்சி முறையை நாம் வரம்புடை முடியாட்சி (Limited Monarchy) என்று கூறினல் தவருகாது. ஆனல் இன்றைய மேலை நாட்டறிஞர் கூறும் வரம்புடை முடியாட்சியில் அரசன் உரிமைகள் மட்டுமன்றிக் கடமைகளும் பொறுப்புக்களும் வரையறுக்கப் படுகின்றன. திருவள்ளுவர் குடியாட்சியிலோ, மன்னனுக்கு வரம்பிலா ஆற்றல் உண்டு. வரம்பிலாக் கடமைகள் அல்லது பொறுப்புக்களும் உண்டு ஆனல் உரிமை கிடையாது. மக்கள் செல்வம், மக்கள் நலனன்றி அவனுக்குத் தனிச் செல்வம், தனி நலன் கிடையாது.

இந்த அரசியல் இன்றிருக்கும் உலகின் அரசியல்களில் ஆங்கில நாட்டின் இக்கால அரசியலுக்கே பெரிதளவில் ஒப்பாகும். ஆங்கில நாட்டு அரசியல் வளர்ச்சியை உற்று நோக்கினல், அது வள்ளுவ அரசியற் கோட்பாட்டை இலக்காகக் கொண்டு வளர்ந்து வந்துள்ளதையும்; வள்ளுவக் கூறுகள் அதில் 19-ஆம் நூற்ருண்டிலிருந்தே தெளிவாக வளர்ந்து வந்துள்ளதையும் காணலாம். ஆகவே திருவள்ளுவர் அரசியல் முறை இன்றைய ஆங்கில அரசியலை ஒத்தது என்று கூறுவதைவிட, வருங்கால ஆங்கில நாட்டு அரசியலை ஒத்ததாகும் என்று கூறுவதே மிகப் பொருத்தமாகும்.

உண்மையில் மேலை நாட்டு அரசியல்களும் அரசியலறிஞரும் கண்டுவரும், இன்னும் காணுத சீரிய கூறுகள் பல வள்ளுவர் அரசியலில் உண்டு.

இவற்றை நமக்குச் சுட்டிக் காட்டும் பகுதி குடியியலே என்பது கவனிக்கத்தக்க செய்தி ஆகும்.

அரசியலின் மூன்று அங்கங்களாக இன்று மேலையறிஞர் கருதுவது நடைமுறை ஆட்சி (Executive), சட்டமுறை ஆட்சி (Judiciary), சட்ட ஆக்கம் (Legislation) ஆகியவையே.

அரசன் அல்லது அரசனிடமாக இன்று கொள்ளப்படும் முதலமைச்சர் உண்மையில் முதற் கூருன நடைமுறை ஆட்சியின் தலைவர் மட்டுமே. மற்ற இரண்டு பகுதிகளில் மூன்ருவது பகுதி குடிமக்கள் அல்லது குடிமக்கள் பேராட்கள் (Representatives) இயக்குவது. இடைப்பகுதியான சட்டமுறை ஆட்சியோ முதற் கூற்றுக்கு உட்படாதது என்று கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆயினும் உலகின் இன்றைய பல நாடுகளிலும் சட்டமுறை நடுவர்களை (Judges) நீக்கும் உரிமை நடைமுறை ஆட்சித் தலைவருக்கு இல்லையாலும், அமர்த்தும் உரிமை அவர்கட்கு அளிக்கப்பட்டதன் மூலமும், பதவி உயர்வுரிமை அளிக்கப்பட்டதன் மூலமும் அவர்கள் தனி முதன்மை பாதிக்கப்பட்டே வருகிறது.

நடுவரும் தனி மனிதரே, அவர் குற்றம் செய்ததாக ஏற்படும் போது, மிகச் சிறிய அரசியற் பணியாளரால் தண்டிக்கப்படுவதற்குக் கூட அவர் உரிமைப்பட்டவர் ஆய்விடுவர்.

உருசியா போன்ற நாடுகளில் மக்கட்சபைகளே நடைமுறை ஆட்சி, சட்ட ஆக்க ஆட்சி, சட்டமுறை ஆட்சி மூன்றையும் வகிக்கின்றன. இங்கே கொள்கையளவில் மக்கள் எல்லாவற்றையும் ஆள்வதாகக் கொள்ளப்பட்டாலும், உண்மையில் நடைமுறை ஆட்சியே எல்லாம் ஆளுவதாய் விடுகிறது.

தற்கால நாகரிக உலகின் அரசியல்களாலும், அரசியலறிஞர்களாலும் தீர்க்கப்படாத இந்த அரசியற்சிக்கலைத் தீர்த்துவைக்கும் ஒரே அரசியற் கோட்பாடு திருக்குறளில் காணப்படும் அரசியற் கோட்பாடுதான்.

ஏனெனில் திருக்குறள் அரசியலில் ஆட்சி அங்கங்களுக்கு நடைமுறைக் கடமைகளன்றித் தனிஆற்றலோ, தனிப்பொறுப்புக்களோ கிடையாது. எல்லா ஆற்றலும் எல்லாப் பொறுப்புக்களும் அரசனுடையவையே. ஆனல் அந்த அரசனுக்கு உரிமை எதுவும் கிடையாது.

அரசன் ஆற்றல் பெரிது, மிகப் பெரிது; எல்லையற்றது. ஏனெனில் அமைச்சர்கள் கூட அவனிடம் ‘அகலாது அணுகாது தீக்காய்வார் போல’ப் பழக வேண்டும் என்று திருவள்ளுவர் குறிக்கிருர். அதே சமயம் அமைச்சன் அரசனின் மற்ற அங்கங்கள் போல அரசனின் ஏவலன் அல்லன். அரசன் கடமைகளைவிட அவன் கடமை குறைந்ததன்று. அரசன் பொறுப்புக்களைவிட அவன் பொறுப்புச் சிறிதன்று. ஏனெனில் அரசன் தவருமல் பார்த்துக் கொள்வதும், தேவைப்பட்டபோது அவனை நயந்துரைத்துத் திருத்தல், எச்சரித்தல், இடித்துரைத்தல் ஆகியவையும் அவன் கடமைகள் ஆகும். அதே சமயம் அரசனுக்குரிய ஆற்றல் அவனுக்குக் கிடையாது.

இங்கிலாந்தில் எட்டாம் ஹென்ரியிடம் அவன் தொடக்கக் கால அமைச்சன் உல்சி பட்டபாட்டை, அவன் இறுதியில் வாய்விட்டரற்றிய அவலக் குரலை வள்ளுவ அரசனிடம் வள்ளுவ அமைச்சனும் பட்டிருக்கக்கூடும், கூறியிருக்கக்கூடும்! ஆனால் 'உல்ஸி' வீழ்ச்சியுற்ற போது ஆங்கில அரசன் வீழ்ச்சியுறவில்லை. வள்ளுவ அரசியலில் அமைச்சர்—அரசர் உறவு இது கடந்தது. தவறிய கொடுங்கோலரசனை எதிர்த்த அமைச்சன் தற்காலிகமாக வீழ்ச்சியுறலாம். ஆனால் அவன் வீழ்ச்சிக்கு முன்னே அரசன் வீழ்ச்சி தொடங்கிவிடும்.

திருவள்ளுவர் அரசியலில் 'சான்றோர்கள்' சட்ட நடைமுறை ஆட்சியின் முதல்வர்கள். சட்ட ஆக்க உரிமையைக் காத்து இயக்குபவர்களும் அவர்களே. அவர்களுக்கு அரசனுக்குரிய நடைமுறை ஆற்றல் கிடையாது. ஆனால் அவர்கள் அவனால் அமர்த்தப்படுவதும் இல்லை, அகற்றப்படுவதும் இல்லை. அவனிடம் ஊதியம் பெறுவதுமில்லை. அவன் ஆற்றலுக்கு உட்படாத தனி ஆற்றல் உடையவர்கள் அவர்கள். ஆயினும் அவர்கள் ஆற்றல் அரசனை எதிர்க்க உதவுமேயன்றி, மக்களை எதிர்க்க உதவாது. ஏனெனில் அவ்வாற்றல் வெறும் உரிமை உருவானது. அரசனுக்கு உரிமையில்லாத ஆற்றல் வகுக்கப்பட்டதுபோலவே, அவர்களுக்கு ஆற்றல் இல்லாத உரிமை வகுக்கப்பட்டது.

அரசன் ஆற்றல் படைத்துறை சார்ந்தது. சான்றோர் ஆற்றல் மக்கள் உள்ளத்தை அவர்கள் இயக்கும் அளவிலேயே உள்ளது.

திருவள்ளுவர் குடியியலில் குடிமை, பெருமை, சான்றாண்மை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களை ஒழுக்கமுடைய உயர்ந்த பண்பு என்ற ஒரே பொதுப் பொருளில் அரசியற் சார்பற்ற ஒழுக்கமுறைக் கருத்துக்களாக உணர்வதனால் தான், உரையாசிரியர்களும் பிறரும் குடியியலின் தனி முக்கியத்துவத்தைக் காணாது சென்றனர் என்னல் வேண்டும்.

குடியாட்சி எல்லாக் குடிமக்களுக்கும் உரியது. இது கொள்கை. ஆனால் குடிகளுக்கு ஒருபுறம் உரிமை உண்டு. மறுபுறம் ஆட்சியுரிமையாகிய கடமையும் தகுதியும் பொறுப்பும் உண்டு. பிந்திய ஆட்சியுரிமையைப் பண்பிலாக் குடிகள் பெறமுடியாது. இன்றும் குற்றவாளிகள், குடிகாரர், பித்தர், இரவலர், ஆண்டிகள் ஆகியோருக்கு வாக்குரிமை கிடையாது என்பது காணலாம்.

தகுதியற்ற குடிகளே கயவர்.

தகுதியின் அளவுகோல் மானம்.

இதுபேணும் நற்குடிகளின் தன்மையே குடிமை.

குடிமையில் தலைமுறை பல கடந்து நீடித்த நற்குடி 'பெருமை'க்குரியது

நற்குடியாய், பெருங்குடியாய் வாழ்வதன்றிச் சூழ்குடிகளையும் நற்குடிகளாக, பெருங்குடிகளாக இயக்கும் பண்புடையவர்களே பண்புடையோர்.

பண்புடையோர்களின் மதிப்பைப்பெற்ற இயல்பான சமுதாய, இனத் தலைவர்களே சான்றோர்.

மக்கள் சிறு குடியாட்சி அல்லது நாட்டாண்மை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தச் 'சான்றோர்' அவையிலிருந்தே நடுவரும் அமைச்சரும் அரசரால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

'இனம்' என்ற சொல் வள்ளுவத் தமிழில் மனித சமுதாயத்தின் தலைமுறை தலைமுறையாக வரும் தொடர்ச்சி குறிப்பது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அறம் தனிக்குடி அதாவது குடும்ப உரிமை கடமைகளையும்; பொருள் பொதுக்குடி அதாவது சமுதாய உரிமை கடமைகளையும்; இன்பம் இனக்குடி அதாவது இனத்தின் உரிமை கடமைகளையும் குறிப்பன ஆகும்.

அரசனுக்கில்லாத அமைச்சரின் தனிப் பின்னணியாற்றல் இந்தச் சான்றோருக்குரிய மக்களாற்றலாகும். இது சமுதாய மக்கள் ஆற்றல் மட்டுமன்று; தலைமுறைகள் கடந்து நீடித்த இனமக்கள் ஆற்றலாகும்.

திருவள்ளுவரின் அரசியற் கோட்பாட்டின் தனிப் பெருமை காணவேண்டுமானால், பண்டைக் கிரேக்க அறிஞன் பிளேட்டோ, ஐரோப்பாவின் முற்பட்ட அறிஞன் ரூசோ, தற்காலக் குடியாட்சி அறிஞர்கள் என வரிசை முறைப்படி குடியாட்சியின் வளர்ச்சியைக் காணவேண்டும். திருவள்ளுவர் காலத்தால் முற்பட்டவரானாலும் தன்மையால் இவர்களனைவருக்கும் வருங்காலங்களுக்கும் பிற்பட்ட அறிவுயர்வுடையவர் என்று கூறத் தக்கவர் ஆவர். ஏனெனில் பிளேட்டோ வல்லாட்சியையே ஆதரித்தவர்,

அந்த வல்லாளனைக் கண்டு தேர்பவரும் அடக்கியாளுபவரும் யார் என்ற கேள்வியை அவரே எழுப்பி, அதைப் 'பூனைக்கு மணி கட்டுவது யார்' என்ற கதையாக்கி, 'இறையருளால்' இது அமைய வேண்டும் என்று கூறிச் சென்றார். ரூசோ 'மக்கள் அமர்த்தியவைகளே அரசுகள், அவற்றை நீக்கும் உரிமையும் ஆக்கும் உரிமையும் மக்களுக்கு உண்டு' என்றார். ஆனால், 'நீக்குவது எப்படி, ஆக்குவது எப்படி' என்பதை அவர் கூறவில்லை. தற்கால அறிஞரோ 'பெரும்பான்மை வாக்குரிமை' என்ற மந்திரத்தைப் படைத்து, ஆக்கும் உரிமை, நீக்கும் உரிமை ஆகியவற்றை அந்த மந்திரத்திற்கு அளித்துள்ளனர்.

ஆனால் படையாற்றலால் வெல்லும் போர் வீரர் இவ்வாற்றலை மீறுவதை அறிஞர் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் பெரும்பான்மைக் கொள்கை 'வாளின்'முன், 'திறமை'யின் முன் ஏட்டுச் சுரைக்காயாகி விடுகின்றன. இது மட்டுமோ? அறிவுடையவர், திறமையுடையவர் ஆகியோர் அறிவிற் குறைந்தவர்களையும் திறமை குன்றியவர்களையும் சுரண்டி வாழ்வதற்கு, பெரும்பான்மை தவறுவதற்கு, சிறுபான்மை அமுக்கப்படுவதற்கு, நாட்டுக்கு நாடு தாக்குவதற்கு ஒரு கர்ப்புரை இன்றும், இன்னும் அறிஞர் அறியாத ஒன்று.

உலகின் ஆட்சிமுறைக் கோட்பாட்டு வளர்ச்சியின் இந்தக் குறைபாடுகளையெல்லாம் மனங்கொண்டு நோக்கினால், திருவள்ளுவர் அரசியற் கோட்பாடு இந்த எல்லா அறிஞர் அறிவும் கடந்து நிற்பதாக, கடந்து வருங் கால நோக்கிச் செல்வதாகத் தோற்றும்.

திருவள்ளுவர் அரசியற் கோட்பாட்டுக்குரிய தனித் தன்மைகளில் இவற்றினும் சிறப்பு மிக்கது ஒன்று உண்டு. அஃது ஒன்றே அறத்தையும் இன்பத்தையும் இணைத்த அரசியற் கோட்பாடு. உலகின் மற்ற அரசியற் கோட்பாடுகளெல்லாம்ஒழுக்கக் கோட்பாடுகளுடனோ; இன்பக் கோட்பாடுகளுடனோ தொடர்பற்றவை. திருவள்ளுவர் வகையில் அவை முக்கூட்டாகப் பின்னப்பட்ட ஒரே கோட்பாடு ஆகும்.

திருவள்ளுவரின் முப்பாற் கோட்பாடு ஒரு முழு வாழ்க்கைக் கோட்பாடு. அதனுடன் இணைக்கப்பட்ட அவரது அரசியற் கோட்பாடு அம்முழு வாழ்க்கைக் கோட்பாடாகிய கட்டடத்தின் ஒரு நடு மாடம் ஆகும். ஒழுக்கமும் காதலும் சமயமும் யாவும் அதே கட்டடத்தின் தனித் தனி கூடங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

வீட்டுப் பேறு


பொருள், இன்பம், அறம் ஆகிய மூன்றையும் கொண்டு, முப்பாலை வழங்கி மக்களுடைய மனதிலே தோன்றக்கூடிய வகையிலே திருக்குறளை அவர்கள் இயற்றித்தந்தார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் இயற்றித்தந்த காரணத்தினாலே வீடு என்ற தனியான ஒரு பேற்றினை அவர்கள் குறிப்பிடவில்லை என்று சிலரும், அவர்கள் வீட்டினை மனதிலே கருதித்தான் இவற்றை இயற்றித் தந்தார்கள் என்று வேறு சிலரும் வாதிப்பதை இன்றும் நாம் காணலாம். ஆனால் வள்ளுவர் ஒரு தனி வீட்டைக் கருதினவர் அல்லர். ஆனால் இவையெல்லாம் நிறைவேறுமானால் அதுவே வீட்டின்பம் என்று கருதியவர் அவர்.

வெற்றிலை, பாக்குப் போடுகிறவர்கள் அதனால் பெறுகிற இன்பத்தைப் போல் வாழ்க்கையை ஒழுங்காக நடத்துகிறவர்கள் பெறுகிற இன்பம் இருக்கிறதே, அதுவேதான் வீட்டு இன்பம். வெற்றிலை பாக்குப் போடுகிறவர்கள் போட்டதற்குப் பின்னாலே சிவப்பு என்ற ஒரு நிறத்தை வாயிலே தடவிக் கொள்வதில்லை. அதைப்போல் வாழவேண்டிய முறையறிந்து வாழ்ந்தவர்கள் அந்த வீட்டைத் தனியாகத் தேடிச் செல்வதில்லை. அதனுடைய பலனே அது.

—பேராசிரியர் திரு. கா. அன்பழகன்.

வள்ளுவர் நூல் இயற்றிய வகையும் அதன் உரையும்

[தமிழ்ப்பெரியார், மயிலை. சிவமுத்து]



இவர் 1892 இல் மயிலையில் தோன்றியவர். பேராசிரியர் பலரிடம் பயின்று தமிழ்ப் புலமையெய்தியவர். பள்ளியில் தமிழாசிரியராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தளராத தமிழ்ப் பற்றுடையவர். தமிழ் மொழிக்காக நாள்தோறும் பாடுபட்டு வருபவர். மாணவர் உலகுக்குத் தொண்டு செய்யும் நோக்கத்தோடு மாணவர் மன்றத்தைத் துவக்குவித்துத் தலைமைதாங்கி நடத்தி வருபவர். பெரியோர் முதல் சிறியோர் வரை எல்லோரும் மகிழ்வுடன் படிக்கும் வகையில் எளியநடையில் நூல்களை இயற்றுவதில் வல்லவர். இவருடைய நூல்களுள்சில சென்னை, மத்திய அரசாங்கங்களின் பரிசுகளைப் பெற்றுள்ளன. திருக்குறளுக்கு மிக எளிய நடையில் விரிவான உரை யொன்றை எழுதியுள்ளார். மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சிறு வடிவில் குறளின் பகுதிகளை உரையுடன் வெளியிட்டுள்ளார். இவருடைய தமிழ்ப்பற்றே 'தமிழ்மொழிக் காவலர்' என்ற பட்டத்தை இவருக்குப் பெற்றுத் தந்துள்ளது.

திருவள்ளுவர் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களையும் ஒரு நாளிலோ, ஒரு திங்களிலோ ஓராண்டிலோ எழுதியிருக்க மாட்டார். காவியம் இயற்றுவதுபோல 'அகர முதல' ஆரம்பித்துக் 'கூடி முயங்கப் பெறின்' என்பது வரையில் நேராக எழுதி முடித்திருக்கவும் மாட்டார் அவர் முதலில் தமக்குத் தோன்றிய கருத்துக்களையெல்லாம் ஒரு குறிப்புச் சுவடியில் குறித்துக் கொண்டே வந்திருக்க வேண்டும். அந்தக் கருத்துக்களில் சில தமக்கே நேர்ந்த அனுபவக் கருத்துக்களாக இருக்கலாம். மற்றும் ஒருசில, பிறர் அடைந்த இன்ப துன்பங்களை நேரில் கண்டு குறித்து வைத்திருக்கலாம். அவைகளில் பிறர் சொல்லக் கேட்ட கருத்துக்களும் கலந்திருத்தல் கூடும். இவைகளேயன்றி, அவர் காலத்திலே இருந்த தமிழ் நூல்களில் காணப்பட்ட நல்ல கருத்துக்களையும் அந்தக் குறிப்புச் சுவடியில் சேர்த்து எழுதி வைத்திருக்கலாம். பிறமொழி நூல்களிலிருந்த சிறந்த கருத்துக்களும், அந்தக் குறிப்புச் சுவடியில் கலந்திருத்தல் கூடும்.

இவ்விதம் அவர் குறித்துக்கொண்டு வந்த கருத்துக்களில் ஒரு சில மிகவும் இளம் பருவத்தில் சிந்தித்துக் குறித்து வைத்தவைகளாக இருக்கலாம். மற்றும் சில, நடுத்தர வயதில் குறித்தவைகளாகவும் இருத்தல் கூடும். முதிர்ந்த வயதில் சிந்தித்தும் கேட்டறிந்தும், படித்துணர்ந்தும் குறித்து வைத்த கருத்துக்களே மிகுதியாக இருக்கலாம்.

வள்ளுவர் இவ்விதம் அரும்பாடுபட்டுத் தொகுத்த கருத்துக்களையெல்லாம் அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பகுத்துப் பார்த்திருக்கலாம். பிறகு அவைகளை அதிகாரங்களாகவும் பிரித்துப் பார்த்திருக்கலாம். இவ்விதம் தொகுத்த கருத்துக்கள் முதலில் ஐந்நூறோ அல்லது ஆயிரமோ நம்மால் கூற இயலாது.

உலகிலுள்ளோர் வாழ்வாங்கு வாழ்வதற்காக அவர் இவ்விதம் தயாரித்து இருப்பார் என்று முடிவு கட்டிவிடவும் நம்மால் இயலாது. முதலில் அவர் தமக்காகவே நினைத்துப் பார்த்துக் குறித்து வைத்திருக்கலாம். உதாரணமாக அவர் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு தமக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைய வேண்டியவள் எவ்விதம் இருக்கலாம் என்று அவர் எண்ணிப் பார்த்ததையே வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரமாக

வகுத்துப் பிறகு அவைகளை எல்லோருக்கும் விளங்கும்படியாக, ஓதற்கு எளியதாய், உணர்தற்கு அரியதாகக் குறள் வெண்பாவிலே அந்தக் கருத்துக்களைப் பத்துக் குறள் வெண்பாக்களாகப் பாடி முடித்திருக்கலாம். குறளை அரங்கேற்றும்போதும் அங்கே குழுமியிருந்த புலவர்களிடையே தாம் தொகுத்துக் குறள் வெண்பாவாக அமைத்த வகையினை விளக்கிக் கூறியிருக்கலாம். அந்தக் கருத்தை வைத்தே மாங்குடி மருதனார் என்னும் சங்கப் புலவர் நாலடி கொண்ட வெண்பாவாகப் பாடியிருத்தல்கூடும். அந்தப் பாடல் வருமாறு :

> ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
> வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
> உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

வள்ளுவர் காலத்தில் இருந்த வேதம் என்னும் நான்மறை நூலிலிருந்தும் சில கருத்துக்களை வள்ளுவர் எடுத்துக் கொண்டிருக்கலாம். என்பது மாங்குடி மருதனார் பாடியுள்ள வெண்பாவிலிருந்தும், உக்கிரப் பெருவழுதியார், செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார் முதலிய சங்கப் புலவர்களின் வெண்பாக்களிலிருந்தும் தெரிய வருகிறது. இந்தப்பாடல்களை ஒருவரே பாடியிருத்தல் கூடும் என்றும் சிலர் எண்ணுகின்றனர். அஃது ஆராய்ச்சிக்கு உரியது. வள்ளுவர் காலத்திலே நான்மறை என்று ஒரு நூல் இருந்திருக்க வேண்டும் என்பது மட்டும் தெரியவருகிறது. அதுவடமொழியில் அமைந்த நூலோ அல்லது தமிழ்மொழியில் அமைந்த நூலோ தெளிவாகத் தெரிய வரவில்லை. காலஞ்சென்ற கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம்.எல்., அவர்கள் பல சிறந்த காரணங்களைக் காட்டி அது வள்ளுவர் காலத்தில் இருந்த நான்மறை தமிழ் நூலே என்று முடிவுகட்டி யிருக்கிறார். அவர் கருத்தைத் தழுவிப் பிற புலவர்களும் கட்டுரையாக எழுதியிருக்கின்றனர்.

திருக்குறளில் உள்ள அரிய கருத்துக்களில் பெரும்பாலன அவர் தாமாகவே சிந்தித்து எழுதியுள்ளதாகவே தெரிய வருகிறது.

> "நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந்தூக்கின்
> உயிர்க்கிறுதி யாகி விடும்.

ஒரு மரக்கிளையின் நுனியில் ஏறி நிற்பவர் அதையும் கடந்து அதற்கு அப்பாலும் ஏறி நிற்க முனைந்தால் அம் முயற்சி அவர்தம் உயிருக்கே முடிவினைக் கொண்டுவந்துவிடும்.

இந்த ஒரு குறள் வெண்பாவை நாம் படித்துப் பார்க்கும் போது இதிலுள்ள கருத்தை வள்ளுவர் எந்த நூலிலிருந்தும் எடுத்திருக்க மாட்டார். வள்ளுவர் ஒரு நீண்டு உயர்ந்த மரத்தைப் பார்த்தபோது அவருக்கு இவ்வித எண்ணம் தோன்றியிருக்கலாம். அல்லது ஒரு நீண்டுயர்ந்த மரத்தின்மீது ஒருவன் ஏறிக்கொண்டே சென்றதைக் கண்ட போது அவருக்கு இந்தக் கருத்துத் தோன்றியிருக்கலாம்.

துறவறத்தில் உள்ள கருத்துக்களில் பெரும்பாலானவை அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் மறைந்த பின்னர்த் தோன்றிய கருத்துக்களாகவே இருக்க வேண்டும். வயது முதிர்ந்த காலத்தில் சிந்தித்து எழுதியதாகவும் கொள்ளலாம்.

திருவள்ளுவர் காலத்திலே பல போர்கள் நிகழ்ந்திருக்கலாம். அந்தப் போரில் வள்ளுவரும் ஒரு போர் வீரராக இருந்து போர் புரிந்து இருக்கலாம். அந்தக் காலத்திலே ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஓர் இளைஞனைப் போருக்கு அனுப்பி வைக்கும் பழக்கம் இருந்திருக்கின்றது. இவர் வீரராகச் சென்று போர் புரிந்ததாக நமக்கு ஆதாரம் கிடைக்கவில்லை. அவர் காலப் போரினை அவர் நேரில் கண்டோ அல்லது கேட்டறிந்தோ எழுதியிருத்தல் வேண்டும். தாமே சிந்தித்துப் பார்த்து எழுதி யிருப்பார் என்று எண்ணுவதற்குப் படைச் செருக்கு என்னும் அதிகாரத்தைப் படித்துப் பார்க்கும்போது தோன்றவில்லை. இதற்கு அடியில்வரும் மூன்று திருக்குறள்களே சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். அவை வருமாறு :

1. "என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்
   முன்நின்று கல்நின் றவர்." [என்னை

2. "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
   மெய்வேல் பறியா நகும்."

3. "விழித்தகண் வேல்கொண் டெறிய
   [அழித்திமைப்பின்
   ஓட்டன்றோ வன்க ணவர்க்கு."

வள்ளுவன் என்னும் பெயர் ஒரு வகுப்பை அஃதும் ஒரு தாழ்ந்த வகுப்பைக் குறித்த பெயராக எனக்குத் தோன்றவில்லை. பிங்கல நிகண்டில் கூறியுள்ளபடி அரசர்க்கு உள்படு கருமத் தலைவன் ஆக (An Officer who proclaims the kings commands) இருந்திருத்தல் வேண்டும். போர் நிகழ்வதற்கு முன்பு அரசன்

ஆணையை யானையின்மீது ஏறிக் கொண்டு பறையறைந்து தெரிவிப்பவர்க்கு வள்ளுவன் என்று பெயர், என்று சிலர் கருதுகின்றனர். அதை உண்மை என்றே கொண்டாலும் வீரர் களுள் ஒருவகையினராகவே நாம் கொள்ளுதல் வேண்டும். திருவள்ளுவர் அரசரவைக் களத் தில் ஒருவராய் அவர்தம் இளம் பருவத்திலே இருந்திருக்கலாம்.

அரசியல், அங்கவியல் முதலிய பகுதி களைத் திருவள்ளுவர் எழுதியிருத்தலை ஊன்றிப் பார்க்கும்போது அவருக்கு அரசர்க ளோடும், அமைச்சர்களோடும் நெருங்கிய தொடர்பு இருந்திருத்தல் கூடும் என்பது தெரிய வருகின்றது. ஆனால் சேர, சோழ, பாண்டியர்களுள் அவர் எந்த அரச அவையில் தொடர்புடையவராய் இருந்திருக்கலாம் என்று நம்மால் அறியக் கூடவில்லை. சிலர் சேர நாட்டு அவைக்களத்திலே அவர் தொடர்புடையவராய் இருந்திருக்கலாம் என்று எண்ணுகின்றனர். இவ்விதம் கருதுகின்றவர்கள் திருவள்ளுவர் திருமயிலையில் பிறந்தார், வளர்ந்தார் என்னும் வரலாறுகளை ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் மயிலாப்பூரில்தான் திருவள்ளுவருக்கு என ஒரு கோயில் இருக்கின்றது. அந்தக் கோயி லில் ஆண்டுதோறும் விழாவும் நடந்து வரு கின்றது. இந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டி யதே இல்லை. அவருடைய திருவுருவம் எவ்வி தம் இருந்திருக்கும் என்பதைப் பற்றிக் கூட நாம் கவலை கொள்ள வேண்டுவதில்லை. உலகம் எல்லாம் போற்றத்தக்க அரிய திருக் குறள் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதுவும் தமிழ் மொழியிலேயே அமைந்திருப்பது தமிழர் செய்த தவப்பேறு என்றே கொள்ளுதல் வேண்டும். இந்தத் திருக்குறளில் நாம் அறிய வேண்டிய எல்லாப் பொருள்களும் அடங்கி யிருக்கின்றன. இவ்விதம் இருத்தல் வேண்டும் என்று எண்ணியே இந்தத் திருக்குறளை மட் டும் ஒரு முறைக்குப் பன்முறை ஆழ்ந்து படித்து இதில் சொல்லியுள்ளபடி நாம் நடக்க வும் முயலுவோமானால், இந்த வையகத்தில் நாம் நெடுங்காலம் இருந்து வாழ்வாங்கு வாழ லாம்.

"எல்லாப் பொருளும் இதன்பால் உளவிதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்—சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை."

என்று மதுரைத் தமிழ்நாகனாரும்,

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—
[போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவர்
ஆய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

என்று நத்தத்தனாரும் விளம்பியிருத்தலைக் காணலாம்.

திருவள்ளுவரே 'நவில்தொறு நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்று கூறியிருத்தலினாலே நாம் அனைவரும் திருக்குறளை ஒருமுறைக்குப் பன் முறையாகப் படித்தல் வேண்டும். இவ்விதம் படிப்பதோடு நில்லாமல்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று அவர் கூறுகின்றவாறு படித்ததற்கேற்ப ஒழுகுதலும் வேண்டும்.

தமிழ் என்னும் சொல் திருக்குறளிலே ஓரிடத்திலேனும் நம்மால் காணமுடியவில்லை. ஆனால் உலகம், உலகு என்னும் சொற்கள் ஏறத் தாழ 57 இடங்களில் காணப்படுகின்றன. இவ் விதமே ஊர் என்னும் சொல் 16 இடங்களிலும், நாடு என்னும் சொல் 13 இடங்களிலும் காணப் படுகின்றன. வள்ளுவர் முதலில் தமக்காகவே சிந்தித்து இந்தக் கருத்துக்களைத் தொகுத்து இருக்கலாம். பிறகு தம்மிடம் பாடம் கேட்க வந்த மாணவர்களுக்காக அந்தக் கருத்துக் களைக் குறள் வெண்பாக்களாக எளிய நடை யில் அமைத்திருக்கலாம். மதுரை மாநகரில் சங்கப் புலவர்களிடம் அரங்கேற்றச் செல்லும் போது உலகுக்கு ஏற்ற ஒரு பொதுமறையாக ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளை யும் அமைத்து நூல் இயற்றியிருக்கலாம். அரங்கேற்றும்போது அங்குள்ள சங்கப்புலவர் களுக்காகத் தம்மிடம் இருந்த மாணவர்களைக் கொண்டு பல படிகள் எடுத்திருக்கலாம். அரங் கேற்றம் ஒருநாள் அல்லது ஒரு திங்கள் என்று கூடச் சொல்ல இயலாது. ஏறத்தாழ ஓராண்டேனும் நீண்டிருக்கலாம். அவர் சில அரிய குறள்களுக்கு விளக்கங்களும் கூறியிருக் கலாம். ஆனால் அவை நமக்குக் கிடைக்க வில்லை. மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் குறள் வெளிவந்த நானூறு அல்லது அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே எழுதியிருக்கின்ற னர். பரிமேலழகர் உரை சிறந்ததாக இருந்

தாலும் பெரும்பாலும் வடநூல்களை ஆதார மாக வைத்துக்கொண்டே உரை எழுதியிருக் கின்றார் என்பது அறிஞர் பலர்க்கு ஒப்ப முடிந்த கொள்கையாகும். வள்ளுவர் இல்லறம், துறவறம் என்னும் இரண்டிலேயே அறத்துப் பாலை அடக்கியிருக்கின்றார். பரிமேலழகரோ வடநூல் கொள்கைப்படி பிரம்மசரியம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்றெல்லாம் கூறு கின்றார். இவ்விதம் பல எடுத்துக் காட்டுகள் அவருடைய உரையிலிருந்து தெரிவிக்கலாம். கட்டுரை நீண்டுவிடும் என்னும் அச்சத்தால் அவைகளை நான் விட்டுவிடுகின்றேன்.

வள்ளுவர் எந்தக் காலத்துக்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்படி எழுதியிருக் கின்றார். பரிமேலழகரோ வடநாட்டுக் கொள் கையையே ஆதாரமாக வைத்துக்கொண்டு எழுதுகிறார். அதனால்தான் பரிமேலழகர் உரைக்குப் பிறகும் பல உரைகள் வெளிவந்த வண்ணமாக இருக்கின்றன. பாட பேதங் களாலும் குறளின் கருத்துக்கள் மாறுபடு கின்றன.

"செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத் தின் கண்ணராயினும் அவியுணவினை உடைய தேவரோடு ஒப்பர்.

"செவியுணர்விற் கேள்வி யுடையார் அவியுணர்[வின்]
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

என்றும் பாடபேதம் உண்டு. அதற்கு உரை வருமாறு: செவியறிவாகிய கேள்விச் செல்வத் தினையுடையவர்கள் ஐந்து அறிவினையும் அடக் கிய ஞானிகளுக்குச் சமமாக இவ்வுலகத்தில் சிறந்து விளங்குவார்கள்.

கேள்விச் செல்வத்தால் ஞானியாக ஆக லாம். தேவராக ஆகலாம் என்பது சிறிதும் பொருந்துவதாக இல்லை. கேள்விச் செல்வம் உடையவர் இவ்வுலகிலேயே ஞானியாக இருந்து வாழ்வாங்கு வாழலாம். தேவராக ஆவாரானால் அவர்கள் வானுலகிற்குத்தான் செல்ல வேண்டும்! அவி உணவா? அல்லது அவி உணர்வா? எது வள்ளுவர் வாக்கு? என்பது நமக்கு விளங்கவில்லை. ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளில் அவியுணவு என் னும் தொடர் இந்த ஒரு குறளில்தான் காணப் படுகின்றது. அதுவும் பாடபேதமாக இருக் கின்றது. அவிதல் என்பதற்கு ஐந்து உணர்வுகளையும் அடக்குதல் அல்லது கெடு தல் என்னும் பொருளும் உண்டு. இதே அதி காரத்தில்,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்."

இங்கு 'அவிதல்' என்னும் சொல் கெடுதல், இறத்தல் என்னும் பொருளிலேயே வந்துளது.

இராசகோபாலாச்சாரியார் "வள்ளுவர் வாசகம்" என்று ஒரு நூல் கல்கி வெளியீடாக வெளியிட்டிருக்கின்றார்.

"எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

'என்ன செய்துவிட்டோம்' என்று செய்த பின் இரங்கச் செய்யும் தன்மையுள்ள காரியங் களைச் செய்ய வேண்டாம். ஒருவேளை மயங்கிச் செய்துவிட்டாலும், தவறு உணர்ந்து பின்ன ராவது அத்தகைய காரியங்களைச் செய்யா திருப்பது நல்லது.


இந்தக் குறள் இரண்டாம் அடிக்குப் பரிமேலழகர் உரை வேறு விதம். பின்னால் வருந்தத் தக்க காரியங்களைச் செய்யவேண் டாம். துணிந்து செய்துவிட்டால் அதற்காகப் பின்னால் இரங்கித் தன்பழியைத் தானே தூற்றுவது நலனன்று என்று பொருள் கூறு கிறார். இது முனிவருடைய கருத்து என்று ஒப்புக் கொள்ள இயலாது. ஒரு தடவை தவறு செய்த போதிலும் அந்தச் செயலின் குற்றத்தை அறிந்த பின்னராவது திரும்பச் செய்யாது ஒழிதல், செய்துவிட்ட குற்றத்தினால் உண்டான நன்மையாகும் என்பதுதான் முனி வர் கருத்தாக இருந்திருக்க வேண்டும். இவ் விதம் பல வேறுபாடுகள் பரிமேலழகர் உரை யில் காணப்படுவதால் ஒரு நல்ல உரை மாண வர்களுக்காக வேண்டியதாகவே இருக் கின்றது.

திருவள்ளுவர் திருநாள் விழாக் குழுவினர் இந்தச் செயலையும் புரிவார்களானால் பெரி யோர் சிறியோர் அனைவரும் வள்ளுவரின் கருத்தை ஒருவாறேனும் உணர்ந்து கொள்ளு வதற்கு இயலும் என்று நான் நம்புகின்றேன்

பெரிய புராணத்தில் திருக்குறள்

[கவியரசு. வித்துவான். கு. நடேசகவுண்டர்]

இவர் 1901இல் தோன்றியவர். கொங்குநாட்டைச் சார்ந்த இவர் பெரியோர் பலரிடம் முறையாகத் தமிழ் பயின்றவர். வடமொழியும் தனியாகப் பயின்று அதிலும் தனிப் புலமை பெற்றுள்ளார். கோவை நகராட்சி அகநகர் உயர்நிலைப் பள்ளியில் 26 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி செய்தார். பின்னர் பேரூரிலுள்ள சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் பணியேற்று அதன் முதல்வராய்த் தற்பொழுது விளங்குகின்றார். தமிழ் மொழியிலும் சைவசமயத்திலும்



பற்றுடைய இவர் இவ்விரண்டின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றார். நூல்கள் இயற்றுவதிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் தனித்திறம் படைத்தவர். இவரியற்றிய நூல்களிற் சில, 'மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்' 'எட்டிக்குடி முருகன் பிள்ளைத் தமிழ்' சாமிநாதன் பிள்ளைத் தமிழ்' 'மயில் விடுதூது'. வடமொழியினின்றும் சில நூல்களைச் செந்தமிழில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார்.

"தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகை விரி
வாக்கி னற்சொல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனுப் பதிகுன்றை வாழ்"

சேக்கிழார் அருளிச்செய்த பெரியபுராணத்தில், தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவர் அருளிச் செய்த திருக்குறள் நூலின் கருத்துக்கள் எங்ஙனம் கலந்து கவினுறுகின்றன என்று ஒரு சிறிது எடுத்துக்காட்டுவாம்.

அறிஞர் விரும்பிக் கற்றுப் பயன் பெறற்கு உரியனவாக நம் செந்தமிழ் மொழியில் மிகப் பல அரிய நூல்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தனவாக உள்ளவை இவை என

"வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகந்
தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—
ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் நூலின் தரம்"

என்ற வெண்பாவால் விளங்கப் பெறுகின்றோம்.

வள்ளுவர் நூல் உலகப் பொதுமறையென அனைவராலும் போற்றப்படுவது. "தந்தெய்வம் எந்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிட நின்ற' முழுமுதல் இறைவனைப் போல, சமயவாதிகள் எல்லாரும் இது எங்கள் சமய நூலே என வழக்கிட்டு உரிமைகொண்டாடத் தக்க பெருஞ் சிறப்புடையது. இக்காலத்திய அரசியல்வாதிகளும் தங்கள் தங்கள் கட்சிக்குத் திருக்குறளைப் பயன்படுத்துவதைக் காண்கின்றோம்.

மற்றுப் பெரியபுராணமோ என்னில் திருக்குறளைப் போலப் பொது நூலெனக் கருதப்படாமல்,

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த
பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை"
(பெரிய - சாக்கிய - செ. 5)

என்பதால் சைவ சமயத்துக்கே உரிய சிறப்பு நூலாகும். இத்தகைய சிறப்பு நூலின்கண் பொதுமறையாகிய திருக்குறளின் கருத்துக்கள் செறிந்து மிளிர்கின்றன.

திருக்குறட் பாக்களையும் சொற்றொடர்களையும் தத்தம் செய்யுட்களில், பொன்னிற் பதித்த நன்மணி போல், பெருங்கவிகள் அமைத்து வைத்துள்ளனர் என்பது கற்றோர் அனைவரும் அறிந்ததே. அவர்கள் பாக்களில் திருக்குறள் அமைந்துள்ள முறைமைக்கும் சேக்கிழார் பாக்களில் அமைந்துள்ள முறைமைக்கும் ஒரு சிறந்த வேறுபாடு உண்டு. உடலின் புறத்தே கிடந்து அழகு செய்யும்

அணிகலன்கள் போலாது, உண்ட நல்லுணவு செறித்து அதன் சாரம் குருதியொடு கலந்து உடலின் அகத்தே வலிமை கொடுத்து நிற்பது போலச் சேக்கிழார் வாக்கில் திருக்குறள் திகழ்கின்றது. இதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் காண்பாம்.

பெரிய புராணத்தின் முதல் செய்யுள்,

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்பது. இத்திருப்பாட்டுக்குப் பொருள் கொள்ளும்போது 'உலகெலாம்...மலர் சிலம்படி' என இயைத்துப் பொருள்கொள்வர் அறிஞர். அங்ஙனம் கொள்ளுங்கால், உலகம் எல்லாவற்றின் கண்ணும் கலந்து நிறைந்துள்ள சிலம்பணிந்த பாதம் எனப் பொருள்படும். உலகம் என்பது ஈண்டு உயிர்களையும் அவை வாழும் புவனங்களையும் குறிக்கும். எனவே இறைவன் சேவடி எல்லா உயிர்களோடும் அவையே ஆய், தானேயாய், அவையே தானேயாய் நிற்கும் நிலை—ஒன்றேயாய் வேறேயாய் உடனாய் நிற்கும் நிலை விளங்கும். அந்நிலையை விளக்குவதற்கு ஏற்ற உவமையாக இருப்பது அகர எழுத்து.

"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

என்று சைவசித்தாந்த சாத்திரம் கூறிற்று. பெரிய புராண முதற் பாட்டிலே உள்ள அம்பலத்தாடுவானது மலர் சிலம்படியில் மன்னி நிறைந்து இருப்பது,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்ற முதற்குறளின் கருத்துத் தானே? பெரிய புராணத்தின் அவையடக்கச் செய்யுள்,

"செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொருட் குரை யாவருங் கொள்வரால்
இப்பொருட்கு என் உரை சிறிதாயினும்
மெய்ப்பொருட்கு உரியார் கொள்வர்
மேன்மையால்"

என்பது. செப்பல் உற்ற பொருளின் சிறப்பினால் - சொல்லத் தொடங்கிய மகவின் சிறப்பினால், அஃதாவது மக்கள் மேல் வைத்த அன்பால்; அப்பொருட்கு உரை யாவரும் கொள்வர்—அம்மகவு கூறும் சொற்கள் கருதிய பொருளைத் தருதற்கு ஏற்றவை அல்ல எனினும் அச்சொற்களை எல்லாரும் ஏற்றுக்கொள்வர், எனப் பொருள்படும். இக்கருத்துக்கு ஊற்றம் தருவது,

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என்ற திருக்குறட்பாவாகும். மக்களின் மழலைச் சொல் இன்பம் தருவதேயன்றி அவர்கள் கற்று வல்லர் ஆகிச் சொல்லும் சொல்லும் இன்பம் தரும் ஆதலால், மழலைச் சொல்லுக்கும் கற்று வல்லராகிச் சொல்லும் சொல்லுக்கும் பொதுவாக "சொல்" என்று பொதுவாகச் சொன்னார் வள்ளுவனார். பொருள் என்பதற்கு மகவு என்று பொருள் கொண்டதும் "தம் பொருள் என்பதம் மக்கள்" என்ற குறட்பாவின் வழியே தான்.

திருவாரூரைச் சொல்லும் போது சேக்கிழார் அவ்வூரை

"மேதினிக் காதன் மங்கை இதய கமலாம்...ஆரூர்"

என்றார். இதய கமலத்தில் இறைவன் வெளிப்படுவான் ஆதலால் "பூதம் யாவையின் உள்அலர் போதென வேத மூலம் வெளிப்படும்...மேதினிக் காதன் மங்கை இதய கமலமாம்...ஆரூர்" எனவும் கூறினார். இதய கமலத்தில் இறைவன் வெளிப்படுவான் என்பதை "உள்ளப் புண்டரிகத்துள்ளுறையும் புராணர்" எனச் சம்பந்தரும், "புந்தியாய் புண்டரிகத்துள்ளாய் போற்றி" என அப்பரும் கூறினர். "ஹ்ருதய க்ரந்தி விஹீநோஸ்மி ஹ்ருதயாம் போஜமத்யக:" என உபநிடதமும் கூறுவதாலும் அறியலாம். இக்கருத்து "மலர் மிசையேகினான்" என்று திருக்குறட்பாவில் வருவதே.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்
கைம்புலத்தாறோம்பல் தலை" [என்றாங்

என்னும் திருக்குறளின் பொருளை வைத்துச் சேக்கிழார்.

"அரசுகொள் கடன்கள் ஆற்றி
மிகுதி கொண் டறங்கள் பேணிப்
பரவரும் கடவுட் போற்றிக்
குரவரும்விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி
விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி
மலர்ந்தன பதிகள் எங்கும்"

எனச் சோழநாட்டுச் சிறப்பில் கூறினர். உழவர்கள் தம் விளைபுலத்திற் கிடைத்த வருவாயில் ஆறில் ஒரு கூறு அரசனுக்குக் கடமையாகக் கொடுத்தபின் எஞ்சியதை எங்ஙனம் பகுத்துச் செலவிடுவர் என்பதை இச்செய்யுளில் கூறியுள்ளார். அறங்கள் பேணுதலில் தன்னை ஓம்புதல் அடங்கும். குரவர்த் தாங்குதலில் தென்புலத்தார் கடன் அடங்கும். எனவே திருவள்ளுவர் கூறியபடி ஐம்புலத்தாறு ஓம்புதல் செய்து வந்தனர் சோழ நாட்டுக் குடிகள் எனக் கூறியவாருயிற்று.

திருநாட்டுச் சிறப்பில் காவிரி நாட்டின் சிறப்பெல்லாங் கூறி அதன் இறுதியில், அச் சிறப்பிற்கெல்லாம் அடிப்படை இன்னது எனக் கூறும் முறையில்,

> "நற்றமிழ் வரைப்பில் ஓங்கும்
> நாம்புகழ் திருநாடு என்றும்
> பொற்றடந் தோளால் வையம்
> பொதுக்கடிந் தினிது காக்கும்
> கொற்றவன் அநபா யன்றன்
> குடைநிழற் குளிர்வ தென்றால்
> மற்றதன் பெருமை எம்மால்
> வரம்புற விளம்ப லாமோ"

என்று பாடியுள்ளார் சேக்கிழார். இச்செய்யுளால் அந்நாட்டின் சிறப்புக் காரணம் அநபாய மன்னனுடைய ஆட்சியே எனக் கூறியதாயிற்று. இதன்கண் "வையம் பொதுக் கடிந்து இனிது காக்கும்" கொற்றவன் என்பதன் கண்,

> "குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு"

என்ற குறளும், 'இனிது காக்கும்' என்பதன் கண்,

> "வேலன்று வென்றி தருவது மன்னவன்
> கோலதூஉங் கோடா தெனின்"

என்ற குறளும்.

> "கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானாம் வேந்தர்க் கொளி"

என்ற குறளும், பாட்டின் பொருளை முழுமையாகப் பார்க்கும்போது

> "ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
> வேந்தமை வில்லாத நாடு"

என்ற குறளும் பொதிந்திருத்தல் புலனுகும். "ஆங்கமைவு எய்தியக் கண்ணும்" என்பது அதற்கு முன் கூறிய நாட்டின் இலக்கணங்கள் அனைத்தையும் தொகுத்துச் சுட்டுவதாகும். அத்தொடர்க்குப் பரிமேலழகரும் 'மேற் கூறிய குணங்கள் எல்லா வற்றானும் நிறைந்திருந்த தாயினும்' என உரை செய்துள்ளார். திருவள்ளுவர் நாட்டுக்கு இருக்க வேண்டிய குணங்களாகக் கூறியவை பலவும், சேக்கிழாரது திருநாட்டுச் சிறப்புக் கூறும் செய்யுட்களில் செறிந்துள்ளன.

> "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு"

என்பது திருக்குறள். தள்ளா விளையுள் என்பதற்குக் 'குன்றுத விளையுளைச் செய்வோராகிய உழவோர்' என்று பரிமேலழகர் பொருள் கூறியுள்ளார். திருநாட்டுச் சிறப்புப்பகுதியில்,

> "மாதர் நாறு பறிப்பர் மாட்சியும்
> சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
> ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
> காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே"

என்பது முதலியவை உழவோரின் குன்றுத உழப்பை உணர்த்தும்.

> "கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல
> கரும்பென்ன"

> "காடெல்லாம் கழைக்கரும்பு"

> "ஆலைபாய்பவர் ஆர்ப்புறும் ஓதை"

என்பன முதலிய தொடர்கள் அவ்வுழவர்கள் செந்நெலும் கன்னலும் துன்னியவளம் தரும் காவும் வளர்க்கும் தன்மையைக் காட்டும்.

> "அரனுக் கன்பர் ஆவின சிந்தைபோல
> அலர்ந்தன கதிர்கள் எல்லாம்"

> "வித்தகர் தன்மைபோல விளைந்தன
> சாலி எல்லாம்"

என்ற தொடர்கள் விளைவின் இயல்பைக் குறிக்கின்றன.

> "வைதெரிந் தகற்றி ஆற்றி
> மழைப்பெயல் மானத் தூற்றிச்
> செய்யபொற் குன்றும் வேறு
> நவமணிச் சிலம்பும் என்னக்
> கைவினை மள்ளர் வானங்
> கரக்கவாக் கியநெற் குன்றால்
> மொய்வரை உலகம் போலும்
> முளரிநீர் மருத வைப்பு"

என்பதால் "தள்ளாவிளையுளின்" தன்மை விளங்கும்.

> "தக்காரும் தாழ்விலாச் செல்வரும்
> சேர்வது நாடு"

என்ற திருக்குறட் கருத்து.

> "வீதிகள் விழவினார்ப்பும்
> விரும்பினர் விருந்தினார்ப்பும்;
> சாதிகள் நெறியிற் றப்பா
> தனயரும் மனையிற் றப்பா
> நீதிய புள்ளும் மாவும்
> நிலத்திருப் புள்ளு மாவும்
> ஓதிய வெழுத்தா மஞ்சும்
> உறுபிணி வரத்தா மஞ்சும்"

என்ற செய்யுளில் பொருந்தியுள்ளது.

"இறை ஒருங்கு நேர்வது நாடு" என்ற திருக்குறள் கருத்து "அரசு கொள் கடன்கள் ஆற்றி" என்பதில் அமைந்துள்ளது.

> "பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்ற குறளின் பொருள் "வீதிகள் விழவினார்ப்பும் விரும்பினர் விழவின் ஆர்ப்பும்" "வேதமும் கிடையுமெங்கும் யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும் போகமும் பொலிவுமெங்கும் புண்ணிய முனிவரெங்கும்" என்று சேக்கிழார் கூறியவற்றில் குலவுகின்றது.

மேலே காட்டிய "பொற்றடந்தோளால் வையம் பொதுக்கடிந்து இனிது காக்கும்" என்ற அடிகளால், அந்நாடு "செறுபகையும்"

> "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
> கொல் குறும்பும் இல்" [வேந்தலைக்கும்

லாமலும், கேடு அறியாமலும் வாழுந்தன்மை வள்ளுவர் வாக்கிற் கேற்பக் கூறப்பட்டுள்ளது. அவனது தண்ணளியால் "விளைவு இன்பம், வேந்து அமைவு" முதலியன உள்ளதாகி நாடு வாழ்வதும் கூறப்பட்டது.

> "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரும் நாடு"

என்ற குறளின் பொருள்.

> "மங்கையர் வதனசீத மதியிரு
> மருங்கும் ஓடிச்
> செங்கயல் குழைகள் பாயும்
> திருமுனைப் பாடி நாடு"

என்ற செய்யுள் தொடரில் தொனிக்கின்றது. பெண்டிருடைய கண்ணாகிய கயல் மட்டுமே அவர் தம் முகமாகிய மதியின் இருமருங்கும் ஓடிக் குழையை நாடுவது திருமுனைப்பாடி நாடு என்பதால் மனிதர் யாரும் அலைந்து எதையும் நாட வேண்டாதபடி நல்வளம் அங்கே பொருந்தியிருப்பது புலனும். இக்கருத்தின் விளக்கம் பிறிதோரிடத்தில் இந்நாட்டினைப் பற்றிக் கூறும் செய்யுளில் வருகின்றது. அச் செய்யுளாவது :

> "கோடாத நெறிவிளக்கும்
> குலமரபின் அரசளித்து
> மாடாக மணிகண்டர்
> திருநீறே மனங்கொள்வார்
> தேடாத பெருவளத்திற்
> சிறந்ததிரு முனைப்பாடி
> நாடாளுங் காவலனார்
> நரசிங்க முனையரையர்'

என்பது.

> "இறைகாக்கும் வையகம் எல்லாம், அவனை
> முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்ற திருக்குறளின் கருத்துப் பெரிய புராணத்தில் மனுச்சோழன் வரலாற்றால் நன்கு விளங்கும். அச்சரிதப் பகுதியில் வரும்,

* தருமந்தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி யுறஊர்ந் தான் மனுவேந்தன்.

* தருமந்தன் வழிச் செல்கை கடன் - தரும மானது தனது வழியிலே நடைபெறவதே முறைமை.

> அச்செயல் கண்டு உவந்து
> "அண்ணலவன் கண்ணெதிரே
> அணிவீதி மழவிடைமேல்
> விண்ணவர்கள் தொழநின்றான்
> வீதிவிடங் கப்பெருமான்"
> "அங்கிலையே உயிர்பிரிந்த
> ஆன்கன்றும் அவ்வரசன்
> மன் உரிமைத் தனிக்கன்றும்
> மந்திரியும் உடனெழலும்"

என்ற தொடர்களும் இக்குறளின் பொருளைக் கொண்டு மிளிர்கின்றன. இத்திருக்குறள் உரையில் 'முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறை செய்தான் கண்ணும் தன் கை குறைத்தான் கண்ணும் காண்க' எனப் பரிமேலழகர் இவ்வரலாற்றை எடுத்துக் காட்டி இருப்பதும் காண்க,

திருநீலகண்ட நாயனாரைக் கூறும்போது சேக்கிழார், "பொய்கடிந்து அறத்தின் வாழ் வார்......வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்' என்கின்றார். பொய் கடிதல் - பொய்யை அறவே வெறுத்தல், துரத் துதல்.

அறமாவது விதித்தவற்றைச் செய்தலும் விலக்கியவற்றை ஒழித்தலுமாம். எனவே பொய்யைக் கடிதல் அறத்தின் வாழ்தலிலே அடங்கும். வேறு பிரித்துக் கூறவேண்டா. எனினும் பொய்யாமையின் சிறப்பு நோக்கிச் சேக்கிழார் வேருகவும் அதனை எடுத்து ஓதினர். இது பிராமண வசிட்ட நியாயமாகும்.

[பிராமண வசிட்ட நியாயமாவது— 'பிராமணர்கள் வந்தார்கள், வசிட்டரும் வந் தார்' என்பது. வசிட்டரும் பிராமணரில் ஒருவரே யாயினும் அவரது சிறப்புக் கருதி வேருகவும் விதந்து சொல்லப்பட்டார்.]

பொய்யாமையின் சிறப்பைத் திருவள்ளுவனர்

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

எனவும்

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை
வாய்மையின் நல்ல பிற" [எனைத்தொன்றும்

எனவும் அருளினர்.

திருக்குறள் இல்வாழ்க்கை என்ற அதிகாரம் மனையறத்தின் மாண்பை நன்கு விரித்துக் கூறுகிறது. "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று அதனைச் சிறப்பித்தார். அக்கருத்து, "வையகம் போற்றும் செய்கை மனையறம்" எனப் பெரியபுராணத்தில் அமைந்துள்ளது. இனி, வையகம் போற்றுஞ் செய்கை மனையறம் என்பது உலகத்தாரை எல்லாம் காக்கும் செயல் பொருந்திய இல்லறம் எனவும் பொருள்படும். காளிதாசரும் "ஸர்வோபகார க்ஷமமாச்ரமம்" என்று இல்லறத்தைப் புகழ்ந்தார். இக்கருத்தும்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
நல்லாற்றின் நின்ற துணை" [மூவர்க்கும்

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும்
இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

எனத் திருக்குறளிற் காணப்படுவதே.

இல்வாழ்வார் ஆற்றும் அறங்களுக் கெல்லாம் தலையாயது விருந்தோம்பல். இல்லறத்தின்கண் வாழ்வதன் பயன் அதுவே என்பது திருவள்ளுவரின் உள்ளக் கிடை என்பது,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற திருக்குறளால் உணரப்படும். அத் தகைய விருந்தோம்பலின் சிறப்பும் முறைமையும் பெரியபுராணத்தில் பல நாயன்மார்களுடைய வரலாற்றிலும் நன்கு கூறப்பட் டுள்ளன. இளையான் குடிமாற நாயனர் புராணத்தில் உள்ள,

"ஏரின் மல்கு வளத்தி னால்வரும்
எல்லை யில்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி
யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடு பயன்கொள்வார்"

என்ற திருப்பாட்டு மேற் கூறிய திருக்குறளை உட்கொண்டுள்ளது. மேலும் இளையான் குடிமாறர் புராணத்தில் வரும் "நித்தமாகிய பத்திமுன்கூர, வந்து எதிர்கொண்டு கைகள் குவித்து நின்று, ஈரமென் மதுரப்பதம் பரி வெய்த முன் உரைத்து 'அமுது செய்ய அளித்துளார்" எனவும்,

"ஆளும் நாயகர் அன்ப ரானவர்
அளவி லாருளம் மகிழவே
நாளு நாளும் நிறைந்து வந்து
நுகர்ந்ததன்மையின் நன்மையால்
நீளுமா நிதியின் பரப்பு
நெருங்கு செல்வ நிலாவியெண்
தோளி னூர்அளகைக்கி ருத்திய
தோழ னாரென வாழுநாள்"

எனவும் கூறியவற்றுள்,

"அகனமர்ந்து செய்யாள் உறையும்
முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்"

என்ற திருக்குறள் கலந்து நிற்கின்றது.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்பது திருக்குறள். இதன் கருத்து, விருந்தினர்களையெல்லாம் உண்பித்து எஞ்சிய உணவை உண்பவனது புலத்திலே விதைக் தூமலும் வினையும் என்பதாகும். இக்கருத்தும் மேற்காட்டிய பெரியபுராணச் செய்யுளில் அமைந்துள்ளதன்றோ? "வித்தும் இடல் வேண்டும்கொல்லோ" என்ற திருக்குறளுக்கு வேறு பொருள் கூறுவாரும் உளர். அவர் கருத்து விருந்தினரை ஓம்பி மிச்சில் உண்கின்றவன் தன் விளை நிலத்தில் விதைத்தல் வேண்டும் என்பதையும் கருதாமல் விதை நெல்லையும் அட்டு விருந்து ஓம்புவான் என்பதாம். அக்கருத்துக்கு ஏற்ற எடுத்துக் காட்டு:

"செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்
மல்ல நீர்முளை வாரிக்கொடு வந்து"

மழை நாள் நள்ளிரவில் விருந்தோம்பிய இளையான் குடிமாறர் செய்தியே ஆகும் அன்றோ?

மூர்க்க நாயனர் புராணத்தில் வருகின்ற,

"காதல் அடியார்க்கு அமுதாக்கி
அமுது செய்யக் கண்டு உண்ணும்
நீதி முறைமை வழுவாத
நியதி பூண்ட நிலைமையார்"

என்ற அடிகளில் 'விருந்து ஓம்பி மிச்சில் மிசைதல்' காணப்படுகிறது.

பனிக்காலத்தில், தேனைத் தேடி வந்த வண்டினங்கள் மனம் வெறுத்துத் திரும்பும்படி, தாமரை மலர்கள் கருகிக் குவிந்திருந்தன என்பதை,

"அளிக்குலங்கள் சுளித்தகல
அரவிந்தம் முகம்புலர"

என்று சேக்கிழார் கூறியுள்ளார். இது,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்ற திருக்குறளின் கருத்தாகும்.

இளையான்குடி மாறனரது வரலாற்றில்

"செல்வ மேவிய நாளில் இச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினல்
அல்லல் நல்குர வான போதினும்
வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாடொறும் மாறிவந்து
ஒல்லை யில்வறு மைப்ப தம்புக
உன்னினார் தில்லை மன்னினர்."

"இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ் சுருங்குதல்
இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள
கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்பணிக்கண்
முதிர்ந்த கொள்கையர் ஆயினர்"

என்ற திருப்பாட்டுக்களில் திருக்குறட் கருத்துக்கள் எத்தனை அமைந்துள்ளன!

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

என்ற திருக்குறள் "செல்வ மேவிய நாளில் அன்றி......நல்குரவான போதிலும் வல்லர்" என்பதன்கண் உள்ளது.

"அல்லல் நல்குரவு" என்ற தொடர் "நல்குரவு என்னும் இடும்பை" என்ற திருக்குறளின் கருத்தையுடையது. இக் குறள் தொடருக்கு உரை கூறிய பரிமேலழகர் "துன்பமும் தானும் உடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பம் ஆக்கினர்" என்று கூறிய நுட்பம் "அல்லல் நல்குரவு" என்ற தொடரில் அமைந்துள்ளது அன்றோ!

செல்வத்தின் ஆக்கத்திற்கு ஏதுவாகிய விருந்தோம்பலை மேற்கொண்ட மாறனரது வாழ்க்கை "பருவந்து பாழ்படுதற்கு" ஏது வில்லையாயினும் தில்லை மன்னினரது திருவுள்ளச் செயலால் வறுமை வந்தது. இந்நிகழ்ச்சி,

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்"

என்ற குறளுக்குச் சான்றாக உள்ளது.

"மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி"

என்ற தொடர்,

"நயனுடையான் நல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு"

என்ற குறளை நினைப்பிக்கின்றது.

"தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள்
தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்பணிக்கண்
முதிர்ந்த கொள்கையர் ஆயினர்"

என்பது,

"ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து"

என்ற குறளின் கருத்தாகும்.

மனைவியை வாழ்க்கைத் துணை என்றார் வள்ளுவர். சகதர்ம சாரிணி என்பர் வட மொழியாரும். வாழ்க்கைத் துணைக்கு இலக்கணமாக வள்ளுவர் மொழிந்தவை எல்லாம், பெரிய புராணத்தில் உள்ள நாயன்மார்களின் வாழ்க்கைத் துணைவியர் பலர் பால் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

மாறனார் கூறி வருந்தும்போது அவர்தம் மனைவியார் நென்முளையாலும், குறும்பயிராலும் பன்னரிய திருவமுதமைத்தனர். இச் செய்கை கள்,

"இல்லதென் இல்லவள் மாண்பானால்"

"தற்கொண்டான் வளத்தக்காள்
வாழ்க்கைத் துணை"

என்பன முதலிய திருக்குறட் கருத்துக்களை விளக்குகின்றன.

"அரசியல் நெறியில் வந்த
அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாதநீதி
ஓங்கு நீர்மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார்"

என்று மெய்ப்பொருள் நாயனாரைப் பற்றிக் கூறிய பாட்டு.

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி
மானம் உடையது அரசு" [மறன்இழுக்கா

என்ற திருக்குறளுக்கு விளக்க உரை கூறியது போல் அமைந்துள்ளமை கண்டு மகிழத் தக்கதாகும்.

அரசியல் நெறியில் வந்த அறநெறி வழாமல் காத்து (-அரசியல் முறைப்படி தொன்றுதொட்டு வந்த நீதி முறைமையால் அறநெறியினின்று குடிகள் வழுவாதபடி காத்து) என்பது "அறன் இழுக்காது அல்லவை நீக்கி" என்பதற்கும்;

"வரை நெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி என்பது "மறன் இழுக்கா" என்பதற்கும்,

"உரை திறம் பாத நீதி ஓங்கு நீர்மையினன் மிக்கார் (-புகழ் மாறுபடாத நீதியில் உயர்ந்த பண்பினன் மேம்பட்டவர்) என்பது 'மானம்உடையது அரசு' என்பதற்கும் விளக்க மாக அமைந்தது காண்க.

ஒரு திருப்பாட்டில் பல குறட்பாக்களின் கருத்துச் செறியும்படி சேக்கிழார் பாடிய செய்யுட்களும் பல உள. அவற்றுள் ஒன்று பின் வருவது :

"வையம் புரக்கும் தனிச்செங்கோல்
வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும்
செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறைநூல்
புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும்
ஏறூர் ஏமப் பேறூரால்"

என்பதன்கண்,

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி"

"குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநிலமன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு"

என்ற திருக்குறள்களும், "தடம்பணையும்... நீர்த்தடமும் புடையுடைத்தாய்" என்பதன்கண்

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

என்ற குறளும், "பொய்தீர் வாய்மை அருமறை நூல் புரிந்த சீலப்புகழதனால்" என்பதன்கண்

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்
காவலன் காவான் எனின்" [மறப்பர்

என்னும் திருக்குறள்களுமாக ஒரு பாட்டில் பல குறள் காண்க.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் சைவப் பெரியாராகிய சேக்கிழார் நாயனார் திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த தெய்வத் திருக்குறள் அமுதகவி வெள்ளத்தில் எத்தனை நன்றாகத் திளைத்து தேக்கெறிந்துள்ளார் என்பது ஒருவாறு புலனாம். தமிழன்பர்கள் இவ்விரு பெருமக்களும் அருளிச் செய்த தெய்வத்தமிழ் நூற்களை நன்கு பயின்று இன்புற்று உய்வார்களாகுக.

தெய்வக் குறட்பாவிற் சேக்கிழார்
வையம் திளைக்க மகிழ்ந்து. [வாக்கமுதில்

திருவள்ளுவர் சமயம்

[டாக்டர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை]

பைந்தமிழ்ப் பாவலன் பாரதியின் எட்டயபுரத்தில் 1896 இல் தோன்றியவர். பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றியபின் தமிழ்த் தொண்டாற்றுவான் வேண்டிச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர். தமிழ்ப்புலமையும் சைவப்புலமையும் மிக்க இவருக்கு மருத்துவத்திலும் சோதிடத்திலும் நல்ல பயிற்சியுண்டு. ஆண்டு தோறும் வெளியாகும் கழக வெளியீடான சைவப் பஞ்சாங்கத்தைக் கணித்து வருபவர். பல



நூல்களும் இவர் இயற்றியுள்ளார். தமிழ் ஆட்சிக் குழுவோடு தொடர்பு கொண்டு தமிழ்க் கலைச்சொல் ஆய்வுக் குழுவில் உறுப்பினராக இருந்து பெருந் தொண்டாற்றியுள்ளார். மாவட்டங்கள் தோறும் சென்று அங்குள்ள கோயில்களனைத்தின் வரலாறுகளையும் தொகுத்து மாவட்டக் கோயில் வரலாறு என்னும் தலைப்புடைய வரிசை நூல்களை வெளியிட்டு வருகின்றார். 'திருக்குறள் உலகப் பொதுமறை' என்ற நூலை இயற்றிக் குறள் தொண்டு புரிந்துள்ளார்.

திருக்குறள் ஒழுக்கம் கூற வந்த நூல்; அது பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களைப் பற்றியும் திட்பமாகக் கூறுகிறது.

திருவள்ளுவநாயனார், "கடவுள் ஒருவரே; உயிர்கள் எண்ணிறந்தன; அவை கடவுளை அறியவொட்டாது தடைபுரியும் உலகமாகிய பாசப்பொருள் ஒன்று உண்டு" என்ற கொள்கையாளர். இதனை ஆராய்வாம்.

"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு."

என்ற அருமை முதற் குறளை எடுத்துக் கொள்வோம். எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அது போல் உலகம் ஆதி பகவனாகிய முதலையுடைத்து" என்பது இதன் பொருள். எழுத்துக்கள் உயிர், மெய் என இருவகையின. உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் பிறப்பிடமாக இருந்து அவைகளெல்லாவற்றுள்ளும் கலந்து உயிர்க்குயிராய் நிற்பது அகர உயிரே. அது போல இறைவனும் எல்லா உயிர்களுக்கும் அவை வாழிடங்களாகிய உலகங்களுக்கும் பிறப்பிடமாகி அவைகளனைத்துள்ளும் கலந்து உயிர்க்குயிராகி நிற்கின்றான். இதனால் "இறைவன் ஒருவனே, அவன் உயிர்களையும் உலகங்களையும் தோற்றுவித்து நிலை பெறுத்துபவன். உயிர்கள் பல; அவை வாழிடமே உலகங்கள்." என்பது பெற்றாம். மாதவச் சிவஞான முனிவரும் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

"சீர்கொளிறை ஒன்றுண்டு அத்தெய்வநீ
என்றுஒப்பால்
சோர்வில் அடையால் தெளிந்தோமே
சோமேசா—ஓரில்
அகர முதல எழுத்தெல் லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு."

என அருளினார்; அதனையே ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழி மரபு 13 ஆம் சூத்திரமாகிய "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்பதற்கு உரைகாணுமிடத்து, "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல அகரம் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. அகர முதல என்னும் குறளால் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம், அது போல இறைவனாகிய முதலை உடைத்து உலகம் என வள்ளு

வனர் உவமை கூறியவாற்றானும், கண்ணன், 'எழுத்துக்களில் அகரமாகின்றேன்யான்' எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க'' எனக் கூறியதும் அது

கடவுள்

''கடவுள் ஆதிபகவன்.'' ஆதி என்பது முதன்மை. உலகத்தைத் தோற்றுவித்த முதல்வன் கடவுள். அதனால் அவனை ''உலகியற்றியான்'' என வள்ளுவனார்,

'' இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' (இரவச்சம் - 2)

என்ற திருக்குறளிற் கூறினார். அக்குறளுரையில் பரிமேலழகர், ''மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய உண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தால் கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்குமன்றே'' என உரைக்கின்றனர். பழவினைக்குத் தகுந்தபடி வாழ்நாளும் உண்டியும் செய்தொழிலும் பகுப்பவன் இறைவனே ஆனதால் அவன் பகவன் எனப்பட்டான். அதனால் கடவுள் விதி என்றும் பெயர் பெறுவான். மற்றும் இதனையே மற்றொரு திருக்குறளில் நாயனார்,

'' வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''
(ஊழ் - 7)

என அருளினர் பரிமேலழகரும் அதன் உரையில், 'ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தான் என்றார்'' என உரை வகுத்தனர்.

அகர உயிர் போல எங்கும் சிவணி உலகத்தைப் படைத்து உயிர்களுக்கும் அவ்வவைகளின் வினைக்கேற்ப வகுக்கும் ஆதி பகவன்' கடவுள் வாழ்த்தில் நாயனாரால் '' வாலறிவன்,'' '' மலர்மிசை யேகினன்,'' '' வேண்டுதல் வேண்டாமை யிலான்'' '' இறைவன்,'' ''பொறிவாயி லைந்தவித்தான்,'' '' தனக்குவமை இல்லாதான்,'' '' அறவாழி அந்தணன்,'' '' எண் குணத்தான்'' என்ற பல காரணப்பெயர்களாற் குறிக்கப் பெற்றான். வாலறிவன் என்பது கடவுள் மெய்யுணர்வுடையவன், என்பதை உணர்த்தும்; 'மலர் மிசை ஏகினன், என்பது அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவொடு விரைந்து செல்லுபவன் அவன் என்பதைப் புலனாறுத்தும்; எங்கும் தங்குதலாகிய இறைமைக் குணமுடையவன் இறைவன்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளை வாயிலாக உடைய ஐம்புலன்களையும் அறுத்தவன் இறைவன் என்பதைப் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பது விளக்கும்; அவன் பொறிவாய் இல்லாமலே ஐந்தவித்தமையும் இதனால் விளங்கும். அஃதாவது இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் அவன்; அவன் உடலெடுத்து ஐந்தவித்தவனல்லன். அதனால் அவன் தனக்கு ஒராற்றானும் நிகரில்லாதவன். இதனையே நாயனர் ''பற்றற்றான்'' (துறவு 10) எனக் கூறி நிலைநாட்டினர். எல்லாப் பொருள்களையும்பற்றி நின்றே பற்றற்றவன் இறைவன், கடவுள் பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவன், ஆதலால் 'அறவாழி அந்தணன்' என்னப் பெற்றான். அவனுக்குத் தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என 'எண் குணங்கள்' உள. அதனால் அவன் எண் குணத்தான் என்னப் பெற்றான்.

இங்ஙனமாய அளவற்ற குணங்களை யுடைய கடவுள் அழியாத மெய்ப்பொருள்; அதுவே உள்ளது; செம்பொருள். இதனை மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் நாயனர்,

' கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி'' (6)

என்றும்,

' ஓர்த்துள்ளம் உள்ள(து) உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு'' (7)

எனவும்,

' பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு'' (8)

என்றும் கூறினர்.

இச்சொற்றொடர்களுக்குச் சிறப்புரை கூறுமிடத்துப் பரிமேலழகர், ''தோற்றக் கேடுகள்

இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூய் தாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொருள் என்றார். மேல் மெய்ப்பொருள் எனவும், உள்ளது எனவும் கூறியதூஉம் இதுபற்றி என உணர்க'' எனக் குறித்தனர்.

மனமொழி மெய்களைக் கடந்த பொருள் கடவுள்; அதுவே அறம் என்னும் பெயராலும் அழைக்கப்பெறும் மேல் 'அறவாழி அந்தணன்' என்பதற்கேற்ப நாயனர்,

'' அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு''
(தீவினையச்சம்—4)

எனக் கூறினர். அப்பொருளே தெய்வம் என்றும் குறிக்கப் பெறும். அதனை ''தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும்'' (குடி செயல் வகை-3) என்பதனுன் அறிக. மற்றும் அது சார்பு எனவும் '' சார்புணர்ந்து '' (மெய்யுணர்தல்-9) என்றதனுற் குறிக்கப்பெற்றது,

இதுகாறும் ஆராய்ந்தவற்ருல் இறைவன் தான் ஏனைய உயிர்ப் பொருள்களுக் கெல்லாம் சார்பாகி, அவை தன்னைச் சாரும்போது அவைகளைப்பற்றி விடாத இடும்பையாகிய பிறவிக்கடலை வேரறுத்துத் தன் திருவடியின் பத்து நிலைபெறுத்தியருளும் அழியாத மெய்ப்பொருள் என்பது பெற்றும். நித்தனுகிய செம்பொருளைச் சேரவேண்டுவனவாகிய உயிர்களைப் பற்றி நாயனர் யாது கூறுகின்ருர் என்பதை இனி ஆராய்வோம்.

உயிர்கள்

உயிர்கள் எண்ணிறந்தன, இறைவனைப் போலவே அவைகளும் அழிவற்றனவே. வள்ளுவனர் அருளுடைமை(4)யில் ''மன்னுயிர் ஓம்பி'' என்றும், இன்ன செய்யாமை (8) யில் '' மன்னுயிர்க் கின்ன செயல்'' எனவும், படர் மெலிந்திரங்கலில் (8) '' மன்னுயி ரெல்லாம் துயிற்றி'' என்றும் கூறுகின்றமையால் அவைகளின் அழியாத் தன்மை விளங்கும். பரிமேலழகரும் அச்சொற்றெடர்களுக்கு உரை வழங்கும் போது ஒவ்வோரிடத்தும் '' நிலைபேறுடைய உயிர்கள் '' எனக் குறிப்பதோடு '' மன்னுயிர் ஓம்பி'' என்ற குறளில் சிறப்புரையாக '' உயிர்களெல்லாம் நித்தமாகலின் மன்னுயிர் என்ருர் '' எனவும் எழுதினர்.

உயிர்கள் மும்மலங்களின் வயப்பட்டுப் பேதைமையல் மீட்டும் மீட்டும் பிறவிக்கடலில் விழுந்து துன்புறுகின்றன. அதனின்றும் அவை கரையேறுவதற்குப் புணையாவன இறைவன் திருவடிகளே. ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்'' அவ்வுயிர்கள். மலங்களின் விடுபடுதலே வீடு.

மலங்கள்

மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்று. அவை உயிர்களைப்பற்றி இறைவனை அறியவிடாதபடி தடை செய்யும். அப்பாசத்தின் விடுபட்டு இறைவன் திருவடியடைதலே வீடுபேறு.

பிறப்பிற்கு முதற்காரணம் பேதைமை; அதுதான் சகசபந்தமான மூலமலம். அதுவே ஆணவமலம் என்றும் சொல்லப்படும். ஆணவமலம் பேதைமையை விளைவிக்கும். வள்ளுவர் இதனை, (மெய்யுணர்தல்-8)

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.''

எனக் கூறினர். நிலைபெற்றதாகிய செம்பொருளைக் காணுதலாவது உயிர் தன் பேதைமை கெட்டு மெய்ப்பொருளை, அதனேடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல்.

பிறப்பு அநாதியாய் வருவது; ஆதலின் உயிரால் எண்ணற்ற பிறவிகள் தோறும் ஈட்டப்பட்ட வினைகள் சார்ந்து அளவற்ற துன்பங்களை விளைவிக்கும். துன்பங்களுக்குச் சார்பாக இருப்பது வினையே. ஒருவன் அச்சார்புகெட மெய்ச்சார்பாகிய மெய்ப் பேரருளை உணர்ந்து ஒழுக வல்லனுயின் அப்போது கரும மலமாகிய சார்பு துன்பஞ் செய்யாது கெடும். இதனையே வள்ளுவனர், (மெய்யுணர்தல்—9)

''சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின்
சார்தரா சார்தரு நோய்'' [மற்றழித்துச்

என்ருர். மாயா என்பது மாய்வதும் ஆவதுமாக இருப்பது. மாய் + ஆ=மாயா:அதிலிருந்து தோன்று வனவே தனு கரண புவன போகங்கள். அவைகளைப் பற்றியே உயிரினிடத்துக் காமம், வெகுளி, மயக்கம் இவை நிகழ்வன. ஆதலின் இவைகளை ஒழித்தலே மாயாமல வீடாம். நாயனரும் மெய்யுணர்தலில் (10)

"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடு நோய்"

என அருளினர்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களும் அழியாதன. ஆதலினுலேயே நாயஞர், "பேதைமை நீங்க" என உரைத்தார். 'கெட' என்றதும் நீங்க என்ற பொருளே தரும். இறைவன் மாயாமலத்திலிருந்து தனு கரண புவன போகங்களைப் படைக்கின்ருன். அதனுலேயே அவன் 'உலகியற்றியான்' எனப் பெயர் பெற்ருன்,

இனி, உயிர்கள் மலத்தின் நீங்கி இறைவன் திருவடியடைதலாகிய வீடுபேற்று வழியினை ஆராய்வோம்.

வீடு பேறு

கடவுள் வாழ்த்தில் உயிர்கள் இருவினைப் பயனுக அடைகின்ற இன்ப துன்பங்களின் நீங்கிப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்கு வழி "இறைவன் மாணடி சேர்தல்" என்பது கூறப் பெறுகிறது. நாயஞர் இதனை மிகவும் வற்புறுத்தி "மாணடி சேர்ந்தார்", (3) "அடி சேர்ந்தார்," (4) "தாள் சேர்ந்தார்," (7) (8) "அடி சேராதார்," (10) எனப் பல இடங்களிற் கூறிய தோடு அடி சேர்தலாவது அவனது திருவடிகளை வணங்குதலே என "தாளை வணங்காத் தலை," (9) "நற்ருள் தொழாஅ ரெனின்" (2) என்று இரண்டிடங்களில் நிலைநாட்டுகிருர். அதுதான் "இறைவன் பொருள் சேர் புகழ் புரிதல்" (4) அதுவே அவன் "பொய்தீர் ஒழுக்கநெறி நிற்றல்" (5)

இந்நெறிக் கூடுதலை நாயஞர் துறவற இயலில் விளங்க விரித்துரைத்தார். வீடு கருதி முயல்வானுக்கு அந்தக்கரணங்கள் தூயனவாதல் வேண்டும். அதற்கு அவன் அருளுடையனுய்ப் புலால் மறுத்து, உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை யாகிய தவமேற்கொண்டு கூடா ஒழுக்கத் தினையும் களவினையும் நீத்து, வாய்மை மேற் கொண்டு, சினம் கடிந்து, இன்ன செய்யாது, தன்னுயிர் நீப்பினும் தான் பிறிது இன் உயிர் நீக்கும் தீயவினையைச் செய்யாமையாகிய விரத ஒழுக்கத்தினில் வழுவாது நிற்கப் பழகி வெற்றி பெறுதல் வேண்டும். பின் அவன் தோன்றுவன எல்லாம் மறையும் தன்மையன ஆதலால் யாக்கையும் செல்வமும் நிலையா எனத் தெரிந்து, ஐம்புலன்களை அடக்கி, யான் எனது என்னும் செருக்கறுத்து, பற்றற்றவன் பற்றினைப் பற்றி, ஞான ஆசிரியரை யடைந்து அவரருளால் உண்மையைக் கற்று, ஈண்டுச் செம்பொருள் கண்டு ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களின் நீங்கி இடையருது மெய்யுணர்வின் நிலைத்து நின்று ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை நீக்குவானுயின் அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பை அடைந்து களிப்புக் கவற்சிகளும், பிறப்புப் பிணிமூப்பு இறப்புக்களும் இன்றி வீடு பெற்று நீடுவாழ்வான்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்."


"கற்றதனுல் ஆய பயன்என்கொல்?
நற்ருள் தொழாஅர் எனின்." வாலறிவன்

முடிவுரை

இதுகாறும் ஆராய்ந்த இதனல், வள்ளுவனர் சமையக்கொள்கை அழியாப் பொருள்கள் மூன்று என்பதும், அவை உயிர்க்குயிராம் இறைவனும், உயிர்களும், மும்மலங்களும் ஆம் என்பதும், உயிர்கள் மும்மலங்களின் நீங்குவதற்கு இல்லாளுடன் இல்லறம் இனிது நடாத்திப் பற்றற்று ஞானசிரியனை அடைந்து மெய்ப்பொருள் தெரிந்து துறவெய்தி அவாவறுத்தலே வழியாம் என்பதும் பெற்ரும்.

வள்ளுவர் கண்ட இன்பங்கள்

[வித்துவான், அ. க. நவநீதகிருட்டிணன்]



இவர் நெல்லை மாவட்டத்தில் 1921 இல் தோன்றியவர். வித்துவான் பட்டம் பெற்றுப் பின்னர் ம. தி. தா. இந்துப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். கேட்டார்ப் பிணிக்கும் வகையில் சொற்பொழிவாற்றுவதிலும் நவில் தொறும் நயம் பயக்கும் வண்ணம் எழுதுவதிலும் வல்லவர். சிறந்த கவிதைகளை இயற்றுபவர். தமிழ் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும் பணிபுரிந்து வருபவர். சைவ சமயத்தின்பால் இவருக்கு மாறாத அன்பு உண்டு. பாமரரும் கேட்டு மகிழும் வண்ணம் சிறந்த கருத்துக்களை வில்லுப் பாட்டின் மூலம் வெளிப்படுத்தும் ஆற்றல் இவரிடம் உண்டு. இவருடைய எழுத்தில் எதுகைமோனை நயத்தையும் அடுக்குச்சொல் நயத்தையும் அதிகம் காணலாம். வள்ளுவரைப் பலவடிவில் பலர் வாயிலாகக் கண்டு மகிழும் தமிழுகத்திற்கு வள்ளுவரின் கருத்தை 'வள்ளுவர் சொல்லமுதம்' என்ற நூல் வரிசையின் வாயிலாகப் புரிய வைத்துள்ளார் இக் கட்டுரையாசிரியர்.

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.' —கவுணியனார்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமையினையும் திருக்குறளின் அருமையினையும் தெளிவுற விளக்கும் திருவள்ளுவ மாலைப் பாக்களுள் ஒன்றாகிய கவுணியனார் பாடலில் அப்புலவர் தமது அரிய பட்டறிவை வெளிப்படுத்தியுள்ளார். குறளை 'இன்குறள்' என்று அடைமொழியாற் சிறப்பித்தார். இனிமை + குறள் - இன்குறளாயிற்று. இன்பந்தருவனவெல்லாம் இனிமையானவையன்றோ? இனியவற்றிலிருந்து தானே இன்பம் பிறக்கும்? 'இன் குறள்' என்பதற்கு விளக்கமாகவே பாட்டின் முதலிரண்டடிகளை அமைத்தார். நினைக்கின்ற நெஞ்சத்திற்கும், கேட்கின்ற செவியினுக்கும், சொல்லுகின்ற வாயினுக்கும் இன்பந் தரும் இனிய குறட்பாக்கள் நல்வினை தீவினைகள் காரணமாக எழும் பிறவிப் பிணிக்கே அரிய மருந்தாய் அமையும் சிறந்த அமிழ்தமென்றார் அப்புலவர். இருவினை தீர்க்கும் அருமருந்தாய் அமைந்த திருக்குறள் நூலே இன்பந் தரும் இனிமை சான்றது என்பது அவர் கருத்தாகும்.

உறுதிப் பொருள்கள் நான்கனுள்ளே வீடுவிலா வையத்து மன்னியவை மூன்றே. அவை அறம், பொருள், இன்பம் என்பன, இவற்றுள் நடுவணதாகிய பொருளைப் பெற்றால் இருதலையும் நின்ற அறமும் இன்பமும் தாமே எய்துமென்பார் சமண முனிவர் ஒருவர். பொருளைக் கொண்டு புவியிற் பெறும் இன்பமெல்லாம் சற்றே தோன்றி மறையும் சிற்றின்பங்களே. அறநெறியால் மறுமையிற் பெறும் மாண்புறும் இன்பமே என்றும் மழியாத பேரின்பமெனப் பேசப்பெறும் அதுவே வீட்டின்பம்.

மலரிலும், மதியெழுந்த நீல வானிலும், வானளாவிய மலையிலும், மாதரார் முகத்திலும் ஒளிரும் அழகினைக் கண்டு காட்சியின்பம் பெறுகிறோம். இழுமென இழிதரும் இனிய அருவியோசையினையும், குயிலின் குரலையும், மாதர் தீங்குரற் பாட்டொலியினையும் கேட்டுச் செவியின்பம் பெறுகிறோம். நறுஞ்சுவைக் கனிகளையும், அருஞ்சுவைப் பண்டங்களையும் உண்டு நாவாற் பெறும் நல்லின்பத்தைக் காண்கின்றோம். நறுமண மலர்களையும், பிற மணப் பொருள்களையும் மூக்கால் முகந்து உயிர்ப்பின்பம் உறுகின்றோம். வேனிற் காலத்து மெல்லிய தென்றல் உடம்பில் தீண்டும் போதும், தாம் வீழ்வார் மென்றோள் துயிலுங் காலத்தும் ஊற்றின்பம் ஏற்று மகிழ்கின்றோம். இவை ஐம்பொறிகள் வாயிலாகப் பெறும்

ஐம்புல இன்பங்கள்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென நவிலப்பெறும். இவ்வைம்புல இன்பங்களையும் ஓரிடத்திலேயே உற்று மகிழலாம் என்று கட்டுரைத்தார் தெய்வப் புலவர்.

> 'கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும்
> ஒண்டொடி கண்ணே யுள' [ஐம்புலனும்

என்பது அவரது உள்ளுருக்கும் தெள்ளமுத மொழி. தலைவன் ஒருவன் தான் விரும்பிய தலைவியைக் காண்டலானும், அவள் இன்மொழி கேட்டலானும், அவள் இதழமுதம் உண்ணலானும், அவள் உடம்பிலெழும் நறுமணத்தை நுகர்தலானும், அவள் மென்றோள் துயிலுதலானும் அத்தலைவி யொருத்தியிடத்திலேயே ஐம்புல இன்பங்களையும் அடைந்து மகிழ்ந்தான் என்றார்.

உலகப் பற்றையெல்லாம் விட்டொழித்துப் பற்றற்ற பரம்பொருளாகிய இறைவன் திருவடியொன்றையே பற்றி நின்ற திருநாவுக்கரசர் பெருமானுக்குத் திருவடியின்பம் ஒன்றே ஐம்புல இன்பங்களாக இணையிலா மகிழ்வூட்டிய செய்தியை அவர் தேவாரம் தெளிவுறுத்தும்.

> 'மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே'

என்பது அப்பெருமான் அருளிய பாசுரம். ஈசன் இணையடி நீழல் இன்பம், மாசில் வீணையின் நாதமாகச் செவிக்கு விருந்தாய் அமைந்தது; மாலை முழுநிலவாய்க் காட்சியின்பமும் வழங்கிற்று; மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய் மேனிக்கு ஊற்றின்பம் உதவிற்று; இளவேனிற் காலமாய் இன்சுவைக் கனிகளை நல்கி நாவின்பம் பயந்தது; வண்டறை பொய்கையாய்ப் புது மணம் பொங்கி நாசிக்கும் இன்பம் நல்கியது. எனவே அடியவர்க்கு ஆண்டவன் திருவடியிலேதான் ஐம்புல இன்பங்களும் நிறைந்துள்ளன.

ஒண்டொடி மாதரார்பால் கண்டு நுகரும் ஐம்புல இன்பங்களையும் திருவள்ளுவர் ஒரு தெய்வக் காதல் திருமகனைவே திகழ்ந்து, தம் நூலின் மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் கவினுறக் கட்டுரைக்கிறார். இப்பகுதியினைச் சிலர் இன்பத்துப்பால் என்றே வழங்க வேண்டுமென்பர். இன்பத்தின் உறையுளாய்- இன்பமே வடிவாய் விளங்கும் திருக்குறளில் ஒரு பகுதியை மட்டும் 'இன்பத்துப் பால்' என்று பெயர் கொடுத்துப் பிரிப்பதினும் 'காமத்துப்பால்' என்றே அதனைக் குறிப்பது பொருத்தமாகும்.

திருவள்ளுவர் காமத்துப் பாலிற் காட்டியுள்ள இன்பத்தைக் காண்பதற்கு முன்னால் நூலின் முன்னிரண்டு பகுதிகளாகிய அறத்துப்பால் பொருட்பால்களிற் காட்டும் பல்வகை இன்பங்களையும் பார்த்து மகிழ்வோம். நூலுட் கூறும் நுண்பொருள்களையெல்லாம் பிண்டமாகத் தொகுத்துரைக்கும் பாயிரமாகவுள்ள முதல் நான்கு அதிகாரங்களில் 'அறன்வலியுறுத்தல்' என்பதொன்று. அதில் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று, தாம் நூலுட் காட்டப்புகும் அத்தனை இன்பங்களுக்கும் அடிப்படையாக இருக்க வேண்டுவது 'அறம்' என்ற உண்மையினைத் திறம்பட வலியுறுத்தினார்.

> 'அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
> புறத்த புகழும் இல'

என்பது அப்புலவரின் பொய்யாமொழி. இதற்கு உரை வகுத்த பரிமேலழகர், 'இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம் இன்பமாயினும் துன்பத்தினிடத்த; அதுவேயுமன்றிப் புகழும் உடையனவல்ல' என்று குறிப்பிட்டார். மக்கள் உலகில் பெறும் இன்பமெல்லாம் இல்லறத்தின் வாயிலாகவே இருத்தல் வேண்டும் என்று கருதினர் போலும் பரிமேலழகர். ஆனால் திருவள்ளுவர் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று குறித்தாரேயன்றி, 'இல்லறத்தான் வருவதே இன்பம்' என்று இயம்பினரல்லர். ஆதலின் மக்கள் பெறும் இன்பமெல்லாம் அறநெறியிலிருக்க வேண்டுமேயன்றி, அதற்குப் புறம்பான மறநெறியில் இருத்தலாகாது என்பதே வள்ளுவர் கருத்தாகக் கொள்ளுதல் பொருத்தமாகும். காம நுகர்ச்சி யொன்றை மட்டுமே இங்கு வள்ளுவர் இன்பமெனக் கொள்ளவில்லை என்பது அறிதற்பாற்று. இனி அறத்தால் வருவது என்றும் இன்பமே யன்றித் துன்பமில்லை. ஒருகால் அதனை யாற்றும் போது துன்பமாகத் தோன்றினும் பயன் இன்பமாகவே யமையும் என்ற கருத்தும் தோன்றுமாறு அத்தொடரை யமைத்தார் பொய்யில்

புலவர். கல்வி கற்பது ஓர் அறமன்றோ? 'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்-மடங்கொன்று அறிவகற்றுங் கல்வி' என்று குறிப்பிட்டார் ஒரு புலவர்.

ஒருவன் பெறத்தக்க செல்வங்கள் பலவற்றுள்ளும் தலையாய செல்வம் மக்கட் செல்வம். இதனை 'மக்கட் பேறு' என்று குறித்தார் திருவள்ளுவர். 'தம் பொருள் என்ப தம் மக்கள்' என்பது அவர் வாக்கு. மக்கட் செல்வமல்லாத பிற செல்வங்களைத் தாம் ஒரு செல்வமாகவே மதிக்கவில்லை யென்பார் அப்புலவர்.

> 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை ; அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற'

என்பது அவர் வாய்மொழி. 'யாம் அறிவதில்லை' என்று பெருமிதந் தோன்றத் தன்மைப் பன்மையில் கூறும் அவர் வாக்கில் மக்கட் பேற்றின் மாண்பு தக்காங்கு வலியுறுத்தப்பெற்றுள்ளது. நீண்ட நாட் பிள்ளைப்பேறின்றிப் பெருந்துயரடைந்த அருந்தமிழ்ப் புலவனும் அரசனுமாய பாண்டியன்அறிவுடை நம்பியின்,

> 'மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
> பயக்குறை யில்லைத்தாம் வாழும் நாளே'

என்ற அரிய வாக்கில் மக்கட் பேற்றின் அருமையினைத் தெளிவுறக் காண்கின்றோமன்றோ!

இத்தகைய பெறற்கரிய நன்மக்களின் மெய்யினைத் தீண்டல் உடற்கின்பமாகும்; மற்றவர்தம் சொற்கேட்டலோ செவிக்கின்பமாகும் என்றார் திருவள்ளுவர். ஒருவன் தான் பெற்ற பிள்ளைகளை எடுத்து முத்தமிடுவதிலும், அவற்றின் மழலை மொழிகளைக் கேட்பதிலும் அளவிறந்த இன்பத்தையன்றோ காண்கிறான்! தம் மக்கள் மழலைச் சொற்களைக் கேளாதவரன்றோ குழலிசையும் யாழிசையும் இன்பமானவை என்று இயம்புவர்! மக்களின் மழலை மொழி கேட்டவர் அதுவே மிக்க இன்பமானது என்று கூறுவர் என்றார் திருவள்ளுவர்.

> 'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'

என்பது அவர் கண்ட இரண்டு இன்பங்களைக் குறிக்கும் குறட்பாவாகும்.

கருக்கொண்ட பெண்ணொருத்தி பத்துத் திங்களாகத் தன் வயிற்றகத்தே குழந்தையைச் சுமந்து கருவுயிர்த்தாள், அப்போது பிறந்த குழந்தை ஆண்மகவென்றால் அவளுக்கோர் இன்பம் இசைகின்றது. அந்த இன்பத்தைத் திருவள்ளுவர், 'தன் மகனை ஈன்ற பொழுது உவக்கும்' என்று குறித்தார். 'அம்மகன் அறிவானும் குணத்தானும் ஒழுக்கத்தானும் நிறைந்தவன்' என்று பிறர் சொல்ல அத்தாய் கேட்பாளாயின் 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும்' என்று பேசினார்.

> 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்.'

இக் குறட்பாவினும் வள்ளுவர், மகற் பெற்ற தாய் பெறும் இரண்டு இன்பங்களைச் சொல்லியுள்ளார். இக்கருத்தையெல்லாம் விளக்கும் வகையில் எளிய நடையில் கவிஞர் பாரதியார் பாடியுள்ள பாக்கள் உள்ளத்தை அள்ளுவனவாகும்.

> 'உச்சிதனை முகந்தால்,— கருவம்
> ஓங்கி வளருதடீ!
> மெச்சியுனை ஊரார் — புகழ்ந்தால்
> மேனி சிலிர்க்குதடீ!
> கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
> கள்வெறி கொள்ளுதடீ!
> உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா!
> உன்மத்த மாகுதடீ!'

குழந்தை இன்பத்தில் திளைத்த கவிஞர் பாரதியார் 'கண்ணம்மா — என் குழந்தை' என்ற பண்ணமைந்த தமது பாட்டில் இவ்வாறு சொல்லிப் பரவசப்படுகின்றார்.

பிறர் இனிய சொற்களைப் பேசுங்கால் நமக்கு இன்பம் பிறக்கின்றது. இதனைத் திருவள்ளுவர் 'இன்சொல் இனிதீன்றல் காண்பான்' என்று குறிப்பிட்டார். இன்சொல் பேசுவானுக்கு உலகமே வயப்படும். அப்போது அவன் நல்லன எய்தி இன்புறுதல் ஒருதலையன்றோ! இங்ஙனம் இம்மையின்பம் எய்துதலேயன்றி மறுமையின்பமும் இன்சொல்லால் விளைவதாகும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற கள்ளமுடையார் உலகிற் பலர் உள்ளனர். அவர்கள் பேசும் சொற்களெல்லாம் கேட்பதற்கு இன்பமாகவேயிருக்கும். ஆனால் அவற்றின் பயன் துன்பமாக அமையும். அத்தகைய சொற்கள் இன்சொற்களாகா.

> 'இனியவர் என்சொலினும் இன்சொல்லே;
> துனியு மொழியுங் கடுவே' [இன்னா

என்ருர் ஒரு புலவர். இதனைத்தான் திருவள்ளுவர் 'சிறுமையுள் நீங்கிய இன்சொல்' என்ருர். அதுவே மறுமையும் இம்மையும் இன்பந்தரும் இயல்புடையது.

'சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்'

என்பது அவர் திருவாக்கு.

'ஒரு கன்னத்தில் அடித்தால் மற்ருெரு கன்னத்தையும் திருப்பிக் காட்டுக' என்பது இயேசு பெருமானின் அறவுரை. 'இன்ன செய்தார்க்கும் இனியவே செய்தல்தான் சால்பு' என்பார் திருவள்ளுவர். அதற்கு மேல் 'அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' என்றும் அறிவுறுத்துவார். 'தீங்கு செய்தவர் நாணுமாறு நன்மையினைச் செய்து, அவர் செய்த தீங்கினையும் தாம் செய்த நன்மையினையும் மறந்து விடுக' என்னும் பொன்னை உரையினை எங்ஙனம் போற்றுவது! தீங்கு செய்தவர்க்கு மாருக நாமும் தீங்கு செய்வதனுல், செய்த அன்றுமட்டும் நமக்கோர் இன்பம் இருப்பதாக நினைக்கிருேம். அஃது இன்பமன்று. அங்குப் பொறுமையைப் போற்றுவோமாயின் பொன்றுந் துணையும் புகழ் நின்று நிலவும் என்ருர் பொய்யில் புலவர்.

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.'

இக்குறட்பாவில் ஒருநாளை யின்பம் ஒன்றை எடுத்துரைத்தார் திருவள்ளுவர்.

சாதலைப் போன்று நோதக்க துன்பம் பிறிதொன்றில்லை யென்பது உலகறிந்த உண்மை. அத்தகைய சாதலும் ஒருகால் இன்பத்தை நல்கும் என்ருர் தெய்வப்புலவர். வந்தவர்க்கெல்லாம் வரையாது வழங்கிக் கொண்டிருந்த வள்ளல் ஒருவனுக்கு ஈதலைச் செய்ய முடியாத கொடிய வறுமை வந்து வாட்டத் தொடங்கி விட்டால் அந்நிலையிற் சாதலும் அவனுக்கு இன்பம் தரும் ஒரு செயலாகும் என்ருர் திருவள்ளுவர்.

'சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை'

என்பது அவர் திருவாக்கு. அருளுடையார் தம்முடைய பொருளை, இல்லாதவர்க்கு நன்கு வழங்கி, அவர்தம் மலர்ந்த முகங் கண்டு நிறைந்த இன்பம் எய்துகின்றனர். நெஞ்சத்தில் வஞ்சம் நிறைந்த வன்கண்மையுடையார் தம் பொருளை ஏழைகட்குத் தாராது தரையிற் புதைத்து வைத்துப் பின் இழந்து வருந்துவர், இக் கருத்தை.

'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
வைத்திழக்கும் வன்க ணவர்' [தாமுடைமை

என்ற குறளில் எடுத்துரைத்தார். எனவே ஈதலும் அஃது இயலாத நிலையிற் சாதலும் இன்பந் தருவன என்று காட்டினுர்.

பொருள்களைப் பெற வேண்டுமென்று உள்ளத்தில் மேன்மேல் நிகழும் ஆசையே 'அவா' எனப்படும். 'ஆசைக்கோர் அளவில்லை' யென்பார் தாயுமானவர். இதனைத் 'துன்பத்துள் துன்பம்' என்ருர் திருவள்ளுவர். மிக்க துன்பமாகிய அவா அறுமாயின் உடம்போடு நின்ற வழியும் இன்பம் இடையருது பெருகும் என்ருர் பெருநாவலர்.

'இன்பம் இடையரு தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்'

என்பது அவரது திருவாக்கு.

நவில்தொறும் நயந்தரு நூல்களைக் கற்றுணர்ந்த கலைவல்லார் தமது கல்வியால் இடையருத இன்பத்தை எய்துகின்றனர். அவர்கள் சிறந்த நூல்களைக் கற்கும் காலத்துச் சொற்பொருள்களின் சுவையினை நுகர்கின்றனர். பிறரால் புகழும் பொருளும் பூசையும் பெறுகின்றனர். எதிர்காலத்து அறமும் வீடும் அடைகின்றனர் இங்ஙனம் கற்றறிந்தார் இன்புறுதற்குக் காரணமாகிய கல்வியைக் கண்டு உலகம் இன்புறுகின்றது. இத்தகைய கலைவல்லாரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், 'யாண்டு பலவாக நரையிலமாயினேம்' என்றும் பிறர் இன்புறுகின்றனர். இச்சிறப்பினை யறிந்த கலைவல்லார் பின்னும் அக்கல்வியையே பெரிதும் விரும்புவர்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்பது வள்ளுவர் வாய்மொழி. இங்குக் கலைவல்லார் எய்தும் இன்பத்தையும், அவரால் உலகெய்தும் இன்பத்தையும் எடுத்துரைத்தார் வள்ளுவர்.

ஒருவன் உண்ட உணவு அற்றபடியைக் குறிகளான் அறிந்து, பின்பு உண்பானுயின்

அவன் உடம்புக்கு மருந்தே வேண்டுவதில்லை என்று கூறிய திருவள்ளுவர், ஒருவன் பெற்ற உடம்பை நெடுங்காலம் கொண்டு செலுத்தும் நெறியும் அதுவே என்றார். மேலும் வயிறு புடைக்க உண்ணாமல் குறைத்துண்பது நன்றென்று அறிந்து, அவ்வாறே உண்பவனிடம் இன்பம் நீங்காது நிற்குமென்றார். அளவுக்கு மிஞ்சி யுண்பானை அவர் மகனென்றே கருத வில்லை; கழிபேரிரையான் என்று கூறிக் குறிப்பாக அவனை விலங்கென அறிவுறுத்தினார். என்றும் பெருண்டி கொள்வான்பால் நோயே நீங்காது நிற்கும் எனவும் அறிவுறுத்தினர்.

> 'இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
> கழிபே ரிரையான்கண் நோய்.'

இப்பாவில் உணவால் விளையும் இன்பமொன்றை விளக்கினர் வள்ளுவர்.

இரத்தலைப் பற்றிக் கூற வந்த திருவள்ளுவர், 'இரவுள்ள உள்ளம் உருகும்' என்றார். இறக்கும் நிலையில் இருக்கும் ஆவினுக்கு நீர் வேண்டுமெனப் பிறர்பால் இரப்பினும் நாவிற்கு அதுபோல் இழிசெயல் பிறிதில்லை என்று பேசினர். அவரே 'இன்பம் ஒருவற்கு இரத்தல்' என்றும் குறித்தார். ஒருவன் இரந்த பொருள்கள், ஈவாரின் அருளுணர்வால் எளிதில் கிடைக்குமாயின் இரத்தலும் இன்பந் தரும் செயலே என்பது திருவள்ளுவர் கருத்து. அவ்வாறு கிடைத்தல் அருமை என்பதைப் புலப்படுத்துவாராய்த் 'துன்ப முறூஅ வரின்' என்று குறிப்பிட்டார். 'உறூஅ வரின்' என்ற அளபெடை அவ்வருமைப்பாட்டை இனிது விளக்குவதொன்றாம்.

> 'இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
> துன்ப முறூஅ வரின்'

என்பது அவர் வாய்மொழி.

இவ்வாறு தம் வாழ்விற் கண்ட பல்வேறு இன்பங்களையும் விளக்கிய வள்ளுவர், கருத்தொருமித்த காதலர் வாழ்விற் காணும் இன்பங்களையெல்லாம் வகுத்துரைக்கும் காமத்துப் பாலின் இறுதியில் — நூல் முடிவில் ஊடலும் கூடலுமாகிய இன்பங்களைக் கூறி, நூலை இன்பமாகவே முடிக்கின்றார்.

> 'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின்'

என்பது இறுதியிற் காணும் இன்பக் குறள்.


விளக்கற்றம் பார்க்கும் இருள்

விளக்கை அணைத்தால் இருட்டை வா என்று கூப்பிடவும் வேண்டுமா? விளக்கு அணைந்தது என்று இருட்டுக்கு எப்படித்தான் தெரிந்துவிடுமோ தெரியவில்லை. உடனே வந்து அப்பிக் கொள்கிறது. அது யாரும் கூப்பிடாமலே வந்து விடுகிறது. இல்லை. வந்துவிடும் என்று சொல்வது தப்பு. அது தானகவே தோன்றி விடுகிறது. விளக்கொளியில் அது சற்று மறைந்து ஒதுங்கியிருக்கிறது. தன் ஆற்றல் குன்றியிருக்கிறது. விளக்கின் ஒளி குன்றினுல் இருள் வலுப்பெற்று முன்னுல் தோன்றி விடுகிறது. இருளுக்கும் ஒளிக்கும் எப்பொழுதும் ஒரே ஓயாத போராட்டம்தான். ஒன்றையொன்று மிஞ்சுவதற்கு முயன்று கொண்டேயிருக்கும். வெளிச்சம் எப்பொழுது குன்றி மங்கி மறையும் என்று இருள் காத்துக் கொண்டே யிருக்கும். விளக்கொளி மறைந்தால் இருள் கதுமெனப் பாய்ந்து கவ்விக் கொள்ளும். இவ்வுண்மையைத் திருவள்ளுவர் எவ்வளவு அழகாகச் சுருக்கிக் கூறினர் தெரியுமா? "விளக்கற்றம் பார்க்கும் இருளைப் போல்" என்றார்.

—திரு கோ. சுப்பிரமணிய பிள்ளை, பி.ஏ., பி.எல்.,
(வள்ளுவர் விருந்து, 19)

வள்ளுவர் வகுத்த சட்டநெறி

[மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.]



இவர் 1922இல் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த அம்பா சமுத்திரத்தில் மாசிலாமணியாருக்கும் கைலாசத்தம்மையாருக்கும் புதல்வராய்த் தோன்றியவர். மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் சென்னைச் சட்டக் கல்லூரியிலும் பயின்று வழக்கறிஞராகவும், ஏழு ஆண்டுகள் மாவட்டத் துணை நடுவராகவும் பணியாற்றித் தற்பொழுது சென்னைச் சட்டசபைத் துறையின் துணைச் செயலராகப் பணியாற்றி வருகின்றார். இவர் நயம்பட இனிய தமிழில் எழுத வல்லவர். நுண்ணிய சட்டக் கருத்துக்களைப் பலருக்கும் பயன்படும் வண்ணம் தமிழில் வடித்துத் தரும் இவர் தொண்டு பாராட்டற்குரியது. 'குற்றமும் தண்டனையும்' என்ற இவருடைய நூல் மையஅரசினரின் பரிசு பெற்றது. சட்டவியல், தீங்கியல் சட்டம், 'அண்ணல் நேருவின் அமுத மொழிகள்' ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். 'குறள் கூறும் சட்ட நெறி' என்ற தொடர் கட்டுரையினைத் தற்பொழுது 'செந்தமிழ்ச் செல்வி'யின் வாயிலாக எழுதி வருகின்றார்.

''வள்ளுவர் கண்ட அரசியல்,'' ''வள்ளுவர் கண்ட பொருளாதாரம்,'' என்பன பற்றி அறிஞர்கள் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். நாம் இங்குக் காணவிருப்பது வள்ளுவர் கண்ட சட்டநெறி என்பதாகும் இன்றைய சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்கள் பல திருக்குறளில் ஊடுருவி நிற்பதைக் காணும்பொழுது நமக்கு வியப்பு மேலிடுகிறது. அத்தகைய தத்துவங்கள் சிலவற்றைக் காட்டும் முறையால் எழுந்ததே இக் கட்டுரை.

*   *   *   *

''குற்ற மனம் இன்றிக் குற்றம் இல்லை.'' என்ற விதி குற்ற இயல் சட்டத்தின் (Criminal Law) அடிப்படைக்கொள்கையாகும். தீய கருத்தோடு புரியப்பட்ட செயலால் விளையும் தீங்கே குற்றம் ஆகிறது. தீய கருத்து இல்லாத செயல்கள் பொதுவாகக் குற்றங்களாவதில்லை.

ஒருவர் தம் பகைவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுகின்றார். சுட்டவருக்குத் தூக்குத் தண்டனை யளிக்கப்படுகிறது. வேட்டையாடச் சென்ற நண்பர்களில் ஒருவர், விலங்கு பதுங்கியிருப்பதாக நினைத்து ஒரு புதரை நோக்கிச் சுடுகின்றார். அந்தப் புதரில் வேட்டைக்காக ஒளிந்திருந்த அவர் நண்பர் மீது குண்டு பாய்ந்து விடுகிறது! அந்த நண்பர் அதனால் இறந்து விடுகிறார். இப்பொழுது புதரை நோக்கிச் சுட்டவர்மீது கொலைக் குற்றம் சாட்டப்படுவது இல்லை. ஏனெனில், அந்தப் புதருக்குள் நண்பர் பதுங்கி யிருந்தது சுட்டவருக்குத் தெரியாது. எனவே, இதை எதிர்பாரா விளைவு (accident) என்றுதான் சட்டம் கொள்ளுகிறது.

பகைவரைச் சுட்டது கருதிச் செய்த செயலாகும்; அதனால் ஏற்பட்ட மரணம் கருதிய விளைவாகும். புதரை நோக்கிச் சுட்டதால் ஏற்பட்ட மரணம் கருதா விளைவு. இரண்டிலும் செய்வினை ஒரே தன்மையதுதான், விளைவும் ஒன்றுதான். ஆனால், முதற் செயல் குற்ற மனத்தோடு கூடியது, எனவே அது குற்றமாகிறது. இரண்டாவது செயல் குற்ற மனம் இன்றிச் செய்யப்பட்டது; எனவே, அது குற்றமாவதில்லை.

இதிலிருந்து தெரிவதென்ன? ஒரு செயல் குற்றம் ஆவதும், குற்றமாகாதிருப்பதும் அது என்ன கருத்தோடு (intention) செய்யப்பட்டது என்பதைப் பொறுத்ததேயாகும். ஒன்றைச் செய்பவரின் மன நிலையை வைத்தே அச்செயலின் குற்றத் தன்மை சட்டத்தில் நிச்சயிக்கப்படுகிறது. எனவே, செய்யப்படும் செயலைவிட அதைச் செய்பவரின் மன நிலையே முக்கியமாகிறது என்பது தெளிவாகும். (Before the law can justly punish the act, an enquiry must

be made into the mental attitude of the doer —Salmond.)

கருதி, மனத்தொடு செய்த தீங்கு குற்றமாகிறது; கருதாமல், மனம் ஒன்ருமல், செய்ததால் விளைந்த தீங்கு குற்றமாவதில்லை. இன்றைய சட்டத்தின் இந்த விதியை "இன்னு செய்யாமை" என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுகின்ருர்!

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணுசெய் யாமை தலை." (குறள் 317)

மனத்தால் எண்ணிச் செய்கின்ற இன்னுத செயல்களை எக்காலத்தும், எவருக்கும், எவ்வளவு சிறியதாயினும் செய்யாமையே தலையாய அறம், என்கிருர். "மனத்தானும் மாணு செய்யாமை", எனில் "ஒரு தீங்கைக் கருதிச் செய்யாதிருத்தல்" என்பது பொருள். "மனத்தானும் மாணு" என்பதற்கு "மனத்தொடு உளவாகின்ற இன்னுத செயல்கள்," என்று பேராசிரியர் பரிமேலழகர் உரை தருகின்ருர். கருதாத் தீங்கு குற்றமாவதில்லைபோல், மனத்தொடு இல்லாத இன்னுச் செயலும் இன்னுமை ஆவதில்லை. இதைத் தெளிவாகக் கூறும் வகையில், "ஈண்டு மனத்தானுகாதவழிப் பாவமில்லை என்பது பெற்ரும்" என்று விளக்கம் தருகின்ருர் பரிமேலழகர்!

மனத்தால் ஆகாத வழிக் குற்றம் இல்லை என்ற சட்ட விதியே, மனத்தால் ஆகாத வழிப் பாவமில்லை என்ற அறவிதியாகக் குறளில் இடம் பெறுகிறது!

* * * *

ஒரு செயல் என்ன கருத்தோடு (Intention) செய்யப்பட்டது என்பதைச் சட்டம் கவனிக்கிறது என்ருேம். கருத்தைத் தவிர, ஒரு செயலுக்கான நோக்கமும் இருப்பதுண்டு. எந்த எண்ணத்தால் உந்தப்பட்டு ஒரு செயலைச் செய்கின்ருேமோ அந்த எண்ணத்தைச் செயலின் "நோக்கம்" (Motive) என்கிருேம். பகைமையால் ஒருவர் கையை மற்ருெருவர் வெட்டி விட்டால், வெட்டிய செயலின் நோக்கத்தைப் பகைமை என்று கூறுகிருேம். ஒரு சிறுமி அணிந்திருக்கும் நகையைக் கைப்பற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு ஒருவன் அந்தச் சிறுமியைக் கொன்று விடுகிருன். இப்பொழுது நகையைப் பற்ற வேண்டும் என்ற ஆசை அந்தக் கொலைச் செயலின் நோக்கமாகிறது. இவ்வாறு, கருதிச் செய்யும் செயலுக்கு நோக்கமும் இருப்பதுண்டு.

சட்டம் ஒரு செயலைக் குற்றம் என்று தீர்மானிப்பதற்கு முன் அது என்ன கருத்தோடு (intention) செய்யப்பட்டது என்பதையே ஆய்கின்றது; அது எந்த நோக்கத்துடன், குறிக்கோளுடன் (motive) செய்யப்பட்டது என்பது பற்றிச் சட்டம் கவனிப்பதில்லை.

(The law will judge a man by what he does, not by the reasons for which he does—Salmond.

At common law, the motive of the accused is not a necessary element of his liability, and therefore, the prosecution has no need to prove what his motive may have been—Austin)

கோவில் கட்டும் நோக்கத்துடன், அதற்குப் பணம் வேண்டும் என்று கொள்ளையடித்தால் அச் செயலைச் சட்டம் மன்னிப்பதா? இல்லை. கோவில் கட்டும் நோக்கம் நல்லதுதான். ஆனல், கொள்ளையடித்த செயல் தீங்கானது. நோக்கம் நல்லதாக இருப்பதால், தீங்கான செயலின் குற்றத் தன்மை மறைந்து விடுவதில்லை. எனவே, எந்த நோக்கத்தோடு கொள்ளையடித்தாலும், அது குற்றந்தான்.

சட்டம் இவ்வாறு இல்லையெனில் ஒவ்வொரு குற்றவாளியும் தாம் செய்யும் குற்றச் செயல்களுக்கு ஒரு நல்ல நோக்கத்தைக் கற்பித்துத் தண்டனையிலிருந்து தப்ப முயலுவார்கள்.

நோக்கம் எவ்வளவுசிறந்ததாயினும், பழிச் செயல் பழியுடையதுதான் என்பதை, வள்ளுவர் உள்ளத்தைத் தொடும் ஒரு உதாரணத்தைக் கூறி விளக்குகிருர்!

"ஈன்ருள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை." (குறள் 656)

நம்மிடம் இருந்த பணப்பையைத் திருடிய ஒருவன், "என்னுடைய தாயார் பசியால் வாடுகிருள். என் கையில் பணமில்லை. அவளுக்கு உணவு வாங்குவதற்கென்றே நான் திருடினேன்," என்று நீதி மன்றத்தில் கூறுகிருன். அவன் கூறியது உண்மை என்றும் தெரிகிறது. இதை வைத்துச் சட்டம் அவனை விடுதலை செய்கின்றதா? இல்லை. திருடிய குற்றத்திற்குரிய தண்டனையை அவன் அடைந்தே தீர வேண்டும்.

திருடியது கருதிய செயலா (intended act) என்பதைத்தான் சட்டம் கவனிக்கிறது. அது எந்த நோக்கத்துடன் (motive) செய்யப்பட்டது என்பது முக்கியமன்று. எனவே, திருடியவன் குற்றவாளியே ஆகிறான்.

ஈன்ற தாய்க்கு உணவளிப்பது ஒருவனது தலையாய கடமைதான். அதற்கென முயலுவதும் உயர்ந்த நோக்கந்தான். எனினும், இந்த உயர்ந்த நோக்கத்திற்கெனத் திருடும் பழிச் செயலை, சான்றோர் பழிக்கும் குற்றச் செயலை, ஒருவர் செய்தல் கூடாது. இதையே குறள் கூறுகிறது.

நோக்கம் நல்லதாக (good motive) இருந்தால் "மனத் தூய்மை" என்கிறோம்; கருதிய வினை சான்றோரால் பழிக்கப் பெறாததாக இருந்தால் அதை "வினைத் தூய்மை" என்கிறோம். நல்ல நோக்கத்தால், மனத் தூய்மையால், மட்டும் பலனில்லை; கருதிச் செய்யும் வினையும் தூய்மையுடையதாக இருத்தல் வேண்டும் கருதிய வினையின் தூய்மையே முக்கியமானது என்பதை இடித்துக் கூறும் வகையில், மேலே கூறப்பட்ட குறள் "வினைத் தூய்மை" என்ற அதிகாரத்தில் வருகின்றது!

ஒரு செயலில் அடங்கியுள்ள கருத்தே (intention) முக்கியமானது, அச் செயலுக்கான நோக்கம் (motive) முக்கியமானதன்று, என்ற இன்றைய சட்டக் கருத்தை வள்ளுவர் கூறியுள்ள நயம் சிந்தித்துச் சிந்தித்துத் திளைக்கற்பாலது.

* * * *

இன்னுமொரு சட்டக் கருத்தைக் காண்போம்.

"உண்மையே பேச வேண்டும்," என்பது ஒழுக்க நெறி. ஆனால், உண்மை பேசாதவர்களையெல்லாம் சட்டம் தண்டிப்பது இல்லை. ஒருவர் கூறிய பொய்ம்மையால் பிறருக்குத் தீங்கு விளைந்தால் மட்டுமே அது சட்டப்படி குற்றமாகிறது.

நம் வீட்டிற்கு எதிர்பாராத வேளையில் வந்த நண்பரை உணவருந்த அழைக்கின்றோம். அவர் இன்னும் உணவுண்ணவில்லை தான். இருப்பினும், எதிர்பாராத நேரத்தில் அவர் வந்ததால் நமக்கு இடைஞ்சல் ஏற்படக் கூடாது எனக் கருதி, "நான் உணவருந்திவிட்டேன்," என்று கூறுகிறார். இவ்வாறு அவர் கூறியது பொய்தான். இருப்பினும் இது குற்றமாவதில்லை. ஏனெனில், இப் பொய்க் கூற்றால் எவருக்கும் தீங்கு விளையவில்லை தங்கமுலாம் பூசிய நகை ஒன்றைத் தங்க நகைதான் என்று கூறி ஒருவர் நம்மிடம் விற்றால் அது குற்றச் செயலேயாகும். காரணம், அவரது பொய்க் கூற்று நமக்குக் கேடு பயக்கிறது. ஆதலால், அதை "ஏமாற்றுதல்" (Cheating) என்ற குற்றமாகச் சட்டம் கொள்ளுகிறது. இவ்வாறு, தீமை விளைவிக்கும் பொய்க் கூற்றைச் சட்டத்தில் Injurious Falsehood என்பார்கள்.

நிகழ்ந்தது கூறுவதை மெய்ம்மை என்கின்றோம்; நிகழாததைக் கூறுவது பொய்ம்மையாகிறது. பொய்ம்மைக்கு எதிர்ச் சொல்லாக வாய்மையைக் கூறுகிறது குறள். சட்டத்தைப் பொறுத்தவரை, நிகழ்ந்தது கூறல் வாய்மையாகவும், நிகழாதது கூறல் பொய்ம்மையாகவும் ஆவதில்லை. மெய்ம்மையான செய்தியையே நாம் கூறலாம். அதனால் ஒருவருடைய புகழுக்குக் கேடு விளைந்தது எனில் அது "அவதூறு" (Defamation) என்ற குற்றம் ஆகிறது. பொது நன்மை பயவாத ஒரு மெய்க் கூற்றினால் ஒருவருடைய புகழுக்கு இழுக்கு விளைந்தால் அது குற்றமேயாகும். (குற்ற இயல் சட்டம் 499 வது பிரிவு.) எனவே, மெய் கூறுவது அனைத்தும் சட்டப்படி வாய்மையாகி விடுவதில்லை என்பதைக் காணுகிறோம்!

சட்டம் ஒரு கூற்றை வாய்மை எனக் கருதுவது எப்பொழுது? அது எவருக்கும் தீங்கு பயவாத பொழுதுதான். ஒரு கூற்றினால் பிறருக்குத் தீங்கு விளைவது கூடாது. அந்த நிலையில்தான் அது வாய்மையாகிறது. அந்தக் கூற்று நிகழ்ந்ததா, நிகழாததா என்பது பற்றிச் சட்டம் கவனிப்பது இல்லை. அது நிகழ்ந்ததாயினும் சரி, நிகழாததாயினும் சரி, பிறரைக் குறிக்கும் அவதூறாக இருந்தால், அது குற்றமேயாகும் இது இன்றைய சட்டம்.

வாய்மைக்கு இலக்கணம் கூறவந்த வள்ளுவர் இன்றைய சட்டத்தையே கூறியிருக்கின்றார்:

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (குறள் - 291)

வாய்மை என்று சிறப்பித்துக் கூறப்படுவது பிறருக்குத் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதல் என்பதே இதன் கருத்து.

இந்தக்குறளின் உட் பொருளை நன்குணர்ந்த ஆசிரியர் பரிமேலழகர் இதனை விளக்கிக் கூறும் முறை நம் சிந்தனையைக் கிளரும் பெற்றிமை யுடையதாகும். "இதனுல் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாம் என்பது கருத்து," இவ்வாறு இக் குறளின் பொருளை நமக்கு எடுத்துக் காட்டுகிருர் உரையாசிரியர்.

"நிகழ்ந்தது கூறல் நீக்கப்பட்டது" என்று உறுதியோடு கூறி, நிகழ்ந்ததைக் கூறுதல் மட்டும் வாய்மையன்று என்கிருர். பின் எது வாய்மை? தீமை பயவாத சொல்லே வாய்மை! சட்டம் கூறுவதும் இதுவேதான் என்று காணுகிருேம்!

நிகழ்ந்ததைச் சொல்லுதல் வாய்மை, நிகழாததைச் சொல்லுதல் பொய்ம்மை என்று கூருமல், எவருக்கும் தீமை பயவாச்சொல் வாய்மை, தீமை பயக்கும் சொல் பொய்ம்மை என்ற கருத்து எவ்வளவு புரட்சிகரமான கருத்து! ஆனுல், இது வாழ்வின் நடைமுறைக்கு உகந்த கருத்து! இந்தக் கருத்தே இன்றைய சட்ட விதியாக இலங்குகிறது!

* * * *

"அறம்" என்ற சொல்லுக்கு வள்ளுவர் வகுத்திருக்கும் இலக்கணம் அவருக்கு முன் எவராலும் கூறப்படாததாகும்.

இன்சொல்லை நம் புலவர் அறம் என்கிருர்; இல்வாழ்க்கையை அறம் என்கிருர். சொல் வன்மை அறம், அன்புடைமையும் அடக்கமுடைமையும் அறம். நல்லவையெல்லாம் அறம், அல்லவை யெல்லாம் அறமற்றவை. எல்லோருக்கும் நல்லது அறம்; தீயது அறமன்று. அறம் என்பது கருத்திற்கெட்டாதது என்றும், தெய்வ நூல்களில் சொல்லப்பட்டதே அறம் என்றும் கூருமல், நல்வினைகள் எல்லாம் அறத்தின்பாற்பட்டவை என்று தெளிவாகக் கூறுகின்ருர்.

மக்களின் இசைந்த வாழ்விற்கு, சமுதாயத்தின் சீரான அமைப்பிற்கு, அறவொழுக்கமே அடிப்படை என்கிருர். அறம் இன்றி இன்ப வாழ்வு இல்லை என்பது வள்ளுவரின் உறுதியான கருத்து. "அறத்தால் வருவதே இன்பம்", என்பது அவர் அறுதியிட்டுக் கூறும் உண்மை.

மக்களின் அன்ருட இன்ப வாழ்வோடு அறத்தை இணைத்துக் காணும் வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நூலிலே, மக்களின் இசைந்த வாழ்விற்கான இனிய ஒழுக்க விதிகளையே அறவிதிகளாகக் காணுகிருேம் மக்களின் இசைந்த நடத்தைக்கும் இனிய வாழ்விற்கும் வழிகளை வகுப்பது சட்டம். மக்களின் நலன்களைப் பேணி அவர்களின் இன்பத்தைக் காப்பதுவே சட்டத்தின் குறிக்கோளாகும். எனவே, வள்ளுவர் வகுத்த அறநூலில் தெள்ளிய சட்டக் கருத்துக்கள் பல திறம்பட அமைந்திருக்கின்றன.


கள் உண்பதும் களவு செய்வதும் பிறனில் விழைவதும் பாவமென்று உலகிலுள்ள பல ஒழுக்க நூல்களிற் காணுகிருேம். கள்ளுண்பது ஒரு நாட்டில் குற்றமாகவும், மற்ருெரு நாட்டில் குற்றமற்ற செயலாகவும் இருக்கிறது. ஆனுல், திருக்குறளில் நாம் காண்பவை சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்கள், ஆதாரக் கொள்கைகள் (Fundamental legal concepts). "குற்ற மனம் இன்றிக் குற்றமில்லை," "தீங்கு பயவாத பொய்ம்மை குற்றமாவதில்லை", என்பன போன்ற சட்டக் கருத்துக்கள் உலக நாடுகளின் சட்டங்கள் அனைத்திற்கும் பொதுவானவை, அடிப்படையானவை. இவைபோன்ற அடிப்படைக் கருத்துக்களை மற்ற ஒழுக்க நூல்களில் காண்பது அரிது.

மேலே கூறியதைப் போன்று இன்னும் பல சட்ட விதிகள் திருக்குறட் கடலிலே ஆழ்ந்து கிடக்கின்றன. அந்தக் கடலில் மூழ்கி அம் முத்துக்களை எடுத்து மாலையாகப் புனைந்து கண்டால், அது வள்ளுவரின் திருவடியை வழுத்தும் முறையாகும். குறளின் பெருமையைக் குறைவின்றிக் காண்பதாகும்.

மறைத் தமிழ்

['திருக்குறள் பீடம்' குருகுலம் அழகரடிகள்]

இவர் தோன்றியது ஏப்ரல் *1904*. மறைமலையடிகளாரிடம் முறையாகப் பாடம் கேட்டுப் புலமை யெய்தியவர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பணியாற்றி அரிய நூல்களை இயற்றியுள்ளார். மறைமலையடிகளார் தனித் தமிழைப் பேணிவளர்க்க முந்திய பொழுது அவர்களுக்கு உறு துணையாய் இருந்தவர். பல அரிய நூல்களுக்கு உரை யியற்றியுள்ளதோடு நல்ல உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். திருக்கோவையாருக்கும் திருக்குறளிற்கும் தெளிபொருள் விளக்கங்களுடன் அழகரடிகள் ஆற்றி வந்துள்ள சொற்பொழிவுகள் சைவத்திற்கும் தமிழிற்கும் சிறப்பாகச் செய்யப்பட்ட தொண்டுகள். திருவள்ளுவர் கருத்துக்களை உலகிற் பரப்பும் நன்னோக்கத்தோடு "திருக்குறட் பீடம்" ஒன்று அமைத்துள்ளார். கிழமைதோறும் குறள் விரிவுரையாற்றி அவ் விரிவுரையினையே கடித வடிவில் எழுதித் "திருக்குறள் கடிதங்கள்" என்ற தலைப்பில் சிறு சிறு நூலாக வெளியிட்டு வருகின்றார்.



உலகுக்குக் கிடைத்திருக்கும் தமிழ்ச் செல்வங்களில், மறைத் தமிழ் என்று சிறப்பிப்பதற்குப் பெருமையுடன் பழமையும் பொருந்தியது திருக்குறள்! இது, 'தமிழ் மறை' என்றே போற்றப்பட்டு வருகிறது.

திருக்குறள் வேதநூல்:

இது, 'பொது மறை' என்றும் பெயர் பெற்றிருக்கிறது; வேதநூல் என்னுங் கருத்தில் வேறு பல பெயர்களும் இதற்கு உண்டு. இதன் பெயர்களிற் பெரும்பாலானவை, 'வேதம்' என்னுங் கருத்திலேயே வழங்குகின்றன. இதனால், நம் முன்னோர் திருக்குறளை 'வேதம்' என்றே மதித்துப் போற்றி வந்திருத்தல் தெரிகிறது.

இலக்கிய நூல், கலைநூல், நீதிநூல் முதலிய பலதுறைப் பெருமைக்கும் பெயர்களுக்கும் திருக்குறள் சிறந்ததேயாயினும், 'வேதம்' என்பதற்கே அது தலைசிறந்த பொருத்தத்துடன் திகழ்கின்றது.

இலக்கியமும் மறையும்:

இலக்கிய நூல், பல கலைகளின் தொகுப்பு; நீதிகள் அதனில் மின்னிக்கொண் டிருக்கும்; ஆனால், மறை நூல் என்பது, இலக்கியமும் பின்பற்றுதற்குரிய தலைமை வாய்ந்தது. இலக்கியத்திற்கு எட்டாதது; இலக்கியத்திற்குத் தான் வரம்பாயது, பல துறை நூல்களும் இலக்கியத்தில் அடங்குமென்றால், இலக்கியம் மறைநூலில் அடங்கிவிடும். இங்ஙனம் நூல்களில் தலைமையானது திருக்குறள் மறை! அதனை இலக்கியம் அல்லது நீதிநூல் என்பதெல்லாம் அதன் மாட்சியை நிறைவாய்க் காட்டுவதாகாது.

'இலக்கியம்' என்னும் பெயரில், குறிக்கோள் கருத்து ஒலிக்கிறது. குறிக்கோள் வாழ்க்கையிலேதான், இன்பம் துன்பம் வியப்பு வீரம் வெகுளி அச்சம் இழிவு களிப்பு என்னும் மன உணர்ச்சிகளாகிய எண் சுவைகள் தோன்றும். இவை இலக்கியச் சுவைகள் என்றே கூறப்படும்.

'மறை' என்பது, தன்னலக் குறிக்கோள் முற்றும் அற்றுத் தலைவன் கருத்தே தன் கருத்தாக, அந் நடுவுநிலைப் பண்பில் நின்றொழுகும் சான்றாண்மையில் தோன்றுவது. திருக்குறள் அத்தகையது! இது நடுவுநிலை யுணர்வு ஒன்றே சிறப்பாக உடையது.

நடுவுநிலை யுணர்வு என்பது, மன உணர்வையும் உயிருணர்வையுங் கடந்து உயிர்க்குயிராகிய இறையுணர்வு என்னும் மெய்யுணர்வைக் குறிக்கும். இதனை அருளுணர்வு என்றுங் கூறலாம்; இந்த நடுவுநிலைப் பண்பினாலேதான்

திருக்குறள் தலைசிறந்த திருமறையாய்ப் பொது மறையாய்த் திகழ்கின்றது !

அறநூல் என்பது நீதிநூலன்று :

வேதநூல் என்றாலும் அறநூல் என்றாலும் பொருந்தும். வேதம் உரைத்தலும் அறம் உரைத்தலும் ஒன்றே! அறம் பொருள் இன்பம் வீடு உரைத்தலையே அறம் உரைத்தல் என்றும் கூறுவதுண்டு. நீதி மட்டுமன்று அறம், நீதியினும் மேம்பட்டது அறம். 'அறம்' வேறு 'நீதி' வேறு என்பது, "அறநூலும் நீதி நூலும் சொல்லும் நெறி" என்னும் பரிமேலழகர் உரைக் குறிப்பாலும் (திருக்குறள் உரை 39 : 8-உரை) தெளியப்படும்.

எழுதா மறையும் எழுது மறையும் :

அறத்தை உணர்வால் உணர்த்தும் போது அஃது எழுதா மறை எனப்படும்; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கில், முற்றிலும் உணர்வாலேயே உணர்த்த உணர்ந்து அமையக்கூடியது வீடு; ஆனால், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று மட்டும், எழுத்தாலும் சொல்லாலுங் கூட உணர்த்தவும் உணரவும் முடியும். அப்படி எழுத்தால் உணர்த்தக் கூடியதாதலின் அது, 'எழுது மறை' எனப்பட்டது. வீடு அவற்றில் குறிப்பாய் அமைந்திருக்கும். திருக்குறள் அத்தகைய 'எழுது மறை' யாகும்.

ஆதி வேதம் :

உலகத்தின் எழுது மறைகளில் திருக்குறள் தான் முதல் நூல்; "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூல்" என்னும் தொல்காப்பியத்துக்கு ஏற்ற முதல் நூல் இது; திருக்குறள் அருளிய திருவள்ளுவரை நினைந்துதான் இந்நூற்பாவைத் தொல்காப்பியர் இயற்றினரோ என்றும் எண்ணுதற்கு ஏற்ற தகுதி மிக்கது! எழுது மறையில் ஆதி வேதம் இங்ஙனம் திருக்குறளாக மக்களுக்கு அமைந்திருக்கிறது!

திருக்குறள் முப்பால் நூலாயினும், நான்கு கூறும் மறைந்த பொருளுமாக அமைந்த நான்மறையாகவும் மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" "மூன்றெனப் பகுதி செய்து பெறலரிய நாலும் மொழிந்த பெரு நாவலர்" "முப்பாலின் ஓதும் தரும முதல் நான்கும் சாலும்" என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களால் (19, 22, 44) இது தெளிவாகும்.

வேதமும் அங்கமும் :

நான்மறைத் தமிழாகத் திருக்குறள் விளங்குவதோடு, தனக்கு அங்கங்கள் ஆறும் இனிது பெற்றிருக்கிறது. நாற் பொருளில், வீடு அங்கம் உடையதன்று; மற்ற மூன்று பொருள்களும் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு அங்கங்களாக மொத்தம் ஆறு அங்கங்கள் உடையன. அறம் என்பதில் 'இல்லறம்' 'துறவறம்' என்னும் இரண்டும், பொருள் என்பதில் 'அரசியல்' 'குடியியல்' என்னும் இரண்டும், இன்பம் என்பதில் 'களவியல்' 'கற்பியல்' என்னும் இரண்டுமாகத் திருக்குறளில் ஆறு அங்கங்கள் முக்கியமானவை.

அங்கம் என்பது, கருவியாயுள்ள உட்பிரிவை உணர்த்தும்; ஒன்றின் அங்கம் அதனிற் புறம்பானதன்று. உடம்பின் அங்கங்கள் உடம்பின் பிரிவுகளே; உடம்புக்கு வேறானவை அன்று; அங்கங்களை வேறாக்கிவிட்டால் அவற்றிற்கு வேறாக உடம்பென்பது ஒன்றில்லை. அப்படித்தான் வேதத்துக்கு அங்கம் என்பதும்; வேதத்தின் அங்கம் வேதத்தின் உட்பிரிவுகளே; துணையான புறப் பிரிவுகளல்ல, புறப் பிரிவுகளாகிய கருவிகள் துணைக்கருவிகள் என்னும் பெயர்க்கே பொருந்தும். அத்தகைய வேறு கருவி நூல்கள் அங்கம் என்னும் பெயர்க்கு ஏற்றன அல்ல.

அறம் பொருள் இன்பம் கூறும் முப்பால் நூல், உடம்பு போன்றது; குறிப்பால் உணரப்படும் வீடு என்பது, நுணுகி அறியப்படும் உயிரை ஒக்கும், உடம்புக்குத்தான் கை கால் முதலிய அங்கங்கள் கூறப்படும்; உயிர்க்கு அங்கம் இல்லை; அதனால்தான், நாற்பொருளாகிய நான்மறைக்கும் அங்கங்கள் என்பன, முப்பாலுக்குரிய ஆறு என்பது. "நான் மறை ஆறங்கமானாய்" என்று திருமுறை அருட்குரவர் அருளிச் செய்ததன் கருத்தியைபு இங்கு நினைவு கூரப்படும்.

திருக்குறள் அகச் சான்று மறை :

இத்தகைய வேத வேதாங்கமாகிய திருக்குறள் என்னும் நான்மறை முதல் நூல், ஒருவரே ஒரு காலத்தில் இயற்றிய ஒரே நூலாய் உலகுக்குக் கிடைத்திருக்கிறது; சிறிதும் சிதைவின்றிப் பல்லாயிர ஆண்டுகளாக நல்ல தமிழில் நிலைத்த தமிழில் ஆற்றலாய்க் கிடைத்திருப்பதுடன், உலகப் பொது மறையாகவும் ஓங்கி விளங்குகிறது! ஆசிரியரே தம் வாய் மொழி

யால் அமைத்த அகச் சான்று நூலாகவும் திகழ்கின்றது. உலகத்தில் வேறு எந்தப் பழைய மறை நூலும் இத்தகைய அகச் சான்று மறையாய் அமையவில்லை.

ஜனகர், யாக்ஞவல்கியர், கிருஷ்ண பரமாத்மா, ரிஷபதேவர், புத்தர், கிறித்து, முகமது முதலிய அறவுரைச் செல்வர் பலரும் அருளியன எனப்படும் உரைகள், வாய்மொழிகளாக மரபு வழி வெளிப்பட்டன என்பர்; திருவள்ளுவர் தமிழ் மறை அத்தகைய தன்று ; திருவள்ளுவரே இயற்றிய அகச் சான்று மறை!

திருக்குறளின் தனிச்சிறப்பு :

மேலும், இங்கே எடுத்துக் காட்டப்பட்ட பன்மொழி அருட்குரவரின் உலக வேதங்கள் எல்லாவற்றிற்கும் திருக்குறள் பழமை மிக்கதாயும் பொதுமையுடையதாயும் திகழ்கின்றது. அதோடு அது, வாழ்க்கை முறையில் அமைந்த, இயற்கைத் திருமறையாகவும் இலங்குகின்றது; வாழ்க்கை முறையிலும், ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பும் அவரைப் பற்றிய எவ்வகை யுண்மையும் நிகழ்ச்சியும் தினைத்தனையும் விரவாததாய், மாந்தர் எல்லாருடைய நல்வாழ்க்கைக்கும் பொதுவில் உரிய ஒப்புயர்வற்ற நாகரிகமான அடிப்படை மங்கலக் கருத்துக்கள் மட்டும் நிறைவாகப் பொருந்தியதாய் ஓங்கி விளங்குகின்றது !

திருக்குறளின் பழமை :

திருக்குறளின் பழமையை ஆராய ஆராய, அது தமிழின் பழமையை ஆராய்வதைப் போல் உள்ளது. இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ்ச் செல்வங்கள் எல்லாவற்றிற்கும் திருக்குறள், முந்துநூலாகப் பழமை காட்டிச் செல்கின்றது. திருக்குறளின் பழமையை ஆராயும் ஆசிரியரிற் பெரும்பான்மையோர், அது, கிறித்துவின் தோற்றத்துக்கு முந்தியது என்னும் முடிவில் ஒருமைப்பாடு கொண்டிருக்கிறார்கள். கிறித்துவுக்குமுன் எவ்வளவு காலம் முந்தியது என்பதில், பலர் பல கருத்துடையவராய் இருக்கின்றனர். காரணம், கிறித்துவின் தோற்றத்துக்குப்பின் வரலாற்றுக் கருத்துக்கள் ஓரளவு செப்பங் கொண்டிருப்பது போல், அதற்கு முன் அவை அமையாமையே ஆகும். மிக நீண்ட பழமையில் அச் செப்பம் காண்பது அரிதென்பதையும் அறிஞர் அறிந்தேயிருக்கின்றனர்.

ஆயினும், கிடைத்த வரையில் வரலாற்றமைவுகளை வைத்துக் கொண்டு மேன்மேலும் ஆராய்ந்து செல்வது, நன்மையே பயக்கும் ; கடமைச் சிறப்பைக் காட்டுவதோடு, இம்முயற்சியுடையார் இகழ்ச்சியடையாதபடி திருவினை ஆக்குதலும் உறுதியே ; அங்ஙனம் முயன்றால், உலகத்திற் காணக்கூடிய பழமைக்குரிய சான்றுகளில், தமிழும் தமிழிலக்கியங்களும், தமிழரசும், தமிழ் நாகரிகமும் முக்கியமும் செல்வாக்கும் உயிர்ப்பும் தலைமையுங் கொண்டிருப்பதால், திருவள்ளுவர் தோற்றத்திலிருந்தாவது தமிழகத்தின் வரலாற்றையேனும் செப்பம் காண்பதில் உலகம் வெற்றி காண முடியும் என்று கருதலாம்.

திட்டப்படுத்தப்பட்ட 'பாரத' காலம் :

கிறித்துவுக்கு முந்தியது, நமது நாட்டின் வரலாற்றுச் சிறப்பமைந்த மாபாரதம் என்னும் இதிகாசம்! இருக்கு முதலிய வேதப் பாடல்களை ஒரு முறைப்படுத்தி வகுத்தளித்ததனால் 'வேத வியாசர்' எனச் சிறப்புப்பெயர்பெற்ற முனிவரே, பாரதத்தின் ஆசிரியருமாவர். இதனால், இவர் பாரதம், 'வியாச பாரதம்' என்றுங் கூறப்படும். 'இருக்கு' முதலியவற்றை வகுத்த வியாச முனிவரே பாரதத்தையும் இயற்றினதாலும், இருக்கு முதலிய வேதங்களின் கருத்துக்களும் அவ் வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களின் உண்மைகளும் அவ்வுபநிடதங்களின் பிழிவெனப்படும் பகவத் கீதையும், வேதாந்த சூத்திரமும் பாரதத்தில் விரவியிருப்பதனாலும், பாரதத்தை ஐந்தாம் வேதமென்றும் சொல்வதுண்டு. ஆகவே, இருக்கு முதலிய வேதங்களின் பாகுபாடுகள், உபநிடதங்கள், கீதை, வேதாந்த சூத்திரம் முதலியவற்றின் காலங்கள் பாரதம் இயற்றிய வியாச முனிவரின் காலத்தை, (கி. மு. 3102) சூழலிட்டுக்கொண் டிருக்கின்றன என்பது துணியப்படும். சமஸ்கிருதத்தில் வால்மீகி முனிவர் ஆதி கவி என்று போற்றப்படுவதனால் அவரியற்றிய இராமாயணம் வியாச பாரதத்திலும் பழமையுடையதாகக் கருதப்படுகிறது.

வியாச முனிவர் இருக்கு முதலிய வேதங்களை வகுப்பதற்கு முன், ஆதியூழியின் அந்தத்தே தொல்காப்பியம் தோன்றியதென்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார், (தொல், எழுத்து, பாயிரம் ; கற்பியல், 4); ஆதலால் அடுத்த ஊழியின் நிகழ்ச்சியில் வைத்துக் கூறப்படும் இராமாயணத்துக்கும் தொல்காப்

பியம் பழமையுடையதென்று தெரிந்துகொள்ளலாம். தொல்காப்பியம் இடைத் தமிழ்ச் சங்கத்துக்கு இலக்கண நூல் என்று களவியல் உரை கூறும். தொல்காப்பியர்க்கு ஆசிரியர் அகத்தியர்; இடைச் சங்க காலத்திலும் பொதிய மலையில் விளங்கியவர் என்ப.

காகந்தியும் காவிரியும்:

அகத்தியர், ஒருகால் தெற்கு நோக்கிப் புறப்பட்டபோது "கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு" வந்தார் என்று அவர் வரலாற்றில் ஒரு குறிப்பு வருகின்றது. காந்தன் என்னும் சோழ மன்னன் ஒருவன், ககந்தன் என்னும் தன் வைப்பு மகனைத் தன் சார்பில் அரசாளும்படி செய்து விட்டுக் குடகு சென்று தங்கியிருந்த காலத்தில், இந்த அகத்தியர் குடகு மலையில் வந்திருப்பது தெரிந்து அவருடன் பழகியிருந்து, அவர் உதவியால் காவிரியைச் சோழ நாட்டில் தோற்றுவித்து நிலவச் செய்தான் என்று மணிமேகலை (பதிகம் 9-14) குறிக்கின்றது.

காவிரியாறு கிழக்கே பெருகி வந்து கடலோடு கலக்கத் தொடங்கியபின், அதற்குமுன் அக் கடல்முகத்தில் 'ககந்தன்' பெயரால் 'காகந்தி' என்னும் பெயரில் இருந்த ஊர், காவிரிப்பூம்பட்டினம் என்று பெரிய நகரமாக ஓங்கியது. அது, ககந்தன் ஆட்சியின் கடைசி காலம்; அதாவது வயது வந்த அவன் பிள்ளைகளின் காலமாய் இருந்த தென்பது மணிமேகலையில் வரும் குறிப்புக்களிலிருந்து தெரிகிறது. (மணிமேகலை, சிறைசெய் காதை).

இதனால், ககந்தன், தொல்காப்பியர், அகத்தியர் என்போர் காலத்திலேதான் காவிரியாறு தென்னாட்டில் தோற்றமுற்றுப் பெருகியதென்பதும், இவரெல்லாம் ஏறக்குறைய ஓரே காலத்தவர் என்பதும், களவியல் உரையில் வரும் கணக்குப்படி அக்காலம் இற்றைக்கு 7500 ஆண்டுகட்கு முற்பட்ட தலைச்சங்க காலத்தின் இறுதியும் இடைச் சங்க காலத்தின் தொடக்கமுமாம் என்பதும் விளங்கும்.

ககந்தன் காலத்தில் திருக்குறள் அறிவுரை:

இக் ககந்தன் காலத்துக்கும் அதாவது தொல்காப்பியர் காலத்துக்கும் முற்பட்டது திருக்குறள் என்பதை, மணிமேகலையின் ஆசிரியர் சாத்தனார், ககந்தன் காலத்து மருதியெனும் ஒரு மாதுக்குத் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்னும் திருக்குறட் செய்யுள் அறிவுரையாக எடுத்துக்காட்டப்பட்டது என்று கூறுங் குறிப்புக் கொண்டு அறிந்து கொள்ளலாம் (சிறைசெய் காதை 55-61). அக்காலத்துப் பொது மக்களிடமும் எளிதில் எடுத்துப் பேசும்படி அவ்வளவு பெருகிய வழக்கிலும் வேத மதிப்பிலும் வழங்குவதற்குத் திருக்குறள் ககந்தன் காலத்துக்கும் எவ்வளவோ பழமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

திருக்குறள் காலம்:

திருக்குறள் என்னும் தமிழ் மறையின் காலம் இற்றைக்கு 7500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதன்று என்பதும், அதற்கு முன் சில நூறு ஆண்டுகளேனும் கூடுவது பொருந்தும் என்பதும், ஆதலால் ஒரு குத்து மதிப்பாகப் பார்த்தாலும் இப்போது வழங்கி வரும் வழக்கை நினைந்து திருவள்ளுவர் ஆண்டு 7995 என்று குறிப்பது தமிழ்நூற் குறிப்புக்களுக்கு ஒத்துவரும் என்பதும் துணிந்து கொள்ளுதற்குரியன. மறைத் தமிழாகிய இப் பொதுமறை, இதனால் உலகத்தின் ஆதி மறையாதலும் இனிது விளங்கும்.

பேராண்மை


ஆடவனும் பெண்ணும் கூடி இன்பம் பெறுவதற்கு முதன்மையாக வேண்டப் பெறுவது ஆண்மை. அஃதற்றவன் எவ்வாறு பெண்மையைச் சுவைத்தல் இயலும்? ஆண்மையற்ற இடத்திலே பெண்மையும் அழிந்து விடுகிறது. "பிறன்மனை நோக்காத பேராண்மை" என்று தொடங்கும் வள்ளுவன் உள்ளம் பிறன்மனை நயப்பவனை ஆண்மையற்றவன் என்று வரையறுத்துப் பேசுகிறது. ஆண்மையின்மை பெறப்படவே அவன் பெறுவது இன்பம் இல்லை என்பதும் பெறப்பட்டதாகும்.

—மு. அண்ணாமலை, எம். ஏ.,
(வள்ளுவர் தனித் தன்மை, 64)

குறளும் குடிமக்களும்

[டாக்டர். பா. நடராஜன், எம். ஏ., டி.லிட்., எம். எல். ஏ.]

1910 இல் நாகர்கோயில் மாவட்டத்தில் பிறந்தவர் இவர். ஸ்காட் கிறித்துவக் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறையில் பணியாற்றியவர். அத்துறையில் 'டாக்டர்' பட்டமும் பெற்றுள்ளார். இன்றைய இந்தியப் பொருளியல் அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இத்துறையில் பல இடங்களில் பணியாற்றிய பின் தற்பொழுது சென்னைச் சட்டசபையின் உறுப்பினராக இருக்கிறார். பன்முறை



மேலை நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளார். திருக்குறளில் பொதிந்து கிடக்கும் பொருளாதாரக் கருத்துக்களைக் கட்டுரைகள் வாயிலாக அடிக்கடி எழுதி வருபவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் அன்னை சொர்ணம்பாள் அறக்கட்டளையின் சார்பில் 'வள்ளுவரும் பொருளியல் சிந்தனையும்' என்ற தலைப்பில் மேலை நாட்டுப் பொருளியல் அறிஞர்களின் கருத்துக்களையும் குறள் கருத்துக்களையும் பொறுத்திக் காட்டிச் சிறப்புச் சொற்பொழி வாற்றியுள்ளார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குப் பொருள் வேண்டும், பொருள் வளப்பம் பெற நல்ல அரசியல் வேண்டும். அரசியல் சிறக்க நல்ல குடிமக்கள் வேண்டும். அரசு எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போலவே, குடிகள் எவ்வழி அரசு அவ்வழி என்றும் கூறலாம். ஆகையினால் வள்ளுவர் குடி என்பதை அரசனின் ஆறு உறுப்புக்களில் ஒன்றாகக் கூறுகின்றார்; பொருட்பாலைக் கூற எடுத்த எடுப்பிலேயே.

"படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்
உடையான் அரசருள் ஏறு" [ஆறும்

என்பது அரசியல் கூறும் பொருட்பாலின் முதல் சூத்திரம்.

இதை உரையாசிரியர் சிலர் உணர்ந்திலர். குடி என்பது 'நாடு' என்பதனுள் அடங்கும் என்று கருதி, வள்ளுவர் பதின்மூன்று அதிகாரமாக வகுத்துச் சொன்ன குடி இயலைப் பரிமேலழகர் 'ஒழிபியல்' என்று புறநடைப்பகுதியாக்கி விட்டார்.

ஆனால் திருவள்ளுவ மாலையில் போக்கியார் எனும் புலவர் வள்ளுவர் உள்ளக் கருத்தைத் தெரிந்து பாடியிருக்கிறார்.

"அரசியல் ஐயைந்து; அமைச்சியன் ஈரைந்து;
உருவல் அரண் இரண்டு; ஒன்று ஒண்கூழ்
—இருவியல்
திண்படை; நட்புப்பதினேழ்: குடிபதின்
எண்பொருள் ஏழாம் இவை." [மூன்று;

என்ற வெண்பாவில் குடி இயல் தனியாகக் குறிக்கப்பட்டுள்ளது. நாடு என்பதைப் போக்கியார் ஓர் உறுப்பாகவே கொள்ளவில்லை, 'நாட்டினுள் குடியடங்கும்' என்ற பின்னையோர் பேச்சும் அன்றில்லை. நாடு என்பதனை அரணோடு சேர்த்துக் கருதினர், அரசியல் வாழ்வுக்கு உள் அரணாக அமைய, ஒரு நாடு எவ்வாறிருக்க வேண்டும் என்பதனையே சிந்தித்தனர்.

மணக்குடவரும், பரிப்பெருமாளும் 'குடியியல்' என்றே சுட்டிப்பொருள் விளக்கம் செய்து போயினர். திருக்குறள் அதிகார அடைவு என்ற நூலிலும், போக்கியாரின் முன்னைக் கூற்றே வலியுறுத்தப்படுகின்றது.

"பொருட்பால் எழுபதில் அரசியல் ஐயைந்
தழுக்கி லமைச்சியல் அவையீ ரைந்தாம்,
அரணிரண் டொன்றுகூழ், அடற்படை யிரண்டு
படர்தரு நட்புப் பதினே ழாகும்
குடிமைபன் மூன்றெனக் கூறினர் புலவர்"

என்ற செய்யுளில் 'குடியியல்' என்று பிரித்தே குறிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்க, பரிமேலழகர் மட்டும் 'குடியியல்' என்று தனியாகக் காணுததற்குக் காரணம், குடிமக்களைப்பற்றிக் கூறும் தனிப் பகுதி வடமொழிப் பொருள் நூல்கள் எதிலு மில்லாததே யாகும். அருத்த சாத்திரத்தில், 'நட்பி'ன் இறுதி அதிகாரமாகிய 'மருந்து' என்பதோடு நூல் முற்றுப்பெறுகிறதெனலாம். குடிமக்களைப்பற்றித் தனியாக சாணக்கியர் கூறவில்லை. ஆனல் 'நாடு' என்று ஒரு தனி இயல் அவர் வகுத்துள்ளார். வடமொழி நூற்களின் அடிச்சுவடுபற்றி பெரும்பாலும் உரைகண்ட பரிமேலழகர், அவை கொண்ட நூற்பிரிவினையையே தாம்கண்ட திருக்குறளி லும் கண்டார். 'இறை மாட்சி'யின் முதற் குறளிலேயே 'குடி' என்பதை வள்ளுவர் ஓர் தனி உறுப்பாகக் கொண்டுள்ளதை ஆய்ந் தாரில்லை. வள்ளுவர் 'நாடு' என்று தனி இயல் வகுக்காது போகவே, 'குடி' என்பது 'நாட்டை'யே குறிக்கிறது; அல்லது 'நாடு' என்பது 'குடி'யையும் குறிக்கிறது என்று கொண்டுவிட்டார். பின்னர் 'மருந்து' என்ற அதிகாரத்துக்குப் பிறகு திருக்குறளில் 'குடியி யல்' என்ற ஒன்றனைத் தனியே எதிர்ந்த போது, அதற்கு இடம் வகுக்க அறியாராகி, 'ஒழிபியல்' என்று ஒதுக்கி உரை கண்டு விட்டார்.

குடிமக்களும் அரச உறுப்புக்கள் ஆறனுள் ஒன்றே என்பது தமிழ் வள்ளுவரின் தனிக் கருத்து. குடிமக்கள் எப்படி வேண்டுமானு லும் இருக்கட்டும், அரசியல் வாழ்வு சிறந்து விடும் என்று வள்ளுவர் கருதினரில்லை. குடி மக்கள் தக்கவராயிருத்தல் வேண்டும், அவர் கள் அரசியலில் ஒத்துழைத்து ஓர் அங்கமாக இயங்கவேண்டும், அப்பொழுதுதான் அரசி யல் சிறக்கும் என்ற நுட்பம் அறிந்தவர் வள் ளுவர். குடிமக்களை இணையாது நடைபெறும் அரசியல், நல்லாட்சியே ஆயினும் நிறைவு பெற்ற ஆட்சியாகாது. உறுப்புக்குறைவு பட்ட உடலே யாகும். அதிலே மக்களின் வினைத்திறம் விளங்காது; ஆர்வம் பொங் காது; பொருள் வளம் பெருகாது.

அண்மையிற் கெனியா குடி அரசு உரிமையைப் பெற்றது. அது தருணம் அதன் தலைவர் ஜோமா கெனியட்டா தம் மக்களுக்கு விடுத்த வானொலிப்பரப்பில் கூறுவார்: "கெனி யாக் குடி அரசு என்பது நாம் அதை எதுவாக உருவாக்குகின்றோமோ அதுவாக இருக்கும். நாம் ஒரு புதுச் சமுதாயத்தைப் படைக்கின் றோம். அதனை எவ்வாறு உருவாக்குகிறோம் என்பதைப் பொறுத்தது மட்டுமல்ல அது; எவ்வாறு நாம் நடந்துகொள்கிறோம் என்ப தையும் பொறுத்ததாகும்" என்றார். குடிமக்கள் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைப் பற்றிக் கூறுவதே வள்ளுவரின் 'குடி'யியலு மாகும்.

நிலையான அரசியல் வாழ்வுக்குக் குடும்பம் என்ற உணர்வும் பற்றும் மக்களிடையே வலுத் திருக்கவேண்டுமென்று வள்ளுவர் கருது கின்றார். பிறப்பா வளர்ப்பா—எது நம் குண நலங்களை உருவாக்குகின்றது என்பது பற்றி இன்று விஞ்ஞான உலகில் பெரும் சர்ச்சை நடக்கின்றது. வள்ளுவரோ, பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிவிடு கின்றார்; ஆனல்,

"இற்பிறந்தார் கண் அல்ல தில்லை,
செப்பமும் நாணும் ஒருங்கு." [இயல்பாகச்

என்கின்றபோது, பிறப்பைச் சிறப்பாகக் கருதுவதாகத் தோன்றுகின்றதே என்ற ஐயம் எழுகின்றது. உண்மையில் பிறப்பும் சூழ் நிலையும் பிளந்து பிரிப்பதற்கில்லை. நல்ல குடியில் பிறப்பது நல்ல சூழ் நிலையில் பிறப்ப தாகும். அந்தச் சூழ்நிலையே செப்பம், நாணம் போன்ற குணங்களைத் தோற்றுவிக் கும் பொழுது, அது பிறப்பால் வந்ததா சூழ் நிலையால் வந்ததா என்று எவ்வாறு பிரித்தறி வது? சூழ்நிலை பிறப்புக் குணங்களை அமைக்கின்றது; பின்னே, அந்தப் பிறப்புக் குணங்கள் சூழ்நிலையில் வளர்கின்றன.

பிறந்ததும் முதலில் அமைந்த சூழ்நிலை குடும்பம். அதுவே, ஒருவனது குணத்தொட் டில். குடும்ப உணர்வு இல்லாதவன் பட்டி மாடு போன்று திரிந்து, கயவனுக வாழ்வான். இளமையிலேயே நல்லசூழ்நிலைகள் அவனுக்கு வாயாது போகவே, அவன் கட்டுப்பாடு என் பதை உணராதவனுகி, மேவன செய்து ஒழுகு வான். மேவன செய்து ஒழுகும் மக்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் அமைதி நில வாது. குடும்பப்பற்று என்பது சிறுவயதி லேயே தளிர்க்காதவனுக்கு நாட்டுப் பற்றும் பிறவாது. அவனுக்கு எதிலும் கவலை என்

பதே பிறப்பதில்லை. "நெஞ்சத்து அவலம் இலர்" என்கின்றார் வள்ளுவர். தண்டனைக்கு அஞ்சி நடப்பவர்களே அல்லாது, அறத்துக்கு அடங்கி நடக்கும் பழக்கம் அவரிடையே தோன்றாது. அப்போது நாட்டில் கொடுங் கோல் ஆட்சியை அவர்கள் வலிய அழைக் கின்றோ ராகின்றார். அவர்களுக்குக் குடும்பக் கட்டுப் பாட்டில் வரும் அடக்கம் பிறப்பதில்லை. எதையும் அடக்கமாக வையாது, பறையடிப் பதே தொழிலாகக் கொண்டு திரிவர் குடும் பச்சூழ்நிலையில் வரும் அன்பு, இரக்கம், கனிவு போன்ற நற்பண்புகள் காணாதவ ராகவே, அவர்கள் "ஈர்ங்கை விதிரார்". கரும்பு போல், பிழியக் கொடுக்கும் குணம் படைத்தவராகி விடுகின்றார். வண்மைக்கு வணக்கம் செய்யார், அச்சத்துக்கும் ஆளா கின்றனர். அச்சம் கொண்ட மனிதர் உரிமை வாழ்க்கைக்கு உரியவராகார். அடிமைகளாகி விடுகின்றார். "விற்றற்குரியாராகி" விடுகின்றார் என்று, அன்று அடிமைகளை வாங்குவதும் விற் பதுமாயிருந்த பழக்கத்தை வள்ளுவர் குறிப் பிடுகின்றார். இதனால் தான் பாரதியாரும் "அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில் லையே" என்பதை நமது உரிமை மந்திரமாக முழக்கக் கூறினார். அடிமை மக்களிடையே அரசியல் நல்வாழ்வு முகிழ்ப்ப தெவ்வாறு?

ஆகவே, நல்ல குடிமக்களைத்தோற்றுவிக்க நல்ல குடும்ப மரபுகள் வேண்டும். ஒழுக்கம், வாய்மை, நாணம், செப்பம், நகை, ஈகை, இன்சொல், இகழாமை, பண்புடைமை, பணிவு சால்பு, இவற்றையெல்லாம் தாய்ப்பாலோடு புகட்டவல்லது நல்ல குடும்ப மரபு. இந்த மரபினைப் பேணுவதே சமூக முன்னேற்றத் துக்கு ஒவ்வொரு குடும்பமும் செய்யும் அடிப் படை முயற்சி என்பது வள்ளுவர் கருத்து. அத்தகைய குடும்ப மரபினைப் பேணும் நெறி யில், எத்தனையோ இடையூறுகள் நேர்ந் தாலும், அவற்றிற்குக் கொள்கலமாகாது, ஆள் வினைமையோடும் ஆன்ற அறிவோடும் குடி மக்கள் செயல்பட வேண்டும் என்று "குடி செயல் வகை"யில் அடிக்கோடிட்டு நினை வுறுத்துகின்றார்.

நல்ல குடிமக்களுக்கு வேண்டிய தலையான குணம் மானம், இதனை அன்றாட வாழ்க்கை யில் மேற்கொள்ளும் வீர உணர்வு எனலாம். 'பேராண்மை' என்பார் வள்ளுவர் இதனை. சூழ்நிலைகள் எவ்வளவு மாறுபட்டாலும், வெந் துயர்கள் எத்தனை வந்து தாக்கினாலும், நெறி யில் திரியாத நிலைவேண்டும். இங்ஙனமாகிய குடிமக்களே உள்ளத்து உரன்படைத்தவர்க ளாவார்கள். அவர்களாலேயே மனித உரிமை காப்பாற்றப்படும். தமது மானத்துக்கு இழுக்கு வந்தகாலை, அதை எதிர்த்துப் போராடி உயிர் விடுவதே உரிமையைக் காக்கும் செந்நெறி யென்றுகொள்வார்; அல்லாது, ஒட்டார்பின் சென்று, இகழ்வாரை இச்சகம்பேசி, எப்படியும் வாழமுயலும் சூழ்ச்சி, அடிமை வாழ்வுக்கே கொண்டுய்க்கும். உரிமையை விற்றுப் பெறும் எதுவும் சிறக்காது. அதனால் வரும் வாழ்வும் ஒருதாழ்வே. அதனிலும் சாதலே நன்று. இந்த ஆண்மை உணர்வுடைய குடிகளைக் கொண்ட நாட்டிலேயே அரசியல் வாழ்வு தழைக்கும்.

உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளலும், செய்வதெல்லாம் செயற்கரிய செய்தலும் நல்ல குடிமக்களின் 'பெருமை' எனப்படும் மற்றோர் இலட்சியமாகும். இஃது அவனவன் கருமத்தி னாலே வருவதல்லாது, பிறப்பினாலோ, பதவியினாலோ வருவதன்று.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்;
கீழல்லார் கீழல் லவர்." [கீழிருந்தும்

கடமைகள் அனைத்தையும் சரிவர நிறை வேற்றும் சான்றாண்மைக் குணம் நல்ல குடி மக்களது அணிகலம். அங்ஙனம் கடைமைகளை நிறைவேற்றுகையிலே, அன்பு, பழி நாணுதல், இரக்கம், ஒப்புரவு, வாய்மை, பணிவு போன்ற நலங்களெல்லாம் சிறக்கச் செயலாற்ற வேண் டும். இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் பெருந்தன்மை வேண்டும்.

'மக்கட் பண்பு', குடிமக்களுக்கு வேண்டும் மற்றோர் இன்றியமையாத குணம். சமூக நல்லுறவு செழிக்க, எல்லோர் மாட்டும் எளிய செவ்வியராயிருத்தல் வேண்டும். அவரவர் இயல்பறிந்து அதற்குத் தகுந்தவாறு ஒழுகு தல் வேண்டும். எவரையும் இகழ்தலாகாது. இதுவே அறிவினுள் அறிவு.

பழிபாவங்களுக்கு அஞ்சி நாணும் குணம் குடிமக்களுக்கு வேண்டும். பிறர்க்கு வரும் பழியையும் தமக்கே வந்ததாகக் கொண்டு தடுக்க முற்படும் மென்மைக் குணம் மிகுதல் வேண்டும். இதுவே, மரப்பாவைக்கும் மனி தனுக்குமுள்ள வேறுபாடு.

இந்தக் குண நலங்களெல்லாம் குடிமக்களுக்கு வாய்க்கப்பெற்றால், சமூக உறவு சிறந்து, சமூக வாழ்வு தங்கு தடையின்றி ஒழுக்கெடுத்துச் செல்லும். அரசியலில் உரிமை பேணப்பட்டு வாழ்வு சிறக்கும். இவையெல்லாம் அறவுணர்வால், குடும்பச் சூழ்நிலையில் செழிக்க வேண்டும் பயிர்கள். அறத்தால் நிலை பெறவேண்டும் சமூகச் சட்டங்கள். அறத்தால் நிலைபெறும் சட்டங்களே உறுதியாக அரசியலைக் காக்கவல்லன. நிலையாக சமூக வாழ்வை நெறிப்படுத்துவன. அரசியல் சட்டங்களைமட்டும் நம்பி, அறச் சட்டங்களை மக்கள் மறக்க நேரிட்டால் நல்ல, நிலையான அரசியல் வாழ்வு ஏற்படாது.

இந்தக் குண நலங்களோடு, சமூக வாழ்வு சிறக்க, பொருளாதார அமைப்பும் ஏற்றதாக இருக்கவேண்டும். உழவுக்கு என்றும் சமுதாயம் முதன்மை கொடுக்கவேண்டும். சமுதாயத்தேருக்கு உழவர்கள் அச்சாணி போன்றவர்கள். அந்த உழவு நல்லமுறையில் தொழில் நுட்பத்திறன் சிறக்கச் செயல்படுதல் வேண்டும். உழவு சிறக்காத நாட்டில் நிலையான அரசியல் வாழ்வு வேரிடாது. ஆகவே, குடிமக்கள் அனைவருமே உழவருக்குத் துணை செய்தல் வேண்டும். வறுமையைக்கண்டு அஞ்சுகின்ற மனநிலை குடிமக்களிடையே பரவவேண்டும் வறுமை இன்னாதது, மறுவுலகுக்கும் இன்னாதது என்ற உணர்வு பிறக்க வேண்டும். அந்த வறுமையை மக்களிடையே இருந்து போக்குவது தமக்குரிய கடமையாகும் என்ற உணர்வு குடிமக்கள் அனைவர்க்கும் தோன்றுதல் வேண்டும். அதுபோலவே, இரத்தல் இழிவு என்று உணர்ந்து, அந்தப் பழக்கத்தையும் ஒழித்தல் வேண்டும். இது சமூகத்தில் குடிமக்கள் அனைவருக்கு முரிய கடமை இரந்தும் உயிர் வாழ வேண்டுமென்று நம்மை வைத்தவன் இறைவனல்லன்; மனிதனே; சமூக அமைப்பே அந்த நிலைக்குக் காரணம். ஆகவே செல்வத்தை, உடையவர் இல்லாதவர்க்குப் பகிர்ந்தளிக்கும் உணர்வுவேண்டும். அவ்வாறில்லாது, பகிர்ந்துண்ணாது பணத்தைச் சேர்த்துவைக்கின்றவர்கள் நிலத்துக்குப் பாரமாகவே முடிவார்கள். அவர்களது செல்வத்தால் சமுதாயத்துக்குக் கேடு விளையுமே தவிர, நன்மை இல்லை. அது நடுவூரில் நச்சுமரம் பழுத்தது போன்றாகும். இறந்தும்கூட அவர்களுக்கு நிம்மதி கிடையாது; பேயாய்ப் பிறந்து வருந்துவார்கள். இறுதியில் அவர் பொருளைப் பிறர் கொண்டு செல்வதும் உறுதி.

அரசாங்கத்தின் கடமைகளும் குடிமக்களுடைய உரிமைகளுமே இன்று அரசியலில் வற்புறுத்தப்படுகின்றன வள்ளுவரே குடிமக்களுடைய கடமையையும், அந்தக் கடமைகளை ஆற்றுவதற்கு வேண்டும் அறவழிச் சார்ந்த குண நலன்களையும், அந்தக் குண நலன்கள் தழைத்தற்குவேண்டும் சமூகப்பொருளாதாரச் சூழ்நிலைகளையும் வற்புறுத்திப் போனார். அரசாங்கம் வேறு, குடிமக்கள் வேறு; ஒன்று மற்றதுக்கு எதிரானது. கிளர்ச்சி செய்தும், வாது செய்தும், புரட்சி செய்தும், குடிமக்கள் அரசாங்கத்திடமிருந்து தங்கள் உரிமைகளைப் பெற வேண்டுமென்ற நிலைமையில் இன்றைய உலகின் அரசியல் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. குடிமக்களும் அரசாங்கமும் ஒன்று; அரசியலில் உரிமைகள் உள்ளனபோல், குடிமக்களுக்குக் கடமைகளும் உள்ளன. அவற்றை அறவுணர்ச்சியாலும், சமூகப் பொருளாதார அமைப்பாலும், சந்தி செய்து கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கருதுவராயினர். என்றுமுள்ள உண்மையைத் தென்றமிழில் உலகுக்கு உரைக்கவந்த அறிவனர் வள்ளுவர் என்பதை மறக்கலாகுமோ?

குறளின் புதைபொருள்


இல்வாழ்வின் சிறப்பில் வள்ளுவப் பேராசானுக்குள்ள ஈடுபாடு வெள்ளிடைமலை. இல்லறம் வேறு, துறவறம் வேறு. ஆனால் அவை ஒன்றுக்கொன்று பகையென்று கருதுவது புல்லறிவான்மை. தவம் வேறு, வாழ்வு வேறு. ஆனால் அவை இரண்டும் கீரியும் பாம்புமாகப் பகைத்துக் கொண்டு நிற்கும் கருத்தோட்டங்களல்ல. தவமும் வாழ்வும் இணைந்து செயல்பட முடியுமென்பதே குறளின் புதைபொருள்.

—எஸ். இராமகிருஷ்ணன்.
(வள்ளுவன் கண்ட வாழ்வியல், 50)

செம்பொருட்டுணிவினர் திருவள்ளுவர்

[கழகப் புலவர் திரு. ப. இராமநாதபிள்ளை]

இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த குலசேகரன்பட்டினத்தில் 1890 இல் தோன்றியவர். தாமே தமிழ் பயின்றவர். பள்ளியாசிரியராகச் சிலகாலம் பணியாற்றியுள்ளார். இலங்கைக்குச் சென்று வாணிபத்தில் சிறிது காலம் ஈடுபட்டிருந்தார். 1946 ஆம் ஆண்டுமுதல் கழகத்தில் பணியாற்றி வருகின்றார். தமிழ் இலக்கியம், இலக்கணம் சைவ சித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் துறைபோகியவர். தாம் பெற்ற சித்தாந்த சாத்திரப் பேரறிவைச் சித்தாந்த வகுப்புகள் மூலம் வழங்கி வருகிறார். திருக்குறளில் ஆழ்ந்த புலமையும் பற்றும் கொண்டவர். பல இடங்களில் திருக்குறள் வகுப்புக்கள் நடத்தியும் சமயச் சொற்பொழிவுகளில் ஆங்காங்கே குறட் கருத்துக்களை எடுத்துக் கூறியும் குறள்நெறியைப் பரப்பி வருகிறார். இவர் வள்ளுவர்மீது கொண்ட பற்றின் காரணமாக இவர்தம் இல்லத்திற்குத் 'திருவள்ளுவரகம்' என்றே பெயரமைத்துள்ளார். இவர் குறள் நெறி பரவவேண்டுமென அயராது உழைத்து வருபவர்.



தமிழர் தொன்னெறி உலகப் பொதுநெறி என்பது தொன்று தொட்டு இன்றுகாறும் இருவழக்கிலும் நின்று நிலவும் அமிழ்தனைய மெய்ம்மையால் அனைவரும் தினைத்துணையும் ஐயமின்றி அறியலாம். இவ்வுண்மையினை வரும் தனித்தமிழ்த் திருமாமறை முடிபானுமுணரலாம் :

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி."

—அ. போற்றித்திருவகவல், ௧௬௪-௫.

சிவன் எனினும் செம்பொருள், அன்பு, சிறப்பு முதலிய திருப்பெயர்களாற் கூறினும் ஒன்றே. விழுமிய முழுமுதல்வன் இயல்பாகும் தன்னிலையாம் சிறப்பின்கண், சிவன் எனப்படுவன். அவனே உலகியலாம் பொது நிலையில் இறைவன் எனப்படுவன். இவ்விரண்டனையும் மேற்கண்ட தனித்தமிழ் மந்திரம் நன்கெடுத்து ஓதுகின்றது. தனித்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறள் அறமுறை நுவலும் இலக்கணமாகும். அவ்விலக்கணத்துக்கு முற்றும் பொருந்திய இலக்கியம் தனித்தமிழ்த் திருமா முறைகளாகும். இலக்கண மெய்ம்மைகளை விரிவாக இலக்கியத்தின் வாயிலாக வன்றி வேறு எவ்வாயிலாக அறிதல் கூடும்? இஞ்ஞான்று திருக்குறளை அணுகி ஆய்வோர் அனைவர்களும் இலக்கியச் சான்றினை இம்மியும் நாடாது ஆராய்வதாகத் தெரிகின்றது. அது புணையின்றி நீர்கடக்க உன்னும் துணையேயாம் அல்லது வேறென்னும்?

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

—திருக்குறள், ௩௫௮.

"காமஞ் சான்ற
கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற
மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு
கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல்
இறந்ததன் பயனே."

—தொல். பொருள்-௧௯௨

சிறந்தது பயிற்றுவோர் சிவனடியாராவர். இவர்தம் பல்வேறு நிலைகளை மெய்ம்மை வரலாறும் திருத்தொண்டர் புராணத்துட் காணலாம். இம்மெய்யடியார்கள் இல்லும், ஊரும், நாடும் இகந்து செல்லும் நிலையில் இருந்திலர்.

" மறப்பித்துத் தம்மை
மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச்
சேர்வை—அறப்பித்துப்

பத்தர் இனத்தாய்ப்
பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை.''
—சிவஞானபோதம்,கஉ. உ-க.

சிறப்பில்லார்—அன்பில்லார்.

மாவோ டொத்து மக்களுருவில் மாக்களாய் நிலையின்றிக் காட்டில் திரிந்துவந்த மிகப் பழங்காலத்து மாந்தர்நிலைக் கட்டுப்பாடும் மன்னர்வழி யொழுகும் கட்டுப்பாடும், மதக்கட்டுப்பாடும் இல்லாதிருந்திருத்தல் கூடும். சிறிது சிறிதாக வளர்ச்சி எய்திவருங் காலத்து இவ்வகைக் கட்டுப்பாடுகள் உண்டாகி வளர்ந்து வந்திருக்கும் மெய்ம்மையினை வரலாற்று முறைமையின் வைத்துக் காணலாம். இந்நிலையில் திருவள்ளுவநாயனார் பொருவருஞ் சிறப்பினர். அவர் ஒருமதமும் சாராதவர் என்று கருதினால் கட்டுப்பாடு ஏற்காதவர் என்றாகுமன்றோ? கட்டுபாடேற்காதவர் கட்டுப்பாடு விதிப்பது எங்ஙனம் பொருந்தும்? பின் என்னையோ எனின்? எச்சமயத்துடனும் பிணக்கங் கொள்ளாது இணக்கங் கொண்டு வாழும் சமயத்தவர் திருவள்ளுவர் என்பது பெறப்படும். மாந்தர்நிலை - சமுதாய நிலை.

இது பள்ளி முதல்வர் ஒரு வகுப்பினுலும் பெயர் பெறாது எல்லாவகுப்பும் கடந்து நின்று எல்லா வகுப்புடனும் பிணங்காது இணங்கித் துணையாய் நின்று நடந்தும் நடத்தியும் வருவதனோ டொக்கும். அந்நிலையில் திருவள்ளுவ நாயனார் சமயங்கடந்தவர். ஆனால் சார்பிற் கலந்தவர். சார்பு "சிறப்பென்னும் செம்பொருள்." செம்பொருட் டுணிவே சித்தாந்தசைவம். இவ்வுண்மை வரும் திருவாசகத் திருப்பாட்டானுணர்க:

"உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.''
—அ. பிடித்தபத்து, க.

மேலும் இப்புகழ்நூல் போன்றே பொருள் நூலாம்[1] சிவஞான சித்தியார் கூறுவதுங் காண்க:

"ஓதுசம யங்கள் பொருள்
உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல்
உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல்
யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல
தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம்
ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம்
அதுசமயம் பொருள்நூல்
ஆதலினான் இவையெல்லாம்
அருமறையா கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும்
அரனடிக்கீ ழடங்கும்.''
—சிவஞானசித்தியார் அ. உ-ந,

"தொன்மைத் தமிழர்தம் சீரியகொள்கை'' உலகம், உயிர், உடையான் என்னும் முப்பொருள் உண்மையின் செப்பாகும். இம் மூன்றனையும் முறையே பாசம், பசு, பதி எனவும், சிறை (தளை), உயிர், இறை எனவும் வழங்குப.

உலகம்

"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.''
—தொல். பொருள், எஅ

"நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை,''
—திருக்குறள், நநக.

"நில்லாத உலகியல்பு
கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேனென் றறத்துறந்து
சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர
நம்பரரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும்
அமண்சமயம் குறுகுவார்.''
—கஉ. அப்பர்-நஎ.

உயிர்

"எல்லா உயிர்க்கும் இன்ப மென்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்.''
—தொல். பொருள், உஉந

1. அல்லும் பகலுமாய். சு. எஅ. இ.

"மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை."

—திருக்குறள், ௨௪௪,

"அவையே தானே யாயிரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே."

—சிவஞானபோதம், நூற்பா - ௨.

உடையான்

"உடையா ளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்குமரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே."

—கோயின் மூத்ததிருப்பதிகம்-௧.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே."

—௧0, ௧௫௧.

பசு நிலாது : ஞாயிற்றின் ஒளியால் புற இருள் மடங்குவது போன்று திருவருளொளியின்முன் அகவிருளாகிய ஆணவமலம் மடங்கி அடிமை கொண்ட ஆருயிர்களை விட்டு அகலும். அகலவே அவ்வுயிர்களுக்குப் பசு என்னும் பெயரும் நீங்கும். பசு என்னும் பெயர் ஆணவப் பிணிப்பினால் ஏற்பட்டது. அப்பிணிப்பு அகலவே அப்பெயரும் நீங்கும். நீங்கவே நீங்கா அடிமையென்னும் பெயர் ஓங்கும். இஃது அழுக்ககன்ற ஆடை வெள்ளாடையெனப் பெயர் பெறுவதோ டொக்கும். அவ்வளவேயன்றி ஆருயிர்கள் ஒரு ஞான்றும் அழியா. இவ்வுண்மை வருமாறு :

ஒன்றென்ற தொன்றேகாண்
ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத்
தோடுளைகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றாம்
அகர வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு."

—சிவஞானபோதம், ௨- ௧-௨

இப் பொருளுண்மையினைத் திருக்குறள் எவ்வாறு ஓதுகின்றது எனக் காண்பாம் :—— உடையானுண்மை :

௧. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."—திருக்குறள் ௧.

உயிர் பன்னிரண்டனுள் அகரம் உடையானுக்கு ஒப்பாகும். ஏனைப் பதினோர் உயிர்களும் திருவடிப்பேறு பெற்ற உயிர்களுக்கு ஒப்பாகும். மெய்யெழுத்துக்கள் உடல் உலகுகளுக்கு ஒப்பாகும். உயிர்மெய் யெழுத்துக்கள் உடலோடு கூடிய உயிர்களுக்கு ஒப்பாகும்.[1] மெய் யெழுத்துக்கள் வன்மை, மென்மை இடைமை என மூவகைப் பாகுபாடுகளுடையன. அவற்றுள் வன்மை உயிர்மெய்களெல்லாம் மும்மலப்பிணிப்புடைய உயிர்களுக்கு ஒப்பாகும். இடைமை உயிர்மெய்கள் இருமலப் பிணிப்புள்ள உயிர்களுக்கு ஒப்பாகும். மென்மை உயிர்மெய்கள் ஒரு மலப் பிணிப்புடைய உயிர்களுக்கு ஒப்பாகும். இவ்வுண்மை வருமாறு .

"மூன்று திறத்துள்ளாரும் மூலமலத்
துள்ளார்கள்
தோன்றலர் தொத்துள்ளார் துணை."

—திருவருட்பயன், ௧௨.

"மெய்ஞ்ஞானந் தானே
விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான அச்சகலர்க்
கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப்
பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்."

—சிவஞானபோதம், அ. ௨ -௧

"ஆதிபகவன்" ஆதி-காரணன். பகவன் - பகுத்துக் கொடுப்பவன். காரணன் - வினை முதற் காரணன். (நிமித்தகாரணன்). பகவன்- பகுத்துக் கொடுப்பவன். எனவே ஆதியாகிய பகவன். ஆதியாகிய அறிவாற்றலையுடைய பகவன். ஆதிசத்திக்குத் தன் மெய்யில் ஒரு கூறு பகுத்துக் கொடுத்த பகவன். (மாதிருக்கும் பாதியன்.) ஆருயிர்கட்கு உலகு உடல் வினைகளைப் பகுத்துக் கொடுக்கும் பகவன். அவ்வுயிர்கட்குச் செவ்வி வருவித்து அவற்றைத் தன் திருவடியிற் சேர்த்துத் தன்னுடைய மாறாப் பேரின்பத்தினை என்றும் பகுத்துக் கொடுக்கும் பகவன் முதலிய சிறந்த பொருள் படும் தனித்தமிழ்ச் சொல்லென்ப. இம்முதற் குறளால் கடவுளின் உண்மையும் தன்மையும், முன்மையும், நன்மையும், வண்மையும் குறிப்பான் வகுத்துணர்த்தப்பட்டன.

கடவுள் தானே விளங்கும் பேரறிவினன். ஆருயிர்கள் கடவுள் விளக்க விளங்கும் சிற்றறிவின. அறிவு ஒன்றே நிலை வேறுபாட்டால் அன்பும் ஆற்றலுமென முன்னும் பின்னுமாய் இருதிறப்பட்டு மூன்றாய் வழங்குப. அவை அன்பறிவாற்றலெனப்படும் (இச்சை ஞானம் கிரியை). அப்பேரறிவே அவன்றன் மாறாத் திருவுரு. அது வருமாறு:

உ. "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

வாலறிவன் — மாசணுகா இயற்கைத் தூய பேரறிவினன்.

முதற்றிருக்குறளால் கடவுள் உண்மை சொல்லப்பட்டதுடன் அன்பே வடிவாகிய அவனது தன்மையும் கூறப்பட்டது. இரண்டாந் திருக்குறளால் அவன்றன் அறிவு கூறப்படவே எஞ்சிய ஆற்றல் மூன்றாந்திருக்குறளால் கூறப்படுகின்றது. அன்பால் நினைப்பவர் உள்ளத்தே அவர் நினைந்த வடிவத்துடன் விரைந்துசென்று திருவருள் கொடுத்து இன்புறுத்துவன் என்னும் உண்மையும் இதன்கண் கூறப்படுகின்றது. அதனால் கடவுளின் வடிவமும் ஈண்டே பெறப்படும்.

ங. "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

இறைவன் ஆருயிர்களின் பொருட்டு உண்ணின்றுணர்த்தி இயைந்து இயக்கிவருவதுடன், அவ்வுயிர்கள் காதன்மிகுதியால் கைகூப்பித் தன் திருவடியினைத் தொழுது வழிபடுதற்பொருட்டுத் திருவருளால் திருவுருக் கொண்டருளுகின்றனன். இஃதுஅவன்றன் முடிவிலாற்றலைப் புலப்படுத்தும். அவன் கொள்ளுந் திருவுரு நம்மனோர்க்கு அவனால் அமைத்துத்தரும் மாயாகாரியம் போன்றதன்று. ஆனால் அது திருவருட் காரியமாகும். அத்திருவுருவினைக் கண்டுகளித்து வழிபடுவதால்அளவில்லதொரு பேரின்பம் வழிபடுவார்க்கு உண்டாகும். இம்முறையான் நோக்கின் முதன் மூன்று திருக்குறள்களாலும் கடவுளின் உண்மை அறிவு இன்பமென்னும் உயர்வற உயர்ந்த உயர்நலம் உணர்த்தப்பட்டன. மேலும் அன்பு அறிவு ஆற்றல்என்னும் முப்பண்பும் ஈண்டே அமைந்துள்ளன. இனி, அவனுடைய "குறைவற நிறைந்த" பெருநிலையும் "கோதிலாஅமுதாம்" தனி நிலையும் நான்காந் திருக்குறளால் ஓதப்படுகின்றன. குறைவுடையாரே விருப்பு வெறுப்புக்கொள்வர். அவ்விருப்பு வெறுப்புக்கள் தந்நயம்பற்றி வருவன. விருப்பு வெறுப்புக்களிலாத்தன்மை அருட்டன்மையாகும். அவர் செய்யும் செயலனைத்தும் பிறர்பொருட்டேயாகும். இத்தன்மை ஆருயிர்களின்பாற் காணப்படும்போது அன்பு என்று சொல்லப்படும்.

ச. "வேண்டுதல்வேண் டாமை
இலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல."

விருப்பு வெறுப்புக்கள் ஆணவ மலப் பிணிப்பினால் ஏற்படுவன. இவற்றால் செய்யப்படும் செயல்கள் நல்வினை தீவினை எனப்படும். இத்தகைய இருவினைக்கு ஈடாகப் பிறப்பு இறப்புக்கள் மாறிமாறி யுண்டாகும். இவ்விருவினை நீக்கத்தாலேயே பிறப்பு நீங்கும். திருவடியிற் சேர்வதாகிய சிறப்பு ஓங்கும். திருவருட்டுணையால் இருவினை நீங்கினாரால் இயற்றப்படுவன "இறை பணி" எனப்படும். தனித்தமிழ் ஆகமம் அருளிய மெய்கண்ட தேவநாயனாரும் இதனை வருமாறு ஓதியருளினர்.

"இனி இறைபணி வழுவாது நிற்க என்றது."
—சிவஞானபோதம், ௧0-உ-மேற்கோள்.

"அவனருளாலல்லது ஒன்றையும்
செய்யானாகவே
அஞ்ஞான கன்மம் பிரவேசியா
வாகலான்."—ஏது.

இறைபணி நிற்பார் இடையறாது அவன்றன் பொருள்சேர் புகழை ஓதிக்கொண் டுருகி நிற்பர். அவன்றன் மெய்ப்புகழைத் தொகையாக விளக்குவன தனித்தமிழ் மந்திரமாம் "சிவயநம" என்னும் திருவைந்தெழுத்து. வகை நால்வர் நம்பிரான், மூலர் அருளிய தனித் தமிழ்த் திருமாமறை முறைகள். விரி, திருத் தொண்டர்புராணமும் எஞ்சியதிருமுறைகளும். இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு இருளும் வினையும் சேரா எனவே புகழுக்குரிய இறைவன்பால் அவை சேரா என்பது சொல்லாமே பெறப்படும்.

ரு. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இருள்எனினும் பாசம் எனினும் ஒன்றே. இறைவன்றன் திருவருட்குணங்கள் எட்டனுள் ஐந்தாவதாக வருவது "இயல்பாகவே பாசங்களி னீங்குதல்" ஐந்தாவதாகிய இத்திருக்குறளின்கண் இக்குறிப்பு வருவது காண்க. இரு

ளுண்மை கொள்ளும், எந்த நெறியும் தொன்மைத்தமிழர்தம் நன்மைத் திருநெறியேயாம். மேலும் இவ்விருளுண்மையினைத் திருவள்ளுவநாயனர் வருமாறு விளக்கியருளுகின்றனர். அவை வருமாறு :

"களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில்."
—திருக்குறள், உஅஎ. கார்-இருள்; மயக்கம்.

"பொருளென்னும் பொய்யா
விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று." —எஙரு.

செல்வப்பொருள் புறஇருளாகிய பகையினைப் போக்கும். மெய்ப்பொருள் அகவிருளாகிய ஆணவப் பகையைப் போக்கும்.

"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. —"கக அசு.

விளக்கு இறைவன்றன் பொருள்சேர்புகழ். இருள் ஆணவவல்லிருள்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்."
—தொல். பொருள்-சுசக.

முதல் நான்கு திருக்குறள்களானும் பதியுண்மை கூறப்பட்டது. ஐந்தாவது திருக்குறளால் பாசவுண்மை கூறப்பட்டது. ஆறுவது திருக்குறளால் பசுவுண்மை கூறப்படுகின்றது. ஐந்தாவது திருக்குறளில் இருளும் இருவினையும் கூறப்பட்டன. எஞ்சிய மாயை இவ்வாருந் திருக்குறளால் கூறப்படுகின்றது. அதுவே பொறிவாயில்.

சு. "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பொறி உடம்பின்கண் அகத்தும் புறத்துங் காணப்படும் கருவிகள். பொறியினை நல்வழிப் படுத்தல் அவித்தல். ஒழுக்கம்: உலகியல் ஒழுக்கமும், வீட்டியல் ஒழுக்கமும் என இருவகைப்படும். இரண்டற்கும் ஒருதலையாகப் பொறியடக்கம் வேண்டும். இறைவன் திருவருளாற்கொள்ளும் திருமேனியில் மெய்முதலிய பொறிகள் காணப்படும். அவை அருள்மயமாதலின் இயல்பாகவே அவை நல்லவாயின. அவனடியார்க்கும் பொறிகள் அருளால் அவிக்கப்பட்டனவே. மெய்யடியார்கள் வாயிலாக வெளிப்படுவதே மெய்ம்மறையாகும். அம்மறையிற் கூறப்படுவனவே பொய்தீர் ஒழுக்க நெறிகள். அவற்றை மேற்கொள்பவரே செம்பொருட்டுணிவினர். அவரே திருவள்ளுவர் வகுத்த மெய்ந்நெறியை எய்திய மேலோராவர். இவ்வுண்மை வருமாறு:

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."-திருக்குறள்,உஅ.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."
—தொல். பொருள்-சகல

"சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட்
டொல்லரா நல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந்
தானினைத்தைம் புலனும்
அழிந்தசிந்தை அந்தணாளர்க்
கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி
மேயது முதுகுன்றே." —க.இங-சு.

இதுவே மந்திர நான்மறையாகும். ஞானசம்பந்தரே "எனதுரை தனதுரையாக" எனவும், "ஆணை நமதே" எனவும் திருவாய் மலர்ந்தருளினமையும் மேலதனை வலியுறுத்தும்.

ஒழுக்கநெறி நிற்பார் அழிவிலா ஆருயிர் மாந்தரே யாதலின் இவ்வாருவதன்கண் பசுவுண்மை காண்க.

ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய நான்கு திருக்குறள்களாலும் முறையே இறைவன்றன் அளப்பருந்தன்மையும், ஆற்றலும், அருளும், அருட்குணமும், அடிச்சேர்த்தலும் அருளிச் செய்தனர்.

எ. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

உவமை இல்லாதான் என்பதனல் அளப்பருந்தன்மை பெறப்படும்.

அ. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

அறமும் அந்தண்மையும் உடைமையால் ஆற்றலும் அருளும் பெறப்பட்டன.

கூ. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எண்குணங்கள் ; க. தன்வயத்தனுதல் உ. தூயவுடம்பினனுதல் ௩. இயற்கையுணர் வினனுதல் ௪. முற்றுமுணர்தல் ௫. இயல் பாகவே பாசங்களினீங்குதல் ௬. பேரரு ளுடைமை எ. முடிவிலாற்றலுடைமை அ. வரம்பி லின்பமுடைமை என்பன.

க. ஆதிபகவன் என்றதனுல் தானே உல குயிர்கட்குக் காரணமாய் நின்று ஆக்கி, நிறுத்தி, அழித்து, மறைத்து, அருளி இயைந் தியக்கும் இயல்பினுலும் தனக்கொரு காரணன் இன்மையானும் தன்வயமுடைமை பெறப்படும். உ. வாலறிவன் என்பதனுல் தூயவுடம்பும், ௩. ஏகினுன் என்பதனுல் ஒருவர் உணர்த்த வுண ராது தானே உணர்தலால் இயற்கை உணர் வும் ௪. வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதனுல் குறைவிலா நிறைவு பெறப்படுத லின் முற்றுமுணர்தலும் ௫. இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றலால் பாசம் இன்மையும் ௬. தான் இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்ப தன்றிப் பாசங்களோடுகூடிய ஆருயிர்களை அப் பாசத்தினின்று நீக்கித் தன்திருவடி நேசத்தி லாக்கிப் பேரின்பம் நுகர்விக்க விழுப்பமிக்க ஒழுக்க நெறிநூல்[1] தோற்றுவித்தருளலால் பேரருளுடைமையும், எ. தனக்குவமையில்லா தான் என்பதனுல் முடிவிலாற்றலுடைமையும், அறவாழி அந்தணன் என்றமையால் வரம்பி லின்பமுடைமையும் குறிப்பாற் பெறப்படுதல் காண்க.

ஆண்டான் ஒருவனே என்னும் உண்மை "ஆதிபகவன், வாலறிவன்" முதலாகப் பத்துத் திருக்குறளிலும் ஆண்பால் ஒருமையீற்றுல் ஓதி யருளப்பட்டமையால் நன்குணரலாம். ஆருயிர்கள் பல என்பது "தொழாஅர், சேர்ந் தார், வாழ்வார், சேர்ந்தார், புரிந்தார், நின்ருர், வாழ்வார், சேர்ந்தார், சேர்ந்தார், நீந்துவர், நீந்தார், சேராதார் எனப் பன்னீரிடங்களில் பலர்பால் ஈற்றுல் பகரப்பட்டமையிற் புலனும்.

இறைவன் ஆருயிர்கட்குப் பிறப்பு நிலை யாகிய கட்டுநிலையில் வேண்டுவ புரிந்தருளும் உண்மை புலப்பட்ட ஐந்தாம் திருக்குறளில் இறைவன் என்னும் சொல் ஓதியருளப்பட் டமை காணலாம். அதுபோல் சிறப்புநிலை யெனப்படும் ஒட்டு நிலையில் புரிந்தருளும் திரு வடிப்பேறு குறிக்கப் பத்தாந் திருக்குறளிலும் இறைவன் என்னும் சொல்லும் ஓதியருளப் பட்டமை காண்க. தங்குவோன் என்னும் பொருளில் இறைவன் என ஐந்தாந்திருக் குறளிலும், முடிப்போன் அல்லது ஒடுக்கு வோன் என்னும் பொருளில் இறைவன் எனப் பத்தாந் திருக்குறளிலும் வந்தமையுங் காண்க.

மூன்ருந் திருக்குறளில் மாணடியென வரு வது ஒருமல முடையார் அடி சேருங் குறிப்பை யும், நான்காந் திருக்குறளின்கண் இலானடி என்பது இருமலமுடையார் குறிப்பையும், பத் தாந் திருக்குறளில் இறைவனடி என வருவது மூன்றுமலமுடையார் குறிப்பையும் குறிப்பன வாகும். இவற்றை வரும் வெண்பாவால் நினைவுகூர்க:

ஆண்டான் ஒருவனெனல் ஐயிரண்டாண்
பாற்குறள்காண்
பூண்டவுயிர்ப்பன்மைபுகல்பலர்பால்-நீண்டவிறை
ஒன்று பிறப்பியல்மற் ருென்றுசிறப் பாமடிமூன்
ருென்றுமுயிர் மூவகையாம் ஓர்.

இரண்டாந் திருக்குறளில் நற்ருள் என வருங் குறிப்பால் அறிவுப்படியினையும், எ. தனக் குவமை இல்லாதான் எனுங் குறிப்பால் செறி வுப்படியினையும், அ. அந்தணர்தாள் என்னுங் குறிப்பால் நோன்புப் படியினையும், ௯. எண் குணத்தான்தாள் என்னுங் குறிப்பால் சீலப் படியினையும் குறிப்பனவாகும். எனவே சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறிப் படி நான்கும் பத்தியின் மேம்பாட்டால் திரு வருள் நினைவோடு முயன்று செய்யும் நற்றவ நற்பணியாதல் புலப்பட முயற்சிப் பொருள் தரும் தாள் என்னும் சொல் ஓதியருளப்பட்ட வுண்மை காண்க. சீல முதலிய நான்கும் முறையே, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவுங் கூறப்படும்.

௩, ௪, ௧௦ ஆகிய மூன்று திருக்குறள்களி லும் அடி மூன்றும் உ, எ, அ, ௯ ஆகிய நான்கு திருக்குறள்களிலும் தாள் நான்கும் கூறப் பட்டமையால் எஞ்சிய க, ௫, ௬ ஆகிய மூன்று திருக்குறள்களிலும் முறையே இறை சிறை உயிர் ஆகிய பதி பாச பசுக்களென்னும் முப் பொருள் உண்மை புலப்படுதல் காண்க.

இறைவனை வழிபட உள்ளம், உரை, உடல் என்னும்முப்பொறிகளும் அவனருளால் நமக்கு அமையப்பட்டுள்ளன. இவற்றுள் உள்ளக்

1. 'அருவுருவன்.' சிவஞானபோதம், எ. ௩-க.
,, 'பல்கலை ஆ.' சிவப்பிரகாசம், க௩.
,, 'ஆரணம்'. சிவஞானசித்தியார், க. உ-கஅ.

குறிப்பு மூன்றுந் திருக்குறளாலும், உரையின் குறிப்பு ஐந்தாந் திருக்குறளாலும், உடலின் குறிப்பு இரண்டு ஒன்பது ஆகிய திருக்குறள் களாலும் குறிக்கப்பட்டமை காண்க. மேலும் சேர்தல் என்னும் சொல் இடைவிடாது நினைத் தல் எனவும், புரிதல் என்பது எப்பொழுதும் சொல்லுதல் எனவும் பொருள் தருவன. மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் அறிதற் கருவி ஐந்தும் தலையில் கண் இருப்பதால் அக்குறிப்புப் புலப்படத் தொழுகையின் பின் வணங்கலும் கூறப்பட்டது காண்க. மேலும் செம்பொருட்டுணிவின் சீரிய முடிவாம் 'தாடலை' என்னும் குறிப்புப் புலப்படத் தாளைவணங்காத் தலை என அருளினர்.

மெய்கண்டார் அருளிய தனித்தமிழ் முழு முதல் நூலாம் சிவஞான போதத்தின்கண் முதல்நூற்பா இறையையும், இரண்டாம் நூற்பா சிறையையும், மூன்றும் நூற்பா உயிரையும் குறிப்பன. அம்முறை போன்று திருக்குறள் கடவுள் வாழ்த்தின்கண் ஒன்று முதல் நான்கு முடிய இறையையும், ஐந்தாம் திருக்குறள் சிறையையும், ஆறுந் திருக்குறள் உயிரையும் குறிப்பனவாகும். திருக்கோவில் களில் முதலிடத்து வீற்றிருந்தருள்வது சிவக் கொழுந்து (இறை). நடுவே காணப்படுவது திரை (சிறை). அடுத்துக் காணப்படுவது விடை நந்தி (உயிர்). இம்முறையானும் திருக் குறள் சித்தாந்த சைவமாஞ் செந்தமிழ் நன் னெறியை உணர்த்தும் இயல்பு காண்க.

கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் பாயிரம் நான்கும் முறையே அறிவு, செறிவு, நோன்பு, சீலம் என்னும் நன்னெறி நாற்படி களையும் உணர்த்துவனவாகும். துறவு, மெய் யுணர்தல், அவாவறுத்தல் என்னும் மூன்றுமே துறவற இயலுக்குள்ளன. ஏனைய முப்பது அதி காரங்களும் இல்லற இயலுக்குள்ளன. துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் மூன்றும், முறையே உயிர், இறை, சிறை நிலைகளைக் குறிப்பனவாகும். பாயிரம் நான்கு துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் மூன்று ஆக எழு அதிகாரமும் சித்தாந்த சைவச் சிறப்பியல்புகள் தேற்றுவன. ஏனைய நூற்று இருபத்தாறும் யாவருக்கும் ஒத்த பொது இயல்புகள் விளக்குவன.

திருவள்ளுவ நாயனர் தொன்மைப் பழந் தமிழ் நன்னெறியாம் சித்தாந்த சைவச் செந் நெறியினரே என்பது அவர் பாடியருளிய கடவுள் வாழ்த்துப் பாட்டுக்கள் பத்தின் விளக் கமாயும் பெறு பேறுயும் அமைந்து விளங்கும். திருநாவுக்கரசு நாயனரருளிய திருத்தாண் டகத் திருப்பாட்டு ஒன்றுளது. அது வருமாறு:

" முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

—கூ.உ௫.எ.

இத்திருத்தாண்டகத்தின்கண், சித்தாந்த சைவச் சிறப்பியல்பின்படி ஆருயிர்கள் அனைத் தும் இறைவனையும் இறைவனடியாரையும், அனைத்துயிர்களையும்,உடல், உறையுள், உலகு, உடைமைகளையும் இறைபணியில் நின்று முறையுறப் பேணும் பெற்றியால் பெண் ணெனப்படும் பெருமை பெற்றதாகும். இவ் வுண்மை, கேட்டாள், கேட்டாள், கேட்டாள், ஆனுல், நீத்தாள், அகன்ருள், மறந்தாள், கெட்டாள், தலைப்பட்டாள் என ஒன்பது இடங் களிலும் பெண்பால் வினைமுற்ருல் கூறப்பட் டிருப்பதும், நங்கை என்னும் எழுவாயாலும் நன்கு பெறப்படும்.

"தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பதன்கண் காணப்படும் "தலைப்பட்டாள்" "நங்கை தலைப்பட்டாள்" "தலைவன் தாளே தலைப்பட்டாள்" என்பதனேடுங் கூட்டப் பத் தாகும். இப்பத்தினையும் திருக்குறள் கடவுள் வாழ்த்துத் திருப்பாட்டுக்கள் பத்துடனும் பொருத்திக் காணவல்லார்க்குத் திருவள்ளுவ ரின் தனித்தமிழ்த் திருநெறி எதுவென்னும் உண்மை புலப்படாதிராது. அவற்றைச் சுருக்கமாக விளக்குதும்: க. நாமம், ஆதி பகவன், வண்ணம் வாலறிவன், ஆரூர் மலர், (ஆருயிர்களின் தூய உள்ளத் தாமரை) பிச்சி யாதல் கிடைத்தற்கரிய பெரும் பொருள்களி னிடத்தில் பெருவேட்கை யுண்டாதல். உலகிற் காணப்படும் அனைத்துயிர்களும் விருப்பு வெறுப்பு உடையனவாகவே உள்ளன. ஆனுல் ஆதிபகவன் மட்டும் விருப்பு வெறுப்பில்லாத் தனிச் சோதியாகத் திகழ்கின்றனன். அவ னிடத்தில் உண்மையுணர்ந்தார்க்குப் பெரு வேட்கையுண்டாதல் இயல்பேயாம். அம்

முறையில் "வேண்டுதல் வேண்டாமை இலானடி"க்கண் பிச்சியானாள்.

பித்தி, பிச்சி, பேரன்பி, காதலி என்பன ஒரு பொருள் குறிப்பன. மெய்ம்மைக் காதலுள்ளத்தவர் தம்மால் காதலிக்கப்பட்ட பொருளையின்றி வேறெதனையும் விரும்பார். அம்முறையில் "அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்" என்பது இருள்மலமாம் அத்தனையும், மருள்மலமாம் அன்னையையும் திருவருளால் ஒதுக்கித் தள்ளினள். இருள் - ஆணவம். மருள் - மாயை. 'அகலிடத்தார் ஆசாரம்', ஐம்பொறிவழிச் சேறல். இப்பொறிகளைந்தையும் தம்பின் வரத்திருவருளால் ஆக்கிக் கொண்டனள். இதுவே ஆசாரத்தை அகலுதல். இஃது ஆறுந்திருக்குறளால் பெறப்படும்.

"தன்னை மறத்தல்" தனக்குவமையில்லாத பொருளைச் சார்ந்தார் அப்பொருள்வண்ணமாய் நின்று தம்மை மறத்தல் இயல்பு. அம்முறையில் தன்னை மறந்தனள். இஃது ஏழாந் திருக்குறளால் பெறப்படும். "தன்நாமங் கெடுதல்" உடலுக்கிட்ட பெயரும் உயிரென்னும் பொதுப்பெயரும் நீங்குதல், மீளா ஆளாம் அடிமை என்னும் சிறப்புத்திருப்பெயர் தாங்குதல். அறமுறையால் முன்னைய நீங்கலும், அந்தண்மையால் பின்னைய தாங்கலும் பெறப்படும். இதுவே எட்டாந் திருக்குறளின் கருத்தாகும். "நங்கையாகத் தலைப்படுதல்" திருவருளால் அடிமைச் செவ்வி வாய்த்தல். அதுவே "சிறப்பென்னும் செம்பொருளின்" எட்டு வான்குணமும் எய்துதல். இஃது ஒன்பதாந் திருக்குறளால் பெறப்படும். "தலைவன்தாள் தலைப்பட்டாள் நங்கை" என்பது திருவருளால் இறைவன் திருவடிக்கண் ஒன்றாய் வேறாய் உடனாய்ப் புணர்ந்து, மீளா ஆளாய்ச் "செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால், எங்குமிலாததோரின்பம்" துய்த்துப் பெருவாழ்வு எய்துதல். இவ்வுண்மை பத்தாந் திருக்குறளால் நன்கு பெறப்படும்.

இரண்டாம் அதிகாரம் "வான்சிறப்பு." இஃது அவ்வப்போது அளவறிந்தூட்டும் திருவருளாற்றலை நினைவூட்டும் நீர்மைத்து. அதனால் அவ்வதிகாரம் கடவுளைவிட்டு நீங்காக் கவினுடைய வனப்பாற்றலாம் மலைமகளைக் குறிப்பதாகும்.

மூன்றும் அதிகாரம் "நீத்தார் பெருமை." இஃது அத்திருவருளாற்றலின் பொருவரும் பெருந்துணையால் உலகு உடல்களின் உண்மையுணர்ந்து அவற்றிற் பற்றுக்கொள்ளாது அவற்றை உடைமையாகவும் தம்மை அடிமையாகவும் யாண்டுங் கொண்டுள்ள சிவபெருமானின் திருவடிக்கண் பற்றுக் கொண்டு அவற்றைக் கடந்தும் அவற்றுடன் ஒட்டி வாழும் பெரியார் பெருமை கூறுவது. அவர்களே 'பத்தராய்ப் பணிவாரும், பரமனையே பாடுவாரும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாரு'மாகிய சிவனடியாராவர். இம் மூன்றும் முறையே "வணங்குதல், புரிதல், சேர்தல்" என்னும் சொற்களால் கடவுள் வாழ்த்தில் ஓதப்பட்டமையான் விளங்கும். நீத்தார்-கடந்தவர்; துறந்தவர்; நீந்தினவர்.

நான்காம் அதிகாரம் "அறன்வலியுறுத்தல்." அறம் - அறுத்தல், பிறவியறுத்தல். அதற்குத் துணையாக நிற்பதே இல்வாழ்க்கை. அதனைக் கூறுவதே அவ்வதிகாரத்தின் உட்கோள். இம்முறையால் பாயிர நான்கும் சித்தாந்த சைவத்தை விளக்கும் திறம் காண்க. இந் நான்கும் முறையே 'அறிவு, செறிவு நோன்பு, சீலம்" என்னும் நன்னெறி நாற்படியின் நயம் நவிலுவதுமாகும்.

வள்ளுவனார் தங்கடவுள் வாழ்த்துமப்பர்
முன்னமவன்
உள்ளுதமிழ்ப் பரவுமொத்த லோர்.

இவ்வனைத்தையும் வருமாறு நினைவு கூர்க:


தாள்நான்காற் சீலமுதல்
நாற்படியாம் சாற்றுமூன்
றுள்முதல்வன் மாயைவினை
ஆணவமாம்—கேள்உயிராம்
ஆண்டகுரு ஒப்பில்லான்
அந்தணன் எண்குணவன்
பூண்டவனே ஆவிப் புணை.

உண்மையறி வின்பம்
உடையான் உளுற்றுநிலை
கண்மைமலம் மாயைவினை
காதலுயிர்—நண்ணுமுயிர்
முப்பொறியாற் செய்யுமிறை
மூவா வழிபாடாம்
செப்பு சிவப்புணையாம் பத்து.

TIRUVALLUVAR AND MODERN CONCEPTION OF STATE

Prof. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D., M.L.C.

Dr. Chettiar, born in 1907, got First Class First Rank in his M.A., degree examination. He is well versed both in English and Tamil languages. He got his Doctorate degree for his well written thesis on "The Advanced Study of Tamil Prosody". He served as Professor of Tamil at the Annamalai University and gave that post to join as the Chief Editor of English—Tamil Dictionary published by the University of Madras.



He has toured in the East Asian Countries and in Europe. He is the author of many prose books and translations of Shaksperian dramas. As a Member of the Legislative Council of Madras State, he is doing yeoman service to the advancement of Tamil language and Tamil teachers. He has delivered the Prof. Sethu Pillai Endowment lecture at University of Madras on literature before and after Silappadikaram.

Tiruvalluvar, who gave his monumental treatise entitled "Tirukkural" in the early century before the Christian era, had a noble conception of kingship. In several places, where kingship is talked about, that concept is found applicable to the State in general. Whether it is a king that rules or it is a democratic ruler that rules, he should have the welfare of the subjects at heart. The requirements and qualifications for a king postulated in Tirukkural are found applicable to the Head of a sovereign Democractic Republic like our country, India. The Head of the State should be capable of planning, acquiring, preserving and distributing wealth. According to Tiruvalluvar, fearlessness, liberality, wisdom and perseverence are traits which no king should lack. The Head of a State should not procrastinate things but should take immediate steps to decide about matters engaging his attention and should be an erudite scholar. A benevolent ruler who has a sweet tongue will be able to command the homage of his subjects. A ruler, again, should be easily accessible and should not be prone to use harsh and unpalatable expressions, One other salient requirement of a king or a ruler is that he should be just and be prompted by a sense of fair play and integrity.

